An

# Etymological & Comparative Lexicon of the Tamil Language

# சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி

By Rev. S. GNANA PRAKASAR, O. M. I.

This new comprehensive Tamil - English - Tamil Lexicon is compiled on a philological basis. In it, all Tamil words — and incidentally those of the other Dravidian dialects — together with prefixes suffixes and other morphological elements are, as much as possible, traced to their roots or most elementary linguistic forms, — thus presenting a complete analysis of the Tamil language, in order to facilitate its study for all. Another new feature is that parallels from the more important Indo-European languages and the newly discovered Sumerian, Hittite &c are shown, for the first time, with the aid of the clues obtained from Dravidian Etymology, shedding a flood of light on the true origin of a large percentage of their words. The work is planned to be completed in two compact volumes of about a thousand pages each, issued in twenty parts. It will contain more words than are found in the Madras University Tamil Lexicon, beside the new etymological and comparative material above referred to.

VOL. I PART III

*Price Rs. 2, exclusive of postage.*

# ETYMOLOGICAL AND COMPARATIVE LEXICON OF THE TAMIL LANGUAGE

## சொற்பிறப்பு-ஒப்பியல் தமிழ் அகராதி

VOLUME I

**Part III**

38289

CEYLON

THIRUMAKAL PRESS, CHUNNAKAM

1941

அலகழுங்கு alakaḷuṅku, *n.* [id.?] Long pepper; திப்பலி.

அலகுஞ்சம் alakuñcam, *n.* [id. See, however, *alattai*] Glow worm; மின்மினி.

அலகு² alaku, *n.* [for *aḷa-v-u*—=அளவு] 1. Measure, quantity; அளவு, தொகை. 2. Standard of measurement; அளவு கருவி (சவலை. 22). 3. A unit of measurement in musical scale; சுருதியளவு. 4. Flaw; குற்றம் (தக்கயா. 41). 5. Number, calculation; எண், கணக்கு. 6. Cowries &c. as signs of number in reckoning; பலகறை. 7. A lac of arecanuts; இலட்சம் பாக்கு. —CPDS அலகி'ட °iḍa, To reckon, measure; எண்ண, அளவிட. To scan, as a verse; செய்யுள் அசைச் கணக்கிட. அலகி'ருக்கை-வெண்பா °irukkai-veṇ-pā, A kind of verse in veṇpā metre; மிறைக் கவி வகை (யாப். வி. 510). அலகு-கட்ட¹ °kaḍḍa, To settle accounts; கணக்குத் தீர்க்க. அலகு-கழிக்க °kaḷikka, To subtract, to deduct a number of seeds; விதை முதலிய வற்றைக் கொண்டு தொகை குறைக்க. அலகு-நிலை °nilai [+ *nil-ai*, 'state'] Result of a computation, as in addition &c.; கணித விடைத்தொகை.

அலகை² alakai *n.* [=*alaku*²] Standard; அளவு (பெருங். உஞ்சைக். 32, 2) [For *alak-ai*¹ see under *alá*; அலக்-ாய் பார்].

அலங்கடை alaṅkaḍai, *adv.* [*al*-¹ + -*am*¹ + *kaḍ-ai*, 'place' —அல்¹ + அம்¹ + கடை] In places other than, except in the case of; அல்லாதவிடத்து (தொல். எழுத். 30).

அலங்கம்¹ alaṅkam, *n.* [fr. *araṅkam*¹ —=அரங்கம்¹] Small island in the midst of a river; ஆற்றிடைக் குறை.

அலங்கம்², அலங்கன் alaṅkam, °aṉ, *n.* [U. *alang*] Rampart, bulwark; கொத்தளம் (திருப்பு. 418).

அலங்கரி-த்தல், அலங்காரி-த்தல் alaṅkari, °kāri, *11 v. tr.* [*alam*² + S. *kri*, 'to do'—அலம்² + கரி=செய்] To adorn, decorate; சிங்காரித்தல், சோடித்தல்.

அலங்கரணம் alaṅkaraṇam, *n.* [id.] Adornment; சிங்காரிப்பு.

அலங்காரம்¹ alaṅkāram, *n.* [id.] 1. Adornment, decoration; சிங்காரம், சோடிப்பு. 2. Beauty; அழகு. 3. Jewel; ஆபரணம் (திருக்கோ. 11). 4. Graces and ornaments of melody; சங்கீத உறுப்பு வகை. 5. Rhetorical embellishment, figures of language; செய்யுளணி. There are 35 figures of language, viz: (1) தன்மை, a word or phrase expressing the nature of a thing; (2) உவமை, a parable; (3) உருவகம், metaphor; (4) தீவகம், a word once used and understood in the other parts of the sentence; (5) பின்வருநிலை, the repetition of the word beginning a sentence with the same or a different signification; (6) முன்னவிலக்கு, rejecting a truth asserted, by showing its absurdity; (7) வேற்றுப் பொருள் வைப்பு, establishing the truth of a particular fact by a general truth; (8) வேற்றுமை, contrast; (9) விபாவனை, separating effects from their proper causes and attributing them to other causes alluded to; (10) ஒட்டு, an allegory; (11) அதிசயம், hyperbole or exaggerated description; (12) தற்குறிப்பேற்றம், a principal kind of metaphor; (13) ஏது, a figure showing the cause &c; (14) நுட்பம், a figure which presents a suitable idea, by a corresponding hint &c: (15) இலேசம், a figure in which a trifling excuse is given, as a cloak for a thing of greater magnitude; (16) நிரனிறை, one of the eight kinds of construction of a sentence, i. e. the separate successive arrangements of a series of nouns and their verbs in natural or reverse order; (17) ஆர்வமொழி, an affectionate word or phrase; (18) சுவை, the passions or emotions of the mind expressed by gesture, exhibited in action and transferred to poetry; (19) தன்மேம்பாட்டுரை, self-adulation; (20) பரியாயம், a figure in rhetoric by which one thing is told and another connected with it is intended; (21) சமாயிதம், the accomplishing of one's object by indirect means; (22) உதாத்தம், a figure which expresses copiousness, richness, enterprise, &c; (23) அவநுதி, denying the character, quality or essence of a person or thing in order to attribute the same to others; (24) சிலேடை, a word of double interpretation; (25) விசேடம், distinguishing a cause by ascribing to it effects which it is inadequate to produce; (26) ஒப்புமைக் கூட்டம், enumeration of analogous words &c; (27) விரோதம், opposition; (28) மாறுபடு புகழ்நிலை, praising a person or thing to the disparagement of another; (29) புகழாப் புகழ்ச்சி, praise, flattery &c., couched in terms of dispraise; (30) நிதரிசனம், feigning a thing in nature as doing good or evil to another, a species of personification as a mode of moral instruction; (31) புணர்நிலை, a figure in which the same epithets or attributes are adapted to two or more different subjects; (32) பரிவருத்தனை, a figure; in rhetoric, describing an exchange of beauties, excellencies; (33) வாழ்த்து, congratulation; (34) சங்கீரணம், the blending of several figures; (35) பாவிகம், moral instruction, inference, applications &c., from events related in epic poems. (Winslow). 6. Ordinary meal offered in Vishnu temples; விஷ்ணு கோயில்களில் நிவே திக்கும் ஆகாரம். —CPDS அலங்கா ரப்-பிரியன் °piriyaṉ [+ S. *priya*, 'loving' prob. akin to T. *pir-i*] Vishnu; திருமால். அலங்கார-ப்-பேச்சு °pēccu, [+*pēcc-u*, 'speech'] Ornate speech, flattery; வாய்ச் சாலகம், முகமன். அலங்கார-பஞ்சகம் °pañcakam [+ S. *pañcaka*, 'collection of five things'] A series of five kinds of verses in antāti form; வெண்பா, கலித்துறை, அகவல், ஆசிரியவிருத்தம், சந்தவிருத்தம் என மாறிமாறி அந்தாதியாய் வரப் பாடும் பிரபந்தம் (இலக். வி. 844). அலங் கார-மண்டபம் °maṇḍapam [+ S. *maṇḍ-apa* < T. *maṉṟ-am*, 'hall'] Saloon; வாசேலப்புக் கூடம். அலங் கார-மாடம் °māḍam [+*māḍ-am*, 'house'—'மாடம்¹'] Tabernacle; ஆரா தனைப் பண்டங்கள் வைக்கும் இடம். அலங்கார-விளக்கு °viḷakku [+*viḷakk-u*, 'lamp'] Marriage lamp with many branches supporting small lamps; பல கிளை கொண்ட மண விளக்கு.

அலங்கிருதம், °கிருதி alaṅkirutam, °kiruti, =*alaṅkaraṇam*; =அலங் கரணம்.

அலங்கல் alaṅkal, See under *alaṅku*; அலங்கு-தல் பார்.

அலங்கழித்தொழில் alaṅkaḷittoḷil, *n.* [*alaikkaḷi*+*toḷ-il*, 'act'—அலைக்கழி +தொழில்] Acts of wickedness; கொடுஞ் செயல் (சீவ. 74).

அலங்காரம்² alaṅkāram, *n.* [E. *alum* or perh. *aḷam*, 'saline soil' + *kār-am*, 'alcali' — ? அளம்¹ + காரம்¹] Saltpetre; வெடியுப்பு.

அலங்கிதன் alaṅkitaṉ, *n.* [*alaṅkirutam*?] Yellow orpiment; அரிதாரம்.

அலங்கு-தல் alaṅku 5 v. intr. [rt. al + v. det. -a⁵ + 2nd format. (ṅ) k + -u⁵: 'to move to and fro, to vibrate, to glisten' Cf. ay-aṅku. Other forms ala, al-u, al-ai &c.—√அல் + -அ⁵ + (ங்) க் + -உ⁵. 'அசை வாடல், தழும்புதல், பளபளத்தல்'. ஒப். அயங்கு. பிறவுரு. அல, அலு, அலை ஆதியன.] 1. To be in motion; அசைதல் (கலித். 40). 2. To be troubled; மனந் தத்தளித்தல். 3. To pity, sympathize; இரங்குதல். 4. [Cf. ilaṅku] To shine, flash; ஒளி செய்தல். ஒப். இலங்கு-தல்.

Tu. alaṅgu; M. alaṅṅu; Tel., K. alagu.

அலங்கல் alaṅkal, n. [id. + -al⁷] 1. Wreath, garland; மாலை, பூமாலை. 2. Waving ear of corn; அசையுங் கதிர் (அகம். 13 உரை). 3. Sprout; தளிர். 4. Regularity; ஒழுங்கு. 5. Light; ஒளி (சடு. 10, 1, 2). 6 Fragrant basil; துளசி. —CPD அலங்கல்-நாரி °nāri [+S. nār-i, 'woman' —'நாரி²'] Mother-of-pearl; முத்துச் சிப்பி.

அலங்கலம் alaṅkalam, n. [id. + -am²] Movement; அசைகை.

அலங்கை alaṅkai, n. [id. + -ai⁷] 1. = alaṅkal(2); = அலங்கல்(2). 2. Sacred basil; துளசி.

அலங்கோலம், °கோலை alaṅkōlam °kōlai [Cf. alai-kulai —ஒப். அலைகுலை] Disorder, slovenliness; சீர்கேடு.

M. alaṅkōlam.

அ-லச்சை a-laccai, n. [a-⁸ + S. lajj-ā, 'shame', akin to T. veḷ-ku—இலச்சை] Absense of bashfulness; வெட்கக் கேடு.

அலசகம் alacakam, n. [Cf. alacam] Common anise; சோம்பு.

அலசடி alacaḍi, V. alacu; அலசு-தல் பார்.

அலசந்தி alacanti, n. Chowli bean; பெரும் பயறு.

அலசம் alacam, n. [S. a-lasa, 'lazy', perh. akin to T. il-aku] 1. Torpidity; மந்தம். 2. Ulcer between the toes; கால் விரல்களுக் கிடையில் சேற்றுப் புண்.

அலசல்¹ alacal, n. [id.] Laziness; சோம்பல்.

அலசல்² alacal, V. alaval¹; = அலவல்¹.

அலசி alaci, See below; கீழே பார்.

அலசு-தல் alacu, 5 v. intr. [rt. al + v. det. -a⁵ + (c) -u⁵, 'To move to and fro, to be agitated.' Cf. al-a-vu. Other forms al-a, al-u, al-ai &c.—√அல் + -அ⁵ + (ச்) உ⁵, 'அசைதல், மனம் தத்தளித்தல்.' ஒப். அலவு-தல். பிறவுரு. அல, அலு, அலை ஆதியன.] 1. To shake; அசைதல் (மணி. 9, 7). 2. To be agitated, to suffer; வருந்துதல் (கம்பரா. சூர்ப்ப. 18). 3. To be exhausted; சோர்தல் (இலம். 16, 197 அரும்). 4. [v. tr.] To rinse; நீரிற் கழுவுதல். 5. To snub; வெட்டும்படி பேசுதல்.

K., Tu. alacu; Tel. alaṭcu; M. alacuka. Cf. Hit. arreske, arrwe, 'to wash'.

அலசடி alacaḍi, n. [id. + -aḍi] Vexation; துன்பம்.

Tel. aladzaḍi.

அலசல்³ alacal, n. [id. + -al⁷] 1. What is carelessly thrown together, huddled up; நெருண்டு கிடப்பது. 2. Business which does not succeed; பயன்படாத வேலை.

M. alacal.

அலசி alaci, n. [id. + -i¹] A kind of shell-fish that adheres to the keel of ships, rocks &c; ஓர் வகை நத்தை.

அலசு alacu, n. [id.] Sorrow; துக்கம்.

அலஞ்சரம் alañcaram, n. [S. alanjara] Earthen water jar; நீர்ச் சாடி.

அ-லட்சியம் a-laḍciyam, n. [+ a-⁸ + S. lakṣ-ya, 'deserving to be regarded', fr. lakṣ, akin to T. il-a-ku—'இலட்சியம்'] 1. Indifference; கவனமின்மை. 2. Contempt; மதிப்பின்மை.

அலட்டு-தல் alaḍḍu 5 v. intr. [fr. alarru—< அலற்று-தல்] 1. To bluster; பிதற்றுதல். 2. [v. tr.] To pester; தொந்தரை செய்தல்.

M. alaṭṭu. Cf. S. laṭ, 'to speak like a child', raṭ 'to cry, scream', also laḍ, lal; Gr. lallein, 'to blabber'; L. lallare, 'to sing lullaby'; G. lallen, 'to babble'.

அலட்டி alaḍḍi, n. [id. + -i¹] Blusterer; அலப்புவோன்.

அலட்டு alaḍḍu, n. [id.] 1. Incoherent talk; பிதற்று. 2. Importunity; அலைக்கழிப்பு. 3. Vexation; தொந்தரவு. —CPDS அலட்டுச்-சன்னி °canni [+S. san-ni-pāta, 'combined derangement of the three humours'—'சன்னி¹'] Delirium; பிதற்றுஞ் சன்னி நோய். அலட்டுச்-சனி °cani [+S. Śani, 'Saturn'—'சனி¹'] Malignant Saturn; வக்கிரச் சனி. One who is noisy and troublesome; பிதற்றித் தொந்தரை செய்வோன்.

அலத்தகம் alattakam, n. [= arattakam — = அரத்தகம்] 1. Red lac used as cosmetic; செம்பஞ்சுக் குழம்பு (சீவக. 2446). A variety of cotton; செம்பருத்தி.

அலத்தம் alattam, n. [id.] 1. Variety of cotton; செம்பருத்தி. 2. Sun flower; சூரியகாந்தி.

அலத்தி alatti, n. [id. ?] Glow worm; மின்மினி.

அலத்தை alattai, n. [id.] Cotton coloured with lac-dye; செம்பஞ்சு.

அலதி-குலதி alati-kulati, V. under alai; அலை-தல் பார்.

அலந்தல், அலந்தலி, °லை alantal, °i, °ai, n. [perh. fr. al-ai—அலை-தல் ?] 1. False peacock's-foot tree; மயிலடிக் குருந்து. 2. Orbicular-leaved caper shrub; செக்கத்தாரி.

அலந்தை² alantai, n. [Cf. al-am—ஒப். அளம்] 1. Tank, pond; குளம், குட்டை. For alantai¹ see p. 148.

அலப்பறுத்து, அலப்புநேத்தி alappaṉattu, alappunētti, n. [Port. alfinete] Pin; குண்டூசி.

அலப்பாரி-த்தல் alappāri 11 v. tr. [Port. repicar] To ring a bell; மணியடித்தல். 2. To shout empty words; வீண்வார்த்தை பேசி ஆரவாரித்தல்.

அலப்பு-தல் alappu, 5 v. tr. [caus. of alampu—அலம்பு-தலின் பிறவினைவடிவம்] 1. To cause agitation; அலைத்தல் (கலித். 75). 2. [v. intr.] To chatter, talk nonsense; வீணிற் பிதற்றுதல் (தேவா. 236, 1).

Cf. Sinh. alap, 'word'. If this is fr. S. a-lapa, as Geiger suggests, the S. rt. lap itself seems akin to the T. Cf. Uhlenbeck under lapati.

அலப்பல் alappal, n. [id. + -al⁷] 1. Confused noise; கலகலோசை. 2. Talking nonsense; பிதற்றல்.

அலப்பறை alapparai, n. [id. + -arai⁴, 'utterance' — + -அறை³] 1. Blabber; வெளிவாயன். 2. Beggar; பிச்சைக்காரன்.

அல்லப்பன் allappaṉ, *n.* [id.+ -*aṉ*[5]] Chatterer, gossip; வீண் கதைக்காரன்.

அலப்பு alappu, *n.* [id.] Confusion of mind; மனக் கலக்கம் (திவ். திருவாய். 5, 8, 4.) அலப்பாட்ட, To become confused; மனஞ் சுழல.

அலப்புனி alappuṉi, *n.* [id. + -*uṉ-i*] Gossip; வீண் கதைக்காரன்.

அலப்புநேத்தி alappunētti, V. *alappa-ṉāttu;* = அலப்பனுத்து.

அலம்[1] alam, See under *ala;* அல-த்தல் பார்.

அலம்[2] alam, *n.* [S. *alam* or *aram* (Ved.), perh. fr. T. *al*[1] or *aṟ* implying 'prohibition'. (Kittel). Uhlenbeck derives it fr. *ara*, 'passing', T. √*ar.* In the sense of 'adorning' (*alam-kri*) cf. *all-u*—√அல்[1], 'வேண்டாமை' அல்லு-தல் 'இசைவு படுத்துதல்'] 1. Satisfaction; திருப்தி. 2. Quietness; அமைதி. 3. [*adv.*] Enough; போதும். அலம்-புரிய, To give to satiety; திருப்தியாகும் வரை கொடுக்க.

அலம்[3] alam, *n.* [prob. for *āl-am*—<ஆலம்] Water; நீர்.

S. *hala*: Cf. *ali*, 'spirituous liquor'.

அலம்[4] alam, *n.* [S. *hal-a*, prob. fr. T. *kiḷ-i*. Cf. Walde—P. who gives *ghel* as a hypothetical root—இதிப் பதி] Plough; கலப்பை. —CPD அலாயுதன் °*āyutaṉ* [+S. *ā-yudha*, 'weapon'] Balarāma, as armed with a plough.

-அலம்[5] -alam, *suff.* [prob. for *aḷam* <*aḷ*+ -*am*[2], 'what is attached'] A stem suffix with the sense of 'being connected with' as in *maṇḍ-aḷam;* ஒரு சாரியை. உ-ம்: 'மண்டலம்'.

அலம்பு-தல் alampu, 5 *v. intr.* [fr. *ala-v-u* by epen.— <அலவு-தல்] 1. To move, wabble; ததும்புதல். 2. To fluctuate; அலைதல் (திவ். திருவாய். 2,8,111). 3. To murmur as a brook, to sound; ஒலித்தல் (கம்பரா. முதற்போர். 17). 4. To swerve from a proper line of conduct; தவறுதல். 5. [*v. tr.*] To cause to wander; அலைத்தல் (திவ். பெரியாழ். 4, 2, 1). 6. To wash, rinse; கழுவுதல். உ-ம்: "கடிம்பலம்ப" (புறம். 9 உரை) தோய்த்தெடுத்தல். 7. To mix; கலத்தல் (தக்கயா. 93 உரை).

M. *alampu*; K. *alambu;* Tu. *alambuni, aluvuni*. Cf. L. *lavo, ab-luo*, I wash', *diluvium, l(av)a-trina* &c.; Gr. *louō*. Isel. *laudr*. For other parallels see Walde—P. under *lou*.

அலம்பல் alampal, *n.* [id.+*al*[7]] 1. Vexation; உபத்திரவம். 2. Unfortunate publicity; பலர்வாய்ப்படல். 3. Loud voice; ஆரவாரம். 4. Epidemic; கொள்ளைநோய். 5. Small branches used in the construction of hedges; அலக்குத் தடி.

அலம்புசம், °புடை, °புருடை alampucam, °puḍai, °puruḍai, *n.* [prob. fr. id.] 1. Vomiting; சத்தித்தல். 2. Extended hand; விரித்த கை. 3. A principal tubular vessel of the human body; தச நாடியில் ஒன்று (சிலப். 3, 26 உரை).

Cf. S. *alambuṣa*.

அலம்-வரு-தல் alam.varu, 13 *v. intr.* [*alam*[1] + auxiliary *v. vā*, 'to come'—அலம்[1]] 1. To be perturbed in mind; மனஞ் சுழலுதல் (ஐங். 20). 2. [*alam*[2]—அலம்[2]] To become peaceful; அமைவுண்டாதல் (திருப்பு. 584).

அலமரு-தல் alamaru, 13 *v. intr.* [sync. of above—முன்னதன் இடைக்குறை] 1. To whirl, tremble; சுழலுதல் (நைடத. அன்னத்தைத். தூ. 10). அசைதல் (மலைபடு. 119). 2. To be confused; மனக் தடுமாறல் (தொல். சொல். 311). 3. To be vexed; வருந்துதல் (திருவாச. 6, 20). 4. To be afraid; அஞ்சுதல் (திவா.)

அலமரல் alamaral, *n.* [id.+ -*al*[7]] 1. Spinning round; சுழற்சி. 2. Perturbation; மனக்கலக்கம். 3. Sorrow; துக்கம். 4. Fear; பயம்.

அலமாறு alamāṟu, *n.* [id.+ -*āṟu*[8] —+ -ஆறு[8]] Vexation; தொந்தரவு.

அலமலை-த்தல், °மலை-த்தல் alamala, °malai, 12 *v. intr.* [duplication of *alam*[1]—அலம்[1] இரட்டித்தது] 1. To be confused; கலங்குதல். 2. To be anxious; ஆதரப்படுதல்.

அலமலத்து-தல் alamalattu, 5 *v. tr.* [*caus.* of above] To confuse; கலக்கமுறச் செய்தல்.

அலமாப்பு alamāppu, *n.* [*alam*[1] + -*āppu*[4]—அலம்[1] + -ஆப்பு[4]] Trouble; துன்பம்.

அலமாரி[1] alamāri, *n.* [Port. *almario*] 1. Closed wall-shelves, almirah; முன்புறமாய்க் கதவுகள் கொண்ட பேழை.

அலமாரி[2] alamāri, See *alavāri;* = அலவாரி.

அலமாறு alamāṟu, See under *alamaru;* அலமரு-தல் பார்.

அலமான் alamāṉ, *n.* [Cf. *alakamāṉ*] Long pepper; திப்பலி.

அலமேலு alamēlu, for *alar-mēl-maṅkai;* = அலர்மேல் (மங்கை).

அலர்-தல் alar, 4 *v. intr.* [rt. *al*, 'to expand' + -*ar*[3], stem suffix functioning as v. det. See Law VIII (a) —√அல் + அர்[3], 'விரி-தல்'] 1. To expand, spread; விரிதல், பரத்தல் (நாலடி. சிறப்புப். 1). 2. To blossom; மலர்தல். 3. To Increase in size; பெருத்தல் (கலித். 14). 4. To shine forth; விளங்குதல் (கந்த. குமார. 43). 5. To form, collect; சேர்த்தல் (பெரும்பாண். 250).

K., M., Tu. *alar;* Tu. *aral;* Tel. *alaru;* Got. *alan;* L. *alere*. See under √*al*.

அலர் alar, *n.* [id.] 1. Water, as spreading; நீர். 2. Full bloom flower; மலர். 3. Joy; மகிழ்ச்சி. 4. Gossip in a village about any two lovers, as distinct fr. *ampal*; பலரும் அறிந்து புறங்கூறல் (குறள். 1142). Note the pun on the words; அரும்பல் (அம்பல்) and அலர் in "புன்னையரும்பு மலி கானலிலூர் அலராகின்றவர்" (ஐங். 132). 5. Black pepper creeper; மிளகு கொடி. 6. Turmeric; மஞ்சள்.—CPDS அலரவன் °avaṉ, Brahmā, the lotus-born; பிரமன். அலர்-க்-குறி °kuṟi [+*kuṟ-i*, 'mark'] Theme in Akapporuḷ describing the disappointed hero who leaves a flower as sign in the appointed place; குறியிடை வந்தும் தலைவியைக் காணாத தலைவன் அதற்கு அடையாளமாய் ஒரு பூவை வைத்துச் செல்வதைச் சொல்லும் அகத்துறை. அலர்-மகள் °makaḷ [+*mak-aḷ*, 'maid'] Lakṣmī seated on a lotus; இலக்குமி. அலர்-மேல்-மங்கை °mēl-maṅkai [+*maṅk-ai* = *mak-aḷ*] Do: டை.

அலர்ச்சி, அலர்த்தி alarcci, alartti, *n.* [fr. *alartt-u, t/c*— < அலர்த்து] Blossoming; மலர்கை.

அலர்த்து-தல் alarttu, 5 *v. tr.* [*caus.* of id.] To cause to blossom; மலரச் செய்தல். (கல்லா. 10).

அலரி alari, *n.* [id. + -*i*[4]] 1. Water-tank; நீர் வாவி. 2. Sun; சூரியன் (பிங்.). 3. Fire; தீ (கம்பரா. மீட்சிப். 96). 4. Streaks in the white of the eye; கண்வரி (சூடா.). 5. Beauty; அழகு. 6. Flower; மலர் (கலித். 94). 7. Oleander; ஒரு பூச்செடி. Various kinds

of alari are known: அடுக்கலரி, species of double flowered oleander; ஆற்று°, bearded Polygonum; சஞ்சீ°, (golden). Plumieria alba; குங்கும°, yellow oleander, செவ்°, red oleander; சீ°, Polygonum barbatum; வெள்°, white oleander (Winslow). 8. Willow; ஆற்றுப்பாலை. 9. Bee; தேனீ. 10. Rinder-pest; கோமாரி. 11. Wheat; கோதுமை. —CPDS அலரி-க்-கூடை °kūḍai [+kūḍ-ai, 'basket'] Coffin; சவப்பெட்டி. அலரி-ச்-செவி °cevi, A plant; செடிவகை. அலரி-த்-தட்டி °taḍḍi [+taḍḍ-i, 'screen' —'தட்டி¹'] Basket for catching fish; மீன் பிடிக்கும் கூடைவகை. அலரி-ப்-பந்தம் °pantam [+S. bandh-a, 'bandage', akin to T. paṟṟu] Withe; கட்டுவார்.

M. alari; Sinh. alariya, araliya.

அலவல்², அலவலை, °மை alaval, °ai, °amai, See under ala-vu; அலவு-தல் பார்.

அலவன் alavaṉ, See under al²; அல்² பார்.

அலவாங்கு alavāṅku, n. [Port. alavanca] Crow-bar; கடப்பாரை.

அலவாட்டி alavāḍḍi, n. [Tel. alavāṭu prob. fr. T. aḷāvu] Custom; வழக்கம்.

அலவாரி alavāri, V. under alavu; அலவு-தல் பார்.

அலவான் alavāṉ, n. [prob. connected with aḷavu] Seeds accumulated in a pit in the pallāṅkuḻi game; பல்லாங்குழியாட்டத்திற் கூடும் காய்கள்.

அலவு-தல் alavu, 5 v. intr. [extended form of ala with the additional v. det. (v) -u—அல + (வ்) -உ⁵] 1. To wave; அசைதல் (கம்பரா. சித்திர. 25). 2. To be troubled; வருந்துதல் (சிலப். 18, 17).

அலவல்³ alaval, n. [id. + -al⁷] Adultery; விபசாரம் (சிலப். 5, 129 உரை). For alaval¹ See p. 147.

அலவலை alavalai, n. [id.+ -ai⁷] 1. Confusion of mind, distress; மனச் சஞ்சலம் (கலித். 122). 2. Hasty action; ஆராயாது செய்தல், (மணி. 17, 51). 3. Babbler; விடாது பேசுவோன் (திரிகடு. 99). அலவலைத்தல், காணமில்லாத் தன்மை செய்தல் (பழ. 23).

M. alavan, Nep. alamalla.

அலவலைமை alavalaimai, n. [alavalai + -mai²] Rash action; ஆராயாது செய்கை (திவ். பெரியாழ். 4, 3, 5).

அலவறை alavaṟai, n. [? id. + -aṟai³—அறை³?] Voracity; உண்பதில் ஆத்திரம்.

அலவாரி alavāri, n. [id.+ -āri⁵—+ -ஆரி⁵] Covetous man; பேராசையுடையவன்.

அலவு alavu, n. [id.] Confusion; மனத் தடுமாற்றம் (கலித். 29).

அலவை alavai, n. [alaval— =அலவல்] 1. Adultery; விபசாரம் (சிலப். 5, 129). 2. Woman that chatters ceaselessly; விடாது பிதற்றுபவள் (திவ். திருவாய். 4, 6, 4).

அலற்று-தல் alaṟṟu, 5 v. intr. [fr. *alaṟṟu, the n. form of alaṟ-u, Cf. araṟṟu—<அலறு, இது *அலற்று எனும் பெயராகி வினையாயிற்று. ஒப். அரற்று] To talk unceasingly and irregularly; இடைவிடாமலும் முறையின்றியும் பேசுதல் (திவ். திருவாய். 1, 3, 10).

அலறி alaṟi, n. Nākaṇam, an aromatic substance; நாகணம் எனும் நறும் பண்டம்.

அலறு-தல் alaṟu, 5 v. intr. [ala+ —-aṟu³, stem-suffix functioning as v. det. See Law VIII—அல+ -அறு³] 1. To spread, to be shattered; விரிதல் (ஐங். 321) சிதறுண்ணல். 2. To be grieved; வருந்துதல். 3. To weep aloud; உரத்தழுதல் (திருவாச. 2, 134). 4. To bleat, hoot; மாடு முதலியன கதறுதல். 5. To vociferate; மிக்கொலித்தல் (சீவக. 2195).

அலறல் alaṟal, n. [id.] Loud cry; பேர் ஓசை.

அலன்றல் alaṉṟal, n. [id.] Death; சாவு.

அலன் alaṉ, n. [alam⁴ + -aṉ⁵—அலம்⁴] Balarāma armed with a plough; பலராமன் (பரிபா. 3,83).

அலாக்கு alākku, n. [U. alag] 1. Separateness, aloofness; தனிமை. 2. Injury; கெடுதி.

அலாசம் alācam, n. [S. alāsa, said to be connected with lāsa, 'saliva'] Inflammation and abscess at the root of the tongue; அடிநாக்கில் வரும் ஒரு நோய்.

அலாதம் alātam, n. [S. alāta, which, according to Kittel, may be akin to T. oḷi, 'light'] 1. Firebrand; கடைக்கொள்ளி. Charcoal; மரக்கட்ட கரி. அலாத-சக்கரம், apparent circle in the air caused by whirling a firebrand; கொள்ளியைச் சுற்றுவதினாற் தோன்றும் ஒளி வட்டம்.

அலாதி alāti, n. [U. 'alāhida] That which is separate; தனிப்பானது.

அலாபத்திரம் alāpattiram, n. [Cf. S. ala-padma] (Nāṭya) Gesture in which the fingers are bent without coming together; இணையாவினைக்கை வகை (சிலப். 3,18, உரை).

அலாபதம் alāpatam, n. [Cf. S. avadāha] Cuscuss grass; இலாமிச்சை.

அ-லாபம் a-lāpam, n. [a-³ + S. lābh-a 'gain' — 'இலாபம்'] 1. Absence of gain; நட்டம். 2. Hindrance; தடை. 3. Evil; தீமை.

அலாபு alāpu, n. [S. a-lābu, 'not sinking'?] Calabash; சுரை.

அலாயிதா alāyitā, n. [See alāti] 1. State of being separate; தனிமை. 2. An ancient cess at the rate of one paṇam for every 100 kalams of the settled gross produce; நூறுகல நெல்லுக்கு ஒரு பணவீதம் செலுத்திய பழைய கால வரி.

அலாரம் alāram, n. [S. alāra, cf. araram, p. 132 — ஒப். அரரம்] Door; கதவு.

அலாரி, °தா alāri, °tā, n. [<alari —<அலரி] Oleander; அலரி.

அலாரிப்பு alārippu, n. [Port. alar-se, 'to advance oneself to'?] Opening song formula in a dance; நாட்டிய ஆரம்பத்திற் பாடுஞ் சொற்கட்டு.

அலாவு alāvu, V. alāpu; =அலாபு.

அலி¹ ali, n. [al¹ + -i¹—ஆண் பெண் இரண்டும் அல்லாதது] 1. Hermaphrodite; ஆண் பெண்ணல்லாதது (திவ். திருவாய். 2, 5,10). 2. Pithy tree without core; வயிரமில்லாத மரம். 3. Sebesten; நறுவிலி. 4. Crow, cuckoo; காகம், குயில். 5. [prob. connected with alam¹ — அலம்¹ பார்] Scorpion; தேள். —CPDS அலி-எழுத்து °eḻuttu, The letter ஃ regarded as neither a vowel nor a consonant; ஆய்தம். [S. hal—அல்"] Consonants; மெய்யெழுத்து. அலி-க்-கிரகம் °kirakam, Mercury or Saturn as neutral planets; புதன், சனி எனும் கிரகங்கள். அலி-க்-கை °kai, (Nāṭya) Dance with hand gestures; அலிச்செயல் காட்டும் அபிநயக் கூத்து (சிலப். 3, 18, உரை). அலி-நாள் °nāḷ, The nakṣatras mirukaciridam and catayam; மிருகசீரிடம் சதயம் நட்சத்திரங்கள். அலி-ப்-பேடு °pē-

du, A dance of Krishna; அல்லியம் (சிலப். 6, 48, உரை). அலி-மரம் °maram, Tree with juicy, fibrous, thorny stem; பாலும் சாறும் முள்ளும் உள்ள மரம்.

Sinh. *aliya*, 'elephant without tusks' S. *ali*, 'crow, cuckoo, scorpion'.

அலியன்[1] aliyan, *n.* [fr. Sinh. usage] Elephant without tusks; கொம்பில்லாத யானை.

அலி[2] ali, *n.* [fr. *ari*[1] — < அரிசி] Boiled rice; சோறு.

அலி[3] ali, *n.* [for *ari*[2]—< அரி[2]] Fire; நெருப்பு. 2. Yama; இயமன்.

அலி[4] ali, *n.* [S. *hal-in*, See *alam*[4]—கலப்பை கொண்டவன்] Balarāma; பலராமன்.

அலிகம், அலீகம் alikam, alīkam, *n.* [S. *alika*, perh. fr. √*al*, as seen in *alaṅkari*] Forehead; நெற்றி.

அலிகை alikai, *n.* Kaus; காவல்.

அலிசி-விரை alici-virai, *n.* [U. *alsī*+ *virai* =*vitai*, 'seed'] Linseed; ஆளிக் கொட்டை.

அலிஞ்சரம் aliñcaram, *n.* [S. *aliñjara*] Small earthen water jar; நீர் வைக்கும் சிறு மட்பாண்டம்.

அலிந்தம் alintam, V. *aḷintam*; =அளிந்தம்.

அலிப்பான் alippāṉ, *n.* Saltpetre; வெடியுப்பு.

அலிபகம் alipakam, *n.* [S. *alipakā*. Cf. *ali*[1]—ஒப். அலி[1]] 1. Black bee; கருவண்டு. 2. Scorpion; தேள். Dog; நாய்.

அலியன்[2] aliyaṉ, *n.* [said to be fr. *a-bhayā* by misreading the Grantha *bha* for T. *li*] Chebulic myrobalan; கடுக்காய்.

அலியா-நிலை aliyā-nilai, *n.* [for *alaiy-ā* 'unalterable' + *nilai*, 'state'—அலை நிலை] Unalterable state; அலையாநிலை (தேவா. 294, 20).

அலீகன் alīkaṉ, *n.* [Cf. *alikam* — ஒப். அலிகம்] Head; தலை (தொல். பொ. 71, உரை).

அலீசா alīcā, *n.* [U. *ilāçā*] Silk cloth 5 yards long having a waving line pattern running in the length on either side; பட்டுவகைகளுள் ஒன்று. 2. Oar; தண்டு (Winslow).

அலு-த்தல் alu, 11 *v. intr.* [fr. *ala*, *aḷu* — < அல-த்தல்] To be weary; சோர்தல் (தேவா. 946, 8).

Cf. Gr. *aluō*, 'to be beside oneself', *alus*, 'an erring life', *aluke*, 'trouble'. Perh. S. *rōṣati* (Boisacq).

அலுப்பு aluppu, *n.* [id.+(*pp*) -*u*[6]] Weariness, discouragement, disgust; தளர்வு, வெறுப்பு.

அலுவல் aluval, *n.* [id.+ (*v*) -*al*[7]] Business, affair; வேலை, கருமம்.

அலுவலுவெனல் aluvaluveṉal, [*alu* duplicated + *eṉ-al*, 'saying'] Unceasing chatter; அலப்பிக்கொண்டிருத்தல்.

அலுக்கு-தல் alukku, 5 *v. tr.* [*caus.* of *aluṅku*—அலுங்குதலின் பிறவினை வடிவம்] 1. To shake slightly; சிறிது அசைத்தல். 2. [*v. intr.*] To strut, swagger; மினுக்குப் பண்ணுதல்.

அலுக்குத்து alukkuttu, *n.* A Mohammedan ear-ornament; முகமதியப் பெண்கள் காதணி.

அலுக்-குலை-தல் aluk-kulai, 4 *v. intr.* [for *aḍukku*—+*kulai*, 'to be deranged'—அடுக்கு +] To become disorganized; சீர்கெடுதல்.

அலுக்கொலு alukkolu, *n.* [id.] Confusion; குழப்பம்.

அலுகோசு alukōcu, *n.* [Port. *algoz*] Executioner; கொலைத்தண்டம் செலுத்துவோன்.

அலுங்கு-தல் aluṅku, 5 *v. intr.* [fr. *alaṅku*, *aḷu*— < அலங்கு-தல்] To shake slightly; சிறிது அசைதல்.

அலுசிலும்பல் alucilumpal, *n.* [*alu*, as echo-element for *cilu-mpu*, q. v.—சிலும்பலுக்கு அலு என்பது எதிரொலி] Disorder, confusion; சீர்கேடு, குழப்பம்.

அ-லுத்தன் a-luttaṉ, *n.* [*a*-[3]—+S. *lub-dha*, 'covetous' fr. *lubh*, akin to T. *iḷuppu*—உலுத்தன்] One who is not covetous; ஆசையற்றவன் (மச்சபு. பத்தி. 24).

அலுத்த-சத்தி alutta-catti, *n.* [id. +S. *śakti*, 'energy', fr. *śak*, akin to T. *tak-u*—சத்தி[7]] (Saiva) Being, possessed of infinite mercy; பேரருள் உடையவன்.

அலுப்பாந்தி aluppānti, *n.* [Port. *alfandega*] Jettee; துறை வாசி.

அலுப்புநேத்தி aluppunētti, V. *aḷappa-ṉattu*; =அலப்பனுத்து.

அலுமாரி alumāri, V. *alamāri*; அலமாரி.

அலுமினியம் aluminium, *n.* [E. *aluminium*, fr. L. *alum*] White, light, sonorous malleable metal; இலேசான வெள்ளை உலோகம்.

அலுவா aluvā, *n.* [Hind. *alwāh*, 'tablets'?] A kind of cake; ஒர் பலகாரம்.

அலுவிகம், அலூகம், அலூரம் aluvikam, alūkam, alūram, *n.* Bael; வில்வம்.

அலூரமாமுகம் alūramāmukam, *n.* Grass; புல்.

அ-லேகம் a-lēkam, *n.* [*a*[4]+S. *lēkh-a*, 'writing' fr. *rikh*. Cf, T. *kiḻ-i*, *kiḻ-ukku*—இலேகம்] 1. Blank palm leaves strung together for writing; வெள்ளேடு (சிவதரு. சிவஞானதா. 58). 2. Sand mixed with metal; லோகமணல்.

அ-லேபகன் a-lēpakaṉ, *n.* [*a*[8]+S. *lēp-a* 'defilement' fr. *lip* or *rip*, akin to T. *iḷ-u*—இலேபம்] (Phil.) One who believes that sin does not attach itself to the soul; பாவம் ஆன்மாவைப் பற்றுமென்றுங் கொள்கையாளன்.

அலை[1]-தல் alai, 4 *v. intr.* [rt. *al* + v. det. *ai* (=*e*) 'to move to and fro'. Two forms: one with accent on the 1st and the other on the 2nd syll. Other forms: *al-a*, *al-u* &c.—√அல்+ஐ (=எ) 'அங்குமிங்கும் சாய்தல்'. அலைதலும், அலைத்தலுமாம். பிறவுரு. அல, அலு ஆதியன] I [*ál-ai*—அலை-தல்] 1. To wave, to move; அசைதல் (கந்தபு. முதனாட். 50). 2. To wander; திரிதல். 3. To stagger; தள்ளாடுதல். 4. To be harassed; வருத்தப்படுதல். II [11 *v. tr.*, *al-ái*—அலைத்-தல்] 5. To shake; ஆட்டுதல் (திருவிளை. பழியஞ். 8). 6. To drive hither and thither; அங்குமிங்கும் செலுத்துதல். 7. To roll down; உருட்டுதல் (புறம். 115, 4). 8. To beat; அடித்தல் (கலித். 128, 19). 9. To disorganize; நிலைகெடுத்தல் (கந்தபு. ஆற்று. 16). 10. To conquer; வெல்லுதல் (ஞா. 39). 11. To harass; வருத்துதல் (திருமுரு. 50) 12. [*v. intr.*] To dash; மோதுதல் (கம்பரா. குட். 75).

K., Tu. *ale*; Tel., M. *ala*; Ku. *alari* See Bloch, p. 742. Bret. *koul*, 'wave'. Gr. *alē* (*alaomai*, *alainō*), 'to err', *aletes*, 'begger'. The S. *alakam* may be referred

to *alai* as suggested by Walde—P. under 3. *al*. See, however, *allu* p. 147. S. *lahari* 'large wave' is a direct loan fr. T. *alai-y-ĕṟṟu* below. Cf. Fin. *allok*, 'wave'; Arm. *alik*.

அல்லாடு-தல் allāṭu, 5 *v. intr.* [id.+*āṭ-u*, 'to perform'—அலை+ஆடு-தல்] 1. To wander from place to place; அங்குமிங்கும் திரிதல். 2. To suffer; தொந்தரைப் படுதல்.

அலதி-குலதி alati-kulati, *n.* [id. for *alai* + *kulai*, an echo word—அலை-குலை] Disorder, confusion; அலங்கோலம் (கலிங். போர். 47).

அலை alai *n.* [id.] 1. Wave, ripple; திரைக்கிளர். Hence: 2. Sea; கடல். 3. Fulness; மிகுதி. 4. Hostile criticism; கண்டனம் (சீவ. 204). 5. Injury; வருத்துதலை. 6. Murder; கொலை. —CPDS அலை-ய்-எறிய °eriya [+*eri*, 'to surge'] To spread abroad; வெகுதூரம் பரவ. அலை-ய்-எறு °ĕṟu [+id.] Dashing of the waves; திரை மோதியடித்தல். அலை-கட்டு °kaṭṭu, Dam; தேக்கம். அலை-கல் °kal, Stone facing for banks of tanks &c; கரையாதபடி பதிக்கும் கல். அலை-காற்று °kāṟṟu [+*kāṟṟ-u*, 'wind'] Tempest; பெரும் புயல். அலை-குலையாக்க °kulai-ākka [+*kulai* echo-word, meaning 'undoing'] To ruin; அழிக்க (தேவா. 776, 4). அலை-கொள்ள °koḷḷa, To be agitated; வருத்தமுற (திருக்கோ. 90). அலை-சோலி °cōli [+*cōl-i*, 'difficulty'—'சோலி¹'] Vexation; தொந்தரவு. அலை-தாங்கி °tāṅki [+*tāṅk-i*, 'defence'—'தாங்கி¹'] Break-water; செய்கரை. அலை-தாடி °tāḍi [+*tāḍ-i*, 'beard'—'தாடி¹'] Dewlap; மிருகத்தின் கழுத்திற் தொங்குந் தசை. அலை-தாரை °tārai [+*tār-ai*, 'stream'—'தாரை¹'] Water-mark on the soil; நிலத்தில் நீர்ப் பெருக்குக் காட்டும் குறி. அலை-நீர் °nīr, Sea; கடல். அலை-மகள் °makaḷ, Lakṣmī, born of the sea of milk; இலக்குமி (பிரபோத். 7, 26). அலை-மான் °māṉ, id.—வை. அலை-வாய் °vāy, Sea shore, Tiruccentūr; கடற்கரை, திருச்செந்தூர். அலை-வாய்க்-கரை °vāy-k-karai [id. + *kar-ai*, 'shore'] The very brink of the sea-shore; கடற்திரை வந்து மறியுமிடம். அலை-விரிசல் °virical [+*viri-cal*, 'expanding'] Curling wave; சுருளும் திரை. Rising of the tide; அலை எழும்புதல்.

அலைக்கழிதல் alaikk'aḻi 4 *v. intr.* [*alaikku*+*aḻ-i*—அலைக்கு+அழி] To be vexed, worried; அலைந்து வருந்துதல்.

அலைக்கழிவு alaikkaḻivu, *n.* [id. +(*v*)-*u*⁵] Continued disappointment, trouble; மனச் சோர்வு.

அலைச்சல் alaiccal, *n.* [id. + (*cc*) -*al*¹] 1. Wandering; அங்கு மிங்கும் திரிகை. 2. Weariness, vexation; தொந்தரவு.

அலைப்பு alaippu, *n.* [id.+(*pp*)-*u*⁸] 1. Moving, shaking; அசைத்தல், ஆட்டுதல். 2. Disturbance; தொந்தரை. 3. One of the nine varieties of dancing; கூத்தின்விகற்பம்.

அலையல் alaiyal, *n.* [id.+(*y*)-*al*¹] 1. Wandering; அங்குமிங்கும் சென்று அலைதல். 2. Languishing; சோர்வு. 3. 3. Laziness; சோம்பல்.

அலைவு alaivu, *n.* [id. + (*v*) -*u*⁸] 1. Moving, waiving; இடம் பெயர்வு, ஆடுதல். Distress; சஞ்சலம்.

-அலை² -alai, *suff.* [fr. -*alam*⁵—-அலம்⁵] An ending with the sense 'being connected with' as in kamp-alai; ஒரு கடைநிலை, உ-ம். கம்பலை.

அலைசு-தல் alaicu, 5 *v. tr.* [*alai* + 2nd format *c* + -*u*⁵—அலை + மேல்வரும் விகுதி. ச் + -உ⁵] 1. To shake; குலுக்குதல். 2. To rinse, wash; தூசை தோய்த்துக் கழுவுதல். 3. To throw one into confusion; மனதைக் கலக்குதல். 4. [*v. intr.*] To be lazy; சோம்புதல்.

Cf. S. *a-lasa*. fr. *las*, 'to move about rapidly'. E. *lazy*, earlier *laysy*. Hit. *arreshe*, 'to wash'.

அலைசடி, அலைசடை alaicaḍi, °aḍai, *n.* [id.+-*aḍi*² as stem suffix —அலைசு+-அடி] Fatigue; சோர்வு.

அலைசல் alaical, *n.* [id+ -*al*¹] 1. Wandering, affliction; அலைவு, துன்பம். 2. Laziness; சோம்பல்.

அலைவன் alaivaṉ, *n.* [fr. *alavaṉ*, 'cat'? —அலவன் ='பூனை'] Small climbing nettle; பூனைக்காஞ்சொறி.

அ-லோகம் a-lōkam, *n.* [*a*-³+S. *lōk-a* <T. *ul̤a-k-am*, 'world'—'உலகம்'] 1. (Jaina) Immaterial world; காணப்படாத உலகம் (சீவக. 3082). 2. World where the sun's rays do not fall; சூரிய கதிர்கள் படாத உலகம். 3. That which is not constituted of the five elements; பஞ்சபூத சம்பந்தமில்லாதது.

அ-லோகனம் a-lōkaṉam, *n.* [id.+ S. -*ana*] Imperceptibility; காணப்படாமை.

அலோகி, அலோசி alōki, °ci, *n.* Purslane; பசளை.

அ-லோபம் a-lōpam, *n.* [*a*-³+S. *lōbh-a*, 'covetousness'. Cf. T. *iḻu-pp-u*—உலோபம்] Absence of desire, one of the qualities of Civanmutter; சிவன் முத்தர்களுடைய பத்துக் குறிகளுள் ஒன்றான ஆசையின்மை.

அலோமி alōmi, *n.* Ceylon verbesina; பொற்றலைக் கையாந்தகரை.

அவ் AV, prim. rt. [*a*-² +format. *v*—அ-²+ வ்] To get near, reach for, press down, destroy, remove. Combined with the v. det. *i*, *u* and *ai* (=*e*). This root yields such forms as *av-i*, *avv-u*, *av-ḍi* &c.—அடுத்தல், காடுதல், படப்நெருக்குதல், அழித்தல், தொலைத்தல் எனும் பொருள் கொண்ட ஒரு தமிழ்ப்படி. இ, உ, ஐ (=எ) எனும் விகுதிகள் அணைந்து அவி, அவ்வு, அவை ஆதிய வினைச் சொற்களாகும்.

Cf. S. *av*, in its senses: 'to be near, to move, to fill' &c. L. *aveo*. The connexion with S. *ava*, 'down, off, away' is more certain. The original idea seems to have been 'near, under'. See Walde P. *au* (*aue*) (I. 13).

அவ்¹ av, *pron.* [for *avai*¹—=அவை¹] They (neut. pl.); அஃறிணைப் பன்மைச் சுட்டுப்பெயர் (தொல். சொல். 121). "அவ்வும் பிறவும் ஒத்தனை" (பரிபா. 2; 58).

அவ்² av, *pron. adj.* [prob. through metan. from such words as *a-v-aṉ* where *v* is but a consonantal glide between *a* + *aṉ* —அ-வ்-அன் ஆதிய சொற்களினின்று தழுமாற்றச் சொற்பிரிவால் எழுந்தது போலும்] That; அந்த உ-ம். அவ்-வருகு, beyond, above. அவ்-யானை, that elephant. அவ்-வழி, அவ்-வாறு, that way.

அவ்³ av, *adj.* [for *am*¹ before *v* —=அம்¹] Beautiful; அழகிய. உ-ம். அவ்-வயிறு, 'beautiful belly'. அவ்-வாய், 'beautiful place'.

அ-வ்யாஜ-கருணை a-vyāja-karuṇai, *n.* [*a*-³+S. *vi-āja*, 'pretext', said to be fr. *aj-ati*, 'to drive'. Cf. T. *ak-al* + S. *karuṇā*, 'compassion. Cf. T. *kaḻuḷ* — வியாஜம், கருணை¹] Grace given without any cause; காரணம் ஒன்றும் வேண்டாத இருபை.

அவ்வச்சிலேடிக-வியாபகம் avvaccilēḍika-viyāpakam, V. *aupaccilēḍika*°; ஔபச்சிலேடிக° பார்.

அவ்வமை avvamai, *n.* Rock salt or sodium chloride used in medicine; இந்துப்பு.

அவ்வல் avval, *adj.* [Ar. *awwal*] First, principal; முதன்மையான.

அவ்வி-த்தல் avvi, 11. *v. intr.* [variant of *avv-u* by change of the v. det. *-u* with a causative sense into *-i* —அவ்வு-தல் இயற்கை யெழுந்த பிறவினை உருவம்] 1. To pervert the mind; மனவழுக்கோணச்செய்தல் (குறள். 167, உரை). 2. To become impatient, intolerant; பொறாமை அற்றுப் போதல் (வெ. உரை).

அவ்வியம்¹ avviyam, *n.* [id. + *-am*³] 1. Perversity; மனக்கோட்டம். 2. Envy; பொறாமை (169, குறள்). 3. Deceit, fraud; வஞ்சகம் (பழ. 264).

அவ்வியன் avviyan, *n.* [id. + *-an*] Deceiver; ஏமாற்றுவோன்.

அவ்விதை avvitai, *n.* True croton-oil plant; சேர்வாளம்.

அ-வ்-வியக்தி a-v-viyakti, *n.* [V. *avviyattam*—அவ்வியத்தம் பார்] A comet; ஒரு தூமகேது (தக்கயா. 457, உரை).

அ-வ்-வியஞ்சனம் a-v-viyañcanam, *n.* [*a-*³ + S. *vi-anj-ana*, 'mark, sign', fr. *añj*. Cf. T. *aḻunt-u*] 1. Thing without special marks; அடையாளம் இல்லாதது. 2. Animal without horns; கொம்பில்லா மிருகம்.

அ-வ்-வியத்தம் a-v-viyattam, *n.* [id.] 1. What is not manifested, imperceptible; விளக்கக்காணப்படாதது. 2. Great cosmic space; பரமாகாசம் (தக்கயா. 408 உரை). 3. (Sāṅkhya) Primordial undifferentiated cosmic principle; மூலப் பிரகிருதி (சூத. சிவமான் S, 11). 4. Soul; ஆன்மா. 5. Lingam on a pedestal representing Siva; பீடத்தோடுகூடிய சிவலிங்கம் (சைவச. பொது. 119). 6. A hundred thousand quintillions, ஒரு பேரெண் (35 புள்ளிகளோடு கூடிய ஒன்றனதும் இலக்கம்).—CPDS அவ்வியத்த-லக்கணை °lakkaṇai [+ S. *lakṣaṇā*, 'having qualities' fr. *lakṣ* < T. *il-aṅku*—'இலக்கணம்'] Consort of Siva; பார்வதி. அவ்வியத்த-லிங்கம் °liṅkam [+ S. *liṅga*, 'symbol', fr. T. *il-aṅku*—'இலிங்கம்'] Formless aspect of God; அருவத்திருமேனி (சி. சி. 12, 4, மறைஞா.).

அ-வ்-வியத்தன் a-v-viyattaṉ, [id. + *-aṉ*⁵] 1. One devoid of intelligence; அறிவிலி. 2. Siva, Vishṇu, Kāmaṉ (as devoid of form); சிவன், விட்டுணு, காமன்.

அ-வ்-வியதி a-v.viyati, *n.* [*a-*³ + S. *vyathi-i*, 'tremulous, unsteady'. Cf. T. *vitir-u*—விதிர்ப்பு அற்றது] Horse; குதிரை.

அ-வ்-வியதிதி, °வியதிஷி a-v-viyatiti, °tiṣi, *n.* [id. + S. *-dhi*, 'what holds', connected with T. *tāḷ*] 1. The earth; பூமி. 2. Night; இரவு.

அவ்வியம்² avviyam, See *avviyayam*; = அவ்வியயம். For *avviyam*¹ see under *avvi*.

அவ்வியம்³ avviyam, *n.* [S. *havya*. See *avi*—அவி பார்] Oblation offered to gods; தேவர்களுக்கு இடும் பலி.

அ-வ்-வியயம் a-v-viyayam, *n.* [*a-*³ + S. *vyaya*, 'suitable', fr. *vi* + *i*, T. *il-i*] 1. What is imperishable; அழியாதது. 2. An indeclinable word or particle; இடைச்சொல்.

அ-வ்-வியயன் a-vviyayaṉ, *n.* [id. + *-aṉ*⁵] God, the imperishable; கடவுள்.

அ-வ்-வியாகிருதம் a-v-viyākirutam, *n.* [*a-*³ + S. *vi-ākṛi-ta*, 'divided'—விகுதிருத=பிரித்த] 1. (Vedānta) The undifferentiated primordial substance from which all things are evolved, considered as the causal body of Īśvara; ஈசுரனது காரண சரீரமாகிய மாயை (சட்டினா, 159). 2. Mischief; தகாதது.

அ-வ்-வியாகிருதன் a-v-viyākirutaṉ *n.* [id. + *-aṉ*⁵] (Vedānta) The soul as identified with the immanent Soul of the universe in the state of sound sleep; சுழுத்தியவத்தையில் அந்தரியாமியோடு ஒன்றாகக் கருதப்படும் ஆன்மா (வேதா. சூ. 42 உரை).

அ-வ்-வியாசம் a-v-viyācam, *n.* [*a-*³ + S. *vi-āja*, 'deceipt' fr. *vi* + *aj* or *anj*. Cf. T. *aḻunt-u* — வியாஜம்] Absence of fraud; கபடின்மை.

அ-வ்-வியாத்தி, °வியாப்தி a-v-viyātti, °āpti, *n.* [*a-*³ + S. *vi-āpti*, 'pervadedness', fr. *āp*, T. *app-u*¹] (Log.) Faulty definition, being inapplicable to one or more objects indicated by a word; இலக்கியத்தின் ஏகதேசத்தில் இலக்கணஞ் செல்லாதொழியும் தோஷம்.

அ-வ்-வியாப்பியம் a-v-viyāppiyam, *n.* [id.] Not extending to the whole circumstances; முழுதும் செறிதலின்மை.

அ-வ்-விரதம் a-v-viratam, *n.* [*a-*³ + S. *vrat-a*, 'vow', fr. *vṛi*, 'to encircle'. Cf. T. *vaḷ-ai* —விரதம்¹] Breach of vow; விரதத்தைக் கைவிடுகை (சீவ. 242).

அவ்வு-தல் avvu, 5 *v. tr.* [rt. *av* + v. det. (*v*) *-u*, 'to reach for, press down, remove'. Other forms: *avi*, *avai*, &c. அவ் + (வ்) -உ⁵. 'கவ்வுதல், பற்ற நெருக்குதல், நீக்குதல்'. பிறவுரு. அவி-தல், அவை-த்-தல் ஆகியன] 1. To seize with the teeth; கடித்துப்பிடித்தல். 2. To bite off as flesh; அழுத்திப்பெயர்த்தல். 3. To sink; தாழ்தல்.

அவவு avavu, *n.* [id. by extension] Avidity; பேராசை (கலித். 13).

அ-வ்-வெதிரேகம் a-v-vetirēkam, *n.* [*a-*³ + S. *vi-ati-rēka*, 'passing beyond', fr. *ric*, reduceable to *ri* or *ar* (Grassmann). Cf. T. *ar* or *ēr-u* —வியதிரேகம்] (Log.) A fallacious example where the non-existence of both the major and the middle term is stated but not the pervasion of one by the other; தன்னுடைய பக்கருள் ஒன்றுள வெதிரேக வாக்கியம் இன்றிக் கூறும் அநுமான வகை (மணி. 29, 450).

அவ்வை avvai, *n.* [fr. *av*, 'to be near' hence: 'dear one'. Cf. *ammai*¹— நெருங்கிய உறவுடையவள். ஒப். அம்மை] 1. Mother; தாய் (சிவக. 1046). 2. Woman ascetic; தவப்பெண். 3. Old woman; கிழவி. 4. Name of a famous poetess; ஔவையார்.

Tel. *avva*, K. *avve*; Tod. *av*. Cf. L. *avia*, 'grand mother', *avus*, 'grand father'; Got. *awo*, 'grand mother'.

அவ்வையன் avvaiyaṉ, *n.* [Cf. *a-payam*] Tender berry of chebulic myrobalan; கடுக்காய்ப்பிஞ்சு.

அவ்வோ avvō, *adj.* [for *av*² + *av*²— அவ்² + அவ்²] Each taken severally; அத்தனை, உ-ம். "அவ்வோ பதார்த்தங்கள் தோறும்" (ஈடு. 1,1,7).

அவ்வோன் avvōṉ, *pron.* [for *av-aṉ*²— = அவன்²] That one; அவன் (பாரத. பதினெட். 111).

அவ-¹ ava-, *part.* [prob. connected with *av-ai*, 'to press down'. Taken back, fr. S. —அவை-த்தலோடு இனங்கொண்டது போலும்] A Sanskrit prefix expressing down, off, away. —CPDS அவா'ந்தரம் °antaram [+ *antar-am*] Intermediate time, place, means; இடையிலுள்ளது. அவா'ந்தரவெளி avāntaraveḷi, Open plain, desert; வெட்டவெளி. அவா'ந்தரை, அவா'ந்திரை °antarai, °antirai, Void, emptiness; வெறுமை. அவா'ப்தம் °āptam [+ S. *āp-ta*, 'obtained', fr. *āp*, T. *appu*¹ —ஆப்தம் = அப்பிக்கொண்டது] What is obtained; அடையப்பெற்றது. அவ-க்-கத்தலா °kattalā [Cf. *ava-kalavāy*

ஓப். அவ-கதவாய்] A small plant with slender green branches; சிறுச் சுப்பெல்லி. அவ-க்-கரம்[1] °karam [S. avas (=ava) + kara, fr. krī, 'to tear off, separate'. Cf. T. kiḻi —புறம்பாக்கியது] Excrement; மலம். Private parts; குய்யம். Elephant's liver; யானைக் குடல். அவ-க்-களி °kaḷi [+kaḷ-i (kaḍai)? 'the worst'—கடைகடை?] Useless person; உபயோகம் அற்றவன்-ள்-து. அவ-க்-கியாதி °kiyāti See apa-k° = அப-க்-கியாதி. அவ-க்-கிரகம் °kirakam [+S. grah-a, 'seizing' fr. grah >grabh. Cf. T. kiḷapp-u—'கிரகம்[1]'] Obstacle; தடை. Drought; மழையின்மை. Elephant's forehead; யானைநெற்றி. அவ-க்-கிரசம் °kiracam, Vinegar; காடி. அவ-க்-கிரயம் °kirayam [+ S. kraya, 'price', fr. krī, to buy. Cf. T. kūṟ-u—'கிரயம்'] Price; விலை. Wages; சம்பளம். Tax due to the king; அரசவரி. Unjust price; அநியாயவிலை. அவ-க்-கிராகம் °kirākam [+S. grāh-a, [see ava-k-kirakam] Separation, malediction; தள்ளி விடுகை, சாபம். Drought; மழையின்மை. அவ-க்-கிரியை °kiriyai [+S. kriyā, 'deed'] Negligence; அசட்டை. அவ-க்-கொடை °koḍai [+koḍ-ai, 'gift'] Useless gift; வீண் உபகாரம். அவ-க்-கொலை °kolai [+kol-ai, 'killing'] Cruel death; துர்மரணம். அவ-கடம் °kaḍam [+kaḍ-am, 'sin'? S. ava-kaṭa—'கடம்[2]'] Evil act; தீச் செயல். Misfortune; துர் அதிஷ்டம். Dissimulation, deceipt; மாய்மாலம், வஞ்சகம் (Prov.) "வழுக்கிலே தாவடம் மனத்திலே அவகடம்". அவ-கண்டம் °kaṇḍam [+S. gaṇḍ-a, 'cheek', perh. fr. T. kaṉṉ-am—'கன்னம்[1]'] Furuncle on the face or cheek; முகத்தில், கன்னத்தில், வரும் கிரணம். அவ-கணிதம் °kaṇitam [+S. gaṇ-ita, 'calculating', fr. T. kaṇ-i] Disregard; புறக்கணிப்பு. அவ-கதவாய் °katavāy, V. ava-k-kattalā; =அவ-க்-கத்தலா. அவ-கதி °kati [+S. gat-i, 'motion, course' fr. gam. Cf. T. ak-al—கதி[3]'] State of degradation; தாழ்ந்த நிலை. Knowledge; அறிவு. அவ-கமம் °kamam [+id.] Removing; அகற்றல். Knowledge; அறிவு. அவ-கர்த்தனம் °karttanam [+S. kartt-aṉa, 'cutting into pieces' fr. krit. Cf. T. kuṟu — 'குறு-த்தல்'] Cutting, chipping scraping; துண்டாடுதல், சீவுதல். அவ-கஹனத்துவம் °kahaṉattuvam [+S. gāhana-tva, 'plunging, penetrating', fr. gāh or gah to be thick, impervious. Cf. T. kaṉ-am —'கனம்[2]'] The power of interpenetration; மனத்திலுட் புகுந்தன்மை (மேரு. 93 உரை). அவ-காகம் °kākam [+id.] Bathing, bathing place; நீராடுதல், நீராடும் இடம். அவ-காகிக்க °kākikka [id.] To plunge in, enter into; உட்புக. To learn thoroughly; வைரத்தி அறிய. அவ-காசம் °kācam [+S. kāś-a, 'visible', hence, 'open space, room, opportunity'. fr. kāś prob. < T. kāḷ—'காசம்[1]'] Time, occasion; சமயம். Place; இடம். Ability, means; திராணி. Proprietary right; பாத்தியதை. அவகாச-முறி °muri [id.+muri, 'written bond'] Land partition deed; பாகபத்திரம். அவகாசி avakāci, Heir; வாரிசு. அவகாசிக்க avakācikka, To delay; தாமதிக்க. அவ-காதம் °kātam, [+S. ghāt-a, 'striking' fr. (g) han. Cf. T. kol; கொல்—'காதம்[3]'] Striking, killing; அடித்தல், கொல்லுதல். Pounding grains; உரலில் குத்துதல். Instantaneous death; சடுதி மரணம். Affront; அவமானம். அவ-காயம் °kāyam [+S. kāśa, V. ava-kācam —'அவகாசம்' பார்] Space; ஆகாயம் (சீவ. 504). அவ-காரம் °kāram [+ S. hār-a, 'taking', fr. hri (bhri). Cf. T. poṟ-u—ஹாரம் =எடுத்தல்] Invitation; அழைத்தல். Taking by force; அபகரிக்கை. Theft; களவு. Temporary cessation as in war &c.; போர் முதலியவற்றில் ஓய்வு. Error, apostasy; பதிதத்தனம். Crocodile; முதலை. Sea elephant; யானைமீன். அவ-காரன் °kāraṉ [id.] Thief; கள்வன். Gambler; சூதாடி. அவ-காலம் °kālam, V. a-kālam = அ-காலம். அவ-காஹனம் °kahaṉam [V. ava-kahaṉattuvam — அவ-கஹனத்துவம் பார்] Being well immersed, well understood; நன்றாய் அமிழ்ந்துதல், மனதிற் படிதல். அவ-கிரந்தனம் °kirantaṉam [+S. krant-ana, 'crying aloud', fr. krant. Cf. T. kuḷaṟ-u —கிரந்தனம் = குழறுகை] Crying with lamentation; குரலெழுப்பி அழுதல். அவ-கிருத்தியம் °kiruttiyam [+S. kri-tya, 'doing', fr. kri. Cf. T. cey] Evil action; கெட்ட செய்கை. அவ-கீதம் °kītam [+ S. gī-ta, 'praised in song'] Satire; வசைப்பாட்டு. What is despised; இகழப்பட்டது. Calumny; அபவாதம். அவ-கீர்த்தி °kīrtti, =apakīrtti: =அப-கீர்த்தி. அவ-கீரணம் °kīraṇam [+S. kīr-ṇa, 'scattered', fr. krī. Cf. T. kiḷ-aṟ-u—'கிளறியது, பரப்பியது'] Scattering; சிதறுகை. அவ-கீனம் °kīṉam [cf. S. avaśīna] Scorpion; தேள். அவ-குஞ்சனம் °kuñcaṉam [+S. kuñc-ana, 'bending', fr. kuñc, akin to T. kuv-i] Bend, curve, contraction; வளைவு, சுருக்குகை. அவ-குடாரம் °kuḍāram, Opposition; மாறு. What goes backwards, lower; பின் போவது, கீழ்ப்போவது. அவ-குண்டனம் °kuṇḍaṉam [+ gunṭh-ana, 'protecting' fr. gunṭh, =gunḍ, kuḍ <T. kuḍ] Covering; மூடுகை. அவ-குண்டியம் °kuṇḍiyam [id.] Act of enveloping; சுற்றிலும் மூடுதல். அவ-குணம் °kuṇam [+S. guṇ-a, <T. kuṇ-am, 'bent of mind'] Vicious ways; கெட்ட மனப்பாங்கு. அவ-குறி °kuṟi [+kuṟ-i, 'mark'] Bad sign (of death); மரணத் துர்க்குறி. அவ-கேசி °kēci [+S. kēś-in, 'having hair', fr. keś-a, prob. <T. cēk-aram] Barren tree; காயாமரம். அவ-கேடு °kēḍu [+kēḍ-u, 'evil'] Calamity; பெருந் தீங்கு. அவ-கேல(ள)ம், °ல(ள)னம், °லி(ளி)தம் °kēl(l)am, °l(l)anam, °l(l)itam [+S. kēl-ana, 'disrespect'. Cf. kēl-i] Irreverence; contempt; அவமதிப்பு. அவ-கோரணம் °kōraṇam [+S. gōr-aṇa, 'effort' Cf. T. kōr-u — கோரணம் = முயற்சி] Assailing with weapons; ஆயுதங்கொண்டு தாக்குதல். அவச்-சாடை °cāḍai [+cāḍai, 'hint' — சாடை[1]] =ava-kuṟi; =அவ-குறி. அவ-ச்-சாயை °cāyai, V. apa-c-cāyai; =அப-ச்-சாயை. அவ-ச்-சாவு °cāvu [+cā-v-u, 'death'] Unnatural death; துர்மரணம். அவ-ச்-சின்னம் °ciṉṉam [+ S. chinn-a, 'separated', fr. chid, akin to T. cint-u — 'சின்னம்[4]'] What is divided; வேறுக்கப்பட்டது. (Log.) That which is differentiated; குறிப்பிட்டுப் பிரிக்கப்பட்டது. அவ-ச்-சுரிதகம், °சுரிதம் °curitakam, °tam [+S chur-ita, 'split', fr. chur, akin to T. tuḷ-ai—துளை =பிள] Horse-laugh (splitting) one's sides?) குலுங்கச் சிரிப்பு. அவ-ச்-சேத்தியம் °cēttiyam [V. ava-c-ciṉṉam—அவ-ச்-சின்னம் பார்] (Log.) What can be split up; பிரிக்கக் கூடியது. அவ-ச்-சேதகம் °cētakam [id.] Separating; வேறுக்கல். Limit; எல்லை. (Log.) Differentiating attribute; சிறப்பியல்பு. அவ-ச்-சேதனம் °cētaṉam [id.] Cutting asunder; வெட்டிப் பிரித்தல். Distinguishing; பிரித்துணர்தல். அவ-சகுனம் °cakuṉam, V. apa-cakuṉam =அப-சகுனம். அவ-சங்கை °caṅkai [+S. saṁ-khyā, 'to count, estimate'] Dishonour; மரியாதையீனம். அவ-சத்தம் °cattam, V. apa-cattam; =அப-சத்தம். அவ-சயம் °cayam, V. apacayam; = அப-சயம். [+ S. caya, 'heap'—'சயம்[2]'] Collecting flowers &c.; பட்பம் முதலியவற்றைத் திரட்டுதல். அவ-சர்ப்பிணி °carppiṇi [+S. sarp-

*ini*, 'going slowly', *sarp* < *sṛi*. T. *car-i*[1]] (Jaina) A Jain era indicating a downward course in creation; வாஜ்ஜ் போகம் முதலியவை சுருங்குங்கா லம் (சூடா 361, உரை). அவ-சரம் °caram [+ *sara*, fr. *sṛi* as above] Place of descending water; நன் னீர் இறங்கும் இடம். Rain; மழை. Year; ஆண்டு. Various poses of the deity; விக்கிரகத்தின் கோலம். Favourable opportunity; சந்தர்ப்பம் (பாரத. சம்பவ. 13). Urgency; விரைவு. Necessity, compulsion; அவசியகம். A government office; அரசாங்க உத்தியோகக்களுள் ஒன்று. அவசர-வர்த்தனை °°varttanai, A tax; வரிவகை (M. E. R. 427 of 1925). அவ-சாதம் °cātam [+S. *sād-a*, 'sinking', fr. *sad*. Cf. T. *tāḻ*—சாதம்=தாழ்தல்] Lassitude; இளைப்பு. Discomfiture; தோல்வியடைதல். End; முடிவு. அவ-சாயம் °cāyam [+S. *sā-ya*, 'rest' fr. *sā* or *sō* perh. akin to T. *cāy* —'சாயம்[1]'] Accomplishment; சமாப்தி பாக்கம். End; முடிவு. Certitude; நிச்சயம். அவ-சாரணம் °cāraṇam [+S. *sār-aṇa*, 'causing to go', fr. *sṛi*, T. *car-i*[1]] Act of conducting or removing; நடத்துதல், இடம்பெயரச் செய்தல். அவ-சாரம் °cāram [V. *apa-cāram* — அப-சாரம் பார்] Going beyond limit; புறம்போதல். Prostitution; வேசித்தனம். அவ-சாரி °cāri [id.] Harlot; பொதுமகள். அவ-சானம் °cāṉam [V. *ava-cāyam* — 'அவ-சாயம்' பார்] End; முடிவு. Death; மரணம். Limit; எல்லை. அவ-சிட்டம் °ciṭṭam [+ S. *śiṣ-ṭa*, 'remaining over', fr. *śiṣ*. Cf. T. *kiḍ-a*] What is left over; மிச்சமானது. அவ-சித்தாந்தம் °cittāntam, V. apa-cittāntam; =அப-சித்தாந்தம். அவ-சிதம் °citam, V. apa-citam; அப-சிதம். [+ S. *si-ta*, V. *ava-cāyam* — அவ-சாயம் பார்] What is finished; செய்து முடிக்கப்பட்டது. What is known; அறியப் பட்டது. அவ-சிந்தம் °cintam [perh. for *a-cint-ya*] That which cannot be thought of; சிந்திக்கமுடி யாதது (திருமந். 709). அவ-சினம் °ciṉam [+ S. *śina*, 'congealed?'] Scorpion; தேள். அவ-சுத்தம் °cuttam [+ S. *śuddh-a*, 'purified', fr. *śudh*, T. *cuḍ-u* — 'சுத்தம்[1]' பார்] Aspersion; புரோட்சித்தல். Wetting; நனைத் தல். அவ-சேடம், °சேஷம் °cēḍam, °cēṣam, V. ava-ciḍḍam = அவ-சிட்டம். அவ-த்-தம்[1] °tam [+S. *sthā*, 'to stand'. Cf. T. *tal*—'தானம்[2]' பார்] Evil, calamity; கேடு (திவ். திரு வாய். 10,3,9). அவ-த்-தானம் °tāṉam [id.] Place of residence; இருப் பிடம். அவ-த்-திதன் °titan [id.] (Saiva) Soul which experiences the various conditions to which it is liable; அநுபவிக்கத்தக்கரிய அவஸ்தைகளை அநுபவிக்கும் ஆன்மா (சி. போ. பா. 4,3). அவ-த்-துறை °turai [+*tur-ai*, 'way'] Bad way; தீவழி (சுப்பு. தக். வே. 7). அவ-த்-தை °tai [S. *ava-sthā*. See *ava-t-tam* — 'அவ-த்-தம்' பார்] State, condition; நிலை. Condition of mind in love; காட்சி, வேட்கை, ஒரு தலையுள் ளுதல், மெலிதல், ஆக்கஞ் செப்பல், நாணு வரைவிறத்தல், நோக்குவவெல்லாம் அவை யே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு எனும் பத்துமேயுறுநிலைகள் (சம்பி. 36,உரை). States of the embodied soul, four according to Saivites, and three according to others; பெத்த ஆன்மாவுக்கு உண்டாகும் சாக்கிரம் முதலிய நிலை கள். Stages of human life; பாலியம் முதலிய மானுட பருவங்கள். Threefold aspect of God; கடவுளின் ஆரோபித்த இலயம், போகம், அதிகாரம் எனும் நிலைகள். State of danger, agony; அபத்தநிலை, வேதனை (உத்தரா. சேதைவா. 61). அவத்தை-ப்-பிரயோகம் °°pirayōkam [id.+S. *pra-yōga*, 'practising'] One of the 64 kalaikkiyāṉam, the power of stationing the soul at pleasure in any of its five stages; சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீ தம் எனும் பஞ்சாவத்தைகளுள் ஒன்றில் உயிரை நிறுத்தவலைக் கூறும் கலைக்ஞானம். The art of killing by sorcery; குளி யம் வைத்துக்கொல்லும் வித்தை. அவ-தஞ்சம் °tañcam [+ S. *taṁs-a*, 'stretched, or moving to and fro'. Cf. T. *tāṇḍ-u*—'தாண்டு-தல்'] Flower used as ear ornament; செவிமலர்ப்பூ. அவ-தந்திரம் °tantiram [+S. *tan-tra*, 'thread, intellectual subtlety', fr. *tan*. Cf. T. *tāṇḍ-u* above] Underhand dealing. (Prov.) அவதந்திரம் தனக்கு அந்தரம். அவ-தரணம் °taraṇam [+S. *tār-aṇa*, 'crossing over', fr. *tṛī*, 'to go beyond'. Cf. T. *tuṟ-a*] Descent; இறக்குதல். Interpretation; பொருள் சொல்லுதல். அவ-தரணிகை °taraṇikai [id.] Short prayer at the beginning of a work (supposed to make a divinity to descend); நூலின் முகப்பிற் காப்பு. அவ-தரம் °taram [for *ava-caram*— =அவ-சரம்] Occasion; சமயம். அவ-தரிக்க °tarikka [V. *ava-taraṇam* — 'அவதரணம்' பார்] To come down, to be conceived as God in human form; கடவுள் இறங் கிச் சன்மிக்க. God to be born as man; கடவுள் மனுஷனுப்ப் பிறக்க. The same said of any saintly person; ஒரு மகா புருஷர் பிறக்க. To abide (said of great persons); பெரியோர் தங்க. உ-ம். "வாசிசக் சுவாமி மடத்தவதரிப்ப" (திருவாலவா. 37, 32). அவ-தாதம் °tātam [+S. *dāt-a*, 'cleaned', perh. connected with *dhāv*, 'to run as water, clean'. Cf. *tāv-u*] Cleanliness; சுத்தம். Whiteness; வெண்மை. Yellow colour; மஞ்சள் நிறம். Golden colour; பொன்மை. Beauty; அழகு. அவ-தாரணம் °tāraṇam [+S. *dhār-aṇa*, 'holding, bearing', fr. *dhṛi*. Cf. T. *poṟ-u*] Certainty; தேற்றம். [=*ava-taraṇam* — =அவ-தரணம்] Preface; அன்முகம். [+ S. *dār-aṇa*, 'tearing', fr. *dṛi*. Cf. T. *taṟ-i*, *teṟ-i*—தாரணம் =தறித்தல்] Pickaxe, mamotty; இருதலைக் குந்தாலி, மண்வெட்டி. அவ-தாரம் °tāram [V. *ava-tari*—'அவதரித்-தல்'] Descent; இறங்குகை. Birth of a great being; திவ்ய பிறப்பு. Pond; குளம். Sacred ghat; தீர்த்தத்துறை. [=*ava-tāraṇam* — =அவ-தாரணம்] Preface; அன் முகம். Ascertaining; அட்பமாய் நிச்ச யித்தல்.=apa-rātam=அப-ராதம். அவ-தாரிகை °tārikai [V. *ava-tāram*— 'அவ-தாரம்'] Incarnation; அவதாரஞ் செய்தல். Introductory note to a work; அன் முன்னுரை. அவ-தாவனம் °tāvaṉam [V. *ava-tātam*—'அவ-தாதம்' பார்] Pursuing; தாரத்துதல். Cleaning; சுத்தி செய்தல். அவ-தாளம் °tāḷam [+*tāḷam*, 'time measure'] Error in time-measure; தாளப் பிசகு. அவ-தானம் °tāṉam [V. *ava-tātam* —'அவ-தாதம்' பார்] Pure, approved occupation, glorious deed; மேன்மை யான செயல். [+ S. *dā-na*, 'cutting', fr. *dō* or *dā*—தா =வெட்டுதல்] Section, division; பிரிவு. Simultaneous attention to various subjects; ஒரே சமயத்தில் பலவேறு விஷயங்களைக் கவனித் தல். Skill; சாதுரியம். Transgression; வரம்பு மீறுதல் [+ S. *dhā-na*, 'fixing upon', fr. *dhā*. Cf. T. *tāḷ* — தானம் =நிறுத்துகை] Attention; கவனம். Memory; ஞாபகம். Agreement; மன ஒருப் பாடு [+S. *sāna* (*syati*) 'finishing'— சா=முடிவு] End; முடிவு. Death; மர ணம். அவ-தானி °tāṉi [id.] Title of one well versed in the Vedas; வேதங்களில் தேர்ச்சி பெற்றவன். One skilled in attending to eight things at the same time; அட்டாவதானிபோ லும் பல காரியங்களில் ஒரே தடவையில் மனதைச் செலுத்துவோன். அவதானிக்க, To recollect, reflect; நினைப் பூட்டிக்கொள்ள. To commit to memory; மனதில் அமைக்க. அவ-தி °ti [+ S. *dhā*, 'to place'. Cf. T. *tāḷ* — 'தாவு[1]'] Pit; குழி. Fixed term; தவ ணை. Time; காலம். Boundary; எல்லை. Section; பரிச்சேதம். One of the senses of the *abl.*; ஐந்தாம் வேற்றுமை

எல்லைப்பொருள். Leave; விடுமுறை. Adjournment; வாய்தா. Number; கணக்கு (சுந்தபு. வச்சிரா. 54). Suffering, distress; துன்பம். அவதி-க்-கிரயம் °°kirayam, Conditional sale; தவணை கட்டிச்செய்யும் விற்பனை. அவதி-ஞானம் °ñāṉam (Jaina) Clairvoyance; பொறிபுலவியின்றித் தூரத்துள்ளவைகளை உணர்தல். அவ-தீரணம் °tīraṇam [+S. *tīr-ṇa*, 'passed over'. V. *ava-taraṇam*—'அவ-தாரணம்' பார்] Disrespect; அவமதிப்பு. அவ-தூதம் °tūtam [+ *dhū-ta*, 'shaken off', fr. *dhū*. Cf. T. *tū-v-u* — தூசு = தூவிவிட்ட] Complete renunciation; முழுத்துறவு. Nakedness; அம்மணம். Putting down an adversary by the back of the hand in wrestling; மல்யுத்தத்தில் புறங்கையாற் தள்ளி விழுத்துதல். அவ-தூதன் °tūtaṉ, Ascetic who has renounced all; வெளிவேடத்தும் அகத்தையும் துறந்தவர். அவ-தூறு °tūṟu, V. apa-tūṟu; = அப-தூறு. அவதூனனம் °tūṉaṉam [+ S. *dhūnana*. V. *ava-tūtam*—'அவ-தூதம்' பார்] Shaking off, chasing away; உதறிவிடல், துரத்தல். Treading; மிதித்தல். Being troubled; கலக்குதல். அவ-தோகம் °tōkam [+S. *dōgh-a*, 'squeezing out', fr. *duh*. Cf. T. *tuk-ai*—துவை 'துகைத்தல்'] Milk; பால். அவ-நதன் °nataṉ [+ S. *nat-a*, 'bent', fr. *nam*. Cf. T. *nim-ir* —நிமிர்-தல் = வளைதல்] One with head bowed; தலைவணங்குவோன். அப-நதி °nati [id.] Humility; தாழ்மை. Worship; வணக்கம். Setting of the sun; சூரியன் அஸ்தமித்தல். அவ-நம்பிக்கை °nampikkai [+ *namp-ikkai*, 'trust'] Distrust, suspicion; சந்தேகம். அவ-நாயகம் °nāyakam [+ *nāy-aka*, 'leading', fr. *nī*. Cf. T. *nikk-u*] Causing to descend; இறக்கச் செய்தல். அவ-நிந்தை °nintai [+ S. *nind-ā*, 'blame', fr. *nid* or *nind*. Cf. T. *nīt-tal* — 'நீத்தல்'] அவ-நியாயம் °niyāyam [id.] Injustice; அநியாயம். அவ-நீதம் °nītam [id.] Do; ஷை. அவ-நுதி °nuti, V. apa-nuti; = அப-நுதி. அவ-நெறி °neṟi [+ *neṟ-i*, 'way'] Way of sin; பாவ வழி. அவ-ப்-பலம் °palam [+S. *phal-am* <T. *paḻ-am*, 'fruit'—'பழம்'] Evil results; தீப்பயன். அவ-ப்-பிரசவம் °piracavam [V. *apa-p-piracātai*—'அப-ப்-பிரசாதை' பார்] Abortion after six months; ஆறுமாதத்துக்குமேல் கருவழிவு. அவ-ப்-பிரஞ்சம் °piraṉcam, V. apa° = அப-ப்-பிரஞ்சம். அவ-ப்-பேர் °pēr [+ *pēr*, 'name' — 'பேர்¹'] Ill-fame; அபகீர்த்தி. அவ-ப்-பொழுது °poḻutu [+ *poḻ-u-tu*, 'time'] Mis-spent time; வீணுக்கழித்த நேரம். அவ-பக்தி °patti [+S. *bhak-ti*, 'devotion', fr. *bhaj* <T. *pak-u*—'பகுதி²'] Impiety, superstition; பக்தியின்மை, மூடபக்தி. அவ-பத்தியம் °pattiyam [+ S. *path-ya*, 'suitable for the way', fr. *path*, akin to T. *paḍ-ar* — 'படர்தியம்¹'] Unsuitable diet; தகாத தீன். அவ-பாசம் °pācam [+ S. *bhās-a*, 'light', fr. *bhā* <T. *vē*—பாஸ = வெளிச்சம்] Light; ஒளி. Knowledge; அறிவு. False knowledge; விபரீதஞானம். அவ-பாதம் °pātam [+ S. *pāt-a*, 'flying down', fr. *pat*. Cf. T. *paṟ-a*, *paṟ-i*—பறத்-தல், பறி-தல்] Descent; இறங்குதல். Pit; பதுகுழி. Trap; பொறிக்கிடங்கு. Injury; தீங்கு. அவ-பாதனம் °pātaṉam [id.] Cutting down; தறித்தல். Felling; விழுத்துதல். அவ-பிரதம், °பிருதம் °piratam, °pirutam [+ S. *bhṛi-ta*, 'removing', fr. *bhṛi*, T. *poṟ-u*—பொறு = தொலைத்தல்] Bath at the completion of a sacrifice; யாகமுடிவில் நீராடல். அவ-புத்தி °putti [+ S. *buddh-i*, 'awakening, understanding', fr. *budh*. Cf. T. *put-u*—'புத்தி'] Folly; கெடுமதி. Bad advice; துர்போதனை. அவ-பேதகம் [+ S. *bhēd-aka*, 'dividing', fr. *bhid*, T. *vedd-u*] Splitting; பிளத்தல். அவ-போதம் °pōtam [V. *ava-putti*—'அவ-புத்தி' பார்] Awakening; விழிப்பு. Knowledge; அறிவு. அவ-மதாங்குசம் °matāṅkucam [+S. *mat-a*, 'regarded', + *aṅkucam*, 'elephant goad'—'மதம்²', 'அங்குசம்¹'] Elephant in rut (which disregards the goad); தோட்டிக்கடங்காத யானை. அவ-மதி, °ப்பு °mati, °ppu [+ S. *mat-i*. See above—'மதி¹'] Disregard, contempt; நிந்தை, வெறுப்பு. அவ-மதிக்க °matikka, To insult, disgrace; இகழ. அவ-மரணம் °maraṇam, V. apa-maraṇam; = அப-மரணம். அவ-மரியாதை °mariyātai [+ S. *maryādā*, 'boundary' said to be fr. **marya*, 'sea', prob. fr. T. *vāri*] Incivility; ஆசாரக்குறைச்செய்யாமை. அவ-மழை °maḻai [+ *maḻ-ai*, 'rain'] Unseasonable or injurious rain; அகால, அல்லது கேடு விளைக்கும் மழை. அவ-மானம் °māṉam [+S. *mān-a*, V. *ava-mati*—'மானம்¹'] = ava-matippu; = அவமதிப்பு. அவ-மானிக்க °māṉikka, To disgrace; சங்கையீனப்படுத்த. அவ-மானிதம் °māṉitam, = ava-māṉam; = அவ-மானம். அவ-மிருத்து °miruttu, V. apa-miruttu; = அப-மிருத்து. அவ-மோசனம் °mōcaṉam [+S. *mōc-ana*, 'liberation', fr. *muc*. Cf. T. *minc-u*—'மோசனம்²'] Liberation; விடுதலையாக்கல். Vomiting; சத்தியெடுத்தல். அவ-யவம்¹ °yavam [+ S. *yu*, 'to separate' — பிரித்தல்] Limb; உறுப்பு. Part, member; அங்கம். (Log.) Component part of an argument; அநுமானவாக்கியத்தின் உறுப்பு. அவயவ-உருவகம் °°uruvakam [+ *uruv-akam*, 'figure of speech'] Using a metaphor for the part without applying it to the whole; அவயவத்தை உருவகஞ்செய்து அவயவியை வாளா உரைக்கும் அணி (தண்டி. 36, உரை). அவ-யவி °yavi [id.] Whole, composed of constituent parts; அவயவத்தை உடையது. Body; உடல். Syllogism; அநுமான வாக்கியம். அவயவி-உருவகம் °°uruvakam, Opposite of avayava°; அவயவ உருவகத்திற்கு எதிரானது. அவ-யோகம் °yōkam [+S. *yōg-a*, 'union', fr. *yuj*. Cf. T. *okk-a*] Misfortune; துர்ச் சம்பவம். அவ-ராகம் °rākam [+S. *rāg-a*, 'red colouring, passion', fr. *raj*, *rañj*. Cf. T. *arakku²*—'இராகம்'] Freedom from desire; இச்சையின்மை. அவ-ராத்திரி °rāttiri [+ S. *rā-tri*, 'night', prob. fr. T. *irā* <*ira-vu*] Night spent uselessly; வீணிற்போக்கிய இரவு. அவ-ரூபம் °rūpam, V. apa-rūpam; = அப-ரூபம். Aerial root as of the banyan tree; விழுது. அவ-ரோகணம் °rōkaṇam [+ S. *rōh-aṇa*, 'rising', fr. *ruh*. Cf. T. *uru*—ரோகணம் = ஏறுதல்] Descending; இறங்குகை. (Mus.) Complete descent of the gamut (In this sense also written அவ-ரோகம், ava-rōkam); சமம் பத்தானுள் ஒன்று (பரத. இராக. 24). Reciting the Veda backward; வேதத்தை அடிமுதல்மாறிச் சொல்லுகை. அவ-ரோகம் °rōkam [id.] Aerial root; விழுது. Climber; மரத்திற் படர்கொடி. அவ-ரோகி °rōki [id.] Banyan tree; ஆலமரம். அவ-ரோதம், °தனம் °rōtam, °taṉam [V. *apa-rōtam*—'அப-ரோதம்' பார்] Obstruction, screening; தடை, மறைவு. Ladies' apartment in a palace; அந்தப்புரம். Palace; அரண்மனை. அவ-ரோபணம் °rōpaṇam [V. *ava-rōkaṇam*, the change of *k* in S. into *p* in a causative sense — அவ-ரோகணம், ககரம் பகரமானது, பிறவினைப்பொருளில்] Causing to descend; இறக்குகை. Setting of heavenly bodies; வானசோதிகள் படுகை. Destruction; அழித்தல். அவ-லட்சணம் °laḍcaṇam, = ava-rūpam; = அவ-ரூபம். அவ-லம்பம், °லம்பனம் °lampam, °aṉam [+ S. *lamb-a*, 'hanging down', fr. *ramb*. Cf. T. *ir-aṅk-u* —'இலம்பம்'] Anything hanging down; தொங்குவது. Dependence, prop; சார்பு. A perpendicular; நிறை

ட்டமேகை. அவ-லம்ப-சிலேஷ்மம் °°cilēṣmam [+S. ślēṣ-man, 'phlegm', fr. śliṣ. Cf. T. koḷ-u-vu—சிலேட்டுமம்] A disease due to excessive phlegm; சளியதிகரிப்பால் உண்டாகும் ஒருநோய். அவ-லம்பிக்க °lampikka, To catch hold of, to cling; சார்ந்திருக்க, பற்ற. அவ-லீலை °līlai [+S. līlā, 'play'. Cf. T. āl-u] Sport; விளையாட்டு. Scorn; நிந்தனை. அவ-லுஞ்சனம் °luñcaṉam [+S. luñc-ana, 'tearing', fr. luñc, T. uṟa—லுஞ்சனம்=உறத்தல்] Tearing; கிழித்தல். Uprooting; வேரோடு பிடுங்குதல். அவ-லுண்டனம் °luṇdaṉam [+S. luṇḍ-ana, 'turning about', fr. luṇḍ, T. uruḷ—லுண்டனம்=உருள்தல்] Rolling on the ground; நிலத்திலே விழுந்து உருளுதல். Pillaging, theft; கொள்ளையடிதல், களவு. அவ-லேகனம் °lēkaṉam [+S. lēh-ana, 'licking', fr. lih, T. nakk-u—'இலேகியம்' பார்] Licking; நக்குதல். அவ-லேசம் °lēcam [+S. lēś-a, '(torn into) small pieces', fr. riś, perh. extended form of T. aṟ-u—லேசம்=சிறுதுண்டு] Littleness, lowliness; அற்பம், சிறுமை. Danger; ஆபத்து. அவ-லேபம், °பனம் °lēpam, °panam [+S. lēp-ana, 'smearing', fr. lip. Cf. T. ilupp-ai—இலேபனம்] Oil; தைலம். Anointing; பூசுதல். Beauty; அலங்காரம். Haughtiness; செருக்கு. Getting united; ஒன்றுதல். அவ-லோகம், °கனம் °lōkam, °aṉam [+S. lōk-ana, 'illuminating', fr. lōk, lōc, akin to T. veḷicc-am — லோகனம் =வெளிச்சம்] Glance, look; பார்வை. அவ-லோகிக்க °lōkikka, To perceive, see; காண்க. அவ-வாதம் °vātam, V. apa-vātam =அபவாதம். அவ-விசுவாசம் °vicuvācam [+S. vi-śvāsa, 'confidence'] Incredulity; எதையும் நம்பாமை, சமுச்சயம். False belief; குருட்டுக் கொள்கை. அவ-வியாத்தி °viyātti, V. a-v-viyātti; =அவ்வியாத்தி. அவ-ஸ்தை °stai, V. ava-ttai; =அவத்தை. அவ-க்ஷேபணம் °kṣēpaṇam [S. kṣēp-aṇa, 'throwing down', fr. kṣip. Cf. T. kiḷ-appu — க்ஷேபணம் =கிளப்புதல்] (Nāṭya) A mode of gesticulation; கூத்தின் அங்கக் கிரியைகளுள் ஒன்று.

அவ-² ava-, V. apa-; =அப-.

அவக்-கரம் avak-karam, n. [S. avas-kara] 1. See under ava-; அவ-¹ பார். 2. [S. apas-kara] Any part of a chariot; தேரின் அங்கத்துள் ஒன்று.

அவக்கவக்கெனல் avakkavakk-eṉal, n. [avakku- Onom. for haste] Being hasty, galloping, sounding explosively; விரைவுக் குறிப்பு.

அ-வசம் a-vacam, n. [a-³ + S. vaś-a, 'subdued', fr. vaś, akin to T. vac-ai —'வசம்¹'] 1. Not having one's own will; தன்னிட்டம் இன்மை. 2. Being beside oneself, exstasy; தன்வயமழிதல், பரவசம்.

அ-வசியம் a-vaciyam, n. [id.] 1. Necessity; இன்றியமையாதது. 2. Urgency; சீக்கிரம் வேண்டுவது. 3. Certitude, infallibility; நிச்சயம், தவறாமை. 4. Ancient custom; பூர்வ வழக்கம் [adv.] Necessarily, surely; கட்டாயமாய், நிச்சயமாய்.

அவ-சரம் ஆதியன ava-caram &c., See under ava-¹; அவ-¹ பார்.

அவசி avaci, n. Indian ipecacuanha; நச்சறுப்பான் (தைலவ. தைல. 72).

அவட்டம் avaḍḍam, n. [cf. avattam³] A species of cleome; நாய்வேளை.

அவடம் avaḍam, n. [S. avaṭa, fr. ava-? —அவ- =கீழ்?] 1. Pit; குழி. 2. Well; கிணறு. 3. Chasm; பிலம்.

அவடு avaḍu, n. [id.] 1. Pit; குழி. 2. Well; கிணறு. 3. Nape of the neck; பிடர்.

அவடம்பதி avaḍampati, n. Sweet flag; வசம்பு.

அவடி avaḍi, n. [S. a-paṭi, connected with paṭi, 'cloth', T. paḍḍ-u—'பட்டு²'] Curtain; இடுதிரை.

அவண் avaṇ, adv. [av¹ + aṉ¹—அவ்¹ +அண்¹] 1. There; அவ்விடம். 2. In that manner; அவ்விதம் (ஞானா. 22).

அவணம் avaṇam, V. amaṇam²; =அமணம்².

அவணன் avaṇaṉ, n. [prob. a-³ + S. varṇ-a, 'fame', fr. vṛi, T. vaḷ-ai — வர்ணம்] 1. Man of influence; செல்வாக்குடையவன். 2. Strong man; திண்ணியன்.

அவணி avaṇi, n. [?] Benefit; நன்மை.

அவணியம் avaṇiyam, n. [āvaṇam? — நுப். ஆவணம்] Bazaar; கடை.

Sinh. avan, avana, avuṇu, 'market place'.

அவ-த்-தம்¹ ava-t-tam, See under ava-¹; அவ-¹ பார்.

அ-வத்தம்² a-vattam, V. a-pattam; =அ-பத்தம்.

அவத்தம்³ avattam, V. avaḍḍam; =அவட்டம்.

அ-வத்தியம் a-vattiyam, n. [a-³ + S. vad-yam, 'speech', fr. vad, T. ōt-u —வத் =ஓது] Fault, defect; குற்றம்.

அவத்திரியம் avattiriyam, n. [prob. id.] Danger; ஆபத்து.

அவத்தியா avattiyā, n. [Cf. E. bitts perh. connected with bite, T. vedd-u] (Naut.) Strong post of wood or iron to which cables are fastened; கப்பலின் முன்னணியிற் கயிறுகட்டும் தறி.

அவத்திரங்கம் avattiraṅkam, n. [S. avadranga, avadanga, perh. fr. T. āvaṇam? — ஆவணம்?] Market; அங்காடி.

அவத்தை avattai, See under ava-¹; அவ-¹ பார்.

அவதி ஆதியன avati &c., See under ava-¹; அவ-¹ பார்.

அவதிகந்தம் avatikantam, n. Sea shell decayed by age; கடற்கரை.

அவந்தரை avantarai, n. [Tel. abandara, S. a-bandhra, (Ved.) 'without ligatures?' (Apte.). கட்டுப்பாடற்றது?] 1. Disorder; சீர்கேடு. 2. Forlornness; அநாதநிலை. 3. Becoming useless; பயனிலதாகை.

அவந்தன் avantaṉ, V. avam¹; அவம்¹ பார்.

அ-வந்தி¹ a-vanti, n. [a-³ + S. vandhya, 'stopped, not bearing fruit', fr. bandh, akin to T. paṟṟ-u — பந்தித்த =தடைப்பட்ட] 1. Woman who has borne children; பிள்ளை பெற்றவள். 2. Cow that was calved; ஈற்றுப் பசு. 3. Fruit bearing tree; காய்க்கும் மரம். 4. Indian Caper; சேரவை.

அ-வந்தியம் a-vantiyam, n. [id.+ -iyam³] Fecundity; சந்தான விருத்தி.

அவந்தி², °கை avanti, °kai, n. 1. Ujjain, one of the Cattapuri; q. v. 2. Parrot; கிளி. —CPDS அவந்தி-க்-கன்னி °kaṉṉi, The plant Veruku; வெருகஞ் செடி. அவந்தி-சோமம் °cōmam [+ S. soma, 'the moon plant', said to be fr. su. Cf. T. tuv-ai] Fermentation of rice water; புளித்த கஞ்சி. Vinegar from Ujjain; காடி.

அவம்¹ avam, n. [ava-¹ — அவ-¹] 1. Evil; கேடு. 2. Vanity, nothingness; பயனின்மை, இன்மை.

அவந்தன் avantaṉ, n. [for avattaṉ] Worthless man; பயனற்றவன் (கம்பரா. மந்தரை. 55).

அவன்[1] avaṉ, *n.* [id. *m*/*n*] Uselessness; பயனின்மை (சம்பரா. குர்ப். 18).

அவம்[2] avam, *n.* [S. *hava*, 'calling'. Cf. T. *kū-v-u*—கூவு பார்] 1. Invitation; அழைப்பு. 2. Command; ஆஜ்ஞை. 3. Sacrifice; வேள்வி.

அவமா'கம் avamā'kam, *n.* [S. *ava-ma*, 'undermost', fr. *ava-*[1] + *ahan*, 'day' —அவம = ஆக்கிமான + அகர்] Day on which either three titis, three nakṣatras or three yōkams occur; மூன்று திதியோ, நட்சத்திரமோ, யோகமோ கலந்திருக்கும் நாள்.

அவயம்[1] avayam, See under *avdi*; அவைவத்தல் பார்.

அ-வயம்[2] a-vayam, V. *a-payam*; = அபயம்.

அவயவம் avayavam, See under *ava-*[1]; அவ-[1] பார்.

அவர், அவர்கள் avar, °kal, *pron.* Plural forms of *avaṉ* or *aval*; அவன் அவள் என்னும் பிரதிப் பெயர்களின் பன்மை புருவம்.

அ-வர்ச்சனியம் a-varccaṉiyam, *n.* [*a-*[3] +S. *varj-aniya*, 'to be excluded', fr. *vrij*. Cf. T. *vil-akk-u*—விலக்கு-தல்] What cannot be excluded; தள்ளிவிடத்தகாதது.

அ-வர்ச்சியர் a-varcciyar, *n.* [id.] (Cath.) The elect; ஈடேற்றம் அடைவோர்.

அ-வர்ணியம் a-varṇiyam, *n.* [*a-*[3] + S. *varṇ*, (fr. *varṇas*) 'to delineate'. Cf. T. *vari*[1]—வருணி-த்தல்] 1. What is indescribable; விபரித்துச் சொல்லவொண்ணாதது. 2. Standard of comparison; உபமானம் (அணி. 3).

அவரம் avaram, *n.* [S. *apa-ra*, fr. *apa-* —அப- பார்] 1. That which is behind or subsequent; பிற்பட்டது. 2. What is in the West; மேற்கில் உள்ளது. 3. The lower part of the hind legs of the elephant; யானையின் பின்கால் புறம்.

அவர-சன், °யன் avara-caṉ, °yaṉ, [+S. *-ja*, 'born'—'-சன்[3]'] Younger brother; தம்பி.

அவரை avarai, *n.* [perh. fr. *aval*—ஒப். அவல்] Field bean: Dolichos lablab; கொடிஅவரை. It has several species: கணு°, pulse which brings forth fruits in boughs also. காட்டு°, wild beans; கொத்து° or சீனி°, whose fruits are in bunches; செப்பு° சேவ°, a red species; சிற்று°, a small kind; தீவாந்தர°, from the eastern islands; நகர°, Dolichos rugosus; பால்°, with white fruits; பேய்°, கோழி°, Canavalia gladiata; பேர்°, a large species; முறைக்கு°, Psophacarpus tetragonolobus; வாள்°, Lablab cultratus (Winslow).

K., M., Tu. *avare*.

அவரை-ப்-பிராயம் avarai-p-pirāyam, *n.* [*avaram* + S. *prā-ya*, 'going forth, sticking out', fr. *pra* + *i*, T. *puṟ-a* + *i*ḷ-*i*] Childhood; பாலப்பருவம்.

அவல் aval, See under *avdi*; அவை-த்தல் பார்.

அ-வலம்[1] a-valam, *n.* [*a-*[3] + S. *bala* < T. *val-i*—வலி] 1. Weakness; பெலவீனம். 2. Poverty; தரித்திரம் (பெரும்பாண். 38). 3. Sickness; நோய். 4. Fault; குற்றம் (கலித். 108). 5. Illusion; மாயை (மதுரைக். 208, உரை). 6. Care; கவலை (குறள். 1072). 7. Weeping; அழுகை (சிலப். 18, 41). 8. Suffering; துன்பம் (கலித். 19). 9. (Poet.) Pathetic sentiment, one of the eight mey-p-pāḍu; சோகரசம் (தொல். பொ. 251, உரை). —CPDS அவல-ச்-சுவை °cuvai [+ *cuv-ai*, 'taste'] (Poet.) Pathos; சோகரசம் (சிலப். 3, 13, உரை). அவலத்து-அவிநயம் °avinayam [V. *abi-nayam* — 'அபிநயம்'] Dramatic action expressive of grief; சோகரசம் தோன்றும் நடன பாவனை (சிலப். 3,13, உரை). அவலிக்க avalikka, To suffer; வருந்த (சீவக. 515). To lament; அழ (தனிகை. கள வு. 532). To be flurried; பதற (சிலப். 23, 186).

அ-வலன் a-valaṉ, *n.* [id.] One who is at fault; குற்றமுள்ளவன்.

அ-வலை[1] a-valai, *n.* [id.] Throes; கடுப்பு.

அ-வலம்[2] a-valam, *n.* [*a-*[3] + S. *phal-a* <T. *paḻ-am*, 'fruit' — பழம்[2]] 1. What becomes unprofitable; பயன்படாதொழிவது. 2. Damage; கேடு (கலித். 48).

அ-வலை[2] a-valai, *n.* [id.] Barren land, wilderness; காடு.

அ-வலம்[3] a-valam, *n.* [*a-*[3] + *val-am*, 'right side'—வலம்[1]] Left; இடப்பக்கம்.

அவலி avali, *n.* Cowhage; பூனைக்காலி.

அவலுப்பு avaluppu, *n.* [prob. for. *aviri-uppu*—அவிரியுப்பு?] Aniline salts obtained from indigo; அவிரியினின் றெடுக்கும் உப்பு.

அவலை avalai, See *avalam*; அவலம் பார்.

அவவு avavu, See under *avvu*; அவ்வு-தல் பார்.

அவள் avaḷ, *pron.* [prob. *av-*[2] + *āḷ*, 'person'—அவ்-[2] + ஆள்?] That female person: she; உயர்திணைப் பெண்பாற் படர்க்கைச் சுட்டுப் பெயர்.

K. *avaḷu*; M. *avaḷ*; Tu. *aḷ*; Tel. *adi*; Go. *ad*; Ma. *ath*; Ku. *eri*; Sinh. *ē*.

அ-வளம் a-vaḷam, *n.* [*a-valam*[2]— = அவலம்[2]] Evil; கேடு (வேதா. சூ. 56).

அவளிகை avaḷikai, [cf. *avaḍi* — ஒப். அவடி] Curtain; இடுதிரை.

அவளை-துவளை avaḷai-tuvaḷai, *n.* [perh. *aval* and *tuvaiyal* q. v. — அவல் + துவையல்?] Mixture of rice, curry, ghee, curds &c.; கலப்புணவு.

அவற்கம் avarkam, *n.* [cf. *avāku*—ஒப். அவாகு] Gruel; கஞ்சி.

அவன்[1] avaṉ, See under *avam*[1]; அவம்[1] பார்.

அவன்[2] avaṉ, *pron.* [*av-*[2] + *āṉ*, 'strong person, male'. This form has replaced *uv-aṉ* q. v.—அவ்-[2] + ஆண். உவன் பார்] That male person: he; உயர்திணை ஆண்பாற் படர்க்கைச் சுட்டுப்பெயர்.

K. *avanu*; M. *avaṉ*; Tu. *aye*; Ma. *ah*; Tel. *vaḍu*; Go. *or*. Ku. *eañju*, *añju*.

-அவன்[3] avaṉ, *suff.* [id. in the sense of *aṭu*— = அது] An ending for nouns meaning 'what has': உடைமையைக்காட்டும் விகுதி. உ-ம். "களவன்".

அவன்னியம் avaṉṉiyam, V. *avarṇiyam*; = அவர்ணியம்.

அவனதி avaṉati, [V. *ava-nati*— = அவ-நதி] Moon's parallax in latitude; அக்ஷாம்சத்தில் உண்டாகும் சந்திர சலனம்.

அவனம் avaṉam, *n.* [S. *av-ana*, fr. *av* = T. *av* — அவைப்பது, நெருக்குவது] 1. Speed; சீக்கிரம். 2. Seizing; பிடித்தல். 3. Embracing; தழுவல். 4. Killing; கொல்லல். 5. Power; சக்தி. 6. Increase; விருத்தி. 7. Satisfaction; திருப்தி. 8. Adorning; அலங்கரித்தல். 7. Favour, protection; காத்தல்.

அவனி avaṉi, *n.* [S. *avanis*, prob. connected with *ava-*, 'down' — அவ- = கீழ்] This earth; பூமி. —CPDS அவனி-கேள்வன் °kēḷvaṉ [+ *keḷ-v-aṉ*, 'husband'] Viṣṇu as husband

of the goddess of Earth; திருமால். அவனி-பன் °paṉ [+S. -*pa*, 'protecting'—-பன்³] King; அரசன்.

அவனிகை avaṉikai, *n*. [S. *yavanikā*?] Screen; இடுதிரை.

அவனி-மருந்து avaṉi-maruntu, *n*. [for *aviri* + *maruntu*, 'medicine' — அவிரி+] Decoction of indigo plant; அவிரிச் சுஷாயம்.

அவ-ஸ்தா-த்-திரயம் ava-stā-t-tirayam, *n*. [V. *ava-ttai* + S. *traya*, 'three' —அவ-த்தை + திரயம்] The three states of the embodied soul; சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்னும் மூன்று ஆன்ம நிலைகள்.

அ-வஸ்து a-vastu, *n*. [*a*-³ + S. *vas-tu*, 'thing', fr. *vas*. Cf. T. *uḷi* — உழி பார்] 1. What is unreal; பொருள் அல்லாதது. 2. Worthless thing; பயனற்றது.

அவஸ்தை avastai, *n*. [V. *ava-ttai* — = அவ-த்தை] 1. Conditions of the embodied soul; ஆன்மநிலை. 2. Stages of man's life seven in number; கர்ப்ப°, in the womb; ஜன்ம°, while being born; பாலிய°, life of childhood; யௌவன°, of adult days; ஜரா°, of old age; மரண°, time of death; °நரக, detainment in hell. 3. Agony; வேதனை.

அவஸ்தை-ஞானஸ்நானம் °ñāṉa-snāṉam, (Cath.) Baptism at hour of death; மரண வேளையிற் செய்யும் ஞானத் தீட்சை. அவஸ்தைப்-பூசுதல் °pūcutal (Cath.) Extreme Unction; அரும் நோயாளருக்குச் செய்யும் அபிஷேகத் திருச்சடங்கு.

அவா¹ avā, V. *avāvu*; அவாவு-தல் பார்.

அவா² avā, *n*. [for S. *avāk*, See *avāci* below; அவாசி பார்] Descent; இறக்குகை.

அவாக்கு¹ avākku, [id.] Person with his face downwards; கவிழ்ந்த முகத்தோன்.

அ-வாக்கு² a-vākku, *n*. [*a*-³ + S. *vāk*, 'speech', fr. *vac*, T. *ōl-u*—வாக்கு¹] Dumb man; ஊமை.

அ-வாங்-மனச-கோசரம் a-vāṅ-ma-naca-kōcaram, *n*. [+ *manasa*, 'thought', perh. akin to T. *maṉṉ-u* + *go* + cattle, T. *kuḍ-am* + *car-a*, 'offering range' (for cattle); rt. *car*. Cf. T. *col*—வாக்கு², மனசு, கோசரம்¹] What transcends speech and thought; பேச்சுக்கும் நினைவுக்கும் எட்டாதது.

அவாகு avāku, *n*. [derivation fr. S. *yavāgū*, not satisfactory; perh. *yava*, 'corn' and T. *kūḻ*?] Gruel; கஞ்சி.

அவாகேசவுப்பி avākēcavuppi, *n*. [cf. *ava-kēci*] Large species of white dead-nettle; பெருந்தும்பை.

அ-வாச்சியம் a-vācciyam, *n*. [See *a-vākku* — அ-வாக்கு] What transcends speech; சொல்லமுடியாதது.

அ-வாச்சியன் a-vācciyaṉ, *n*. [id. + -*aṉ*³] One who is not worth mentioning; குறிப்பிடத்தகாதவன் (சீவ. 227).

அவாசி, அவாசினம் avāci, °iṉam, *n*. [*ava*- + S. *añc*, 'to withdraw', T. *añc-u*¹—அவ=கீழ் அஞ்சு¹=பின்வாங்குவது] Southern direction; தெற்குத் திசை.

அவாசியர் avāciyar, *n*. [id.+ -*ar*¹ —ஐ + -அர்¹] 1. People of the south; தென்னாட்டார். 2. Wise men; ஞானிகள் (பிரசந்திர பச்செகாண்டம்).

அவாசு avācu, *n*. [perh. *ā-pācam*, q.v.] Destruction; கேடு.

அ-வாத்திதம் a-vāttitam, *n*. [*a*-³ + S. *bādh-ita*, 'pressed hard, refuted', fr. *bādh*, *vādh*. Cf. T. *oṭṭ-u*—வாதி-த்தல்] What is unrefuted; கண்டிக்கப்படாதது (தர்க்கபரி. 72).

அவா'ந்தரம் avā'ntaram, See under *ava*-; அவ- பார்.

அவா'ப்தம் avā'ptam, Do; ஷ.

அவாபுளப்பி, °புளிப்பி avāpulappi, °pulippi, *n*. Species of Herpestis; பிரமிப்பூண்டு.

அவாயம் avāyam, =*apāyam*; =அபாயம்.

அவாரம் avāram, *n*. [fr. *ava*- + S. *para* <T. *pur-am*, 'side'— அவ- + புறம்] This side of a river; ஆற்றின் இக்கரை.

அவார-பாரம் °pāram, [id.+ S. *pāra*, =*para*, 'further side'] Ocean; சமுத்திரம்.

அ-வாரி¹ a-vāri, *n*. [*a*-³ + S. *vār-ya*, 'to be impeded', fr. *vri*, T. *vaḷ-ai*] Absence of restraint or hindrance; தடையின்மை.

அவாரி² avāri, *n*. [? *vār-i*, 'water', T. *vār*—வார்-தல்?] Urine; சிறுநீர்.

அவால் avāl *n*. [Arab. *ahwāl*] Charge, custody; பாதுகாப்பு.

அவால்தார், அவாலுதார் avāltār, avālu°, [U. *havil-dār*] Indian sergeant; சார்விசாரணைச் சேவகன்.

அவாலத்து avālattu, *n*. [U. *hawālat*] Transference of obligation to another; கடன்சாட்டுகை.

அவாலா avālā *n*. Food; உணவு.

அவாவு-தல் avāvu, 5 *v. tr.* [Extended form of *avavu* <*avvu* —அவவு < அவ்வு-தல்] 1. To Approach; கிட்டுதல். 2. To descend; இறங்குதல். 3. To desire, crave for, covet; ஆசைகொள்ளுதல், அபேட்சித்தல். 4. (Gram.) To be elliptical; பொருள் முடிப்பதற்கு வேறொரு பதத்தை வேண்டி நிற்றல்.

Tel. *akali*, through T. *aval*=*avaval*; M. *aval*; Br. *hub*; S. *ava* 'desiring', *avati*, 'furthers, serves'; L. *avere*, 'to wish happiness &c.', *avidus*, 'greedy'. For other parallelisms see Walde—P. under *au*, *aue auei*. Caldwell notes the probable connexion with Heb. *avvah*, 'desire', *avah*, 'to desire' (p. 607).

அவா avā, *n*. [id.] Desire, covetousness; ஆசை, பிசுனித்தனம். —CPDS அவா-அறுக்க °aṟukka [+ *aṟ-u* 'to cut'] To extirpate desire; ஆசை பொறிக்க (குறள். 37, அதி.). அவாய்-நிலை °nilai [for *avāvu* (*m*) + *nil-ai*, 'position'] (Gram.) An elliptical form; பொருளை முடிக்க மற்றொரு பதத்தை வேண்டி நிற்றல். Agreement of words, as a nominative with a verb; எழுவாயாதியன பயனிலையை வேண்டி நிற்றல்.

அவாவன் avāvaṉ, *n*. [id. + (*v*) -*aṉ*³] Avaricious person; கைபிறக்க முன்னவன் (ஆசா. 17).

அவி¹-தல் avi, *v*. [rt. *av*+ v. det. -*i*, 'to press down, to swelter, burn, destroy'. Two forms: One with accent on the 1st and the other on the 2nd syll. Other forms: *avv-u*, *av-ḍi* &c.—அவ்+-இ⁷, 'படிய நெருக்குதல், புழுங்குதல், எரித்தல், அழித்தல்'. அவி-தலும் அவித்-தலுமாம். பிறவரு: அவ்வு, அவை ஆதியன.] I. [*av-i* அவி-தல்] 4 *v. intr*. 1. To stoop; பணிதல் (புறம். 191). 2. To be repressed; ஒடுக்குதல். 3. To swelter; நெருக்கத்தாற் புழுங்குதல். 4. To ferment; வெதும்புதல். 5. To be boiled, cooked; பாகமாதல். 6. To diminish, to be extinguished; குறைதல், அணைந்து போதல் (சீவக. 289). 7. To perish; அழிதல். 8. To die; சாதல் (குறள் 420). II. [*av-i*—அவித்-தல்] *II v. tr*. With the causative senses of the above. 9. To remove; நீக்குதல் (குறள் 694).

M. *aviyuka*, 'to rot, boil on fire'; K. *avi*, 'to boil &c.', also 'to hide'; Tel. *aviyu*, 'to burst, to be destroyed'. Sinh. *avva*, *avuva*, 'heat of the sun', *avulenavā*, 'to catch fire'. Geiger's derivation from *ātapa* seems far-fetched. Cf. *avir* below.

அவி avi, *n.* [id.] 1. Boiled rice prepared without straining the water; அவித்த சோறு (சூடா.). 2. Food; உணவு (பதினொ. திருவிடை. 7). 3. Ghee; நெய் (பிங்.). 4. Offerings made to the gods in sacrificial fire; வேள்வித் தீயில் தேவர்க்குக் கொடுக்கும் உணவு. —CPDS அவி-த்-துவையல் °tuvaiyal [+*tuv-ai-y-al*, 'chutney'] Vegetable savoury; பச்சடி. அவி-ப்-பலி °pali [+S. *bali*, 'sacrifice', prob. fr. T. *vēḷ-vi*] Oblation to gods; தேவர்க்குக் கொடுக்கும் உணவு. Warrior's offering of his own life to fire in fulfilment of a vow; வீரன் சபதங் கூறித் தன்னைத் தீக்குப் பலியாக்கல். அவி-ப்-பாகம் °pākam [+*pāk-am*, 'portion'] Portion of offerred food; தேவர் உணவின் பங்கு. அவி-ப்-பிணம் °piṇam, Salt distilled from the solution of saline earth; உவர் மண்ணைக் காய்ச்சி யெடுக்கும் உப்பு.

Cf. S. *havis*, which perhaps represents *avi* with a prothetic *h*. The regular noun from the supposed root of *havis*, i. e. *hu*, would be *hūti* or *hava*. It is also possible that the similarity between the T. *avi* and S. *havis* is merely accidental.

அவிசல் avical, *n.* [id. + (c)-*al*$^{7}$] 1. What is decayed; பதங் கெட்டது. 2. Affliction, vexation; துன்பம், தொந்தரை. 3. Diminution; தணிவு.

அவியல் aviyal, *n.* [id.+(*y*)-*al*$^{7}$] 1. Swelter; புழுக்கம். 2. Soreness of the mouth; வாய்ப்புண். 3. Boiling, cooking; பாகஞ் செய்கை. 4. Food; உணவு. 5. A kind of vegetable dish; கறிவகை. —CPDS அவியற்-கறி °kari, Boiled meat; வெந்த இறைச்சி. Mixed hotch-potch; பல மரக்கறிகள் கலந்து ஆக்கியது. அவியல்-மணம் °maṇam, Offensive smell of putrid vegetable matter; காய் முதலியன அழுகிய நாற்றம்.

அவிவு avivu, *n.* [id. + (*v*) -*u*$^{6}$] Extinction; ஒழிவு (பெரியபு. திருஞான. 916).

அவி$^{2}$ avi, *n.* [S. *avi*. Cf. T. *oruvu*, 'sheep'—ஒப். ஒருவு$^{1}$] 1. Sheep or goat; ஆடு. 2. Blanket made of sheeps' wool; கம்பளம். 3. Rat; எலி. —CPDS அவி-கடம் °kaḍam [+S. *ghaṭ-ā*, 'troup', T. *kaḍḍ-u*—'கடம்$^{5}$'] Herd of sheep; ஆட்டு மந்தை. அவி-தூசம் °tūcam [+S. *dūsam*, perh. T. *tōy-am*, 'water'?] Milk of an ewe; ஆட்டுப் பால். அவி-படம் °paḍam [+S. *paṭ-a*, 'cloth', T. *paḍḍ-u*—'படம்$^{1}$'] Woollen cloth; கம்பளி, ஒப். எலிமயிர்ப் போர்வை.

அவி$^{3}$ avi, *n.* [? *av*, 'to press, hence: to enclose'. அடக்குவது?] 1. Rampart; மதில். 2. Mountain; மலை.

S. *avis*, 'wall, enclosure'.

அவி$^{4}$ avi, *n.* [? fr. *āvi*, 'steam'—ஆவி?] 1. Cloud; மேகம். 2. Wind; காற்று. 3. Woman in her periods; பூப்பினள்.

S. *avis*, 'air'.

அவி$^{5}$ avi, *n.* [Cf. *avir*—ஒப். அவிர்-தல்] 1. Ray of light; கிரணம். 2. Sun; சூரியன்.

S. *avis*, 'sun'.

அ-விக்கனம்$^{1}$, அ-விக்கினம் a-vikkaṉam, °kiṉam, *n.* [*a*-$^{3}$ + S. *vi-ghn-am*, 'obstacle'—விக்கினம்] Freedom from impediment; தடையின்மை.

அவிக்கனம்$^{2}$ avikkaṉam, *n.* [S. *avigna*] Large Bengal currant; பெருங்களா.

அ-விகசம் a-vikacam, *n.* [*a*-$^{3}$+S. *vi-kas-a*, 'opened'] What has not blossomed; மலராதது.

அவி-கண் avi-kaṇ, *n.* [*avi*$^{1}$ + *kaṇ*, 'eye'] Kind of ophthalmia; கண்ணோய் வகை.

அவி-கம் avi-kam, *n.* [*avi*$^{2}$ + -*kam*] 1. Sheep; ஆடு. 2. Diamond; வைரம்.

அ-விகற்பம் a-vikaṟpam, *n.* [*a*-$^{3}$ + S. *vi-kalpa*, 'alternation', fr. *klrip*. Cf. T. *kaṟp-i*] 1. Certainty; சந்தேகமின்மை. 2. (Log.) Indefinite knowledge in which the bare existence of a thing is apprehended; நிருவிகற்பக் காட்சி.

அ-விகாரம் a-vikāram, *n.* [*a*-$^{3}$+S. *vi-kāra*, 'change'] Unchangeableness; வேறுபடாமை.

அவிச்சன் aviccaṉ, *n.* [*accaṉ*] Father; தந்தை.

அ-விச்சின்னம் a-viccinnam, *n.* [*a*-$^{3}$+ S. *vi-c-chinn-a*, 'cut asunder', fr. *chid*, T. *keṭṭ-u*—சின்னம்$^{3}$] Continuity; இடைவிடாமை (சிவதரு. சிவஞான யோ. 80).

அ-விச்சை a-viccai, *n.* [Pkt. *avijjā* < *a*-$^{3}$+S. *vid-yā*, 'knowledge'. Cf. T. *veḍḍ-u*—வித்தை] Spiritual ignorance; அஞ்ஞானம்.

அவிசல் avical, V. *avi*$^{1}$; அவி பார்.

அ-விசாரம் a-vicāram, *n.* [*a*-$^{3}$ + *vi-cāra*, 'going about, investigating', fr. *car*, T. *car-i*$^{1}$] 1. Want of discrimination; ஆராய்ச்சியின்மை. 2. Freedom from care; கவலையின்மை.

அவி-சாரம், °சாரி avi-cāram, °cāri, V. *api-cāram*, °*cāri* = அபி-சாரம், °சாரி.

அ-விசுவாசம் a-vicuvācam, *n.* [*a*-$^{3}$+ S. *vi-śvāsa*, 'confidence', fr. *śvas*. Cf. T. *kēvu*$^{1}$] Incredulity; கேள்வியாலறிவதொன்றை ஏற்றுக் கொள்ளாமை.

அவிசு avicu, *n.* [S. *havis*=*avi*$^{1}$] See *avi*$^{1}$; அவி$^{1}$ பார்.

அவிசுப்பம் avicuppam, *n.* A species of jujube; தொடரி.

அ-விஞ்சை, அ-விஞ்ஞதை, அ-விஞ்ஞை a-viñcai, °ñatai, °ñai, *n.* [V. *aviccai*; —=அவிச்சை] Spiritual ignorance, illusion, soul's impurity; அஞ்ஞானம், மாயை, ஆணவமலம்.

அ-விஞ்ஞாதம் a-vijñātam, *n.* [*a*-$^{3}$+S. *vi-jñā-ta*, 'well known', fr. *jñā*. Cf. T. *niṉ-ai*] Not well known; நன்கு அறியப்படாதது. —CPD அவிஞ்ஞாதார்த்தம் °arttam [+ S. *arth-a*, 'meaning', akin to T. *aḍ-u*—'அர்த்தம்$^{1}$'] (Log.) Speaking in unintelligible words; பொருள் இனிது விளங்காத சொற்களை எடுத்துக்கொண்டு பேசுதல்.

அவிட்டம் aviḍḍam, *n.* [S. *śraviṣṭhā*, 'the most famous', fr. *śru*. T. *kēḷ*] Name of the 23rd nakṣatra, the Dolphin; 23-வது நட்சத்திரம்.

அவிடி aviḍi, V. *avaḍi*; =அவடி.

அ-வித்தம் a-vittam, *n.* [V. *a-viccai*—அ-விச்சை பார்] What is unknown; அறியப்படாதது. 2. Poverty; வறுமை.

அவித்தியசம் avittiyacam, *n.* [S. *śraviṣ-ṭha-ja*,—அவிட்டத்தில் பிறந்தது?] Mercury; பாதரசம்.

அ-வித்தியை, அ-வித்தை a-vittiyai, °tai, V. *a-viñcai*; =அ-விஞ்சை.

அ-வித்துருமம் a-vitturumam, *n.* [*a*-$^{3}$ +*vi-druma*, 'young shoot'?, fr. *dru-ma*, 'tree'. Cf. T. *taṟ-i*] South Indian mahua; இலுப்பை மரம்.

அவிதா avitā, *int.* [S. *avidhā*, Pkt. *avihā*] Exclamation calling for help; ஆபத்தில் முறையிடும் ஒலிக் குறிப்பு. "ஆவ வென்றாயென் றவிதாவிடு நம்மவர்" (திருவாச. 5, 4).

அவிந்துவி avintuvi, *n.* Cuscus grass; இருவேரி.

அவி-நயம் avi-nayam, V. *api-nayam;*= அபி-நயம்.

அ-விநாச-வாதி a-vināca-vāti, *n.* [*a-*$^{3}$+ S. *vi-nāś-a*, 'distinction', fr. *naś*, T. *nak-u*+*vād-in*, 'one who asserts', fr. *vad*, T. *ōt-u*] (Phil.) One who holds that matter is indestructible; சடப்பொருள் அழியாது என்போன்.

அவி-படம் avi-paḍam, See under *avi*$^{3}$; அவி$^{3}$ பார்.

அ-விபவனம் a-vipavaṇam, *n.* [*a-*$^{3}$+S. *vi*+*bhavana*, 'abode'?] Superiority, victory; மேற்பட்டிருத்தல், செயம் அடைதல்.

அ-விபன்னம் a-vipaṉṉam, *n.* [*a-*$^{3}$+S. *vi-panna*, 'failing', fr. *pad*, T. *paḍ-u*] What is unspoiled; கெடாதது.

அ-விபாகம் a-vipākam, *n.* [*a-*$^{3}$+S. *vi-pāk-a*, 'cooking, maturing', fr. *pac*, akin to T. *pac-ai*:] 1. Indigestion; அசீரணம். 2. Immaturity; முதிர்வடையாமை.

அ-விபாச்சியம் a-vipācciyam, *n.* [*a-*$^{3}$ +S. *vi-bhājya*, 'divided', fr. *bhaj*, T. *pak-u*—விபாகம்] Indivisibility; பிரிவுபடாமை.

அ-விபாவனம் a-vipāvaṇam, *n.* [*a-*$^{3}$+ S. *vi-bhāvana*, 'shining', fr. *bhā*, T. *vē*, *vāl*—பா =வால்$^{1}$] 1. Invisibility; கண்கூடாகாமை. 2. Blindness; குருடு.

அ-விபூதி a-vipūti, *n.* [*a-*$^{3}$+S. *vi-bhū-ti*, 'dignity', fr. *bhū*, perh. akin to T. *mik-u*—விபூதி$^{1}$] Disrespect; அவசங்கை.

அ-வியயம் a-viyayam, *n.* [*a-*$^{3}$+S. *vi-aya*, 'mutable', fr. *i*, T. *iḻ-i*] What is imperishable; அழியாதது.

அ-வியாகிருதம் a-viyākirutam, *n.* [*a-*$^{3}$+ S. *vi-ākrita*, 'separated'] Being inseparably united; பிரிவின்றி இணைந்திருத்தல்.

அ-வியாத்தி a-viyātti, V. *a-v-viyātti;* =அ-வ்-வியாத்தி,

அ-வியாப்பியம் a-viyāppiyam, Do; டை.

அ-வியோகம் a-viyōkam, *n.* [*a-*$^{3}$+S. *vi-yōga*, 'union', fr. *yuj*. Cf. T. *ok*.] Coming together, non-separation; கூடுதல், பிரிவின்மை.

அவிர்(ு)-தல் avir(u), *4 v. intr.* [Extended form of *avi*$^{1}$, the final *r* being a format. 'To be squeezed, to shed, emit; Cf. *alar* (4)—அவி$^{1}$ + ர், 'நெருக்குண்ணல், பிதிபடல், சொரிதல்'] 1. To be rent asunder; பிறுதல். 2. To glisten, shine; பிரகாசித்தல். "அவிர் மதி" (குறள். 1117).

அவிர் avir, *n.* [id.] Splendour, glitter; பிரகாசம் (கலித். 22, 19).

அவிரி aviri, *n.* [id. + *-i*$^{4}$, 'the bright thing'] The Indigo plant; நீலிச்செடி.

அவிர்-ப்-பாகம் avir-p-pākam, V. *avi-p-pākam;*=அவிப்பாகம்.

அ-விரதம் a-viratam, *adv.* [*a-*$^{3}$+S. *vi-rat-a*, 'ceasing' fr. *ram*. Cf. T. *nir-av-u*] Continually; ஓயாமல்.

அவிருகம் avirukam, *n.* =*ati-viḍam*, p. 81. =அதி-விடம்.

அ-விருத்தம் a-viruttam, *n* [*a-*$^{3}$+*vi-ruddh-a*, 'contrary' fr. *rudh*. Cf. T. *uṟ-u-ttu*—விருத்தம்$^{3}$] What is compatible; எதிர் அல்லாதது.

அ-விரோதம் a-virōtam, *n.* [id.] 1. Compatibility, congruity; மாறின்மை, சம்மதம். 2. Amicability; சினேகம் (S. I. I. vii, 69). —CPD அவிரோதச்-சிலேடை °cilēḍai [+S. *ślēṣ-a*, 'adhering to, paronomesia', fr. *śliṣ*. Cf. T. *koḷ-uv-u*] (Rhet.) A figure of speech in which the sense attributed to a word at first is maintained; முன்னர்க் கொண்ட சிலேடைச் சொற்பொருளோடு பின்வரும் பொருள் விரோதமுறாமல் தொடுக்கும் அணி (தண்டி. 76).

அ-விவாதம் a-vivātam, *n.* [*a-*$^{3}$+S. *vi-vād-a*, 'dispute', fr. *vaḍ*, T. *ōt-u*] Agreement; சம்மதம்.

அ-விவேகம் a-vivēkam, *n.* [*a-*$^{3}$ + S. *vi-vēka*, 'divided, discriminated' fr. *vic*. Cf. T. *vak-ir*] Want of discrimination; பகுத்தறிவின்மை.

அவிழ்-தல் aviḻ, *v.* [Extended form of *avi*$^{1}$, the final *ḻ* being a format. Cf. *avir*. Two forms: one with accent on the first and the other on the 2nd syll.—அவி$^{1}$ + ழ். அவிர்-தல் பார். அவிழ்-தலும் அவிழ்த்-தலுமாம்] I. [*áviḻ*—அவிழ்-தல்] 4 *v. intr.* 1. To soften, melt; இளகுதல். 2. To become loose, untied; நெகிழ்தல் (திவ். இயற். திருவிருத். 95). 3. To open, expand; மலர்தல் (சிறுபாண். 165). 4. To drip; சொட்டுதல் (பாரத. மணி. 38). 5. To fade, fall; உதிர்தல் (ஞானவா. சூரு. 35). II. [*aviḻ*—அவிழ்த்-தல்] *II v. tr.* 6. To loosen, untie; இளகச் செய்தல், கட்டு நீக்குதல். 7. To cause to open; மலரச் செய்தல் (கல்லா. 50, 6). 8. To solve a riddle; விடுகதைப் பொருளை விடுத்தல். அவிழ்த்துக்கொடுக்க, to pay from one's pocket.

அவிழ் aviḻ, *n.* [id.] 1. Boiled rice; சோறு (மலைபடு. 183). 2. Single grains of boiled rice; பருக்கை (திருவிளை. முர்த்தி. 27). —CPD அவிழகம் °akam [+ *-akam*$^{6}$] Full blown flower; மலர்ந்த பூ (பதிற்றுப். 52).

K. *aguḷu*.

அவிழ்தம் aviḻtam, V. *auṣatam;* =ஔஷதம்.

அவிழகம் aviḻakam, V. under *aviḻ;* அவிழ் பார்.

அ-விளம்பம் a-viḷampam, *n.* [*a-*$^{3}$+S. *vi-lamb-a*, 'hanging on', fr. *lamb*, akin to T. *iṟaṅk-u*—இலம்பம்] Haste; விரைவு.

அவிறுகம் aviṟukam, V. *apūrvam;* அபூர்வம்.

அவின், அவினி aviṉ, °i, V. *apin;* = அபின்.

அவினயம்$^{1}$ aviṉayam, V. *api-nayam;* = அபி-நயம்.

அ-வினயம்$^{2}$ a-viṉayam, *n.* [*a-*$^{3}$ + S. *vi-naya*, 'discipline' fr. *nī*. Cf. T. *nī-kk-u*—விநயம்] Want of modesty, incivility; அடக்கம் ஒடுக்கம் இல்லாமை (அறநெறி. 28).

அவினா aviṉā, *adv.* [*a-*$^{3}$ + S. *vinā*, 'without', perh. fr. *vi-nī?*—வினா$^{2}$] Without separating; விட்டு நீங்காமல். —CPDS அவினா-பாவம் °pāvam [+S. *bhāva*, 'nature', fr. *bhū*. Cf. T. *mik-u*] Inseparable concomitance; பிரியாது உடனிகழும் தன்மை (சி. சி. அள. 2). அவினா-பாவி °pāvi [id.] What is inseparable; பிரிக்க முடியாதது (சிவ. கடவுள். 1 உரை). அவினா-பூதம் °pūtam [id.] Natural affinity or relation; நீக்கமின்றி யிருத்தல்.

அ-வினாசி a-viṉāci, *n.* [*a-*$^{3}$+S. *vi-nāś-in*, 'being destroyed' fr. *naś*, T. *nak-u*—விநாசம்] The Indestructible, God; கடவுள் (தேவா. 247, 7).

அவிஷ்டு aviṣṭu, *n.* [S. *apa-ṣṭhu*, 'contrary', fr. *apa-* +*sthā*—அப- +தாழ்] 1. One who utters words of ill-omen; அச்சுகுறியான சொற்களைப் பேச

கேடன். 2. One morally depraved; தூர்க்குணன்.

அ-வீசி a-vīci, *n.* [*a*-³+S. *vīc-i*, 'wave' <T. *vic-u*] 1. What is waveless, unruffled; திரையில்லாதது. 2. Name of a hell; ஒரு நரகம் (சிவதரு. சுவர்க்க. 127). 3. A kind of comet; வால் வெள்ளி வகை.

அவு avu. *suff.* [-*a*, for *a-tu*, with -*u*, contracted form of *ul*. See Law VIII (a)— -அ⁰+ -உ⁰] A suffix indicating 'what is done' as in *cel-avu*; முடிந்த காரியத்தைக் குறிக்கும் ஓர் விகுதி. உ-ம்: "செலவு".

அவுக்கவுக்கெ'னல் avukkavukk'eṉal, *v.* [sounding as hawking, vomiting &c] Onom. expression of haste as in eating, running &c.; விரைவுக் குறிப்பு.

அவுசு avucu, *n.* [for *avicu*? (Winslow). Cf. *naruvicu*—ஒப். நறுவிசு] Neatness, trimness; சுத்தம், ஒழுங்கு. —CPD அவுசு-க்-காரன் °kāraṉ, One fond of dress; ஆடைப் பிரியன்.

அவுசுப்பம், அவுசூசிகம் avucuppam, °cūcikam V. *avicuppam*; =அவிசுப் பம்.

அவுண், அவுணன் avuṇ, °aṉ, *n.* [Cf. S. *hūṇa*] Asuras; அசுரர்.

அவுத்திரி avuttiri, V. *auttiri*; =ஔத்திரி.

அவுதசியம் avutaciyam, *n.* [fr. S. *ūdhas*, *ūdhar* <T. *ūt-ai*, 'swelling' —ஊதிப்பது, பசுவின் மடி] Milk; பால் (சுதலை. சுதல. 53).

அவுதா avutā, *n.* [U. *haudā*] Howdah; அம்பாரி.

அவுபல-பாஷாணம் avupala-pāṣāṇam, *n.* [S. *aupala*, 'stony', fr. *upa-la (ra)*+*pāṣāṇa*, 'rock', T. *pārai*—உபலம்] A mineral poison; பிறவிப் பாஷாண வகை.

அவுபாசனம் avupācaṉam, V. *aupācaṉam*; =ஔபாசனம்.

அவுரி¹ avuri, V. *aviri*; = அவிரி. —CPDS அவுரி-ச்-சால் °cāl [+*cāl*, 'jar'] Big vessel with wide mouth; பெரிய சால். அவுரி-ப்-பச்சை °paccai, Refined camphor; பச்சைக் கருப்பூரம்.

அவுரி² avuri, *n.* [M. *avali*] A kind of fish; மீன் வகை.

அவுல்தார் avultār, *n.* [U. *ḥawāl-dār*] Non-commissioned officer in the Indian army; சிறு படைக்குத் தலைவன்.

அவுழ்தம் avuḻtam, V. *auṣatam*; =ஔஷதம்.

அவுளியா avuḷiyā, *n.* [M. *āvōḷi*] Pomfrets, *Stromateus*; வௌவால்மீன்.

அவுறுதம் avurutam, *n.* 1. A billious disease; பித்தாதிக்கம். 2. A venereal disease; கிரந்தி சோம்பவகை.

அவுஷதம் avuṣatam, V. *auṣatam*;= ஔஷதம்.

அவெளி aveḷi, *n.* Species of wood-apple; நிலவிளா.

அ-வேகம் a-vēkam, *n.* [*a*-³+S. *vēg-a*, 'agitation, rapidity', fr. *vij*, T. *vic-u*] Slowness, moderation; பதனம், அடக்கம்.

அவே'ட்சை, அவே'க்ஷை avēdcai, °kṣai, *n.* [*ava*-¹ + *īkṣ*, 'to look towards'. Cf. T. *akku*¹—ஆக்கு=நோக்குதல்] 1. Looking about; நோக்குதல். 2. Attention; கவனம். 3. Consenting; உடம்பாடு.

அ-வேத்தியம் a-vēttiyam, *n.* [*a*-³+S. *vēd-ya*, 'to be known', fr. *vid*, T. *vid-i*] 1. What is unknown; அறியப்படாதது. 2. What is young (unmarried); இளமையானது. 3. Calf; காம்பன்.

அ-வேதம் a-vētam, *n.* [id.] Forgetfulness; ஞாபகத்தில் வராமை.

அ-வேளை a-vēḷai, *n.* [*a*-³+*vēḷ-ai*] Unseasonable time; தகுதியற்ற காலம்.

S. *a-vēla*, 'untimely', *a-vēla*, 'having no boundary'.

அவை¹ avai, *pron.* [*av*¹+*a*⁰—அவ்² +அ⁰] Those (things); அப் பொருள்கள்.

M. *ava*; Kui. *ēvi*; K. *avu*; Tu. *eikulu*; Tel. *avi*; Go. *av*, *ak*; Sinh. *ēva*.

அவை²-த்தல் avái, *11 v. tr.* [rt. *av*+v. det. -*ai* fr. -*e*, 'to press down, crush, burn'. Other forms: *av-i*, *avvu* &c. —அவ்+ஐ(எ) 'படிய நெருக்குதல், கொதிக்குதல், எரித்தல்'. பிறவுருவங்கள்: அவி-தல், அவ்வு-தல் ஆதியன] 1. To crush; நெரித்தல் (தேவா. 1161, 11). 2. To pound; குற்றுதல் (சிலப். 29 வள்ளைப்.). 3. To cuff; கையாற் குத்துதல் (சேதுபு. தேவிபுர. 61). 4. To boil, cook; அவித்தல் (பிங்.).

M. *avekka*; Tu. *abay*.

அவல் aval, *n.* [for *avaiyal* below —=அவையல்] 1. Unhusked rice steeped in water and then dried and bruised; உலர்த்த நாகெல்லை இடித்தெடுக்கும் உணவு (தனிசை. திருக. 36). Fried paddy pestled in a mortar; நெற்பொரி இடியல் (அகம். 141). 2. Shallow depression in land; பள்ளம் (புறம். 102). 3. Cultivated land; விளைநிலம் (மலைபடு. 450). 4. Tank; குளம் (சூடா.).

K., M. *aval*; M. *avil*.

அவை avai, *n.* [id. 'pressed (brought) together'? Prob. a T. word independant of S. *sabhā* which Walde—P derives fr. *bhā*, 'to speak', akin to T. *pēc-u*. Cf. *avaiyal*—நெருக்கிக் கூடியது? ஒப். அவையல்] 1. Assembly of men; மக்கள் கூட்டம் (பிங்.). 2. Assembly of learned men; அறிவுடையோர் கூட்டம். 3. Learned men, poets; புலவர் (திவா.) 4. Assembly hall; சபா மண்டபம் (கந்தபு. கௌரி. 6). 5. Theatre; நாடக அரங்கு (குறள். 332). —CPDS அவை-ய்-அடக்கம் °aḍakkam [+*ad-akk-am*, 'submission'] Modest behaviour of a speaker or singer in an assembly; சபையோர் முன் பணிவாய் நிற்றல். Author's apology at the beginning of his work in order to disarm criticism; நூல் முகப்பில் வழிப்படுத்திக் கூறுதல். அவை-ய்-அல் கிளவி °al-kiḷavi [+*al*¹, 'not (suitable)'+*kiḷ-avi*, 'word'] Indecent language; அசப்பியம். அவை-ய்-அறிதல் °arital [+*ari*, 'to know'] To conform oneself to the expectations of an assembly; சபை எதிர் நோக்கு வது யாதென உணர்தல் (குறள். 711). அவை-யா-அரிசி °ā-arici [+ -*ā*-³, 'not'+*arici*, 'rice'] Ill-cleaned rice; கொழியலரிசி (பெரும்பாண். 275). அவை-க்-களம் °kaḷam [+*kaḷ.am*, 'place'] Place of assembly; சபை கூடுமிடம். அவை-ப்-பரிசாரம் °paricāram [+S. *pari-cāra*, 'moving about, homage', fr. *car*, T. *car-i*] Signifying respect to the audience; சபை வணக்கம்.

அவையம்¹ avaiyam, *n.* [id.+-*am*²] 1. Assembly of learned men; பன்டிதர் கூட்டம். 2. Judges; நியாயந் தீர்க்கும் சபையோர் (மதுரைக். 492). 3. Assembly hall; சபா மண்டபம் (கந்தபு. சூரமுக. 21). 4. [in the sense of putting under] Brooding; அடைகாத்தல். 5. Cuscus grass; வெட்டிவேர்.

அவையர் avaiyar, *n.* [id. + -*ar*¹] Members of an assembly; சபையோர் (திருவிளை. இசை. 22).

அவையல் avaiyal, *n.* [id. + -*al*[7]] 1. Collection, gathering; திரள். 2. Ball; பக்.அ. 3. = [*aval* (1) = அவல் (1). 4. Well husked rice; குற்றலரிசி (பொரு. 16).

அ-வைதிகம் a-vaitikam, *n.* [*a*-[3] + S. *vaid-ika*, 'relating to the Vedas'] What is non-Vedic, irreligious; வேதத்திற்கொவ்வாதது.

அவையம்[2] avaiyam, = *a-puyam*; = அ-பயம்.

**அழ்** AḺ, prim. rt. [*a*-[2] + format. *ḻ*— அ-[3] + ழ்] To cause to approach, to be immersed, to crush, press, to burn. Combined with the v. det. -*a*, -*u*, -*i* and -*ai* (= *e*) this root yields such forms as *aḻ-ál*, *aḻ-u*, *aḻ-untu*, *aḻ-i*, *aḻ-ḍi* &c. Cf. *ar*—நெருக்கி வாச் செய்தல், படிய நெருக்குதல், அமிழ்த்துதல், சொறக்குதல், எரித்தல் ஆகிய பொருள் கொண்ட ஒரு தலையடி. -அ, -உ, -இ, -ஐ, (= எ) எனும் வினைக்குறிகள் அணைத்து அழல்-தல், அழு-தல், அழுந்-து-தல், அழி-தல், அழைத்-தல் ஆகிய வினைச்சொற்களாகும். ஒப். அர்.

Cf. 4. *al*. in Walde—P (I, 88). He brings under this 'root' S. *alatam*, 'fire brand, coal;' L. *ad-ol-eo*, *al-tare* &c. AS. *aelan*, 'to burn', may be from the same source.

-அழ் -aḻ, *suff.* [fr. *aḍ-u* — = அ-டு] A suffix which particularizes a thing, as in *ur-aḻ*; உறழ் என்பதிற்போல பொருளை இன்னதென்று காட்டும் ஒரு கடைநிலை.

அழக்கு aḻakku, V. *āḻākku*; = ஆழாக்கு.

அழக்குடம் aḻakkuḍam, *n.* [for *aḻan*+ *kuḍ-am*] Earthen pot used in a funeral ceremony; பிணக்குடம் (தொல். எழுத். 354 உரை).

அழக்கொடி aḻakkoḍi, *n.* [prob. *aḻan*+ *koḍi*] Demoness; பேய்ப்பெண் (திவ். திருவாய். 2, 10, 9.)

அழகம் aḻakam, V. *aḻakam*[3]; = அளகம்[3].

அழகவேதம் aḻakavētam, *n.* Atis; அதிவிடயம்.

அழகு aḻaku, *n.* [prob. fr. *aḻ-al*. 'brightness'— ஒப். அழல்] 1. Beauty; சௌந்தரியம். 2. Excellence; சிறப்பு (திருநூற். 9). 3. Happiness; சுகம் (பிங்.) 4. Rock candy; கண்ட சருக்கரை. 5. (Pros.) Beauties and graces of language or style; நூலின் பத்தழகுகள்: (1) சுருக்கச் சொல்லல், speaking concisely. (2) விளக்கவைத்தல், treating a subject clearly and plainly. (3) நவின்றோர்க்கினிமை, acceptableness to the educated. (4) நன்மொழி புணர்த்தல், using elegant words, suitable expressions. (5) ஓசையுடைமை, being pleasant to the ear with a good rhythm and cadence. (6) ஆழமுடைத்தாதல், being comprehensive, profound. (7) முறையின் வைப்பு, systematic arrangement, method. (8) உலகமலையாமை, being without obscurity or contrariety. (9) விழுமியது பயத்தல், giving a good sense, as allegorical, &c. (10) விளங்குதாரணத்ததாகுதல், having common examples so as to be understood by all. (நன்னூல் பாயி.) —CPDS அழக'ச்சு °accu, Name of a coin; நாணய வகை (T. A. S. iii, 50). அழக'ப்பன்-காளை °appaukāḷai, Sacred bull adorned with cowries &c; பெருமான் மாடு. அழகா'த்திரி-வெட்டு °attiri-veḍḍu, An ancient coin; பழைய நாணயவகை. அழகெ'ருது °erutu, An ancient tax; வரிவகை (T. A. S. iii, 32). அழகெருதுக்-காட்சிக்காசு °°kāḍcikkācu, id.; ஷை (M. E. R. 619 of 1916). அழகோ'லக்கம் °ōlakkam [+*ōlakk-am*, 'durbar'] Glorious presence of a king on his throne; கொலுவிருக்கை. அழகு (அழகம்)-காட்ட °kāḍḍa, To mimic; சாகஞ்செய்ய. அழகு-காமாலை °kāmālai [+?S. *kāmalā*, 'a form of jaundice'] Variety of jaundice; காமாலைவகை. அழகு-குளிசம் °kuḷicam [+*kuḷic-am*, 'amulet'] A neck ornament; கழுத்தணி வகை. அழகு-செண்டேற °cend'ēra [+*cendu-ēra*, 'to promenade'] To ride for pleasure; விளையாட்டுக்காகச் சவாரி வர. (சூடு 7, 3, 1) To exhibit one's beauty; தன் அழகைக்காட்ட (சூடு 1, 4, 6) அழகு-துறை-ப்-பெண் °turai-p-peṇ, A prepared arsenic; இந்திரபாஷாணம். அழகு-தேமல் °tēmal [+*tēm-al*, 'freckle'] Freckle that adds to one's beauty; அழகாகத் தோன்றும் தேமல் வகை.

M. *aḻaku*; ? K. *aḻakar* 'love'. Caldwell notes that the S. *valgu* is from *aḻaku* and that the word for sandal wood, *valguka*, is from the same source (p. 89). Grassmann takes *valgu* as a S. word derived from *valg*, 'to move gracefully'. Cf. Su. *azag*, 'the shining bright thing' (Prince).

அழகர் aḻakar, *n.* [id. + -*ar*, pl. sign of respect.] 1. Vishnu worshipped at aḻakarmalai; திருமாலிருஞ்சோலை விட்டுணு. 2. White madar; வெள்ளெருக்கு.

அழகாரம் aḻakāram, *n.* [id. + *ār-am*[4]] 1. Brilliancy of expression; பளபளப்பான பேச்சு. 2. Empty compliment; வீண் புகழ்ச்சி.

அழகிய aḻakiya, *adj.* [id.] Beautiful; சௌந்தரியமுள்ள. அழகிய-மணவாளன், Vishnu at Srīrangam; அரங்கநாதன். அழகிய-வாணன், A coarse paddy; நெல் வகை. அழகியன், அழகியான், Handsome person; சௌந்தரியமுள்ளவன் (திருவாச. 17, 3., திவ். இயற். நான்மு. 22. 7).

அழத்தியன் aḻattiyan, *n.* [fr. *aḻarru*—அழற்று] Asafoetida; பெருங்காயம்.

அழம் aḻam, V. *aḻan*; = அழன் (தனிகை. கவை 547).

**அழல் (லு)** -தல் aḻál(u), *3 v. intr.* [rt. *aḻ* + -*al*, stem-suffix functioning as v. det. See Law VIII, (a). Cf. *aṉal*. Other forms: *aḻ-u*, *aḻ-i* *aḻ-ḍi* &c— அழ் + -அல்[7]. ஒப். அனல். பிறவுருவங்கள்: அழு, அழி, அழை ஆதியன] 1. To burn, glow; எரிதல், சொலித்தல் (பொரு. 5). 2. To be acrid; உறைப்பாதல். 3. To become angry; கோபங்கொள்ளுதல் (பாரத. மணிமா. 19). 4. To be jealous; பொறாமைகொள்ளுதல்.

M. *aḻal* 'fire'. Tel. *alugu*; Tu. *arluni*; 'to burn'; K. *aḻal*, 'mental heat'; Cf. Su. *azag*, 'the shining thing, silver' Hit. *allaniya*, 'become hot'; Cf. S. *anala*, 'fire' which has no etym. in S. (Uhlenbeck).

அழல் aḻal, *n.* [id.] 1. Fire; நெருப்பு. 2. Flame; தீக்கொழுந்து. (பரிபா. 5, 3). 3. Heat; உஷ்ணம் (நாலடி. 124). 4. Rage; கோபம். 5. Burning sensation in a wound &c; எரிவு (கலித். கைல. 123). 6. Pungency; உறைப்பு (கலித். கைல. 54). 7. Poison; நஞ்சு (மணி. 23, 69). 8. Hell; நரகம் (தேவா. 1225, 4). 9. The 3rd nakṣatra; கார்த்திகை (கந்தபு. திருவவ. 126). 10. The 18th. nakṣatra; கேட்டை (பிங்). 11. Mars; செவ்வாய் (பிங்). 12. Ceylon leadwort; கொடுவேலி. 13. Spurge; கள்ளி. 14. Madar; எருக்கு. —CPDS அழலா'டி °āḍi, Siva, as dancing with fire; சிவபிரான். அழலா'ணி °āṇi [+prob. S. *hā-ni* 'damage'] Fading; வாட்டம். அழலி'டமே'ந்தி (அழலேந்தி) °iḍam-ēnti [+*iḍ-am*, 'left side'+*ē-nt-u*, 'to carry'] Siva carrying fire in his left hand; சிவபிரான். அழலூ'ட்ட °ūḍḍa, to set on fire; தீ உண்ணச்செய்ய. அழலோ'ம்ப °ōmpa, to offer oblations in fire; அக்கினி காரியம் செய்ய. அழற்-கண்ணன், °kaṇṇan, Siva, as having the eye of fire on his forehead; சிவபிரான். அழற்-கண்-வந்தோன் °kaṇ-vantōṉ, Vīrabhadra born from Siva's eye of fire; வீரபத்திரன். அழற்-கதிர் °katir, Sun sending forth rays; சூரியன். அழற்-கரத்தோன் °karattōṉ, Siva, as holding fire

in the hand; சிவபிரான். அழற்-கருமம் °karumam [+S. kar-man, 'deed'] Religious oblations offered in fire; அக்கினிகாரியம் (கூர்ம. வர்ணாச். 19). அழற்-காமாலை °kāmālai [+? S. kāmalā] A kind of jaundice; காமாலை வகை. அழற்-காய் °kāy, Black pepper; மிளகு (தைலவ. தைல. 54). அழற்-குட்டம் °kuddam, The third nakṣatra; கார்த்திகை (புறம். 229, 1). அழற்-குத்த °kutta, To have a strong smell; மணமுடைறக்க. அழற்-தடம் °tadam, Vessel containing fire; தீக்காய் கலம் (திருக்கோ. 202 கொளு). அழனாகம் °nākam, A poisonous snake whose lick is said to cause burning sensation; ஒரு வகை விஷப்பாம்பு. அழனிறக்கடவுள் °nirak-kadavuḷ, Siva having the hue of fire; சிவபிரான். அழற்-பால் °pāl, Madar; எருக்கு. அழற்-பித்தம் °pittam, Kind of billious disease; பித்த நோய் வகை. அழற் பிரவை °piravai [+S. pra-bhā, 'effulgence', fr. bhā, T. vē] A hell; நரக வகை. அழற்-புண் °puṇ, Inflamed ulcer; வெந்து இரத்தம் வடியும் இரணம். அழற்-புற்று °purru, An out-growth in the white of the eye, causing burning sensation; வெள்ளை விழியில் எரிவுண்டாக்கும் நோய். அழல்-வண்ணன் °vaṇṇaṉ, Siva, as having the colour of fire; சிவபிரான். அழல்-விதை °vitai, Croton seed; நேர்வாளவித்து. அழல்-விரியன் °viriyaṉ; Kind of viper; எரிவிரியன் பாம்பு. அழல்-விழிக்க °viḻikka, To flash fire from the eyes; கோபத்தோடு நோக்க (திருவாலவா. 14, 5).

அழலம்பூ aḻalampū, n. [id+-am-[1] +pū] Name of a tree, தீம்பூ மரம் (சீவக. 939).

அழலவன் aḻalavaṉ, n. [id.+ -avaṉ[3]] 1. Agni; அக்கினிதேவன். 2. Sun; சூரியன். 3. Mars; செவ்வாய்.

அழலி aḻali, n. [id.+-i[4]] Fire; நெருப்பு.

அழலிக்கை aḻalikkai, n. [id.+ -ikkai] Burning, physical as well as mental; எரிவு, எரிச்சல்.

அழலை aḻalai, n. [id.+-ai[7]] 1. Irritation of the throat; தொண்டைக்கரகரப்பு. 2. Fatigue; ஆயாசம்.

அழலோன் aḻalōṉ, V. aḻalavaṉ;= அழலவன்.

அழற்சி aḻarci, n. [id.+(c)-i[1]] 1. Burning sensation; எரிவு. 2. Pungency; உறைப்பு. 3. Anger; கோபம். 4. Envy; அழுக்காறு. 5. Inflammation in cattle; கால்நடைகளுக்கு உண்டாகும் ஒரு நோய்.

அழவணம் aḻavaṇam, n. [for aivaṇam] Henna; மருதோன்றி

அழற்று-தல் aḻarru, 5. v. tr. [caus. of aḻal(u) < அழலு] To burn, scorch, to cause smarting pain, irritate; சுடுதல், அழலைச் செய்தல்.

அழற்றி aḻarri, n. [id.+-i[4]] 1. What causes burning; அழலைச் செய்வது. 2. Burning; எரிவு. 3. Anger; கோபம். 4. Envy; அழுக்காறு.

அழறு aḻaṟu, n. [=aḷaṟu— = அளறு] 1. Mire; சேறு (திவ். இயற். திருவிருத். 58).

அழன் aḻaṉ, n. [for aḻal, l/n —< அழல்] 1. Corpse (as being burnt); பிணம். (தொல் எழுத் 354). 2. Evil spirit; பேய் (பிங்).

அழனம் aḻaṉam, n. [id.+-am[2]] 1. Fire; நெருப்பு. 2. Heat; வெம்மை. 3. Corpse; பிணம்.

அழாக்கு aḻākku, V. āḻākku;=ஆழாக்கு.

அழாந்தை aḻāntai, n. [sync. of aḻāṉ-tantai] Father of Aḻāṉ; அழானுக்குத் தந்தை (தொல் எழுத். 348 உரை).

அழாஅல் aḻāal, for aḻu-tal;=அழு-தல்.

அழி[1]-தல் aḻi, v. [rt. aḻ+v. det. -i, 'to be pressed, crushed, to be spread, to disappear'. Two forms: one with accent on the 1st and the other on the 2nd. syll. Other forms: aḻ-ál, aḻ-u, aḻ-ái &c—அழ்+-இ[7]; 'படிய நெருக்குதல், நொறுக்குதல், பரப்புதல், ஒழிதல்'. அழி-தலும் அழித்-தலுமாம். பிறவுருவங்கள்: அழல்-தல், அழு-தல், அழைத்-தல் ஆதியன] I. [áḻ-i—அழி-தல்] 4. v. intr. 1. To decay; சிதைவுறுதல். 2. To perish; நாசமாதல். 3. To be frustrated, defeated; தவறுதல், தோற்றல். 4. To suffer, to be troubled; வருத்துதல் (தொல். பொ. 150). 5. To sympathise with; பரிவு கூர்தல். (தொல். பொ. 40). 6. To swell, increase; பெருகுதல் (சீவக. 1193). 7. To be exhausted; செலவாதல். II [aḻí—அழித்-தல்] 11. v. tr. With the above in a caus. sense. 8. To smear; பூசுதல் (உபதேசகா. சிவபுண்ணிய. 225). 9. To leave off; நீக்குதல் (கலித். 131. 34). 10. To despise; இகழ்த்தல் (தக்கயா. 494 உரை). 11. [v. intr.] To find a solution for; விடை காணுதல். உ-ம்: "கதை அழித்தல்". கடையழிதல்', kadai°, To suffer extremely; மிக வருந்தல். நிறையழிதல் niṟai°, To be disheartened; அறைகம்பித்தைப்படல்.

K., M. aḻi; Tu. aḷiyuni; Sinh. aleyi-karaṇava. Cf. S. li, 'to dissolve, disappear'. Gr. alinō; L. lino, 'to anoint.' Cf. T. iḻupp-ai.

அழி aḻi, n. [id.] 1. Destruction; கேடு (குறள், 807). 2. Pain; வருத்தம் (கலித். 143). 3. Pity; இரக்கம் (புறம். 158). 4. Excessiveness; மிகுதி (குறள், 226). 5. Place where lagoons join the sea; கழிமுகம். 6. [what is spent away] Straw; வைக்கோல் (புறம். 125). —hence: 7. Crib for straw; வைக்கோல் இடும் கிராதி. 8. Lattice; கிராதி. —CPDS அழி-கட்டு °kaddu [+kadd-u, 'imputation'] Forgery; பொய்ச் சீட்டு. Excuse; வீண்போக்கு. Hindrance; தடை. Antidote for counteracting magic &c; மந்திரம் ஆதியவற்றிற்கு மாற்று. அழிகடை °kad-ai [+kad-ai, 'the last'] The worst; அறக்கெட்டது. (Coll.) அழி-கண்டி °kandi Niggard; உலோபி (Coll). அழி-கரப்பான் °karrappāṉ, Ringworm; படர்தாமரை நோய். அழி-கரு °karu, Aborted foetus; சிதைந்து போகும் கருப்பம் (திருப்பு. 259). அழி-கன்று °kaṉṟu, Aborted foetus in animals; விலங்குகளின் வயிற்றிற் சிதையும் கருப்பம். அழி-கால் °kāl, Garden of betel vines become unproductive by age; சோடைபாய்ப்போன கொழுந்துத்தோட்டம். அழி-காலி °kāli, Spendthrift; வீண்செலவாளி. அழி-கிரந்தி °kiranti, [+S. granth-i, 'boil,' akin to T. kadd-i] Sloughing venereal ulcer, கிரந்தி நோய் வகை. அழி-குட்டி °kuddi,=aḻi-kaṉṟu;=அழிகன்று. அழி-கொடிக்கால் aḻi-kodik-kāl,=aḻi-kāl;=அழி-கால். அழி-ச்-சாட்டம், °சாட்டியம் °cāddam °cāddiyam [+cāddiyam, prob. fr. cāddu, 'excuse'] Improper treatment, unlawful proceeding; துர் வாதஞ் செய்தல்; உ-ம்: வாக்கியபடியே கொடாமல் அழிச்சாட்டியம்பண்ண. அழி-ச்-சாட்டியக்காரன் cāddiyakkāraṉ, One who incites false litigation; பொய்வியாச்சியம் உண்டு பண்ணுவோன். அழி-செய்ய °ceyya, To spoil, deflower; கெடுக்க; கற்பழிக்க (கம்பரா. பள்ளி. 109). அழி-செலவு °celavu, Expense incurred in improving gardens; தோட்டத் திருத்தம் முதலியனவற்றின் செலவு. அழி-தகவு °takavu [+taka-vu, 'state', fr. tak-u] Grief; துக்கம் (மணி. 12, 43). அழி-தகன் °takaṉ, [id]. Man of depraved character; துன்மார்க்கன் (கந்தபு. தருமகோ. 78). அழி-தலை °talai, Skull; தலையோடு (தேவா. 198, 7). Garland of skulls worn by Siva; சிரமாலை (பிங்). அழி-தரவு °taravu [taru-tal] Destruction; அழிதல். அழி-தூஉ °tū-u [+tū-u 'flesh' —'தூ[3]'] Hermaphrodite

human being; அலி (கந்தபு. அணைந்தன்சா. 36). அழி-நோய் °nōy, Leprosy; குட்டரோகம். அழி-ப்-படுத்த °padutta, To thrash grain with cattle; சூடுமிதிக்க (புறம். 368). அழி-பட °pada, To be erased, spent; கெடுப, செலவாக. அழி-பயல் °payal, Good-for-nothing fellow; உதவாக்கரை. அழி-பாடு °pāḍu, Destruction; கேடு (தேவா. 212,8). அழி-புண் °puṇ, Sloughing ulcer; அழுகு விரணம். அழி-பெயல் °peyal, Heavy rain; பெருமழை (பரிபா. 10, 1). அழி-மதி °mati [+mat-i, 'sense'—மதி'] Folly leading to ruin; கெடு புத்தி. Waste; பாழ்நாசம். அழி-முதல் °mutal, Waste of property, capital; முதனாசக்கேடு. அழி-மேய்ச்சல் °mēyccal, Ruinous grazing of crops by cattle; கால் நடைகள் பயிர் முழுவதையும் தின்றொழித்தல். அழி-வழக்கு °vaḷakku, Vulgar usage; இழிந்தோருள் நடைபெறும் முறை. (தொல். எழுத். மொழி. 31. இளம்). Unreasonable argument; unjust law-suit; அநீதியான வியாச்சியம். Law-suit that will not succeed; வாய்ப்பில்லா வியாச்சியம். அழி-வாய் °vāy, sandbank at the mouth of a river or harbour; துறையில் மண்மேடு.

அழிகுநன் aḻikunaṉ, *n.* [*aḻiku-n-aṉ* = *aḻiyum-avaṉ*] One who is defeated, ruined, தோற்றவன். (பு. வெ. 3, 20, கொளு).

அழிகை aḻikai, *n.* [id.+(*k*)-*ai*$^{7}$] Ruin; சிதைவு.

அழித்து aḻittu, *adv.* [*pple.* of id.] Again; மீட்டும் (புறம். 383). —CPDS அழித்த'ழித்து, Again and again; மீட்டும் மீட்டும் (திவ். திருநெடுந். 16, வ்யா.). அழித்துச் சொல்ல °colla, To refer contemptuously; பரிகசித்துக்கூற. (தக்கயா. 494 உரை). அழித்து'ரை, °urai, Word of contempt; பரிகாசப்பேச்சு (தக்கயா. 508 உரை).

அழிப்பன் aḻippaṉ, *n.* [*aḻippu*+-*aṉ*$^{5}$] 1. The destroyer; சங்கரிப்பவன் (திவ். பெரியாழ். 4, 8, 6). 2. One who is sorrow-stricken; துன்புறுபவன் (தேவா. 702, 2).

அழிப்பாளன் aḻippāḷaṉ, *n.* [id.+-*āḷaṉ*] Goldsmith; தட்டான் (சூடா. 5,8,1).

அழிப்பாளி aḻippāḷi, *n.* [id.+-*āḷi*$^{5}$] Spendthrift; வீண் செலவுக்காரன் (Coll).

அழிப்பு aḻippu, *n.* [id.+(*pp*)-*u*$^{6}$] 1. Destruction; சங்காரம் (திவ். இயற். முதற். 5). 2. Fault; குற்றம் (திவா).—CPD அழிப்பா'ங்கதை °āṅkatai [*ākum*+*katai*] Conundrum, puzzle; விடுகதை.

அழிபு aḻipu, *n.* [id+(*p*)-*u*$^{6}$] 1. Destruction; நாசம். (பு. வெ. 3, 8, கொளு). 2. Defeat; தோல்வி. (டை 8, 19).

அழிம்பு aḻimpu, *n.* [as above, nasalized] 1. Evil deed, gross neglect; தீம்பு. 2. Patent falsehood; வெளிப்படையான பொய். 3. Unrighteous claim or plea; அக்கிரமமான வழக்கு.

அழிமானம் aḻimāṉam, *n.* [id.+-*māṉam*$^{4}$] That which is wasted, spent; கெட்டுப்போனது.

அழிய aḻiya, *infin.* [id.] அழிய-மாறுதல் °mārutal, To change so as to obliterate one's identification; தன்னிலை மறைய வேறுதல் (சூடா. 4, 2, 6).

அழியா(த) aḻiyā(ta), *pple.* [id.+-*ā*-$^{9}$] அழியா-வ்-இயல்பு °iyalpu, Indestructibleness; நாசமாகக்கூடாமை. அழியா-முதல் °mutal, Property endowed in perpetuity; நிலையான மூலதனம். God the eternal; கடவுள். அழியாத-பத்தினி °pattini [+S. *patnī*, 'wife', *fem.* of *pati*. Cf.T. *pōtu*$^{1}$.] Draupati; திரௌபதி. அழியா-விளக்கு °viḷakku, Perpetual lamp; நந்தாவிளக்கு.

அழிவி aḻivi, *n.* [id.+(*v*)-*i*$^{1}$] Inlet to a backwater, mouth of a river; கழிமுகம் (குறள். 340).

Tu. *aḷuve*, 'mouth of a river.'

அழிவு aḻivu, *n* [id.+(*v*) -*u*$^{6}$] 1. Destruction; கேடு. 2. Defeat; தோல்வி (கந்தபு. மாயைப். 59). 3. Pain of separation; மனவருத்தம் (தொல். பொ. 115). 4. Expenditure; செலவு (S. I. I. ii 69.) 5. Poverty; வறுமை (திரிகடு. 79). 6. Want of firmness of mind; மனவுறுதியின்மை (குறள். 625.) 7. Deviation from virtue; தீச்செயல் (கம்பரா. வாலிவ. 79). 8. = *aḷivu*: = அளிவு. —CPDS அழிவு-காலம் °kālam, Time of universal destruction; யுக முடிவு. Evil time; அதிர்ஷ்டமின்மையான அமையம். அழிவு-பாட்ட'பாவம் °pāḍḍu-apāvam [*aḻivu pāḍu*, 'being destroyed' + S. *a-bhāva* 'non-existence' — 'அ-பாவம்.'] (Log.) Non-existence caused by destruction; அழிந்ததினால் அஃதில்லை என்னும் இன்மை (சி. சி. அள. 1, மறைஞா).

K., M. *aḻivu*

அழி$^{3}$ aḻi, For *aḷi*$^{3}$ = அளி$^{3}$

அழிஞ்சில், அழிஞ்சு aḻiñcil, aḻiñcu, *n.* [M. *aḻiññil*] Sage-leaved alangium; மரவகை (பதார்த்த. 217. தைலவ. தைல. 72).

அழு-தல் aḻu, 1 *v. intr.* [rt. *aḷ*+-*u*$^{5}$, 'to be pressed, to be in distress'. Cf. *aḻu-ṅk-u* and *aḻa-ṟu*. Other forms: *aḷ-āḷ*, *aḷ-i*, *aḷ-āi* &c. — அழ்+உ$^{5}$, நெருக்கப்படுதல், வருந்துதல். ஒப். அழுங்கு-தல், அலறு-தல். பிறவுருவங்கள்: அழல், அழி-தல், அழைத்-தல், ஆதியன] 1. To crave, cry in distress; வருந்துதல். (Prov.) குடல் கூழுக்கழக் கொண்டை பூவுக்கழுகிறதா? 'would you be adorning your hair with flowers while your stomach is craving for food? 2. To cry aloud, low, bellow, mew, caw &c; கதறுதல், 3. To weep, lament; கண்ணீர் விடுதல். 4. To whine; சிணுங்குதல். 5. To spend uselessly; வீணாகச் செலவழித்தல்.

K., M. *aḻu*; Tel. *aḍalu*, *eḍtsu*; Tu. *ar*. Cf. Hit. *eshahru*, *ishahru*, 'tears, weeping'. But the S. *asru* seems to be unconnected.

அழு aḻu, *ple.* [id.] Weeping; அழுகின்ற. —CPDS அழு-கண் °kaṇ, An affection of the eye causing continual watering; கண்ணோய் வகை. அழு-கண்ணர் °kaṇṇar, Those who weep; துயரப்பட்டு அழுவோர். உ-ம்: "அழு கண்ணர் பாக்கியவான்கள்" (சுவிசேஷம்). அழு கண்ணி °kaṇṇi, A plant from which water drips; நீர் பொசியும் ஒரு பூடு. அழு-கள்ளன் °kaḷḷaṉ, Weeping hypocrite; பாசாங்குக்காரன். அழு-மூஞ்சி °mūñci [+*mūñc-i*, 'face'] Dolorous looking person; பொலிவற்ற முகமுள்ளவன்-ள். அழு-விளிப்-பூசல் °viḷi-p-pūcal, Loud lamentation; அழுகைப் பேரொலி (மணி. 6, 73).

அழுகுணி$^{1}$ aḻukuṇi, *n.* [for **aḻu-v-uṇi*. id.+-*uṇi*] One who is always weeping; எப்போதும் கண்ணீர் விடுவோன்.

K. *aḻukuḷi*

அழுகை aḻukai, *n.* [id.+(*k*)-*ai*$^{7}$] 1. Weeping; புலம்புதல், கண்ணீர் விடுதல் 2. Sorrow; துக்கம். உ-ம்: "அழுகைக் கண்ணீர்" (தொல். பொ. 253). 3. Pathetic sentiment; அவலம்$^{1}$ (9).

அழுது-வழிய aḻutu-vaḻiya, *v. intr.* [*pple.* of *aḻu* + *vaḻ-i*, 'to flow over'] To be dull or gloomy; பொலிவின்றியிருக்க (Coll).

அழுக்காமை aḻukkāmai, V. *aḻuṅk'āmai*; = அழுங்கா'மை.

அழுகு-தல் aḻuku, 5 *v. intr.* [extended form of *aḻu* with the second format. *k* + -*u*$^{5}$, 'to be pressed, crushed, decomposed'; Cf. *aḻu-ṅku*—அழு + மேல்வரும் விபக்.க்+-உ$^{5}$, நெருக்குண்ணல்

அவைபடல், கிளைநோதல், ஒப். அழுங்கு-தல்] To rot, to putrefy; பதனழிதல்.

K. aḻugu; M. aḻuku; Tu. aḷuṅguni. Cf. Gr. loigos, 'indigence, misery, death'; Lit. liga 'illness'; Arm. alhat, 'poor, ill'. See Walde—P. under leig and leiq.

அழுக்கு aḻukku, n. [id.] 1. Dirt, stain; அழுக்கு, மாசு. 2. Excrement; மல சலாதிகள். 3. Lochia; அவாசே. 4. Soiled clothes; வெளுத்தற்குரிய அழுக்கு ஆடை. 5. Hawk's bill; ஆமை வகை. 6. Impurity of mind, soul; மன மாசு (திவ். திருப். 7). 7. Envy; பொறாமை (திருவிளை. நகரப். 100).—CPDS அழுக்க'கற்றி °akaṟṟi, Lye; சாம்பலிச்சாரம். அழுக்க'டிக்க °aṭikka, To wash clothes &c. அழுக்கை போக்க. அழுக்க'ணவன் °aṇavaṉ [+aṇav-u, 'to adhere' + -aṉ⁵ அணைவிபது] Small blight upon leaves; இலை இல் ஒரும் புழு. அழுக்க'றுக்க °aṟukka [irregular verbal form fr. aḻukkāṟu below—அழுக்காறுகொள்ள] To be envious; பொறாமை கொள்ள. அழுக்கா'மை °āmai, V. aḻuṅkāmai = அழுக்காமை. அழுக்கா'று °āṟu, [+āṟu, 'way' (unclean way) அழுக்கு-ஆறு] Impurity of mind; மனத்தூய்மையின்மை. Envy; பிறராக்கம்பொறாமை (குறள் 165). அழுக்குத்-தேமல் °tēmal [+tēm-al, 'freckle'] Spots in the body formed by dirt; அழுக்கினால் தோன்றும் புள்ளிகள். அழுக்கு-முட்டை °muṭṭai. One who sticks to time-worn practices; பழையவழக்கங்களைவிடாதேதான்.

K. aḷkaja, 'envy'.

அழுக்கன் aḻukkaṉ, n. [aḻukku + aṉ⁵] Miser; உலோபி (Coll.).

அழுகல் aḻukal, n. [id. + -al¹] 1. Rotten thing; பதனழிந்தது. 2. Uncleanliness; அசுத்தம்(குறள்.56).—CPDS அழுகற்-சரக்கு °carakku [+carakku, 'goods'] Perishable goods in traffic; பதனழிதற்குரிய பண்டம். Tax on such goods; ஷை பண்டங்களுக்கு வரி (S; II, ii, 114). அழுகற்-சிரங்கு °ciraṅku [+cir-aṅku, 'eruption'] Weeping eczema; நீர் கசியும் சொறிவு. அழுகற்-தூற்றல் °tūṟṟal [tūṟ-u, 'drizzle'] Continuous drizzle; விடாத தூறல்மழை. அழுகற்-புண் °puṇ, Gangrene; அழுகிய விரணம்.

அழுகிச்-சேதம் aḻukic-cētam, [for aḻuku? + S. chēd-a, 'cutting off', fr. chid, akin to T. kiḷ-i] Remission of land tax for loss of crop; பயிர்ச்சேதத்தின் பொருட்டுச் செய்யும் தீர்வைநீக்கறிவு.

அழுகு aḻuku, ple [id. for aḻukum] —CPDS அழுகு'ணி °uṇi [+uṇṇ-i, 'wart'] A kind of itch with eruptions on the skin; சொறிச்சிரங்குவகை. அழுகு-கால் °kāl [+kāl, 'irrigation channel'] Paddy crop rotten from over-irrigation; நீர்ப்பெருக்கால் பதனழிந்த நெற்பயிர். அழுகு-சப்பாணி °cappāṇi [fr. aḻuku-sarppam.] A poisonous reptile; அழுகு-சர்ப்பம். Sore supposed to be caused by the lick of the above reptile, causing the flesh to putrefy; அழுகு சர்ப்பம் நக்குதலால் உண்டாகும் புண். அழுகு-சர்ப்பம் °carppam [+S. sarp-a, 'serpent,' fr. sorp, sri, T. car-i] Do; ஷை. அழுகு-சிறை °ciṟai [+ciṟ-ai, 'confinement'] Prison without ventilation; அவிந்த காதப்பண்ணத்தக்க மறியல் வீடு (சரு. 1, 2, 1). அழுகு-புண்-குட்டம் °puṇ-kuṭṭam, Leprosy with running sores; குட்டநோய்வகை. அழுகு-மூலம் °mūlam, A kind of piles; மூல நோய் வகை.

அழுங்கு-தல் aḻuṅku, 5 v. intr. [nasalized form of aḻuku. Cf. aḻu—அழுகு என்பது மெல்லொற்று நீண்டது. ஒப். அழு] 1. To plunge; அமிழ்ந்துதல். 2. To be disfigured; உருவழிதல்: "பிணைமுங்கக்கழறுமுகமே" (புறம். 98.) 3. To be injured, spoiled; கெடுதல் (தொல். சொல். 350). 4. To be in distress, to grieve; துக்கப்படுதல். 5. To weep; அழுதல். 6. To fear; அஞ்சுதல். 7. To sound; ஒலித்தல். 8. To be idle; சோம்புதல். 9. [v.tr.] To dispense with; தவிர்தல்: "செல்வழுங்குவிரைவி" (தொல். சொல். 350 உரை).

அழுக்கம் aḻukkam, n. [id. + -am²] Anxiety; கவலை (திருவிளை. விறகு. 48).

அழுங்க aḻuṅka, adv. [id. + -a¹¹] Except; தவிர. (பழமொ. 222—111).

அழுங்கல் aḻuṅkal, n. [id. + -al¹] 1. Ruin; கேடு (திவா). 2. Dimness; ஒளி மங்கல். 3. Disease; நோய் (திவா). 4. Affliction; துன்பம் (திவா). 5. * Fear; அச்சம். 6. Compassion; இரக்கம் (திருக்கோ. 29, கொளு). 7. Weeping; அழுதல். 8. Sound of a lute; யாழோசை (பிங்). 9. Loud noise; ஆரவாரம் (நற் 36).

அழுங்கா'மை aḻuṅk'āmai, n. [Cf. aḻuṅku below + ām-ai 'turtle' — ஒப். அழுங்கு + ஆமை] 1. Hawk's bill, Caretta squamata; கடலாமை வகை. 2. Pangolin; அழுங்கு.

அழுங்கு aḻuṅku, n. [perh. fr. its firm grasp — ஒப். அழுங்குப்பிடி] 1. Pangolin, Indian scaly ant-eater: Manis crassicaudata; விலங்கு வகை. 2. Hawk's bill; = அழுங்காமை. 3. (Mus.) A secondary melody type of the pālai class; பாலை யாழ்த்திற வகை. 4. Aloe; கற்றாழை. —CPDS அழுங்கு-ப்-பிடி, °piḍi, Firm, unyielding hold; நெகிழாத பற்றும் பிடி.

அழுங்குவிக்க aḻuṅkuvikka, 11 v. tr. [caus. of id.] 1. To distress; துன்புறுத்த (சீவக. 2051). 2. To prevent; விலக்க (குறள். 1154 உரை).

அழுத்து-தல் aḻuttu, 5 v. tr. [caus. of aḻuntu—அழுந்து-தலின் பிறவினைவடிவம்.] 1. To press down; படியச் செய்தல். 2. To immerse; அமிழ்த்துதல். 3. To make firm, compact; உறுதியாக்குதல். 4. To inlay, encase; பதித்தல் (காலடி. 347). 5. To shoot; எய்தல் (குறிஞ்சிப். 171). 6. To affirm; வற்புறுத்துதல் அழுத்தி-ப்-பேச to speak impressively.

M. aḻuttu; K., Tel. addu.

அழுத்தம் aḻuttam, n. [id. + -am²] 1. Hardness, compactness; கடினம், இறுக்கம். 2 Smoothness; ஒப்பம். 3. Durability; உறுதி. 4. Obstinacy; பிடிவாதம். 5. Close-fistedness; லோபம். 6. Emphasis; வலியுறுத்துகை. 7. Profoundness in mental application; ஆழ்ந்தறியுங்குணம். உ-ம். அழுத்தமான படிப்பு. —CPDS அழுத்தக்-காரன், Niggardly person; கையிறுக்க முடையவன். Deep man; தந்திரி. அழுத்தமாகப்-பார்க்க, To be exact to the utmost in dealing, to be rigid, to criticize; கண்டிப்பாய் நடக்க, குற்றங்கண்டுபிடிக்க.

அழுத்து aḻuttu, n. [id.] 1. Imprint; பதிவு. "கைதழும்புறுத்தைதக்காட்டி" (திருப்பு. 404). 2. Pressure; நெருக்கம்.

அழுந்து-தல் aḻuntu, 5, v. intr. [aḻ-u + 2nd. format. (n) t + -u⁵—அழு + மெல் வரும் வியஞ். (ந்) த் + -உ⁵] 1. To become pressed; அமுக்குண்ணுதல். 2. To be immersed; அமிழ்தல் (திருக்கோ. 166). 3. To suffer; வருந்துதல். 4. To be smeared with; பூசப்பட்டிருத்தல். 5. To become firm, compact; உறுதியாதல். 6. To become deep-rooted; உறுதியாகப்பற்றுதல். 7. To be inlaid; பதிதல். 8. To gain experience; அனுபவப்படுதல்.

Tel. aladu, 'to smear, apply perfumes'. Cf. S. añj, Ved. añjas, 'greasy, slippery'; L. unguo; OHG. ancho, 'butter'.

அழுந்து aḻuntu, n. [id.] 1. Depth of water; நீராழம். 2. Ridge on which betel-vine is planted; வெற்றிலை நடும்

வரம்பு. அழுந்து-பட To have continued for generations; தொன்று தொட்டு வர. (மதுரைக். 342).

அழுப்பு aḻuppu, V. under aḻumpu; அழும்புதல் பார்.

அழுப்புகம் aḻuppukam, n. [aḻuppu + ukam? அழுப்பு + உகம்?] World of the gods; தேவலோகம்.

அழும்பு[1]-தல் aḻumpu, 5 v. intr. [aḻ-u + (mp)-u[5], extended form of aḻu—அழு + (ம்ப்)-உ[5]] To be well mixed up, to be intimate; செறியக் கலப்புண்ணல்: "அமரவழும்பத் துழாவி" (திவ். திருவாய் 1, 7, 9).

அழுப்பு aḻuppu, n. [prob. id.] Boiled rice; சோறு.

அழும்பு[2] aḻumpu, V. aḻimpu = அழிம்பு.

அழுவம்[1] aḻuvam, n. [prob. fr. āḻ-am—<ஆழம்] 1. Deep sea; கடல். 2. Depth; ஆழம் (மலைபடு. 528). 3. Pit; குழி (மலைபடு. 368). 4. Expanse; பரப்பு (கலித், 121). 5. Greatness, excellence; பெருமை. 6. Abundance; மிகுதி (சீவக. 802). 7. Battle; போர் (பு. வெ. 8,23). 8. Jungle; காடு (அகம் 79). 9. Fortress; துர்க்கம் (திவா). 10. Country; நாடு (குடா). 11. Middle; நடு (பு. வெ. 10, பொதுவி.).

அழுவம்[2] aḻuvam, n. [perh. <aḻ-u—ஒப். அழு-தல்]. 1. Drum; முரசு. 2. Quaking with fear; நடுக்கம்.

அழுவம்[3] aḻuvam, n. [cf. aḻuppu—ஒப். அழுப்பு] 1. Various kinds of cakes; அப்ப வருக்கம். 2. Muddy, slippery ground; வழுக்குநிலம்.

அழுவை aḻuvai, n. [cf. vaḻu-vai—ஒப். வழுவை] Elephant; யானை.

அழை-த்தல் aḻai, 11 v. tr. [rt. aḻ + v. det. -ai, 'to bring near, to press towards oneself'. Other forms: aḻ-ā̆l, aḻ-u, aḻ-i &c.—அழ் + -ஐ[1], 'அண்மையிற்கொணர்தல், தன்னோடு சேர்த்தல்'. பிறவுருவங்கள்: அழல்-தல், அழு-தல், அழி-தல் ஆதியன.] 1. To direct to be brought near; கூட்டிக்கொண்டு வரச் செய்தல் (கந்தபு. விண்குடி. 40). 2. To take along with; கூட்டிக்கொண்டு போதல். 3. To call by name; பெயரிட்டுக் கூப்பிடுதல். 4. To cry out, shriek; கதறுதல். அழையுறுத்த °urutta, To screech; உடம்: "அழையுறுத்தமாமயில்கள்" (தேவா. 483, 7).

அழைக்கை aḻaikkai, n. [id. + (kk)-ai[1]] Call, invitation; கூப்பிடுதல், வரச்சொல்லுதல்.

அழைத்தல் aḻaittal, n. [id. + (tt)-al[7]] (Cath.) Vocation, calling; ஒரு சிவிய அந்தஸ்தாக்குத் தேவ நியமிப்பு.

அழைப்பு aḻaippu, n. [id. + (pp)-u[6]] 1. Invitation; கூப்பிடுகை (திவ். இயற். நான்மு. 38). —CPDS அழைப்பு-ச்-சுருள் °curuḷ [+curuḷ, 'roll'] Money presented with betel to the bride or bridegroom or others on the occasion of inviting them for marriage; விவாகத்துக்கு அழைக்கும் போது தாம்பூலத்தோடு கொடுக்கும் பணமுடிப்பு. அழைப்பு-த்-தூரம் °tūram, [+tūr-am, 'distance'] Calling distance: 1000 yards; ஆயிரம் கஜ தூரம். அழைப்பு-ப்-பத்திரம் °pattiram, [+S. pat-ram, 'feather, leaf,' fr. pat, akin to T. par-a] Invitation card; வரக் கேட்கும் தாள்.

## அள் AḶ

அள் AḶ prim. rt. [a-[2] + format ḷ—அ[2] + ள்] To be near, close, to crowd, press together, to be narrowed, to take out in quantities, to apportion. Cf. aḍ, al. Combined with the v. det. -a, -u, -i, and -ai (=e) this root yields such forms as aḷ-a, aḷḷ-u, aḷ-i, aḷ-ai &c. —அடுத்தல், நெருங்குதல், செறிதல், நெருக்குதல், கூறாதல், பங்கிடுதல் ஆதிய பொருள் கொண்ட ஒரு தலையடி. -அ, -உ, -இ, -ஐ (= எ) எனும் வினைக்குறிகள் அணைக்கு அள, அள்ளு, அளி, அளை ஆதிய வினைச்சொற்களாகும். ஒப். அட், அல்.

For IE parallels see rt. al.

அள்[1] aḷ, n. [rt. aḷ] 1. Closeness, thickness; செறிவு (புறம் 252). 2. Strength; வன்மை. 3. Sharpness, keenness of edge; கூர்மை. 4. [what fastens] Lock; பூட்டு. 5. Iron clamp; பற்றிரும்பு. 6. Block connecting the spring with the axle; வண்டி வில்லைத் தாங்கும் கட்டை. 7. [what is taken together] Handful of anything; கைகொண்ட அளவு. 8. Infantile bronchitis: அள்ளுமாந்தம். 9. Species of Hygrophila; நீர்முள்ளி. 10. [what puts itself near?] Ear; காது. The cheek; கன்னம். —CPDS அள்-ள்-ஆட °āḍa, To be close; செறிந்திருக்க (கம்பரா. முதற்போ. 177). அள்ளாடி-த்-தள்ளாடி °taḷḷāḍi, [aḷḷāḍi, echo-w, for taḷḷāḍi] Swaying to and fro; தளர்ந்த நடையாய். அள்-ள்-இருள் °iruḷ, Thick darkness; செறிந்த இருட்டு. அள்-ள்-இல்லம் °illam, The same house; ஒரே வீடு (பழமொ. 297). அள்-ள்-ஊற °ūṟa, [+ūṟ-u, 'to issue'] To water; வாயினின்று நீர் வெளிவர (திருவாச. 7, 3). அள்-ள்-எடுக்க °eḍukka, To take handfulls; கையால் வார. அள்-வழுப்பு °vaḻuppu [+vaḻ-u-ppu for vaḻumpu 'slimy substance;] Ear-wax; காதுக்குறும்பி (திருப்பு. 573).

For aḷ, 'ear', cf. Tel. aḍugu.

-அள்[2] aḷ, part. [fr. -āḷ[3], 'person'—<-ஆள்[3]] Third person singular feminine ending; பெண்பால் விகுதி. உம்: "வந்தனள்".

-அள்[3] aḷ, suff. [fr. -aṭ-u[8]—<-அது[8]] A stem-suffix which particularises a thing, as in at-aḷ; பொருளை இத்தன்மைத்தென்று காட்டும் ஒரு சுவடுநிலை. உ-ம்: அதள்.

அள்ளல் aḷḷal, n. [rt. aḷ + -al[7]. Cf. aḷaṟu[1]—ஒப். அளறு[1]] 1. Crowdedness; நெருக்கம் (திவ். இயற். திருவிருத். 12). 2. Holding familiar intercourse; அளவளாவுதல். 3. Mud; சேறு. 4. One of the seven hells; எழு நரகத்தொன்று.

அள்ளல்அளப்பு aḷḷalaḷappu, n. [aḷappu, echo-word for aḷḷal] Familiarity; மிகு பரிசயம்.

Tel. asalu.

அள்ளாத்தி aḷḷātti, n. Big-eyed herring: Elops saurus; மீன் வகை.

அள்ளி aḷḷi, n. [aḷ, 'thick'—இறுகியது] Butter; வெண்ணெய்.

அள்ளு-தல் aḷḷu, 5 v. intr. [rt. aḷ, 'to be near, to take out in quantities' + v. det. -u[5], format. doubled for emphasis. Other forms. aḷ-a, aḷ-i, aḷ-ai &c.—√அள் + (ள்)-உ[5], 'நெருக்கிவரல், வெளியெடுத்தல்'. பிறவுருவங்கள், அள, அளி, அளை ஆதியன] 1. To be dense, narrow, thickly interwoven; செறிந்திருத்தல், "அள்ளிலை பணித்த வைவேல்" (சீவக. 614). 2. [v. tr.] To take up in the hollow of the hand; கையால் முகத்தல். (Prov.) "அள்ளாமற் குறையாது சொல்லாமற் பிறவாது"; There is no rumour however vague but has some truth in it. 2. To carry away in large quantities or in great numbers; வாரிக்கொண்டு போதல் (குறள். 1187). 3. To graze, take off the skin by hot iron &c; தோலை எடுத்துப் போடல். உ-ம்: "கையை அள்ளிப் போட்டது". 4. To throw up, kick; எற்றுதல் (பிங்.). 5. To enjoy; நுகர்தல்; "அள்ளுற வளிந்த காமம்" (சீவக. 1387). —CPDS அள்ளு-கொள்ளை °koḷḷai, Great waste; பெரும் அழிவு. அள்ளு-மாந்தம் °māntam, Infantile bronchitis; குழந்தைகளுக்கு உண்டாகும் மாந்தவகை.

K. aḷe, 'to measure'; M. aḷḷuka; Cf. Su. alala, 'bucket'.

அள்ளு aḷḷu, *n.* [id.] 1. See *aḷ*[1] (5), (6), (7) and (8). 2. Abundance; நிறைவு (திருவாச. 3, 177). 3. Ribs; விலாவெலும்பு. —CPDS அள்ளு-க்-கட்ட °kaḍḍa, To fasten with clamps &c; இரும்புத் தகடாதியவற்றால் இறுக்க. To confirm, encourage by promise; உறுதிப்படுத்த. அள்ளு-க்-காசு °kācu, Market dues collected from retail sellers; கடைக்காரரிடம் வசூலிக்கும் பணம். Handful of coins put into tills of temples; ஆலயக் காணிக்கைப் பெட்டிக்குள் போடும் கைநிறைந்த நாணயம். அள்ளு-கொண்டை °koṇḍai, Coil of woman's hair tied up in a special way; மகளிர் மயிர் முடிவகை.

அள்ளை aḷḷai, *n.* [id.] 1. Side of the body; விலாப்புறம், Devil; பேய். —CPDS அள்ளை-ப்-புறம் °puṟam, A section of the house; வீட்டின் ஒரு பகுதி. அள்ளை-மறை °maṟai [for *maṟ-ai*, 'patch'—'மறை[2]'] Bull with white patches on its sides; பக்கங்களில் வெள்ளை நிறமுள்ள காளை.

அள-த்தல் aḷá, 12 *v. tr.* [rt. *aḷ*, 'to take out in quantities' + v. det. *-a*. Other forms: *aḷḷ-u*, *aḷ-i*, *aḷ-ai* &c. —அள் + -அ[6], 'ஓர்பொருள் தொகையை எடுத்தல்'. பிறவுரு. அள்ளு, அளி, அளை ஆதியன] 1. To measure, fathom; தொகை தாழ்வு ஆதியன இத்துணையென்று காணல். 2. To give [measure out]; கொடுத்தல் (பு. வெ. 8, 29). (Prov.) "ஐயன் அளந்தபடி"; As God allots. 3. To limit, define; பகுத்து வரையறுத்தல் (புறம். 20, 5). 4. To extend, to reach; எட்டுதல்: "மௌலி அண்ட முகட்டினையளப்ப" (கம்பரா. தக்கன் வே. 16). 5. To test by logical modes of proof; பிரமாணங்கொண்டறிதல் (சி. சி. அளவை. 4, வெரு). 6. To consider; கருதுதல்: "வறளந்தவர்வயின்" (கலித். 17). 7. To gossip, speak beyond measure; வீண் பேச்சிலிருத்தல். 8: [*v. intr.*] To talk together; அளவளாவுதல் (கல்லா. 18, 36). 9. To blend; கலத்தல்.

M. aḷakka; K. aḷa; Tu. aḷapuni; Tel. lavu, 'size'.

அளக்கை aḷakkai, *n.* [id. + (*kk*) *-ai*[1]] Measuring; நேரோர் பாகத்தை எடுத்தெடுத்துக் கணக்கிடுகை.

அளப்பம் aḷappam, *n.* [id. + (*pp*) *-am*[2]] Measurement; அளக்கை. 2. Contrivance, stratagem; உபாயம்.

அளப்பன் aḷappaṉ, *n.* [*aḷappu* + *-aṉ*[5]] 1. One who measures; அளக்கெடுப்போன். 2. [Cf. *alappu*] Babbler; அலம்பிக்கொண்டிருப்போன்.

அளப்பு aḷappu, *n.* [id. + (*pp*)*-u*[6]] 1. Measuring; அளக்கை. 2. Bounds, limit; எல்லை (கந்தபு. நந்திப். 32.) 3. Fate, destiny; ஊழ். 4. Ascertaining; ஆராய்ந்தறிகை (சி. சி. 8, 14). 5. [Cf. *alappu*] Chatter, grumbling; அளப்புகை, முறுமுறுப்பு. —CPDS அளப்ப'ளக்க °aḷakka, To chatter; அலப்ப. To murmur; முறுமுறுக்க. அளப்ப'றிய °aṟiya, To discover secret designs; உட்கருத்தைத் தந்திரமாய் ஆராய்ந்தறிய.

அளபு aḷapu, *n.* [id. + (*p*)*-u*[6]] 1. Measurement; அளவு (நன். 88 மயிலை.), 2. Lengthening of the sound of a letter; எழுத்தொலி நீட்டல் (நன். 108). —CPDS அளபெ'டுக்க °eḍukka, To lengthen the sound of a letter; எழுத்து ஒலியின் மாத்திரை மிகுதல். அளபெ'டை °eḍai, [*n.* fr. *eḍ-u*] Lengthening of a vowel or a consonant sound especially in verse, as ஈஇகை for ஈகை, அரங்ங்கு for அரங்கு; செய்யுளில் எழுத்தொலிநீட்டல் (நன். 61). அளபெடை-வண்ணம் °°vaṇṇam, (Pros.) Rhythm produced by a frequent use of aḷapeḍai; அளபெடை பயின்று வரும் சந்தம் (தொல். பொ. 531).

அளவம் aḷavam, *n.* [*aḷavu* + *-am*[2]] Mimicry, ridicule; கடித்தப்பரிகசிக்கை.

அளவன்[1] aḷavaṉ, *n.* [*aḷavu* + *-aṉ*[5]] One who measures grain; தானியம் அளப்போன்.

அளவி aḷavi, *n.* [id. + *-i*[1]] Limit; எல்லை (திருக்கோ. 10).

அளவில் aḷavil, *adv.* [*aḷavu* + *il*] As regards; மட்டில்: "என் அளவில்"; as for me.

அளவு[1]-தல் aḷavu, 5. *v. intr.* [id. + 2nd. format. *v* + *u*[3]—அள + வ் + -உ[7]] 1. To blend, mix; கலப்புறல். 2. [*v. tr.*] To inquire after one's welfare; க்ஷேமம் விஞவுதல் (தொல். பொ. 146).

அளவு aḷavu, *n.* [*aḷa* + (*v*) *-u*[6]] 1. Measure, size, number; பரிமாணம். 2. Revenue survey; நிலவளவு (I. M. P. T, 1000). 3. (Mus.) Variety of time-measure: pulutam; தாளத்தின் மூன்று மாத்திரைக்காலம் (சிலப். 3, 16 உரை). 4. Dialectics; தருக்கப்பிரமாணம் (குறள் 725). 5. Opportunity; சமயம் (சீவ. 1, 4, 4). 6. Quality, nature; தன்மை, "ஈரவில்லா வளவினர்" (திருக்கோ. 306). 7. Knowledge; ஞானம் (சீவ. 3, 7, 3). [*adv.*] So much, until; மட்டும்: "புகக்காணுமளவு" (குறள், 224). According to; தக்கபடி: "குலத்தளவேயாகும் குணம்". [*prep.*] From; தொடங்கி: "அன்றளவு... ..இன்றுகாறு" (உபதேசகா. சிவபுண். 347.) As far as; வரையில்: 'இராசா வளவிற்கேற்றது". —CPDS அளவடி °aḍi (Pros.) Line of four metrical feet; நாற்சீரடி (காரிகை. உறுப். 12 உரை). அளவ'ழிச்சந்தம் °aḻiccantam [*aḻi-kk-um*, 'doing away with' + *cant-am* 'verse'] A stanza of the viruttam type whose lines are not equally long but no line of which contains less than four and more than 26 syllables; 4 முதல் 26 எழுத்து வரை வந்து அளவொவ்வாத அடிகளுடைய செய்யுள்வகை. (யாப். வி. 95). அளவழித்-தாண்டகம் °aḻittāṇḍakam [id. + *tāṇḍakam*, 'what preponderates'?] A stanza in which each line contains no less than 27 syllables without the lines agreeing in quantity with each other; 27 எழுத்து முதலாக வந்து ஒவ்வாத அடிகளையுடைய செய்யுள்வகை (டை 95). அளவ'ளப்பு °aḷappu, Sociability; தம்முள் கொண்டாட்டமாயிருத்தல். அளவ'ளாவு °aḷāvu, Intimacy; மனக்கலப்பு (குறள், 523). அளவ'ளாவ °aḷāva [V. *aḷāvu*] To converse freely; கலந்து பேசுக்க (ஞானா. 4). அளவ'றுக்க °aṟukka, To test by logical methods of proof; ஆராய்ந்தறிய (திருவாச. 5, 35). அளவா'க்க °ākka, to make even, straighten; மட்டமாக்க, திருத்த. அளவி'ட °iḍa, To measure, explore, investigate, estimate; அளக்க, கண்டுபிடிக்க, ஆராய, மதிக்க. அளவி'டை °iḍai, [*n.* fr. *iḍ-u*] Calculation, estimation; எண்ணிக்கை, மதிப்பு. Guess; ஊகம். Capacity, extent of one's power; நிறை, திருவாகம். அளவி'யல் °iyal (Pros.) Rules regarding the number of lines in different kinds of stanzas; பாவின் அடி வரையறை (தொல். பொ. 313). அளவி'யற்சந்தம் °iyaṟ-cantam, Same as *aḷavaḻic-cantam* with equally long lines; அளவொத்துவரும் சந்தம். அளவி'யற்றாண்டகம் °iyaṟ-ṟāṇḍakam, Same as *aḷavaḻit-tāṇḍakam* with equally long lines; அளவொத்து வரும் தாண்டகம். அளவி'றக்க °iṟakka, To exceed appointed bounds or all bounds; மட்டுக்குள் அடங்காதிருக்க. அளவெ'டுக்க °eḍukka, To take dimensions of; ஒன்றின் நீளம் அகலமாதியவற்றை நிர்ணயிக்க. அளவெ'ண் °eṇ, Variety of ampōtaraṅkam consisting of lines of 4 feet each; நாற்சீர் ஓரடியாய் வரும் அம்போதரங்கஉறுப்பு வகை (காரிகை. செய்.

10 உரை). அளவொ'ழுகு °oḻuku [+ oḻu-ku, 'register'] Record of the measurements of fields in a village; கிராம நிலபுலங்களின் பதிவுப்புத்தகம். அளவு-க்-கல் °kal, Stone pillar for measuring the height of water in tanks; நீரேற்றங்காட்டும் கற்றூண். அளவு-கருவி °karuvi, Instrument of measurement; பரப்பு, பாரம் ஆதியவற்றை அறியும் எத்தனம். அளவு-காரன் °kāraṉ, One who measures paddy &c; surveyor; தானியம், நிலம் ஆதியன அளப்போன். அளவு-கூடை °kūḍai, Basket of certain capacity for measuring rice; அரிசியளக்கும் கணக்கான கூடை. அளவு-கோல் °kōl, measuring rod, foot-rule; அளக்குங் தடி, அடிமட்டம். அளவு-நாழி, °படி °nāḻi, °paḍi, Standard measure; முத்திரைப்படி. அளவு-படுத்த °paḍutta, To limit; வரையறுக்க. அளவு-படை °paḍai [+paḍ-ai, 'army'] Small army; சிறுசேனை (சூ. 2, 4, 7). அளவு-பைமாஷ் °paimāṣ [+U. paimāyaṣ, 'land survey'] Record of the survey of fields; வயல் அளந்து பதிவு செய்கை. அளவு-வர்க்கம் °varkkam, An ancient tax on measures of capacity; கொத்து முதலியவைகளுக்கு ஒரு பழைய வரி. (S. I. I. ii, 247).

K., M. aḷavu; Tu. ala.

அளவை aḷavai, n. [id+(v)-ai[1]] 1. Measure, of which four kinds are mentioned in ancient literature, viz: (1) எண்ணல், number; (2) எடுத்தல், weight; (3) முகத்தல், measure of capacity; (4) நீட்டல், linear measure (நன். 290). Standard of measure; அளவைக்கருவி. 3. Sign, indication; அறிகுறி. 4. Media of acquiring correct knowledge, which are said to be three, viz: (1) காண்டல், perception; (2) கருதல், inference; and (3) உரை, testimony. See also aḍḍa-p-piramāṇam (p. 40). 'அட்டப்பிரமாணம்' பார். 5. Logic; தருக்க சாத்திரம். 6. Limit; எல்லை (கந்தபு. உமைகவி. 49). 7. Time, opportunity; சமயம். 8. Day; நாள் (சூடா). Nature; தன்மை: "அதன்பய மெய்திய அளவை மான" (பொருந. 92). —CPDS அளவை-ஆகுபெயர் °ākupeyar, Metonymy in reference to number, weight &c; எண்ணல் முதலிய அளவைப் பெயர் பொருளுக்கு ஆகி வருவது. (நன். 290 உரை). அளவை-க்-கால் °kāl [+kāl, 'instrument of dry measure'] A grain measure; மரக்கால். அளவை-நூல் °nūl, Logic; தருக்க சாத்திரம் (குறள், 725 உரை). அளவை-வடிவம் °vaḍivam, Diagram; உருவத்தைக் காட்டும் கோட்டம். அளவை-வாதம் °vātam [+S. vāḍ-a, 'doctrine,' fr. vad, T. ōt-u — 'வாதம்[2]'] Doctrine that truth must be established through Logical proof; தர்க்க நியாயங்களால் முடிந்த முடிபே உண்மை என்னும் மதம் (மணி. 29, 42 உரை).

அளக்கர் aḷakkar, n. [prob. fr. aḷ, 'thick'. Cf. aḷam, aḷḷal—<அள் = செறிவு. ஒப். அளம், அள்ளல்,] 1. Mud, mire; சேறு. 2. Salt pans; உப்பளம். 3. Sea; கடல். 4. Long road; நீள்வழி. 5. Earth; பூமி. 6. The third nakṣatra; கார்த்திகை நட்சத்திரம்.

M. aḷakkar, 'sea'.

அளக்காய் aḷakkāy, n. [Cf. aḷakar—ஒப். அழுகர்] White madar; வெள்ளெருக்கு.

அளகபேதம் aḷakapētam, V. aḷaka-vētam; =அழுக-வேதம்.

அளகம்[1] aḷakam, n. [rt. aḷ+-akam[6]—அள் + -அகம்[6].] Porcupine's quill; பன்றிமுள்.

அளகம்[2] aḷakam, n. [prob. fr. aḷam[2] —ஒப் அலம்[2]] Water; நீர்.

அளகம்[3] aḷakam, n. [S. alaka <T. allu — அல்லு-தல் பார்] 1. Woman's hair; பெண் மயிர். 2. Coil; மயிர்க்குழற்சி. —CPDS அளக-பந்தி °panti [+S. paṅkti, 'set of five, row' — பந்தி[2]] Orderly arrangement of woman's hair; கூந்தலி னொழுங்கு: "கல்லார் அளக பந்தி யென விருண்ட" (இரகு. திக்கு. 12). அளக-பாரம் °pāram [S. bhār-a, 'weight', fr. bhri, T. poṟ-u] Mass of woman's hair; கூந்தற் றொகுதி. அளக-வல்லி °valli [+ valli, 'the bent thing'? <vaḷ-ai] Hair-hook connecting the ear with the hair; மயிர்மாட்டி.

M. aḷakam; Tu. alakalu, 'curls'.

அளகம்[4] aḷakam, =aḷakkāy; =அளக்காய்.

அளகளப்பு aḷakaḷappu, V. aḷav'aḷappu; அளவ'ளப்பு.

அளகபுரி aḷakapuri, V. aḷakai; = அளகை.

அளகாரம் aḷakāram, for alaṅkāram; =அலங்காரம்.

அளகு aḷaku, n. [prob. fr. uḷ, 'pointed, short' + -aku, for -avu, 'what has a short beak' (Kartikeya Mudlr., p. 110) அள் + -அகு (=அவு) குறிய சொண்டு உடையது?] 1. Hen of owl, fowl or peacock; கோட்டான், கோழி, மயில் இவற்றின் பெண் (தொல். பொ. 610, 611). 2. Cock; சேவல் (திருவிளை. அருச். 34). 3. The third nakṣatra; கார்த்திகை நட்சத்திரம்.

அளகை aḷakai, n. Kubera's city; குபேரன் நகர். அளகா'திபன், அளகே'சன், அளகையாளி aḷakā'tipaṉ, aḷakē'saṉ, aḷakai-āḷi Kubera; குபேரன்.

அளத்தி aḷatti, V. aḷam; அளம் பார்.

அளத்தியம் aḷattiyam, n. [aḷam?—அளம்?] 1. Soap; சவர்க்காரம். 2. A prepared arsenic; சில பாஷாணம்.

அளத்து aḷattu, adj. [aḷam[1] + -attu[2]] Belonging to saline soil; அளத்தைச் சார்ந்த. —CPDS அளத்து-நிலம் °nilam, =aḷar-nilam; =அளர்-நிலம். அளத்துப்-பச்சை, °பூசை, °paccai, °pūcai, Sea-side Indian saltwort; மருக்கொழுந்துச் சக்களத்தி. அளத்து-ப்-புல் °pul, Kind of grass; மூலித்துப் புல். அளத்து-ப்-பூளை °pūḷai, Species of wool-plant; செடிவகை.

அளப்பம், அளப்பு ஆதியன aḷappam, aḷappu &c. V. aḷa; அள-த்தல் பார்.

அளப்புக்கு aḷappukku, n. Balloon vine; முடக்கொற்றான்.

அளபு aḷapu, V. aḷa; அள-த்தல் பார்.

அளம்[1] aḷam, n. [fr. aḷ, 'thick, muddy' +-am[3]. Cf. aḷḷal—அள், 'சேறுள'] 1. Density, closeness; செறிவு. 2. Saltpan; உப்பளம். 3. Saline soil; களர் நிலம். 4. Maritime tract; நெய்தனிலம். —CPD அளம்-பற்ற °paṟṟa, To wear away through action of salt; உப்புப் பூக்க.

Tel., M. aḷam; Sinh. alamba. (Codrington's Glossary).

அளத்தி aḷatti, n. [id. + -attu-+ -i[4]] Woman of the maritime tracts; நெய்தனிலத்துப் பெண்.

அளர் aḷar, n. [for id., m /r] 1. Saltishness; உவர். 2. [cf. alar] Water; நீர். —CPD அளர்-நிலம் °nilam, Saline soil; களர் நிலம்.

அளவர் aḷavar, n. [id.] Persons belonging to the caste of salt-manufacturers; உப்பமைப்போர் (கந்தபு. ஆற்று. 30).

-அளம்[2] -aḷam, suff. [aḷ + -am[1]] A stem-suffix in the sense of 'what is connected with'; சார்ந்தது எனும் பொருளுள்ள ஒரு விகுதி. உ-ம்: சீதளம்.

அளமரு-தல் aḷamaru, =alamaru; அலமருதல்.

அளர்க்கம் aḷarkkam, n. [also written alarkkam — அலர்க்கம்] Three-lobed nightshade; தூதுளை (தைலவ. தைல. 16).

அளவம் முதலிய aḷavam &c., V. under aḷá; அளத்தல் பார்.

அளவன்² aḷavaṉ, n. A prepared arsenic; சோரபாஷாணம்.

அளவினார் aḷaviṉār, n. Croton; சேர்வாளம்.

அளவு²-தல் aḷavu, 5 v. intr. [fr. aḷ-ai¹, -ai/-avu, which is a double v. det., i. e.: -a⁸ + (v) -u⁵— < அளை-தல்] 1. To be blended, mixed; கலப்புறுதல் (தொல். பொ. 55 உரை). 2. [v. tr.] To inquire after one's welfare; சேமம் உசாவுதல் (தொல். பொ. 146).

அளவை aḷavai, V. under aḷ-á; அளத்தல் பார்.

அளறு¹ aḷaṟu, n. [rt. aḷ + -aṟ-u³— அள் = இளகியது] 1. Liquid of thick consistency; குழம்பு (கல்லா. 26, 20). 2. Soft mud; குழை சேறு (பிங்.) 3. Red ochre; காவிக்கல் (திவ். திருப்பா. 14, வியாக்.). 4. Hell; நரகம் (குறள். 919). 5. Water; நீர் (பரிபா. 8, 93).—CPD அளறு-பட¹ °paḍa, To turn into mire; சேறாக.

அளறு²-தல் aḷaṟu, 5 v. intr. [for alaṟu, l/ḷ— = அலறு-தல்] 1. To be mauled, shattered; சிதறி வெடித்தல். 2. To be split, broken, bruised; பிளத்தல், நெரிதல்.—CPD அளறு-பட² °paḍa, To be over-thrown; நிலைகலங்க (தேவா. 1026,8).

அளாவு-தல் aḷāvu, 5. v tr. [extended form of aḷavu² = அளவு-தல்] 1. To stir; கையால் அளைதல்: "சிறுகையளாவிய கூழ்" (குறள். 64). 2. To reach; எட்டுதல், "விசும்பினையளாவுமன்னவன் கோயில்" (கந்தபு. மூவாயி. 1). 3. To hold social intercourse; கூடிக்குலாவுதல். 4. [v. intr.] To be mingled; கலத்தல்: "பாலொடளாய நீர்" (நாலடி. 177).

அளாய்குளாய் aḷāy-kuḷāy, n. [prob. id. + kuḷāy, echo word] Hasty action; பரபரப்பான செய்கை: "அளாய்குளாயப் போகுமது" (ஈடு. 9,1,9).

அளி¹-தல், அளித்-தல் áḷi, aḷí, v. [rt. aḷ + v. det. -i, 'to be pressed together, mingled', 'to take out in quantities'. Two forms: one with accent on the first and the other on the 2nd. syll. Other forms: aḷ-a, aḷḷ-u, aḷ-ai &c— √அள் + -இ¹, 'செறித்தல், கலப்புண்ணல், வெளியெடுத்தல்.' அளிதலும் அளித்தலுமாம். பிறவுரு: அள, அள்ளு, அளை] I [áḷ-i அளி-தல்] 4. v. intr. 1. To mix; கலத்தல் (கம்பரா. வரைக். 154). 2. To be overboiled, to become mellow. [Cf. aḷ-i]; குழைந்துபோதல், அறக் கனிதல்: "அளிந்ததோர்கனியே" (திருவாச. 37, 4). 3. To be attached; பிரியமாயிருத்தல்: "மக்கியளிந்த கடுவினையேனோக்கி" (திவ். இயற். 3, 58). II [aḷ-í —அளித்-தல்] 11 v. tr. 4. To crowd together; செறித்தல். (பிங்.). 5. To give; கொடுத்தல். 6. To express, speak; சொல்லுதல் (கல்லா. 13). 7. To yield, beget; ஈனுதல் (பாரத. சம்பவ. 23). 8. To create; சிருட்டித்தல் (கந்தபு. ததீசியுத். 9). 9. To protect, nourish; காத்தல் (பிங்.) 10. [v. intr.] To create desire; விருப்பமுண்டாக்குதல்: "அளித்தமிழின்ற வேந்தன்" (சீவக. 192). 11. To be gracious; அருள்செய்தல் (திருப்பாண். 210). 12. To remove weariness; சோர்வுநீக்குதல் (சீவக. 1622).

M. aḷi, 'to be over-ripe'; K. aḷi, 'to measure'; Mit. ar, 'to give'.

அளி aḷi, n. [id.] 1. Gift; கொடை. 2. Civility; உபசாரம் (குறள். 390 உரை). 3. Clemency, grace; கிருபை, அருள் (தொல். பொ. 247 உரை). 4. Love; அன்பு (இரகு. நாட்டு. 1). 5. Coolness; குளிர்ச்சி (பரிபா. 3, 67). 6. Rain; மழை (ஐங்குறு. 423). 7. Desire; ஆசை (கம்பரா. வரைக். 83). 8. Poverty, wretchedness; எளிமை (நாலடி. 15). 9. Unripe fruit; காய். அளித்து, அளிது aḷi-ttu, aḷi-tu, What deserves pity; அளிசெய்யத் தக்கது.

அளியன் aḷiyaṉ, n. [id. + (y) aṉ⁵] 1. Gracious person, benefactor; தயையுடையோன். 2. One who deserves protection; காக்கப்படத்தக்கவன் (திருமுரு. 284).—CPD அளிந்தார் aḷi-nt-ār, Loving persons; அன்புடையோர் (பழ. 182).

அளி² aḷi, n., [for aḻi = அழி(7)] 1. Crib for straw; மாட்டுக் காடி. 2. Fence, lattice; கிராதி. அளிப்-பாய்ச்ச °pāy-cca. To construct a lattice; கிராதியிட.

அளி³ aḷi, n. [prob. = ali¹ (5) — அலி¹ (5) பார்] 1. Bee; வண்டு (திருவாச. 6, 10) 2. Honey; தேன். 3. Sprituous liquor; மது. 4. Ringworm shrub; வண்டுகொல்லி.

S. ali.

அளிகம்¹ aḷikam, V. alikam; = அலிகம்.

அளிகம்² aḷikam, n. Emblic myrobalan; நெல்லி.

அளிந்தம் aḷintam, n. [prob. corrupted fr. eḷutam < eḷutakam, 'any thing projecting'] Platform at the entrance to a temple; கோபுரவாயிற்றிண்ணை.

S. alinda.

அளிம்பகம், aḷimpakam, n. [?aḷi—தப் அளி] 1. Frog தவளை. 2 South Indian Mahua; இருப்பை. 3. Pollen of lotus flower; தாமரைப் பூந்தாது. 4. [Cf. S. aḷi-paka] Cuckoo; குயில்.

S. alimaka, alimpaka, alimbaka.

அளிலாமயம் aḷilāmayam, n. [?aḷil+S. āmaya, 'disease', fr. √am] Rheumatism; வாதரோகம்.

அளிகம் aḷikam, n. [S. alikos. Uhlenbeck suggests rt. *ole, 'crooked'. Cf. T. uḷ-al. Cf. aḷikam p. 153 which is perh. better derived this way—வளைந்தது?] 1. Forehead: நெற்றி. 2. Dislike; வெறுப்பு. 3. Falsehood; பொய்.

அளீகதை aḷīkatai, n. (S. alīkatā] Lie; பொய்.

அளுக்கு-தல் aḷukku, 5 v. intr. [fr. alku. Cf. olku—< அல்கு-தல். ஒப். ஒல்கு-தல்] To be frightened; அஞ்சுதல்.

M. aḷukku; Tel. eluku, alku; K. aḷku, aḷugu.

அளுக்கு aḷukku, n. [id.] 1. Timidity, fear; பயங்கொளித்தனம், அச்சம். 2. Noise; சத்தம். —CPD அளுக்காமை °ā-mai, Intrepidity, courage; பயமின்மை, சௌரியம்.

அளுங்கு aḷuṅku, V. aḻuṅku; = அழுங்கு.

அளேசுவெப்பம், °வெப்பு aḷēcuveppam, °veppu, n. Atis; அதிவிடயம்.

அளேரியம் aḷēriyam, n. [cf. the following] Onion; வெங்காயம்.

அளேறுகம் aḷēṟukam, V. aḷarkkam; = அளர்க்கம்.

அளை¹-தல் aḷai, 4. v. tr. [rt. aḷ, 'to press together, to mingle' + v. det, -ai(=e) Other forms: aḷḷ-u, aḷ-a, aḷ-i, & c — √அள் + -ஐ⁴, 'செறித்தல், கலத்தல்.' பிறவுருவங்கள்: அள்ளு, அள, அளி ஆகியவை.] 1. To embrace; தழுவுதல் (திருவாச. 49, 4). 2. To macerate, stir; அழாவுதல் (கலித். 68). 3. To mingle; கலத்தல் (கம்பரா. பள்ளி. 16.) 4. To wear; சூடுதல்: "மலரிற் அளைக்கான்" (குறள். 1118 மணக்.). 5. To enjoy; அநுபவித்தல் (சீவக. 1551).

6. [*v. intr.*] To be mixed; கூடியிருத்தல் (தொல். பொ. 140). 7. To wallow; புரளுதல். 8. [Cf. *uḷ-ai*] To suffer from gripes; வயிறு வலித்தல்.

M. *aḷekka*, 'to dissolve'.

அளைச்சல் aḷaiccal, *n.* [id. + *(cc) -al*[7]] Dysentery; வயிற்றுளைவு.

அளைவு aḷaivu, *n.* [id. + *(v) -u*[4]] 1. Becoming soft, as rice by over-cooking; சோறு முதலியன குழைகை. 2. Mingling; கலத்தல்.

அளை[2] aḷai, *n.* [*aḷ*[1], 'thick' + *-ai*[7] — அள்[1] + -ஐ[7], 'தடித்தது'] 1. Curdled milk; தயிர் (ஐங்குறு. 393). 2. Butter; வெண்ணெய் (சேதுபு. விதும. 75). 3. Butter-milk; மோர் (புறம். 19, 3).

K., M. *aḷa;* K. *aḷe.*

அளை[3] aḷai, *n.* [prob. fr. *aṟ-ai*. Cf. *vaḷ-ai*—அறை?] 1. Rats'hole, any hole in the ground; புற்று. 2. Hollow in a tree; பொந்து. 3. Cave; குகை. உ-ம்: "அளைச் செறி இரும்புலி" (சீவக. 1851). —CPDS அளை-ய்-எடுக்க °eḍukka, To burrow; வளை தோண்ட. To grow hollow; புரை வைக்க. அளை-மறி-பாப்பு-ப்-பொருள்-கோள் °maṟi-pāppu-p-poruḷ-kōḷ [+ *maṟ-i*, 'turn back' + *pāmpu*, 'snake' + *poruḷ-kōḷ*, "mode of constructing" — 'பொருள்கோள்' பார்] Construction of a verse in which the sense begins at the end and goes back to the beginning; பாட்டின் ஈற்றில் நின்ற பொருளை இடையிலும் சொல்லின் முதலிலும் வைத்துப் பொருள் கொள்ளும் முறை (நன். 417). அளை-வைக்க °vaikka, = aḷai-y-eḍukka; = அளையெடுக்க.

M., K. *aḷa;* Tu. *aḷavuni;* Sinh. *äla*, 'small natural or artificial stream' (Codrington: Glossary) Geiger's equation with S. *ali*, not likely.

**அற்** AṞ, prim. rt. [*a*[2] + format. *ṟ* — அ[2] + ற்] To press down, diminish, cut asunder. Combined with the v. det. *-u*, *i* and *-ai* [= *e*] this root yields such forms as *aṟ-u*, *aṟ-i*, *aṟ-ai* &c. Cf. *ar;* அடக்கியிருத்தல், குறைத்தல், வெட்டிப் பிரித்தல் ஆகிய பொருள் கொண்ட ஒரு தமிழடி. -உ, -இ, -ஐ [= எ] என்னும் வினைக்குறிகள் அணைந்து அறு, அறி, அறை ஆகிய வினைச் சொற்களாகும். ஒப். அர்.

Cf. Su. *ar*, *ar*, *ara*, 'plough'; Hit. *ark*, 'cut off, mutilate'; Etr. *ar*, 'plough'; Gr. *aroō;* L. *arō;* Got. *arjan;* Lit. *arti;* Arm. *araur*. These words are also connected with T. *ēr;* q. v. The S. *ris* may be an extended form of *aṟ*. So too Gr. *ereikō*. Walde—P. groups these and a host of other IE cognates under the hypothetical root *1 rei*.

-அற்க -aṟka, *part.* [*-al*[4] + *-ka*, a strengthened form of *-a*[12] in the sense of *inf.* See Caldwell p. 474] A prohibitive particle as in *cey-y-aṟka*, Do not; எதிர்மறை ஏவலைக் குறிக்கும் ஒரு கடைநிலை. உ-ம்: "செய்பற்க".

அற்கத்தி aṟkatti, *n.* Long pepper; திப்பலி.

அற்கம்[1] aṟkam, *n.* White basil; வெண்டுளசி.

அற்கம்[2] aṟkam, *n.* [fr. *arukku*[1] — < அருக்கு-தல்] 1. Price; விலை. 2. Self-control; தன்னடக்கம் (திவ். திருவாய். 6, 5, 4). 3. Rules of worship; பூசாவிதி.

அற்கல் aṟkal, See under *aṟku;* அற்கு-தல் பார்.

அற்களம் aṟkaḷam, *n.* [V. *arkkalam;* = அர்க்கலம்] 1. Bolt; கதவின் தாழ். 2. Billow; பேரலை.

அற்கன் aṟkaṉ, V. *arukkaṉ;* = அருக்கன்.

அற்காரொட்டகம் aṟkār'oḍḍakam, *n.* [Pers. *harkārā*, 'post' + *oḍḍakam*, 'camel'] Camel carrying the mail; தபாற் கொண்டுபோகும் ஒட்டகம்.

அற்கி aṟki, *n.* A pasture weed; நரித் தாமரை.

அற்கு-தல் aṟku, 5 *v. intr.* [< *alku*, *l/ṟ* — = அல்கு-தல்] 1. To reach; அடைதல். 2. To be permanent; நிலைபெறுதல். உ-ம்: "அற்கா வியல்பிற்றுச் செல்வம்" (குறள் 333).

அற்கல் aṟkal, *n.* [id.] 1. Permanency; நிலைபேறு. 2. Knowledge; அறிவு.

அற்காமை aṟkāmai, *n.* [id. + *-a-*[9] + *-mai*[1]] 1. Instability; நிலையாமை. 2. Ignorance; அஞ்ஞானம்.

அற்கெந்தி aṟkenti, *n.* [perh. corrupted fr. *artta-cantiraṉ*] The yogic centre called artta-cantiran; அர்த்தசந்திரன் எனும் யோகஸ்தானம் (தத்துவப். 139).

அற்சிரம், அற்சிரை aṟciram, °rai, V. *acciram;* = அச்சிரம்.

அற்பகதம் aṟpakatam, *n.* [Cf. *aṟparuttam;* ஒப். அற்பருத்தம்] Plantain; வாழை.

அற்பசி aṟpaci, V. *aippaci;* = ஐப்பசி.

அற்பணம் aṟpaṇam, V. *arppaṇam;* = அர்ப்பணம்.

அற்பத்திரம் aṟpattiram, V. *aṟpa-pattiram;* = அற்ப-பத்திரம்.

அற்பம் aṟpam, *n.* [S. *alpa*, prob. < T. *aruppam* — < அருப்பம்] 1. What is insignificant, small; சிறிது. 2. Vileness; இழிவு. 3. Dog; நாய். —CPDS அற்பா'சமனம், °சனம் °ācamaṉam, °caṉam [+ S. *ā-cam-ana*, 'rinsing the mouth', fr. *cam*. Cf. T. *capp-u*] Urination among Brahmans; சிறுநீர்விடல். அற்பா'யு, °ஆயுசு °āyu, °°cu [+ S. *āyu*, 'age'. Cf. T. *āy*, 'to diminish'] Short life; குறைந்த வாழ்நாள். அற்ப-க்-கியன் °kiyaṉ [+ S. *jña*, 'one who knows', fr. *jñā*. Cf. T. *niṉ-ai*] Man of little knowledge; சிற்றறிவுடையோன். அற்ப-கந்தம் °kantam [+ *kant-am*, 'fragrance'] Red lotus; செந்தாமரை. அற்ப-கேசி °kēci [+ S. *kēśa*, < *kēsara* < T. *cikaram*, 'tuft of hair'] Sweet flag; வசம்பு. அற்ப-சங்கை °caṅkai [+ S. *saṅ-khyā*, 'reckoning' i. e. number one — ஒன்றுக்குப் போதல்] Passing urine; சிறுநீர் விடல். அற்ப-சுருதி °curuti [+ *śru-ti*, 'a thing heard, the Veda', fr. *śru*, akin to T. *kēḷ*] The karmakāṇḍa of the Vedas; வேதத்தின் கன்ம காண்டம் (சட்டநி. 100). அற்ப-சொற்பம் °coṟpam [+ S. *svalpa*, prob. fr. T. *aruppam*] Trifling thing; சின்னக் காரியம். அற்ப-த்-தனம் °taṉam [+ *taṉ-am*, 'state'] Meanness; இழிகுணம். அற்ப-பத்திரம் °pattiram [+ S. *pott-ra*, 'feather, leaf' fr. *pat*. Cf. T. *paṟ-u*] Sweet basil; துளசி. அற்ப-பதுமம் °patumam, Red lotus; செந்தாமரை. அற்ப-புத்தி °putti [+ S. *buddh-i*, 'intelligence', fr. *buddh*. Cf. T. *puḷ-u*] Low wit, silliness; அறிவுக் குறைவு, மூடத்தனம். அற்ப-மாரிசம், °மாரிடம் °māricam, °°iḍam [+ S. *mārṣa*] A species of amaranth; சிறுகீரை.

அற்பதை aṟpatai, *n.* [S. *alpa-tā*] Meanness; இழிதகவு.

அற்பன் aṟpaṉ, *n.* [id. + *-aṉ*[5]] Ill-bred fellow; கீழ்மகன்.

அற்பரம் aṟparam, *n.* [Cf. S. *talpa*] Bed, mattress; மக்கட்படுக்கை, மெத்தை.

அற்பருத்தம் aṟparuttam, *n.* Plantain; வாழை.

அற்பிதம் aṟpitam, V. *arppitam;* = அர்ப்பிதம்.

அற்பு arpu, *n.* [for *an-pu*— = அன்பு] Affection, love; பற்றுதல், சிநேகம். —CPD அற்பு-த்-தளை °talai, Bond of friendship; சிநேகபந்தம்.

அற்புதம்¹ arputam, V. *arpputam;* = அர்ப்புதம்.

அற்புதம்² arputam, *n.* [S. *a-dbhu-ta*, 'not open to trickery' (Uhlenbeck) fr. *dabh*. Cf. T. *tapp-u*. Grassmann derives it fr. *ati-bhū-ta*] 1. Marvel, miracle; அதிசயம், புதுமை. 2. (Poet.) Sentiment of wonder; நவரசத்தொன்று. 3. Beauty; அழகு. 4. Emptiness; குனியம் (சி. போ. பா. 9, 2, வெண். 1). —CPDS அற்புதா'கமம் °ākamam, [+S. *ā-gam-am*, 'religious work'] The book of Revelation in the New Testament; வெளிப்படுத்தல் அல்லது காட்சியாகமம். அற்புத-உருவகம் °uruvakam [+*uru-v-akam*, 'simile'] (Rhet.) A kind of mixed metaphor; கலந்து வரும் உருவகம். அற்புத-உவமை °uvamai [+*uva-mai*, 'simile'] (Rhet.) A comparison of what cannot take place; அசம்பாவிதமான ஒன்றை உவமித்தல். அற்புத-க்-கண் °kaṇ, (*Nāṭya*) Rolling of the eyes by a dancer indicating wonder; அதிசயக் கண்வகை (பரத. பாவ. 95). அற்புத-மூர்த்தி °mūrtti [+S. *mūrtt-i*, 'natural form, person', fr. *murch*. Cf. T. *muṟ-uk-u*] The supreme Being; கடவுள். அற்புத-வாதம், வாயு °vātam, °vāyu [+S. *vāt-a*, *va-y-u*, 'windiness', fr. *vā*, T. *ūt-ai*] A kind of convulsion; இசிவு நோய்வகை.

அற்புதன் arputan, *n.* [id. + *-an*⁵] 1. God; கடவுள். 2. Artificer; கம்மாளன் (சூடா.).

அற்ற- arra-, *adj.* [fr. *aṟ-u* q. v.—<அறு-தல்] 1. Finished, lost; முடிந்த. —CPDS அற்ற'றுதி °aṟuti, Complete separation; முழுதும் சம்பந்தமில்லாமற் போதல். அற்ற-காரியம் °kāriyam, Matter settled upon; தீர்ந்த விஷயம் (சிலப். 17, முன்னிலைப். 2 உரை). அற்ற-குற்றம் °kuṟṟam, Loss, damage; நஷ்டம். அற்ற-பேச்சு °pēccu, The last word in a bargain; முடிவான கேள்வி.

அற்றம்¹ arram, *n.* [id. + *-am*²] 1. Destruction; அழிவு (குறள், 421). 2. Loss, harm; கேடு (சீவக. 455). 3. Suffering; வருத்தம் (தொல்.பொ. 150). 4. Poverty; வறுமை (நாலடி. 78). 5. A little; ஒரு சிறிது. 6. Separation; விலகுகை. 7. Discontinuity; இடைவிடு (சீவக. 565). 8. Relaxing; சோர்வு (குறள் 118, 6). 9. Time of being away; நீங்கின சமயம் (கம்பரா. திருவவ. 41). 10. Opportunity; அவகாசம். 11. Untruth; பொய் (சீவக. 1764). 12. Shame; அவமானம் (குறள், 980). 13. That which should be concealed; மறைக்கத்தக்கது (மணி. 3, 139). 14. Secrecy; மறைவு. 15. Fear; அச்சம். 16. Termination; முடிவு. 17. Truth; உண்மை. —CPD அற்ற-ப்-பட °paḍa, To be forgetful; மறந்துபோக. To be unavailable; இல்லாது போக.

அற்றவன் arravaṉ, *n.* [id. + *av-aṉ*²] One who has renounced all; உலகப்பற்றை வெறுத்தவன் (திருவாலவா. கை மி. 29).

அற்றார் arrār, *n.* [id. + *-ār*=*avar*] 1. Those who have dedicated themselves to the service of God; கடவுட் சேவைக்குத் தம்மை அர்ப்பணஞ் செய்துவிட்டோர் (தேவா. 396, 10). 2. Destitute persons; பொருளில்லாதவர் (குறள், 226).

அற்றுப்போ-தல் arru-p-pō, *v. intr.* [*aṟṟ-u*, *ple.* fr. *aṟ-u*+auxiliary verb: *pō*, past tense *pōṉēṉ*]. 1. To cease completely; தீர்ந்துபோதல். 2. To be severed; இடையறுதல். 3. To have complete possession; முழுதுங் கைவசம் (Coll.).

அற்றம்² arram, *n.* [Cf. *aṟpam*] Dog; நாய்.

அற்று¹ arru, *v.* [defective *v.* only in the 3rd pers. *sing.*, fr. *aṉṉ-atu*, 'of such a nature' — <அன்னது] To be like, of the same kind; அதுபோன்றது. உ-ம்: "பாலொடு தேன் கலந்தற்றே". Also as a *n.*: One of such quality; அத்தன்மையது (கந்தபு. உருத்திரர்கே. 6). As *adv.*: A particle of comparison; ஓர் உவமவுருபு (தொல். பொ. 286, உரை).

அற்றேல் arrēl, *conj.* [*aṟṟu*+*eṉil* —அற்று+எனில்] If so; அப்படியாயின்.

-அற்று-² -arru-, *part.* [prob. fr. *atu*. Cf. *-attu*² and தொல். எழுத். 119] An expletive chiefly employed in declining certain neuter plurals, e. g. அவற்றை = அவைகளை; ஒரு சாரியை (நன். 244).

அற்றூரம் arrūram, *n.* Tree turmeric; மரமஞ்சள்.

அற்றை¹ arrai, *adj.* [for. *aṉṟai*— = அன்றை] 1. Of that day; அந் நாட்குரிய. உ-ம்: "அற்றைத் திங்கள்" (புறம். 112). 2. Daily; அன்றன்றைக் குரிய. 3. Little, trifling; அற்பமான. [*adv.*] On that day; அன்றைத்தினத்தில். —CPDS அற்ற'ற்றை arr'arrai [*aṟṟai*+*aṟṟai*] Daily; அன்றன்றன்ன. அற்றை-க்-கூலி °kūli, Daily wages; நாட்சம்பளம். அற்றை-க்-கொத்து °kottu [+*koṭṭ-u*,'measure'] Daily wages in kind; தினமுந் தானியமாய்க் கொடுக்குங் கூலி. அற்றை-நாள் °nāḷ, That day; அன்று. அற்றை-ப்-படி °paḍi [+*paḍ-i*, 'a measure'] Daily allowance; பிரதிதினமும் உணவுக்காக அளிக்கப்படுவது. அற்றை-ப்-பரிசம் °paricam [+*par-i-cam*, 'gift'—'பரிசம்²'] Daily hire of a harlot; விலைமாதரின் நாட்கூலி (சிலப். 5, 51 உரை). அற்றை-ப்-பிழைப்பு °piḻaippu, Living from hand to mouth, poor living; அன்றன்று செய்யும் சீவனம், மிடிமை. அற்றை-வாக்கியம் °vākkiyam, (Astr.) The moon's tabular longitude; வானசாஸ்திர கணிதத்தில் சந்திரனின் நிரக்ஷரேகை.

அற்றை² arrai, *n.* [fr. *aṟ-u*, 'what is cut into small parts'—<அறு] Meanness; சிறுமை, இகழ்ச்சி. —CPD அற்றைக்-காரியம் °kāriyam, A little thing; சிறு விஷயம்.

அற-, அறவே ara-, aravē, *adv.* & *adj.* [fr. *aṟ-u*, 'to cut'—<அறு] 1. Wholly; முழுதும் (குறள், 465). 2. Intensely, excessively; மிகவும் (கந்தபு. காப்பெய்பு. 15). 3. Thoroughly; செவ்வையாக. 4. Clearly; தெளிவாக (புறம். 224). 5. Without; இல்லாதொழிய. உ-ம்: "சந்தேகமற". —CPDS அற-வ்-ஊத °ūta, To refine as gold, sublimate as chemicals; புடமிட. அற-க்-கூர்மை °kūrmai [+*kūr*, 'sharp'] Excessive sharpness; மிக்ககூர் (Prov.) "அறக் கூர்மை மழுமொட்டை". What is too sharp becomes blunt. அற-க்-கொடியோன்¹ °koḍiyōṉ [+*koḍ-iya*, 'cruel' +*-ōṉ*] Extremely cruel man; மிகு துட்டன். அற-க்-கொள்ள °koḷḷa, To receive in full; முழுதும் பெற (S. I. I. iii, 16). அற-ச்-செட்டு °ceḍḍu +*ceḍḍ-u*, 'traffic'] Parsimony; கடும் சிக்கனவு (Prov.) "அறச்செட்டு முழு நஷ்டம்", Excessive frugality brings ruin. அற-த்-தீர்ந்தவன் °tīrntavaṉ, [+*tīr*, 'to be accomplished'] Capable man; வல்லவன். அற-ப்-பேச °pēca, To state decisively; முடிவாய்ச் சொல்ல. அற-ப்-பாட °pāḍa, To sing imprecations; சாபக்கன் சொல்லிப் பாட. அற-ப்-பாடுபட °pāḍu-paḍa, To work hard; கடுமையாய் உழைக்க. அற-மிகுந்தால் °mikuntāl [+*mik-u*, 'to exceed'] At most, by any means; எவ்விதமும். அற-முறியப்-பார்க்க °muṟiya-p-pārkka. To seek to finish completely; முற்றுக முடிக்கத் தேட.

அற முறுக்க °murukka, To murmur, முறுமுறுக்க. அற-விட[1] °vida, To give up completely; முற்றும் கைவிட (ஞானவா. மாறுவே. 17). To sell off; விற்க (சடு. 3, 6, 9). அற-விலை °vilai, Absolute, unconditioned sale; ஒரே விலை (திவ். திருவாய். 8, 1, 10). அற-வெட்டை °veḍḍai, Great heat of summer; கோடைகாலத்து மிகு வெப்பம். அற-வைப்பு °vaippu, Calcination; பற்பமாக்குதல். Refining; புடமிடல்.

Cf. Sinh. *āra*, 'besides'.

அறக்கப்-பறக்க arakkap-parakka, *adv.* [*arakka* echo-word for *par-akka*, 'to fly'] 1. With might and main; விழுந்து விழுந்து. (Prov.) "அறக்கப் பறக்கப் பாடுபட்டும் படுக்கப் பாய் இல்லை". With all one's herculean efforts one has no mat to sleep on. 2. In great haste; மிகு விரைவாக.

அறக்கப்-பாலை arakkap-pālai, *n.* Oval-leaved China root; திருநாமப்பாலை.

அறக்குளா arakkuḷā, V. *arkkuḷā*; = அர்க்குளா.

அறக்கப்பிளப்பி arakkappiḷappi, V. *arak-kappālai*; = அறக்கப்பாலை.

அறங்கடை araṅkaḍai, V. under *aram*; அறம் பார்.

அறங்கை araṅkai, *n.* V. *akaṅ-kai*; = அகங்-கை.

அறசம் aracam, *n.* Brinjal; கத்தரி.

அறசோகணக்கு aracōkaṇakku, *n.* 1. Purple-stalked dragon; காட்டுக் கருணை. 2. Elephant yam; கருணைக்கிழங்கு.

அறணை araṇai, *n.* Purple-stalked dragon; காட்டுக்கருணை.

அறதனம் aratanam, *n.* [Cf. S. *miruta-pāṣāṇam*] A mineral poison; மிருதபாஷாணம்.

அறபு arapu, *n.* [U. *arab*] Arabic; அரபி பாஷை.

அறம் aram, *n.* [*ar-u*[1], 'to cut' + *-am*[2]] 'set aside' (as something more excellent) —அறுத்து வேறுக்கி மேன்மைப் படுத்தியது] 1. What is salutary; இதமானது (சிலப். 14, 28). 2. What is fitting; தகுதியானது (இறை. 29, பக். 136). 3. Merit; புண்ணியம் (திருவாச. 1, 52). 4. Religious faith; சமயம் (சீவக. 544). 5. State of life; சீவிய அந்தஸ்து. உ-ம்: இல்லறம், துறவறம், சாறம். 6. Fasting; நோன்பு (சீவக. 386). 7. Religious or moral duty; சமய, சன்மார்க்கக் கடமை. 8. Acts of charity which are classified as thirty two. viz: (1) ஆதுலர்க்குச் சாலை, building houses for the poor; (2) ஓதுவார்க்குணவு, giving maintenance and education; (3) அறுசமயத்தார்க் குண்டி, feeding persons of any of the six religious sects; (4) பசுவுக்கு வாயுறை, feeding cows; (5) சிறைச் சோறு, feeding prisoners; (6) ஐயம், giving alms. (7) தின்பண்டநல்கல், providing for travellers; (8) அறவைச் சோறு, feeding the destitute; (9) மகப்பெறுவித்தல், rendering assistance in child-birth; (10) மகவு வளர்த்தல், nourishing children; (11) மகப்பால் வார்த்தல், giving milk to infants; (12) அறவைப் பிணஞ்சுடுதல், burning or burying the poor; (13) அறவைத் தூரியம், furnishing clothes to the destitute; (14) சுண்ணம், giving chunam to use with betel; (15) நோய் மருந்து, giving medicine to the sick; (16) வண்ணார், paying for washing the clothes of the poor; (17) நாவிதர், the same for shaving; (18) கண்ணாடி, giving a looking glass; (19) காதோலை, giving cadjan or palmyra leaves to women for their ears; (20) கண் மருந்து, giving black paint to women for the eyes; (21) தலைக்கெண்ணெய், giving oil for the head; (22) பெண் போகம், aid to enjoy a woman; (23) பிறர்துயர் காத்தல், redressing injuries; (24) தண்ணீர்ப் பந்தல், keeping water pandals to give drink to the thirsty; (25) மடம், erecting inns or buildings for the reception of Brahmans, pilgrims, &c.; (26) தடம், making tanks; (27) சோலை, planting topes, groves, &c.; (28) ஆவுரிஞ்சு தறி, erecting stakes at which cows may rub themselves; (29) விலங்கிற்குணவு, feeding all kinds of animals; (30) ஏறு விடுதல், giving a bull for covering a cow; (31) விலை கொடுத்துயிர்காத்தல், giving money to save life; (32) கன்னிகாதானம், giving assistance towards marriage. 9. Happiness; சுகம். 10. Goddess of virtue; தரும தேவதை (குறள், 77). 11. Yama; யமன். உ-ம்: "அறத்தின் மைந்தன்" (பாரத. வாரணா. 112). 12. Letters or words in verse supposed to cause harm; தீப்பயனுண்டாக்குஞ் சொல். உ-ம்: "அறம் பாடுதல்". —CPDS அற-வ்-ஆழி °āḻi [+*āḻ-i*, 'sea'] Sea of virtue, God; கடவுள். [+*āḻ-i*, 'wheel'] Wheel of virtue; தரும சக்கரம். அறவாழி-அந்தணன் °°antaṇan, Arugan, Siva, Vishnu; அருகன், சிவன், விட்டுணு. அறவாழி-வேந்தன் °°vēntan, Do; ஷை. அற-வ்-ஆளன் °āḷaṉ [+ *-āḷaṉ*] Virtuous man; தருமவான். அற-வ்-உபதை °upatai [+S. *upa-dhā*, 'test of honesty', fr. *dhā*. Cf. T. *tāḷ*] Test of a minister's honesty and loyalty; அமைச்சரை நியமிக்குமுன் அரசர் செய்யும் பரிசோதனை. அற-வ்-உரை °urai, Religious or moral instruction; தருமோபதேசம் (அருங். 116). அற-வ்-ஓலை °ōlai, Trust deed; இறும்சாசனம் (Insc.). அறக்-கடவுள் °kaḍavuḷ, The god of virtue; தரும தேவதை (குறள், 204 உரை). Yama the judge; யமன் (பாரத. சூடு. 3). அற-க்-கடை °kaḍai, Sin; பாவம் (காஞ்சிப். பதிக. 4). அற-க்-கருணை °karuṇai [+S. *karuṇā*, 'compassion', prob. fr. T. *kaluḷai*] Divine grace, opp. marak-karuṇai; அநுக்கிரக ரூபமான தேவதயை. அற-க்-கழிவு °kaḻivu, Inconsistency with the practice of the world; வழக்கத்துக்கு மாறு (தொல். பொ. 218). அற-க்-களம் °kaḷam, Hall of justice; நீதிமன்றம் (சிலப். 22, 8). அற-க்-கள-வழி °°vaḻi, Theme of agriculture in Purapporuḷ; வேளாண்டொழிலைக் கூறும் புறத்துறை (மாறன. 120 உரை). அற-க்-கள-வேள்வி °°vēḷvi [+*vēḷ-vi*, 'sacrifice'] Vedic sacrifice, opp. marak-kaḷa-vēḷvi; யாககிருத்தியம் (சிலப். 28, 131). அற-க்-கற்பு °karpu, Unobtrusive chastity, opp. marakkarpu; சாந்த நிலையமைந்த கற்பு (சிலப். பதி. 42 உரை). அற-க்-காடு °kāḍu, Burning ground; சுடுகாடு. அற-க்-கொடி °koḍi [*koḍ-i*, 'climber' meton. for 'woman'] Virtuous woman; முப்பத்திரண்டு அறமும் கைவந்தவள். அறக்-கொடி-பாகன் °°pākan [*pāk-aṉ*, 'one who bears as a part'] Siva; சிவபிரான். அறக்-கொடியோன்[2] °koḍiyōn [+*koḍ-i*, 'banner'] God; கடவுள். அறங்-கடை °kaḍai, Sin; பாவம். அறங்கூற்'வையம் °kūr'avaiyam [+ *kūr-u*, 'declaring' + *avai-y-am*, 'assembly'] Court of justice; நீதிஸ்தலம். அற-ச்-சாலா-போகம் °cālā-pōkam [+S. *śālā*, 'hut, hall'. Cf. T. *cār* +*bhoga*, 'enjoyment' fr. *bhuj*. perh. fr. T. *puk-u-tt-u*] Endowment of land for the maintenance of choultries; சத்திரங்களுக்கு விட்ட மானியம். அற-ச்-சாலை °cālai [id.] Alms-house; தருமசாலை (தனிகைப். அகத். 340). அற-ச்-செல்வி °celvi [+*celv-i*, 'lady of rank'] Pārvati; பார்வதி. அற-ச்-சோலை °cōlai, Grove within a temple; கோயிலுட் பூஞ்சோலை. அற-த்-தவிசு °tavicu [+Pers. *tivāsi*] Judge's seat in court; நியாயாதிபதியின் பீடம் (திருவிளை. மாமனு. 17). அற-த்-தளி °taḷi [+*taḷ-i*, 'sacred shrine' —'தளி[3]'] Harem; அந்தப்புரம். அறத்தின்-செல்வி °celvi, V. ara-c-celvi;

= அறச்-செல்வி. அறத்தின்-சேய் °cēy [+cēy, 'child'] Dharma-putra; தருமன். அற-த்-துணைவி °tuṇaivi, Virtuous helpmate, wife; தரும பத்தினி. அறத்துறுப்பு °uṟuppu [+ uṟu-pp-u, 'parts'] Constituent parts of virtue of which the principal are eight, viz: (1) ஐயப்பாடின்மை, being void of doubt or scepticism; (2) விருப்பின்மை, freedom from covetousness or of inordinate desire for any supposed good; (3) வெறுப்பின்மை, freedom from disgust; (4) மயக்கமின்மை, being void of perplexity; (5) பழியை நீக்கல், avoiding reproaches, being void of censoriousness; (6) அழிந்தோரை நிறுத்தல், relieving the distressed or ruined; (7) அறம் விளக்கல், bringing into light the nature of benefaction and expounding it; (8) பேரன்புடைமை, the possession of abundant love. அறத்து-ப்-பால் °pāl [+pāl, 'division'] The first section of the Kuraḷ which treats of aṟam; திருக்குறளின் முப்பால்களுள் முன்னது. அற-த்-துறை °tuṟai [+ tuṟ-ai, 'way'] Path of virtue; புண்ணிய வொழுக்கம் (பாகவதம் 1, 8, 40). அறத்தை-க்-காப்போன் °kāppōṉ [+ kā, 'to protect'] Aiyaṉār, protector of virtue; ஐயனார். அறத்தொடு-நிற்றல் °niṟṟal [+nil, 'to remain'] The heroine gradually revealing her secret union to her parents; களவினைத் தமர்க்கு முறையே அறிவுறுத்தல் (தொல். பொ. 206). அற-தேயன் °tēyaṉ [+S. dēy-am, 'gift', fr. dā, T. tā+-aṉ⁵] One who manages charitable endowments; தருமங்களை நடத்துவோன். அற-நிலை °nilai, Institution for managing charities; தருமங்களைப் பரிபாலிக்கும் நியமம். The form of marriage called *piramam* q. v. பிரமம் எனும் விவாக வகை. அறநிலை-அறம் °°aṟam, Maintenance by the king of the observance of caste rules; நால் வருணத்தாரும் தத்தம் நெறி பிறழாது அரசன் பாதுகாத்தல். அறநிலை-இன்பம் °°iṉpam, Domestic happiness; இல்லறத்தினுள் வரும் மகிழ்ச்சி. அறநிலைப்-பொருள் °°poruḷ, Wealth rightfully acquired; நெறிவழி நின்று தேடப்பட்டது. Proper assessment claimed by the sovereign; அரசன் பெறும் நீதியான இறை. அற-நூல் °nūl, Code of law; தரும சாத்திரம். அற-நெறி °neṟi, Path of virtue; தரும மார்க்கம். அறநெறிச்-சந்தேக-சாஸ்திரி °°cantēka-cāstiri [id.+S. sam-dēha, 'doubt', fr. dēh, prob. akin to T. tēykk-a +śās-tri, 'teacher', fr. śās. Cf. T. cāṟṟ-u] Casuist; நல்லொழுக்கத்தைப்பற்றிய ஐயப்பாடு தீர்ப்போன். அற-ப்-பரிகாரம், °பரிசாரம் °parikāram, °°cāram [+S. pari-cāra, 'attending on, service', fr. car, T. car-i] Services rendered to ascetics &c; அறத்தோர் முதலானோருக்குச்செய்யும் பணிவிடை (சிலப். 2, 85). அற-ப்-பால் °pāl, = aṟattup-pāl; = அறத்துப்-பால். அற-ப்-புறங்-காவல் °puṟaṅ-kāval, Protection of land endowments for religious or social charities; தரும சாதன நிலங்களைப் பாதுகாத்தல் (நம்பி. 72). அற-ப்-புறம் °puṟam, Sin; பாவம் (திருவிளை. தண். 9). Land for charitable purposes and exempt from assessment; தருமத்திற்கு விட்ட இறையிலி நிலம் (சீவக. 76). Alms-house; தரும மடம் (திருவிளை. நாட்டு. 33). Place where the Vedas are taught; வேதமோதும் பள்ளிக்கூடம். அற-வழக்கம் °vaḻakkam, Moral or religious instruction; தருமோபதேசம் (வீரசோ. யாப். 15 உரை). அற-வாணன் °vāṇaṉ [+ vāḻ-n-aṉ, 'one who dwells'] One whose abode is in virtue, God; கடவுள் (பெரியபு. வாயி. 8). அறவிலை-வாணிகன் °vilai-vāṇikaṉ [+viḷ-ai, 'gain'+S. baṇij, 'trader', fr. T. paṇ-i] One who practises virtue not for virtue's sake, but for reward; "இம்மைச் செய்தது மறுமைக்காமெனும் அறவிலைவாணிகன்" (புறம். 134). அற-வினை °vinai, Virtuous deed; புண்ணியச் செயல் (குறள் 909).

OK. *aṟavu*; K. *aṟa*; M. *aṟam*. Cf. Gr. *aretē*, 'truth'; S. *ṛita*, 'right'; *aram*, in the sense of 'devotion' and 'goddess protecting pious works'; Arm. *ardar*, 'righteous'.

அறவன் aṟavaṉ, *n.* [id.+avaṉ²] 1. One who is virtuous; தருமவான் (திருவிளை. தண்ணீர்ப். 30). 2. Teacher of religious doctrines; சமய உண்மைகளைக்கூறுவோன் (சிலப். 10, 202). 3. God; கடவுள் (திவ். திருவாய். 1, 7, 1). 4. Buddha; புத்தன். 5. Ascetic; முனிவன். 6. Brahman; பிராமணன் (பரிபா. 8, 68).

அறவி aṟavi, *n.* [id. + (v)-i⁴] 1. Female ascetic; சன்னியாசினி (சிலப். 13, 103). 2. What is holy; புண்ணியத்தோடு கூடியது (மணி. 11, 25). 3. Virtue; புண்ணியம் (மணி. 11, 23). 4. Public place; பொதுவிடம் (மணி. 7, 93). —CPD அறவி-ய்-அங்கிழவோன் °aṅkiḻavōṉ [+am¹+kiḻ-avu, 'ownership'+-ōṉ] Buddha; புத்தன் (மணி. 11, 23).

அறவிய aṟaviya, *adj.* [aṟa + (v) -iya] Virtuous; அறத்தொடுகூடிய. உ-ம்: "அறவிய மனத்தர்" (சூளா. தூது. 91). —CPD அறவியான் aṟaviyāṉ [id. -avaṉ¹] Virtuous man; அறத்தில் நிற்பவன்.

அறவை¹ aṟavai, *n.* [id.+(v)-ai⁷] Rightousness; தரும நெறி (புறம். 390).

அறவோன் aṟavōṉ, *n.* [id. + (v) -ōṉ] 1. Virtuous man; தருமிஷ்டன். 2. Buddha; புத்தன்.

அறன் aṟaṉ, *n.* [id. n/m] 1. V. (3, 9, 10); அறம் (3, 9, 10) பார். 2. Sacrificer, as performing a sacred duty; வேள்வி முதல்வன் (பரிபா. 3, 5). —CPDS அறன்-அழித்தல் °aḻittal [+aḻ-i, 'to destroy'] Denying the existence of virtue; புண்ணியம் என ஒன்றில்லை எனல் (குறள் 182). அறன்-அளித்து-உரைத்தல் °aḷittu-uraittal [+aḷ-i, 'to be kind'+urai, 'to speak'] Devotion to the god of virtue; அறக்கடவுளின் அன்பு செய்தல் (தொல். பொ. 270). அறன்-இல்-ஆளன் °il-āḷaṉ [+il (lā), 'not having'+āḷ-aṉ, 'person'] One who practises no virtue; தருமஞ்செய்யில்லாதவன் (ஐங்குறு. 118). அறனில்-பால் °il-pāl [id.+pāl, 'situation'] Evil destiny; தீவினை. அறன்-ஓம்படை °ōmpaḍai [+ ōmp-u (m), 'cherishing' +aḍ-ai, 'resort'] Place of moral or religious instruction; தருமம் போதிக்குமிடம் (சிலப். 5, 179). Fostering virtue; தருமம் பாதுகாத்தல் (தை. அரும்.). —CPD அறன்-கடை °kaḍai, = aṟaṅ-kaḍai; = அறங்கடை.

அறம்புறமாக aṟampuṟam-āka, *adv.* [for *akam-puṟam*, 'this side and that'—அகம்-புறம்] Head over heels, vulgarly, disrespectfully; தலைகீழாய், அசப்பியமாய், மரியாதையின்றி.

அறமனை-வார்த்தை aṟamaṉai-vārttai, *n.* [for *araṉ-maṉai*; 'palace' + S. *vārttā*, 'word', fr. *vṛit-* Cf. T. *urudd-u*] Word used in official records &c; அரசினர் நடவடிக்கைகளில் வழங்கும் சொல்.

அறல் aṟal, *n.* [fr. aṟ-u¹ + -al⁷] 1. Becoming detached by cutting; அறுத்து விடப்படல். 2. Laving; அரித்தோடுதல். 3. Flowing water; அறத்தோடும் நீர் (கலித். 29). 4. Wave, ripple; நீர்த்திரை (திவா.). 5. Water; நீர் (மதுரை. மேற்கோ. 723). 6. Curl; மயிர் நெறிப்பு (பெரும்பாண். 162 உரை). 7. Fine sand; நுண்மணல். 8. Black sand on the seashore; கருமணல் (மணி. 20, 41). 9. Festival; விழா. 10. Happiness; மகிழ்ச்சி (மதுரை. பக். 438). 11. [To be cut down?] Low jungle; சிறுதூறு.

12. A parasitic leafless plant; சொற்றுன்.

Tu. *aral*, 'drizzling rain'.

அறவி aravi, V. under *aram;* அறம் பார்.

அறவு¹ aravu, *n.* [fr. *aru*—அறு-த்தல்] 1. Place cut; அறபட்ட இடம். 2. Cessation; ஒழிவை. உ-ம்: "சீறவறியாக் காகம்" (புறம். 1). 3. Cessation of desire; ஆசை நீக்கம் (திருவாச. 32, 6). 4. Open space; வெளி கொண்ட இடம். —CPDS அறவி'ட² °ida [Cf. Sinh. *aragannavā*] To collect dues &c; கடன் முதலியவற்றைக் கேட்டு வாங்க. அறவு'ளி °uli [id.+*ul-i*, 'what has'] Cessation; முடிவு. Charms employed to cure the sick; நோயை ஒழிவிக்க மந்திரம். Where a thing ends; முடியுமிடம். அறவாய்ப்-போக °pōka, To be completely spent; முழுதும் அழிய.

Tu. *aravu*, 'wide, open'.

-அறவு² aravu, *suff.* [id.] A stem-suffix implying absence, want; இன்மையைக் குறிக்கும் ஒரு கடைநிலை. உ-ம்: ஏசறவு.

அறவை² aravai, *n.* [fr. *aru*¹ + (*av*) -*ai*⁷] 1. Helplessness; உதவியற்ற நிலை (திருவாச. 37, 6). 2. Deed of violence, evil; அடாத்து, தீமை (தேவா. 1197, 7). —CPDS அறவை-ச்-சிறை °cirai, Rigorous imprisonment; கடும் மறியல் (ஈடு. 1, 3, 11). அறவை-ச்-சோறு °cōru, Food for the helpless; அநாதர்க்கு அளிக்கும் உணவு. அறவை-த்-தூரியம் °tūriyam, [+S. *dūrśam*, prob. fr. T. *tūcu*+-*am*²] Clothes for the helpless; அநாதர்க்கு அளிக்கும் உடை. அறவை-ப்-பிணம் °piṇam, Unclaimed corpse; அநாத பிரேதம்.

அறளிகா aralikā, *n.* Golden colour of the teeth of horses when they are about eleven years old; பதினொரு வயதளவிலுள்ள குதிரைகளது பல்லின் பொன்னிறம்.

அறளை aralai, *n.* [Cf. *ara-lai*³ — ஒப். அர.லை³] 1. Fretful murmuring of old people &c; கச்சுத் தொந்தரை. 2. A disease; ஒரு நோய். —CPD அறளை-பெயர °peyara, To become old; வயது எட்டிப்போக.

அறன் aran, V. under *aram;* அறம் பார்.

அறனையம் aranaiyam, *n.* [Cf. *aranai*— ஒப். அறனை] Purple-stalked dragon; காட்டுக் கருணை.

அரு- arā-, See under *aru*¹; அறு¹ பார்.

அருமி arāmi, *n.* [U. *harāmī*] Who or what is vicious; துஷ்ட சுபாவமுள்ளவன்-ள்-து.

அரும்பை, அருமை arāmpai, °mai, *n.* Species of trichodesma; கவிழ் தும்பை.

அறவு-தல் arāvu, 5. *v. tr.* [=*arāvu*, *r/r*—=அராவு-தல்] To strike, whip; அடித்தல் (சீவக. 703).

அறி-தல் ari, 4. *v. tr.* [rt. *ar*+v. det. *i*, 'to cut asunder, distinguish'. Other forms: *ar-u*, *ar-ai* &c—√அற்+இ⁷. 'வெட்டிப்பிரித்தல்பிரித்துணர்தல்'. பிறவுரு: அறு, அறை ஆதியன] 1. To determine; நிச்சயித்தல் (பு. வெ. 8, 19). 2. To perceive, know; மனத்தால் உணர்தல் (நாலடி. 74). 3. To esteem; மதித்தல் (குறள் 61). 4. To experience; பயிலுதல்: "கனவறிந்தார் நெஞ்சிற் காவ" (குறள் 288). 5. To experience; அனுபவமுறுதல் (குறள் 1101). 6. To think: நினைத்தல் (பிங்.). 7. To learn, enquire; கற்றல், விசாரித்தல். 8. To discover; கண்டு பிடித்தல். புத்தி-அறிய putti°, To become nubile; விவாகஞ்செய்யும் பக்குவத்தை அடைய.

K., M. *ari;* Tel. *erugu;* Tu. *ar;* Brah. *harrifing*. Cf. Hit. *ariya*, 'to inquire by divination'.

அறி ari, *n.* [id.] Knowledge; அறிவு (குறள். 638). —CPDS [for *ari-y-um*] அறி-கரி °kari, Eye witness; கண்கண்ட சாட்சி (தொல். பொ. 142 உரை). அறி-கருவி °karuvi, Organ of sense; ஞானேந்திரியம் (வெப்பிர. பொது. 21). அறி-குறி °kuri, Mark, token; அடையாளம் (காஞ்சிப்பு. நக. 85). அறி-சலம் °calam [+S. *chal-am*, 'fraud'. Cf. T. *kallam*—'கள்ளம்' பார்] Conscious guilt; நெஞ்சறிந்த குற்றம். அறி-துயில் °tuyil, State of sleep in which one is conscious of the outer world; யோக நித்திரை (கலப். 26, 62). அறிதுயில்-அமர்ந்தோன் °°amarntōn, Vishnu; திருமால். அறி-பொருள்-வினா °poruḷ-vinā [+*por-uḷ*, 'meaning'+*vinā*, 'query'] Questioning with the object of comparing notes or teaching; அறிந்ததை அறிவொப்புக் காண்டல், அறிவுறுத்தரல் ஆதிய பயன் நோக்கி மீண்டும் கேட்டல் (தொல். சொல். 13, சேனா.). அறி-மடம் °madam [+*mad-am*, 'folly'—மடம்¹] Assumed ignorance; அறிந்தும் அறியாததுபோல் இருத்தல். Innocence of childhood; இளமையின் அறியாமை. Forgetfulness; ஞாபகமின்மை. Inability to reduce to practice what one has learnt; அறிந்தபடி நடக்க இயலாமை. அறி-மால் °māl, Conscious folly; மனப்பூர்வமான மடைமை (திருவாச. 4, 41). அறி-முகம் °mukam, Familiar person; பழகிய ஆள் (சேதுபு. விதாம. 99). Acquaintance; முகப் பழக்கம். அறிமுகப்படுத்த °padutta, (Modern) To introduce a person to another. அறி-வரன் °varan [+S. *vara*, 'eminent', fr. *uru*, T. *uri*] One who is eminently wise; அறிவிற் சிறந்தவன் (சீவக. 1246). அறி-வினா °vinā, Question for testing one's knowledge; அறிந்து கேட்கும் கேள்வி (நன். 385 உரை).

அறிக்கை arikkai, *n.* id.+(*kk*)-*ai*⁷] 1. Confession; குற்றத்தை ஒப்புக்கொள்ளல். 2. Notice; விஞ்ஞாபனம். 3. Teaching; பயிற்றுகை. —CPDS அறிக்கை-ஓலை °ōlai, Letter; கடிதம். அறிக்கை-ப்-பத்திரம் °pattiram, [+S. *patt-ra*, 'feather, leaf', fr. *pat*, T. *pur-a*] Advertisement, proclamation; எழுத்துமூலமான விளம்பரம். Report; வரலாறு குறிக்கும் நிலை.

Tu. *arike*. Cf. Hit. *arkuwa*, 'plead, pray'.

அறிகை arikai, *n.* [id. + (*k*)-*ai*⁷] Knowing, understanding; உணர்வு.

அறிஞன் ariñan, *n.* [*ari*+(*ñ*)-*an*⁵] 1. Man of knowledge; அறிவுடையோன். 2. Poet; புலவன். 3. Sage; முனிவன். 4. The planet Mercury; புதன்.

அறிநன் arinan, *n.* [id.] One who knows; அறிபவன் (பொருந. 57).

அறிப்பு arippu, *n.* [*ari*+(*pp*)-*u*⁴] Comprehension; உணர்கை (தேவா. 1042, 4).

அறியக்-கொடுக்க ariyak-kodukka, 1. To communicate information; தெரிவிக்க. 2. To impeach; குற்றமேற்ற.

அறியலு'றவு ariyal-uravu, [*ari-y-al* = *ari-tal* + -*ur-avu*²] Desire to know; அறிதற்கண் விருப்பம் (தொல். சொல். 13 சேனா.).

அறியா ariyā, *ppl.* [*ari*+-*ā*-³] Not known. —CPDS அறியா-க்-கரி °kari, False evidence; பொய்ச் சாட்சி (கலப். 15, 78). அறியா-வினா, அறியான்° °vinā, ariyān°, Question for removal of doubt; தெரியாத தொன்றைக் கேட்டல் (நன். 385 உரை).

அறியாமை ariyāmai, *n.* [*ariyā*+*mai*²] Ignorance; மடைமை.

அறியுநன் ariyunan, *n.* [*ple.* of *ari*+(*n*)-*an*⁵] One who understands; உணருவோன் (சீவக. 1572.)

அறிவன் arivan, *n.* [*ari* -*vu*+-*an*⁵] 1. Wise man; கல்லறிவுடையான், ஞானி. 2. Arhat; அருகன். 3. Buddha; புத்தன். 4. Planet Mars; செவ்வாய். 5. Astro.

loger and priest; கணி (கலித். 39). 6. Artisan; கம்மாளன் (திவா). —CPDS அறிவனாள் arivanāl, The 26th nakṣatra; உத்தரட்டாதி (திவா.). அறிவர்-சிறப்பு °cirappu [+cir-a-ppu, 'celebration'] Worship of the wise ones, e.g: Arhats; இறைவர் பூசனை (சீவக. 1545.)

Cf. S. arha, 'a learned man'. Kittel compares this with K. arike.

அறிவி-த்தல் arivi, v. tr. [caus. of ari] 1. To make known; தெரிவித்தல். 2. To publish; பிரசித்தம்செய்தல். அறிவிக்கை, அறிவிப்பு arivikkai, arivippu nouns fr. the same.

அறிவு arivu, n. [ari+(v) -u⁶] 1. Perception by the senses; பொறியுணர்வு. 2. Knowledge; ஞானம். 3. Erudition; கல்வி. 4. Self-consciousness; தன்னுணர்வு. 5. Intelligence; புத்தி (குறள், 429). 6. Soul; ஆன்மா (ஞானு. 44,5) 7. Things necessary to be known; அறியவேண்டியவை (குறள், 61). —CPDS அறி'வழி °ali [+al-i = ali-pp-atu, 'what destroys'] Intoxicating liquor; மது. Devil பிசாசு. அறிவ'ழிய °aliya, To lose one's reason; மதிமயங்க. அறிவ'றிவா'க °ariv'āka [id.+āku] So as to ascertain the minutest details; விவரமாய்த் தெரிந்து கொள்ளும்படி. அறிவ'றை °arai [+ar-ai, 'destruction' —அறை¹] Lack of spiritual knowledge; ஆன்மபோதம் இன்மை. Delusion; மனத்தடுமாற்றம். One destitute of spiritual knowledge; ஆன்மபோத மற்றவன். அறிவ'றை-போக °arai-pōka, To undermine one's knowledge; உணர்வு அழியச்செய்ய (கைப், 20, 25). அறிவா'கரன் °ākaran [+S. ā-kara, 'mine', said to be fr. ā-kri, 'to scatter', but Cf. T. akal-i + -an⁵] Man of profound knowledge; கல்விக் களஞ்சியம். அறிவா'ளி °āli [+-āli⁵] Learned man, or intelligent person; கல்விமான், புத்திசாலி. அறிவி'லி °ili, Ignorant person; மூடன். அறிவி'ன்மை °inmai, Ignorance; மடைமை. அறிவு-உதிக்க °utikka, To begin to have good sense; புத்தி பிடிபட. அறிவு'ற °ura, To know; அறிய. To wake from sleep; துயிலெழ (திவ். திருப்பா. 23). அறிவு'றல் °ural, [+for urutal] Making known; தெரியப்பண்ணல் (குறிஞ்சிப். 22). அறிவு'றுத்த °urutta, To make known; தெரிவிக்க. To give instruction; படிப்பிக்க. அறிவொ'ப்புக்-காண்டல்-வினா °oppuk-kāṇdal-vinā, Question for comparing notes; தானறிந்ததைப் பிறரறிவோடு ஒத்துப்பார்க்கக் கேள்வி கேட்டல். அறிவு-கெடு °kēdu, Losing consciousness; மூர்ச்சையாயிருத்தல். Ignorance; புத்தியீனம். அறிவு-கொடுக்க °kodukka, To teach; படிப்பிக்க. To allow a lucid interval after a time of stupor; மயக்கமிருந்த அறிவு சிறிதுநேரம் தெளிய. அறிவு-கொளுத்த °kolutta, To impart instruction, to advise; படிப்பிக்க, புத்தி புகட்ட. அறிவு-சூடு °cūdu, Act which is well driven home into one's consciousness; மனதில் கன்றும்படி பதியுஞ் செயல். அறிவு-சொல்ல °colla, To give advice, exhort; நல்வழி காட்ட. அறிவு-நூல் °nūl, Sacred writings, book of true knowledge; ஞானசாத்திரம் (காவடி. 140). அறிவு-ப்-பயிற்சி °payirci, Education; கல்வி. அறிவு-பிறக்க °pirakka, To be enlightened: ஞானமுண்டாக. To be restored to consciousness; மூர்ச்சை தெளிய. அறிவு-மடம்-பட °madam-pada [+mad-am, 'ignorance' +pad-u, 'to appear'] To assume ignorance; அறிந்தும் அறியாததுபோல இருக்க (திருபாண். 216). அறிவு-மயங்க °mayanka, To swoon; பிரஞ்ஞையற. To be bewildered; பிரமிக்க. சிற்ற'றிவு cir°, Imperfect knowledge. நுண்ண'றிவு nun°, Exact knowledge. பேர'றிவு pēr°, Perfect knowledge.

Tu. aruhu; K., M. arivu; K. arike; Tel eruha, erike.

அறிவை arivai, n. [id.+(v)-ai⁷] Wisdom; ஞானம் (திவ். பெரியாழ். 5, 4, 2).

அறிசா aricā, n. A kind of fish; மீன்வகை.

அறிட்டம் ariddam, n. [Cf. aruddam —ஒப். அருட்டம்] 1. Black hellebore; கடுகுரோகிணி. 2. Pepper; மிளகு. 3. Margosa; வேம்பு.

அறிப்பலம் arippalam, n. Long pepper; திப்பலி.

அறியல் ariyal, n. [Cf. aril—ஒப். அரில்] Bamboo; மூங்கில்.

அறு¹-தல் aru, v. [rt. ar+v. det. -u, 'to press down, cut asunder, diminish, disappear'. Two forms: One with accent on the 1st and the other on the 2nd syll. Other forms: ar-i, ar-ai &c. Cf. ar—அற் +-உ⁵, 'அடக்கியிருத்துதல், வெட்டிப் பிரித்தல், குறைதல், மறைந்து போதல்'. அறு-தலும் அறுத்-தலுமாம். பிறவுருவங்கள்: அறி-தல், அறை-தல் ஆதியன. ஒப். அரி-தல்] I [ár-u—அறு-தல்] 6 and (modern) 4 v. intr. 1. To abide, dwell; தங்குதல் (சீவக. 226). 2. To be decided, settled; தீர்தல். உ-ம்: "அற்ற காரியம்" (கைப். 17, முன்னிலைப் பா. 2, உரை). 3. To make friends; நட்புச் செய்தல் (உத்தர ராமாய. நிக்கும். 55). 4. To be digested; சீரணித்தல் (குறள், 942). 5. To cease; இல்லாமற் போதல் (தேவா. 52, 11). 6. To be severed, break; கயிறுபோல இறுதல் (இரகு. யாகப். 87). 7. To go to ruin; பாழாதல் (பு. வெ. 3, 15 கொளு.). II. [ar-ú—அறுத்-தல்] 11 v. caus. With above senses: (2) (4) (5) (6) (7). 8. To burrow subterraneous passages; வழி தோண்டுதல். 9. To tease; தொந்தரவு செய்தல். 10. To move in jerky rythm; இடைவிட்டுவிட்டுச் செல்லல் (தொல். பொ. 544). 11. To break through obstacles, to out-do; தடை நீக்குதல், வெல்லுதல் (பதிற்றுப். 43, 21). 12. To distribute; பங்கிட்டுக் கொடுத்தல் (பிரபோத். 16, 37). 13. [intr.] To become a widow by setting aside the marriage badge; தாலி யறுத்தல். வழக்க'றுக்க valakku°, To decide a case.

M. aru; Tel. aru; K. ari, hari, 'to tear'; Ma. car-; Kui. carr-; Go. sarr-; Br. harring. Cf. Su. ar, 'ruin'. Akk. karmu, 'ruin-heap'; Hit. ark-, 'to cut off, mutilate', harra, 'to break; pulverize, ruin'; Etr., ar; 'to plough'; Got. arijan, E. ear, 'to plough'; Gr. harpazō, 'to ravish'; L. sarrio, 'to hoe', sarpio, sarpo, 'to prune', where the epenthetic p is by extension, according to Walde—P.; S. sṛṇi, 'sickle'; Gr. harpē. The S. ris or lis, 'to break, tear' whose root form is given as er(e) in Walde—P. (II. 34) is prob. akin to T. aru. Also perh. ardhas, 'half', ṛidhak, 'separately'. Cf. Gr. ereikō, 'to break, tear', [Cf. Note under √ar (p. 124)] with which Boisacq. connects S. rikh, 'to scrape'; Lit. rikti, 'to cut bread'; OHG, riga, 'line'; AS. roew, E. row &c. Also prob. S. ārā, 'awl, bodkin' and aruh, P. aru, 'wound', from cutting? Walde—P. ranges this word under the imaginary root 2 reu with a host of other IE words which are all akin to the T. aru.

அரு- arā-, adj. [fr. ar-ā-ta, pple. of aru] Endless, excessive; முடிவில்லாத, மிகுந்த. —CPDS அரு-வழக்கு °valakku [+val-akk-u, 'custom, citing the law of custom'] Endless dispute; முடிவுக்கு வராத வழக்கு வாதம். அரு-விலை °vilai, exorbitant price; மிதமிஞ்சிய கிரயம்.

அறு, அறும் aru, arum, adj. [fr. ple. aru-m] அறு-கால்¹, °காலன் °kāl, °kālan, Serpent, as without feet; பாம்பு (திருவிளை. பாயி. 30). அறு-கீரை °kīrai, A pot herb; கீரைவகை. அறு-குறை °kurai, Headless body; கவந்தம் (பாரத. நிவாத. 141.) அறு-தலி,

°தாலி °tali, °tāli [+*tāl i*, 'marriage badge'] Widow, as one who has forfeited her marriage badge; தாலி யறுபட்டவளான விதவை. அறு-தாள் °tāḷ [+ *tāḷ*, 'foot']=aṟu-kāl;=அறு-கால். அறுந்-தருணம் °taruṇam, [+S. *tar-uṇa*, or *tal-uṇa*, 'young', fr. which 'opportunity'. Cf. T. *taḷ-ai*] Emergency; அவசர சமயம். அறுந்-தறுவாய் °taṟuvāy [+*taṟu-vāy*, prob. for *toṟu-vāy*] Do; டை. அறுந்-தொகை °tokai, [+*tok-ai*, 'quantity'] (Arith.) Number divisible without remainder; மிச்சமின்றிப் பிரிபடும் எண். அறு-நீர் °nīr, Water in a reservoir nearly dried up; வற்றிப்போம் நிலையி லுள்ள நீர். அறு-பொருள் °poruḷ, The supreme Being as the one absolute thing; கடவுள் (கைப். 17, முன் னிலைப்ப. 2). அறு-மணை °maṇai [See *ari-maṇai* p. 134] Instrument for cutting vegetables &c; பிடிபோட்ட கத்தி. Slattern; துப்புக்கெட்டவன்-ள். Ugly woman; இலட்சணமில்லாத பெண். அறு-முறி °muri [+*muṟ-i*, 'ola, writing'] Deed of agreement; உடன்படிக் கைப் பத்திரம் (Pd. Inscr. 940). அறு-வரி °vari, Tax paid at fixed times; தவணைக்குத் தவணை கட்டும் வரி. அறு-வாய்[1] °vāy, Opening in a cut or wound; அறுபட்ட இடம். Vacant gap as in the moon in its waxing phases: குறைவிடம் (குறள், 1117). அறு-விதி °viti [+S. *vi-dhi*, 'rule', fr. *dhā*, T. *tāḷ*] Decision; தீர்ப்பு.

அறுக்கரிவாள் aṟukkarivāḷ, *n.* [*aṟu-kka+ari-vāḷ*] Reaping sickle; அருவி வெட்டும் கருவி.

அறுக்கி aṟukki, *n.* [*aṟukk(u)+-i*[1]] Instrument for cutting; வெட் டும் ஆயுதம்.

அறுக்கை aṟukkai, *n.* [*aṟu+(kk)-ai*[7]] 1. Act of cutting; அறுத்தல். 2. Safe custody; சேமமாய்க் காத்தல் (Coll.).

அறுத்தவள் aṟuttavaḷ, *n.* [*pple.* of id.+*(v)-aḷ*[1]] Widow, as one whose tāli has been removed; வி தவை.

அறுத்து aṟuttu, *pple.* —CPDS அறுத்தி'சைப்பு °icaippu [+*ic-ai*, 'to sound'] Fault of introducing into a verse of one metre the rythm of others; வேற்றிசை கலந்து வரும் பா ப்புவழு (யாப். வி. 95). அறுத்தி'டல் °iḍal, Extirpation of desire; அவா வறுத்தல். அறுத்து'ரைக்க °uraikka, To speak positively; வரையறையாய்ப் பேச. To interpret by breaking a sentence into its component parts; வசனத்தைப் பிரித்து உரை சொல்ல (திருச் கோ. 272 உரை). அறுத்தோ'டி °ōḍi [+*ōḍ-u*, 'to run'] Gully formed by running water; அரித்தோடும் நீர்க்கால். அறுத்து-க்-கட்ட °kaḍḍa, To remarry by removing the tāli of a previous husband; பிறன் தாலியை நீக்கிவிட்டு மறு விவாகஞ் செய்ய. அறுத்து-ப்-பேச °pēca, To use definitively; தீர்மான மாய்ச் சொல்ல. To use cutting words; கடுஞ்சொல் வழங்க. அறுத்து-முறி °muri [+*muṟ-i*, 'breaking'] Divorce; தாரத் தள்ளுகை (Coll.). அறுத்து-விட்டவள் °viḍḍavaḷ, Widow; விதவை.

அறுதல் aṟutal, *n.* [id] 1. Anything broken or torn; முரிந்தது, தெ றித்தது, இழிந்தது. (Prov.) "தாம்பும் அறுதல், தோண்டியும் பொத்தல்". A broken rope and a leaking water pot. 2. A defect in coins; காசையக் குற்ற வகை. 3. Finishing, liquidating a debt; கடனை அழித்தல். 4. Mean, despicable person; உதவாதவன்-ள். 5. வகம்பெண்.

அறுதி aṟuti, *n.* [id.+*(t)-i*[1]] 1. Destruction, non-existence; நாசம், இன்மை. 2. Termination; முடிவு. 3. Finality in a sale; முடிவான விலை (திருவாலவா. 46, 32). 4. Limit; வரை யறை (பாரத. உலூக. 16). 5. Ownership; உரிமை (கல்லா. 17). 6. Perchaser's title deed; விக்கிரயச்சீட்டு. [*adv.*] Until; வரையும். உ-ம்: "அன்றுமுத லின் றறுதியா" (திவ். பெரியாழ். 4, 10, 9). —CPDS அறுதி-இட °iḍa, To bring to completion, to determine; முடி வாக்க, தீர்மானிக்க (திருவாலவா. 27, 41). To specify a time or day; காலங் குறிக்க. அறுதி-உறுதி °uruti, Deed of transfer; விக்கிரயச் சீட்டு. அறு தி-க்-கரை °karai, Proper and just division of land included in a village; ஊர் நிலங்களைத் தனித் தனியாய் உரிமையுள்ளவர்களுக்குப் பிரித்துக் கொடுக் கும் முறை (C. G.). அறுதி-க்-கள நடை °kaḷanaḍai, Annual account of the income of paddy; வருஷாந்த நெற் கணக்கு. அறுதி-க்-கிரயம் °kirayam [+S. *kraya*, 'purchase'] Absolute or final sale; முடிவான விற்ப னவு. அறுதி-ச்-சாதனம் °cātanam [+S. *śās-ana*, 'written contract' fr. *śās*, perh. akin to T. *cāṟṟ-u*] Deed of transfer; விக்கிரய பத்திரம். அறுதி-ச்-சீட்டு °ciḍḍu [+U. *citthi*] Do; டை. அறுதி-ச்-சொல் °col, Decisive word or sentence; முடிவான பேச்சு. அறுதி-ப்-பங்கு °paṅku, Portion of a village enjoyed by one as his absolute property; கிரா மம் பொதுவல்லாத சொந்த நிலம். Final payment towards a debt; கடைசியிற் கொடுத்துத் தீர்க்கும் கடன்பாகம். அறு தி-ப்-பட்டு °paḍḍu, See the next word; அடுத்த சொல் பார். அறுதி-ப்-பரிவ(ய)ட்டம் °pariv(y)aḍḍam [+Pkt. *pari-voṭṭa*, 'garment', fr. S. *vri*, T. *vaḷ-ai*] Silk cloth taken from near an idol and tied on the head of a distinguished person as a gift of honour; கோயில் விக்கிர கத்தடியிலிருந் தெடுத்து மரியாதைக்காகத் தலையிற் கட்டக் கொடுக்கும் பட்டுத் துணி. அறுதி-ப்-பாடு °pāḍu [fr. *paḍ-u*] Accomplishment, decision; முடிவுபேறு, தீர்மானம். அறுதி-முறி °muri [+*muṟ i*, 'ola, writing'] Cancelled lease-bond; தீர்ந்த கணக்குச் சீட்டு (S. I. I., viii, 140).

M. *aṟuti*.

அறுப்பு aṟuppu, *n.* [id.+*(pp)-u*[6]] 1. Reaping; வெட்டு வேளாண்மை. 2. Section sawn, piece; அறுத்த துண்டு. 3. The opening of a wound &c; அறுவாய். 4. Becoming a widow; தாலியறுத்து விதவையாதல். 5. An imprecation; ஒரு திட்டு. 6. Refutation of argument; மறுப்பு. —CPDS அறுப்ப'டி-கணக்கு °aḍi-kaṇakku, Balance sheet; லாபநஷ்டங் காட்டும் கணக்கு. அறுப்பம்-புல் aṟuppam-pul [Cf. *aṟuku*] A kind of grass; புல் வகை. அறுப்பன்-பூச்சி aṟuppan-pūcci, Insect that eats off the heads of grain; தானியத்தைத் யழிக்கும் பூச்சிவகை. அறுப்பின்-பண்டிகை aṟuppiṉ-paṇḍikai [prob. fr. *paṇḍ-u*, 'old'+-*ikai*] (Chr.) Harvest festival; வேளாண்மை காலத்துக் காணிக்கைத் தினம். அறுப்பு-க்-காலம் °kālam, Harvest season; அருவி வெட்டும் பருவம். அறு ப்பு-க்-கூலி °kūli, Wages for reaping or sawing; கதிர் முதலியன அறுப் போர்க்கு வேதனம். Sum paid to a heirless widow for her maintenance; விதவைக்குக் கொடுக்கும் சீவனாம்சம். Sum paid to a widow for cutting her off from her husband's family so that she may remarry; விதவைக் குக்கொடுத்து அவளைக் கணவனின் குடும்பத் தினின்று பிரித்துவிடும் சீவனாம்சம். அறு ப்பு-க்-கோடி °kōḍi [+*kōḍ-i*, 'new cloth'] New cloth to a widow in her husband's funeral by her relatives; தாலியறுத்தவட்குச் சுற்றத்தார் கொடுக்கும் புது வஸ்திரம். அறுப்பு-ச்-சீட்டு °ciḍḍu [+U. *citthi*] Permit to cut a standing crop; கதிரறுக்கக் கொடுக்கும் உத்தரவு. அறுப்பு-ச்-சுகம் °cukam [+S. *su-kham*, 'comfort'] Maintenance for a heirless widow;

விதவைக்குக் கொடுக்கும் சீவனாம்சம். அறுப்பு-ச்-சொம்மு °commu [+S. *svam*, 'one's own, property'] Lump sum to a childless widow by her husband's relations; பிள்ளையில்லா விதவைக்குப் புக்ககத்தார் மொத்தமாய்க் கொடுக்கும் சீவனாம்சம்.

M. *aṟuppu*.

அறும்பன் aṟumpaṉ, *n.* [See next word] Villain; துட்டன்.

அறும்பு aṟumpu, *n.* [id.+(*mp*)-*u*[6]] 1. Dearth, famine; குறை, பஞ்சம். உ-ம்: "தண்ணீரறும்புக்காலம்" (C. G.) 2. [Cf. *aḷimpu*] Wantonness, wickedness; துஷ்டத்தனம்.

அறுமை[1] aṟumai, *n.* [id.+(*m*)-*ai*[7]] Instablity; நிலையின்மை (தேவா. 838, 3).

அறுவு aṟuvu, *n.* [id. +(*v*)-*u*[6]] 1. Cutting, rupture; வெட்டு, உடைவு. 2. Place cut, opening; வெட்டியவிடம், அறுவாய். 3. End, final part of an affair; முடிவு, கடைசிப் பகுதி. 4. Dry channel; நீர் வற்றிய கால். 5. Sum total; முழுமை (திருவிளை. நரிபரி. 6). —CPDS அறுவ'டை °aḍai [+*aḍ-ai*, 'collecting'] Harvest; அறுவி வெட்டு. அறுவடை-மேரை °°mērai [+*mēr-ai*, 'portion'] Emoluments of village servants paid in kind at the harvest; குடிமக்கள் ஆதியோர் சுதந்திரம். அறுவா'க °āka, To be completed, spent; முடிய, செலவிட. To be gathered, collected; சேகரிக்கப்பட. [*adv.*] Completely; முழுதும். அறுவி'ட °iḍa. To recover completely as arrears; நிலுவை வசூலிக்க.

அறுவை aṟuvai, *n.* [id.+(*v*)-*ai*[7]] Cloth; [illegible] (பதிற்றுப். 34. 3). 2. Net or hoop suspended from the shoulder; தோளிலிடும் உறி (கலை. 10, 98). 3. The 14th nakṣatra; சித்திரை (பிங்.). அறுவை-வாணிகன் °vāṇikaṉ [+S. *baṇij*, 'trader', fr. T. *paṇ-i*] Cloth merchant; புடவை வியாபாரி (அகம். 124).

Tu. *arive*, 'piece of cloth', *aruve*, 'mouth of a river'. K. *aṟive*, 'cloth'.

அறுவையர் aṟuvaiyar, *n.* [id.+(*y*)-*ar*[8]] 1. Weavers; ஆடை செய்வோர். 2. Cloth dealers; புடவை வியாபாரிகள்.

அறு[3] aṟu, *adj.* [fr. *āṟ-u*[3] —<ஆறு[3]] Six, sixfold; ஆறுவகையான. —CPDS அறு-கால்[3] °kāl, Beetle, from its being six-footed; வண்டு (திருக்கோ. 126). அறுகாற் பீடம் °°pīḍam, Six footed stool used in Saiva temples; ஆறு காலுள்ள மேசை. அறு-குணன் °kuṇaṉ, God; பகவன். அறு-குணம் °kuṇam [+*kuṇ-am*, 'bent of mind, quality'] The principal attributes of God, viz: (1) சர்வஞ்ஞத்துவம், omniscience; (2) சர்வேசத்துவம், supremacy; (3) சர்வநியந்திருத்துவம், pre-ordination; (4) சர்வாந்தரியாமித்துவம், omnipresence; (5) சர்வசுதந்திரத்துவம், unlimited creative power; (6) சர்வசத்தித்துவம், almightiness. (சூ). Another enumeration is— (1) தன்வயத்தனாதல், self-existence; (2) முதலிலனாதல், eternity; (3) உடம்பிலனாதல், immateriality; (4) எல்லையிலருளுடைமை, benevolence; (5) எங்கும் வியாபகனாதல்; omnipresence; (6) எவற்றிற்கும் காரணனாதல், being the creator of all things. அறு-கோணம் °kōṇam [+*kōṇ*+-*am*[2], 'angle'] Hexagon: ஆறு மூலை கொண்ட வடிவம். அறு-சமயம் °camayam [+S. *sam-aya*, 'coming together, sect', fr. *i*, T. *iḷ-i*] The six systems of thought considered Vedic; (1) சைவம், (2) வைணவம், (3) சாக்தம், (4) சௌரம், (5) காணபத்தியம், (6) கௌமாரம் என்னும் மதங்கள். Authors often give other divisions also: e. g. சைவம், வைணவம், ஆருகதம், பௌத்தம், சார்வாகம், லோகாயதம் &c. அறு-சரம் °caram [+*car-am* 'string', prob. fr. *caḍḍ-am*] The six stringed lute; யாழ். அறு-சுவை °cuvai, The six flavours; viz: (1) கைப்பு, bitterness; (2) இனிப்பு, sweetness; (3) புளிப்பு, sourness; (4) உவர்ப்பு, saltness; (5) துவர்ப்பு, astringency; (6) கார்ப்பு, pungency. அறு-சூலை °cūlai, Six kinds of arthritis or gout: viz: (1) பித்தசூலை, arthritis from bile; (2) வாத°, from bad and cold humours. (3) சிலேட்டும°, from phlegm. (4) வாதபித்த°, from bad humours and bile. (5) சிலேட்டுமபித்த°, from phlegm and bile. (6) க்ஷயக்கன°, from phlegm and heat (Winslow). அறு-துவர்ப்பு °tuvarppu [+*tuv-ar-pp-u*, 'astringency: harshness of disposition'] (Jain) Six kinds of emotions, viz: (1) ஆசியம், laughter; (2) இரதி, desire; (3) அரதி, dissatisfaction; (4) சோகம், grief; (5) பயம், fear; (6) சுகுச்சை, aversion. (சீவக. 3076 உரை) அறு-தொழில் °toḻil, The six-fold duties of different castes &c; viz: Those of all the inhabitants of India in general: (1) உழவு, ploughing, tillage; (2) தொழில், workmanship, manufacture; (3) வரைவு, marriage, with appropriate ceremonies; (4) வாணிகம், traffic; (5) வித்தை, வித்தை arts, sciences, literature; (6) சிற்பம், architecture. The six தொழில் or duties and occupations appropriate to the four castes are:- I To அந்தணர், Brahmans: (1) ஓதல், study and recitation of the Vedas; (2) ஓதுவித்தல், teaching the Vedas; (3) வேட்டல், performing daily and special rites for others &c.; (4) வேட்பித்தல், managing the performance of rites for others &c.; (5) ஈதல், distributing alms, supporting religious mendicants; (6) ஏற்றல், receiving alms and donations from worthy persons. II To அரசர், the royal or military race: (1) ஓதல், studying; (2) வேட்டல், performing rites; (3) ஈதல், bestowing alms and donations; (4) உலகோம்பல், cherishing, protecting, governing the land; (5) படை பயிற்றல், training or disciplining armies: (6) பொருதல், carrying on war. III To வைசியர் or cultivators, merchants and herdsmen: (1) ஓதல், study: (2) வேட்டல், performing rites; (3) பொருளீட்டல், acquiring weath; (4) ஈதல், bestowing alms; (5) பசுக்காத்தல், keeping cows; (6) ஏருழுதல், agriculture. IV To சூத்திரர், servile castes: (1) முதன் மூவர்க்கேவல் செய்தல், serving the first three castes; (2) பொருளீட்டல், acquiring wealth; (3) உழுதல், tillage; (4) பசுக் காத்தல், keeping cows; (5) குயிலுவத் தொழில் செய்தல், playing on stringed and wind instruments; (6) காருகவினை செய்தல், weaving cotton and silk, bearing burdens, and other drudgery. அறு-தொழிலோர் °toḻil-ōr, Brahmans, See °*toḻ-il*; பிராமணர். அறு-நூறு °nūṟu, Six hundred. அறு-பகை °pakai, The six emotions which disturb man's mind and corrupt his soul; viz: (1) காமம், lust; (2) குரோதம், anger; (3) உலோபம், avarice; (4) மோகம், sensuality; (5) மதம், pride; (6) மாற்சரியம், envy. அறு-பத்து-நாலு-கலை °pattu nālu-kalai. The 64 arts and sciences of the Hindus; viz: (1) அக்கரவிலக்கணம், the knowledge of spelling and reading; (2) இலிகிதம், caligraphy, penmanship; (3) கணிதம், the art of computation, arithmetic; (4) வேதம், the Hindu Veda or law; (5) புராணம், a class of sacred books comprising the whole body of Hindu theology; (6) வியாகரணம், grammar; (7) நீதிசாத்திரம், jurisprudence; (8) சோதிடசாத்திரம், astronomy, including astrology; (9) தருமசாத்திரம், ethics, moral philosophy, code of laws;

(10) யோகசாஸ்திரம், the knowledge of the rules for religious and abstract meditations; (11) மந்திரசாத்திரம், knowledge of a division of the V e d a s, i. e. the first or practical part; (12) சகுன சாத்திரம், the science of prognosticating by omens and augury; (13) சிற்பசாத்திரம், architecture and mechanics; (14) வைத்தியசாத்திரம், science of healing; (15) உருவசாத்திரம், physiognomy, the art of discovering the temper and foreknowing the fortune by the features of one's face, metoposcopy, chiromancy, the art of foretelling the events of life by inspecting the hand; (16) இதிகாசம், history, traditional accounts of former events; (17) காவியம், epic poetry; (18) அலங்காரம், science of rhetoric; (19) மதுரபாடணம், eloquence; (20) நாடகம், dramatic science; (21) நிருத்தம், the art of dancing; (22) சத்தப்பிரமம், directions for the modulation of sounds; (23) வீணை, the art of playing on the lute or stringed instruments; (24) வேணு, do. on the flute or pipe; (25) மிருதங்கம், do. on the tambourine; (26) தாளம், that of beating the cymbals; (27) அத்திரபரிட்சை, archery, the art of throwing darts; (28) கனகபரிட்சை, the art of an assayer in gold &c; (29) இரதபரிட்சை, the art of driving chariots, charioteering; (30) கசபரிட்சை, the knowledge of the marks of an elephant; (31) அசுவபரிட்சை, do. of a horse. (32) இரத்தினபரிட்சை, the art of examining and choosing gems; (33) பூமிபரிட்சை, the knowledge of the different kinds of soil &c.; (34) சங்கிராமவிலக்கணம், military art, tactics; (35) மல்லயுத்தம், wrestling, pugilism, &c.; (36) ஆகருடணம், the art of calling or summoning by enchantment; (37) உச்சாடணம், exorcism, dislodging devils or exciting them to injure others; (38) வித்துவேடணம், exciting hatred between parties by magical spells; (39) மதனசாத்திரம், erotics, modus coeundi; (40) மோகனம், libidinous fascinations occasioned by enchantment; (41) வசீகரணம், the art of subduction by magic; (42) இரசவாதம், alchymy and chemistry; (43) காந்தருவவாதம், the knowledge of the condition of the celestial choristers; (44) பைபீலவாதம், the language of brute creatures from emmets upwards; (45) கவுத்துகவாதம், the art of restoring pleasure to a sorrowful mind; (46) தாதுவாதம், the knowledge of the pulse; (47) காருடம், charms, incantations against poison; (48) நட்டம், information respecting anything lost, obtained by astronomical calculations; (49) முட்டி, information respecting anything concealed in the palm of the hand; (50) ஆகாயப்பிரவேசம், the art of entering into the air and becoming invisible; (51) ஆகாயகமனம், the art of walking in the air; (52) பரகாயப்பிரவேசம், the power of leaving one's own body and entering another lifeless body or substance at pleasure; (53) அதிரிசியம், the power of making one's self invisible; (54) இந்திரசாலம், the art of conjuring, juggling, &c.; (55) மகேந்திரசாலம், the art of performing wonders in heaven and earth; (56) அக்கினித்தம்பம், restraining the action of fire; (57) சலத்தம்பம், the art of counteracting the yielding quality of water so as to be able to walk on its surface; (58) வாயுத்தம்பம், the art of restraining the power of the wind; (59) திட்டித்தம்பம், the art of fascinating the eyes; (60) வாக்குத்தம்பம், the art of fascinating the mouth; (61) சுக்கிலத்தம்பம், the art of restraining the semen virile, (62) கன்னத்தம்பம், the art of preventing the discovery of things concealed; (63) கட்கத்தம்பம், the art by which the power of the sword or any other weapon is nullified; (64) அவத்தைப்பிரயோகம், the power of stationing the soul at pleasure. See *avattai*. (Winslow. Other writers give differently). **அறு-பத்து-மூவர்** °pattu-mūvar, the sixty three Saiva saints mentioned in the Periya-purāṇam; பெரியபுராணத்திற் கூறப்பட்ட தனியடியார். **அறு-பதம்** °patam, = aru·kāl[1]; = அறுகால்[2]. Species of Eclipta; கையாந்தகரை. **அறு-பது** °patu [for *pattu*] Sixty; ஆறுதரம் பத்து. **அறு-பருவம்** °paruvam, [+S. *parvan*, 'division', akin to T. *piri-v-u*] The six seasons of the year, viz: (1) கார், cloudy: August and September; (2) கூதிர், cold: October and November; (3) முன்பனி, evening dew: December and January; (4) பின்பனி, morning dew: February and March; (5) இளவேனில், milder hot season: April and May; (6) முதிர்வேனில், hot season: June and July. **அறு-பான்** °pan [=*patt-u*, 'ten'] Sixty; அறுபது. **அறு-பொழுது** °poḻutu, Six divisions of the day consisting of 4 hours each: viz. (1) மாலை, 6 to 10 in the evening; (2) யாமம், 10 to 2 at midnight; (3) வைகறை, 2 to 6 before daybreak; (4) விடியல், எற்றோற்றம் or காலை, 6 to 10 in the morning; (5) நண்பகல்; 10 to 2 in midday; (6) எற்பாடு, 2 to 6 in the afternoon. **அறு-மீன்** °mīn [+ *mīn*, 'the shining thing: star'] Pleades as containing six stars; கார்த்திகை நட்சத்திரம். **அறு-மீன்-காதலன்** °°kātalaṉ [+*kāt-al-aṉ*, 'loved one: son'] Skanda; முருகவேள். **அறு-முகன்** °mukaṉ, Skanda as having six faces; வேள். **அறு-முறை-வாழ்த்து** °murai-vāḻttu, Six fold invocation of sages, Brahmans, herds of cows, rain, crowned kings and great men; முனிவர், பார்ப்பார், ஆனிரை, மழை, முடியுடைவேந்தர், உலகு எனும் ஆறையும் போற்றல் (தொல். பொ. 81, உரை). **அறு-வகை-அரிசி** °vakai-arici, The six medicinal species of rice, viz: (1) அதசாரிசி, sweet fennel; (2) உருள்°, coriander; (3) ஏல்°, cardamom; (4) கார்புகா°, the seed of a plant; (5) உதுவா°, dill; (6) வெட்பாலை°, Merium antidysentiricum. **அறு-வகை-உயிர்** °°uyir, (Buddh.) The six kinds of living beings, viz: (1) மக்கள், human beings; (2) தேவர், celestials; (3) பிரமர், rishis; (4) நரகர், those in hell; (5) விலங்கு, brutes; (6) பேய், devils; (மணி. 30, 56-58). **அறுவகை-த்-தானை** °tāṉai [+ *tāṉ-ai*, 'strength, army'] The six-fold divisions or weapons of an army, viz: (1) தேர், chariots; (2) கரி, elephants; (3) பரி, horse; (4) வாள், swords, swordsmen; (5) வில், bows, archers; (6) வேல், darts, dartsmen. **அறு-வகை-ப்-படை** °paḍai, The six sets of forces of a king, viz: (1) மூலப்படை, the main army; (2) கூலிப்-°, hired divisions; (3) நாட்டுப்-°, army enlisted from the rural population; (4) காட்டுப்-°, from forest dwellers; (5) துணைப்-°, auxiliary force; (6) பகைப்-°, forces comprising of men dismissed by or enticed away from the enemy. = Aruvakai-t-tāṉai, = அறுவகை-த்-தானை. **அறுவகைப்-பொருள்** °poruḷ, (Gram.) Six things which may be shown by a verb, viz: (1) கருவி, instrument; (2) காலம், time; (3) செயப்படுபொருள், object; (4) செயல், the way a thing is done; (5) செய்பவன், agent; (6) நிலம், place; **அறு-வாய்** °vāy, = aru-mīṉ; = அறுமீன். **அறு-விகாரம்** °vikāram [+S. *vi-kāra*, 'change'] (Gram.) Six kinds of poetical

licence, viz: (1) குறுக்கல், shortening; (2) தொகுத்தல், contracting; (3) நீட்டல், lengthening; (4) மெலித்தல், changing a hard letter into a soft one; (5) வலித்தல், a soft letter into a hard one; (6) விரித்தல், adding a letter.

-அறு³ -aṟu, *suff.* [fr. *-aṭ-u³* =-அது³] A stem-suffix particularizing a thing as in *kiṉ-aṟu*; பொருளை இத்தன்மைத்து என்று காட்டும் ஒரு கடைநிலை. உ-ம்: "கினறு".

அறுக்-கணக்கு aṟuk-kaṇakku, *n.* [prob. for *aṟai*, 'room' + *kaṇ-akku*, 'account'—அறைக்°] Store account; உக்கிராண வரவு செலவு கணக்கு.

அறுகு aṟuku, *n.* [*aṟ-u¹* + *(k)-u⁶* 'what cuts, destroys, what is cut'—அறுப்பது, அறுபடுவது] 1. Lion; சிங்கம். 2. Yāḷi, a fabulous animal; யாளி. 3. Tiger; புலி. 4. Elephant; யானை. 5. Harialli grass, used in ceremonies; அறுகம் புல். There are different kinds of it; ஆனையறுகு, உப்பு°, கூந்தல்°, கொடி°, சிறு°, வெள்°. —CPDS அறுக'ரிசி °arici, Mixture of Cynodon grass and rice, used in benediction or worship; அறுகம்புல்லோடு கூடிய மங்கலவரிசி. அறுகா'ழி °āḻi [+*āḻ-i*, 'round thing'—'ஆழி'] Kind of ring; மோதிரவகை (சூடா. 8, 10, 6). அறுகி'ட °iḍa, To bless by throwing rice and Cynodon grass; ஆசீர்வதிக்க. அறுகெ'டுக்க °eḍukka, To bless as above; தே. To worship; பூசிக்க (கலிங். 251). அறுகெ'ழுந்த-படுதரை °eḻunta-paḍu-tarai, Land over-grown with harialli grass, classified as waste; தரிசு நிலம் (S. I. I., v. 376). அறுகு-தராசு °tarācu [+U. *tarāzu*, 'balance', fr. Zend *taro*, S. *tiras*, T. *tir-i*] Delicate balance; அளவை அறுதியாயறியத்தக்க சிறு நிறைகோல். அறுகு-வெட்டுத்-தரிசு-கூலி °veṭṭut-taricu-kūli, Right to enjoy land reclaimed from jungle growth; காடு வெட்டிச் செய்கை பண்ணியதால் ஏற்பட்ட அநுபோக வுரிமை.

M. *karuka*; Tel. *garika*; K. *gari*.

அறுகை aṟukai, *n.* [=id.] Cynodon grass; அறுகு (மணி. 12, 60). —CPD அறுகை-வாணிகன் °vāṇikaṉ =*aṟuvai*°; =அறுவை-வாணிகன் (S. I. I, vii, 318).

அறுபத்தை aṟupattai, *n.* [Cf. *aṟu-patam*—நப். அறு-பதம்] A species of eclipta; கையாந்தகரை.

அறுபாதம் aṟupātam, =*aṟu-patam*; = அறு-பதம்.

அறும்பன் aṟumpaṉ, *n.* [Cf. *arampaṉ* நப். அரம்பன்] Villain; தீயோன்.

அறுமர் aṟumar, *n.* [?] Oil-sellers; எண்ணெய் வாணிகர்.

அறுமன் aṟumaṉ, =*aṟumpaṉ*; =அறும்பன்.

அறை¹ aṟai, *n.* [*aṟu¹* + *-ai⁷*, அறு-த்தல், அறு-க்கை] 1. Cutting; வெட்டுதல் (மலைபடு. 118). 2. Destruction, ceasing, disappearing; ஒழிதல் (சிலப். 14, 30, அரும்.). 3. Excavation for destroying a structure; சுரங்கம் (திவ்ய. பெரியதி. 2, 5, 5). Hence: 4. Stratagem; வஞ்சனை (கலித். 143, 11). 5. Cave; மலைக்குகை. 6. Room, house; வகுக்கப்பட்ட வீட்டின் பகுதி, வீடு. 7. Camp; பாசறை. 8. Drawer of a table, square on a chess-board; பெட்டியின், சதுரங்கத்தின் உட்பகுதி. 9. Garden plot; பாத்தி. 10. Sledge, rock; பாறை (மலைபடு. 133). 11. Piece; துண்டம் (தொல். பொ. 467 உரை). 12. Grinding stone; அம்மி (பரிபா. 10, 83). 13. Curtain; திரைச்சீலை. 14. Tassel; குஞ்சம். —CPDS அறை-யி-இனும் °iṉām [+U. *ināṃ*, 'gift'] Rent-free land given to a temple store-keeper; கோயில் அறைகாரனுக்கு விட்ட மானியம். அறை-ய்-ஓலை °ōlai, Document specifying certain matters; வரையறை செய்யும் சாஸனம் (S. I. I. iii, 161). அறை-க்-கட்டளை °kaḍḍaḷai, [+*koḍḍ-aḷai*, 'provisions'] Temple stores; கோயிலில் நித்தியப்படி பண்டம் வைக்குமிடம். Lands granted to individuals rent-free, for being later transferred to temples; சிலகாலம் அநுபவித்துப் பின் கோயிலுக்கு விரும்படி அளிக்கும் இறையிலி நிலம் (G. Md. D. I, 200). அறை-க்-கட்டு °kaḍḍu, Apartment; வீட்டினுட்பகுதி. Temporary shed for festive occasions; உற்சவப் பந்தல். அறை-க்-கீரை °kīrai, A pot-herb, Amarantus tristis; கீரை வகை (திருமலைக். 160). அறைக்கீரை-க்-காய் °°kāy, Cucumber-fruits; வெள்ளரிக்காய். அறை-க்-குழந்தை °kuḻantai, New born infant; பிரசவ அறையை நீங்காத சிசு. அறை-க்-கூடம் °kūḍam, Vestibule of a house; தலைவாசல். அறை-கழித்தல் °kaḻittal, Ceremony of coming out of lying-in chamber; பிரசவ அறையினின்று வெளிவரும் சடங்கு. அறை-காரன் °kāraṉ, Temple store-keeper; கோயில் உக்கிராணக்காரன். அறை-குறை °kuṟai, Necessity; தேவை. Incompleteness; முற்றுப் பெறாமை. Trouble; துன்பம். அறைப்-பிள்ளை °piḷḷai, =*aṟaik-kuḻantai*; =அறைக்-குழந்தை. அறை-ப்-புரை °purai [+ *pur-ai*, 'inner room'] Room; உள்வீடு. அறை-போக °pōka, To be ruined; கெட்டழிய (சிலப். 20, 25). To be corrupted, seduced, as an army; சூழ்ச்சியால் மாறுபட (குறள், 764). To be undermined; கீழறுக்கப்பட. To be bewildered; மதிதப்ப. அறை-போக்கு °pōkku, Being ruined; கெட்டழிகை (திருவிளை. மாபாதக. 26). Escape; தப்பிப்போதல் (ஞானா. 46, 14). அறை-வகுக்க °vakukka, To become fistulous as an ulcer; புரைபோட (பரராசசேகரம், 230). அறை-வாசல் °vācal, Temple store-room; கோயில் உக்கிராணவறை. அறை-வாய் °vāy, Mountain pass; கணவாய் (புறம், 175). அறை-வீடு °vīḍu, Inner room, house; உள்வீடு. (Cath.) Presbytery; குருமனை.

Tel., K., M., *aṟa*; Cf. Su. *arah*, 'store in granary'. See *āro* in Walde—P. who tentatively puts under that imaginary root the S. *ara* (*arad*, *arē*), 'far'; L. *area*, 'open place'; OHG. *arin*, *erin*, 'pavement' etc.

அறைநன் aṟainaṉ, *n.* [id. + *(n)-aṉ⁵*] One who reaps; அறுப்போன் (புறம், 42).

அறை²-தல் aṟai, *4 v. tr.* [rt. *aṟ* + v. det. *-ai⁴*, 'to press down, hit, separate'. Other forms: *aṟ-u*, *aṟ-i*. Cf. *aḍ-i* — √அற் + -இ⁴, 'நெருங்கச் சேர்த்தல், அடித்தல், மிதித்தல்'. பிறவுருவங்கள்: அறு, அறி குறியன. நப். அடி-த்தல்] 1. To slap, strike; அடித்தல். 2. To beat as a drum; பறை முதலியன கொட்டுதல் (குறள், 1076). 3. To hammer as a nail; ஆணிமுதலியன கடாவுதல் (இரகு. இந்துமதி. 85). 4. To construct a mud wall by slapping on the mud; மண்சுவர் அடித்தல். 5. To utter, declare; சொல்லுதல் (கம்பரா. சிறப்புப். 4). 6. To cut in pieces; துண்டித்தல் (தொல். பொ. 467, உரை). 7. [*v. intr.*] To beat upon, dash; அலை, காற்று முதலியன மோதுதல் (சீவக. 2168). 8. To sound; ஒலித்தல் (நைடத. நாட். 13).

K. *are*; M. *aṟa*. Cf. Hit. *arai*, 'give an oracle'. Cf. S. *rava* = T. *aravam*³

அறை aṟai, *n.* [id.] 1. Slap, blow; அடி. 2. Dashing of waves &c.; மோதுகை. 3. Wave; அலை. 4. Sound; ஓசை (கந்தபு. நாட்டு. 31). 5. Spoken word; சொல் (நன். 458). 6. Reply; விடை (சி. சி. 8, 14). 7. Cutting, chopping; வெட்டுகை (மலைபடு. 118).

8. [*int.*] Exclamation expressing the sense of security; சேமத்தைக் காட்டும் ஒலிக்குறிப்பு (சீவக. 2180). —CPDS அறை-ய்.இட °iḍa, To challenge; போர அழைக்க, வாதி கூற. அறை-கூவ °kūva, Do; டை. To call voluntarily; வலிய அழைக்க (திருவாச. 8, 1). அறை-செய்ய °ceyya, To cut into pieces; துண்டாட (இரகு. சகர. 72). அறை-முறையிட °murai-yiḍa, To ventilate one's grievances; தன்குறைகூறி வேண்ட.

அறையோ! araiyō! (*int.*) 1. Exclamation of complaint, disappointment; முறையிடும் குறிப்பு (திவ். இயற். திருவிருத். 10). 2. Exclamation of joy; சந்தோஷக் குறிப்பு (திவ். திருவாய். 5, 1, 1). 3. Exclamation of oath used in wager; வஞ்சினங்கூறும் குறிப்பு (சீவக. 2514).

-அறை[3] -arai, *suff.* [*-ar-u* + *-ai*[7] — அறு + ஐ[7]] A stem-suffix meaning 'he, she or it that has lost or has not'; இழந்துவிட்டவன், -ள், -து, இல்லாதவன், -ள், -து எனும் அர்த்தமுள்ள ஒரு கடைநிலை. உ-ம்: "கண்ணறை".

-அறை[4] -arai, *part.* [*arai*, 'make to stick together, attach'—அறை-த்தல் =சேர்த்தல்] A particle of comparison; ஓர் உவமவுருபு. உ-ம்: "கரும்பறை மணித்தேரை", மிளைபொருந்த அழகிய தேரை (மணி. 20, 107).

**அன்** AN, *prim. rt.* [*a-*[2] + format. *ṉ*. —அ-[2] + ன்] To approach, touch, press, heave &c. Combined with the v. det. *-a* and *-u*, this root yields such forms as *an-ḍi*, *aṉu(ṅ)-ku* &c. Cf. *aṇ*. —சமீபித்தல், நெருக்குதல், தொடுதல், விட்டுவிட்டு மூச்செறிதல் ஆகிய பொருளுள்ள ஒரு தலையடி. -அ, -உ, எனும் வினைக்குறிகள் அணைந்து அனவு, அணுங்கு ஆகிய வினைச்சொற்களாகும். அண் எனும் அடி பார்.

To this T. root corresponds *3. an* in Walde—P. (I p. 56). The S. *an-iti*, 'he (she, it) breathes', *anilas*, 'wind'; Gr. *animos*, 'wind'; L. *animus*, 'spirit, soul'; E. *animal* &c. are derived from it.

அன்-[1] aṉ-, *prep.* [fr. *al*[1], 'what is not'—√அல், 'அல்லாத'] Tamil uses the original form *al* only in a few instances as prefix. The words that follow are according to S. usage. அன'கம்[1] °akam [+*akam*[4], 'sin'] What is sinless, pure; பாவமற்றது (கம்பரா. சடாயுவுயிர். 39). Quietude; சாந்தம். Beauty; அழகு. அன'கன் °akaṉ, God; கடவுள். Handsome man; அழகுள்ளவன். அன'கை °akai [+S. *aghā*. V. *akam*[4]] Woman free from sin; பாவமற்றவள். அன'ங்கம் °aṅkam [+*aṅkam*[1], 'limb'] What is incorporeal; உடலில்லாதது. Mind; உள்ளம். Atmosphere, sky; ஆகாசம். Arabian jasmine; மல்லிகை. Tuscan jasmine; இருவாட்சி. அன'ங்கன், அன'ங்கு °aṅkaṉ, °aṅku, Kama, or Cupid; மன்மதன். அன'சனம் °acaṉam [+S. *aś-ana*, 'food'. V. *acaṉam*[1]] (Jaina) Ceremony of fasting before giving up one's life; சைனரின் உண்ணாநோன்பு. அன'த்தம் °attam [+S. *arth-a*, 'utility'. V. *arttam*[2]] What is useless; பயனற்றது. Evil; பொல்லாங்கு. அன'த்தியயனம் °attiyayaṉam [+S. *adhy-ayana*, 'studying', V. *atti-yayaṉam*] Cessation of the study of Vedas &c.; வேதமுதலிய ஓதாது நிறுத்துகை. அன'திகாரி °atikāri [+S. *adhi-kārin*, 'person qualified'. V. *atikāri*] One who is not competent for studying &c.; உரிமையொழிந்தவன் (வேதா.சூ. 162). அனந்தாழ்வான் aṉanta-āḻvāṉ [*Ananta*, a serpent supporting the world + *āḻvāṉ*, 'lord'] The serpent Ādiśēṣa; ஆதிசேடன். அனந்த-சத்தி °anta-catti [+ *antam*[1], 'end' + S. *śak-ti*, 'ability', fr. *śak*. T. *tak-u*—'சத்தி[3]'] Omnipotence; வரம்பிலாற்றல். அனந்த-சதுட்டயம் °°catuḍḍayam [id. +S. *catuṣ-ṭayam*, 'collection of four'] The four divine attributes attained by the soul in liberation, viz: (1) அனந்த-ஞானம், ominiscience; (2) °தரிசனம், limitless vision; (3) °வீரியம், omnipotence; (4) °சுகம், infinite bliss (சீவக. 2846, உரை). அனந்த-சதுர்த்தசி °°caturttaci [+ S. *catur-daśa*, 'fourteen'] The 14th day of the bright fortnight of Bhādrapada when Vishnu is worshipped; பாத்திரபதமாச சுக்கில பட்சத்து 14-ம் தினம். அனந்த-சயனம் °°cayaṉam [*Anantan*, 'serpent' as above + *śay-ana*, 'bed', fr. *śī*, akin to T. *kiḍ-a*] The couch of Vishnu consisting of the coils of Ādiśēṣa; திருமாலின் படுக்கை. Trivandrum which has a shrine to Vishnu the Anantacayaṉaṉ; திருவனந்தபுரம். அனந்த-சாயி °°cāyi, Vishnu; விட்டுணு. அனந்த-நான்மை °°nāṉmai [fr. *nāl*, 'four'] (Jaina) = aṉanta-catuḍḍayam; = அனந்த-சதுட்டயம். அன'ந்தம்[1] °antam [See above] Indestructibility; அழிவின்மை. Infinity; அளவின்மை. What is boundless; அளவற்றது. Sky; ஆகாயம். A hundred thousand quardrillions; ஆங்கிலேய எண் கணக்கின்படி ஒன்று என்ற இலக்கத்தின்பின் 30 புள்ளி கொண்ட பேரெண். Peacock's crest; மயிற் கொண்டை. அனந்த-முடிச்சு °°muḍiccu, Kind of woman's ear ornament; பெண்கள் காதணி வகை. அன'ந்தரத்தில்'வன் °antarattil-avaṉ [+*antaram*, 'intermediate place'] Heir apparent, son; அடுத்த வழித்தோன்றல் (சடு, 10, 7, 5). அன'ந்தரம்[1] °antaram [id.] Afterwards; பின்பு. (Arch.) Collar piece; கொவி எனும் கட்டட உறுப்பு. அனந்தர-வாசி °°vāci [+S. *vāc-in*, 'expressing', fr. *vac*, T. *ōl-u*] Word meaning 'many'; பல எனும் பொருளைக் குறிக்கும் சொல் (தக்கயா. 73, உரை). அனந்தர-வாரிசு °°vāricu, [id. +U. *waris*, 'master, heir'] (Legal) Reversioner; அடுத்த பாத்தியதைக் காரன். அனந்த-லோசனன் °°lōcaṉaṉ [id. +S. *lōc-anam*, 'eye', fr. T. *veḷicc-am* + *-aṉ*[5]—'உலோசனம்'] Buddha as seeing all things; புத்தன். அனந்த-விபவை °vipavai [+S. *vi-bhava*, 'power'] Pārvatī; பார்வதி. அனந்த-விரதம் °°viratam [*Ananta*+S. *vrat-am*, 'oath'. T. *uṟuḷ-i* — 'விரதம்[1]'] Fast on Aṉanta-caturttaci; அனந்த சதுர்த்தசி நாளில் செய்யும் நோன்பு. அன'ந்தன் °aṉantaṉ [See *an-antam*] The endless One, God; முடிவில்லாதவரான கடவுள். Vishnu; திருமால். Siva; சிவன். Brahmā; பிரமன். Arhat; அருகன். One of the aḍḍa-mā-nākam; அட்டமாநாகத்தொன்று. Ādiśēṣaṉ; ஆதிசேடன். The grammarian Patañjali; பதஞ்சலி (கோயிற்பு. பாயி. 37). A prepared arsenic; கௌரிபாஷாணம். அனந்தன்-சம்பா °campā, A kind of paddy; பொங்கற் சம்பாவரிசி. அன'ந்தை °antai [+S. *antā*, *fem.* of *anta*] Earth; பூமி. An energy of Siva; சிவ சத்திகளு ளொன்று. A mystic centre in the body; தேகம் கீழ்வரும் ஒன்றான யோகஸ்தானம் (தத்துவப். 142). Trivandrum; திருவனந்தபுரம். Species of cassytha; கொத்தான் (மலைவ. மலை. 125). A small climbing nettle; சிறு காஞ்சொறி. Indian sarsaparilla; நன்னாரி. Indian acalypha; குப்பைமேனி. Harialli grass; அறுகம் புல். Chebulic myrobalan; கடுமரம். Gulancha; சீந்தில். Red species of Malabar glory-lily; செங்காந்தள். அன'ர்த்தம் °arttam [+S. *arth-am*, 'meaning'—'அர்த்தம்[2]'] What is without sense; பொருளில்லாதது. Worthless thing; பயனற்றது. Calamity, ruin; கேடு, அழிவு. அன'ர்ஹம் °arham [+S. *arha*, V. *aru-kam*[2]] What is unfit; தகுதியற்றது. அன'வத்தை °avattai [+S. *ava-sthā*, 'stability', V. *ava-ttai*] (Log.) Fallacy of endless regression; முடிவுபெறுமை

எனும் நேரமும் (வேதா. சூ. 135). அ
ன'வரதம் °avaratam [+ S. *avaratas*, 'behind, downwards', V. *avaram*] Incessantly; எப்பொழுதும். அனவரத-தானன் °°tāṉaṉ, A kind of measure for paddy &c.; நெல் முதலியன அளக்கும் மரக்கால்வகை (S. I. I. v. 153). அன'ன்னிய-கதி °anniya-kati [+ S. *anya*, 'other'. See *aṉṉiyam* + S. *gat-i*, 'going, refuge'] One who has no other refuge (than God); வேறு கதியற்றவன்—ள் (சூ. 9, 8, 7). அன'ன்னியம் °anniyam [id.] Being identical; வேறன்மை. அன'ன்னியார்ஹம் °°arham [V. *aṉ-arham*] That on which none else has a claim; வேறொருவருக்கு உரிமைபற்றிருப்பது (திவ். திருவாய். 6, 1, 1, பன்னீ.). அன'ன்னுவயா'லங்காரம் °annuvaya-alaṅkāram [+ S. *anvaya* (*anu-i*), 'succession', T. *iḷ-i* + *alaṉ-kāram*[1]] (Rhet.) Figure of speech in which a thing is compared to itself; இயைபின்மையணி (அணி. 2). அன'ன்னுவயம் °annuvayam [id.] (Log.) Fallacy of affirming the major and the middle terms without stating pervasion; ஒரு திருட்டாந்தவாபாசம்: "சாதன சாத்தியங்கள்மிற்கூட்டமாத்திரஞ் சொல்லாதே இரண்டனுடைய உண்மையைக் காட்டுதல்" (மணி. 29, 386–8). அன'னுபாடணம் °aṉupāḍaṇam [+ S. *anu-bhāṣ-aṇa*, 'repeating a proposition', fr. *bhāṣ*, cf. T. *pēc-u*] (Log.) Failure to repeat the proposition of an adversary for refuting it; பிறன் கூறிய பொருளை அநுவதிக்க மாட்டாமை எனுங் குற்றம். அனு'கதநாதம் °ākata-nātam [+ S. *ā-gata*, 'come' + S. *nāth-a*, 'husband'. Cf. T. *nattu*] Consort of Siva; பராசத்தி (சி. சி. 4, 34 சிவாக்.). அனு'கதம் °ākatam [id.] Not happened, the future; நிகழாதது, வருங்காலம். (Mus.) Variety of kirakam, or eḍuppu i. e. beginning a song after the principal beat of the time measure; தாள அடி முன் னும் பாட்டுப் பின்னுமாகவரும் எடுப்புவகை. [+ S. *ā-hat-a*, 'injured'] New cloth or saree; புதிய சீலை. (Yōga) A cakra in the body in the region of the heart; ஆதாரங்களுள் ஒன்று. அனு'குலன் °ākulaṉ [+ S. *ā-kul-a*, 'confused', said to be fr. *kul* < T. *kuḷ-ai* + *-aṉ*[5]] One who is self-possessed; கலக்கம் அற்றவர் (ஞானா. 10). அ
னு'சக்தி °ācakti [+ S. *ā-sak-ti*, 'attachment', fr. *sañj*, T. *taṅk-u*] Detachment; பற்றின்மை. அனு'சாரம் °ācāram [+ S. *ā-cāra*, 'conduct', fr. *car*. Cf. T. *kul-avu*] Departure from established usage; ஒழுக்கந்தவறு நடை. அனு'சிரயம் °ācirayam [+ S. *ā-śray-as*, 'resting place', fr. *śrī*, akin to T. *kiḍ-a*] What is without support; பற்றுக்கோடற்றது. அனு'சிருதன் °ācirutaṉ [id.] One who does not depend on others; பிறரிற் தங்காதவன். A manifestation of Siva; ஒரு சிவ பேதம். அனு'சிருதை °ācirutai [id.] One of the cōdaca-kalai or mystic centres in the body; ஒரு யோகக் கலை (தத்துவப். 142). A śakti of Siva; சிவசத்திகளுள் ஒன்று. அனு'தரம் °ātaram [+ S. *ādara*, 'respect', prob. fr. T. **āḍal-i*. Cf. *āḍal-koḍuttal*] Indifference, contempt; உபேட்சை. அனு'தரவு °ātaravu [? id.] Helplessness; தஞ்சக்கேடு. அனு'தி °āti [+ S. *ādi*, 'beginning', prob. fr. T. *aḍ-i*[1]] What has no beginning; தொடக்கமில்லாதது. What is from time immemorial; தொடக்கந் தெரியாதது. God; கடவுள். அனுதிக்-கரம்பு °°karampu, Immemorial waste land; நெடுங்காலம் சாகுபடியாகாத நிலம். அனுதி-காரணம் °°kāraṇam, Beginningless cause; ஆதியிடத்திலுள்ளது. அனுதி-சித்தன் °°cittaṉ [id. + S. *siddh-a*, 'accomplished' + *-aṉ*[5]] The eternally perfect One; தொடக்கமின்றிக் குறைவற்றிருப்பவன். அனுதி-சைவம் °°caivam, Saiva sect which postulates three eternal entities, God, soul and bond; பதி பசு பாசம் மூன்றும் தொடக்கமில்லாதன எனும் சைவமதம். அனுதி-சைவன் °°caivaṉ, Sadāśiva manifestation of Siva; சதாசிவமூர்த்தி. அனுதி-த்-தரிசு °°taricu; = aṉātik-karampu; = அனுதிக்-கரம்பு. அனுதி-த்-திட்டு °°tiḍḍu, Do; டி. அனுதி-நாதர் °nātar [id. + S. *nāth-as*, 'lord'. Cf. T. *natt-u*] A great Siddha, one of the navanāta-cittar; நவநாத சித்தருள் ஒருவர். அனுதி-நித்தம் °°nittam [id. + S. *nitya*, 'perpetual' said to be fr. *ni*, prob. akin to T. *nil*] What has no beginning and no end; தொடக்கமும் முடிவும் இல்லாதது. அனுதி-ப்-பஞ்சர் °°pañcar [id. + U. *banjar* < *vandhyā-dharā*] = aṉātit-taricu; = அனுதித்-தரிசு. அனுதி-பந்தம் °°pantam [id. + S. *bandh-as*, 'fetter', fr. *baddh*. Cf. T. *parr-u*] (Saiva) Eternal bondage of souls; என்றுமுள்ள பசுபந்தம். அனுதி-பாழ் °°pāḻ, Place in ruins from time immemorial; நெடுங்காலம் பாழ்பட்ட இடம். அனுதி-பீடு °°pīḍu, = aṉātit-tiḍḍu; = அனுதித்-திட்டு. அனுதி-பெத்த-சித்துரு °°petta-citturu [id. + S. *cit*, 'intelligence', cf. T. *kett-u* + *ur-u*, 'form'] (Saiva) Soul; ஆன்மா. அனுதி-பெத்தன் °°pettaṉ, (Saiva) Individual soul; சீவான்மா. அனுதி-போதம் °°pōtam [id. + S. *bōdh-as*, 'wisdom', fr. *budh*. Cf. T. *puṭ-u*] (Saiva) Freedom from fetters by nature; இயல்பாகவே பாசங்களின் நீங்குகை (சி. போ. பா. 6, 2). அனுதி-முத்தன் °°muttaṉ [id. + *mukt-a*, 'freed', fr. *muñc*, T. *minc-u* + *-aṉ*[5]] (Saiva) God; கடவுள். அனு'தேயம் °ātēyam [id. + S. *ā-dēya*, 'receivable', fr. *dā*, T. *tā*] (Jain) A pirakiruti; பிரகிருதி தத்துவ வகை (மேருமந். 713 உரை). அனு'மயம் °āmayam [id. + S. *āma-ya*, 'disease', fr. *am*, T. √*am*] Freedom from disease; நோயின்மை. அனு'யாசம் °āyācam [id. + S *ā-yās-as*, 'effort', fr. *yas*, perh. akin to T. *ec-ai* in the sense of moving, 'being perplexed'?] Absence of pain; வருத்தமின்மை. அனு'ரதம் °āratam, for aṉ-avaratam; = அன'வரதம். அனு'ரிய-திட்டம் °āriya-tiṭṭam; Creat; இலவேம்பு. அனு'ரியன் °āriyaṉ, One who is not an Ariya; ஆரியனல்லாதவன். அனு'வசியகம், அனு'வசியம் °avaciyakam, °vaciyam [+ S. *āvaśya*, fr. *a-vaśya*—அவசியம்] What is unnecessary; இன்றியமையாததல்லாதது. அனு'விருட்டி, °ஆவிருஷ்டி °āviruḍḍi, °uṣṭi [+ S. *ā-vriṣ-ṭi*, 'raining', fr. *vriṣ*, also *mriṣ* and *miṣ*? Cf. T. *maḻ-ai*] Draught; மெயலின்மை. அனு'விலன் °āvilaṉ [+ ? S. *āvila*, 'turbid'] The planet Venus as being lustrous; சுக்கிரன். அனு'ன்ம வாதம் °āṉma-vātam [+ S. *ātman*, 'soul' + *vād-a*, 'tenet', fr. *vad*, T. *ōt-u*] (Buddh.) Doctrine which denies the existence of souls; ஆன்மா இல்லை எனும் பௌத்த கொள்கை. அனு'ன்மா °āṉmā, What is not soul; ஆன்மாவின்வேறான அசித்து. அ
னி'ச்சை °iccai [+ S. *ichch-ā*, 'desire', fr. *iṣ*. Cf. T. *il-u*] Absence of desire; விருப்பின்மை. அனிச்சை-ப்-பிராரத்தம் °°pirārattam [+ S. *pra-ārabdh-a*, 'begun', fr. *ā-rabh*, 'to take hold of'] Past karma which induces one to enjoy fruits against one's will; அபுத்திபூர்வமாய் ஒருவரைப்புசிப்பிக்கச் செய்யும் முன்வினை. அனி'ட்டம், °இஷ்டம் °iddam, °iṣṭam [+ S. *iṣṭ-am*, fr. *iṣ*. See above] What is undesirable; வெறுப்பானது. அனி'ருதம் °irutam [+ S. *ṛi-tam*, 'settled order'] Impermanence; நிலையாமை. (?) Ploughing; உழவு. அனி'ச்சுரத்துவம் °iccurattuvam [+ S. *iś-varas*, 'lord' + *-tuvam*[3]] State of being dependent; மேலானதுருவரிற் தங்கியிருத்தல். அனி'சுவரவாதி °icuvara-vāti [id. + S. *vād-in*, 'upholder', fr. *vad*. T. *ōt-u*]

Atheist; கடவுள் இல்லை என்போன். அனு'சிதம் °ucitam [+S. *uc-ita*, 'customary, fitting'] What is unsuitable; தகுதியற்றது. Falsehood; பொய். அனு'க்த-சித்தம் °utta-cittam [id + S. *uk.ta*, 'said', fr. T. *vac*, *ōt-u*+ *siddh.a*, 'obtained'] What is implied; சொல்லாமலே போதருவது. அனு'த்தமம் °uttamam [+S. *ut-tam-am*, superlative of *ud*, 'high', T. *ut-i*] What is not the best; மேற்றரமல்லாதது. That, beyond which there is nothing better; தனக்கு மேற்பட்டதொன் றில்லாதது. அனு'த்தரம் °uttaram [+ S. *ut-tara*, 'higher', comp. of *ud*, 'above', T. *ut-i*] What is excellent; மேலானது. An evasive reply; மற்றொன்று கூறும் மறுமொழி. அனு'தாத்தம் °utāttam [+ S. *ud-ātta* for *ud--ā-datta*, 'raised'] Grave accent; படுத்தல் ஓசை. அனு'பபத்தி °upapatti [+S. *upa-patt-is*, 'accomplishing'] (Log.) Inconclusive argumentation; சித்தாந்தமாகாத நியாயம். அனு'பமை °upamai [+S. *upa-mā*, T. *oppu-mai*, 'similarity'] What is incomparable; தனக்கு நிகரில்லாதது. அனு'பயோகம் °upayōkam [+ S. *upa-yōgas*, 'use', fr. *yuj*, T. *okk-a*] Unserviceableness; பிரயோசனமின்மை. அனு'பலத்தி °upalatti [+S. *upa-labdh-is*, 'acquisition (of knowledge')] (Log.) Non-perception or non-recognition; உண்டென்றும் அறிவின் இன்மை. A sophism trying to establish a fact from the impossibility of perceiving the non-perception of it; "சிதமின்மை பனியின்மையைக் காட்டல்போல, பிறிதொன்றின் இல்லாமையைக் காட்டும் ஒன்றுமேயில்லாமையாகிய ஏது" (சி. சி. அளவை. 10, சிவாக்.). அனூ'ரு °ūru [+ S. *ūrus*, 'thigh', ultimately fr. T. *val-ai*] A cripple; முடவன். Charioteer of the Sun; சூரியன் தேர்ப்பாகன். The planet Mercury; புதன். அனே'கம் [+ S. *ēk-as*, 'one', cf. T. *okk-a*] Not one, many; பல. அனேகா'ந்த-வாதி °°anta-vāti [+id. +S. *anta*, 'end'. See *antam* + *vād-in*, 'speaking', fr. *vad*, T. *ōt-u*] (Jaina) A Jain as looking at things from various points of view; ஆருகதன். அனேகா'ந்திகம் °°antikam [id.] Many ways; பலவிதம். = anaikāntikam; = அனைகாந்திகம். அனேகா'ன்ம-வாதம் °°āṉma-vātam [id.+ S. *āt-man*, 'soul'+*vāda*, See above] Doctrine which maintains the existence of individual souls; ஆன்மாக்கள் பலவுண்டென்றும் மதம். அனேகே'ச்சுரவாதி °°iccuravāti [id. +S. *īs-varas*, 'lord'+*vād-in*, as above] Polytheist; பல கடவுள் உண்டென்போன். அனை'க்கியம் °aikkiyam [+ S. *aik-yam*, 'oneness', fr. *ēka*, prob. T. *okka*] Want of union, anarachy: ஒற்றுமையின்மை, ஊர்க் கலகம். அனை'காந்திகம் °aikāntikam [V. *an-ēkāntikam*] (Log.) Fallacy of the ētu not being invariably associated with the cāttiyam; விபக்கத்தில் செல்லி பக்க சபக்கங்களி லிருந்தலாகிய நியமமில்லாத ஏதுப் போலி.

-அன்[1] -aṉ, *part.* [prob. fr. *-atu*[2]—ஒப் -அது[2]] A sign of the genitive case; ஐந்தனுருபு. உ-ம்: "ஒன்றன்கூட்டம்".

-அன்[3] -aṉ, *part.* [for *-eṉ* <*ēṉ*. Cf. *-al*[1]— = -என் <-ஏன்] Verb ending of the 1st person singular; தன்மை ஒருமை வினைவிகுதி. உ-ம்: 'யான் வருவன்'.

-அன்[4] -aṉ, *part.* [for *āṉ*[3] — = ஆன்[3]] Verb ending of the rational class in the 3rd person singular masculine; ஆண்பால் வினைவிகுதி. உ-ம்: 'அவன் வருவன்'.

-அன்[5] -aṉ, *suff.* [fr. *-atu*[2]— <-அது[2]] 1. Stem-suffix of the rational class masculine singular; ஆண்பாற்பெயர்க் கடைநிலை. உ-ம்: 'மலையன்'. 2. Of irrational class singular; அஃறிணை ஒருமைக் கடைநிலை. உ-ம்: 'கரம்பன்'. 3. A variation of the stem-suffix *-al*; -அல்[7] என்னும் கடைநிலையின் விகாரம். உ-ம்: மரன் = மரம்.

-அன்[6] aṉ, *part.* [fr. *avaṉ*. Cf *āṉ* — <அவன்] Ending of a participal noun masculine singular; வினையாலணையும் ஆண்பாற் பெயர் விகுதி. உ-ம்: 'வந்தவன்'.

Cf. the S. suffix *-an*, (in the strong cases *-an*), which denotes the person acting as in *sneh-an*, 'friend' as loving, *raj-an*, 'king' as ruling. Also Gr. *-an*, *-en*, *-en*, *-on* and L. *-ōn*. See Bopp (III p. 1317 & seq.) who regards the S. *suff.* *-in* as in *vad-in* as a weakened form of *-an* (ibid. p. 1323).

-அன்[7] -aṉ, *part.* [prob. a form of *atu*[1], — = அது[1]] A flexional augment; ஒரு சாரியை. உ-ம்: 'வந்தனன்'.

அன்பகம், அன்பகர் aṉpakam, °pakar, *n.* Elephant creeper; சமுத்திரப்பாலை.

அன்பு aṉpu, *n.* [fr. *aṉpu*, 'to approach' — <அண்பு-தல்] 1. Attachment, love; தொடர்புடையார்மாட்டு உண்டாகும் பற்று. 2. Devotion; பத்தி (திருநூற். 86). 3. Grace; கருணை. —CPDS அன்ப'கம் °akam [+*akam*, 'breast, heart' + *-am*[2]] Loving person; சிநேகபாவமுடையவர். அன்பு-த்-தளை °taḷai, Bond of love; நேசபாசம். அன்போ'ரு °ōr-uru, Love embodied; நேசமே உருவானவன். அன்பு'டைக்-காமம் °uḍai-k-kāmam [+ *uḍai(ya)*, 'possessing' + *kām-am*, 'love'] Love that is equal and reciprocal; ஒத்த அன்பு (நம்பி. அகப். 4). அன்பு'டைமை °uḍaimai, Affection; நேசப்பற்று. அன்பு'றுத்த °urutta, To create affection; சிநேகம் உண்டாக்க. அன்பு-காட்ட, °செய்ய, °வைக்க °kāḍḍa, °ceyya, °vaikka, To be affectionate; பற்றுதல்கொள்ள. அன்பு-கூற °kūra, To abound in affection for; மிக நேசிக்க. அன்பு-சாதிக்க °cātikka, To cultivate love; சிநேகத்திற்பழக.

M. *anpu*; K. *aṉpu*.

அன்பன் aṉpaṉ, *n.* [id. +-*aṉ*[5]] 1. Friend; நேசன். 2. Husband; கணவன். 3. Pious man; பக்தன்.

அன்பி'லி aṉp'ili, *n.* [id. + *-il-i*— + -இலி] One who is devoid of affection; நேசமில்லாதவன்-ள் (கலித். 86).

அன்மதம் aṉmatam, *n.* [Cf. *kaṉmatam*] Rock alumn; கன்மதம்.

அன்மயம் aṉmayam, *n.* [prob. *aṉmai*, below, with *-am*[2] added] 1. Opposition; மாறு (கம்பரா. மருத்து. 92). 2. Doubt; சந்தேகம்.

அன்மை aṉmai, *n.* [*al*[1] + *-mai*[2]] 1. Negation of identity, opp. *iṉ-mai*; இது அல்ல அது என்ற குறிப்பு. 2. Evil; தீமை (சேதுபு. முத்தீர். 8).

அன்மொழித்-தொகை aṉmoḻit-tokai, *n.* [*al*[1], 'not' + *moḻ-i*, 'word' + *tok-ai*, 'compound'] (Gram.) Last of the six kinds of elliptical compounds which is other than the preceding five and is used to express something else figuratively as *poṟroḍi*, 'golden bracelets' which signifies 'woman'. V. *tokai-nilai*; ஐந்தொகைகளின் ஒன்றன் இறுதியில் நின்ற பெயர் மேலும் ஒரு சொல்லை அவாவி நிற்பது (தொல். சொல். 418).

அன்யா'பதேசம் aṉyā'patēcam, *n.* [S. *anya*, 'other' + V. *apa-tēcam*—அன்னிய+ அப-தேசம்] 1. Allegorical presentation of one idea under the image of another; உள்ளதை யல்லாத வேறொரு பொருள்காட்டும் உவமானம். 2. Innuendo; சைகைக் குறிப்பு.

அன்வயத்தர் aṉvayattar, *n.* [V. *aṉu-vayam*—அன்னுவயம் பார்] Relatives; சுற்றத்தார் (S. I. I. v. 325).

அன்வயம் anvayam, *n.* [V. *annuvayam*—அன்னுவயம்] (Jaina) What is inherent and inseparable; தாதான்மிய குணம் (மேரு. 698).

அன்வாதேயம் anvātēyam, *n.* [*anu*, 'after'+S. *ā-dhēya*, 'to be placed, given', fr. *dhā*, akin to T. *tāḷ*—அனு+ஆதேயம்] Gifts to a woman by her and her husband's relations after marriage which become part of her Strī-dhana; கலியாணத்தின் பின் சுற்றத்தவர்களாற் பெண்ணுக்குக் கிடைக்கும் சீதனப் பொருள்.

அன்றமை anramai, *n.* Air; காற்று.

அன்றி anri, *conj.* [*pple.* of *al*[1] V. *anru*[3]—அல்[1]] 1. Unless; அல்லாமல். 2. Besides; மேலும். 3. Or; அல்லது. —CPDS அன்றி-ய்-அனைத்தும் °anaittum, All those; அவையெல்லாம் (தொல். சொல். 449). அன்றி-ப்-உரைக்க °uraikka, To speak in opposition; மாறுபட்டுச் சொல்ல (தேவா. 743, 10).

அன்றிக்கே °anrikkē, *conj.* =*anri*; =அன்றி.

அன்றியில் anriyil, *adv.* Except; அன்றி.

அன்றியும் anriyum, *conj.* =*anri*; =அன்றி.

அன்றில் anril, *n.* [V. *akanril* where read *akanru* for *akanu*, a printers' error— =அகன்றில்] 1. Anril bird, male or female, very familiar in Indian writings as a standard of inseparable love; கிரவுஞ்சப் பட்சி. உ-ம்: "அன்றிலும் பேடையும் போல் அன்புற்றுவாழ்ந்திருந்தார்". 2. Peacock; மயில். 3. The 19th Nakṣatra; மூலைட்சத்திரம்.

அன்று[1]-தல் anru, 5 *v. tr.* [prob. fr. *anal-u*—ஒப். அனலு] 1. To be angry with; கோபித்தல் (திவ். இயற். திருவிருத். 18). 2. To hate; பகைத்தல் (திவ். பெரியதி. 4, 3, 8). 3. To be contrary; மாறுபடுதல் (சி. சி. 1,42, வெருா.).

அன்றினர் anrinār, *n.* [id.+ -*in*-[3] + -*ār*[9]] Enemies; பகைவர் (தேவா. 306, 10).

அன்று anru, *n.* [id.] Difference, incongruity; மாறுபாடு. (அருட்பா. அருட்பெருஞ்சோதி. 621).

அன்று[2] anru, *n.* [fr. *at-u*[1], 'that (day)' nasalized — அது[1] (நாள்), மெல்லொற்றுமிக்கது] That day, then, any time but the present. Cf. *inru*, *enru*; அந்நாள், அப்போது, முன்னுள். —CPDS அன்ற'ன்று °anru, From day to day, daily; நாடோறும். அன்ரு'டகம், °ஆடம், °ஆடு °āḍakam, °āḍam, °āḍu [id.+ *āḍ-am* for *āḍḍ-am*, 'moving'?] Daily; அன்றன்று. அன்ருடு-காசு anrāḍu-kācu, Current coin; வழங்கும் நாணயம். அன்ரு'ள்-கோ °āḷ-kō [+ *āḷ* (*um*), 'reigning' + *kō*, 'king'] Reigning monarch; அப்பொழுது ஆளும் அரசன். அன்றெ'ரிந்தான் °erintān [id. + *er-i*, 'to wither'] Species of Desmodium; நெருப்புக்குடி. அன்று-முதல் °mutal, From that day forward; அந்நாள்தொட்டு.

K. *andu*.

அன்றை anrai, *n.* [id.] That day; அந்நாள். —CPDS அன்றைக்க'ன்று °anru, From day to day; அன்றன்று. அன்றை-த்-தினம், °நாள் °tinam, °nāḷ, That day; அந்நாள்.

அன்று[3] anru, *defective v.* [3rd pers. *sing.* of *al*[1]] 1. It is not that (but something else) Cf. *inru*[3]; அதுவல்ல வேறொன்று. ஒப். இன்று[3]. 2. For *anri* in poetry; = அன்றி உ-ம்: "காணன்று போகி" = காணாதிப்போகி.

அன்றே anrē, *ind.* [id.+-*ē*[1]] Is it not so? அல்லவா? (தொல். சொல். 282 சேனு.).

-அன்று[4] anru, *defective v.* [prob. for *arru*[1]—ஒப். அற்று[1]] A verbal form affirming a fact; உறுதிப்பாட்டைத் தரும் ஒரு வினைப் பகுதி. உ-ம்: "வந்தன்று".

அன்ன anna, *n.* [for *anta*, 'that'— = அந்த < அது] 1. Such or similar things; அத்தன்மையானவை. 2. [*v.* denominative] Are of the same kind; ஓர் அஃறிணைப் பன்மைக் குறிப்பு வினைமுற்று. உ-ம்: "பிறவும் அன்ன". 3. [*part.*] An appellative word of comparison; ஓர் உவமவுருபு. உ-ம்: "எரி பகைத்தன்ன தாமரைப் பழனம்" (அகம், 106). —CPDS அன்னுழி °uḷi, At that time; அப்பொழுது. அன்னுழை °uḷai, To that place; அவ்விடம்.

அன்னணம் annaṇam, *adv.* [id.+ -*aṇam*[3]—ஷை.+ -அணம்[3]] In that manner; அவ்விதம்.

அன்னவன் annavan [id.+*avan*[2]—ஷை+அவன்[2]] 1. Such a man; அத்தன்மையன். 2. He who resembles; ஒத்தவன் (சீவக. 1372).

அன்னஉன்னு annaunnā, *n.* [Port. *anona*, probably brought from Mexico] Bullock's heart or custard-apple; கற்போன்ற இனிய சதையுள்ள ஒரு பழம்.

அன்னதாழை annatāḷai, V. *annāci*; அன்னாசி.

அன்னபம் annapam, *n.* Banyan tree; ஆலமரம்.

அன்னம்[1] annam, *n.* [S. *annam*, 'what is eaten', fr. *ad*. Cf. T. *eḍ-u* and *irai*] 1. Victuals, boiled rice; உணவு, சோறு. 2. Water; நீர். 3. Faeces; மலம். 4. Place where a person had a meal; உணவருந்தியவிடம். 5. Earth; பூமி. —CPDS அன்ன-வ்-ஆசயம் °ācayam [+S. *ā-śay-as*, 'seat', fr. *śi*. Cf. T. *kiḍ-a*] Stomach; இரைப்பை. Voracious man; பெருந் தீனிக்காரன். அன்ன'தரம் °ātaram [+ *ātar-am*, 'desire'] Desire for food; உணவில் ஆசை. அன்ன'பிஷேகம் °apiṣēkam [V. *api-ṣēkam* p. 105] Ceremony of pouring rice on an idol; சுவாமிக்கு அன்னத்தாற் செய்யும் திருமஞ்சனம். அன்ன'லத்தி °ālatti [+*ālatt-i*, 'taking round'] Waving balls of boiled rice coloured with saffron, before an idol or a newly married couple; மஞ்சற் சோற்றுருண்டைகளாற் தெய்வம், மணமக்கள் இவர்கள் முன் சுழற்றுதல். The balls of rice as above; அவ்வித சோற்றுருண்டைகள். அன்ன'லாத்தி °ālātti, The above with lamps made of boiled rice; சோற்றினால் அமைத்த விளக்கை முன்போலச் செய்தல். அன்ன-வ்-ஊறல் °ūral, Water in which rice has been boiled; வடிகஞ்சி. அன்ன-க்-களை °kaḷai, Fatigue resulting from over-eating or hunger; மிகவுணவால் அல்லது பசியால் வரும் சோர்வு. அன்ன-க்-காவடி °kāvaḍi [+*kāv-aḍi*, fr. *kāv-u*+*taḍ-i*, 'pole for carrying burdens'] Pole with two baskets suspended at the ends for receiving boiled rice for charity; சோற்றுப் பிச்சை பேற்றும் காவுதடி. Inām for collecting and distributing it; அவ்வாறு பிச்சையெடுத்துப் பங்கிடுவோருக்குரிய இறும். Destitute person; தரித்திரன். அன்ன-க்-கொடி °koḍi, Flag hoisted on places where food is distributed free; தருமச்சோறிடும் இடத்தைக்காட்டும் துவசம். அன்ன-கந்தி °kanti, Colic, dysentery; வயிற்றுக்குத்து, வயிற்றுளைவு. அன்ன-கோட்டம் °kōḍḍam, Granary, களஞ்சியம். அன்ன-ங்-கோர்க்க °kōrkka [+*kō*, 'to imbibe'] To be in the milk, as grain of paddy; நென்மணி பால்பற்ற. அன்ன-சத்திரம் °cattiram [+ S. *sattram*, said to be fr. *sad*. Cf. *cāvaḍi*] Choultry;

சோறிடும் சாவடி. அன்ன-சலம் °calam, food and water, sustenence; போஷ ணம். அன்ன-சாரம் °cāram [+ S. *sār-as*, 'essence'] Rice gruel; கஞ்சி. அன்ன-சிராத்தம் °cirāttam [+ S. *srāddh-am*, 'observance of faith', fr. *śrat*. Cf. T. *karu-ttu*] Offering of cooked food to Brahmans in honour of the manes; இறந்தோர் பொருட்டுப் பிராமணருக்குக் கொடுக்கும் பாகஞ்செய்த உணவு. அன்ன-சுத்தி °cutti [+ S. *śuddh-is*, 'purification', fr. *śudh*, akin to T. *cuḍ-u*] Pouring ghee over food for purifying it; சோற்றின்மீது நெய் தெளித்தல். அன்னத்-தியாகி °tiyāki [+ *tyāg-in*, 'liberal'] A title; ஒரு பட்டப் பெயர். அன்ன-த்-துரோகம் °turōkam [+S. *drōh-as*, 'treachery', fr. *druh*. Cf. T. *tuḍ-u-kk-u*] Treachery to a house where one has been fed; உண்ட வீட்டுக்கிரண்டகம். அன்ன-த்-துவேஷம் °tuvēṣam [+ S. *dvēṣ-as*, 'hate,' fr. *dviṣ*. Cf. T. *tuv-al*] Dislike for food; உணவில் வெறுப்பு. அன்ன-தாதா °tātā [+S. *dā-tā*, 'giver,' fr. *dā*, *dad*, T. *tā*, *tar-u*] One who gives food in charity; உணவு அளிப்போன். அன்ன-தானக்-குறுவை °tāṉak-kuṟuvai [+S. *dā-nam*, 'gift' (See above) + *kuṟu-vai*, 'species of paddy'] A kind of paddy that matures in three months; மூன்று மாதத்தில் விளையும் நெல்வகை. அன்ன-தானச்-சம்பா °tāṉac-campā, Variety of campā paddy; சம்பா நெல்வகை. அன்ன-தானம் °tāṉam [See above] Giving away food in charity; உண வளிக்கை. Anna-tāṉak-kuṟuvi; அன்ன-தானக் குறுவை. அன்ன-நீர் °nīr, Water allowed to stand over cooked rice overnight; பழந் தண்ணீர். அன்ன-ப்-பால் °pāl, Water strained from boiling rice; அரிசி கொதிக்கும்போது எடுக்கும் கஞ்சி. அன்ன-ப்-பிராசனம் °pirācaṉam [S. *pra*, 'before', T. *puṟ-a* + *aś-ana*, 'eating',—'அசனம்'] First feeding of an infant with boiled rice; குழந்தைகளுக்கு முதன்முதற் சோறூட்டும் சடங்கு. அன்ன-பானம் °pāṉam [food and drink] Sustenence; ஜீவாதாரம். அன்ன-பூமி °pūmi, Large quantity of cooked rice; சோற்றுக் குவியல். அன்ன-பூரணி °pūraṇi, Goddess of plenty; துர்க்கையின் ஒரு பேதம். அன்ன-பேதி °pēti [+S *bhēd-in*, 'what dissolves'—கரைப்பது] Green vitriol; ஒரு மருந்துச் சரக்கு. அன்னம்-பிடிக்க °piḍikka, = aṉṉam-kōrkka; அன்னங் கோர்க்க. அன்ன-மய-கோசம் °maya.kōcam [+*may-a*, 'made of' + S. *kōś-am*, 'sheath,' T. *kuḷāy*] (Phil.) Material or physical body; பஞ்சகோசத்துள் ஒன்று (சி.சி.பர.மாயா. 8, உரை). அன்ன-மலம் °malam [+ *mal-am*, 'anything turbid, thick'] Conjee; கஞ்சி. அன்னம்-அழகியரி °aḻaki-y-ari, Kind of rice eaten by the wealthy; உயர்தர அரிசிவகை. அன்ன-ரசம் °racam [+ S. *ras-as*, 'juice'. Cf. T. *ūṟ-u*] Essence of food; உணவுச்சத்து. அன்ன-வசம் °vacam, Sleep induced by a full meal; வயிறு நிரம்ப உண்டதால் ஆகும் உறக்கம் (திவ். திருவாய். 3, 7, 10). அன்ன-வஸ்திரம் °vastiram, [+S. *vas-tram*, 'clothing'] Necessaries of life; உணவுடை கள். அன்ன-வாகி °vāki [+ S. *vāh-in*, 'carrying', fr. *vah*, T. *ūkk-u*] Canal from the mouth to the stomach; தொண்டையினின்று இரைப் பைக்குச் செல்லும் குழல். அன்ன-வேட்டி °vēṭṭi, A vessel for serving rice; சோறு பரிமாறும் பாத்திரம். அன்ன-வேதி °vēti, = aṉṉa-pēti; = அன்ன-பேதி.

அன்னம்² aṉṉam, *n*. [prob. fr. *añcam*¹. But cf. M. *annal*, 'bird of stately walk'—அஞ்சம்¹] 1. Species of swan celebrated for its gait; மெத்தென நடையுள்ள ஒரு புள். 2. The jewel: annap-pū; ஒருவகையணி (S. I. I. ii, 15). 3. Yak: Bos grunniens; கவரிமா.—CPDS அன்னம்-உயர்த்தோன் °uyarttōṉ Brahmā as having a swan on his banner; பிரமன். அன்ன-வ்-ஊசல் °ūcal, swing (shaped like a swan?) turned by a person unseen; மறைந்து நின்று ஆட்டும் ஊஞ்சல். அன்ன-வ்-ஊர்தி °ūrti, Swan vehicle (of Brahmā); அன்னமாகிய வாகனம். Brahmā; அன்னத்தை ஊரும் பிரமன். அன்ன-க்-கொடியோன் °koḍiyōṉ, Brahmā; பிரமன். அன்ன-க்-கொண்டி °koṇḍi, Swan-shaped brass vessel; அன்னவடிவான பாத்திரம் (M. E. R. 22 of 1920). அன்ன-க்-கொப்பு °koppu, Ear ornament with design of swan, worn on the top of the helix; மேற்காதணிவகை. அன்ன-தீபம் °tīpam, Lamp having the shape of a swan; கோயில் விளக்குவகை. அன்ன-ப்-பூ °pū, A head ornament worn by women; மகளிர் காதணி வகை. அன்ன-பக்கம் °pakkam, A hand pose; அவிநயக் கைகளுள் ஒன்று (சிலப். 3, 18, உரை). அன்ன-வாய்க்-கை °vāyk-kai, (Nāṭya) Posture in which the thumb and the fore and middle fingers are joined and the rest point upwards; அவிநயக்கைவகை (பரத. பாவ. 34). அன்ன-வில்லை °villai [+ *vill-ai*, 'a circular thing'] A head ornament; தலையணிவகை.

அன்னம்³ aṉṉam, *n*. [for *aruṇam*¹ — = அருணம்¹] Gold; தங்கம்.

அன்னம்⁴ aṉṉam, *n*. [for *aruṇam*² — = அருணம்²] Water; நீர்

அன்னம்பாறு-தல் aṉṉampāṟu, 5 *v. intr*. [cf. *alamāṟu* under *alamaru* —ஒப். அலமாறு-தல்] To lament; புலம்புதல்.

அன்னமின்னு, அன்னவன்னு aṉṉamiṉṉā, aṉṉavaṉṉā, = *aṉṉa uṉṉā*; = அன்ன உன்னு.

அன்னயம் aṉṉayam, *n*. [cf. *aṉṉapam* — ஒப். அன்னபம்] Banyan; ஆலமரம்.

அன்னல் aṉṉal, *n*. [fr. *aṉal* — <அனல்] 1. Sunshine; வெயில். 2. Smoke; புகை (சூடா. 8, 5, 4).

அன்னவம் aṉṉavam, *n*. [S. *arṇav-as*, 'rising sea,' fr. *ṛi*, T. *eṟ-i* —எறிவது] Sea; கடல்.

அன்னாசி aṉṉāci, *n*. [Port. *ananas* <Brazilian, *nanas*] 1. Pine-apple, native of Mexico and Panama; பழச்செடிவகை. 2. [E. *anise*] Illicium verum; ஒருவகைச் செடி.

அன்னாசு aṉṉācu, *n*. [Hind. *anas*] Chinese anise: Illicium anisatum; பெருஞ்சீரகம்.

அன்னார் aṉṉār, *n*. [cf. *kal-nār*] Asbestos; கல்நார்.

அன்னிசு aṉṉicu, *n*. [for *aṇṇicu* — = அண்ணிசு] Proximity; சமீபம்

அன்னியம் aṉṉiyam, *n*. [prob. fr. T. √*aṇ*: *aṇṇiya* (*tu*), 'what is near', by antith. 'what is different' (See p. xxiv) — 'அன்னியது', எதிர் நிலையால்; 'வேறானது'] 1. Being separate; வேறாயிருத்தல் (சி. போ. 7, 1, 1). What is different; வேறானது. 2. What is foreign; பரதேசத்துள்ளது. 3. = aṉṉiyapuḍḍam; = அன்னிய புட்டம். —CPDS அன்னியா'ப தேசம் °apatēcam [+S *apa-dēś-as*, 'statement'] Obvious meaning, exoteric sense; வெளிப்படையான பொருள். அன்னியோ'ன்னியம் °aṉṉiyam, Reciprocity, fellowship; ஒன்றற் கொன்று கொள்ளும் சம்பந்தம், ஒற்றுமை. அன்னியோன்னியா'ச்சிரயம் °°āccirayam [id. S. *ā-śraya*, 'dependence,' fr. *śri*, T. *kiḍ-a*] (Log.) Fallacy of mutual dependence; ஒன்றையொன்று பற்றுதல் என்னுங் குற்றம். அன்னியோன்னியா'பாவம் °°apāvam [id. +S. *a-bhāva*, 'non-existence'] (Log.) Absence of mutual relation, as

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
38289
நூலகம்

குடத்திற் படமில்லை, படத்திற் குடமில்லை, "There is not the (substance of) cloth in the pot nor (that of) pot in the cloth"; ஒன்றிலொன்றில்லா திருத்தல். அன்னியோன்னியா'லங்காரம் °°alaṅkāram [id. + alaṅkāram, 'rhetorical figure'. See p. 149]. Figure of speech in which one thing is made sub-servient to another, as திங்கள் இரவால் விளங்கும், செப்பிய அத்திங்களினால் கங்குல் மிக விளங்கும், "the moon is made to shine by the night and the night by the moon"; ஒன்றுக்கொன்றுதவியணி (அணி. 43). அன்னிய-க்-குடி °kuḍi, Non-resident cultivator; புறக்குடி. அன்னிய-காமி °kāmi [+ S. kām-is, 'lover,' fr. T. kām-am] Adulterer; விபசாரி. அன்னிய-குண-சகனம் °kuṇa-cakaṉam [+kuṇ-am, 'character' +S. sah-anam, 'endurance,' fr. sah. Cf. T. tāṅk-u] Enduring the infirmities of others with patience; பிறர் குறைகளைப் பொறுத்தல், 14 தபசான விருத்திகளுள் ஒன்று. அன்னிய-சாகன் °cākaṉ [+S. śākhā, 'branch'. Cf. K. kokki + -aṉ⁵] Man of a different sect or caste; பதிதன், வேற்றுச் சாதியான். அன்னிய-த்-திரி °tiri [+ S. strī, for sō-trī, 'bringing forth children', prob. akin to T. cūl] Another's wife; பிறன் மனைவி. அன்னிய-தரம் °taram [+S. tara, 'something added', T. tur-a] Either of two; இரண்டில் ஒன்று (அநுமா. 19). அன்னியதரா'சித்தம் °°acittam [id. + S. a-siddha, 'not established', fr. siddh. Cf. T. eyt-u] (Log.) Basing an argument upon an unaccepted hypothesis: ஏற்றுக்கொள்ளப்படாத பொருளை ஏதுவாகக் கூறும் தோஷம் (அநுமான. பக். 19). அன்னிய-நாமகரணம் °nāma-karaṇam, Bename; இரவற் பேர். அன்னிய-பரன் °paraṉ, [+S. -par-a, 'having as foremost object', fr. T. pur-am + -aṉ⁵—'-'பர³'] One who is devoted to something else; வேறொன்றிற் கண்ணுயிருப்பவன் (திவ். திருவாய். 6, 1, 1, பன்னீ.). அன்னிய-பாவம் °pāvam [+S. bhāva, 'state',—'பாவம்²'] Separateness; வேறாயிருக்கை. அன்னிய-பிருதம் °pirutam [+S. bhṛi-ta, 'brought up', fr. bhṛi, T. por-u] Indian cuckoo as reared by another, i. e. crow; குயில். அன்னிய-புட்டம் °புஷ்டம் °puḍḍam, °puṣṭam [+ S. puṣ-ṭa, 'nourished', fr. puṣ, T. poḷ-i] Do; டை. அன்னிய-ஸ்தன் °staṉ [+S. -stha, 'standing' + -aṉ⁵] One who is outside a community or society; புறம்பானவன். Stranger; அறிமுகமில்லாதவன்.

S. anya. The T. use may have been due to this. Cf. Gr. enioi, allos; L. alius; Got. aljis; Arm. ail.

அன்னியதா anniyatā, adv. [S. anya-thā] In a different manner; வேறு விதமாய். —CPDS அன்னியதா-க்-கியாதி °kiyāti [S. + khyā-tis, 'fame'] One of the five kiyāti. q. v.; கியாதி ஐந்தினுள் ஒன்று. அன்னியதா-கர்த்தத்துவம் °karttattuvam [+ S. kartṛi-tva, 'being doer,' fr. kṛi] Power of changing one thing into another; ஒன்றை மற்றொன்றாகச் செய்யும் சாமர்த்தியம் (வேதா. சூ. 47 உரை). அன்னியதா-சித்தி °citti [+S. siddh-is, 'establishing,' fr. siddh. Cf. T. eyt-u] (Log.) A demonstration in which arguments are referred to which are not true causes: போலி நியாயங்கொண்டு செய்யும் நியாய முடிபு. அன்னியதா-ஞானம் °ñāṉam [+ S. jñā-nam, 'knowledge,' akin to T. ninai] Misapprehension; விபரீத அறிவு. அன்னியதா-பிரதிபத்தி °pirati-patti [+ S. prati-patt-is, 'obtaining,' fr. pad, T. paḍ-u] One thing taking the place of another; ஒன்று நின்றவிடத்தில் வேறொன்று வந்தடைதல்.

அன்னியமுட்டு-தல் anniyamuḍḍu, v. intr. [prob. aṉṉuvayam, see below + muḍḍ-u, 'to be deficient' — அன்னுவயம்] To be extinct in lineage; சந்ததியற்றுப்போதல்.

அன்னியாயம் anniyāyam, n. [for a-niyāyam; = அ.நியாயம்] Plaint; பிராது. அன்னியாயக்காரன், anniyāyakkāraṉ, Complainant; வாதி.

அன்னுராவி aṉṉurāvi, n. Simpleton; அப்பாவி.

அன்னுவயம் aṉṉuvayam, n. [S. anvayas, anu+i, T. iḷ-i] 1. Succession, connexion; தொடர்ச்சி, சம்பந்தம் (மணி. 27, 30). 2. Lineage, family; குலம் (கம்பரா. மாயாசீ. 36). 3. (Gram.) Syntactical connexion of words; கொண்டுகூட்டு (வேதா. சூ. 8). 4. (Log.) Invariable concomitance between an antecedent and a consequent; காரண காரியங்களின் நியதமான சம்பந்தம் (சி. சி. அளவை, 11). 5. Invariable co-existence between the middle and major terms in an Indian syllogism; சாதனசாத்தியங்களின் வியாப்தி. What is agreeable; பொருத்தமுள்ளது. —CPDS அன்னுவய-அநுமானம் °anumāṉam [+S. anu-mānam, 'inference' fr. mā, akin to T. maḍ-u] (Log.) Inference based on concomitance; உடனிகழ்ச்சியைக் கொண்டு செய்யும் நியாய முடிபு. அன்னுவய-இலக்கணம் °ilakkaṇam [+ iḷakk-aṇam, 'what is proper'] (Gram.) Rules for constructing a sentence; வாக்கியங் கட்டுதற்குரிய விதிகள். அன்னுவயம்-பண்ண °paṇṇa, To construe, as a sentence; பொருத்தமுறக் கொண்டுகூட்ட. அன்னுவய-வியதிரேகி °viya-tirēki [+S. vi-ati-rēkin, 'surpassing, negative', fr. ric. Cf. T. iḷakk-u] (Log.) Proof from affirmative as well as negative arguments; உடம்பாட்டாலும் எதிர்மறையாலும் முடிக்கும் நியாயம் (தர்க்கபாஷை, 21).

அன்னுவயி-த்தல் aṉṉuvayi, 11 v. tr. [id. + -i⁷] 1. To follow; பின்பற்றல். 2. To give the prose order of; செய்யுட்டொடரை ஒழுங்குபடுத்தல்.

அன்னை aṉṉai, n. [rt. aṉ + -ai⁷, 'One who is near, dear'. Cf. app-u, att-aṉ, amm-ai—√அன் + -ஐ⁷, 'நெருங்கிய தொடர்புடையவள்' — ஒப். அப்பு, அத்தன், அம்மை] 1. Mother; தாய். 2. Pārvati; பார்வதி (பிங்.). 3. Elder sister; தமக்கை (சூடா.). 4. Female companion; தோழி.

Hit. annas, 'mother', hannas, 'grandmother'. "Compare Finnish and Hungarian anya, mother; Moderin, anai; Ostiac, ane and also anna and ana in two dialects of Turkish. The Hind. annī, a nurse is possibly the same word" (Caldwell). Cf. S. nanā 'mother' for which Grierson cites a number of parallels in the Piśāca languages (p. 75). Also Gr. nanna, nenna, 'aunt'; Pers. nana, 'mother'; L. (late) nonna, 'nun', anus, 'old woman'.

அன்னாய் aṉṉāy, part. [id. in the vocative] 1. An expletive in poetry; ஓர் அசைநிலை: உ-ம்: "அன்னாய் பின் அலைவந்தனதப்படும்" (தி. தி. பா. சௌந். மது. 8) 2. [n.] O you who are like..; ஒத்தவளே-னே உ-ம்: "ஆவியன்னாய் கவலேல்" (திருக்கோ. 37).

அன்னோ aṉṉō, int. [id. cf. aiyō] An exclamation of pity or wonder; இரக்க, அதிசயக்குறிப்பு (குறள். 5)

அன்னோன்றி aṉṉōṉri, n. [al-⁴ + nōṉr-u, 'to endure' + -i⁴ —அல்-⁴ + நோன்று = தாங்கு] Person of a weak constitution; வலியற்றவன்-ள்.

அன்ஸு aṉsu, n. [Tel. añcu, perh. fr. anḍ-ai] Selvedge; அடைக்கரை.

அனகம்¹ ஆதியன aṉakam &c. Look under aṉ-¹ for all words beginning with the pref. aṉ¹; அன் என்னும் முதனிலையோடு தொடங்கும் சொற்களை அன்-¹ இல் நோக்க காண்க.

**அனகம்**[2] aṉakam, n. Species of Loranthus; புல்லுருவி.

**அனந்தம்**[2] aṉantam, n. [S. an-anta, 'perennial'? See also aṉ-antai, p. 183] 1. Cynodon grass; அறுகு. 2. Species of acalypha; குப்பைமேனி. 3. Small climbing nettle; சிறுகாஞ்சொறி. 4. Indian sarsaparilla; நன்னாரி. 5. Species of doemia; வேலிப்பருத்தி. 6. A mineral poison; சோமசபாஷாணம். 7. Gold; பொன். See aṉ-antam[1] on p. 183.

**அனந்தர்**[1] aṉantar, n. [=aṉantal, l/r —அனந்தல்] 1. Sleep; நித்திரை (ஞானா. 62, 23). 2. Drowsiness; மயக்கம் (சீவக. 1249). 3. Confusion; தடுமாற்றம் (தொல். பொ. 102, உரை). 4. Wakefulness; துயிலின்றியிருத்தல் (சீவக. 1097).

**அனந்தர்**[2] aṉantar, n. [aṉ-antam, p. 183 -ar[1]—அனந்தம்] 1. (Saiva) A Rudra; உருத்திரருள் ஒருவர் (சி. போ. பா. 2, 3). 2. A kind of pedestal; அறுவகைச் சலாசனத்தொன்று (சைவ. பொது. 523). 3. Cotton plant; பருத்தி.

**அனந்தரம்**[2] aṉantaram, n. [Cf. aṉantar[1]] Species of doemia;

**அனந்தல்** aṉantal, n. [prob. fr. aṉai-tal, 'to lie down'—<அணை-தல்] 1. Sleep; நித்திரை (ஆத்திசூடி). 2. Drowsiness; மயக்கம் (மணிமே. 173). 3. Low, soft, mournful sound; மந்தவொலி (புறம், 62, 5). **அனந்தற்-பத்தி** °patti [+paṭṭ-i, 'sloping roof'] Arbour to rest in during the heat of day; கொடி படர்ந்த பந்தல்.

**அன'ந்தை** aṉ'antai, V. aṉ-[1]; அன்-[1] பார்.

**அனபை** aṉapai, n. [S. anaphā<Gr. an-aphē, 'impalpable?'] Configuration of the planets in which the favourable ones occupy the 12th place from the moon; ஒரு யோகம் (விதானமாலை, சாதக. 23).

**-அனம்** -aṉam, suff. [a variation of -aṇam[2] p. 67—=-அணம்[2]] A stem suffix for adverbs with the sense 'connected with'; பொருந்த எனும் பொருளோடு சில வினையுரிச்சொல்வரும் கடைநிலை. உ-ம்: கன்கனம்.

**அனயகம்** aṉayakam, n. 1. Tuskan jasmine; இருவாட்சி. 2. Jasmine; மல்லிகை.

**அனயம்** aṉayam, n. [for a-[8]+nayam, 'good'. Also for S. a-naya, a-[3]+naya, fr. nī, 'to lead'] 1. Danger, inauspiciousness; ஆபத்து, அபசுபம். 2. Evil deed; தீவினை.

**அனர்வன், அனரவன்** aṉarvaṉ, °avaṉ, n. 1. White species of Malabar glory-lily; வெண்காந்தள். 2. Malabar glory-lily; செங்காந்தள். 3. A prepared arsenic; பஞ்சபட்சி பாஷாணம்.

**அனரசம்** aṉaracam, n. [U. anarsā] A sweet confection made of rice flour, ghee &c; பாற்பண்டவகை.

**அனல்(லு)-தல்** aṉal(u), 3 v. intr. [prob. fr. aḻal, ḻ/ṉ. Cf. kaṉ-al, taṉ-al—<அழல்] To burn, to glow, to be hot; அழலுதல்.

See al-al for parallelisms. Cf. Akk. anhullu, 'hot wind'.

**அனல்** aṉal, n. [id.] 1. Fire; நெருப்பு. 2. Heat, glow; உஷ்ணம், ஒளி. 3. Thunderbolt; இடி (இரகு. ஆற்று. 4). 4. Ceylon lead-wort; கொடுவேலி (வைத்திய. தைல. 129).—CPDS **அனல்-அடுப்பு** °aḍuppu [+aḍ-uppu[2], p. 61] Covered brick oven; கூண்டடுப்பு. **அனல்-ஆடி** °āḍi, Siva; சிவன். **அனல்-ஏறு** °ēṟu [+ēṟu, 'stroke'] Thunderbolt; இடி. **அனலோ'டு-வேந்தன்** °ōḍu-vēntaṉ, A mineral poison; சார்முதிற் பாஷாணம். **அனல்-காலி** °kāli [+kāl, 'to shoot forth'+-i[4]] Sunstone; சூரியகாந்தக் கல். **அனல்-நிலம்** °nilam, Desert tract; பாலை நிலம். **அனல்-விரை** °virai [+vit-ai, 'seed'] Croton; சேர்வாளம். **அனல்-வென்றி** °veṉṟi [+vel-ṉṟ-i, 'triumph'] Gold as triumphing over fire, தங்கம். **அனற்-கல்** °kal, Flint; சிக்கிமுக்கிக் கல் (வைத்திய. தைல. 127). **அனற்-குவை** °kuvai, Fire pan; நெருப்பிடுகலம். **அனற்-சுக்கிரன்** °cukkiraṉ, A disease of the eye; கண்ணோய்வகை (பரராசசேகரம், 188).

**அனலன்** aṉalaṉ, n. [id. + -aṉ[5]] 1. Agni; அக்கினிதேவன். 2. A Vasu; அஷ்ட வசுக்களுள் ஒருவன்.

**அனலி** aṉali, n. [id. + -i[4]] 1. Fire; நெருப்பு. 2. Sun; சூரியன். **அனலி-முகம்** °mukam, Exposure of substances to the sun in the preparation of medicines; சூரிய புடம்.

**அனலசம்** aṉalacam, n. [perh. anala +-ja, 'born of fire'] Colocynth; பேய்க்கொம்மட்டி.

**அனலம்** aṉalam, n. [fr. S. anala<T. aṉal] 1. Fire; நெருப்பு. 2. Ceylon leadwort; கொடுவேலி (வைத்திய. தைல. 135). **அனலா'சனபட்சி** °acaṉa-paḍci [+ S. aś-ana, 'eating' + pakṣ-in, 'bird'] Ostrich; தீக்குருவி. **அனல-நட்சத்திரம்** °naḍcattiram; (Astron.) The 7th, 14th, 16th, and 25th nakṣatras counted from the one occupied by Mars; செவ்வாய் நின்ற நாளுக்கு 7ம், 14ம், 16ம், 25ம் நாட்கள் (விதானமாலை, குருகுண. 40).

**-அனவு** -aṉavu, suff. [extended form of -aṉam with -u[6]—அன(ம்) + உ[6]] A stem-suffix with the sense of 'state of being connected' with a thing; சேர்ந்திருத்தல் எனும் பொருளுள்ள ஒரு கடைநிலை. உ-ம்: தின்னனவு.

**அனற்று-தல்** aṉaṟṟu, 5 v. tr. [caus. of aṉal(u) l/ṟṟ for greater emphasis —அனலுதலின் பிறவினை உருவம்] 1. To burn, to make hot; எரித்தல், தகித்தல். 2. To be angry with; கோபித்தல். 3. To affect with colic pains, used impersonally; வயிறுளைதல். 4. To give in vain as to a worthless person; வீணே உதவுதல் (Coll.). 5. [v. intr.] To groan with pain; முனகுதல்.

**அன'ன்னியம்** முதலிய aṉ-aṉṉiyam &c. V. under aṉ-[1]; அன்-[1] பார்.

**அனாசி** aṉāci, =aṉṉāci; =அன்னாசி.

**அனா'தி** முதலிய aṉ-āti &c., V. under aṉ-[1]; அன்-[1] பார்.

**அனாமத்து** aṉāmattu, =amāṉattu; =அமானத்து.

**அனாதை** aṉātai, n. [See a-nātam, p. 91] Destitute person or animal; திக்கற்றவன், -வள், -து.

**அனாயம்** aṉāyam, =a-niyāyam; =அ-நியாயம்.

**அனா'ரதம்** முதலிய aṉ-āratam &c., V. under aṉ-[1]; அன்-[1] பார்.

**அனாவிதம்** aṉāvitam, n. Kind of lute; வீணைவகை.

**அனாஜ்** aṉāj, n. [Hind. anāj] Grain produce; தானியம் (P. T. L.).

**அனி** aṉi, n. [?] 1. Parched rice; நெற்பொரி. 2. Large box; பத்தாயப் பெட்டி.

**அனிகம்** aṉikam, n. [prob. aṇ-i] 1. Assembly; கூட்டம். 2. Army; சேனை. 3. Palanquin; சிவிகை (சூடா.).

S. an-īkam, 'army'.

**அனிச்சம்** aṉiccam, n. [for aṉiṭṭam[1] below] Flower so delicate as to droop when smelt; "மோப்பக் குழையும்" பூ (குறள், 90).

**அனிச்சி, அனிச்சை**[1] aṉicci, °cai, n. Ringworm root; நாகமல்லி.

அனி'ச்சை[1] an-iccai, V. *an*.[1]; அன்-[1] பார்.

அனிசம் anicam, =*a-nicam*; =அ-நிசம்.

அனிஞ்சில் aniñcil, *n*. Bael; வில்வம்.

அனித்தம்[1] anittam, =*a-nittam*; =அ-நித்தம். Also =*aniccam* above; = அனிச்சம்

அனித்தம்[2] anittam, *n*. [Cf. *anukkam*] Sandal-wood tree; சந்தனமரம்.

அனித்தியம் anittiyam, *n*. [prob. for *an-irutam*] 1. Falsehood; பொய். 2. Also=*anittam*[2]; =அனித்தம்[2].

அனிதம் anitam, *n*. [for *a-niyatam*; =அ-நியதம்] What is unlimited; கணக்கற்றது (பெரியபு. திருமலை. 5).

அனி'ருதம் an-irutam, V. *an*-[1]; அன்-[1] பார்.

அனிலம் anilam, *n*. [S. *an-ilas*, fr. *an*, T. √*an*. Cf. *an-unku*—அனுங்குவது] 1. Air, wind; காற்று. 2. Existence, birth; பிறத்தல். 3. Rheumatism; வாதரோகம் (தைலவ. தைல. 13). 4. Fear; பயம். —CPDS அனில-ச்-சூலை °cūlai, Colic with flatulence; வாதசூலை (தைலவ. தைல. 131). அனில-நாள் °nāḷ, The 15th nakṣatra; சுவாதி.

அனிலவன் anilavan, *n*. [id.] Wind; காற்று.

அனிலன் anilan, *n*. [id.] 1. The chief of the vital airs of the body; பிராணவாயு. 2. Vāyu, the god of wind; வாயுதேவன். 3. A Vasu; அட்டவசுக்களுள் ஒருவன்.

அனிழம் aniḻam, *n*. [S. *anu-rādhā*, 'causing welfare', fr. *rādh*, prob. akin to T. *arutt-i*, rt. *ar*] The 17th nakṣatra; அனுட்டம்.

அனி'ஷ்டம் an-iṣṭam, V. *an-iṭṭam*; = அனி'ட்டம்.

அனீகம் anīkam, *n*. [=*anikam*; =அனிகம்] 1. Army; சேனை. 2. One-tenth of akkurōṇi; அக்குரோணியிற் பத்திலொன்று (திவா.).

அனீகினி anīkini, *n*. [S. *anikini*] Army; சேனை (பாரத. வாரணா. 76).

அனீகனி anīkani, *n*. Dead white-nettle; தும்பை.

அனீசு anīcu, *n*. [Fr. *anis*. Cf. *annācu*] Anise; பெருஞ்சீரகம்.

அனி'ச்சுரத்துவம் an-iccurattuvam, V. *an*-[1]; அன்-[1] பார்.

அனு[1] anu, *n*. [S. *anu*, T. *ann-u*—அண்ணுவது] 1. Proximity; சமீபம். 2. Sequence, order; தொடர்ச்சி, ஒழுங்கு. 3. Transcript; பிரதி. 4 An act in return; பிரதிச்செயல். 5. Alliteration; மோனையெழுத்து (இலக். வி. 748 உரை). 6. [*prep*.] A Sanskrit prefix meaning 'along with, after'; அனைத்து, பின்னே எனப் பொருள்படும் ஒரு வடமொழி முதனிலை. —CPDS அனு-வ்-ஆகாரியம் °ākāriyam [+S. *ā-hārya*, 'to be fetched', fr. *ā-hri*, 'to bring near'] Monthly funeral ceremonies for one's parents during the first year of their death; இறந்த பெற்றோருக்கு முதல் வருடத்திற் செய்யும் மாசிக சிராத்தம். அனு-வ்-ஆதேயம் °ātēyam [S. *ā-dhēy-a*, 'deposited, received', fr. *dhā*, T. *tāḻ*] Property presented after marriage, to the wife, by her husband's relations; விவாகத்திற்பின் மனைவிக்குக் கணவனின் சுற்றத்தவர்கள் உபகரிக்கும் பொருள். அனு-வ்-ஆரோகணம் °ārōkaṇam, [S. *ā-rōh-aṇam*, 'ascending', fr. *ruh*, T. *uru*] A widow's ascending the funeral pile after or with the body of a husband; இறந்த தன்கணவனுடைய பிரேதத்தோடாவது வேறாகவாவது தன்னைத் தகித்துக்கொள்ளல். அனு-வ்-உரு °uru [+*uru*, 'form'] Similar or appropriate form; ஒத்த வடிவம். அனு-வ்-எழுத்து °eḻuttu, Alliterative or mōṉai letter; மோனையெழுத்து. அனு-க்கிரகம் °kirakam [+ S. *grah-as*, 'taking by the hand', fr. *grah* or *grabh*. Cf. T. *koḷ*] Grace. அருள். (Saiva) Divine function of bestowing grace for delivering souls from bondage; பஞ்சகிருத்தியங்களுள் ஒன்று. அனு-க்-கிரகிக்க °kirakikka, To show favour, bestow grace; அருள் செய்ய. அனு-க்-கிரமணம் °kiramaṇam [+S. *kram-aṇa*, 'going', fr. *kram*. Cf. T. *kiḷamp-u*] Act of following; பின்னே செல்லுதல். அனு-க்-கிரமணிகை °kiramaṇikai [id.] Table of contents; நூல் அட்டவணை. அனு-க்-கிரமம் °kiramam [id.] Order, regularity; ஒழுங்கு. அனு-க்-கிரிக்க °kirikka [for *anu-k-kirakikka*] To bless; ஆசிர்வதிக்க. அனு-கதம் °katam [+S. *gat-a*, 'gone'] What follows; தொடர்ந்து வருவது. அனு-கம்பம் °kampam [+S. *kamp-as*, 'trembling', fr. *kamp*, T. *kemp-u*] Compassion; இரக்கம். அனு-கமனம் °kamanam [+ S. *gam-anam*, 'going'] Satī; உடன்கட்டையேறல். அனுகரண-வ்-உபயவோசை °karaṇa-upaya-v-ōcai [+S. *kar-aṇ-am*, 'making'+ *ubhaya*, 'both, double'. Cf. T. *oppu*+ *ōcai*, 'sound'] Imitation of repeated syllables or sounds; இரட்டையொலிக் குறிப்பு. உ-ம்: திடுதிடெனல். அனு-கரண-வ்-ஓசை, °தொனி °ōcai, °toṉi [id.] Imitative syllabic sounds, onomatopoeia; ஒலிக்குறிப்பு. அனு-கரணம் °karaṇam [id.] Imitation; கண்டபாவனையிற் செய்தல். அனு-கரம் °karam, V. anu-karaṇam; =அனு-கரணம். அனு-கரிக்க °karikka, To imitate; செய்ததுபோற் செய்ய. அனு-கற்பம் °karpam [+S. *kalp-as*, 'sacred precept', fr. *klrip*. Cf. T. *kaṟ-pi*] Less stringent alternative to a rule, here applied to sacred ashes from cowdung picked up in pasture lands; மந்தையிலிருந் தெடுத்த பசுவின் சாணத்தைக் கொண்டு உண்டாக்கிய விபூதி (சைவ. பொது. 179). அனு-கன் °kan [+S. *-ga*, 'who or what goes'; fr. *gam*, 'to go'] Follower; பின் செல்லுவோன். Libidinous person; காமுகன். அனு-காரம் °kāram, V. anukaraṇam; =அனு-கரணம். அனு-குண-அலங்காரம் °kuṇa-alaṅkāram [+*kuṇ-am*, 'disposition' + *alaṅkā-ram*' V. p. 149] Figure of speech in which the standard of comparison is said to be improved by association with the subject of comparison; மற்றொன்றின் சார்பினால் தனதியற்கைக் குணம் மிகுதல் (அணி. 78). அனு-குணம் °kuṇam [See above] What is congenial; ஏற்புடையது (திருவிளை. வேதத். 41). அனு-கூல-சத்துரு °kūla-catturu [+*kūl-am*, 'bank, slope' < T. *kōl-u*. *Anu-kūla*, 'according to the current, favourable' +S. *sat-rus*, 'enemy'] Enemy in the guise of a friend; அடுத்துக் கெடுப்போன் (திவ். திருவாய். 4, 3, 4, பன்னீ.) அனு-கூலம் °kūlam [See above] Friendly assistance; உதவி. Blessing; நன்மை. Success; காரியசித்தி. அனு-கூலன், °கூலி °kūlan, °kūli [id.] One who is friendly, helpful; இதமாய், உதவியாயிருப்பவன். அனு-கூலிக்க °kūlikka [id.] To be favourable; உதவி செய்ய. To take a favourable turn; வியாதியாதியன குணமாகிவர. To end successfully; நல்ல முடிவடைய. அனு-கோதம் °kōtam [+S. *gōdam*, perh. T. *kōt-u*] Cerebellum; மூளையின் ஒரு பகுதி. அனு-ச்-சுவாரம் °cuvāram [+S. *svār-am*, 'what relates to a sound' fr. *svara*. Cf. T. *tuvaḷ*] 'Aftersound' the Sanskrit nasal sound, which always belongs to a preceding vowel; வடமொழியில் மகரத்தின் விகாரமாகிய புள்ளி. அனு-ச்-ஞை °cai [+S. *-jña*, 'knowing', T. *niṉ-ai*] Permission; இடங்கொடுத்தல். Pre-

sents to Brahmans at the commencement of a ceremony; தட்சிணைவகை. அநு-சங்கம் °caṅkam [+S. *sam-gas*, 'coming together'] Relation, connexion; சம்பந்தம், காரண காரியத் தொடர்ச்சி. அநு-சதிகம் [+S. *śat-ika*, 'belonging to a hundred' fr. *śatam*] Head of 100 soldiers; நூறு சேனாட்படைக்குத் தலைவன். அநு-சந்தானம் [+S. *sam-dhā-nam*, 'drawing together', fr. *dhā*, T. *tāḷ*] Contemplation; சிந்தனை. Continued utterance of incantations; இடையறாது ஓதுகை (வேதா. சூ. 138). அநு-சந்திக்க °cantikka [id.] To meditate; தியானிக்க. To repeat; திருப்பித் திருப்பிச் சொல்ல. அநு-சயம் °cayam [S. *anu śayas*, 'lying near' fr. *śī*, T. *kiḍ-a*] Contest; வழக்காடல் (S. I. I. vii, 385]. Feud; பெரும் பகை. Repentance; பச்சாத்தாபம் (தேவா. 784, 6). Sequel; அநுபந்தம். அநு-சரணம் °caraṇam [+S. *car-aṇam*, 'going', fr. *sri*. Cf. T. *cel*] Going after; சார்ந்தொழுகல். அநு-சரணை °caraṇai [id.] Do; டை. Support; உதவி (Coll.). அநு-சரன் °caran [id.] Follower, servant, companion; பின் செல்வோன், ஊழியன், தோழன். அநு-சரிக்க °carikka [id.] To follow, practise; பின்பற்ற. To second; ஆமோதிக்க. To observe as a rite, feast; கொண்டாட. To worship; வழிபட. அநு-சரிதன் °caritan, V. aṉu-caraṉ; =அநுசரன். அநு-சரிப்பு °carippu [id.] Following, observance; பின்பற்றுகை. Conformity; இணக்கம். அநு-சன் °caṉ [+S. *-ja*, 'one born'—-சன்[1]] Younger brother; தம்பி. அநு-சாகை °cākai [+S. *śākhā*, 'branch'. Cf. K. *kokki*] Secondary branch, twig; கிளையிற் கிளை [S. I. I. ii, 201]. அநு-சாசகன் °cācakaṉ [See next word] Governor, chief; ஆள்வோன். அநு-சாசனம் °cācaṉam [+S. *śās-anam*, 'command'] Precept, instruction; கட்டளை, உபதேசம். அநு-சாதன் °cātaṉ, V. aṉu-caṉ; =அநுசன். அநு-சாதை °cātai [+S. *-jā tā*] Younger sister; தங்கை. அநு-சாமந்தன் °cāmantaṉ [+S. *sāmantas* (*sam+antā*), 'a neighbour, tributary prince, chief'] One who is appointed by a king to the headship of 100 villages; அரசனால் நூறு கிராமங்களுக்குத் தலைவனாக நியமிக்கப்பட்டவன். அநு-சாரணை °cāraṇai [+S. *sār-iṇī*, 'going' fr. *sri*, akin to T. *cel*] Secondary string of a lute; வீணையின் பக்க நரம்பு. அநு-சாரம் °cāram [id.] Accompaniment, following; பின்செல்லல். Custom; வழக்கம். Resemblance; ஒப்பு. [*anu-cāra*] (Astr.) Retrogression of a planet; கிரக வக்கிரம். அநு-சாரி °cāri [id.] Adherent, follower, disciple; பின்பற்றுவோன், சீடன். அநு-சிந்தை °cintai [+S. *cint-ā*, 'reflexion', fr. *cint*, perh. akin to T. *kett-u*] Meditation; தியானம். அநு-சீவி °cīvi [S. *jīv-in*, 'living', fr. *jīv*, akin to T. *uy*] One who lives under another; ஒருவனையடைந்து வாழ்வோன். அநு-சுருதி °curuti [+S. *śru-tis*, 'sound', fr. *śru*, T. *kēḷ*] (Mus.) Note assonant with the curuti; இசைச் சுருதி. அநு-சூதம் °cūtam [+S. *syū-ta*, 'sewn, joined', fr. *siv*, cf. T. *tai*] What is regular and uninterrupted; தொடர்பாயுள்ளது. அநு-சை °cai [+S. *-jā*, 'born'] Younger sister; தங்கை. அநு-சென்மம் °cenmam [+S. *jan-man*, 'birth' fr. *jan*. Cf. T. *īṉ*] (Astrol.) The tenth nakṣatra from one's natal star; ஒருவன் பிறந்த நட்சத்திரத்திலிருந்து பத்தாவது. அநு-சைவர் °caivar, Saiva initiates among Kṣatriyas or Vaiśyas; தீட்சை பெற்ற க்ஷத்திரிய வைசியர் (சைவ. பொது. 435, உரை). அநுஞ்ஞா'லங்காரம் aṉuññā'laṅkāram [See next word+*alaṅkāram*[1], p. 149] Figure of speech in which an undesirable thing is counted as ultimately leading to something desirable; வேண்டலணி (அணி. 71). அநு-ஞ்-ஞை °ñai, =aṉu-c-cai; =அநுச்சை. அநு-ட்-டானம் °ḍāṉam [+S. *sthā-nam*, 'staying', fr. *sthā*, T. *tāḷ*] Observance of religious rites; சமய ஆசாரம். (Saiva) The daily rites of the initiated; நித்தியகருமம். Established custom; வழக்கம். அநு-ட்-டானிக்க °ḍāṉikka, =aṉuḍḍikka; =அநுட்டிக்க. அநு-ட்-டிக்க °ḍikka [id.] To practise; ஆசரிக்க. அநு-த்-துருத-பஞ்சமம் °turuta-pañcamam [+S. *dru-ta*, 'quick', T. *tūṟ-a*+*pañc-amam*, 'fifth'] An ancient secondary melody-type of the kuriñci class; குறிஞ்சி யாழ்த்திறவகை. அநு-த்-துருதம் °turutam [id.] (Mus.) Measure of half a turutam; ஒரு துருதகாலத்தின் பாதி. அநு-தமம் °tamam [+S. *tama*, sign of the superlative] The best, pre-eminence; மேலானது. அநு-தபிக்க °tapikka [See *anu-tāpam*] To sympathize; பிறரோடு துக்கிக்க. To repent; கழிந்ததற்கு இரங்க. அநு-தரம் °taram [+S. *tar-am*, 'fare', fr. *trī*. Cf. T. *tuṟ-a*] Fare on board a ship; கப்பற் கூலி. அநு-தரிசம், °சனம் °taricam, -aṉam [S. *tarṣ-as*, 'thirst', fr. *triṣ*. Cf. T. *teṟu*] Drinking liquor; மதுவுண்ணல். Vessel for same; மதுப் பாத்திரம். அநு-தாபம் °tāpam [+S. *tāp-as*, 'heat, pain', from *tap*. Cf. T. *tī* and *tavv-u*] Sympathy; பிறரோடு துக்கித்தல். Repentance; பச்சாத்தாபம். அநு-தாரம் °tāram [for *anu-cāram*] Protection; பாதுகாவல் (S. I. I. viii, 54). அநு-தாளம் °tāḷam [+*tāḷ-am*, 'beating'] (Mus.) Variety of time measure; தாளவகை (பரத. தாள. 4). அநு-தினம், °தினதினம் °tiṉam, °tiṉātiṉam [+S. *di-nam*, 'day', fr. *dī*, Cf. T. *tī*] Every day; நாடோறும். அநு-துருதம் °turutam [+S. *dru-ta*, 'quick'. Cf. T. *tūr-am*] (Mus.) Variety of aṅkam which consists of one akṣarakālam; தாள அங்கவகை (பரத. தாள. 35). அநு-தோடம் °tōḍam [+S. *dōṣ-as*, 'fault', fr. *duṣ*, T. *tuḷ-ai*] Minor crime; உபபாதகம் (சேதுபு. சங்கரபா. 79). அநு-நயம் °nayam [+S. *nay-as*, 'leading', fr. *nī*, Cf. T. *nī-kku*] Hospitality; விருந்தோம்பல். Courtesy; மரியாதை. Appeasing; சாந்தி செய்தல். அநு-நாசிகம், °நாசிகை °nācikam, -kai [+S. *nās-ika*, 'nasal' fr. *nāsā* prob. fr. T. *nāḷ-i*] Nasal sound; மெல்லெழுத்து. அநு-நாதம் °nātam [+S. *nād-as*, 'sound'] Echo; எதிரொலி. அநு-ப்-படி °paḍi, Balance in accounts; கையிருப்பு. Revenue of the previous year; கழிந்த வருஷ வருவாய். Affairs in general; காரியங்கள். அநு-ப்-பிரவிட்டன் °piraviḍḍaṉ [+S. *pra-viṣ-ṭa*, 'entered into', fr. *viś*, perh. T. *uḷ-u*] One who pervades or dwells; உள்ளிருப்போன் (சி. சி. 1, 27 சிவாக்.). அநு-ப்-பிரவேசம் °piravēcam [id.] Entering after another; மற்றொருவனின் பின் உட்புகல். Bestowing grace; அநுக்கிரகித்தல் (வேதா. சூ. 47). அநு-ப்-பிராசம் °pirācam [+S. *prāsas*, fr. *pra-as*, 'to throw forth'] (Pros.) Repetition of rhyming syllables; வழிமொழிகை (இலக். வி. 748 உரை). அநு-பதி °pati [See next word] Conclusion, consequence; முடிவு, பயன். Incontinence; அடங்காமை. அநு-பதிதம் °patitam [S. *pat-ita*, 'fallen', fr. *pat*, T. *paḍ-u*] Descent, alley; இறக்கம், பாதை. அநு-பந்த-சதுட்டயம் °panta-catuḍḍayam [See next word+S. *catuṣ-ṭayam*, 'collection of four things'] The 4 requisites of a literary work to be mentioned in the preface, viz: (1) விஷயம், contents; (2) சம்பந்தம், order; (3) பிரயோசனம், object; (4) அதிகாரி, persons for whom intended. அநு-பந்தம் °pantam [+S. *bandh-as*, 'binding', fr. *bandh*. Cf. T. *paṟṟ-u*]

Connexion, relation; உடக்கை. Help; உதவி (T. A. S. iii, 195). (Gram.) The letter between pakuti and vikuti; பகுதி விகுதியினிடையே தொக்க வெழுத்து. Appendix (Modern); நூலின் பின் சேர்க்கப்பட்டது, பின்னிணைப்பு. Origin of a flaw or error; தோஷ உற்பத்தி. **அனு-பந்தன்** °pantan [id.] Accomplice; தீமைக்கு உடன்படுவோன். Infant, disciple; குழந்தை, சீடன். **அனு-பந்தி** °panti [id.] Hiccough; விக்கல். Thirst; தாகம். **அனு-பம்** °pam [+S. *ap*, *āpas*, 'water', T. *appu*²] Muddy soil; சேற்று நிலம். Humidity; ஈரம். **அனு-பல்லவம்**, °பல்லவி °pal-lavam, °vi [+S. *pallavam*, 'sprout' prob. fr. T. *pall-u*] Young leaves next to the topmost ones; கீழ்த் தளிர். (Mus.) Stanza immediately following the chorus in lyric songs; கீர்த்தனத்தில் இரண்டாம் உறுப்பு. **அனு-பவ-ஆரூடம்** °pava-ārūḍam [See *aṉu-pavam*+S. *ā-rūḍh-a*, 'raised up', fr. *ruh*, T. *urū*] What is supported by experience; கண்டறிந்ததை மேற்கொண்டது. **அனு-பவ-க்-காட்சி** °pa-vak-kāḍci [id.+*kāḍ-ci*, 'sight'] Perception by actual experience; பிரத்தியட்ச ஞானம். **அனு-பவ-சாலி** °°cāli [id.+*cāli*⁵] Person of large experience; பல காரியங்களை அறிந்தவன்,-ள். **அனுபவ-ப்-பிரமாணம்** °°piramāṇam [id. + S. *pra-mā-ṇam*, 'measure, standard', fr. *mā*, perh. T. *maḍ-ḍ-u*] Argument from experience; கண்டறிந்த நியாயம். **அனுபவ-மனத்தத்துவ-சாத்திரம்** °°maṉat-tattuva-cāttiram [id.+S. *man-as*, 'mind'+*tatt-vam*, 'essential nature'+*śās-tram*, 'precept, treatise'] Experimental phsychology; பரீட்சித்தறிந்த முறையான உளநூல். **அனு-பவம்** °pavam [S. *bhav-as*, 'state of being', fr. *bhū*, Cf. T. *mik-u*] Experience; தானே கண்டறியும் அறிவு. Enjoyment; அனுபோகம். Apparition, birth; சனனம். **அனு-பவி** °pavi [id.] One who lives a life of enjoyment; சுகியாய் வாழ்பவன் (Vedānta). One who becomes freed from transmigration in a single birth; ஒரு சனனத்திலேயே சீவன்முத்தனாவோன் (வேதா. சூ. 14). **அனு-பவிக்க** °pavikka [id.] To experience; துய்க்க. To form acts of possession; உரிமையாகக் கையாள. **அனு-பவிப்பு** °pavippu [id.] Act of enjoying happiness or sorrow; நுகர்தல். (Cath.) Holy communion; தேவநற்கருணை உட்கொள்ளல். **அனு-பவை** °pavai [id.] Pārvatī; பார்வதி (திருப்பு. 385). **அனு-பாடணம்** °pāḍaṇam [+S. *bhāṣ-aṇam*, 'saying', fr. *bhāṣ*, T. *pēc-u*, Cf. *vi*]

(Log.) Repeating a proposition in order to refute it; கண்டிக்கும் பொருட்டு ஒரு பிரச்னையைத் திரும்பச் சொல்லல். **அனு-பாதகம்** °pātakam [+ S. *pāt-akam*, 'what causes a fall: sin' fr. *pat*, T. *paḍ-u*] Heinous crime; பெருந் தீச்செயல். **அனு-பாதம்** °pātam [id.] (Arith.) Rule of three; முத்தொகைவினா. [fr. *anu-vātam*, = அனுவாதம்] Consent, leave; சம்மதம், போக உத்தரவு ([illegible]). **அனு-பாலனம்** °pālaṉam [+S. *pāl-anam*, 'protection'. Cf. T. *pār*] Preservation; பாதுகாப்பு. Obedience; கீழ்ப்படிதல். **அனு-பாவம்** °pāvam [+ S. *bhāva*, 'disposition of mind', V. *anu-pavam*] Indication of a feeling by look or gesture; சைகையால் மனக்குறிப்பை விளக்குதல். Dignity; மகத்துவம். Determination; உறுதியான எண்ணம். **அனு-பானம்** °pāṉam [+S. *pān-am*, 'drink', fr. *pā*. Cf. T. *pāy-ttu*] Vehicle for medicine; மருந்துடன் குடிப்பது. **அனு-பூதி** °pūti [+ S. *bhū-ti*. V. *aṉu-pavam*] Knowledge from any source but memory; [illegible] உணர்வு. Realization; கண்டறிந்த உண்மை யுணர்வு (வேதா. சூ. 151). **அனு-போகம்** °pōkam [+S. *bhōg-as*, 'enjoyment', fr. *bhuj*. Cf. T. *puk-utt-u*] Enjoyment; இன்ப நுகர்ச்சி. Experience; பழக்கம். Legal possession; கையாட்சி. (Saiva) Results of deeds fated to be experienced; வினைப் பயன். **அனுபோகப்-பற்றொழுகு** °°paṟṟoḻuku [id.+*paṟṟ-u*, 'possession' +*oḻu-ku*, 'record'] Renewal of title deeds; காணியுறுதிகளைப் புதுப்பிக்கை (M. E. R. 213 of 1925). **அனு-மதம்** °matam [S. *mat-am*, 'opinion', fr. *man*. Cf. T. *maṉṉ-u*] Consent; அங்கீகரிப்பு. Love; அன்பு. **அனு-மதி** °mati [id.] Permission; சம்மதம். Order; கட்டளை. [*mati*, 'moon'] The 15th day of the moon's age on which it rises one digit less than full; சதுர்த்தசியோடு கூடிய பௌர்ணமி. Full moon; பௌர்ணமி (பிங்.). **அனு-மதிக்க** °matikka [id.] To consent, permit; சம்மதிக்க, இடங்கொடுக்க. **அனுமதிப்-பத்திரம்** °°pattiram [+ S. *pat-ram*, 'feather, leaf', fr. *pat*, T. *paṟ-a*] Deed of assent, especially one executed by a dying husband authorizing his wife to adopt a son; சுவீகார அதிகாரவோலை. **அனு-மந்தரம்** °mantaram [S. *mand-ras*, 'low tone', fr. *mand-a*, akin to T. *maṇḍ-u*] (Mus.) Subsidiary mantaram string in a lute; மந்தரத்திற்குத் துணை நரம்பு. **அனு-மரணம்** °maraṇam [+S. *mar-aṇam*, 'death', fr. *mri*, T. *maṟ-ai*] Satī; உடன் இறக்கை. **அனு-மனிக்க** °maṉikka [V. *aṉu-māṉikka*] To neigh; கனைக்க. **அனு-மாசக்கண்ணி**, °காய் °mācakkaṇṇi, °kāy, Species of Alternanthera; பொன்னாங்காணி. **அனுமானோக்தி** °māṉa-ukti [See *aṉu-māṉam*+S. *ukt-i*, 'speech' fr. *vac*, T. *ōt-u*] Logic; தருக்க சாஸ்திரம், நியாயித்தல். **அனுமான-உறுப்பு** °°uṟuppu, The five members of an Indian syllogism viz: (1) பிரதிக்ஞை, the assertion to be proved; (2) ஏது, the reason given; (3) உதாரணம், example or illustration; (4) உபநயம், the application; (5) நிகமனம், the conclusion (தருக்கசங். 49). **அனு-மானப்-பிரமாணம்** °°piramāṇam [id. + S. *pra-māṇ-am*. 'measure, standard' fr. *mā*. Cf. T. *maḍḍ-u*] Inference as a mode of proof; கருதலளவை. **அனு-மான-பலன்** °°palaṉ, Benefit of the doubt; சந்தேகமுள்ள விடத்து விரும்பியதைத் தெரிந்துகொள்ளக் கிடைக்கும் வாயில். **அனு-மானம்** °mā-ṉam [+S. *mā-nam*, 'measuring', fr. *mā* Cf. T. *maḍḍ-u*] Guess, doubt, suspicion; சந்தேகம், சமுசயம். Neigh of a horse; குதிரைக் கனைப்பு. (Log.). Inference, one of the modes of arriving at a conclusion as, from smoke, to infer the presence of fire; காரியத்தாற் காரணம் அறிகை. The following kinds are enumerated (1) சேஷவனுமானம், inference of an existing cause from sight of effect, as of fire from the appearance of smoke; (2) பொது°, inference of the existence of a thing or reality of a thing by the presence of another, which is not wholly conclusive but probable and consistent; (3) எச்ச°, inference of a past cause from a present effect, as fishes in the rivers show that torrents have fallen on the mountains; (4) முதல்°, inference of a future effect from a present cause, as that rainy clouds will bring rain. Another classification: (1) பூர்வக்காட்சி, inference of a thing from previous knowledge of its properties, as, when we see a flower we identify it from its smell; (2) அனுமானவனுமானம், inference from an inference, as when we infer that a man is learned from his mode of treating a subject; (3) ஆகம°, inference from the rule of Āgamas, as that a punishment is owing to former deeds. **அனு-மானிக்க** °mā-ṉikka [id.] To guess, suspect; சமுசயிக்க. To infer; நியாய வாயிலாயறிய. To neigh; கனைக்க. **அனு-மானிதம்**

°māṉitam [id.] Neighing; கனைப்பு. அனு-மிக்க °mikka [See next word] To infer; பிரமிக்க. அனு-மிதி °miti [See aṉu-māṉam] Knowledge obtained by inference; அனுமானத்தா லுண்டாகும் அறிவு (தருக்கசங். 45). அனு-மேயம் °mēyam [id.] What is inferable; பிரமிக்கத்தக்கது. அனு-மை °mai [S. anu-mā] =aṉu-miti; =அனு-மிதி. அனு-மோதனம் °mōtaṉam [S. mōd-anam, 'joy', fr. mud, perh. T. mōtt-al, 'smelling'] Rejoicing with others; ஒத்து மகிழ்தல். Consent; அங்கீகரிப்பு. அனு-மோனை °mōṉai [+muk-aṉai, 'beginning, alliteration'] Vowel and consonant assonance in alliteration; இனவெழுத்தால் வரும் மோனைத்தொடை (தொல். பொ. 402 உரை). அனு-யாத்திரை °yāttirai [+S. yā-trā, 'going in procession', fr. yā, T. iya-ṅk-u] Following an idol or great personage in procession; விக்கிரகம், பெரியோர் இவர்களைத் தின் பின் போதல். அனு-யோகம் °yōkam [+S. yōg-as, 'joining', fr. yuj. Cf. T. okk-a] Questioning; கேட்டல். Supplication; மன்றுடல். Examination; ஆராய்தல். Religious meditation; தேவத்தியானம். Reproof; கண்டித்தல். அனு-யோசனம் °yōcaṉam [id.] Interrogation; வினவுதல். அனு-ரஞ்சகம் °rañcakam [+S. rañj-aka, 'pleasing', fr. rañj, 'to redden', akin to T. arakku[1]] Satiety; திருப்தி. அனு-ரஞ்சனம் °rañjaṉam [id.] Love; அன்பு. Mark of compassion; அனுதாபம். அனு-ரதம் °ratam [+S. rat-am, 'pleasure', fr. ram, T. iru-vu] Affection, desire; பற்றுதல், ஆசை. அனு-ரதி °rati [id.] Love; அன்பு. அனு-ராகம் °rākam [V. aṉu-rañjakam] Love; அன்பு. Lasciviousness; சிற்றின்பப் பிரியம் (திவ். திருவாய். 8, 8, 8). அனு-ராக-மாலை °°mālai, Amatory poem; காதற் பிரபந்தவகை (தொல். 283 உரை). அனு-ரூபம் °rūpam [S. rūp-am<T. uru-v-am, 'form'] Resemblance, conformity; ஒத்திருத்தல், இணக்கம். Fitness; ஏற்புடைமை. அனு-ரூபம்-ஆகாத-காரணம் °°ākāta-kāraṇam, Equivocal cause; சந்தேகமான காரணம். அனு-ரூப-காரணம் Unequivocal°; சந்தேகமற்ற°. அனு-ரோதகம் °rōtakam [V. next word] Consenting; இணங்குதல். அனு-ரோதம் °rōtam [+S. rōdh-as, 'preventing', fr. rudh. Cf. T. uṟ-utt-u] Obliging; fulfilling another's wishes; பிறன் விரும்புவதைச் செய்துமுடித்தல். அனு-லாபம் °lāpam [+S. lāp-as, 'speaking', fr. lap, T. alapp-u] Repetition; tautology; மீட்டும் மீட்டும் பேசல், கூறியது கூறல். அனு-லேபகம் °lēpakam [+S. lēp-as, 'smearing', fr. lip, T. iḻu-t-u +-akam[6]] Things for smearing; சந்தனுதிகள். அனு-லேபம், °பனம் °lēpam, °-aṉam [id.] =api-ṣēkam (p. 105); =அபி-ஷேகம். அனு-லோமசன், °லோமன் °lōma-caṉ, °lōmaṉ [+S. lōman for rōman, 'hair'. With the hair, i. e. in natural order] The progeny of a high caste man and a low caste woman, opp. பிரதிலோமன். "குலமுய ராணுந் தாழ்ந்த குலமுது பெண்ணுங் கூடிப் பெற்ற பிள்ளை (சூத. சிவ. 12, 6). அனு-வக்கிரம் °vakkiram [+S. vak-ra, 'having a backward motion', fr. vak., akin to T. vāṅk-u] (Astron.) The transit of a planet in retrogression into the preceding sign; கிரகம் தான் நின்று வந்த இராசிக்கு மீண்டு போதல். அனு-வக்கிரேஷ்டம் °°iṣṭam [id. + iṣṭam q. v.] (Astron.) The quantity expressed by இஷ்டம், 3° 20; இஷ்டத்தைச் சர்ப்பாகாரமாக வைத்து இதிலே ஒருஇராசி கழித்து நின்ற கால அளவு (சோதி சாத்திரம், 47). அனு-வசனம் °vacaṉam [+S. vac-anam, 'speech, sentence', fr. vac, T. ōt-u] Word or phrase like the one previously spoken; அனுவசனம். அனு-வட்டம் °vaḍḍam, Variety of round pearls; ஒருவகை உருண்டை முத்து (S. I. I. ii, 143). அனு-வதிக்க °vatikka [V. aṉu-vātam] To recount by way of explanation; திரும்பச் சொல்லி விளக்க (திருவிளை. மாமனு. 30). To consent; சம்மதிக்க. To quote; மேற்கோளாக்க. அனு-வர்த்தனம் °varttaṉam [+S. vart-anam, 'turning, conduct', fr. vrit. Cf. T. ur-uḷ] Compliance, following; சம்மதித்தல், பின்பற்றல். அனு-வர்த்தனை °varttaṉai, A class of ancient taxes; பழைய வரித் தொகுதி (M. E. R. 428 of 1913). அனு-வாக்கியை °vākkiyai [See next word] Prayer taken from the Vedas; வேதத்தினின்றெடுத்த மந்திரம். அனு-வாகம் °vākam [+S. vāk-a, 'speaking', fr. vac, T. ōtt-u] A chapter of the Vedas; வேதத்தின் உட்பிரிவு. A compilation from the Rig or Yajur Vedas; இருக்கு அல்லது யசுர் வேதத்தின் சங்கிரகம். அனு-வாசம், °வாசனம் °vācam, °-aṉam [+S. vās-as, 'perfume', fr. *vēs, akin to T. ūt-u] Perfuming; சுகமணம் ஊட்டுதல். [+S. vas, 'to dwell'. Cf. T. vat-i] Dwelling together; கூடி வாழ்தல். Love; அன்பு. அனு-வாசிதம் °vācitam [See above] Thing perfumed; வாசனையூட்டப்பெற்றது. அனு-வாதம் °vātam [+S. vād-as, 'speech', fr. vad, T. ōt-u] Repeating by way of explanation; முன் கூறிய பொருளைப் பின்னரும் எடுத்தோதுதல். Consent; சம்மதம். அனுவாத-வ்-ஒத்தி °°otti, submortgage; மறுவொற்றி. அனு-வாதி-ஸ்வரம் °vāti-svaram [id.+S. svar-as, 'sound', fr. svri, Cf. T. tuvaḷ] (Mus.) A subsidiary note harmonizing with the chief one; இணக்கமான சத்தம். அனு-விதாயினி °vitāyiṉī [+S. vi-dhā-yinī, 'disposing', fr. dhā, T. taḷ] What confirms, what is agreeable; அனுசரிப்பது, இணங்கியது (சி. சி. 2, 84 சிவாக்.). அனு-விரசனம் °viracaṉam [+S. vraj-an-am, 'proceeding', fr. vraj. Cf. T. viraç-u] Accompanying one whom one wishes to honour; வழிவிட்டனுப்புதல். அனு-விருத்த-ஸ்வபாவம் °virutta-svapāvam [S. vritta, 'existed' + sva-bhāvas, 'own state'] Inherent quality; இயற்கைக் குணம் (சீவ. 380, உரை). அனு-விருத்தி °virutti [See above] Continuance; தொடர்ச்சி. Being in attendance; உபசாரம். Exception; புறனடை. அனு-ஷ்-டானம் °ṣṭāṉam, V. aṉu-ḍ-ḍāṉam; =அனு-ட்-டானம். அனு-ஷ்டிக்க °ṣṭikka [id.] To perform religious duties etc; ஆசரிக்க.

அனு[2] aṉu, n. [=aṇ-u—=அணு] Anything small; அற்பம். அனு-க்-காட்ட °kāḍḍa, To appear slightly; சிறிது தோன்ற. To give a hint; சாடை காட்ட.

அனு[3] aṉu, n. [S. hanus. Cf. T. kavuṉam[3]] Jaw; தாடை. —CPDS அனூர்த்துவார்த்தி °ūrttuvā'tti [+ S. ūrdhva, 'upright', fr. vridh, T. vaḷar +atti[9]] Bone of the upper cheek; மேற்கதுப்பின் எலும்பு. அனு-மக்-கொடியோன் °mak-koḍiyōṉ [aṉu-māṉ+koḍi. [See next word] Arujuna; அர்ச்சுனன். அனு-மந்தன் °mantaṉ, for Aṉu-māṉ; =அனுமான். அனு-மான் °māṉ [+S. -mat, 'having'] 1. Hanumān, said to be called so from his large jaws; அஞ்சனேயன் எனும் குரங்குத் தலைவன். 2. One of the 32 orders of architecture; சிற்பநூல் முப்பத்திரண்டிலொன்று.

அனுக்கம் aṉukkam, n. [Cf. aṉukam] Sandal-wood; சந்தனம்.

அனுக்கு-தல் aṉukku, 5 v. tr. [caus. of aṉ-uṅku—<அனுங்கு] 1. To touch or strike undesignedly; தொடவேண்டாததைத் தொடுதல். 2. To oppress, cause to suffer; வருத்துதல் (உபதேச

கா. வொ. விரத. 381). To ruin; கெடுத்தல். —CPDS அனுக்கி-அடித்தல் °adittal, A play; ஒரு விளையாட்டு. அனுக்கு-சிரம் °ciram [+ S. *śiras*, 'head'] (Natya) Violent quivering of the head, imitating a fit; தலை அபிநயவகை (பரத. பாவ. 78).

அனுக்கை aṉukkai,=*aṉu-ññai*;=அனுஞ்ஞை.

அனுகம் aṉukam, *n.* [?] Red sandal; செஞ்சந்தனம்.

அனுங்கு-தல் aṉuṅku, 5 *v. int.* [rt. *aṉ*+-*u*[5] + 2nd format. (*ṅ*)*k*+ -*u*[5], 'to touch, to be pressed, to heave'. Another form *aṉ-āl*—அன்+ -உ[5]+ மேல்வரும் விபஞ். (ங்)க் + -உ[5], 'தொடுதல், நெருக்குண்ணல், மூச்செறிதல்'. வேறுருவம். அனல்-தல்] 1. To be touched undesignedly; தொட வேண்டாததைத் தொடல். 2. To suffer pain; வருத்துதல். 3. To fade, droop; வாடுதல். 4. To mumble, moan; முணுமுணுத்தல். 5. To perish; கெடுதல் (சீவக. 436).

K. *aṉuṅgu*. See IE parallels under √*aṉ*.

அனுக்கம் aṉukkam, *n.* [id. + -*am*[1]] 1. Suffering; வருத்தம் (கம்பரா. கைகேசி. 52). 2. Infantile sickness; பாலவியாதி (சடு, 5, 10, 3, ஜீ.). 3. Weakness; பலவீனம். 4. Groaning; முனக்கம். 5. Tremelo in singing; கம்பித இசை. 6. Fear; அச்சம்.

அனு-ச்-சை aṉu-c-cai, See under *aṉu*-[1]; அனு-[1].

அனு-ஞ்-ஞை °ஞை aṉuññai, °ñai, Do; டை.

அனு-ட்-டானம் aṉu-ḍ-ḍāṉam, Do; டை.

அனுடம் aṉuḍam, V. *aṉuṣam*; =அனுஷம்.

அனுத்திராகம் aṉuttirākam, *n.* A kind of delirium; சன்னி வகை.

அனுப்பன் aṉuppaṉ, *n.* A division of Kanarese Gaundas; கவுண்டரில் ஒரு பிரிவார்.

அனுப்பு-தல் aṉuppu, 5 *v. tr.* [a *caus.* form of *aṇṇu*, 'to approach'—அண்ணுதலின் பிறவினை யுருவம்] To send; போகச் செய்தல். 2. To accompany one a little way as a mark of respect; வழி விடுதல். ஆள்-அனுப்ப; āḷ-aṉuppa. செய்தி°, ceyti°, To send a message. வழி° vaḻi°, To accompany one a little way.

அனுப்பு aṉuppu, *n.* [id.] An ancient tax; பழையவரி வகை (M. E. R. 427 of 1928—9).

அனு-வழி aṉu-vaḻi, *n.* [S. *han-us*, 'prostitute',—descended from the prostitute Tārai] The planet Mercury; தாரை எனும் வேசியிடத்திற் பிறந்தவன் எனக் கற்பிக்கப்படும் புதன்.

அனு-ஷ்-டானம் aṉu-ṣ-ṭāṉam, V. under *aṉu*-[1]=அனு-[1] பார்.

அனுஷம் aṉuṣam, *n.* [fr. S. *aṉu-rādhā*] 1. The 17th nakṣatra, part of Scorpio; பதினேழாவது நட்சத்திரம். 2. The third mukūrttam during day; பகலிலேவிசாரும் மூன்றும் முகூர்த்தம்.

அனூகம் aṉūkam, *n.* [S. *aṉūk-as*, fr. *aṉu*-[1]+S. *añc*, 'bend'. See T. *añcu*] 1. Former state of existence; கழிந்த பிறப்பு. 2. Good conduct; சீலம். 3. Family; குலம்.

அனூபம், aṉūpam, *n.* [S. *aṉūpas*, fr. *anu*-[1]+*āp-as*, 'water', T. *appu*] 1. Marshy ground; சதுப்பு நிலம். 2. Land on the margin of a water course; படுகை நிலம். 3. Frog; தவளை. He-buffalo; எருமைக் கடா. —CPD அனூப-சம் °cam [S. -*ja*, 'born'—-சம்[3]] Ginger; இஞ்சி.

அனூ'ர்த்துவாஸ்தி ஆதியன aṉ-ūrttvā'sti etc., V. *aṉ*-[1]; அன்-[1] என்றதின் கீழ்.

அனேகம் ஆதியான aṉēkam etc., Do; டை.

அனை[1] aṉai, *demonstr. pron.* [fr. *aṉṉa* —<அன்ன] That; அந்த. "அனை நால் வகையும்" (தொல். பொ. 245).

அனைத்து aṉaittu, *def. v.* [fr. id.] It is of such nature; அத்தன்மைத்து (கலித். 78). [*n.*] What is such; அப்படிப்பட்டது. [*adv.*] So much, so far; அவ்வளவு.

அனைத்தும் aṉaittum, *n.* [id. + -*um*[2]] The whole; எல்லாம். அனைவரும், °வோரும் aṉaivarum, °vōrum, All persons; எல்லாரும்.

அனைய aṉaiya, *adj.* [id.] Such like; அத்தன்மையான. The same; ஒத்த. It is also used as a verb conjugated in all persons, thus; அனையேன் or அனையன், I am like; அனையாய் or அனையை, Thou art like; அனையன், -ன் or அனையான், -ள், அனையது, He, she, it is like. Plural அனையெம், -மேம், -யோம், அனையிர், -யீர், அனையர், -யார், அனைய, அனையன, அன்ன.

அனை[2] aṉai *n.* A kind of fresh water fish; மீன்வகை (பாரத. குரு. 14).

அனை[3] aṉai, *n.* [sync. of *aṉṉai*— <அன்னை] Mother; தாய்.

-அனை[4] -aṉai, *suff.* [fr. -*aṉam*— < -அனம்] A stem-suffix with the sense of 'what has'; 'உடையது' எனும் பொருளுள்ள ஒரு கடைநிலை. உ-ம்: நிறப்பனை.

Cf. the S. affix *ana* as in *has-ana*, 'laughter', *vadh-ana*, 'slaughter' etc.

அனைகா'ந்திகம் aṉaikā'ntikam, V. under *aṉ*-[1]; அன்-[1] என்றதின் கீழ்.

அஜ்மாஷ் ajmāṣ, *n.* [U. *azmāish*] 1. Scrutiny; பரிசோதனை. 2. Estimate of crops; பயிர் மதிப்பு.

அ-ஜகல்-லக்ஷணை a-jakal-lakṣaṇai, *n.* [S. *a-jahat*, 'not dropped' (fr. *hā*) +*lakṣaṇā*, fr. T. *ilakkaṇai*, q. v.] (Gram.) A variety of ilakkaṇai in which the primary sense of a word is retained along with its secondary one; விடாத இலக்கணை.

அஜரத் ajarat *n.* [U. *hazrat*] A term of respect; தக்கோருக்கு மரியாதையாய் வழங்குஞ் சொல்.

அ-ஜபா ajapā, *n.* [*a*-[3] + S. *jap-as*, 'muttering prayers'. Cf. T. *cepp-u*] The yogi's mantras uttered without effort during inhalation and exhalation; யோகிகளின் மந்திரவகை. அஜபா-நடனம் °naḍaṉam, The dance of Tiyākarājā at Tiruvārūr; திருவாரூர்த் தியாகேச நடனம்.

அ-ஜன் a-jaṉ, *n.* [*a*-[3]+ -*ja*, 'born'] The unborn, God; பிறப்பில்லாத கடவுள்.

அ-ஜாக்கிரதை a-jākkiratai, *n.* [*a*-[3]+ S. *jāgratā*, 'waking'. Cf. T. *viḻi*] Inattentiveness; விழிப்பின்மை.

அஜா-கள-ஸ்தனம் ajā-kaḷa-staṉam, *n.* [S. *aja*, 'goat', see *acam*[2]+*gal-as*, 'neck'. See T. *kal-am*[5] + *stan-as*, 'udder'] 1. The fleshy protuberance hanging down from the neck of goats; ஆட்டின் கழுத்தில் தொங்கும் அதர். 2. Worthless person or thing; பயனற்றவன், -ள், -து.

அஜாடி ajāḍi, *n.* [U. *ujār*] One who is useless; பயனற்றவன்.

அ-ஜாத-சத்துரு a-jāta-catturu, *n.* [*a*-[3] +S. *jā-t-a*, 'born', fr. *jaṉ*, Cf. T. *iṉ* +*satr-us*, 'enemy'. Cf. T. *katam*] 1. One without enemies; Yudhiṣṭira; தருமபுத்திரன். 2. One who is too good to make enemies; பரம சாது.

அ-ஜீவா'ஸ்திகாயம் a-jīva'stikāyam, *n.* [*a*-⁷+S. *jīv-a*, 'living' + *asti-kāya*, 'category or predicament'—அஸ்திகாயம்.] (Jaina) One of the categories called pañca-astikāyam q. v. பஞ்சாஸ்திகாயத்தன் ஒன்று.

அஜுர் ajur *n.* [U. *huzūr*] Presence as of a superior authority; சமுகம்.

அஜே'கபாதம் ajē'kapātam, *n.* [? *aja-ēka-pād-as*, an epithet of Vishnu] The second of the 15 divisions of night; இரவு பதினைந்து முகூர்த்தத்துள் இரண்டாவது (விதானமாலை, குளு. 73 உரை).

அ-ஶ்ரீ a-śrī, *n.* [*a*-⁸+S. *śrī*, T. *tiru*] 1. Ill-luck; அர் அதிஷ்டம். 2. Sin; பாவம்.

அஷ்ட-க்-கொடி aṣṭa-k-koḍi, *n.* [see *aḍḍam*³, p. 45—அட்டம்³ பார்] The flag-hoisting ceremony to the eight cardinal deities in a temple; அட்டதிக்குப் பாலகருக்குக் கொடியேற்ற விழா.

அஷ்டகம் aṣṭakam, *n.* [V. *aḍḍam*³] 1. Collection of eight; எட்டன் கூட்டம். 2. (Cath.) Octave of a feast; எட்டுநாட் கொண்டாட்டம்.

அஷ்டகை aṣṭakai, *n.* [S. *aṣṭakā*] 1. The eighth titi of a lunar fortnight; அட்டமி. 2. A form of worship of the manes; பிதிர் சிராத்தவகை.

அஷ்ட-கோணம் aṣṭa-kōṇam, *n.* [see *aḍḍa-kōṇam*—அட்டகோணம்] Being crooked, out of shape; கோணலுருவாக இருக்கை.

அஷ்ட-பாக-மானியம் aṣṭa-pāka-māṉiyam, *n.* [*aḍḍam* + *pākam*, 'share' + S. *mān-ya*, '(held in) honour'] An estate in payment of only an eighth share of the produce; மகசூலில் எட்டிலொன்றைத் தீர்வையாகக் கொடுக்கும் இறையிலி நிலம்.

அஷ்டம் எனும் சொல்லும் தொடர்களும் *aṣṭam* and cpds not found here. V. *aḍḍam*³; அட்டம்³ பார்.

அஷ்-ட-வர்க்கு aṣṭa-varkku, see aḍḍa-varukku II; = அட்டவருக்கு II.

அஷ்டாதசம் ஆதியன aṣṭātacam etc. See *aḍḍā-tacam*, *p.* 50; அட்டாதசம் பார்.

அஷ்டோத்தர-தசம் ஆதியன aṣṭōttara-tacam etc. See *aḍḍōttara-tacam*, p. 45; அட்டோத்தர-தசம் பார்.

அ-ஷட்-கரணம் a-ṣaḍ-karaṇam, *n.* [*a*-⁸ + S. *ṣaṭ*, 'six' + *kar-aṇ-am*, 'organ of sense'] What is without the aid of the six sensory organs; அறு கரணங்களின் உதவியற்றது.

அஷட்டாளம் aṣaḍḍāḷam, V. *acaḍḍāḷam*; =அசட்டா'ளம்.

அஸ்தம் ஆதியன astam etc; V. *attam*; அத்தம் பார்.

அஸ்தா'ந்தரம் astā'ntaram, *n.* [*attam*³ + *antaram*, by analogy with *varuṣā'ntaram*] 1. Cash in hand; கையிருப்புத் தொகை. 2. Final account; முடிவான கணக்கு.

அஸ்தாரிப்பு astārippu, *n.* [prob. L. *a(d)stare*, 'to be present'] Assembling in a church; சபையார் ஆலயத்திற் குழுமியிருத்தல்.

அஸ்தி asti, V. *atti*; =அத்தி.

அஸ்திபாரம் astipāram, V. *attivāram*; =அத்திவாரம்.

அஸ்திரம் astiram, V. *attiram*; அத்திரம்.

அஸ்து astu *ind.* [S. *astu*; 'be it', fr. *as*] So be it, Amen; அப்படியே, ததாஸ்து, ஆம். [U. *āhista*] Stop!; Fault! (in a game); தடைக்குறிப்பு. —CPDS அஸ்தூரி astūri, Do; டை. அஸ்து-க்-கூட, °பாட °kūḍa, °pāḍa, To be interposing with 'yes, but'; அடிக்கடி தடைச்சொல் கிளப்புதல்.

அ-ஸ்தேயம் a-stēyam, V. *a-t-tēyam*; =அ-த்-தேயம்.

அஸ்தோ'தகம் astōtakam, *n.* [*attam*¹ + S. *uda-kam*, 'water', T. *ōt-am*]. Water poured in the left hand to purify it after the prāṇā'kuti, at the commencement of a meal; போசனத் தொடக்கத்தில் பிராணாகுதி செய்தபின் இடக்கையில் விடும் நீர்.

அஸ்மரி-ரோகம் asmari-rōkam, *n.* [S. *aśmarī*, 'gravel'. See *acumam* (p. 37)+*rōg-as*, 'disease'. Cf. T. *ul-a*] Stone in the bladder; சலப்பையிற் கல்நோய்.

அஸ்மிதம், °தை asmitam, °tai, *n.* [S. *asmi-tā*, abstract noun fr. *asmi*, 'I am'] Egotism; அகங்காரம்.

அஸர் asar, *n.* [Ar. *asur*] Evening prayer; மாலைநேரம் தொழுகை.

அஹம் aham, V. *akam*¹; =அகம்¹.

அஹஸ் ahas, *n.* [See *akar* — அகர்] Day-time; பகல்.

அஹிம்ஸை ahimsai, V. *akiñcai*; =அகிஞ்சை.

அக்ஷபாத-மதம் akṣapāta-matam, *n.* [V. *akka-pātaṉ*, 'Gautama' + S. *mat-am*, 'doctrine'] The Nyaya system of philosophy; நியாயமதம்.

அ-க்ஷயம் a-kṣayam, V. *akkayam*; = அக்கயம்.

அ-க்ஷரம் a-kṣaram, *n.* [V. *akkaram*—அக்கரம்] (Mus.) A unit of measure; தாள அளவு வகை.

# ஆ Ā

ஆ Ā, The second letter and vowel of the Dravidian alphabet, and in most cases, an emphatic form of *a*-². It is formed by the coalescence of two *a*'s and is liable to become *ō* as well as *ē*. See Phonetic Transformations (p. xv.). When final, as in S. words, it is changed into *ai*. Thus S. *āśā* = T. *ācai*, more correctly *ācei* according to Caldwell. In K. this *ā=e*; இரண்டாம் உயிர் எழுத்து. இது அகரத்தின் வலியுறுத்த உருவம். (Mus.) Symbol representing the first note of the gamut; சரலி வரிசையின் முதற் சுரம்.

ஆ¹ ā; *int.* [onom.] 1. Alas! expressing pity; இரக்கக் குறிப்பு (சீவக. 1804). 2. Oh! ha! expressing wonder; அதிசயக் குறிப்பு (திருக்கோ. 60). 3. Ah! expressing anger or contempt; கோபம் அல்லது இகழ்ச்சிக் குறிப்பு.

S. *hā*, *haha*.

ஆ-²தல் ā, *v. intr.*, past *āyiṉēṉ* *āṉēṉ* [apoc. of *āk-u*— < ஆகு-தல்] 1. To be completed, done; முடிதல், 2. To be fit, proper; இணக்கமுறல். 3. To happen; சம்பவித்தல். 4. To come into existence, to be; உண்டாதல், அமைதல். 5. To stand in the relation of (kinsman etc.) உறவின் முறையாதல். 6. To be like, equal; ஒப்பாதல் (திவ். இயற். 1, 89). 7. To prosper; விருத்தியாதல். (Prov.) "ஆகிற குடி அரைக்காசால் ஆகும்."

ஆ ā, *n.* [id.] Becoming; ஆகுகை (தொ. பொ. 1, 2).

ஆ³-த்தல் ā, *11 v. tr.* [aph. of *yā*— <யா-த்தல்] To bind; இணைத்தல் (சீவக. 1882). [*caus.* of *ā*-²—ஆ-தல்] To cause, to bring about; அமைத்தல். "அருஞ்சமமாமாத்தி" (பாரதவெண்.).

ஆ⁴ ā, *n.* [prob. apoc. of *āmā*—ஆமா பார்] 1. Bull; இடபம். "ஆவார் கொடி

கொழும்பு தமிழ்ச் சங்க

பாய்'' (திருவிளை. எரிபசி. 19). 2. Female of the ox, the sombar and the buffalo; பெற்றம் (தொல். பொ. 615). —CPDS ஆ-வ்-உரிஞ்சி, °உரிஞ்சு-தறி °uriñci, °uriñcu-tari [+*uriñc-u*, 'to rub' +*tar-i*, 'post'] Rubbing post for cattle; மாடுகள் உடலைத் தேய்க்கக் குற்றி. ஆ-க்-கொல்லி °kolli [+*koll-i*, 'killer'] Blinding tree; தில்லை. ஆ-கோள் °kōḷ [+*kōḷ*, fr. *koḷ*, 'to seize'] Theme, in purapporuḷ, of seizing the foe's cattle as a declaration of war; பகைவர் பசுக்களைக் கவர்ந்து போர்க்கு வாயில்தேடல். ஆ-ச்-சிலை °cilai [S. *śil-ā*, 'stone', Cf. T. *kal*] Cinnamon stone; கோமேதகம். ஆ-ப்-பி °pi [for *pī*] Cow-dung; பசுச் சாணி (புறம், 249). ஆ-தீண்டு-குற்றி °tīṇḍu-kurri, V. ā-v-uriñci; = ஆ-வுரிஞ்சி. ஆ-மயம்[1] °mayam [Cf. S. *gō-may-am*] Cow-dung; பசுச்சாணி. காட்டா kāḍḍu°, Wild cow. காரா kār°, Buffalo; எருமை.

K., M. *a*: Tel. *avu*.

ஆ[5] ā, *n.* [Cf. *āccā*] Ebony; கருங்காலி.

ஆ[6] ā, *n.* [apoc. of *āru*— < ஆறு] Way, manner; விதம். ''செய்யாவாறு'' (திருவாச. 11, 4).

-ஆ[7] -ā, *part.* [fr. *ē*, selective particle] 1. An interrogative termination (singling out one among many); வினாவைக் காட்டும் கடைநிலை. உ-ம்: வந்தானா? 2. An affirmative past participle; இறந்தகால வினையெச்ச விகுதி. ''கல்லாக் கழிப்பர் தலையாயார்'' (நாலடி. 366).

-ஆ[8] -ā, *conj.* [Apoc. of *āka*] Either, or; ஆவது......ஆவது. ''அசுரா வந்து கேட்டிடீர்'' (திருவிளை. இந்திரன் பழி. 26).

-ஆ-[9] -ā- *part.* [fr. *-al-*[3]— < -அல்-[3]] 1. Negative infix, as in *uṇṇāṉ*; எதிர்மறை இடைநிலை. உ-ம்: உண்ணான். 2. Sign of irrational 3rd person plural negative; பலவின் பால் எதிர்மறை வினைமுற்று விகுதி. உ-ம்: அவை உண்ணா.

ஆ-[10] ā-, *pref.* [prob. an intensified form of *a-*[3] meaning 'proximity'] A Sanskrit prefix to verbs and nouns employed in the sense of 'near to, from, towards, on all sides, as far as, up to' etc. Ex. *ā-kramati*, 'he goes towards'; *ā-maraṇam*, 'till death'. It also signifies contraction, diminution, as *ā-pakva*, 'a little cooked'; சமீபமாய், தொடங்கி, சுற்றிலும், வரையும் எனப் பொருள்தரும் ஒரு வடமொழி முதல்நிலை. உ-ம்: ''ஆபாத விருத்தர், ஆசன்ன முற'' (பாரத. அருச்சு. தீர்த். 49).

ஆஅ āa, *int.* An exclamation expressing surprise, pity, grief; ஆச்சரியம், இரக்கம், துக்கம் இவற்றின் குறிப்பு.

ஆக்கணாங்கெளிறு ākkaṇāṅkeḷiru, *n.* [Cf. *ākkeḷutti*] A brown estuary fish: Plotosus canins; கெளிற்று மீன் வகை.

ஆக்கதம் ākkatam, *n.* Crocodile; முதலை.

ஆக்கந்திதம் ākkantitam, *n.* [S. *ā-skand-itam*, 'walk of a horse', fr. *skand*. Cf. T. *kent-u*] Gallop; அசுவ கதியிறன் ஒன்று.

ஆக்கம் ākkam, *n.* [fr. *ā-ku*— < ஆகு-தல்] 1. Change from one state to another; மாற்றம். 2. Creation; சிருஷ்டி (சி. சி. 1, 37). 3. Achievement; கைகூடுகை. 4. Increase, Development, gain; விருத்தி, இலாபம். 5. Elevation; எழுச்சி. 6. Accumulation, wealth; ஈட்டம், செல்வம் (குறள், 755, 457). 7. Gold; பொன். 8. Lakṣmī; இலக்குமி. 9. Benediction, auspiciousness; ஆசி, மங்களகரம். 10. Arrangement, preparation as in cleansing rice; அமைத்துக் கொள்கை. 11. Van of an army carrying the banner; கொடிப்படை. —CPDS ஆக்க-வ்-உம்மை °ummai, The particle *um*, 'and', showing inclusion of something other than the thing mentioned; ''பாலுமாம் மருந்துமாம்'' என்றதிற் போல பிறிதொன்றுமாய் இருத்தலைக் குறிக்கும் 'உம்' என்னும் விகுதி. ஆக்க-க்-கிளவி °kiḷavi, V. ākkac-col; = ஆக்கச்சொல். ஆக்க-ங்-கூற °kūra, To invoke a blessing; ஆசி சொல்ல (திருவிளை. மாயப். 26). ஆக்க-ச்-சொல் °col, A word or phrase used metonymically; ஆகுபெயராக வழங்கும் சொல். Expressions with the forms of the verb *āku*; ஆகு-தல் என்னும் வினையின் விகாரத்தால் உண்டாகும் சொற்கள். உ-ம்: ''ஆயினன்''. ஆக்க-ஞ்-செப்ப °ceppa, To express the poignancy of one's love in akapporuḷ; தன் நெஞ்சில் வருத்த மிகுதலைப் பிறருக்கு அறிவுறுத்த (கப்பி. 36 உரை). ஆக்க-ப்-பாடு °pāḍu, Advantage, gain; அதிகம், இலாபம். ஆக்க-ப்-பெயர் °peyar, Name or designation coined by an author and is of two kinds: (1) இடுகுறியாக்கம் iḍukuri°, arbitrary term, as முட்டை, for Skanda; (2) காரணவாக்கம், kāraṇa°, A common term applied within a limited range as பொன்னன் for a certain man; இடையிலே ஆக்கப்பெற்ற பெயர்கு (நன். 275, உரை). ஆக்க-ப்-பெருக்கம் °perukkam, Income; வருமானம் (S. I. I. v. 330). ஆக்க-ப்-பொருள் °poruḷ, A meaning given to a word or phrase not originally and directly belonging to it; ஆகுபெயர்ப் பொருள். ஆக்க-மகள் °makaḷ, Lakṣmī the goddess of wealth; இலக்குமி. ஆக்க-வருஷம் °varuṣam, Leap year; மாசி மாதத்தில் ஒரு நாள் மிகுந்த ஆண்டு. ஆக்க-வினைக்-குறிப்பு °vinaik-kurippu, A verb indicating a natural change of state or quality; ஆக்கச் சொல்லைக் கொண்டிருக்கும் வினைக் குறிப்புச் சொல். உ-ம்: சாத்தன் நல்லன் ஆயினன்.

ஆக்கர்[1] ākkar, *n.* [E. *auger*] Tool for boring holes; துறப்பணம்.

ஆக்கரிவாள், ஆக்கியரி° ākkarivāḷ, ākki° [Tel. *āku* < T. *ada-ku*, 'edible leaves' + *ari-vāḷ*] Small garden-knife; சத்தகம்.

ஆக்கியம், ஆக்கியை ākkiyam, °yai, *n.* [S. *ā-khyā*, 'to see, count'] Appellation, name; பெயர்.

ஆக்கியாதம் ākkiyātam, *n.* [id.] What is said, published; சொல்ல, பிரசித்தஞ் செய்யப்பட்டது.

ஆக்கியாபிக்க ākkiyāpikka, v. [id.] To command; கட்டளையிட.

ஆக்கியானம் ākkiyāṉam, *n.* [id.] 1. Fable; கட்டுக்கதை. 2. Publishing; பிரசித்தஞ் செய்தல்.

ஆ-க்-கியோன் ākkiyōṉ, V. under *ākku*; ஆக்கு-தல் பார்.

ஆ-க்-கிரகம் ā-k-kirakam, *n.* [S. *ā-grah-as*, 'seizing', fr. *grah* or *grabh*. Cf. T. *kiḷapp-u*] 1. Seizing; கைக்கொள்ளுகை. 2. Violence; நெருக்கிடை. 3. Persistence; விடாப்பிடி. 4. Display of bravery; பராக்கிரமம். 5. Great anger; கடுங்கோபம். 6. Mercy; தயை.

ஆக்கிர-காயணி ākkira-kāyaṇi, *n.* [S. fr. *agra*, + *hāyaṇam*, 'commencement of the year'. See *akkiram*, p. 6 + *hāyaṇam*, 'year'] Offering in the household fire on the full moon day of the month of the same name, also known as mārgaśīrṣa; மார்கழி மிருகசிரிடப் பூரணையிற் செய்யும் ஒரு ஓமம்.

ஆ-க்-கிரந்திதம் ā-k-kirantitam, *n.* [S. *ā-krānt-is*, 'stepping upon', fr. *kram*, akin to T. *kaḍ-a*] Rough trot, one of the five acuvakati; குதிரையின் கதி வகை.

ஆ-க்-கிரமம் ā-k-kiramam, *n.* [S. *ā-kram-as*] 1. Surpassing, attacking, taking over; மேவிடல், தாக்குதல், கைப்

பற்றுதல், 2. Extending over; மேலை கப் பரத்தல். 3. Might, valour; வலி.

ஆ-க்-கிரமணம் ā-k-kiramaṇam, *n.* [S. *ā-kram-aṇam*] Taking by force; வலிந்து கவர்தல்.

ஆ-க்-கிரமிக்க ā-k-kiramikka, *v.* [id.] 1. To rise; மேலெழுந்து செல்ல. 2. To show bravery and indignation; சினந்து வீரங்கொண்டெழும்ப. 3. To usurp; அதிகாரப்படக் கவர. 4. To be proud; ஆங்காரங் கொள்ள.

ஆக்கிர-யணம் ākkira-yaṇam, *n.* [S. *āgra-yaṇas*, fr. *agra*—அக்கிரம்] The first sōma libation in the Agniṣṭhoma or an offering of first fruits on the full moon day of Acuvini; ஓர் யாகம்.

ஆ-க்-கிராணம் ā-k-kirāṇam, *n.* [S. *ā-ghrā-ṇam*, 'smelling', ? fr. *ghrāṇam*, 'nose'. Cf. T. *kuḷ-al*. With this may be compared S. *nās-ā* and T. *nāḷ-am*] 1. Nose; மூக்கு. 2. Act of smelling; மோந்து பார்த்தல். 3. A medicinal snuff; ஒரு மருந்துப்பொடி. 4. Satisfaction; திருப்தி. —CPDS ஆக்கிராணே'ந்திரியம் °intiriyam, Nose; மூக்கு. ஆக்கிராணப்-பொடி °poḍi, Snuff; மூக்குத்தூள்.

ஆ-க்-கிராணிக்க ā-k-kirāṇikka, *v.* [id.] 1. To smell, take snuff; மணக்க, பொடி போட. 2. To feel; உணர.

ஆ-க்-கிராந்தம் ā-k-kirāntam, *n.* [V. *ā-k-kirantitam*—ஆ-க்-கிரந்திதம் பார்] What is seized; கைக்கொள்ளப்பட்டது (சி. சி. 2, 91, சிவாக்.).

ஆக்கிராந்தி ākkirānti, *n.* [id.] Act of surpassing, prowess; கடந்து போதல், வீரம்.

ஆ-க்-கிரிஷம் ā-k-kiriṣam, *n.* [for *āk-kurōcam*— =ஆக்குரோசம்] Anger; கோபம்.

ஆ-க்-கிரீடம்' ā-k-kirīḍam, *n.* [S. *ā-krīḍ-as*, 'play', fr. *krīḍ*. Cf. T. *kēḷ-i*] 1. Sport, play; பொழுதுபோக்கு, விளையாட்டு. 2. Place of sport, flower-garden; விளையாட்டிடம், பூந்தோட்டம்.

ஆ-க்-கிரோசம் ā-k-kirōcam, V. *ākku-rōcam*; =ஆக்குரோசம்.

ஆ-க்-கிறிஷ்டம், °கிறிஷம் ā-k-kiriṣṭam, °ṣam, *n.* [S. *ā-kriṣ-as*, *kriṣṭa*, 'dragging'] Conjecture; ஊகம்.

ஆக்கினேயம் ākkiṉēyam, *n.* [fr. *akkiṉi*, 'fire'—அக்கினி] 1. What belongs to Agni; அக்கினி தெய்வத்துக் குரியது. 2. The S. E. quarter; தென்கிழ்த்திசை. 3. Sacred ashes; விபூதி. 4. A chief Purana; ஒரு புராணம். 5. One of the Saiva Agamas in Sanskrit; ஒரு சைவாகமம். —CPDS ஆக்கினேயா'ஸ்திரம் °astiram [V. *attiram*[1]] Missile presided by Agni; அக்கினியைத் தேவதையாகக் கொண்ட அம்பு. ஆக்கினேய-ஸ்நானம் °snāṉam [+S. *snā-nam*, 'bathing', fr. *snā*. Cf. T. *naṉ-ai*] Purification by smearing one's body with sacred ashes; விபூதியை உத்தூளனமாய்த் தரிக்கை.

ஆ-க்கினை ā-kkiṉai, *n.* [S. *ā-jñā*—ஆஞ்ஞை பார்] 1. Order, mandate; கட்டளை. 2. Punishment; தண்டனை. 3. A cakra between the eye-brows; ஆறாதாரங்களுள் ஒன்று. 4. (Saiva) Thumb; கட்டைவிரல். —CPDS ஆக்கினை-காரன் °karaṉ [+S.-*kara*, 'doing' +-*aṉ*[5]] Servant; ஊழியக்காரன். ஆக்கினை-சக்கரம் °cakkaram [+S. *cakr-am*, 'wheel'<T. *kuḻ-ai*. Cf. T. *cill-u*] The discus-weapon, as held by some ancient kings, in token of universal power; அரசாணை. ஆக்கினை-சக்தி °cakti [+ S. *śak-tis*, 'power', fr. *śak*. Cf. T. *tak-u*] Regal power; அரசனின் வன்மை. ஆக்கினை-பங்கம் °paṅkam [+ S. *bhaṅg-as*, 'breaking', fr. *bhañj*. Cf. T. *piḷa*] Insubordination; கட்டளை மீறுகை. ஆக்கினை-ப்-பத்திரம் °pattiram [+S. *pat-ram*, 'feather, leaf', fr. *pat*, T. *para*] King's writ, royal edict; அரசனது கட்டளைச் சாசனம். நாலு ஆக்கினையும் பண்ண, To cut one's nose, ears, hands and feet, as a punishment.

ஆக்கு-தல் ākku, 5 *v. tr.* [*caus.* of *āku*—<ஆகு-தல்] 1. To shape, effect, make; உருப்படுத்துதல், செய்தல் (நாலடி. 124). 2. To arrange, cook; அமைத்துக்கொள்ளுதல் (தொல். சொல். 1, சேனா.). 3. To create; சிருட்டித்தல் (திருவாச. 1, 42). 4. To change; மாற்றுதல் (கம்பரா. ஆற். 17). 5. To elevate; உயர்த்துதல் (குறள், 264). —CPD ஆக்கு-ப்-புரை °purai [+*purai*, 'hollow, room'] Covered place for cooking; சமையற் பந்தல்.

ஆக்கர்[2] ākkar, *n.* [id. + -*ar*[1]] Installed deities; படைக்கப்பட்ட தேவர்.

ஆக்கன் ākkaṉ, *n.* [id. + -*aṉ*[5]] What is artificial; செயற்கையானது.

ஆக்கியோன் ākkiyōṉ, *n.* [*akkiya-avaṉ*] 1. God as creator; படைத்தோன். 2. Author of a book; ஆசிரியன்.

ஆக்கும் ākkum, *part.* [*fut.* of id.] 1. Perhaps; போலும், உ-ம்: "கடன் கேட்க வந்தவனாக்கும்". 2. Indeed, with slight emphasis. உ-ம்: "அடியேன் தங்கள் ஊழியனாக்கும்".

ஆக்குத்தாய் ākkuttāy, *adv.* [Cf. the next word] Unjustly; அநியாயமாய்.

ஆக்குத்து ākkuttu, *n.* [Port. *auto*, 'act'] Instrument of appointment to an office; உத்தியோகத்துக்குத் தந்திரவட் பத்திரம்.

ஆக்குபதம் ākkupatam, V. *ākkottu-mam*; =ஆக்கொத்துமம்.

ஆ-க்-குரோசம், °ஷம் ā-k-kurōcam, °ṣam, *n.* [S. *ā-krōś-as*, 'crying out', fr. *kruś*, Cf. T. *kuḻ-aṟu*] Great rage; கடுங் கோபம்.

ஆ-க்-குரோசனம் ā-k-kurōcaṉam, *n.* [id.] Malediction; சாபம்.

ஆ-க்-குவயம் ā-k-kuvayam, *n.* [S. *ā-hvay-as*, 'calling near', fr. *hvē*. Cf. T. *kū-vu*] Name; பெயர்.

ஆக்கெளுத்தி ākkeḷutti, *n.* 1. A brown estuary fish: Plotosus canins; கெளிற்று மீன் வகை. 2. A marine fish: Plotosus arab; கடற் கெளிற்று வகை.

ஆக்கேபம் ākkēpam, V. *ākṣēpam*; = ஆக்ஷேபம்.

ஆக்கை ākkai, *n.* [aph. of *yākk-ai*—யாக்கை] 1. Body; உடம்பு (சீவக. 1362). 2. Strips of fibre used in thatching; நார் (தேவா. 631, 3).

ஆக்கொத்துமம் ākkottumam, *n.* [Cf. S. *āragbadhus*] Indian laburnum; சரக்கொன்றை.

ஆக்ஞை ākñai, V. *āññai* =ஆஞ்ஞை.

ஆக்பாரி ākpāri, V. *āpkāri*;=ஆப்காரி.

ஆக்வானம் ākvāṉam, *n.* [V. *ākkuvayam*] Invocation, as to a deity; தேவதையின் அழைக்கை.

ஆக āka, *adv.* [fr. *āk-u*— <ஆகு-தல்] 1. On the whole; மொத்தமாய். உ-ம்: "ஆகத்தொகை". 2. Completely; முழுதும். உ-ம்: "ஆக மோசம்". 3. In that fashion; அவ்வாறு (கம்பரா. இராவணன்கு. 19). In place of, like; வேறொன்றன் றனிடத்தில், போல. உ-ம்: "மரமாக நின்றான்". By oneself; தானே. உ-ம்: "நீயாகச் செய்தாயா?". With; உடன். உ-ம்: "சந்தோஷமாக". 4. [*conj.*] Either.... or; விகற்பப் பொருள்தரும் இடைச்சொல். "தெய்வத்தானாக மக்களானாக" (குறள், 422, உரை). 5. [*part.*] For the sake of,

with 'கு' in the dative; நான்காம் வேற்றுமை உருபுடன் வரும் வினைச்சொல். உ-ம்: "அவனுக்காக". 6. Particle joined to finite verbs for indicating indirect speech; செய்தி குறிக்கும் இடைச்சொல். உ-ம்: "வந்தானாகச் சொன்னான்". 6. Particle giving participal force to a finite verb preceding it; முற்றோடு சேர்ந்து செயவெனெச்சப் பொருள் தரும் இடைச்சொல். உ-ம்: "காரெதிர் குன்றம் பாடினேமாக" (தொல். சொல். 282, உரை). 7. [*āku-ka*] Sign of the benedictive; வியங்கோள்குறிக்கும் விகுதி. உ-ம்: "வாழ்வேனாக". 8. An expletive; ஓர் அசைச்சொல். உ-ம்: "இப்போதாகவிடப்போமோ" (சீவ. 1,2,2). **ஆக-வ்-ஆக** āka-v-āka, An expression which either repudiates or doubts a statement; உடன்படாமை ஐயப்பாடுகளைக் குறிக்கும் அசைநிலை. **ஆக-க்-கூடி** °kūḍi, In the total; மொத்தமாய். **ஆகக்-கொள்ள** °koḷḷa, Since it is so, therefore; அப்படியிருக்கையில். **ஆகச்-செய்தே**, °சே, °ஆகவே °ceytē, °cē, °vē. Do; டை.

**ஆகட்டு, ஆகட்டும்** ākaḍḍu, °um, *defective v.* [*āka* + *oḍḍum* < *oṉṉ-u*] 1. So be it, yes; அதுசரி! ஆம். 2. [*adv.*] Whatever might be; எவ்விதமிருப்பினும். உ-ம்: "எந்தக் காற்றுகட்டும்". **ஆகட்டேன்**, May I be so; அப்படியிருப்பேனாக!

**ஆகசி** ākaci, *n.* Long pepper; திப்பலி.

**ஆகசு** ākacu, *n.* [S. *āgas*] 1. Fault; தவறு. 2. What is worst; அதமம். 3. Sin; பாவம்.

**ஆகடியம்** ākaḍiyam, *n.* [Cf. *u-kaḍiy-am*—அ-கடியம்] 1. Injustice, cruelty; அநியாயம், கொடுமை. 2. Mockery; பரிகாசம்.

Tel. *agaḍamu*; K. *agaḍa*.

**ஆ-கண்டலன்** ā-kaṇḍalaṉ, *n.* [S. *ā-khaṇḍ-al-as*, 'breaker', fr. *khaṇḍ*, T. *kāḍ-i*] Indra, the clipper of the wings of mountains; இந்திரன்.

**ஆகத்தினை** ākattiṉey, *n.* [for *ākkiṉai*—=ஆக்கினை] The middle of the eye-brow; புருவநடு.

**ஆ-கதம்¹** ā-katam, *n.* [S. *ā-hat-a*, 'beaten'] 1. Beating; அடிக்கை. 2. Rag; கந்தை. 3. (Mus.). Succession of staccato notes in ascent; கமகம் பத்தனுள் ஒன்று. 4. (Arith.) Product; பெருக்கி வந்த தொகை.

**ஆ-கதம்²** ā-katam, *n.* [S. *ā-gat-a*, 'come'] Coming; வருகை.

**ஆ-கதி** ā-kati, *n.* [id.] What should be obtained; அடையவேண்டியது.

**ஆ-கந்துகம்** ā-kantukam, [S. *ā-gant-uka*] What has come accidentally, uninvited; இடையில் வந்தேறியது. —CPDS **ஆகந்துக-சுரம்** °curam [+S. *jvar-as*, 'heat'. Cf. T. *cuḍ-u*] Fever due to other causes than irregularities in food; ஆகார நிமித்தமாயன்றி வேறுவிதமாய்வரும் காய்ச்சல்வகை. **ஆகந்துக-மலம்** °malam [+*mal-am*, 'dirt'] (Phil.) The two obstructive principles not natural to the soul: māyai and kaṉmam; இடையே தோன்றும் மாயா கன்ம மலங்கள் (சி. போ. பா, 4, 2).

**ஆகந்துகன்** ākantukaṉ [id.] New comer; புதிதாக வந்தவன்.

**ஆகதர்** ākatar, *n.* [<*ārhata*. V. *aru-kaṉ* — அருகன் பார்] Jains; சைனர் (தேவா. 858, 2).

**ஆகம்¹** ākam, *n.* [fr. *akam*¹—<அகம்¹] 1. Mind, heart; மனம், உள்ளம். 2. Breast; மார்பு (கலித். 2). 3. Body; உடல் (திவ். திருவாய். 9, 3, 7). 4. Calabash; சுரை.

**ஆ-கம்²** ā-kam, *n.* [S. *ā-khan-as*, 'digger', fr. *khan*, T. *kiṇḍ-u*] Spade; மண்வெட்டி.

**ஆ-கம்பிதம்** ā-kampitam, *n.* [S. *ā-kamp-ita*, 'trembling', fr. *kamp*, T. *kemp-u*] Shaking, trembling; அசைதல், நடுக்குதல். —CPDS **ஆகம்பித-சிரம்** °ciram [+*śir-as*, 'head'] (Nāṭya) Gesture of the head to express greeting; தலை அபிநயவகை (பரத. பாவ. 71). **ஆகம்பித-முகம்** °mukam (Nāṭya) Nod of appreciation or disapproval; சம்மதத்தை அல்லது மறுப்பைக் குறிக்கும் சமிக்கிஞை.

**ஆ-கமம்¹** ā-kamam, *n.* [S. *ā-gam-am*, 'what is handed down, what comes between', fr. *gam*. Cf. T. *akal*] 1. Scriptures; தேவோக்தமான சமய சாத்திரங்கள். 2. (Gram.) Letter or syllable inserted in the combination of two words or parts of a word; தோன்றல் விகாரத்தால் வரும் எழுத்து (வீரசோ. சந்தி. 13). 3. Learning; கல்வி. —CPDS **ஆகம-அளவை, ஆகமா'னுமானம்** °aḷavai, °aṉu-māṉam, Scriptures as one of the three sources of knowledge; சாஸ்திர வாக்கியங்களைப் பிரமாணமாய்க் கொள்ளல். **ஆகமா'ந்தம்** °antam, The Saiva Siddhānta philosophy as the ultimate teaching of the Agamas; சைவசித்தாந்தம். **ஆகமோ'க்தம்** °uktam [S. *uk-tam*, 'saying', T. *ōtt-u*] What is said in the Scriptures; ஆகமங்களிற் சொல்லப்பட்டது. **ஆகம-ப்-பிரமாணம்** °piramāṇam, Do; டை. **ஆகம-ப்-போலி** °pōli, False Scriptural evidence; உள்ளபடி சொல்லாத சாத்திரப் பிரமாணம். **ஆகம-பரோக்ஷ-ஞானம்** °parōkṣa-ñāṉam [+S. *paras*+*akṣa*, 'beyond the range of the eye'. See T *piṟ-a* and *akkam*³+S. *jñānam*, 'knowledge', fr. *jñā*. Cf. T. *niṉ-ai*] Knowledge of things, otherwise unknowable, through the Scriptures; காட்சிக்கெட்டாததை ஆகம வழியா யறிதல். **ஆகம-மலைவு** °malaivu [+*mal-ai-vu*, 'inconsistency'] Anything contrary to Scriptures; சாத்திரப் பிரமாணத்துக்கு மாறாக வருவது.

**ஆகமன்** ākamaṉ, *n.* [id.+ -*aṉ*³] Siva; சிவபிரான்.

**ஆ-கமனம்** ā-kamaṉam, *n.* [*ā-gam-anam*, 'approaching'] 1. Arrival, returning; வரல், திரும்பிவரல். 2. Passage of the sun from one sign to another; சூரியன் ஒரு இராசியினின்று மற்றொன்றுக்குச் செல்லுகை. —CPD **ஆகமன-காலம்** °kālam (Cath.) Season of Advent; கிறிஸ்து வருகையை எதிர்நோக்கும் காலம்.

**ஆ-கமம்²** ā-kamam, *n.* [for *a*-³+*gam-a*, 'going' Cf. S. *a-gas*—இயங்காதது] Tree in general; மரப் பொது.

**ஆகயர், ஆகர்** ākayar, ākar, *n.* [U. *ā-khir*] End; முடிவு.

**ஆ-கர்ஷகம்** ā-karṣakam, *n.* [*ā-karṣ-aka*, 'attracting', fr. *kriṣ*. Cf. T. *kaṭu-vu*] What is attractive; மனதைக் கவர்வது.

**ஆ-கர்ஷணம்** ā-karṣaṇam [id.] 1. Putting, drawing near; இழுக்கை. 2. Magical art of summoning an absent person into one's presence, one of the 64 kalai-k-kiyāṉam and aḍḍa-karumam; அட்ட கருமத்தொன்று.

**ஆ-கர்ஷிக்க** ā-karṣikka. *v.* [id.] 1. To attract, fascinate; இழுக்க, வசியம்பண்ண. To summon a spirit; தேவதையை வரவழைக்க.

**ஆ-கரணம்** ā-karaṇam, *n.* [S. *ā-har-aṇ-am*, 'bringing near', fr. *hri*. Cf. T. *poṟ-u*] 1. Fetching; கொணர்தல். 2. Exhorting; ஏவுதல். 3. Dowry given during marriage; விவாக சமயத்திற் கொடுக்கும் சீதனப் பொருள்.

**ஆ-கரிக்க** ā-karikka, *v.* [id.] 1. To send for, fetch; தருவிக்க (பெருக்-

உருளைச். 38,149). 2. To remove; அகற்ற.

ஆகரம்[1] ākaram, *n.* [S. *ā-kar-as*, 'mine', said to be fr. *ā-kṛī*, but cf. T. *akaḻ*] 1. Mine of precious stones; இரத்தினம் அகழ்ந்தெடுக்கும் இடம். 2. Source, seat; உறைவிடம். 3. Multitude; கூட்டம். 4. A mineral poison; சாலாங்க பாஷாணம்.—CPD ஆகர-சம் °cam, What is produced in a mine, precious stone etc.; சுரங்கத்திற் றோன்றும் இரத்தினங்கள்.

-ஆகரன்[1] -ākaraṉ, *n.* [id.] One who is full of or is the source of (in compounds); நிறைந்தவன், இருப்பிடமாயுள்ளவன். உ-ம். "குணாகரன்".

ஆகரம்[2] ākaram, *n.* [S. *ākhar-as*, prob. fr. T. *akaḻ*] Hole of animals; வளை. 2. Spade; மண்வெட்டுங் கருவி. ஆகரன்[2] ākaraṉ, One who digs; வெட்டுவோன்.

ஆகரி[1] ākari; *n.* [S. id.?] 1. Mineral; உலோகம். 2. Long pepper; திப்பலி.

ஆகரி[2] ākari, *n.* [S. *āhiri*] A special melody-type for midnight; ஓர் இராகம் (சிலப். 14,166, உரை).

ஆ-கருடணம் ā-karuḍaṇam, V. *ā-karṣaṇam*; =ஆ-கர்ஷணம்.

ஆ-கருடம் ā-karuḍam, *n.* [V. *ā-karṣakam* —ஆ-கர்ஷகம் பார்] 1. Pulling; இழுக்கை. 2. Training in archery; விற்பழக்கம். 3. Playing at dice; சூதாடுகை. 4. Board for the same; சூதாடுபலகை. 5. Dice; கவறு.

ஆ-கருணனம் ā-karuṇaṉam, *n.* [S. *ā-karṇ-anam*, 'hearing', fr. *karṇ-as*, 'ear', said to be fr. *kṛī*. Cf. T. *kiḷ-i*] Hearing; காதிலுற் கேட்டல்.

ஆ-கலனம் ā-kalaṉam, *n.* [S. *ā-kal-anam*, 'seizing, reckoning', fr. *kal*. Cf. T. *kal*[1]] 1. Binding; பிணித்தல். 2. Captivating; சிறை செய்தல். 3. Calculation; எண்ணிடல். (Arith.) Multiplication; பெருக்கல். 4. Enquiry; விசாரணை. 5. Desire; விருப்பு.

ஆகலாகல் ākalākal, V. *āka-v-āka*;= ஆகவா'க.

ஆ-கவம்[1] ā-kavam, *n.* [S. *ā-hvē*, 'to call near, challenge', fr. *hū (hvē)*. Cf. T. *kū-vu*] War; போர். —CPD ஆ-வகபூமி °pūmi, Battle field; போர்க்களம்.

ஆ-கவியன் ā-kaviyaṉ, *n.* [id.] Warrior; போர் வீரன்.

ஆ-கவம்[2], °கவனம் ā-kavam, °vaṉam, *n.* [S. *ā-hav-as*, °*anam*, fr. *hu*. Cf. T. *tū-vu*] Sacrificial offering; வேள்வி.

ஆ-கவனியம் ā-kavaṉīyam, *n.* [id.] One of the three sacrificial fires connected with Śrauta ritual; வேதாக்கினி வகை (திருமுரு. 181, உரை).

ஆகளமாய் ākaḷamāy, V. under *āku*; ஆகுதலின் கீழ்.

ஆகளரசம் ākaḷaracam, *n.* 1. Mercury; பாதரசம். 2. Opium; அபின் (தைலவ. தைல. 135).

ஆ-கற்பகம் ā-karpakam, *n.* [S. *ā-kalp-akas*] 1. Regret; பச்சாத்தாபம். 2. Darkness; இருள். 3. Loss of senses; அறிவு மயக்கம். 4. Tie; முடிச்சு. 5. Joy; மகிழ்ச்சி.

ஆ-கற்பம் ā-karpam, *n.* [id.] 1. Increasing; அதிகப்படல். 2. Beauty, ornament; அழகு, ஆபரணம். 3. Disease; நோய். 4. Till the end of a karpam; கற்பகாலம்வரையும்.

ஆகன்மாறு ākaṉmāṟu, *adv.* [*āk-al*, fr. *āku* + *māṟ-u*] Since, considering that; ஆகையால் (பதிற்றுப். 38, 16).

ஆ-கன்னம் ā-kaṉṉam, *adv.* [*ā*-[10] + *kaṇṇ-am*] As far as the ear; காது வரையும் (பாரத. அருச்ச. தீர்த். 49).

ஆகனாமி ākaṉāmi, *n.* Field bean; அவரை.

ஆ-கனிகம் ā-kaṉikam, *n.* [S. *ā-khan-ikas*, 'digger', fr. *khon*. Cf. T. *kiṇḍ-u*] 1. Pig, rat, mouse, bandicoot; பன்றி, எலி, சுண்டெலி, பெருச்சாளி. 2. Hoe; மண்ணகழ் கருவி.

ஆ-கனிகன் ā-kaṉikaṉ, *n.* [id.] 1. Miner; நிலம் அகழ்வோன். 2. Thief; கள்வன்.

ஆகஸ்தியம் ākastiyam, *n.* [fr. *Agastya*, who is said to have received Tamil from Siva] The Tamil language; தமிழ்மொழி.

ஆ-கஸ்மிகம் ā-kasmikam, *n.* [S. fr. *a*-[3] + *kasmāt*, 'without a why'] What is accidental, unexpected; எதிர்பாராதது.

ஆகா ākā, *int.* An exclamation expressive of wonder or assent; வியப்பு சம்மதக்குறிப்பு.

ஆகாக்களங்கு ākākkaḷaṅku, *n.* [perh. *ākā*, 'not suitable' + *kalaṅku*, 'mixture'] One of the 32 kinds of arsenic; மிருதாரசிங்கி.

ஆ-காங்கிசை, °கிஷை, °ங்க்ஷை ā-kāṅkicai, °kiṣai, °ṅkṣai, *n.* [S. *ā-kāṅṣ-ā* desire, akin to T. *kāṅk-ai*] 1. Violent desire; மிகுமான ஆசை. 2. (Gram.) Need of one word for another for completing the sense; அவாய்நிலை.

ஆ-காசம் ā-kācam, *n.* [S. *ā-kāś-as*, *-am*, 'the shining, visible thing: sky', fr. *kāś*. Cf. T. *kēḻ*] 1. Sky; வானம். 2. Ether pervading all space; ஐம்பூதத்தொன்று. 3. Air, atmosphere; வாயுமண்டலம். 4. Open space; வெளி. 5. One of the eight kaṇam q. v.; எண்கணங்களுள் ஒன்று. 5. (Poet.) A measure of three acai, two dissyllabic and one monosyllabic; கருவிளங்காய் என வரும் தொடை. —CPDS [See also *ākāyam* — ஆகாயம் பார்] ஆகாச-வ்-உருவி °uruvi, Mistletoe thorn; புல்லுருவி. ஆகாசேசன் °icaṉ [+S. *iś-as*, 'master'] Indra; இந்திரன். One who is helpless; ஆதரவற்றவன். ஆகாச-க்-கத்தரி °kattari, Okra; வெண்டை. ஆகாச-க்-கப்பல் °kappal, Baloon, airship; வானத்திற் செல்லும் விமானம் (Modern). ஆகாசக்-கச்சை °kaccai [+*kacc-ai*, 'what encircles'] Horizon; அடிவானம். ஆகாச-க்-கருடன் °karuḍaṉ, A creeper: Bryonia epigeia; கொல்லங்கோவை. Devil fig; பேயத்தி. Gulancha; சீந்தில். ஆகாச-க்-கருட-கிரிக்கொடி °°kīrik-koḍi, Indian ipecacuanha; பேய்ப்பாலை. ஆகாச-க்-கருடாசலம் °karuḍācalam, Umbrella-thorn babul; உடைவேல். ஆகாச-க்-கருடாதி °karuḍāti, Devil fig; பேயத்தி. ஆகாச-க்-கரை °karai, Phantasy; மனோராச்சியம். ஆகாச-க்-கரைக்கட்டு °karaikkaḍḍu, Do; டை. ஆகாச-க்-கல் °kal, Aerolite; சாத்திற் பறக்கும் அணு. ஆகாச-க்-கோட்டை °kōḍḍai, Castle in the air; வீண் மனோராச்சியம். ஆகாச-கங்கை °kaṅkai, The celestial Ganges; மந்தாகினி. Milky way; பால்வீதி மண்டலம். Dew; பனி. Urine; சிறுநீர். ஆகாச-கபாலம், °கபாலி °kapālam, °li Trickster; புளிக்காரன். Skilful person; வல்லவன். ஆகாச-கம் °kam [S. *-ga*, 'going'] Bird; பறவை. ஆகாச-கமனம் °kamaṉam [+S. id.] Flying through the air; 64 கலைகளுள் ஒன்று. ஆகாச-காமி °kāmi [id. S. *gām-in*] One who is able to fly through the air, an angel; பறந்துசெல்லும் ஆற்றலுடையோன், வானவன். Fabled horse flying through the air; பறக்குங் குதிரை. ஆகாச-காமினி °kāmiṉi [id.] Incantation that gives the above power; வே

வன்மையைத் தரும் மந்திரம். ஆகாச-கர்ப்பம் °karppam [S. *garbh-as*, 'womb, middle'. Cf. T. *kar-u*] The centre of the heavens; வான நடு. ஆகாச-கரடம் °karaḍam [S. *karaṭ-as*, 'black colour'?, T. *kar-al*] Soot; புகைப்படை. ஆகாச-கருடன் °karuḍaṉ [+S. *garuḍ-as*, a mythical bird. Cf. T. *kaluḷ-aṉ*] A climbing shrub: Garuda Bryonia epigeia, from its roots resembling the head of a karuḍaṉ; கொல்லங்கோவை. ஆகாச-கருடாதி °karuḍāti [Cf. *ākāca-karuḍaṉ*] Devil fig; பேயத்தி. ஆகாச-சபை °capai, Dancing hall of Naṭarāja at Kāñcīpuram; காஞ்சிபுரத்து நடராச மன்றம். ஆகாசத்-தாமரை °tāmarai, A weed, Pistia stratiotes; வேர் தண்ணீரில் மிதக்கும் பூடு வகை. Seedless nelumbo; குளிர் தாமரை. Seed moss; கொட்டைப்பாசி. What is absolutely non-existent, as an aerial lotus; இல்பொருள். ஆகாசத்-திரவியம் °tiraviyam, One of the caḍ-tiraviyam or categories of the Jains; சமண மதத்து ஆறு பதார்த்தங்களுள் ஒன்று (மேருமந். 93 உரை). ஆகாசத்-துவனி, °தொனி °tuvaṉi, °toṉi [S. *dhvan-is*, 'sound'. Cf. T. *tuṉ-ṉku*] Voice from heaven; அசரீரி. ஆகாச-தங்குசம் °taṅkucam, Prickly carolaho; பேய்ப்பாகல். ஆகாச-தானம் °tāṉam, =ākācat-tāmarai; =ஆகாசத்-தாமரை. ஆகாச-தீபம் °tīpam [+S. *dīp-as*, 'light'. Cf. T. *tī*] Lantern on a pole, light house; உயர்ந்த கம்ப விளக்கு, கலங்கரை விளக்கம். ஆகாச-துந்துமி °tuntumi [+S. *dundubh-is*, onomat.] Celestial drum; தேவமேளம். ஆகாசப்-பட்சி °paḍci [+S. *pakṣ-in*, 'winged creature', fr. *pakṣ-as*, 'side', prob. T. *pakk-am*] Skylark; வானம்பாடி. ஆகாசப்-பந்தல் °pantal [+ *pant-al*, 'shed'] Castle in the air =ஆகாசக்கோட்டை. ஆகாசப்-பாலம் °pālam [U. *pāla*, 'bridge'] Do; டை. ஆகாசப்-பிரவேசம் °piravēcam [+S. *pra-vēś-as*, 'entering'. Cf. T. *uḷ-u*] The power of self-concealment in the ether of the atmosphere: One of the 64 kalai; பரத்துள் மறைந்துவிடும் வன்மை. ஆகாசப்-புரட்டன் °puraḍḍaṉ, Consummate cheat; பெரும் மோசக்காரன். ஆகாச-பஞ்சாங்கம் °pañcāṅkam [+S. *pañca-aṅkam*, 'aggregate of five parts', almanac] Stupendous lie (as an almanac written in the air); பெரும் பொய். ஆகாச-பட்சி °paḍci [V. *ākāca-p-paḍci*] The shepherd koel; சாதகப்புள். ஆகாச-பலம் °palam [+ S. *phal-am* <T *pal-am*, 'fruit'] Meteor; விண்வீழ் கொள்ளி. ஆகாச-புஷ்பம் °puṣpam [+S. *puṣp-am* <T. *pūpp-u*, <*pū*, 'flower'] ākāca-t-tāmarai; =ஆகாசத்-தாமரை. ஆகாச-மண்டலம் °maṇḍalam [+S. *maṇḍ-alam*, 'anything round', fr. T. *maḍ-u*] The aerial regions; வானவட்டம், ககோளம். A mode of dancing; கூட்டியவகைகளுள் ஒன்று (திருவிளை. கான்மாறி. 9). ஆகாச-மயம் °mayam [+*may-am*, 'fulness'] Emptiness; ஒன்றுமின்மை. ஆகாச-மாஞ்சி °māñci [S. *ākāśa-mansi*] The plant Nardostachis Jaṭā-māṅsī; சிறு சடாமாஞ்சிப் பூண்டு. ஆகாச-மார்க்கம் °mārkkam [+S. *mārg-as*, 'way', prob. fr. T. *maruk-u*] Aerial path; வானவழி. ஆகாச-யானம் °yāṉam [+S. *yā-nam*, 'going', 'vehicle', fr. *yā*. Cf. T. *iy-aṅku*] Travelling in the air; அந்தரத்தில் சஞ்சரித்தல். Aerial vehicle; வானவூர்தி. ஆகாச-ராமன் °rāmaṉ [+ *Rāmaṉ*, a personal name] A no-body; அநாமதேயன். ஆகாச-லிங்கம் °liṅkam [+S. *liṅg-am*, 'sign', prob. fr. T. *ilakk-u*] The Lingam at Chidambaram which is considered to be formless; பஞ்சலிங்கத்துள் சிதம்பரத்திலுள்ள அரு. ஆகாச-வல்லி °valli [+S. *vall-ī*, 'creeper', fr. T. *val-ai*] A Creeper: Menathes crestata; கொடிவகை. Gulancha; சீந்தில். ஆகாச-வாசர், °வாசியர் °vācar, °vāciyar, A class of demi-gods; பதினெண் கணங்களுள் ஒரு சாரார். ஆகாச-வாணம் °vāṇam [+ S. *bāṇ-as*, 'reed, arrow', prob. fr. T. *paṉ-ai*, 'bamboo'] Sky-rocket; அந்தரத்திற் செல்லும் வாணவகை. ஆகாச-வாணி °vāṇi [+ S. *vāṇ-ī* 'sound', perh. =*dhvan-i*] =ākāca-t-toṉi; =ஆகாசத்-தொனி. ஆகாச-வேணி °vēṇi, Bitter luffa; பேய்ப்பீர்க்கு.

ஆகாசி ākāci, *n.* Gulancha; சீந்தில்.

ஆ-காடம் ā-kāḍam, *n.* [S. *ā-ghāṭ-as*, perh. fr. *ghaṭ*. T. *kaḍḍ-u*] 1. Limit; எல்லை. 2. Species of Achyranthes; நாயுருவி.

ஆகாத ākāta, *adj.* [fr. *ākātu*: *āk-u*+-*a*-[2] +(*a*)*tu*[1]] 1. Not come into being; நிகழாத. 2. Not desirable, bad; கெட்ட. ஆகாத-வன் ākā-tavaṉ, Useless, wicked man; தீயவன். Enemy; பகைவன்.

ஆகாத்தியம் ākāttiyam, *n.* [fr. above, formed according to S. analogy.] 1. Threatening behaviour; பொல்லாங்கு. 2. Pretence; பாசாங்கு.

K. *agatya*: Tel. *agatyamu*.

ஆ-காதம், °தனம் ā-kātam, °aṉam, *n.* [S. *ā-ghāt-as*, 'striking, killing', fr. *han*. Cf. T. *kol*] 1. Striking, killing; அடித்தல், கொல்லுதல். 2. Slaughter-house; மிருகக்கொலைக் கொல்லுமிடம்.

ஆகாதிலை ākātilai, *n.* Pea-fruited dodder; கொடியாள் கூந்தல்.

ஆகாமி ākāmi, *n.* [S. *ā-gām-in*, 'coming', fr. *gam*. Cf. T. *akal*] 1. Prospective right and privilege which possession of an estate may bring; பிற்காலத்துக்கு அநுபவிக்கக்கூடிய சுதந்திரம். 2. A tax paid in cash; காசாயம். (S. I. I. viii, 151).

ஆ-காமியம் ā-kāmiyam, *n* [id.] 1. What is to come; வருங்காலத்திற்குரியது. 2. Karma which is expected to bring its rewards in future births; இப்பிறப்பிற் செய்த புண்ணிய பாவங்கள். 3. Impiety, wickedness; தீயசெயல்.

ஆ-காயம் ā-kāyam, *n.* [See *ā-kācam*; =ஆ-காசம்] For compounds not found here see *ā-kācam*; வேறுதொடர் சொற்களை ஆ-காசத்தின் கீழ்க் காண்க. ஆகாயக்-கக்கரி °kakkari, variety of kakri-melon; கக்கரிவகை. ஆகாய-கணம் °kaṇam [*kaṇ-am, 'group'] (Poet.) Metrical foot of two nirai and one nēr, as கருவிளங்காய், considered inauspicious at the beginning of a poem; நிரை நிரை நேர் என்னும் அமங்கலமான கணம் (இலக். வி. 800, உரை). ஆகாயச்-சக்கரம் °cakkaram [+S. *cakr-am*, 'wheel', T. *kul-avu*] (Pros.) A kind of verse; சித்திரக் கவிவகை (யாப். வி. 497). ஆகாயச்-சொல் °col, Imaginary speech to which a character in the stage pretends to listen in reply to his questioning; நாடகத்தில் இல்லாதவொருவனை முன்னிலைப்படுத்தித் தானே கூறும் பேச்சு (சிலப். 3, 13, உரை). ஆகாய-சூலை °cūlai [+S. *śūl-as*, 'piercing (pain)'. Cf. T. *kūr*] A disease of horses; குதிரைநோய் வகை. ஆகாய-தந்தம் °tantam [+S. *dant-as*, 'tooth', fr. *dat*, said to be <*ad*, 'to eat'. V. *aṉṉam*[1]. But Cf. T. *taḍ-i*] Nail; நகம். ஆகாயப்-பாசி °pāci, A kind of moss; பாசிவகை. ஆகாயப்-பூ °pū, =ākāca-t-tāmarai; =ஆகாசத்-தாமரை. ஆகாயப்-பூரிதம் °pūritam Elephant creeper; பெய்யுசுட்டை. ஆகாய-மூலி °mūli, Seed moss; கொட்டைப்பாசி. ஆகாய-மௌனி °mauṉi, White species of Indian bur; வெள்ளைநாயுருவி. ஆகாய-மௌனிகம் °mauṉikam, Wild tobacco; பன்றிப்

புகையில். ஆகாய-வெளி °veḷi, Brain; மூளை.

ஆ-காரணம் ā-kāraṇam, *n.* [S. *ā-karaṇam*, 'bringing near'] Calling; அழைத்தல்.

ஆகாரம்¹ ākāram, *n.* [S. *āgāram*, also *agāras*, perh. fr. T. *akam*¹] House; வீடு. ஆகார-தாகி °tāki. [+S. *dāhin*, 'burning', fr. *dah*. Cf. T. *tī*] House-burner; வீடு சுடுவோன்.

ஆ-காரம்² ākāram, *n.* [S. *ā-kār-as*, 'form' fr. *ā-kri*] 1. Shape, structure; உருவம் (பாரத. வசந்த. 19). 2. Body; உடம்பு (திவ். பெரியதி. 4, 4, 8). 3. Hint, suggestion; குறிப்பு. ஆகார-க்-குத்தி °kutti [+S. *gup-tis*, 'concealment' fr. *gup*. Cf. T. *kuv-i*] Dissimulation; மாய்மாலம்.

ஆ-காரி¹ ā-kāri, *n.* [id.+ -*i*⁴] Soul; உயிர்.

ஆ-காரம்³ ā-kāram, *n.* [S. *ā-ghār-as*, 'sprinkling', perh. fr. *ghrit-am*, 'clarified butter'. (V. Walde—P. I. p. 607). Cf. T. *kāḍ-i*] 1. Clarified butter; நெய். 2. Sprinkling; புரோட்சித்தல். —CPD ஆகார-சமிதை °camitai [+S. *sam-idh*, 'firewood' fr. *indh*, 'to burn'] Two pipal twigs dipped in ghee and placed one at the N. E. and the other at the S. E. corner of the grihya sacred fire; ஓமதண்டிலத்தின் தென்கிழக்கிலும் வடகிழக்கிலும் வைக்கப்படும் சமித்துகள்.

ஆ-காரம்⁴ ā-kāram, *n.* [S. *ā-hār-as*, 'food' fr. *hri*, perh. T. *eḍ-u*] Food; உணவு. ஆகார-சம்பவம் °campavam [+S. *sam-bhav-a*, 'born'] Grease; உடம்பின் நிணநீர்.

ஆ-காரம்⁵ ā-kāram, *n.* Name for the letter *ā*; ஆ எனும் எழுத்து.

ஆகா'ரி² ākā'ri, *n.* [V. *āku*² below+*ari*⁴, 'enemy'—எலிக்குச் சத்துரு] Cat; பூனை.

ஆ-காலம் ā-kālam, *n.* [prob. T. *ā(kum) kālam*—ஆ(கும்)காலம்] The right time; தக்க காலம்.

S. *a-kalas*.

ஆ-காவம் ā-kāvam, *n.* [V. *ā-kavam*—ஆ-கவம்] 1. Invitation; அழைப்பு. 2. Battle; போர். 3. Fire; நெருப்பு. 4. Basin; நீர்த்தொட்டி.

ஆ-கிஞ்சனம் ā.kiñcanam, *n.* [S. fr. *a*-³ + *kim-cana*, 'little'; 'possessing not even a little'] Poverty; தரித்திரம்.

ஆ-கிடந்து ā-kiḍantu, *part.* [*ā-ka*+*kiḍ-antu*?] (Gram.) A sign of the present tense; நிகழ்கால இடைநிலைகளுள் ஒன்று (நன். 145, இராமா.).

ஆகிரதம் ākiratam, *n.* [?] Veneration; வணக்கம்.

ஆகிரந்தம்' ākirantam, *n.* [Cf. *ākirunantaṇam*] Indian beech; புன்கமரம்.

ஆகிரம் ākiram, *n.* [?] Extension; விரிவு.

ஆகிரி ākiri, V. *ākari*; =ஆகரி. ஆகிரி-நாட்டை °nāḍḍai, A melody type; இராக வகை (பரத. ராக. 102).

ஆ-கிருதி ā-kiruti, *n.* [See *ā-kāram*²—ஆ-காரம்²] 1. Form, shape; வடிவு. 2. Body; உடல். 3. Family, caste; குலம், சாதி. 4. Beauty; அழகு. உ-ம்: "ஆகிருதியுள்ளவன்". 5. Pre-occupation, prejudice; மனப்பதிவு, முற்கோடல். (Pros.) Metre of four lines with 22 vowel sounds in each; அடிதோறும் ஒற்றுநீக்கிய 22 உயிரெழுத்துக்கொண்ட நான்கடியுடையதாய் வரும் சந்தம் (வீரசோ. யாப். 33, உரை).

ஆகிருநந்தனம், °நனந்தம் ākirunantanam °nanantam, V. *ākirantam*;= ஆகிரந்தம்.

ஆகு¹-தல் āku, 5 *v intr.* [rt. *akk*, 'to contract, diminish', fr. which this emphasized form has the sense of 'shaping itself, being formed' &c.—√அக்கு, 'சுருக்குதல்'] 1. To change form, become; உருமாறி வரல். 2. To be fit, profitable, cooked &c; தகுதியுறல், சமைபடல். 3. To be completed; நிறைவுறுதல்.

M. *akuka*; K. *agu*; Tu. *apini*, 'to become, to happen;' Tel. *agu*, *avu*.

ஆகளமாய், ஆகளவாய் ākaḷamāy, °aḷavāy, *adv.* [*āku(m)*+*aḷavu*+*āy*, fr. *āk-a*] 1. As much as; இருக்கும் அளவுக்கு. 2. Without interruption; இடைவிடாது.

ஆகில், ஆகின் ākil, ākin, *conj.* [id.] If it is, if so; அவ்வாறிருப்பின், எனின்.

ஆகிலும், ஆகினும் ākilum, ākinum, *conj.* [*ākil*+*um*] Although; அப்படியிருந்தும். Even so; எனினும்.

ஆகு-பெயர் āku-peyar, *n.* [*āku(m)*+*peyar*] Name used metaphorically; ஒரு பொருளோடு சம்பந்தமுடைய மற்றொன்றுக்குத் தொன்றுதொட்டு ஆகிவரும் பெயர் (இலக். வி. 192).

ஆகைச்-சுட்டி ākaic-cuḍḍi, *conj.* [*āk(u) kai* +*cuḍḍ-i*, 'pointing to'] Therefrom; அப்படியிருக்கின்றமையால்.

ஆகையால் ākaiyāl, *conj.* [*ā(ku) kai*+ -*āl*¹¹] Do; டை.

ஆகு² āku, *n.* [S. *ākh-us*, said to be fr. *khan*, 'to dig', T. *kiṇḍ-u*; prob. akin to *akaḷ*, 'to dig'. Cf. *akaḷ-ān*] 1. Rat; எலி. 2. Bandicoot; பெருச்சாளி. 3. Hog; பன்றி. 4. Navel; கொப்பூழ். —CPDS ஆகு'யர்த்தோன் °uyarttōn [+*uyar-ttu*, 'to raise, as a standard' + -*ōn*] Gaṇēśa, as having the figure of a bandicoot on his banner; கணபதி. ஆகு-கன் °kan [+S. -*ga*, 'going' + -*an*⁵] He who rides a bandicoot, Gaṇēśa; கணபதி. ஆகு-பாஷாணம் °pāṣāṇam [+S. *pāṣāṇ-as*, 'stone'. Cf. T. *pār-ai*] Rat poison; எலிப் பாஷாணம். A Mineral poison; வெள்ளைப் பாஷாணம். Loadstone; காந்தக்கல். ஆகு-புக்கு, °புகு °pukku, °puku [+S. -*bhuk*, 'eater', fr. *bhuj*. Cf. T. *puk-uttu*] Cat; பூனை. ஆகு-ரதன் °ratan [+S. *rath-as*, 'vehicle', fr. *rath*, T. *uruḍḍ-u* + -*an*⁵] Gaṇēśa, as riding a bandicoot; கணேசன். ஆகு-வாகனன் °vākanan [+ S. *vāh-anam*, 'vehicle', fr. *vāh*, T. *ūkk-u* + -*an*⁵] Do; டை.

ஆகு³ āku, *n.* [Tib. *gyāk*] The tail of the yak used as fan for idols; கவரி.

ஆ-குஞ்சனம் a-kuñcanam, *n.* [S. *ā-kuñc-anam*, 'contracting', fr. *kuñc*, T. *kuv-i*] 1. Heaping together; குவித்தல். 2. Contraction; சுருக்குகை (பிரபோத. 44, 23). 3. Bending; வளைத்தல்.

ஆ-குண்டிதம் ā-kuṇḍitam, *n.* [S. *ā-kuṇṭh-ita*, 'dulled', fr. *kuṇṭh*, T. *kuḍ-ḍai*] 1. Confusion; மயக்கம். 2. Cowardice; கோழைத்தனம்.

ஆ-குதி¹ ā-kuti. *n.* [S. *ā-hut-is*, 'oblation'. V. *ākavam*² — ஆகவம்²] 1. Oblation in the consecrated fire; அக்கினியில் மந்திர பூர்வமாகச் செய்யும் ஓமம். 2. Sacrifice; பலி (சேதுபு. இராமதீ. 239).

ஆ-குதி² ā-kuti, *n.* [for *ākuḷi*?] A kind of drum; ஒருவகைப் பறை.

ஆ-குலம் ā-kulam, *n.* [S. *ā-kul-a*, 'confused', said to be fr. *kul*, prob. T. *kuḷ-ai*] 1. Agitation; மனக் கலக்கம் (திருக்கோ. 12). 2. Idle sound, pomp; (குறள், 34). 3. Grief; மனத்துன்பம் (கந்தபு. குமாரபுரி. 48). 4. Contradiction; மாறுபாடு.

ஆ-குலி[1] ā-kuli, *n.* [id.] Confusion of mind; கலக்கம்.

ஆ-குலிக்க ā-kulikka, *v.* [id.] To be distressed; துன்புற

ஆகுலி[2] ākuli, *n.* [Cf. S. *nākulī*, 'the mungoose plant'] 1. Lesser galangal; சிற்றரத்தை (மூதலை. தைல. 119). 2. A kind of tanner's senna; ஆவிரைவகை.

ஆகுவான-ஹஸ்தம், ākuvāṉa-hastam, *n.* [S. *āhvānam*, 'calling', V. *ā-kavam*[1] + *hast-as*, 'hand', V. *attam*[1]] Hand of an idol uplifted and slightly bent as beckoning worshippers; அழைத்தல் குறிக்கும் கை.

ஆகுளி ākuḷi, *n.* [Cf. *ā-kulam*(2)—ஆகுலம்] Kind of small drum; ஒருவகைச் சிறுபறை (மதுரைக். 606).

ஆகுனி, ஆகுனி-வாதம் ākuṉi, ākuṉi-vātam, *n.* One of the 80 kinds of vātam or humour; வாதரோகம் எண்பதிலொன்று.

ஆ-கூதம் ā-kūtam, *n.* [S. *ā-hū-ta*, 'called near', V. *ākavam*[1]] 1. Calling, அழைக்க. 2. [S. *ā-kū-tam* fr. *kū*, T. *kū-vu*] Intention, desire; விருப்பம்.

ஆ-கூதி ā-kūti, *n.* [id.] Invitation; அழைப்பு.

ஆ-கூழ் ā-kūḻ, *n.* [*āk-um* + *ūḻ*—ஆகும்-ஊழ்] Destiny that causes prosperity; ஆக்கத்திற்குக் காரணமான விதி (குறள், 371).

ஆகே ākē, *adv.* [U. *ākai*] Before, in front; முன்னே, எதிரில்.

ஆ-கேடகம், °டம் ā-kēḍakam, °kēḍam, *n.* [*ā-khēṭ-akam*, perh. fr. T. *keḍ-u*, 'to destroy'] Hunting; வேட்டை.

ஆகேருகம் ākērukam, *n.* Climbing asparagus; தண்ணீர் விட்டான்.

ஆகேவகமுள்ளி ākēvakamuḷḷi, *n.* A kind of nightshade; காட்டுமுள்ளி.

ஆகேறு ākēṟu, *n.* Indian labarnum; சரக்கொன்றை.

ஆகையர் ākaiyar, *n.* [U. *ākhir*] 1. End; முடிவு. 2. (Arith.) Total; கூட்டிவந்த தொகை.

ஆ-கோசனம் ā-kōcaṉam, *n.* [perh. *ā*, 'cow' + *rōcaṉam*, as in *kō-rōcaṉam*] Bezoar; கோரோசனம்.

ஆகோடிபம், °யம் ākōḍipam, °yam, *n.* [perh. for S. *ā-kṣēpas*, V. *āḍcēpam*] Obstacle, opposition; தடை, எதிரிடை.

ஆங்க āṅka, *adv.* [for *aṅṅaṉ* (2)—அங்ஙன்] 1. In that way (in poetry); ஒரு உரையசை, உ-ம்: "ஆங்கக் குயிலு மயிலுங் காட்டி" (தொல். சொல். 279 உரை). 2. A word of comparison used with verbs; வினையுவம வாய்பாடுகளுள் ஒன்று (தொல். பொரு. 287). 3. There; அங்கே.

ஆங்கண் āṅkaṇ, *adv.* [id.] In that place; அவ்விடத்து.

ஆங்கனம் āṅkaṉam, *adv.* [id.] Thus, so; அவ்விதம் (மணி. 16, 128).

ஆங்காரம்[1] āṅkāram, *n.* [sync. of *akaṅ-kāram*] 1. Conception of individuality; தான் எனும் உணர்வு. 2. Arrogance; செருக்கு. 3. Kindness, affection; தயவு, அன்பு (திவ். திருவாய். 10, 7, 11). —CPD ஆங்கார-விஷயகத்-தவம் °viṣayaka-t-tavam [S. *-viṣayaka*, 'having reference to' + *tavam*, 'repentance'] Insincere repentance; போலி மனவருத்தங் காட்டல்.

ஆங்காரன், ஆங்காரி āṅkāraṉ, °ri, *n.* [id.] 1. Proud, haughty person; செருக்குள்ளவன். 2. The principle of akaṅkāram conceived as the mother of the five senses; அகங்காரதத்துவமாகிய பெண் (திருமந். 1073).

ஆங்காரிக்க āṅkārikka, *v.* [id.] To be insolent; செருக்கிருக்க.

ஆங்காரம்[2] *n.* [fr. *aṅkāram*(4) — <அங்காரம், 'கரி'] Heap of charcoal; கரித்திரள்.

ஆங்கிரசன், ஆங்கிரன் āṅkiracaṉ, °kiraṉ, *n.* [= *aṅkiracu*— = அங்கிரசு] 1. Angiras, a Vedic sage; ஒரு இருஷி. 2. Jupiter; வியாழன். ஆங்கிரசம் Āṅkiracam, Text book of Hindu law, ascribed to Aṅgiras; தருமநூல் பதினெட்டில் ஒன்று.

ஆங்கிரம் Āṅkiram, A secondary Purāṇa; 18 உப புராணங்களுள் ஒன்று.

ஆங்கிலம் āṅkilam, English; இங்கிலீஷ் பாஷை.

ஆங்கிஷம் āṅkiṣam, V. *aṅkicam*; = அங்கிசம்.

ஆங்கீரச āṅkīraca, *n.* Name of the sixth year of the Jupiter cycle; ஒரு வருஷத்தின் பெயர்.

ஆங்கு āṅku, *adv.* [for *aṅku*—அங்கு] 1. There; அவ்விடம். 2. Then; அக்காலம் (சிறுபாண். 111). 3. So, thus; அப்படி (புறம், 24). 4. *part.*] A word of comparison; ஒரு உவம உருபு. உ-ம்: "கொன்மூ மாக விசும்பினோடு நின்றாங்கு", (புறம், 35). 5. A *loc.* ending; ஏழனுருபு. உ-ம்: "நின்றாங்கு வருவது போலும்" (மணி. 11,47) 6. A poetical expletive; ஓர் அசைநிலை (குறள், 1307, உரை). ஆங்காங்கு āṅkāṅku, There and there severally; அங்கங்கு.

-ஆங்கு, -அங்கு -āṅku, -aṅku *suff.* [id.] A stem-suffix; ஒரு சாரியை, உ-ம்: பட்டாங்கு, கிடங்கு.

ஆங்கு-தல் āṅku, 5 *v. intr.* [*āk-u*[1]— = ஆகு[1]] To be sufficient; போதியதாதல்.

ஆங்ஙனம் āṅṅaṉam, V. *aṅṅaṉam*; அங்ஙனம்.

ஆ-ச்-சந்திர-காலம் ā-c-cantira-kālam, *n.* [*ā-*[10] + S. *cand-ras*, 'moon', akin to T. *kānt-i* + *kāl-am*, 'time'] As long as the moon exists; சந்திரனுள்ளளவும். —CPD ஆ-ச்-சந்திரார்க்கம் °arkkam [+*arukkaṉ*, 'sun'] As long as the moon and sun endure; சந்திர சூரியர்கள் உள்ளளவும்.

ஆச்ச-மரம் ācca-maram, *n.* Mistletoe-berry thorn; சங்கஞ்செடி, முள்ளைப்புல்.

ஆச்சமாதிகம் āccamātikam, *n.* Box-leaved ivory wood; மஞ்சி வெற்றிலை.

ஆச்சரியம் āccariyam, *n.* [S. *ā-ś-cary-as*, said to be fr. *car*, 'to go', T. *cel*; fr. **quer*, according to Walde—P.] Surprise, wonder; வியப்பு, அதிசயம்.

ஆச்சல் āccal, *n.* [for *āy-c-cal*— = ஆய்-ச்சல்] 1. Moving; அசைத்தல். 2. Sudden rush, impulse; பாய்ச்சல். 3. Turn, instalment; தடவை, தவணை (Coll.). 4. Rut; வண்டிப் பாதையிற் பள்ளம்.

ஆச்சன் āccaṉ, *n.* [for *acc-aṉ*— = அச்சன்] Father; தகப்பன் (S. I. I. iii, 477).

ஆச்சனை āccaṉai, *n.* [for *āccu-eṉal*, 'saying it is finished'—ஆச்சு-எனல்] Spending the whole amount; முழுதும் செலவழிக்கை.

ஆச்சா āccā, *n.* 1. Sāl tree: Shorea rubusta; சாலமரம். 2. Spurge; கள்ளி. —CPDS ஆச்சா'சினி °ācini, Āccā; ஆச்சாமரம். ஆச்சா-சோபிகம் °cōpikam, A kind of rattlewort; பெருங்கிலுகிலுப்பை.

ஆச்சாட்டு āccāḍḍu, *n.* [prob. fr. *ācāḍ-ḍam*, 'indistinct appearance' — ஆசாட்டம்?] Little moistness; ஈரத்தீரம். —CPDS ஆச்சாட்டு-ப்-பயிர் °pa-yir, Crop grown on slightly humid land; ஈரத்தீரமுள்ள நிலத்துப் பயிர். ஆச்சாட்டு-விதைப்பு °vitaippu, Sowing in such land: அவ்வித நிலத்தில் விதைத்தல்.

ஆ-ச்-சாதம், °தனம் ā-c-cātam, °aṉam, *n.* [S. *ā-chād-as*, *-anam*, 'covering', fr. *chad*. Cf. T. *kavi*] 1. Cloak; மேலங்கி. 2. Cloth; சீலை. 3. Concealing; மறைப்பு (கி. கி. 2, 86, வொக்.). 4. Roof; கூரை. —CPD ஆச்சாதன-பலம், °பலை °palam, °palai [id. + S. *phal-am* < T. *paḻ-am*, 'fruit'] Cotton plant, seed; பருத்தி, பருத்திக் கொட்டை (தைலவ. தைல. 33).

ஆச்சாள் āccāḷ, for *āttāḷ*; = ஆத்தாள்.

ஆச்சான் āccāṉ, *n.* [S. *ā-cārya*. Cf. T. *āttāṉ*] Spiritual preceptor; சமய குரு.

ஆச்சி āćci, *n.* [for *āycci*— = ஆய்ச்சி] 1. Mother; தாய். 2. Grandmother; பாட்டி. 3. Eldest sister; மூத்த தமக்கை. 4. Woman of the Iḍaiyar caste; இடையர்ப்பெண். 5. Preceptor's wife; குருபத்தினி. 6. Term of respect for women of a higher caste or position; கௌரவமுள்ள ஸ்திரீகளைக் குறிக்குஞ் சொல். —CPD ஆச்சி-ப்-பூச்சி °pū-cci, A play among children: சிறுவர் விளையாட்டுவகை.

M. *acci*.

ஆச்சியம்[1] ācciyam, *n.* [S. *ājyam*, fr. *añj*. V. *añc-aṉam*] 1. Clarified butter; நெய். 2. Gum of deodar; தேவதாருவின் பிசின். 3. Fee; கட்டணம். —CPDS ஆச்சிய-சுத்தி °cutti [+S. *śuddh-is*, 'purification', fr. *śuddh*. Cf. T. *cuḍ-u*] Purification by ghee; நெய்யினாற் செய்யுஞ் சுத்தி. ஆச்சிய-புக்கு °pukku [+S. *bhuk*, 'eater', fr. *bhuj*. Cf. T. *puk-uttu*] Agni, god of fire; அக்கினிதேவன். ஆச்சிய-ஸ்தாலி °stāli [+ S. *sthālī* < T. *tāḻ-i*, 'earthen pot'] Vessel for clarified butter during oblations; ஓமத்துக்குரிய நெய்ப்பாத்திரம்.

ஆச்சியம்[2] ācciyam, *n.* [S. *hāsya*. V. *aci*[2]—அசி-த்தல்] What is fit to be ridiculed; நகைப்பதற்கேற்றது.

ஆ-ச்-சிரமம் ā-c-ciramam, *n.* [S. *ā-śram-am*] 1. Hermitage; முனிவருறைவிடம். 2. Orders or stages in life, especially of the twice-born, viz: (1) பிரமசாரியம், state of a bachelor who, from the time of his upanayaṉam, is required to tend the sacred fires and follow his studies under his preceptor; (2) கிருகஸ்தம், state of a householder who, from his marriage, has to observe his religious duties and practise hospitality towards the three other orders; (3) வானப்பிரஸ்தம், the state of an anchorite who, with or without his wife, retires to the desert feeding on leaves roots and fruits and continues to practise his religious rites; (4) சந்நியாசம், the state of a religious mendicant who performs no rites whatever and lives on alms; நான்கு விதமான வாழ்க்கை நிலை.

ஆ-ச்-சிரமி, °கன் ā-c-cirami, °kaṉ, *n.* [id.] One who belongs to any one of the four orders; நால்வகை ஆச்சிரமங்களுள் ஒன்றிலிருப்பவன்.

ஆ-ச்-சிரயம் ā-c-cirayam, *n.* [S. *ā-śray-as*, 'that to which anything is annexed', fr. *śri*. Cf. T. *kiḍ-a*] 1. Being attached to a thing; ஒன்றையடுத்திருத்தல். 2. Asylum; அடைக்கலத் தானம். 3. Making allies, one of aracar-aṟu-kuṇam, q. v.; அரசர் அறுகுணத்துள் ஒன்றாகிய கூட்டல்.—CPD ஆ-சிரயா'சித்தம் °acittam [V. *a-cit-tam*] (Log.) Fallacy of the minor term being non-existent; பட்சத்தியில்லாததைக் கூறும் ஏதுப் போலி (மணி. 29, 194).

ஆ-ச்-சிரவம் ā-c-ciravam, *n.* [S. *ā-śrav-as*, 'promise', fr. *śru*, T. *kēḷ*] 1. Obeying; கீழ்ப்படிகை. 2. Vow; சபதம். 3. [*ā-sravas*, fr. *sru*, 'to flow'. Cf. T. *tir-ai*] (Jaina) Inflow of karma; கன்மத் தொடர்ச்சி. 4. Distress; கிலேசம். 5. Action of the senses impelling the soul towards external objects; ஆன்மா பொறிவழிச் சேறல் (சி. போ. பா. அவை.).

ஆ-ச்-சிராமம் ā-c-cirāmam, *n.* [V. *ā-c-ciramam* = ஆச்சிரமம்] Territory of one's government; ஆளுகை செல்லும் இடம்.

ஆ-ச்-சிலை ā-c-cilai, V. under *ā*[4]; ஆ[4] பார்.

ஆச்சு āccu, *v. intr.* [for *āyiṟṟu* < *āku*] It is done, finished; முடிந்தது. தகப்பன் ஆச்சே, But he is a father!

ஆச்சுக்காசி āccukkāci, *n.* Common caung; மஞ்சட்கோங்கு.

ஆ-ச்சுரிதகம் ā-ccuritakam, *n.* [S. *ā-cchur-itakam*, 'scratching', fr. *chur*, T. *cur-aṇḍu*] 1. (Erot.) Mark of finger nail; நகக்குறி. 2. Making noise by striking the nails one with another; கைநகங்களை உரிஞ்சி ஒசையுண்டாக்கல். 3. Neighing; குதிரைக் கனைப்பு. 4. Laughter; சிரிப்பு.

ஆச்சுவத்தம் āccuvattam, *n.* [V. *accu-vattam*—அச்சுவத்தம்] Fruit of the pipal tree; அரசமரத்தின் காய்.

ஆச்சுவரி āccuvari, *n.* Pipal; அரசமரம்.

ஆ-ச்-சுவாசம் ā-c-cuvācam, *n.* [S. *ā-śvās-as*, 'breathing'. Cf. T. *kēv-u*] 1. Death; சாக்காடு. 2. Chapter; அத்தியாயம்.

ஆ-ச்சேதம், °தனம் ā-ccētam, °aṉam, *n.* [S. *ā-cchēd-anam*, 'incision' fr. *chid*. Cf. T. *keṭṭ-u*] Amputation; அற்பமாக வெட்டுதல்.

ஆ-ச்சோதனம் ā-ccōtaṉam, *n.* [S. *ā-cchōdanam*] Hunting; வேட்டையாடல்.

ஆ-சங்கம் ā-caṅkam, *n.* [S. *ā-saṅg-as*, 'fastening', fr. *sam+gam*] 1. Proximity; அண்மை. 2. Compactness; அடர்த்தி.

ஆ-சங்கி-த்தல் ā-caṅki, 11 *v. tr.* [S. *ā-śaṅk*, 'to hesitate', fr. *śaṅk*. Cf. T. *taṅk-u*] 1. To suspect, doubt; சந்தேகங் காட்டுதல். 2. To state a possible objection; ஆட்சேபித்தல் (சி. போ. சிற். 2, 2).

ஆ-சங்கை ā-caṅkai, *n.* [id.] 1. Doubt; சந்தேகம். 2. Objection; ஆட்சேபம்.

ஆ-சட்சு ā-caḍcu, *n.* [S. *ā-cakṣ-us*, fr. *cakṣ*, akin to T. *kāḍci* < *kaṇ*, or according to some, fr. *kāś*, T. *kēḷ*] 1. Eye; கண். 2. Learned man; பண்டிதன்.

ஆசடை, ācaḍai, *n.* [?] Beam placed lengthwise in a roof; நீள வாட்டத்தில் அமைக்கும் மூசட்டுத் தூலம்.

ஆ-சத்தி ā-catti, *n.* [S. *ā-śak-tis*, 'attachment', fr. *śak*. Cf. T. *tak-u*] 1. Attachment; பற்று. Desire; விருப்பம். 2. Acquisition, gain; சம்பாத்தியம், இலாபம்.

ஆ-சந்தி ā-canti, *n.* [S. *ā-sand-i*, 'arm-chair', fr. *sad*, to sit, perh. akin to T. *iru*<*iḍ-u*] 1. Small cot; சிறு கட்டில். 2. Seat made of rattan; வேத்திராசனம். 3. Bier; பாடை. 4.

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

(Cath.) Procession of the dead Christ on Good Friday; மரித்த கிறிஸ்துநாதர் சுரூபத்தின் ஊர்வலம்.

ஆ-சந்தன் ā-cantaṉ, n. [id. ?] Vishnu; விட்டுணு.

ஆ-சந்திர-காலம் ā-cantira-kālam, V. *ā-c-cantirakālam;* = ஆ-ச்-சந்திரகாலம்.

ஆ-சந்திர-தாரம் ā-cantira-tāram, n. [*ā-c-cantira* + S. *tāras*, 'star', perh. akin to T. *tir-ai*, 'move about'] As long as the moon and stars last; சந்திரனும் நட்சத்திரங்களும் உள்ளவரை (S. I. I. iii, 3).

ஆ-சந்திரார்க்கம் ā-cantirārkkam, V. *ā-c-cantir'ārkkam;* = ஆ-ச்-சந்திரா'ர்க்கம்.

ஆசம்¹ ācam, n. [V. *aci*¹—அசி-த்தல்] Laughter; சிரிப்பு.

ஆசம்² ācam, for ācciyam¹; = ஆச்சியம்¹.

ஆசம்³ ācam, n. [S. *āsam*, fr. *ās* <*as*, 'to sit', perh. akin to T. *ir-u*<*iḍ-u*] Seat; ஆசனம்.

ஆசம்⁴ ācam, n. [S. *ās-as*, fr. *as*, 'to throw'] 1. Bow; வில்லு. 2. Touchstone; உரைகல்.

ஆ-சமனகம் ā-camaṉakam, n. [S. *ā-cam-anakam*, fr. *cam*, to 'sip'. Cf. T. *capp-u*] Spitting pot; வெற்றிலைத் தம்பலக் களாசி.

ஆ-சமம், °மனம் ā-camam, °aṉam, n. [id.] 1. Sipping water thrice from the palm of the right hand, while repeating certain mantras; வலக் குடங்கையால் மந்திர பூர்வமாக நீரை மும்முறை வாயிற் கொள்ளல். 2. Rinsing the mouth; வாயலம்பிக் கொப்புளித்தல்.

ஆ-சமனீயம் ā-camaṉīyam, n. [id.] Water used for ācamaṉam; ஆசமனநீர்.

ஆ-சமிக்க ā-camikka, 11 v. tr. [id.] To sip as above; ஆசமனஞ் செய்ய (சேதுபு. சேதுவே. 76).

ஆ-சயம்¹ ā-cayam, n. [S. *ā-śayas*, fr. *śī*. 'to lie down', T. *kiḍa*] 1. Resting place; உறைவிடம். 2. Vessel of the body; உடம்பின் உட்பை. 3. Intention, meaning; அபிப்பிராயம். கருத்து. 4. [cf. *ācaṉi*] Jack tree; பலா.

ஆசர் ācar, *adj.* [U. *hāzir*] Present, in attendance; சமுகமா யிருத்தலைக் குறிக்குஞ் சொல்.

ஆ-சரணம், °ணை ā-caraṇam, °ṇai, n. [S. *ā-car-aṇam*, 'approaching', fr. *car*, T. *cel*] 1. Reaching; கிட்டிச் சேருதல். 2. Observance; அனுசரிப்பு. 3. Custom; வழக்கம். 4. Ceremonial purity; புறத் தூய்மை.

ஆ-சரித்தல் ā-cari, 11 v. tr. [id.] 1. To practise; அனுஷ்டித்தல். 2. To keep holy, solemnize; கைக்கொள்ளல். 3. To worship; வழிபடுதல்.

ஆ-சரிப்பு-க்-கூடாரம் ā-carippu-k-kūḍāram, n. [id. + *kūḍ-āram*, 'tent'] (Chr.) Tabernacle, a movable sanctuary; யூதருடைய சஞ்சார ஆலயம்.

ஆசல் ācal, n. Value; மதிப்பு (Coll.).

ஆசலை ācalai, n. Malabar-nut; ஆடாதோடை.

ஆ-சவம் ā-cavam, n. [S. *ā-sav-as*, fr. *su*, 'to press out juice'. Cf. T. *tuv-ai*] Spirituous liquor distilled from molasses; கள். —CPDS ஆசவத்-தரு, °துரு °taru, °turu, Palmyrah; பனைமரம்.

ஆ-சவுசம் ā-cavucam, V. *ā-caucam;* = ஆ-சௌசம்.

ஆச'று-தல் āc'aṟu, v. *int.* [*ācu* + *aṟ-u*] To end, to be finished; முடிதல் (கம்பரா. 30).

ஆச'ற āc'aṟa, *adv.* [id.] Entirely; முற்ற (தொல். பொ. 664, உரை).

ஆச'றுதி āc'aṟuti, n. [id.] Termination; கடைசி (S. I. I. i. 87). —CPD ஆசறுதி-ப்-பல் °pal, Wisdom tooth; கடைவாய்ப் பல்.

ஆ-சன்னம், °னை ā-caṉṉam, °caṉṉai, n. [fr. S. *ā-sad*, V. *ā-santi*] 1. What is near in place or time; சமீபமானது. 2. Presence; சமுகம். 3. Hour of death; மரணவேளை. 4. Evening; பிற்பொழுது.

ஆசனம் ācaṉam, n. [V. *ācam*³] 1. Seat, throne; தவிசு. 2. Yogic posture; யோகிகள் இருக்கைநிலை (சீவக.656, உரை). Nine such are enumerated, viz: (1) சுவத்திக ஆசனம், sitting with legs cross-wise; (2) கோமுக°, with the ankles crossed and placed on the hip joints; (3) பதும°, with the right foot placed on the left thigh, grasping the toes with the hands crossed over the back, while the chin presses on the chest with the gaze fixed on the tip of the nose; (4) வீர°, with the right foot on the left thigh and the left foot on the right thigh; (5) கேசரி°, with the left ankle touching the right side and the right ankle the left side of the perineum and the hands and the thigh with stretched fingers, the mouth being kept open and the gaze fixed on the tip of the nose; (6) பத்திர°, with the heals on either side of the seam of the perineum and holding the feet firmly joined to one another with both the hands, or with the right leg placed over the left thigh, and hands stretched on the knee, while the body is kept erect; (7) முத்த°, with the left ankle beneath the region of the anus and the right ankle under the left, while the hand and neck are held straight with the body; (8) மயூர°, standing up on bent hands, the navel resting upon both the elbows, the legs being stretched horizontally behind and the head uplifted; (9) சுக°, sitting with ease and comfort. 3. Awaiting a suitable opportunity for attack one of aracar-aṟu-kuṇam, p. 128; இருக்கைகளும் அரசர் அறுகுணத்தின் ஒன்று (இரகு. திக்கு. 21). 4. Anus, rectum; மலவாயில். —CPDS ஆசனா'த்தம் °attam [+ *attam*, 'mirror'] Fixed mirror; நிலைக்கண்ணாடி. ஆசனா'தர்சம் °ātarcam [+ S. *ā-darś-as*, 'mirror'] Do; டை. ஆசன-கிருமி °kirumi [+ S. *krim-is*, 'worm', akin to *kīṭ-as* (Uhlenbeck). Cf. T. *kiṇḍ-u*] Thread-worm; Oxyuris vermicularis; மலப்புழுவகை. ஆசன-குளிகை °kuḷikai [+ S. *gul-ikā*, T. *kōḷ-am*, 'ball'] 1. Suppository; மலவாயிலிற் செலுத்தும் மாத்திரை. ஆசனந்-திருத்த °tirutta [+ *tir-uttu*, 'to set in order'] To provide seats, especially for elders; பெரியோருக்கு இருக்கை அமைக்க. ஆசன-மூர்த்தி °mūrtti, Siva-linga; சிவலிங்கம். ஆசன-வாய் °vāy, Anus; மலவாசல். ஆசன-வெடிப்பு °veḍippu, Anal fissure, crack-like sore; புண் சேர் வகை. சிங்கா'சனம் ciṅka° Throne; உயர்பீடம். நியாய° niyāya°; Judgment seat; நீதி விசாரிப்பவன் இருக்கை. பத்திர° pattira°, Royal throne; அரசு கட்டில்.

ஆசனன் ācaṉaṉ, The planet Venus; சுக்கிரன்.

ஆசனி ācaṉi, n. [Cf. *āciṉi*] A species of the jak tree; பலாவகை. 2. Asafoetida; பெருங்காயம்.

ஆசா ācā, *n.* [S. *āśā*, Cf. T. *ac-ai*] 1. Desire; ஆசை. 2. Space, quarter of the compass; திக்கு. —CPDS ஆசா'ம்பரன் °amparan [+*amparam*[1], 'clothes'] Siva, the space-clad i. e. naked; சிவன் (திருப்பு. 436). ஆசா-பங்கம் °paṅkam [+ S. *bhaṅg-as*, 'breaking', fr. *bhañj*, T. *piḷa*] Disappointment; விரும்பியது பெறாமை. ஆசா-பந்தம் °pantam [S. *bandh-as*, 'what binds', fr. *bandh*. Cf. T. *parr-u*] Passion; ஆசாபாசம். Hope; நம்பிக்கை. Spider's web; சிலம்பியின் நூல். ஆசா-பாசம் °pācam [+S. *pāś-as*, 'snare'. Cf. T. *pac-ai*] Noose of desire; அவாவாகிய பந்தம். (Cath.) Passion; மனோவிகாரம்.

ஆ-சாசி-த்தல் ā-cāci, *11 v. tr.* [S. *ā-śās*, 'to command, pray for', fr. *śās*] To bless; வாழ்த்துதல்.

ஆசாசி ācāci, *n.* [Cf. *ākāci*] Gulancha; சீந்தில்.

ஆசாட்டம் ācāḍḍam, *n.* [*ācu*+ *ā-ḍḍ-am*] 1. Indistinct appearance; தெளிவற்ற தோற்றம். 2. Weeping; அழுகை.

ஆசாடகம், ஆசாடம் ācāḍakam, ācāḍam, *n.* [S. *āṣāḍh-as*] The lunar month roughly corresponding to āḍi; சாந்திர மாதத்துள் நான்காவது. 2. Palas tree; முருக்கு. 3. Branch of a tree; மரக்கொம்பு. 4. Staff of an ascetic; தவசியின் கைக்கோல். —CPD ஆசாட-பூதி °pūti [+S. *bhūt-as*, 'riches'] One whose riches is a staff of the Palas tree; முருக்கந்தண்டமாகிய செல்வமுடையவன் (பஞ்சதந்திரம்).

ஆசாடி ācāḍi, *n.* [id.] Full moon day of Āḍi; ஆடிமாதப் பௌர்ணிமை.

ஆ-சாதிதம் ā-cātitam, *n.* [S. *ā-sād-ita*, 'obtained', fr. *sad*. V. *ā-santi*] 1. Gain, merit; இலாபம், பேறு. 2. What is extensive; பரந்தது.

ஆசாமி ācāmi, *n.* [U. *āsāmi*] 1. Individual; ஆள். 2. Astute fellow; தந்திரி (Coll.). —CPDS ஆசாமி-க்-களவு °kaḷavu, Kidnapping; ஆள்த்திருடுகை. ஆசாமி-சோரி °cōri, [+ S. *cōr-as*, 'thief', fr. *cur*, T. *cūr-ai*] Do; ஷை. ஆசாமி-வாரி °vāri [+ U. *wāri*] Individually; தனித்தனியே. ஆசாமிவாரி-ச்-சிட்டா °°ciḍḍā [id.+ U. *ciṭṭhā*] Account showing the assessment of each individual; இனவாரி வரிக்கணக்கு.

ஆ-சார்யா'பிஷேகம் ā-cāry'āpiṣēkam, V. *ā-cāriyaṉ*=ஆ-சாரியன் பார்.

ஆ-சாரம்[1] ā-cāram, *n.* [S. *ā-cār-as*, 'coming near, conducting oneself', fr. *car*. Cf. T. *cel*] 1. Proper conduct; நன்னடத்தை. 2. Civility, salutation; உபசாரம். 3. Custom, practice; வழக்கம், பழக்கம். 4. Ceremonial or personal cleanliness; புறத்தூய்மை. 5. Consecration; பிரதிட்டை பண்ணுகை. 6. Sight; காட்சி. 7. [Tel. *ajāramu*] Audience hall of a palace; நிலைக்கமண்டபம். —CPDS ஆசார-வ்-ஈனன் °īnan, V. ācāra-kīnan;=ஆசாரகீனன். ஆசார-வ்-ஈனி, °ஈனை °īni. °inai, id. feminine; ஷை பெண்பால். ஆசார-வ்-உபசாரம், ஆசாரோ'பசாரம் °upacāram, Hearty courtesy extended to a guest; விருந்தினர்க்கு மரியாதை. ஆசார-க்-கள்ளன் °kaḷḷan, Hypocrite; கள்ளஞானி. ஆசார-கீனன் °kīnan [+S. *hīn-a*, 'excluded'] One who habitually breaks religious rules; சமய ஒழுக்கங் கெட்டவன். ஆசார-ச்-சாவடி °cāvaḍi [Mhr. *sāvoṭi* 'public building'] Throne room; கொலுமண்டபம். ஆசார-ஞ்-செய்ய °ceyya, To perform one's duty sincerely; ஒழுக்கங்கடைப்பிடிக்க. ஆசார-ப்-பிழை °piḻai, Dereliction of one's duty; ஒழுக்கத் தவறல். ஆசார-ப்-புடவை °puḍavai, Silk cloth or some other, worn when the daily rites are performed; சமய அனுட்டானத்துக்கு உரியவுடை. ஆசார-பரன் °paraṉ [+S. *-para*, 'occupied with'. Cf. T. *pura*+*aṉ*[3]] One who is punctilious about the duties of his caste etc.; தனக்குரிய ஒழுக்கத்திற் கண்ணுறையிருப்போன். ஆசார-போசன் °pōcaṉ [+S. *Bhojas*, name of a celebrated sovereign of Malwa] Person of a very imposing appearance; ஆடம்பரத் தோற்றமுள்ளவன். ஆசாரம்-பண்ண °paṇṇa, To treat courteously; உபசாரஞ்செய்ய. ஆசார-லிங்கம் °liṅkam, A variety of Civa-linkam; சிவலிங்க பேதங்களுளொன்று. ஆசார-வந்தன் °vantaṉ [+ S. *-vat*, 'possessing'] Well-conducted man; ஒழுக்கமுள்ளவன். ஆசார-வாசல், °வாயில் °vācal, °vāyil, Entrance hall of a palace or temple; பிரவேச மண்டபம்.

ஆசாரன், ஆசாரி[1] ācāraṉ, ācāri, *n.* [id.+-*aṉ*[5] -*i*[4]] Man of good manners; மரியாதையறிந்தவன்.

ஆ-சாரம்[2] ā-cāram, *n.* [S. *ā-sār-as*, fr. *sar*, 'to flow'] 1. Heavy downpour of rain; பெருமழை. 2. Pervasion; வியாபகம். 3. Besieging by an army, army; முற்றுகை, சேனை. 4. Cloth; சீலை.

ஆசாரி[2] ācāri, *n.* [S. *ācār-in*, V. *ācāram*] 1. A title adopted by Madhva and Śrī Vaiṣṇava Brahmans; மாத்துவ ஸ்ரீவைஷ்ணவ பிராமணர் பட்டப் பெயர். 2. Title of the five artisan castes; கம்மாளர் பட்டப்பெயர்.

ஆசாரிப்-புளி ācārip-puḷi, Thin leaved smaller Chinese lawrel: Antidesma diandrum; மரவகை.

ஆ-சாரியன் ā-cāriyaṉ, *n.* [S. *ā-cārya*, 'one who knows the ācāra or rules', V. *ā-cāram*] 1. Spiritual teacher; குரு. 2. Head of a religious sect; சமயத் தலைவன். 3. Teacher; உபாத்தியாயன். 4. Architect; கட்டடத் தலைவன். —CPDS ஆசாரியா'பிஷேகம் °apiṣēkam [+S. *abhi-ṣēk-as*, V. *api-ṣēkam*] Ordination; குருத்துவம் முளுஞ் சடங்கு. ஆசாரிய-சம்பாவனை °campāvaṉai [+ S. *sam-bhāvanā*, 'worship'] Offering of money to the spiritual head of a sect on auspicious occasions; சுபகாலங்களில் ஆசாரியருக்குக் காணிக்கை. ஆசாரிய-ப்-பட்டம் °paḍḍam [+ *paḍḍ-am*, 'frontlet'] Title assumed by a priest on his ordination; குருவாக அபிஷேகிக்கப் பெறும்போது வகிக்கும் புதுப்பெயர். ஆசாரிய-பக்தி °pakti [+ S. *bhak-t-is* 'division, devotion', fr. *bhaj*. Cf. T. *pak-u*] Devotion to a guru; குருபக்தி. ஆசாரிய-பும்ஸ்துவம் °pumstuvam [+ S. *puṃs-tva*, 'being a man', V. *pumāṉ*] Sacerdotal hauteur of a religious preceptor; ஆசாரியரின் கருவம். ஆசாரிய-புருஷம் °puruṣam [+S. *puruṣas*, 'man'] Grant of land to a priest for temple service; கோயிற் குருவுக்கு விடும் மானியம். ஆசாரிய-புருஷன் °puruṣaṉ [id.] Guru among Śrī Vaiṣṇavas; பஞ்ச சமஸ்காரஞ் செய்தற்குரிய ஆசாரியன். ஆசாரிய-பூசனை °pūcaṉai [+S. *pūj-anam*, 'worship', fr. *pūj*, prob. T. *pūc-u*] Honorarium to priests; குருக்களுக்குரிய சம்பாவனை (S. I. I. iii 270). ஆசாரிய-விருத்தனம் °viruttaṉam [+ prob. S. *vritt-is*, 'career'] Priestly authority; குருக்களின் அதிகாரம்.

ஆசாரியாணி ācāriyāṇi, *n.* [*fem.* of id.] 1. Preceptor's wife; குருவின் மனைவி. 2. Mistress; தலைவி.

ஆசாலுகம் ācālukam, *n.* [perh. for *ā*-[10]+S. *jānukam*, 'up to the knee']

A yogic posture; யோகாசனவகை (தத்துவப். 109, உரை).

ஆசான் ācāṉ, n. [Cf. āccāṉ—ஒப். ஆச்சான்] 1. Elderly man; முத்தோன். 2. Teacher; உபாத்தியாயன் (திருபஞ்ச. 29). 3. Family priest; புரோகிதன் (சிலப். 28, 222). Hence: 4. Jupiter, preceptor of gods; வியாழன். 5. Venus; சுக்கிரன். 6. Skanda; முருகக்கடவுள். 7. Arhat; அருகன். 8. An ancient secondary melody-type of the pālai class; பாலை யாழ்த் திறவகை. —CPD ஆசான்றிறம் °tiṟam, Kind of svaram; குரற்குரிய திறம். A secondary melody-type of the pālai class; பாலையாழ்த் திறம்.

ஆசாள் ācāḷ, n. [fem. of id.] 1. Priest's wife; குருபத்தினி. 2. Lady of position; தலைவி.

ஆசானங்கை ācāṉaṅkai, n. Common physic nut; காட்டாமணக்கு.

ஆ-சானு-பாகு ā-cāṉu-pāku, n. [ā-[10] +S. jānu, 'knee'. Cf. T. kaṉ-u+bāhus, 'arm', perh. connected with T. vāṅk-u, 'to bend'] One whose arms reach the knees, indicating majesty of stature; முழந்தாளைவு நீண்ட கையன்.

ஆசி[1]-த்தல் āci, 11 v. tr. [ācā—ஆசா] To desire, long for; விரும்புதல், அவாவுதல் (திருப்பு. 403).

ஆசி[2] āci, n. [S. ā-śis, V. ā-cāci—ஆசாசி-த்தல்] 1. Blessing; வாழ்த்து (தேவா. 212, 5). 2. Figure of speech expressing benediction; வாழ்த்தணி (வீரசோ. அலங். 33). —CPDS ஆசி'டை[1] °iḍai [+iḍu, 'to bestow'] Good wishes; வாழ்த்து. "அந்தணராசிடை கூறி" (சூளா. குமார. 20). ஆசி-க்-கல் °kal, A black load-stone; காகச் சிலை. ஆசி-மொழி °moḻi, Figure of speech in which a benediction is pronounced; வாழ்த்தணி (வீரசோ. அலங். 33 உரை).

ஆசி[3] āci, n. [S. āj-is, 'place for running', fr. aj, T. ak-ai] 1. Even ground; சமதரை. 2. Fight; போர்.

ஆசிகம்[1] ācikam, n. [fr. aja, sheep, V. acam[1]—அசம்=ஆடு] Dung of sheep; ஆட்டுப் பிழுக்கை. —CPD ஆசிக-ரோகம், °rōkam, A disease in the black of the eye; கருவிழியில் ஆட்டுப்பிழுக்கை போன்ற கொப்புளங்களை எழுப்பும் நோய்.

ஆசிகம்[2] ācikam, n. [V. āciyam[1]—ஆசியம்[1]] Face; முகம்.

ஆசிகன் ācikaṉ, n. [S. āsi-kas, fr. asi, 'sword'. V. aci[1]—அசி =வாள்] 1. Swords-man; வாளாயுதமுடையவன். 2. Sawer; மரமரிவோன்.

ஆசி'டு-தல் āc'iḍu, v. tr. [ācu+iḍu—ஆசு+இடு] 1. To cement particles of gold etc.; பற்றுக வைத்தல். 2. To affix, for preventing hiatus, one or two metrical syllables to the 3rd foot of the second line in a nēricai-veṇpā; நேரிசை வெண்பாவிலே தனிச்சொற்கு முன்னே செப்பலோசை நிறைத்தற்பொருட்டு ஓரசையேனும் ஈரசையேனும் சேர்த்தல் (காரிகை. 3 உரை). 3. To insert ய, ர, ல, or ழ in the rhyming foot, in one or two lines of a stanza; எதுகையில் ய, ர, ல, ழ என்ற நான்கிலொன்றை ஆசாக இடுதல் (இலக். வி. 748).

ஆசி'டை[2] āciḍai, n. [id.+ -ai[7]] 1. Crowd கூட்டம். 2. Cloth; ஆடை. —CPDS ஆசிடை-எதுகை, °இட்டெதுகை °etukai, °iḍḍetukai, V. āc'etukai; =ஆசெ'துகை. ஆசிடை-நேரிசைவெண்பா, ஆசிடை-வெண்பா °nēricai-veṇpā, °veṇpā, (Poet.) A veṇpā of 4 lines in general, to the penultimate foot of the second line of which an ācu is affixed; தனிச்சொற்குமுன்னே ஆசிடைப்பெற்றுவரும் நேரிசைவெண்பா (யாப். கா. 3, உரை).

ஆ-சிதம்[1] ā-citam, n. [S. ā-cita, 'heaped', fr. ci, T. kuvi] 1. A cart-load; ஒரு வண்டிப் பாரம். 2. Weight of 200 tulām; 200 துலாங் கொண்ட பாரம். 3. Measure of 10 paṟai; பத்துப்பறை அளவு.

ஆசிதம்[2] ācitam, n. [S. ās-itam, 'seat, abode', fr. ās <as, T. ir-u <iḍ-u] 1. Seat; இருக்கை. 2. City; நகரம்.

ஆசிதம்[3] ācitam, n. [V. acitam[1]] What is of blue or black colour; நீலநிறம் உடையது.

ஆசிதையன் ācitaiyaṉ, n. Barber; நாவிதன்.

ஆசியம்[1] āciyam, n. [S. āsyam, L. os, or-is. Cf. T. ōḍḍ-ai] 1. Mouth; வாய். 2. Face; முகம். 3. What belongs to the face; முகத்திற்குரியது. —CPDS ஆசியா'சவம் °ācavam, [+S. ā-savam, for ā-savas, 'liquor', fr. su. Cf. T. tuv-ai] Saliva; வாயூறல். ஆசிய-பத்திரம் °pattiram, Lotus (resembling a beautiful face); தாமரை.

ஆசியம்[2] āciyam, n. [S. hās-yam, V. aci[2]—அசி-த்தல்] 1. Laughter; சிரிப்பு (சீவக. 3076, உரை). 2. Jest; பரிகாசம். 3. (Poet.) Sentiment of humour; நகைச்சுவை. —CPDS ஆசியக்-காரன் °kāraṉ, Jester, buffoon; கோமாளி. ஆசிய-நாடகம் °nāḍakam, Farce; பரிகாசக் கூத்து.

ஆசிய-சீரகம் āciya-cīrakam, n. [Cf. āciyam] Black cumin; கருஞ்சீரகம்.

ஆசிய-சூதப்புல் āciya-cūtappul, n. Wild ragi; பேய் வரகு.

ஆசிய-போதம் āciya-pōtam, n. Wild almond; பேய்வாதுமை.

ஆசிரபம் āciṟapam, n. [S. āsrapas] The nineteenth lunar mansion; மூலநட்சத்திரம்.

ஆ-சிரமம் ā-ciramam, V. ā-c-ciramam; =ஆ-ச்-சிரமம்.

ஆ-சிரயணம் ā-cirayaṇam, n. [V. ā-c-cirayam] Depending on or seeking refuge with another; அடுத்திருக்கை (ஞானா. 61, 19), அடைக்கலம் புகல்.

ஆ-சிரயம் ā-cirayam, V. ā-c-cirayam; ஆ-ச்-சிரயம்.

ஆ-சிரயிக்க ā-cirayikka, v. [id.] To seek shelter or refuge; சார, அடைக்கலம் புக.

ஆ-சிரவம்[1] ā-ciravam, n. [S. ā-śrav-as, 'compliance', fr. śru, 'to hear', T. kēḷ] Obedience, conformity; கீழ்ப்படிவு, இணக்கம்.

ஆ-சிரவம்[2] ā-ciravam, n. [S. ā-srava, 'running', fr. sru. Cf. T. āṟu and Arm. aru] 1. Current; நீரோட்டம். 2. (Jaina.) The way karma is acquired by the human soul; சைனரின் நவபதார்த்தங்களுள் ஒன்று (சீவக. 2814, உரை). 2. Affliction; துன்பம்.

ஆ-சிரிதம் ā-ciritam, n. [V. ā-cirayam] Dependence; சார்ந்திருக்கை.

ஆ-சிரியம்[1] ā-ciriyam, n. [V. ā-ciriyaṉ] (Poet.) One of the four chief kinds of metre; நால்வகைப் பாவில் ஒன்று. —CPDS ஆசிரியவு'ரிச்-சீர், ஆசிரிய-ச்-சீர் °uric-cīr, °cīr, Metrical foot generally used in āciriyappā or akaval; அகவலுக்குரியசீர். ஆசிரிய-ச்-சுரிதகம் °curitakam [+curit-akam,'what is screw-like'] Aciriyam verse which is the last member of some kali verses; அகவலாகிய சுரிதகம் (இலக். வி. 738 உரை). ஆசிரிய-த்-தளை °taḷai, Metrical connexion peculiar to āciriyam, i. e. the last syllable of

a foot being காய் or மா, the succeeding foot has to begin in nēr-acai, and the former being மலர் or விளம், the latter has to begin in niraiy-acai; மாமுன் நேரும், விளமுன் நிரையும் வரத் தொடுக்குஞ் செய்யுட்டளை (காரிகை, உறுப். 10 உரை). ஆசிரிய-த்-தாழிசை °tāḻicai, Stanza of three uniform lines coming either singly or combined with two similar stanzas on the same subject; ஆசிரியப்பாவினத்தான் ஒன்று (இலக். வி. 735, உரை). ஆசிரிய-த்-துறை °turai A four-line stanza with lines of different lengths; அகவற்றுறை. ஆசிரிய-ப்-பா °pā, One of the four kinds of chief metre; நால்வகைப் பாவினொன்று (தொல். பொ. 419). ஆசிரிய-விருத்தம் °viruttam, V. akaval-viruttam; = அகவல்-விருத்தம்.

ஆ-சிரியம்² ā-ciriyam, n. [for ā-cirayam — = ஆ-சிரயம்] Protection; பாதுகாவல். —CPDS ஆசிரியக்-கல் °kal, Inscriptional document by which a person subjects himself to another's protection; தன்னைக் காத்ததற்பொருட்டு பிறனுக்கு எழுதிவைக்குஞ் சிலாசாசனம் (Puduk. Inscr.). ஆசிரியப்-பிரமாணம் °piramāṇam, Document as above; தன்னைக் காப்பாற்றும்படி எழுதிக் கொடுக்கும் முறி (Puduk. Inscr. 704).

ஆ-சிரியன் ā-ciriyaṉ, n. [S. ā-cār-yas, 'one who knows the ācāra'. V. ācāram—ஆசாரம்] 1. Spiritual teacher, instructor; குரு, போதகாசிரியன். 2. Scholar; புலவன். 3. Author of any literary work; நூலாக்கியோன். —CPD ஆசிரிய-வசனம் °vacaṉam, Authoritative text; நூல் ஆசிரியரிடமிருந்து எடுக்கும் மேற்கோள்.

ஆசிருந்தம் āciruntam, n. [Cf. S. suraṅga, 'having good colour'] Indian beech; புன்கு.

ஆசில் ācil, n. [S. āśiḥ. V. āci²] Blessing; வாழ்த்து.

ஆ-சிலேடம், °ஷம் ā-cilēṭam, °ṣam. n. S. ā-ślēṣ-as, fr. śliṣ. Cf. T. koḷ-uvu] Intwining, embracing; சமவாய சம்பந்தம், ஆலிங்கனம்.

ஆசி-விடம், °விஷம் āci-viṭam, °viṣam, n. [āś-is, 'fang of a snake', fr. aś, 'to bite'? + viṣam, 'poison'] (Astrol.) An inauspicious yōkam; அமாவாசைக்கு 2-ம், 6-ம், 9-ம், 11-ம், 13-ம், 16-ம், 18-ம், நாட்களால் ஆகிய தோஷம் (சரசோ. குளு. 108).

ஆசினி āciṉi, n. [Cf. āyiṉi] 1. Bread-fruit tree; ஈரப்பலா (புறம். 158,22). 2. Heart of a tree; மரவைரம். 3. Bark of a tree used by hermits for clothing; மரவுரி. 4. [Cf. akal] Sky; ஆகாயம். 5. Excellence; விசேடம்.

M. ayini.

ஆசியம் āciyam, n. [Cf. ā-citam²] Black cumin; கருஞ்சீரகம்.

ஆசீர்-வசனம் ācīr-vacaṉam, n. [V. āci² + S. vac-anam, 'word', fr. vac, T. ōt-u] Blessing; ஆசிமொழி.

ஆசீர்-வதிக்க ācīr-vatikka, v. [id.] To pronounce benediction upon; வாழ்த்துரைக்க.

ஆசீர்-வாதம் ācīr-vātam, n. [id.] Blessing; வாழ்த்து.

ஆசில் ācil, n. [U. ḥāṣil] Value, estimate; மதிப்பு.

ஆசீவக்-காசு, ஆசுகவிகள்-காசு ācīvak-kācu, ācukavikaḷ-kācu, n. [perh. fr. ācīvakaṉ, below] An ancient tax; பழைய வரிவகை (S. I. I. i, 87).

ஆ-சீவகன் ā-cīvakaṉ, n. [S. ā-jīv-akas, 'beggar', fr. jīv, T. uy] 1. Member of a Jaina sect founded by Gōśāla; சமணரில் ஒரு பிரிவினன் (மணி. 27, 108). 2. Jaina ascetic; சமணத்துறவி.

ஆசீ-விடம், விஷம் ācī-viṭam, °ṣam, V. āci-viṭam; = ஆசி-விடம்.

ஆசு¹ ācu, n. [fr. accu² — < அச்சு²] 1. Support prop; பற்றுக்கோடு (புறம். 235). 2. Mould for constructing arches; வில்லு வீசம் அச்சு. 3. Hilt; வாளின் கைப்பிடி (S. I. I. ii, 185). 4. Armour; கவசம். 5. Steel gloves; கைக்கவசம். 6. Small tube though which yarn is conducted from the spindle; நூலிழைக்கும் கருவியின் குழாய், ஆசுமணை. 7. Soldering powder; பற்றவைக்கும் அரும்பு. 8. Anything coming between; இடையீடு. 9. Metrical syllable affixed to the third foot of the second line in a nēricai-venpā; நேரிசைவெண்பாவில் தனிச்சொற்குமுன் கூட்டப்படும் அசை (காரிகை, 3). 10. The consonants ய், ர், ல், ழ் intervening between the first and second syllables of a rhyming foot; எதுகையினிடையில் வரும் ய், ர், ல், ழ் எனும் ஒற்றுக்கள் (காரிகை, ஒழிபி. 6). 11. Minuteness; அட்பம். 12. Mark; இலக்கு (சிலப். 3, 47). 13. Trifle; அற்பம். 14. Fault; குற்றம் (குறள், 503). 15. Āṇava-malam; ஆணவமலம். 16. Saltishness; உவர். 17. A kind of natural arsenic; ஓர்வித பாஷாணம். —CPD ஆசு-மணை °maṇai, V. (6) above; மேலே (6) பார்.

ஆசு² ācu, n. [prob. fr. accu⁴ (p. 42) — அச்சு⁴] 1. Doubt; ஐயம் (ஞானா. 66, 17). 2. Distress; துன்பம் (ஞானா. 24, 4).

ஆசு³ ācu, n. [S. āśu, 'quick', fr. aś. Cf. T. acai—அசை-தல்?] 1. Quickness; விரைவு. 2. Extempore verse; கேட்டவுடன் பாடுவது. 3. A kind of paddy; இடைக் கார்நெல்வகை. —CPDS ஆசு-கம் °kam [+S. -ga, 'going'] Wind; காற்று. Bird; பறவை. Arrow; அம்பு (கந்தபு. காமதக. 1). ஆசு-கவி °kavi, Verse composed extempore; கொடுத்த பொருளை அடுத்த பொழுதிற் பாடுவது (வெண்பாப். 2, உரை). One who composes such verse; உடனே பாடுவோன். ஆசு-கன் °kaṉ [+-ga, 'going'] Vayu, as moving swiftly; வாயு. Sun; சூரியன். ஆசு-கி °ki [id.] Bird; பறவை.

ஆசு⁴ ācu, n. [Du. aas, prob. fr. Gr. eis, 'one'] Ace; ஒரு புள்ளியிட்ட சீட்டு.

ஆசுக்காயம் ācukkāyam, n. Indian squill; நரிவெங்காயம்.

ஆசுகவிகள்-காசு ācukavikaḷ-kācu, V. ācīvak-kācu; = ஆசீவக்-காசு.

ஆ-சுசுக்கணி ā-cucukkaṇi, n. [S. ā-śuśukk-ani, 'shining forth', fr. śuc, akin to T. cuḍ-u] Fire; நெருப்பு.

ஆசுணம் ācuṇam, n. 1. Pipal; அரசு. 2. Aśōka, tree; அசோகம்.

ஆசு-பத்திராமரம், ஆசு-பத்திரி ācu-pattirāmaram, °pattiri, n. [S. āśu-pattrī] Tree that yields frankincense; குமஞ்சான் மரம்.

ஆசுபதம் ācupatam, V. āspatam; = ஆஸ்பதம்.

ஆசு-பொதுமக்கள் ācu-potumakkaḷ, n. [prob. ācīvaka + makkaḷ] A sect of Jains; சமணருள் ஒரு சாரார் (S. I. I. vii, 458).

ஆசு-மணை ācu-maṇai, V. ācu; ஆசு பார்.

ஆசுரதம் ācuratam, V. ācurutam; = ஆசுருதம்.

ஆசுரம்¹ ācuram, n. [S. āsura, belonging to asura, V. acurar—அசுரர் பார்] 1. What relates to the Asuras; அ

சுர சம்பந்தமானது. 2. Asura-maṇam (p. 37) அசுரமணம் (நம்பி. 117, உரை). 3. [āsura] War waged with guns &c.; நாளிகம் முதலிய கருவிகளோடு செய்யப்படும் போர் (சுக்கிரநீதி, 332). —CPD ஆசுர-வைத்தியம் °vaittiyam, Surgery; இரணவைத்தியம்.

ஆசுரி ācuri, *n.* [id. + -i⁴] An Asura female; அசுரஸ்திரீ.

ஆசுரம்¹ ācuram, *n.* 1. Ginger; இஞ்சி. 2. Ragi; கேழ்வரகு. 3. [Cf. *ācūram*] Garlic; வெள்ளைப்பூண்டு.

ஆசுராகிதம் ācurākitam, *n.* Country pear; பேரி.

ஆசுராப்-பண்டிகை āsurāp-paṇḍikai, *n.* [U. *'āshūr* + *paṇḍikai*, 'festival'] Muharram, a Mohammedan festival; மொகரம் திருநாள்.

ஆ-சுருதம் ā-curutam, *n.* [S. *ā-śru-ta*, 'agreed', fr. *śru*, T. *kēḷ*] Consent; சம்மதித்தல்.

ஆசுவக்-கடமை, ஆசுவிகன்-பேர்க்-கடமை, ஆசுவிப்-பேறு ācuvak-kaḍamai, ācuvikaṉ-pērk-kaḍamai, ācuvip-pēṟu, V. *ā-cīvak-kācu*; =ஆசீவக்-காசு (S. I. I. i, 88—i, 108—viii, 267).

ஆசுவடி-மக்கள், ஆசுவி° ācuvaḍi-makkaḷ, ācuvi°, V. *ācu-potu-makkaḷ*; =ஆசு-பொது-மக்கள் (I. M. P. Cg. 1068).

ஆசுவம்¹ ācuvam, *n.* [fr. *ācīvakaṉ* —<ஆசீவகன்] Food of the Ājīvakas; ஆசீவகருணவு.

ஆசுவம்² ācuvam, *n.* [fr. *acuvam*—<அசுவம்] 1. Car drawn by horses; குதிரைகளிழுக்குந் தேர். 2. Herd of horses; குதிரைக் கூட்டம்.

ஆசுவம்³ ācuvam, *n.* [V. *ācu*³] Haste; விரைவு.

ஆசுவயம் ācuvayam, *n.* [id.] 1. Haste; விரைவு. 2. Subtility of the Vedas, name of an Upanishad; வேதநுட்பம்.

ஆசுவ-யுசம் ācuva-yucam, *n.* [S. *āśva-yuja*, belonging to *āśvina*, V. *accuviṉi* + *-am*²] The month of aippaci.

ஆசுவ-யுசி ācuva-yuci, *n.* [id.] Sacrifice in the household on the full moon day of aippaci; யாகம் 21இல் ஒன்று.

ஆ-சுவாசம் ā-cuvācam, *n.* [S. *ā-śvās-as*, 'breathing', fr. *śvas*, T. *kēv-v*] 1. Taking breath, resting; இளைப்பாறுதல். 2. Section in a book; நூலின் பிரிவாகிய அதிகாரம்.

ஆசுவிகன் ācuvikaṉ, V. *ācīvakaṉ*; = ஆசீவகன்.

ஆசுவினம், ஆசுவீசம் ācuviṉam, °vīcam, V. *ācuva-yucam*; =ஆசுவ-யுசம்.

ஆசூ ācū, *n.* [S. *ājur*, *ājū*] 1. Working without wages; அமஞ்சிவேலை. 2. Torments of hell; நரகவாதை.

ஆ-சூசம் ā-cūcam, V. *ā-caucam*; =ஆ-சௌசம்.

ஆ-சூடணம் ā-cūḍaṇam, *n.* [S. *ā-cūṣ-aṇam*, 'suction', fr. *cūṣ*, akin to T. *kūpp-u*] Application of cupping glasses to the skin; இரத்தம் வாங்கும் குழிகளைத் தோலிற் பிரயோகித்தல்.

ஆசூரம் ācūram, *n.* [Cf. S. *āsurī*] Garlic; வெள்ளை வெங்காயம்.

ஆசே'துகை āc'etukai, V. *ācu(9)*; ஆசு(9) பார்.

ஆ-சேறூண் ā-ceṟūṇ, *n.* [*ā*¹ + *cel* + *tūṇ* — ஆ+செல்+தூண்] Rubbing post for cows; ஆதீண்டு குற்றி.

ஆ-சேகம், °சேசனம் ā-cēkam, °cēcaṉam, *n.* [S. *ā-sēk-as*, *ā-sēc-anam*, 'pouring in', fr. *sic*, prob. akin to T. *cint-u*] 1. Aspersion; புரோட்சித்தல். 2. Pouring water upon; நனைக்கை (வில்லவண்ணா. 12).

ஆ-சேதம் ā-cētam, *n.* [S. *ā-sēdh-as*, 'restraint'] Obstructing in the King's name; அரசனாணையாற் தடைசெய்கை (சுக்கிரநீதி. 262).

ஆசை¹ ācai, *n.* [S. *āśā*. Cf. T. *acai*] 1. Desire; விருப்பம். 2. Sexual appetite; காமவிச்சை. 3. Affection; பற்றுதல். 4. Avarice; பொருள்வேட்கை. 5. Hope; பேற்றில் நம்பிக்கை. 6. Gold; பொன். 7. Point of the compass; திக்கு (கந்தபு. திருவிளை. 25.) —CPDS ஆசை-அறுக்க °aṟukka, To estinguish the passions; விருப்பொழிக்க. ஆசை-க்-காரணர் °kāraṇar, The presiding deities of the eight quarters; திக்குப் பாலகர் (கோயிற்பு. நடராச. 24). ஆசை-க்-கிழத்தி °kiḻatti, Concubine; வைப்பாட்டி. ஆசை-காட்ட °kāḍḍa, To allure; மருட்டியெடுக்க. ஆசை-நாயகன் °nāyakaṉ, Paramour; சோர புருஷன். (Coll.) ஆசை-நாயகி °nāyaki, Lady love; அன்புக்குரியாள். Concubine; கூத்தி. ஆசை-ப்-பட °paḍa, To set one's heart upon; விருப்பு மேவிட. ஆசை-ப்-பாடு °pāḍu, Eager longing; காதலிப்பு. ஆசை-ப்-பேச்சு °pēccu, Persuasive speech; வசமாக்கும் வார்த்தைகள். Flattery; இச்சகம். ஆசை-பதம் °patam, Alluring speech; வசீகரப்பேச்சு. ஆசை-பிடிக்க °piḍikka, To be swayed by passion; இச்சைமீதூர. ஆசை-புகட்ட, °பூட்ட °pukaḍḍa, °pūḍḍa, To captivate; காதல்கொள்ளச் செய்ய. ஆசை-மருந்து °maruntu, Philter; வசியம். ஆசை-வார்த்தை °vārttai, Tempting speech; நம்பிக்கையுண்டாக்கும் பேச்சு.

ஆசோத்தியம், ஆசோதை ācōttiyam, °cōtai, *n.* [Tel. *ācōta*] 1. Cessation from work, rest; இளைப்பாறுகை. 2. Ease; சிரமமின்மை.

ஆ-சௌசம் a-caucam, *n.* [S. *ā-śauc-am*, <*a-śuci*, 'uncleanliness, fr. *śuc*, akin to T. *cuḍ-u*] 2. Pollution caused either by the birth or death of a relative; சாத்திர விதிதமான தீட்டு (கூர்மபு. ஆசௌச. 25).

ஆஞ்சாலி, ஆஞ்சான்¹ āñcāli, āñcāṉ, *n.* [It. *alzaja*] 1. Halyard rope for hoisting sail; தோணிப்பாயிழுக்கும் கயிறு. 2. Hawser; பாரம் தூக்கும் கயிறு. 3. Swing formerly used in village schools for punishing pupils; கோதண்டம். —CPD ஆஞ்சான்-பற்றி °paṟṟi, Beam across the stern of a boat to which the halyard is tied; மரக்கலக்கம்பு.

ஆஞ்சான்² āñcāṉ, *n.* [Cf. the next word—அடுத்தசொல் பார்] Lone, slender stem of a tree; சிறிய தனிக் கொப்பு.

ஆஞ்சி¹ āñci, *n.* [fr. *añcu*, 'turn back, withdraw'— <அஞ்சு¹] 1. Moving to and fro; அசைவு. 2. Dancing; கூத்து. 3. Fear; அச்சம் (தொல். பொ. 79). 4. Idleness; சோம்பு. —CPD ஆஞ்சிக்-காஞ்சி °kāñci, Theme expressing a lady's horror on seeing the wounds of her husband killed in war; போர்க்களத்தில் இறந்த கணவனது வேல் வடுவைக் கண்டு மனைவி அஞ்சிய புறத்துறை (தொல். பொ. 79). Theme extolling the warrior's widow who ends her life either on the funeral pyre of her husband or by killing herself with the same arrow that caused her lord's death; போர்க்களத்திலிறந்த கணவனுடன் மரிக்கும் மனைவியின் பெருமை கூறும் புறத்துறை (பு. வெ. 4,22).

ஆஞ்சி² āñci, *n.* [Cf. S. *aindrī*] Cardamom plant; ஏலம்.

ஆஞ்சித்-தாழை āñcit-tāḻai, *n.* A kind of yellow aloes; மஞ்சள் நிறமுள்ள தாழைவகை.

ஆஞ்சிரணம் āñciraṇam, *n.* Wild basil; காட்டுத் துளசி.

ஆஞ்சில் āñcil, *n.* Species of Azima; சங்கஞ் செடி.

ஆஞ்சு āñcu, *n.* [Port. *anjo*] Angel; தேவதூதன்.

ஆஞ்சிறிகம் āñcirikam, *n.* [Cf. *āñcil*] Mistletoe-berry thorn; சங்கஞ்செடி.

ஆஞ்செல்கை āñcelkai, *n.* [?] Raft; தெப்பம்.

ஆஞ்ஞா āññā, *n.* [S. *ā-jñā*, 'order', fr. *jñā*, T. *ninai*] Order; கட்டளை. —CPD ஆஞ்ஞா-சக்கரம் °cakkaram, V. *ākkiñā-cakkaram*; = ஆக்கினா-சக்கரம்.

ஆ-ஞ்ஞாபனம் ā-ññāpanam, *n.* [id.] Ordering, commanding; கட்டளையிடுகை.

ஆஞ்ஞாபிக்க āññāpikka, *v.* To order, direct; கட்டளையிட, கடப்பிக்க.

ஆஞ்ஞை āññai, *n.* [id.] 1. Order; கட்டளை. 2. The sixth of the ārātāram in the human body; ஆறுதாரத்துட்கடைசியானது (சி. சி. 8,21, மறை.).

ஆஞா, ஆஞி āñā, āñi, *n.* [for *aiyā*] Father; தகப்பன்.

ஆட்-கடியன் ஆதியன ād-kaḍiyan &c., See under *āl*; ஆள் பார்.

ஆட்சி āḍci, Do; ஷை.

ஆட்சேபம் āḍcēpam, V. *ākṣēpam*; = ஆக்ஷேபம்.

ஆட்சை āḍcai, See under *āl*; ஆள் பார்.

ஆட்ட'கம் āḍḍ'akam, *n.* [*āḍ-u(m)* + *akam*¹] Bathroom; மஞ்சனசாலை (தேவா. 720,4).

ஆட்டம் āḍḍam, *n.* [√*āḍ-u*—ஆடுதல்] 1. Moving about, rocking, pitching; அசைவு. 2. Behaving like one possessed; பேய் பிடித்ததுபோல் ஒழுகுதல். 3. Play, sport; விளையாட்டு. 4. One's turn in a game; விளையாட்டின் தொடக்குமுறை. 5. Dance; கூத்து. 6. Influence; செல்வாக்கு. 7. [*adv.*] As; போல. உ-ம்: "முகம் குரங்காட்டம் இருக்கிறது". —CPDS ஆட்டம்-அடிக்க °aḍikka, To win a game; விளையாட்டு வெல்ல. ஆட்டம்-அடித்தல் °aḍittal, An outdoor game of kiḍḍi and pul; கிட்டிப்புள் விளையாட்டு. ஆட்டா'ளி °āḷi, One who is able to shoulder a responsibility; பிரயாசத்தக்கவன். ஆட்டம்-எடுக்க °eḍukka, To win a game; விளையாட்டு வெல்ல. To enter on a rash or odd enterprise; ஒரு கருமத்திற் திடுக்கென்று கையிட. ஆட்டத்து-வெளி °veḷi, Race course; வையாளி விடும் சமனிலம் (ஈடு. 7,4,5). ஆட்ட-பாட்டம் °pāḍḍam, Dancing and singing; ஆடல் பாடல். Foppishness; ஆர்ப்பாட்டம்.

-ஆட்டம் -āḍḍam, *suff.* [id.] A stem suffix with the sense of 'continued action'; 'நிகழ்ச்சிகொண்டிருப்பது' என்னும் பொருளுள்ள ஒரு கடைநிலை. உ-ம்: 'கொண்டாட்டம்'.

ஆட்டாம்- āḍḍām-, *adj.* [having reference to *āḍu*³, 'sheep'—ஆட்டுக்குரிய] —CPDS ஆட்டாங்-கள்ளி °kaḷḷi, Twisted square spurge; திருகுகள்ளி. ஆட்டாங்-கொடி °koḍi, Soma plant; சோமலதை. ஆட்டாம்-கொறுக்கு °korukku, Hill dholl; மலைத்துவரை. ஆட்டாங்-கோரை °kōrai, A sedge, prob. species of Cyperus; கோரைவகை. ஆட்டாம்-பிழுக்கை °piḻukkai, Sheep's ordure; ஆட்டின் மலம்.

ஆட்டாண்டு āḍḍāṇḍu, *adv.* [*āṇḍu* + *āṇḍu*—ஆண்டு+ஆண்டு] Every year எவ்வோராண்டும் (S. I. I. ii, 70).

ஆட்டி¹ āḍḍi, *n.* [fr. *āl* — < ஆள்] 1. Woman, lady; பெண். 2. Wife; மனைவி (சேதுபு. வேதா. 39).

Tel. *aḍadi* Kur. *ali*; Kui. *asa*; Go. *ar*; Cf. Mlt. *asti*, 'wife, woman'; Ela. *ruta*.

-ஆட்டி -āḍḍi, *suff.* [id.] A feminine suffix; ஒரு பெண்பால் விகுதி. உ-ம்: "சீமாட்டி".

ஆட்டி² āḍḍi, *n.* [fr. *āḍḍu*¹—ஆட்டு] One who causes to dance; ஆடச் செய்பவன். உ-ம்: "பாம்பாட்டி".

-ஆட்டி -āḍḍi, *suff.* [id.] A suffix with the sense of 'what continues to persist'; 'கடைபெற்று வருவது' என்னும் பொருள் கொண்ட ஒரு கடைநிலை. உ-ம்: "ஈராட்டி".

ஆட்டியம் āḍḍiyam, *n.* [S. *āḍhya*, prob. fr. T. *aḍ-u*] What is full; நிறைந்தது.

-ஆட்டியன் -āḍḍiyan, *suff.* [id.+ -*an*⁵] At the end of compounds as in "தனுட்டியன்"; நிறைந்தவன் என்னும் பொருளுள்ள ஒரு கடைநிலை.

ஆட்டினி āḍḍini, *n.* False fern tree; காட்டுப் பூவரசு.

ஆட்டீ'ற்று āḍḍ'īṟṟu, *n.* [*āṇḍ-u* + *īṟṟu*, fr. *īṉ*] Calving every year; ஆண்டு தோறும் ஈனுகை.

ஆட்டு¹-தல் āḍḍu, 5 *v. tr.* [*caus.* of *āḍ-u*¹] 1. To shake, rock; அசைத்தல். 2. To cause to dance; கூத்தாடச் செய்தல் (திருவாச. 3, 106). 3. To cause to bathe; நீராடச் செய்தல் (சேது பு. கடவு. 12). 4. To grind in a mill; அரைத்தல் (நாலடி. 35). 5. To harass; அலைத்தல் (புறம். 193). 6. To drive away; ஓட்டுதல் (ஐங். 34). 7. To conquer; வெல்லுதல் (சிலப். 5, 225).

ஆட்டு āḍḍu, *n.* [id.] Play, dance; விளையாட்டு, கூத்து. —CPDS ஆட்டு-உரல், ஆட்டு-க்-கல் °ural, °kal, Stone mortar for grinding; அரைக்கும் கல்லுரல் (பிரபோத. 11, 34). A kind of arsenic; அமிர்த பாஷாணத் தொன்று. ஆட்டுக்-கோன் °kōn, Siva as master of dancing; நடராசர். ஆட்டு-ச்-சதை °catai [meta- of *tac-ai*] Calf of the leg; காலின் பின்பக்கத்துத் தசை. ஆட்டு-ப்-பலகை °palakai, Turning pole of an oil-press, to which bullocks are yoked; செக்கையிழுக்கும் சுற்றுமரம்.

-ஆட்டு -āḍḍu, *suff.* [*āḍ-u*] A stem-suffix signifying continued action; நீடிய நிகழ்ச்சியைக் குறிக்கும் ஒரு கடைநிலை. உ-ம்: "குறும்பாட்டு".

ஆட்டு-² āḍḍu-, *adj.* [fr. *āḍ-u*, 'sheep' —ஆடு³] Belonging to sheep; ஆட்டுக்குரிய. —CPDS ஆட்டு'தப்பி °utappi [+*utappu*, 'to move about in the mouth'+ -*i*⁴] Cud of sheep; ஆடு அசையிடும் இரை. ஆட்டு'லா °ulā, Goat's-foot creeper; ஆட்டுக்காலடம்பு. ஆட்டோ'சை °ōcai, The 7th note of the gamut; ஆட்டுக் குரலை பொருத்த தாகிய தாரவிசை. ஆட்டுக்-கசாலை °kacālai, Sheep-fold; ஆட்டுக்கிடை. ஆட்டுக்-காதுக்-கள்ளி °kātuk-kaḷḷi, A kind of spurge; கள்ளிவகை. ஆட்டு-க்-கால் °kāl, Paniculate-winged myrobalan; பூமருது. ஆட்டு-க்-காற்-கல் °kār-kal, Coral stone; கொக்கைக்கல். ஆட்டு-க்-கிடாய் °kiḍāy, Ram; ஆணாடு. ஆட்டு-க்-கிடை °kiḍai, Sheep-pen; ஆட்டுப்பட்டி. ஆட்டுக்கி'றை °iṟai, A tax; ஆட்டு வரி. ஆட்டுக்-கொம்ப'வரை °komp'avarai, Species of bean; அவரைவகை. ஆட்டுக்-கொம்போ'தி °komp'oti, Long leaved trumpet-tree. Dolichandrone rheedii; ஆட்டுக் கொம்புபோன்ற காயையுடைய ஒரு

மரம். ஆட்டு-ச்-சக்கரணி °cakkarani, Exile oleander; மஞ்சளலரி. ஆட்டுச்-செவிக்-கள்ளி °cevik-kaḷḷi, =āḍḍuk-kātuk-kaḷḷi; = ஆட்டுக்-காதுக்-கள்ளி. ஆட்டு-ச்-செவிப்-பதம் °cevip-patam, Immature stage of the kernel of the coconut; தேங்காயின் வழுக்கைப் பதம். ஆட்டு-த்-துழாய் °tuḻāy, Wild basil; காட்டுத் துளசி. ஆட்டு-மறிக்-கூலி °maṟik-kūly, Hire for obtaining sheep for manure in a field; வயலிற் கிடைவைக்கக் கொடுக்கும் கூலி. ஆட்டு-மயிர்ச்-சரக்கு °mayirc-carakku, Woolen cloth; கம்பளித் துணி. ஆட்டு-முட்டி °muḍḍi, Liquorice plant; அதிமதுரம். ஆட்டு-ரோசனை °rōcaṉai [+S. rōc-anā, 'a yellow pigment', fr. ruc, lōc, akin to T. ilak-u] Bezoar of the sheep; ஆட்டுக் குடலில் எடுக்கும் வாசனைப் பொருள். ஆட்டு-வாகனன் °vākaṉaṉ [+S. vāh-aṉam, 'vehicle', fr. vah, T. ūkk-u + -aṉ[5]] The god Agni; அக்கினிதேவன்.

ஆட்டூர-வேம்பு āḍḍūra-vēmpu, n. Mountain neem; மலைவேம்பு.

ஆட்டை[1] āḍḍai, n. [fr. āḍḍ-am, — ஆட்டம்] Turn in a game; விளையாட்டில் தொடங்கு முறை.

ஆட்டை[2] āḍḍai, adj. [fr. āṇḍ-u—ஆண்டு] Belonging to a year, of an year; ஆண்டுக்குரிய. உ-ம்: "மூவாட்டை நெல்", Rice three year old. —CPDS ஆட்டைக்-காணிக்கை °kāṇikkai, An ancient village cess; ஒரு பழைய வரி (I. M. P. Tp. 234). ஆட்டை-க்-கோள் °kōḷ, Yearly payment; ஆண்டுதோறும் செலுத்தும் தொகை (T. A. S. ii, 44). ஆட்டை-ச்-சம்மாதம் °cammātam, A village cess; வரிவகை (I. M. P. Cg. 524). ஆட்டை-ச்-சிராத்தம், °திதி, °திவசம் °cirāttam, °titi, °tivacam [+ S. śrāddah, 'believing'—S. tithis, 'lunar day', div-as, 'day'. Cf. T. tī] First annual ceremony after a person's death; இறந்த முதலாண்டுத் திவசக்கிரியை. ஆட்டை-ப்-பாழ் °pāḻ, Cultivable land left waste throughout the year; வருஷ முழுதும் தரிசுகிடந்த நிலம் (S. I. I. iv. 155). ஆட்டை-வட்டம், °வட்டன் °vaḍḍam, °vaḍḍaṉ, Annually; ஆண்டுதோறும் (S. I. I. ii, 125–403). ஆட்டை-வாரியர் °vāriyar, Annual committee for supervising village affairs; கிராமநிர்வாகத்தை வருஷந்தோறும் மேற்பார்வையிடும் குழுவினர். ஆட்டை-விசேஷம் °விழா °vicēṣam, °viḻā, Annual festival; ஆண்டுதோறும் வரும் கொண்டாட்டம்.

ஆடகத்தி āḍakatti, n. A prepared arsenic; குங்கும பாஷாணம்.

ஆடகம்[1] āḍakam, n. 1. Small climbing nettle; சிறுகாஞ்சொறி. 2. The plant Kutampai; குதம்பைச்செடி. 3. Pigeon-pea; துவரை. ஆடக-க்-குடோரி °kuḍōri, False peacock-foot tree; மயிலடிக் குருந்து.

ஆடகம்[2] āḍakam, n. [prob. fr. aḍ-ai, 'weight'—அடை(9)] 1. Weight of 5 pirattam; ஐந்து பிரத்தங்கொண்ட நிறை (சுக்கிரநீதி, 105). 2. Four measures; நாழி.

S. aḍhakam.

ஆடகம்[3] āḍakam, n. [S. hāṭ-akam, 'shining thing', fr. *ghel, T. kēḻ] 1. Ore; உலோகக்கட்டி. 2. Gold; பொன். 3. One of four kinds of pou reputed to be of greenish hue; நால்வகைப் பொன்களில் ஒன்று (சிலப். 14,201). 4. Iron-wood of Ceylon; சிறுநாகப்பூ (மலை, மலை. 23). —CPDS ஆடகேசன் °īcaṉ, Chief of the Rudras inhabiting the nether world; பாதாளலோகத்தின் உருத்திரர்களைத் தலைவன் (கந்தபு. கணங். 6). ஆடக-கருப்பன் °karuppaṉ, Brahmā; இரணியகருப்பன் எனும் பிரமா. ஆடக-ச்-சயிலம் °cayilam [+S. śail-as, 'rock', fr. śil-ā, T. kal] Mount Meru; மேரு (கல்லா. 72,1).

ஆடகன் °āḍakaṉ, n. [id. + -aṉ[5]] 1. Hiraṇyakaśipu; இரணியகசிபு (பாரத. வேத்திர. 15). 2. Āḍakēcaṉ; ஆடகேசன்.

-ஆடகம்[4] -āḍakam, V. -āḍam[3], = -ஆடம்[3].

ஆடகி āḍaki, n. [āḍakam[1]—ஆடகம்[1]] Pigeon-pea; துவரை.

ஆட-கூடம் āḍa-kūḍam, n. [prob. āḍakam[3] + kūḍ-am—ஆடகம்+கூடம்] A mythological mountain containing brass; செம்புமலை.

ஆடகை āḍakai, n. [āḍakam[1] —ஆடகம்[1]] Pigeon-pea; துவரை.

ஆடங்கம் āḍaṅkam, n. [S. ā-taṅk-as, 'Disease said to be fr. taṅk. Cf. T. tāṅk-u] 1. Distress; துன்பம். 2. Delay; தாமதம்.

ஆடம்[1] āḍam, n. [āḍakam[2]—ஆடகம்[2]] A liquid measure for oil, about 20 measures; ஓர் அளவு.

ஆடம்[2], ஆடமணக்கு āḍam, āḍamaṇakku, n. [? āḍu[2]] Castor plant; ஆமணக்கு.

-ஆடம்[3] -āḍam, suff. [fr. āḍḍam, 'what is set in motion'—ஆட்டம்] A stem-suffix signifying continued occurrence; நிகழ்ந்து வருவது எனும் பொருளுள்ள ஒரு கடைநிலை. உ-ம்: "அன்றுடம்".

ஆடம்பரம் āḍamparam, n. [prob. āḍu + amparam] Pomp and show; இடம்பத் தோற்றம் (திருமந். 1655). ஒட்டோலகம். 2. Haughtiness; இறுமாப்பு. 3. State of being possessed; ஆவேசம். 4. Anger; கோபம். 5. Eyelid; கண்மடல். 6. Din of musical instruments; பல்லிய முழக்கம். 7. Elephant's roar; யானைப் பிளிற்றொலி. 8. [Cf. ārampam] Beginning; தொடக்கம்.

S. aḍambaras is prob. fr. the T. Sense 6, however, may be connected with S. ḍambaras, 'noise', with which cf. T. aḍ-i2. Kittel finds the words aḍ-um, 'moving' and paṟ-ai, 'drum' in the S. aḍambaras. The sense of 'eyelid' would come from the K. paṟe, 'eyelid'.

ஆடமாகிதம் āḍamākitam, n. Climbing nettle; பெருங் காஞ்சொறி.

ஆட'ரங்கம் āḍ'araṅkam, n. [āḍu(m) + araṅkam] Theatre; நாடகசாலை.

ஆட'ரி āḍ'ari, n. [āḍ-u[3] + ari[4], 'enemy'] Subrahmaṇya; சுப்பிரமணியன்.

ஆடல்[1] āḍal, n. [āḍu[1] + -al[7]] 1. moving, shaking; அசைகை (திருக்கோ. 393 கொளு.). 2. Playing; விளையாட்டு (பரிபா. கம்பவ. 27). 3. Coition; புணர்ச்சி. 4. Bathing; ஸ்நானம். 5. Doing; செய்கை. 6. Distress; துன்பம் (சூடா. 9, 9, பர.). 7. Saying; சொல்லுகை. உ-ம்: "யார்க்கு நன்மை பாடல் செயும்" (கந்தபு. ததேசு. 24). —CPDS ஆடலி'டம் °iḍam, Stage, theatre; நாடகசாலை. ஆடற்-கூத்தியர் °kūttiar, Dancing girls; அகக்கூத்தாடும் கணிகையர் (சிலப். 5, 50). ஆடல்-கொடுக்க °koḍukka, To show indulgence; இளக்காரஞ் செய்ய. To experience misery; துன்ப மனுபவிக்க. ஆடல்-நூல் °nūl, Science of dancing; நாட்டிய சாத்திரம். ஆடல்-பாடல் °pāḍal, Dancing and singing; கூத்தும் பாட்டும். ஆடற்-தரு °taru, Dancing song used in comedies; கூத்துக்குரிய பாட்டு.

Sinh. aḍavva, 'dance'.

ஆடலார் āḍalār, n. [id. + -ār[8]] Those who dance; நடனமுடையவர் (தேவா. பக்தியைகல். 2, திருவாவடு.).

ஆடல்[2] āḍal, n. [aḍ-u[4]—அடு-தல்] 1. Battle; போர். 2. Victory; வெற்றி (பிங்.).

ஆடல்[3] āḍal, *n.* [<*āḷ*—ஆள்-தல்] Ruling; ஆளுகை (சீவக. 1339).

ஆடலை āḍalai, *n.* 1. Tree that does not produce flowers; பூவாத மரம். 2. Pipal; அரசு.

ஆடவர் āḍavar, *n.* [*pl.* of *āḍavaṉ*, fr. *āḷ* + *avaṉ*, 'he who rules, is strong', *l/ḍ*— <ஆள்] Men; ஆண்மக்கள். —CPDS ஆடவர்-சாதி °cāti [+ S. *jāt-is*, 'birth', fr. *jan*. Cf. T. *iṉ*] (Erot.) Adult human males divided into three classes, viz: (1) சசன், man of hare-like nature; (2) இடபன், of bull-like° (3) அச்சுவன், of horse-like°; மூவகை ஆண்மக்கள் (கல்லா. 7, மயிலேறும்). ஆடவர்-பருவம் °paruvam [+S. *parvan*, 'division', akin to T. *piri-vu*] The six stages of a man's life, viz: (1) பாலன், child under five years; (2) காளை, from four to sixteen; (3) குமாரன் or விடலை, sixteen to thirty two; (4) ஆடவன் or மன்னன், thirtytwo to forty eight; (5) மூத்தோன் or ஆடவ விருத்தன், forty eight to sixty four; (6) விருத்தன், about sixty four (Winslow).

ஆடவள் āḍavaḷ, *n.* [*fem.* of *āḍavaṉ*] Woman; பெண்.

ஆடவன் āḍavaṉ, *n.* [id.] 1. Man; ஆண் மகன். 2. Youth; இளைஞன் (திருக்கோ. 219).

ஆடவை āḍavai, *n.* [=*āḍavaḷ*—ஆடவள்] Gemini, a sign of the zodiac; மிதுனராசி (திவா.).

ஆட-வல்லான் aḍa-vallāṉ, *n.* [*āḍ-u*[1] + *valla*, 'able'] 1. Naḍarājā; சிவன். 2. Standard weights and measures of the time of Rāja-rāja I; தஞ்சை டோராசப்பெருமான்கோயிலில்வழங்கிய அளவுநிறைகளின் பெயர் (S. I. I. ii, 400, 403, 408).

ஆடா āḍā, *n.* A disease in horses with tumour in the legs; காலிலிற் கட்டியோடுண்டாகும் குதிரை நோய்.

ஆடாகாவிகம் āḍākāvikam, *n.* Bark tree; மரவுரி.

ஆடாசம் āḍācam, *n.* A mineral poison; செந்திபாஷாணம்.

ஆடா-திருக்கை āḍā-tirukkai, *n.* V. āḍuvālantirukkai; ஆடுவாலன்திருக்கை.

ஆடாதோடை, °தோடை āḍātoḍai, °tōḍai, *n.* [said to be fr. *āḍ-u*, 'sheep' + *toḍu*, 'to touch'] Malabar nut; Justicia adhatoda; ஓர் மருந்துச்செடி, பாவட்டையில் தனிவம்.

K. *aḍasōge*; S. *aṭarūṣas*.

ஆடி[1] āḍi[1], *n.* *āḍ-u*+ -*i*[1]—ஆடுவது] 1. Dancer; கூத்தாடுவோன் (பாரத. அருச்சுனன்றவ. 113). 2. Wind; காற்று. 3. Metallic mirror; கண்ணாடி (மணி.19,90). 4. Crystal; பளிங்கு (மணி. 8,47). 5. Crane; நாரை.

S. *aṭi*, 'crane'.

ஆடிச்சி āḍicci, *n.* [id. *fem.*] A woman of the acrobat community; கழைக்கூத்தாடிப்பெண்.

ஆடி[2] āḍi, *n.* [corrupted fr. S. *āṣāḍhas*] 1. The fourth Tamil month July-August; நான்காம் தமிழ் மாதம். 2. The 21st nakṣatra; உத்திராடநாள். 3. Muhūrttam of 48 minutes from 4 h. 48 m. to 5 h. 36 m. after sunrise; பகலில் 12 நாழிகைக்குமேல் 2 நாழிகைகொண்ட முகூர்த்தம் (விதானமாலை, குணகு.73). —CPDS ஆடி-அமாவாசை °amāvācai, Newmoon of āḍi, a holy day; ஒரு புண்ணிய காலம். ஆடி-அறவெட்டை °araveḍḍai, Time of scarcity or high prices usually associated with āḍi; பொருள்முடை. ஆடி-க்-கரு °karu, Dark clouds of July-August indicating plentiful rain; ஆடி மாதத்து கருண்ட மேகம். (Prov.) ஆடிக் கரு வற்றினால் மழை குறைந்துபோம். "If the teeming clouds in July-August discharge their contents, the rain will fail in the ensuing season." ஆடி-க்-கால் °kāl [+ *kāl*, 'post'] West Indian pea-tree planted in Āḍi for cultivating betel vine; வெற்றிலைக் கொடிக்காக ஆடியில் நடும் அகத்தி. ஆடி-க்-காற்று °kāṟṟu, High winds characteristic of Āḍi; கடுங் காற்று. (Prov.) "ஆடிக்காற்றில் அம்மி பறக்கும் போது இலவம்பஞ்சுக்கு எங்கே கதி!" ஆடி-க்-குறுவை °kuṟuvai, A kind of paddy; செல்வகை. ஆடி-க்-கோடை °kōḍai, Extra rice crop about the month of Āḍi; ஆடியில் அறுவடையாகும் நெல். ஆடி-ப்-பட்டம் °paḍḍam [+*paḍḍam*, 'fit season'] Cultivating season in Āḍi; ஆடி மாதத்துப் பயிரிடும் வேளை. (Prov.) "ஆடிப்பட்டம் தேடி விதை". ஆடி-ப்-பண்டிகை °paṇḍikai, Festival on the first of Āḍi; ஆடி மாதப்பிறப்புக் கொண்டாட்டம். ஆடி-ப்-பால் °pāl, Sweetened preparation of coconut milk for āḍippaṇḍikai; ஆடிப் பிறப்பில் வழங்கும் தேங்காய்ப்பாலுணவு. ஆடி-ப்-பூரம் °pūram [+S. *pūrva-phalgunī* the 11th nakṣatra'] Festival of the goddess in temples on the pūrva-phalgunī day in Āḍi; ஆடி மாதத்துப் பூரநட்சத்திரத்தில் நிகழும் அம்பாள் உற்சவம். ஆடி-ப்-பெருக்கு °perukku, A festival held on the day when the Kāvēri overflows in Āḍi; பதினெட்டாம் பெருக்கு. ஆடி-வேட்டை °vēḍḍai, Plundering excursions of the Kaḷḷas during Āḍi for entertaining a newly married couple; கள்ளச் சாதியார் ஆடியிற் செய்யும் கொள்ளை. ஆடிக்க'ழைக்க °aḻaikka, To separate a newly married woman from her husband during the Āḍi of their first year of marriage, for preventing conception in that month and delivery in Cittirai which is considered an inauspicious month; புதிதாய் விவாகம் பண்ணிய பெண்ணைக் கணவனிலிருந்து ஆடியிற் பிரித்தழைக்க. To invite a newly married man to a feast in the bride's house on the first of Āḍi; ஆடி மாதப் பிறப்பில் மாப்பிள்ளையைப் பெண் வீட்டுக்கு வரிக்க.

-ஆடி[3] -āḍi, *suff.* [fr. *aḍ-i*[1], 'proximity'; or *āḍ-u* 'to frequent'] A stem-suffix indicating proximity or frequency; 'சமீபம்' அல்லது 'அடுத்தடுத்து நிகழ்தலைப் பொருந்தியது' என்னும் பொருளுள்ள ஒரு சொல்விகுதி. உ-ம்: "அங்காடி".

ஆடி[4] āḍi, *n.* [perh. fr. *aḍ-i*[2]—அடிப்பது?]. A kind of nail; படியாணி.

ஆடித்தன் āḍittaṉ, *n.* [Du. *harten*, 'hearts'] Hearts in cards; இருதயங்கள் என்ற விளையாட்டுச் சீட்டு.

ஆடிய-கூத்தன் āḍiya-kūttaṉ, *n.* Blinding tree; தில்லைமரம்.

ஆடு[1]-தல் āḍu 5 *v. intr.* [fr. *āl-u*, *l/ḍ* —ஆலு-தல்] 1. To shake, vibrate; அசைதல். 2. To play; விளையாடுதல் (மணி 10,55) 3. To dance; கூத்தாடுதல். 4. To bathe; நீராடல் (மணி. 17,32). 5. To fight; பொருதல் (கந்தபு. சிங்கமு. 460). 6. To wander about; சஞ்சரித்தல் (கலித். 41,25). 7. To make continued exertion; முயலுதல் (பழமொ. 150). 8. To be born, பிறத்தல் (சீவக. 911). 9. [*v. tr.*] To wallow in; அளைதல் (பெரும்பாண். 93). 10. To eat; உண்ணல் (கலித். 30). 11. To besmear; பூசுதல் (மணி. 16,31). 12. To enjoy; அநுபவித்தல். (சிலப். பதிக. 16). 13. To do; செய்தல். (பிரபோத. 27,21). 14. To say; சொல்லுதல் (திருவிளை. விறகு. 61).

Tel., K., M., Tu. *aḍu*; S. *aṭ*, 'to roam about', *aṭh* 'to go'. Walde—P derives the L. *annus*, (*atnos*), 'year', fr. the same root. Also Got. dative *pl. athnam*.

ஆடு āḍu, *n.* [id.] 1. Dance; கூத்து. 2. Sharpness; கூர்மை.

ஆடு-, ஆடும்- āḍu-, āḍum-, *adj.* [id.] —CPDS ஆட'வை °avai, Dancing hall; நடன அரங்கு. ஆடு-கால், °kāl [+*kāl*, 'post'] Stand of a picottah on which the well-sweep swings; இறைத் தாங்கு மரம். ஆடு-கொப்பு °koppu, A kind of gold ear-ring worn by women; மகளிர் காதணிவகை. ஆடு-கொம்பு °kompu, Movable horn fixed in the skin; கட்டுக்கொம்பு. ஆடு-சதை °catai, V. āḍḍu-c-catai; =ஆட்டுச்-சதை. ஆடு-ஞ்-சரக்கு °carakku, Mineral substances which evaporate on the fire, like mercury; நெருப்பில் ஆவியாய்ப் பறந்துவிடும் இரசமுதலிய பொருட்கள். Drugs; மருந்துச் சரக்கு. ஆடும்-பாத்திரம் °pāttiram, Dancing woman; நாட்டியப்பெண். ஆடு-துடை °tuḍai, Fleshy part of the thigh as contractile; சதைப்பற்றுள்ள தொடைப்பகுதி. ஆடு-மாலை °mālai, [+*māl-ai*, 'garland' meton. for 'a woman'] Gay, lively girl; உல்லாசமான குமரிப்பெண். Vagabond; நாடோடி. ஆடு-வாலன்-திருக்கை °vālaṉ-tirukkai, Sting-ray; Trygon sephon; ஒருவகைத் திருக்கை மீன்.

ஆடு² āḍu, *n.* [fr. *aḍ-u*, 'to crush, kill'— <அடு¹] 1. Cooking, boiling; சமைக்கை (புறம். 164). 2. Distillation; காய்ச்சி வடித்தல் (பு. வெ. 1, 2). 3. Killing; கொல்லுகை. (புறம். 67). 4. Victory; வெற்றி (கலித். 105,50).

ஆடு³ āḍu, *n.* [fr. *el-i*, q. v Caldwell's idea of 'frisking' is beside the mark. —<எலி]. 1. The genus of which the sheep and the goat are species: விலங்குவகை. 2. Aries; மேடராசி. (நெடுநல். 160) Some of the varieties of sheep and goats are: காட்டா'டு, wild sheep; குறும்பு°, crump-horned fleecy sheep; கொடி°, வெள்° or கார்°, long-legged sheep or goat; பள்ளை°, a prolific goat or one of low size: வரை°, mountain sheep (Winslow). —CPDS ஆடூ'ர்ந் தோன் °ūrntōṉ, Agni; அக்கினிதேவன். Skanda; முருகன். ஆடெ'ழும்பு-நேரம் °eḻumpu-nēram, About 10 a.m., as the time for leading out flocks for pasture; காலைப் பத்து நாழிகை. ஆடு-தின்னுப்-பாலை, °பாளை °tiṉṉāp-pālai, °pāḷai, Worm-killer; Aristolochia bracteata; புழுக்கொல்லிப்பூடு. ஆடு-தோடா °tōḍā, V. āḍā-tōḍai; =ஆடா-தோடை. ஆடு-தீண்டாப்-பாளை °tīṇḍāp-pāḷai, V. āḍu-tiṉṉāp-pālai=ஆடு-தின்னுப்-பாலை. ஆடு-மாடு °māḍu, Flock & herds; கால்நடை.

K. M. *adu*, Tel. *ēṭa*; Tu. *yēḍu*; Kui. *ōḍa*; Kur. *ēṛa*; Go. *yēṭi*; Brah. *hēṭ*, S. *ēḍas*, *ēḍakas*; L. *aries*, Arm. *oroj*. Cf. Gr. *aix*, 'she goat'. Also S. *ajas*, T. *acam*, q. v.

ஆடு⁴ -āḍu, *suff.* [fr. *aḍ-u*, 'to put near, press'—அடுப்பது] 1. A stem suffix with the sense of 'what is put near, pressed'; 'அடுத்திருப்பது' என்னும் பொருளுள்ள ஒரு கடைநிலை. உ-ம்: "சம்மாடு". 2. [adverbially, fr. *āḍḍ-am* —ஆட்டம்] Stem-suffix showing frequency; மீண்டும் மீண்டும் நிகழ்தலைக்காட்டும் கடைநிலை. உ-ம்: "அன்றாடு".

ஆடூஉ āḍūu, *n.* [fr. *āḷ-u* <*āḷ*, *ḷ/ḍ*; *u* lengthened in quantity for poetical use? —ஆளு <ஆள்] Man; ஆண்மகன் (தொல். சொல். 2). —CPDS ஆடூஉ-வ்-அறி-சொல் °ari-col, Words ending in the masculine termination *n*; ஆண்பாற்கிளவி (தொல். சொல். 5). ஆடூஉ-க்-குணம் °kuṇam, Masculine qualities which are four, viz: (1) அறிவு, knowledge; (2) நிறை, moral firmness, character; (3) ஓர்ப்பு, careful consideration; (4) கடைப்பிடி, retaining the truth known (இறை. 2, உரை). ஆடூஉ-முன்னிலை °muṉṉilai, (Gram.) Vocative, addressing a man; ஆண்பாலாரை முன்னிலைப்படுத்திக் கூறுகை.

ஆடை āḍai, *n.* [*aḍ-u*+ -*ai*¹, 'what adheres' — அடு+ஐ, 'சேர்ந்திருப்பது'] 1. Cloth, dress; சீலை, உடை. 2. Cream, scum; பால் முதலியவற்றின் ஏடு. 3. Thin film on the eye; நேத்திரபடலம். 4. Inner skin of the edible palmyra root; பனங்கிழங்கின் உட்தோல். 5. The 14th nakṣatra; சித்திரைநாள். —CPDS ஆடை-ய்-ஆபரணம் °āparaṇam, Outfit of a woman or man; விசேஷமாக ஸ்திரீபாலாரின் அலங்கரிப்பு. ஆடை-ய்-ஒட்டி °oḍḍi, A plant with bristles which cling to clothes; Pupalia orbiculata; பேய்ப்புல். Lice in clothes; சீலைப்பேன். ஆடையோட்டி-நீர் °nīr, Semen; சுக்கிலம். ஆடை-க்-காதி °kāti, False tragacanth; கோங்கிலவு. ஆடை-க்-குறி °kuri, Dhoby's mark on clothes; வண்ணான் அணிக்கிடும் அடையாளம். ஆடை-த்-தயிர் °tayir, Curds with cream on it; ஏடெடாத தயிர். ஆடை-மேல் °mēl, Neck; கழுத்து. ஆடை-வீச °vica, To wave a cloth for joy; மகிழ்ச்சிக் குறியாக ஒரு சீலையை உயர்த்தி ஆட்ட. ஆடைக்கும்-கோடைக்கும் °kōḍaikkum [here *āḍai* is an echo-word for *kōḍai*, 'summer season'] At all seasons; எல்லாக் காலமும்.

ஆடோபம் āḍōpam, *n.* [S. *āṭōp-as* which looks very much like *āḍam-param*—ஒப். ஆடம்பரம்] 1. Pride; செருக்கு. 2. Swelling; வீக்கம்.

ஆண் āṇ, *n.* [differentiated form of *āḷ*, 'person', fr. *āḷ*, 'to rule, to be strong'; or it may be a sync. of *āḍavaṉ* — <ஆள், ஆடவன்] 1. Warrior; வீரன் (திருப்பு. 211). 2. Manliness, courage; வீரியம் (குறு. 17,7). 3. Superiority; தலைமை (மறை. 261, உதாரண. 726, உரை). 4. Male; ஆண்பாற்பொது. —CPDS ஆண'ங்காய் °am-kāy, The branched spadix of the flowers of a palm; ஆண்பனையின் காய். ஆண்-அலி °ali, Hermaphrodite in whom male features predominate; ஆண்தோற்றம் மிக்க அலி. ஆண்-அழகன் °aḻakaṉ, Handsome man; அழகு வாய்ந்தவன். ஆண்-ஆட °āḍa, To do as one pleases; தன் இட்டப்படி நடக்க (திவ். நாய்ச். 3,9). ஆணாய்ப்-பிறந்தவன் °āy-p-pirantavaṉ, Male; ஆண்மகன். ஆண்-ஆறு °āru, Westward-flowing rivers; மேற்குநோக்கியோடும் நதி (சூடா. 4,4, பா.) ஆண்-எழுத்து °eḻuttu, A short vowel or a short animated consonant; குற்றெழுத்து. ஆண்-கடன் °kaḍaṉ, Man's responsibility; ஆண்மக்கள் தொழில் (சீவக. 1400). ஆண்-கிரகம் °kirakam, Mars, Jupiter and the Sun supposed to be male; (விதானமாலை, பஞ்சாங். 17). ஆண்-குமஞ்சான் °kumañcāṉ, Olibanum tree; குங்குலியமரம். ஆண்-குறட்டை °kuraḍḍai, Bitter snake-gourd; குறட்டை வகை. ஆண்-குறி °kuri, Membrum virile; லோகம். ஆண்-குறிஞ்சான் °kuriñcāṉ, Indian dammer; குங்குலியம். ஆண்-கை °kai, A hand pose in dancing; அபிநயவகை (சிலப். 3,18, உரை). ஆண்-சரக்கு °carakku, Alkaline base, e. g. கல்லுப்பு, வெடியுப்பு. ஆண்-சாவி °cāvi, Key with a solid barrel; துவாரமில்லாத திறவுகோல். ஆண்-சிரட்டை °ciraḍḍai, Bottom half of a coconut shell; தேங்காயின் அடிப் பாதியோடு. ஆண்-செருப்படை °cerup-paḍai, Species of Coldenia; செருப்படைவகை. ஆண்-தகை (ஆண்டகை) °takai, Manliness; ஆண்தன்மை (சீவக. 289). Man of great eminence; பெருமையிற் சிறந்தோன். ஆண்-தண்டு °taṇḍu, Small gristly protuberance of the right ear; வலக்காதின் தண்டு. ஆண்-தருப்பை °taruppai, Male quitch grass; புல்வகை. ஆண்-தலை (ஆண்டலை) °talai, Fabulous bird of prey with a head like man's; ஆண்மகன் தலைபோன்ற தலையுடையதாகச் சொல்லப்படும் ஒரு புள் (மணி. 6,77). Gallinaceous fowl, cock or hen; கோழி. Non-flowering

tree; புவாது காய்க்கும் மரம். ஆண்டலை-அடுப்பு °°aḍuppu, A kind of engine on the ramparts, darting forth missiles which pick at and eat the brains of enemies, like an āṇḍalai; ஒரு மதிற்பொறி. ஆண்டலைக்-கொடி °°koḍi, Flag displaying the āṇḍalai for scaring away evil spirits from the offerings on the altar; ஆண்டலைப் பறவை எழுதிய கொடி. Flag of Skanda with the figure of a cock; சேவற்கொடி. ஆண்-தொழில் °toḻil, Heroism, heroic act; வீரம், வீரச்செயல். ஆண்டொழின்-மைந்தன் °°maintaṉ, Arjuna as a hero; அருச்சனன். ஆண்-நாள் (ஆணுள்) °nāḷ, Principal feast; முக்கிய திருநாள் (Astrol.) Male nakṣatras, viz: பரணி, கார்த்திகை, உரோகிணி, புனர்பூசம், அத்தம், அனுஷம், திருவோணம், பூரட்டாதி, உத்தரட்டாதி (விதானமாலை, பஞ்சாங்க. 17). ஆண்-பனை °paṉai, Male palmyra; காயாப்பனை. Borassus flabelliformis; தாளிப்பனை. Sage-leaved alangium; அழிஞ்சில். ஆண்-பாடு °pāḍu, Membrum virile (modest); ஆண்குறி. Male energy; ஆண்குணம். Man's affair or work; ஆண்மக்கள்முயற்சி. ஆண்-பாத்தி °pātti, Crystallizer in salt pans; உப்புப் பாத்தி வகை. ஆண்-பால் °pāl (Gram.) Masculine singular of personal nouns and verbs; ஐம்பாலுள் ஒன்று (நன். 325). ஆண்பால்-எழுத்து °°eḻuttu, The five short Tamil vowels; அ, இ, உ, எ, ஒ (இலக். வி 773, உரை). ஆண்பாற்-பிள்ளைத்தமிழ், °பாட்டு °°piḷḷaittamiḻ; °pāṭṭu, Poem celebrating the ten different stages of the childhood of a hero. See piḷḷaittamiḻ; ஆண்குழந்தைக்குரிய பிள்ளைத்தமிழ். ஆண்-பிள்ளை °piḷḷai, Male child; ஆண்குழந்தை. Man, husband; புருஷன். Warrior; வீரன். Man of ability, strength of character; சமர்த்தன், நிறையுடையோன். ஆண்பிள்ளைச்-சிங்கம் °°ciṅkam, Heroic, intrepid man; வீரன். ஆண்-மகன் °makaṉ, Son, man; ஆண்குழந்தை, புருஷன். Man of courage; ஆணிற் சிறந்தோன் (நாலடி. 38௭). ஆண்-மரம் °maram, Class of trees with hard, solid interior; உள்வயிரங் கொண்டமரம். Marking-nut tree; சேமரம். Sage-leaved alangium; அழிஞ்சில். ஆண்-மாரி °māri, Masculine woman, Amazon; அடக்காப் பிடாரி. ஆண்-வசம்பு °vacampu, Sweet flag with bristles; திரும்புறுள்ள வசம்பு. ஆண்-வழி °vaḻi, Family discent in the male line; ஆண்சந்ததியில் உண்டான பரம்பரை.

ஆண்மை āṇmai, *n.* [id. + *-mai*[2]] 1. Controlling power; ஆளுந்தன்மை (தொல். சொல். 57). 2. Conquest, success; வெற்றி. 3. Manliness, intrepidity; ஆண்தன்மை (சிலப். 6, 56). 4. Pride; அகங்காரம். —CPD ஆண்மையி'லி °ili, Feminity; பெண்தன்மை.

-ஆண்மை -āṇmai, *suff.* [id.] A stem-suffix signifying possession; உடைமையைக் குறிக்கும் ஒரு சொல்விகுதி. உ-ம்: 'புல்லறிவாண்மை' (குறள், 331).

ஆண்ட āṇḍa, *pple* [fr. *āḷ*, 'to rule'—ஆள்-தல்] —CPDS ஆண்டவ'ரசு °aracu, Tiru-nāvukkaracu-nāyaṉār whom Siva made his own; திருநாவுக்கரசுநாயனார் (பெரியபு. திருநாவு. 201). ஆண்டவ'ன் °avaṉ, Master; உடையவன். God; கடவுள். ஆண்டா'ர் °ār, [honorific *pl.*] Owner, lord; உடையவன். ஆண்டா'ள் °āḷ, A Vaishṇava saint; சூடிக்கொடுத்த நாய்ச்சியார். ஆண்டான்-மல்லிகை °°mallikai, A species of jasmine; மல்லிகை வகை. ஆண்டா'ன் °āṉ, = āṇḍavaṉ; = ஆண்டவன்.

ஆண்டி āṇḍi, *n.* [prob. fr. *āṇḍavaṉ* cf. பழனியாண்டி] 1. A class of non-Brahman Saivas; பண்டாரம். 2. Mendicant dressed in yellow; பரதேசி. 3. A masquerade dance; வரிக்கூத்துவகை (சிலப். 3, 13 உரை). —CPD ஆண்டித்-தாரா °tārā, A species of duck; தாராவகை.

ஆண்டிச்சி āṇḍicci, *n.* [id.] Feminine of above; முன்னதன் பெண்பால்.

ஆண்டு[1] āṇḍu, *n.* [fr. *āḍ-u*, 'Aries', the year having been prob. computed fr. that sign.— < ஆடு, 'மேடஇராசி'] 1. Year; வருஷம் (சிலப். 1, 24). 2. Year of the Kollam era in Malabar; கொல்லமாண்டு. 3. Age; பிராயம். —CPDS ஆண்ட'ளப்பான் °aḷappāṉ, The planet Jupiter which takes one year to pass through one sign of the zodiac; வியாழன். ஆண்டு-நிறைவு °niṟaivu, First birthday; குழந்தைகளின் முதல் அப்த பூர்த்தி நாள் (விதானமாலை, மைத்ர். 12). ஆண்டு-மாறி, °மூஞ்சி, °māṟi, °mūñci [+*mūñci* fr. *mūy* in the following cpd] A term of reproach, meaning one who has passed the period of progressing; ஒரு வசைச்சொல். ஆண்டு-மூய °mūya [+*mūy*, fr. *mūḍ-u*, 'to close'] To be past the period of progress; விருத்தியற.

M. *āṇḍu*; Tel. *ēḍu*; pl. *ēṇḍlu*.

ஆண்டை[1] āṇḍai, *adj.* [V. *āḍḍai*] Belonging to an year; வருஷத்துக்குரிய. ஆண்டைச்-சிகை °cikai [+*cikai*, 'remainder'] Account of arrears or balance for the year; வருஷ பாக்கிக் கணக்கு.

ஆண்டு[2] āṇḍu, *n.* [perh. corrupted fr. *avviḍam*, cf. *āṇḍai* below and Tel. *āḍa*] That place; அவ்விடம் (குறள், 363).

ஆண்டை[2] āṇḍai, *n.* [id.] That place; அவ்விடம் (நாலடி. 91).

ஆண்டை[3] āṇḍai, *n.* [fr. *āḷ*. Cf. *āṇḍavaṉ* *āṇḍi* — < ஆள்-தல்] Master, landlord, a term used by low castes with reference to their feudal chiefs; இழிக்குலத்தோர் தம் எசமானரை விளிக்குஞ் சொல். (Prov.) "ஆண்டை கூலியைக் குறைத்தால் சாம்பான் வேலையைக் குறைப்பான்".

ஆண்டைச்சி āṇḍaicci, *n.* [id.] Feminine of above; முன்னதன் பெண்பால்.

ஆண்டையர் āṇḍaiyar, *n.* [*pl.* of id.] Masters, men; தலைவர், மனிதர்.

ஆண்டை[4] āṇḍai, *n.* Indian turnsole; தேட்கொடுக்கி.

ஆண்மை āṇmai, V. *āṇ*; ஆண் பார்.

ஆணகம் āṇakam, *n.* [Tel. *ānugamu*] Calabash; சுரை.

ஆணகங்காய் āṇakaṅkāy, = *āṇaṅkāy*, V. *āṇ*; = ஆணங்காய். ஆண் பார்.

ஆணத்தி āṇatti, *n.* [Pkt. *āṇatti* < S. *ājñapti*, 'order' See *āññai*—ஆஞ்ஞை] Command; கட்டளை (S. I. I. iii, 93).

ஆணம்[1] āṇam, *n.* [fr. *aṇ-ā*, 'to bring near, mix'— < அணை-த்தல்] 1. Broth; குழம்பு. 2. Vegetable relish in soup; குழம்புத்தான். 3. Love; சேயம் (கலித். 1). 4. Desire; ஆவல் (திவ். பெரியாழ். 5,2,3). 5. Support; பற்றுக்கோடு (திவ். திருச்சந். 69). 6. Vessel; கொள்கலம்.

ஆணம்[2] āṇam, *n.* [prob. fr. *aṇ-u*— < அணு] Smallness, meanness; சிறுமை (கந்தபு. வீரவா. சக. 39).

S. *aṇaka*, *āṇaka*.

-ஆணம்[3] -āṇam, *suff.* [prob. fr. *āḷ*, 'to sway'—ஆள்-தல்?] A stem-suffix signifying 'the state of being swayed, full'; 'நிறைந்தது' எனும் பொருளுள்ள ஒரு சொல்விகுதி. உ-ம்: "கலியாணம்".

ஆணர்[1] āṇar, *n.* [aph. of *yāṇar*—யாணர்] 1. Fulness, prosperity; வளமை. 2. Goodness; நன்மை.

ஆணர்[2] āṇar, *n.* [perh. fr. *yāḻ*, 'lute'—யாழ்-நர்?] Panegyrists, singers; பாணர்.

ஆணவம் āṇavam, *n.* [<*aṇ-u*, taken back fr. S. Cf. *āṇam*[2] and S. *āṇaka*—அணுத்தன்மையுள்ளது] 1. Littleness, minuteness; மிக நுண்மை. 2. A mineral poison; கோளக பாஷாணம். 3. (Saiva) The material principle which eternally differentiates souls from the Soul; மும்மலங்களுள் ஒன்று (சி. சி. 2, 80, மறைஞா.). —CPDS ஆணவ-ப்-பிணிப்பு °piṇippu, The eternal bondage of souls; மூலமல பந்தம். ஆணவ-மறைப்பு °maraippu, Ignorance in which souls are enveloped; மூலமலத்தடை.

ஆணன்[1] āṇaṉ, *n.* [*āḷ*+-(*u*)*aṉ*[5]+<ஆள்-தல்] Manly person; ஆண்மையுடையோன்.

ஆணன்[2] āṇaṉ, *n.* [*āṇam*[1] + -*aṉ*[5]—<ஆணம்] Loving person; அன்புடையோன்.

ஆணி āṇi, *n.* [fr. *aṇi* <*aṇṇ-u*, 'to be close together, to connect, to be compressed, hard'. Cf. *aṇḍ-u*, *aṇt-u*[2]—அண்ணு-வது, அணி-வது] 1. Lynch pin; அச்சாணி (குறள், 1032). 2. Plug, wooden spike, iron nail; உளவாணி ஆதியன (தொல். எழுத். 99, உரை). 3. Style for writing; எழுத்தாணி (சிலப். 8, 55). 4. Pin of gold for testing the standard of other gold; உரையாணி. 5. Support, basis; ஆதாரம் (கம்பரா. கடறு. 27). 6. Limit; எல்லை. 7. Excellence, great beauty; மேன்மை, பொலிவு. 8. Desire; ஆசை (திவ். பெரியாழ். 5, 2, 3). —CPDS ஆணி-ப்-அச்சு °accu, Nail plate; ஆணி செய்யும் அச்சு. ஆணி-இட °iḍa, To have the eyes fixed, at the approach of death; கண் நிலைக் குத்த. ஆணிக்-கல் °kal, Standard weight for gold; பொன் நிறைகல் (S. I. I. i, 117). ஆணி-க்-குருகு °kuruku, [+*kur-uku*, 'whiteness'] White of the soles; உள்ளங்காலின் வெண்பாகம். ஆணி-க்-குருத்து °kuruttu, Heart of a palmyra or coconut shoot; அடிக்குருத்து. ஆணி-க்-கொள்ள °koḷḷa, To make one's position firm; நிலை பரத்தை ஸ்திரப்படுத்த. =āṇi-iḍa; =ஆணியிட. ஆணிக்-கோவை °kōvai, String of gold pins for testing gold; உரையாணி கோத்த மாலை. ஆணி-ச்-சவ்வு °cavvu, Cornea of the eye; விழிப் படலம். ஆணி-ச்-சிதல் °cital, Core of suppurating ulcer; சீழ் பிடித்த புண்ணின் கறு வயிரம். ஆணி-ச்-சீ °cī [+*cī*, for *cital*, 'white ant'] Mother of white ants; தாய்க் கறையான். ஆணி-ச்-செருக்கம் °cerukkam, A prepared arsenic; இலவண பாஷாணம். ஆணி-த்-தரம் °taram, Finest quality; முதற்றரம். Firmness; உறுதி. ஆணி-ப்-புண் °puṇ, Carbuncle; உள்ளாணியுள்ளபிளவைக்கட்டி. ஆணி-ப்-பூ, பூடு, °pū, °pūḍu, Leucoma; கண்ணில் விழும் வெள்ளை. ஆணி-ப்-பொன் °poṉ, Gold of the finest quality; உயர் மாற்றுப் பொன். ஆணி-மலர் °malar, Head of a nail; ஆணியின் குடை. ஆணி-முத்து °muttu, Pearl of the best quality; கொட்டை மான முத்து. ஆணி-வேர் °vēr, Taproot; மூலவேர். Pivot; யாதொன்று நின்றுடும் ஆதாரம். உரல்ஆணி ural°, Pestle; உலக்கை. Block set into the mortar; அடி உரலை அடைக்கும் கட்டை. உரை° urai°, Golden pin for assaying gold; பொன்மாற்றறியும் பொன்னூசி. கட்டு° kaḍḍ(u)°, Pin for ear-rings; கடுக்கனைக்கிடும் குச்சு. கடை° kaḍai°, Linch-pin; அச்சுக்கிடும் தாழ். கால்° kal°, Corn in soles or toes; பாதத்திலுண்டாகும் ஆணி போன்ற வளர்ப்பு. Pegs fixed for supporting roofs; கூரையைத் தாங்கும் கட்டை. கை° kai°, Nail for joining the spars of a roof; கூரையின் கைமரங்களை இணைக்கும் ஆணி. குடை° kuḍai°, Nail with a head; தலையிற் குமிழ் கொண்ட ஆணி. குமிழ்° kumiḻ°, Do; ஷை. கூர்° kūr°, A pick; நீண்ட உதவும் ஆணி. சடை° caḍai°, =kuḍaiyāṇi; =குடையாணி. சுள்° cuḷ°, Very small nail; மிகச் சிறிய ஆணி. திருகு° tiruk(u)°, Screw; சக்குப்புரி. பட்டு° paḍḍ(u)°, Clasp; பற்றிப் பிடிக்கும் கொக்கை. மார்பு° mārpu°, Principal nail; முக்கியமான ஆணி. A kind of venereal eruption on the breast; மார்பில் உண்டாகும் ஒருவகை இரணம். வேம்பு° vēmp(u)°, =cuḷḷā'ṇi =சுள்ளாணி.

M., Tel., K. *aṇi*; Sinh. *āṇa*, *āṇē*; S. *āṇis*, 'linch pin'. In this sense this word is certainly DR, as already noted by Caldwell and Kittel. The P. Dictionary derives it fr. *aṇu*, 'fine, thin', connecting it with OHG *lun*, G. *lünse*, AS *lynes*, E. *linch* &c. *Aṇu* itself is prob. DR. In the sense of 'part of the leg above the knee', it is prob. from another source.

ஆணிக்கை āṇikkai, *v.* [id.] Certainty; நிச்சயம்.

-ஆணி[2] -āṇi, *suff.* [fr. *aṇṇ-u* or *aṇ*] A stem-suffix showing excessiveness; மிகைத்தைக்குறிக்கும் ஒரு கடைநிலை. உ-ம்: "அருக்காணி".

ஆணி[3] āṇi, *n.* [fr. *aṇ-ai*, 'support'—<அணை] Bed; சயனம்.

ஆணியம் āṇiyam, [=*āṇiyam*— =ஆனியம்] Daily allowance, batta; ஊட்படி.

ஆணு āṇu, *n.* [*āṇ-am*[1]—ஆணம்[1]] 1. Attachment; நேயம் (சீவக. 1002). 2. Agreeableness, sweetness; இனிமை. 3. Goodness; நன்மை. 4. Quicksilver; இரசம்.

ஆணை[1] āṇai, *n.* [Pkt. *āṇā* <S. *ājñā*—ஆஞ்ஞா] 1. Command, edict; கட்டளை, இராச உத்தரவு (மணி. 14,76). 2. (Saiva) Energy of Siva; சிவபிரானது சிற்சத்தி (சி. போ. 2). 3. Exercise of sovereign power; இராச அதிகாரம் (சி. சி. 2,31). 4. Insignia of authority; அதிகார இலாஞ்சனை. 5. Conquest; வெற்றி. 6. Usages sanctioned by authority; ஆன்றோர்மரபு (மதுரைக். 761). —CPDS ஆணை-இட[1] °iḍa, To issue an order; கட்டளையிட. ஆணை-ஓலை °ōlai, Royal edict; கட்டளைத் திருமுகம் (திருக்கோ. 327, உரை). ஆணை-ச்-சக்கரம் °cakkaram, Royal authority; இராசாக்ஞை தத்துவம். ஆணை-ப்-பெயர் °peyar, Name given to a hero for instilling fear in the minds of the valiant; வலியோர்க்கு அச்சம் பேணி உலகம் பேசும் பெயர் (பன்னிரு. 149). ஆணை-வழி-நிற்றல் °vaḻi-niṟṟal, Living in obedience to constituted authority, a virtue ascribed to the Vēḷāḷas; வேளாண் மாந்தர் ஒழுக்கங்களுள் ஒன்று (திவா.)

ஆணை[2] āṇai, *n.* [prob. < *aṇ-ai*. Cf. *aṇai-kaḍḍippēca*—அணை கட்டுதல்] 1. Oath, swearing; சத்தியம் செய்தல். உ-ம்: "அப்பனாணை". 2. Vow; சபதம். 3. Truth; உண்மை. —CPDS ஆணை-இட[2] °iḍa, To take an oath; சத்தியம் பண்ண. ஆணை-விட °viḍa, To release from an oath; சூளுரைவ நீக்க.

ஆத்தம் āttam, *n.* [S. *āp-ta*, 'obtained, true', fr. *āp*, T. *app-u*[2]] 1. Devotion, friendship; பற்றுதல், அன்பு. 2. Conducting oneself so as to please one's guru; குரு சேவைகளுள் ஒன்று (வேதா. சூ. 12). —CPD ஆத்த-வாக்கியம் °vākkiyam, Scriptures as containing authoritative teaching; வேதசாஸ்திரங்கள். Word of a friend; நட்பாளர் மொழி.

ஆத்தன் āttaṉ, *n.* [id.+ -*aṉ*[5]] 1. Trustworthy person; நம்பத்தக்கவன்.

2. Friend; இட்டன் (திவ். திருவாய். 1,6). 3. Arhat; அருகன். 4. The Divine Being; கடவுள்.

**ஆத்தா**[1] ātta, V. *āttāḷ*; =ஆத்தாள்.

**ஆத்தா**[2] āttā, *n.* [Mexican name *atē*, brought by the Portuguese. S. made *ātripya* out of it] 1. Bullock's heart; இராம சீத்தா. 2. Custard apple; சீத்தாப்பழம்.

**ஆ-த்-தாடியுள்ளான்** ā-t-tāḍiyuḷḷāṉ, *n.* [*ā*, 'cow' + *tāḍi*, 'hanging excresence'—ஆ[4]+தாடி] A kind of becassine; ஒரு குருவி, உள்ளான் குருவி.

**ஆத்தாரமூத்தான்** āttāramūttāṉ, *n.* [Cf. *āṟṟuppūttāṉ*] Cowhage; பூனைக்காலி.

**ஆத்தாள்** āttāḷ, *n.* [*attāḷ*— < அத்தாள்] Mother; தாய்.

M. *attōḷ*; Sinh. *atta, ata*.

**ஆத்தான்** āttāṉ, *n.* [=*āttaṉ*—ஆத்தன்] Superior person; பெரியோன்.

P. *attu*, 'father'.

**ஆத்தானம்** āttāṉam, *n.* [V. *āstāṉam* =ஆஸ்தானம்] 1. Hall of audience; இராசசபை. 2. Gate of a tower as a place of audience; கோபுர வாயில்.

**ஆத்தாணி** āttāṇi, *n.* [id.] V. *attāṇi*; =அத்தாணி.

**ஆத்தானம்**[2] āttāṉam, *n.* [prob. for *āṟṟā-mai*=ஆற்றாமை] 1. Great need, danger; அத்தரம், ஆபத்து (Coll.) 2. Effort; பிரயாசம்.

**ஆத்தி**[1] ātti, *n.* 1. Common mountain ebony: Bauhinia racemosa; மாவகை. 2. Holy mountain ebony: Bauhinia tomentosa; திருவாத்தி. —CPD **ஆத்தி-சூடி** °cūḍi, Siva as wearing a garland of ātti flowers; சிவன். Name of a work beginning with this word; ஒரு நீதி நூல்.

**ஆத்தி**[2] ātti, V. *āsti*; =ஆஸ்தி.

**ஆத்தி**[3] ātti, *n.* [S. *āp-tis*, V. *āttam*—ஆத்தம் பார்] 1. Obtaining; அடைகை. 2. Gain; இலாபம். 3. Connection; சம்பந்தம்.

**-ஆத்தி**[4] -ātti, *suff.* [*fem.* of *āṉ*. Cf. *-āḍḍi*] A feminine stem-suffix; பெண்பால் குறிக்கும் கடைநிலை. உ-ம்: "வண்ணாத்தி" (வீரசோ. தத்தித. 5).

**ஆத்திக்கனி** āttikkaṉi, *n.* Long-rooted arum; வெருகஞ் செடி.

**ஆத்திக்கியம், ஆத்திகம்** āttikkiyam, °kam, *n.* V. *āstikam*—=ஆஸ்திகம்] 1. Belief in the existence of a Supreme Being; கடவுள் உண்டென்னும் விசுவாசம். 2. Devotion to God; தேவபக்தி.

**ஆத்திகன்** āttikaṉ, *n.* [id.] One who believes in the existence of God; கடவுள் உண்மையைக் கைக்கொள்ளுவோன்.

**ஆத்தி-கேடு** ātti-kēḍu, *n.* [prob. fr. *āṟṟ-i* + *kēḍ-u*, Cf. *āttāṉam*[2]—ஆற்றி+கேடு] 1. Incapacity; ஆற்றாமை. 2. Poverty; தரித்திரக்கேடு.

**ஆத்திசூலை** ātticūlai, *n.* A disease of horses causing frequent evacuation of the bowels; குதிரைநோய்வகை.

**ஆத்திட்டி** āttiḍḍi, *n.* Species of hygrophila; நீர்முள்ளி.

**ஆத்திய'ந்தம்** āttiy'antam, *n.* [*āti* + *antam*—ஆதி + அந்தம்] Beginning and end; தொடக்கமும் முடிவும்.

**ஆத்தியந்திகப்-பிரளயம்** āttiyantikap-piraḷayam, *n.* [id.+S. *pra-layas*, 'dissolution', fr. *lī*, T. *aḷi*—பிரளயம், அழிவு] Final deluge; சர்வ சங்காரம்.

**ஆத்தியன்** āttiyaṉ, *n.* [*āti* + *-aṉ*[5]—ஆதி] Siva; சிவன்.

**ஆத்தியை** āttiyai, *n.* [*fem.* of above] Durgā; துர்க்கை.

**ஆத்தியா'த்துமிகம், °ஆன்மிகம்** āttiy'āttumikam, °āṉmikam, *n.* [*ati*-[3] + S. *ātm-ika*, 'belonging to the nature of a thing', fr. *ātman*, 'self'—அதி-[3] + ஆத்துமம்] Evil due to one's own acts; தன்வினைபற்றி வரும் துன்பம். —CPD **ஆத்தியாத்துமிக-சாத்திரம்** °cāttiram, V. attiyāṉmika-nūl;=அத்தியான்மிக-நூல்.

**ஆத்தியோ'பா'ந்தம்** āttiy'ōpā'ntam, *n.* [*āti*+*upa*+*antam*— ஆதி+உப+அந்தம்] What is from beginning to end; தொடக்கமுதல் கடைசிவரையுள்ளது.

**ஆத்திரகம், °தம்** āttirakam, °tam, *n.* [S. *ārdr-akam*, 'what is not dry', fr. *ārdra*. Cf. T. *īr-am*] Ginger; இஞ்சி.

**ஆத்திரம், ஆத்திரவம், ஆத்திரி, ஆத்திரியம்** āttiram, āttiravam, °tiri, °tiriyam, *n.* [perh. connected with *ārttal*, fr. which *ārttut-tiri*? Cf. *ārttup-para*—ஆர்த்துத்திரி?] 1. Eager haste; பரபரப்பு. 2. Hastiness of temper; கோபவிரைவு.

M. *attaram*; Tel. *āturamu*, *aturata*. Prob. not connected with S. *atura*.

**ஆத்திரேயன்** āttirēyaṉ, *n.* [*Attiri*—அத்திரி] 1. A descendant of Atri; அத்திரி குலத்திற் பிறந்தவன். 2. Moon; சந்திரன்.

**ஆத்திரேயி** āttirēyi, *n.* [S. *ātrēyas*, 'an essential humour of the body'] Woman in her courses; பூப்புள்ளவள்.

**ஆத்திரை** āttirai, *n.* [aph. of *yāttirai* — =யாத்திரை] Pleasure trip; பொழுது போக்குப் பயணம்.

**ஆ-த்-திரைப்-பாட்டம்** ā-t-tiraip-pāḍḍam, [*ā*[4] + *tirai* + *pāḍḍam*] Tax on cattle; கால்நடை வரி (I. M. P. Cg. 135).

**ஆ-த்-தின்னி** ā-t-tiṉṉi, *n.* [*ā*[4] + *tiṉṉi*] Bard of the Pāṇar caste; பாணன் (திருக்கோ. 386).

**ஆத்துமம்**[1] āttumam, *n.* [S. *ātman*, 'wind, breath, life'. Origin very obscure. Walde—P. suggests a hypothetical *etmen*. Cf. T. *eri*, 'to blow as wind'] 1. Life; உயிர். 2. Living being; சீவஜந்து, பிராணி. 3. (Chr.) Soul; மாறாட உயிர். 4. Intelligence, self; புத்திதத்துவம், தான் என்பது. 5. Fire, sun; நெருப்பு, சூரியன். —CPDS **ஆத்துமா'ர்த்தம்** °arttam, Anything done for the sake of one's self; தற்பிரயோசனம் கோக்கிச் செய்வது. **ஆத்தும-கத்தியை** °kattiyai, Suicide; தற்கொலை. **ஆத்தும-கனனம்** °kaṉaṉam, [+id.] Do.; டை. **ஆத்தும-காதம்** °kātam, Do.; டை. **ஆத்தும-குப்தா** °kuptā [S. *atma-guptā*] Cowhage; பூனைக் காலிச் செடி. **ஆத்தும-சன்** °caṉ, Son; புத்திரன். **ஆத்தும-சுத்தி** °cutti, Purification of one's self; ஜீவ சுத்தி. **ஆத்தும-சை** °cai, Daughter; புத்திரி. **ஆத்தும-ஞானம்** °ñāṉam, Self-knowledge; தன்னை அறிதல். **ஆத்தும-தத்துவம்** °tattuvam, Faculties of the soul; மனம் புத்தி சித்தம் ஆதியன. **ஆத்தும-த்-தோழன்** °tōḻaṉ, Intimate friend; உற்ற நண்பன். **ஆத்தும-தரிசம், தரிசகம்** °taricam, °taricakam, Mirror; கண்ணாடி. **ஆத்தும-தரிசனம்** °taricaṉam, Knowing one's self; தன்னையறிதல். **ஆத்தும-நிவேதனம்** °nivētaṉam, Sacrifice of one's life; தன்னைப் பலியாக்குதல். **ஆத்தும-புத்தர்** °puttar,=āttuma-kuptā;=ஆத்தும குப்தா. **ஆத்தும-புத்தி** °putti, Knowledge of one's self; தன்னறிவு. **ஆத்தும-பூ** °pū, [+S. *-bhū*, 'taking rise from'] Brahmā, Vishnu, Siva, Kāmaṉ; பிரமா, விட்டுணு, சிவன், காமன். **ஆத்தும-போதம்** °pōtam, =āttuma-putti; =ஆத்தும-புத்தி. **ஆத்தும-யோனி**

°yōni,=āttuma-pū; ஆத்தும-பூ. ஆத்தும-ராமன் °rāmaṉ [+ S. rām-a, 'pleasing'] One who is self-satisfied; தன்னில் திருப்தியுள்ளவன். ஆத்தும-லக்ஷணம் °lakṣaṇam, Natural qualities of the soul, viz: சத்து, existence; சித்து, intelligence; ஆனந்தம், happiness. ஆத்தும-வசன் °vacaṉ, One who controls one's self; தன்னை அடக்கிக்கொள்பவன்.

ஆத்துமீயம் āttumīyam, *n.* [id. S. *ātmiya*] What belongs to oneself; தன்னுடையது.

**ஆத்துமம்**¹ āttumam, *n.* Galangal; அரத்தை.

**ஆத்துமா** āttumā [V. *āttumam*— =ஆத்துமம்] 1. Wind; காற்று. 2. Fire; அக்கினி. 3. Sun; சூரியன். 4. Body; உடம்பு. 5. Firmness; உறுதி. 6. Living being; பிராணி. 7. Self; தான். 8. Brahman; பிரமம். 9. Son; மகன். 10. Young bear; கரடிக்குட்டி.

**ஆத்தை** āttai, *n.* [=*āttāḷ*— =ஆத்தாள்] Mother; தாய். [*int.*] An exclamation expressive of surprise, fright, or pity; அதிசய, அச்ச, இரக்கங் குறிக்கும் விளி.

**ஆத்ம-** ātma-, *adj.* [*āttumam*—ஆத்துமம்] —CPDS [See also under *āttumam*—ஆத்துமமும் பார்] ஆத்மவ்-அதிகா'சனம் °atikā'caṉam, A yogic posture; கல்லாசனம் என்னும் யோக இருக்கைவகை. ஆத்மா'பகாரம் °apakāram, Misapprehension about the nature of Ātman; பரப்பிரமத்தின் சுபாவத்தை வேறாக நினைத்தல். Thought that the soul is independent of God; சிவனைச் சுவதந்திரமாக நினைத்தல். ஆத்மா'னந்தம் °āṉantam, Rejoicing in oneself; தனக்குள மகிழ்வு. Joy arising from one's knowledge of oneself; தற்போதத்தால் உண்டாகும் மகிழ்ச்சி. ஆத்மா'னுபவம் °aṉupavam, Self-realization; தன்னைத் தான் கண்டுகொள்ளல். ஆத்ம-க்-கியாதி °kiyāti, One of the 5 kiyātis; கியாதி ஐந்தனுள் ஒன்று. ஆத்ம-சக்தி °cakti, Soul-force; உயிர் ஆற்றல். ஆத்ம-சிநேகிதன் °cinēkitaṉ, Bosom friend; உயிர்த்தோழன். ஆத்ம-சௌசம் °caucam, Purity of mind; அகத்தூய்மை. ஆத்ம-நாசம் °nācam, Losing one's soul through misconduct; தன்னைக் கெடுத்துக் கொள்ளுகை. ஆத்ம-பந்து °pantu, Friend or relation in the spiritual sense; ஆன்மாவின் உறவிச்சுற்றம். (Legal) One's own relation such as father's sister's son, mother's sister's son etc.; அத்தை மகன் அம்மான் மகன் ஆகியோர்.

ஆத்ம-ரூபம் °rūpam, Spiritual experience of the soul, when, freed from corruptions, it discovers that its form is intelligence; தசகாரியத் தொன்று (சிவப். கட்.). ஆத்ம-ஸ்தோத்திரம் °stōttiram, Self-praise; தற்புகழ்ச்சி. ஆத்ம-ஹத்தி °hatti, V. āttuma-kattiyai; =ஆத்தும கத்தியை.

-ஆத்மிகம் -ātmikam, *n.* [S. -*ātmya*] What belongs to self, what has the nature of; தன்னைப் பற்றியது, தற்சுபாவமுள்ளது. உ-ம்: "ஆத்தியாத்மிகம்".

**ஆ-தங்கம்** ā-taṅkam, *n.* [S. *ā-taṅk-as*, 'disease', said to be fr. *tañc*, cf. T. *tañc-am*] 1. Disease; நோய். 2. Grief; துக்கம். 3. Fear; அச்சம். 4. Sound of drum; முரசோசை.

ஆ-தஞ்சனம் ā-tañcaṉam, *n.* [id.] 1. Calcination; சாம்பராக்குகை. 2. Curdling; உறையச் செய்தல். 3. Destruction; அழித்தல். 4. Poisoning; நஞ்சூட்டுகை. 5. Affliction; துன்பம். 6. Velocity; வேகம்.

**ஆதண்** ātaṇ, V. *ātaṉ*³; =ஆதன்³.

**ஆதண்டை** ātaṇḍai, V. *ātoṇḍai*; =ஆதொண்டை.

**ஆ-ததாயி** ā-tatāyi, *n.* [S. *ā-tatāyin*, One who stretches (a bow), fr. *taṉ*. Cf. T. *tāṇḍu*] Desparado; கொடியவன் (குறள், 550 உரை).

**ஆ-தபம்** ā-tapam, *n.* [S. *ā-tap-as*, 'heat of the sun', fr. *tap*, cf. T. *ti*] 1. Sunshine; வெயில் (ஞானா. 63). 2. Heat; உட்டணம். 3. (Jaina) A pirakiruti; பிரகிருதிகளின் ஒன்று (மேரு. 165). —CPDS ஆதப-த்-திரகம் °tirakam [+S. -*tra*, 'protecting', said to be fr. *ter*. Cf. T. *tuṟ-a*+-*kam*, for diminutive] Small umbrella; சிறு குடை. ஆதப-த்-திரம் °tiram, [id.] Umbrella; குடை. ஆதப-யோகம் °yōkam, A condition in which the yōki is able to withstand the burning heat of the sun; வெயிற் கடுமை தாங்கும் யோகநிலை (மேரு. 619, உரை). ஆதப-வாரணம் °vāraṇam, =ātapat-tiram; =ஆதபத்-திரம்.

ஆ-தபன் ā-tapaṉ, *n.* [id. + -*aṉ*⁵] Sun; சூரியன்.

**ஆதம்**¹ ātam, *n.* [prob. fr. *att-u*, 'to approach, unite'—அத்து-தல்] 1. Regard, love; அன்பு (கந்தபு. திருக்கல்யா. 11). 2. Protection, prop.; ஆதரவு (திருவாச. 31, 5). —CPD ஆதம்பாதமில்லாதவன் One who is destitute of protection or support.

**ஆதம்**² ātam, *n.* Bastard sago; கூந்தற் பனை.

**ஆதம்பேதி** ātampēti, *n.* Species of Indigofera; செப்பு நெருஞ்சி.

**ஆதமர்ணிகப்-பொருள்** ātamarṇikap-poruḷ, *n.* [S. *ādhamarṇya*, 'state of being indebted', fr. *adhama*+*riṇam*, 'debt'—அதம-இருணம்] Money lent; கடன் கொடுத்த பொருள் (சுக்கிரநீதி, 97).

**ஆதரணை** ātaraṇai, *n.* [Cf. *ātaravu*. It may, however, be fr. S. *ā-dharaṇam* or vice versa] Help, shelter; ஆதரவு (கந்தபு. கீர். 31, 18).

**ஆதரம்**¹ ātaram, *n.* [Cf. *ātaravu*, below] 1. Regard, love; அன்பு. 2. Hospitality; உபசாரம். 3. Desire; ஆசை. —CPD ஆதரா'திசயம் °aticayam, Great regard; பேரன்பு.

**ஆதரம்**² ātaram, *n.* [prob. S. *ā-dhār-as*, 'location', fr. *dhṛi*. Cf. T. *poṟ-u*] Town, village; ஊர்.

**ஆதரவு** ātaravu, *n.* [prob. fr. *ātam*¹ + -*aravu*] 1. Love; அன்பு (கந்தபு. மார்க். 21). 2. Comfort; தேற்றரவு. 3. Protection; உதவி. 4. Support, prop; பொறுப்பு. —CPDS ஆதரவு-ச்-சீட்டு °ciḍḍu, Voucher; உத்தரவாதத் தாள். ஆதரவு-சொல்ல °colla, To comfort; தேற்றரவு செய்ய.

The S. *a-dar-as* is prob. from a different source, though it and the T. *ataravu* seem to have been influenced one by the other.

ஆதரிக்க ātarikka, *v.* [*ātar-am* < *ātar-avu* + -*i*⁷] 1. To treat with regard; உபசரிக்க. 2. To wish for; ஆசைகூர. 3. Protect; பாதுகாக்க. 4. [for *ā-cari*] To worship, solemnize; வழிபாடுசெய்ய.

**ஆ-தரிசம், °சனம்** °ā-taricam, °caṉam, *n.* [S. *ā-darś-as*, 'looking glass', fr. *dṛiś*. Cf. T. *teḷ-i*] Mirror; கண்ணாடி.

**ஆதல்**¹ ātal, *n.* [prob. + < *ahku-tal* —அஃகு-தல்] 1. Minuteness; அணுக்கம். 2. Treatise, by meton. Cf. *nūl*⁷; நூல். 3. [Cf. *āḍal*] Dance; கூத்து. 4. [Cf. *āval*] Desire; ஆசை. 5. Vision; தரிசனம்.

**ஆதல்**² ātal, *conj.* [fr. *āku-tal* =*āka* (4)— =ஆக(4)] Either......or; ஒன்றில்....ஒன்றில். உ-ம்: "ஆலாத்திருதல் அனைத்துலாம் பொன்னிறுதல்" (கம்பரா. தாடகை. 65).

**ஆதலால்** ātalāl, *adv.* [*āku-tal* + -*āl*⁸] Therefore; அப்படியிருக்கின்றதன் நிமித்தம்.

**ஆதலை** ātalai, *n.* [prob. for *ātaram*[1]—ஆதாரம்[1]] Help, protection; உதவி, காப்பிப்பு. ஆதலைக்கேட்டவன், A destitute person.

**ஆதவம்** ātavam, V. *ātapam* = ஆதபம்.

**ஆதவன்** ātavan, *n.* [id.] 1. Sun; சூரியன். 2. Sunflower; சூரியகாந்தி. 3. Brahman versed in the Vedas; வேதியன்.

**ஆதளை** ātaḷai, *n.* [*a*-[3] + *taḷ-am*, 'basis', according to Katiravel Pillai] 1. Fatigue; ஆயாசம். 2. Pomegranade; மாதுளை. 3. Resin; பிசின். 4. Castor plant; ஆமணக்கு. 5. Common physic-nut: Jatropha curcas; காட்டாமணக்கு வகை. —CPDS **ஆதளை-ஆட** °āḍa, To be in death-throes; மரண அவஸ்தைப்பட. **ஆதளை-பாதளை (மாதளை)** °pātaḷai (mātaḷai) [*pātaḷai*, echo-word. Tel. *ādara bādara-gā*] Bewilderment; மனக்கலக்கம்.

K. *adalu*, castor-plant.

**ஆதன்**[1] ātaṉ, *n.* [prob. fr. *ēt-aṉ*, *ē/ā*—ஏதன்] 1. Blind man; குருடன். 2. Ignorant person; அறிவிலி (திருமந். 20). 3. Soul; ஆன்மா. 4. A proper name in ancient times; பழைய காலத்து ஆண்மக்கள் பெயர் (தொல். எழுத். 348).

**ஆதன்மை** ātaṉmai, *n.* [id. + *-mai*[2]] Folly; பேதைமை (சீவ. 214).

**ஆதன்**[2] ātaṉ, *n.* [for. *āttaṉ*—ஆத்தன்] 1. Arhat; அருகன். 2. Noble person; மேன்மகன். 3. Preceptor; குரு.

**ஆதன்**[3] ātaṉ, *n.* [perh. *āttāṉam*[2] Cf. S. *ādhi*, fr. *ā-dhyai*] 1. Agony; வாதனை. 2. Disease; நோய்.

**ஆதன்மையால்** ātaṉmaiyāl, *adv.* [*āk-um* + *taṉmai* + *-āl*[6]] Therefore; ஆகையால் (திவ். பெரியதி. 2,4,9).

**ஆதனம்**[1] ātaṉam, *n.* [= *ācaṉam*; = ஆசனம்] 1. Yogic posture; யோக இருக்கையில். 2. Seat; பீடம். 3. Ground; தரை (ரகு. 3, 5, 3). 4. Nape of the elephant; யானைக் கழுத்து. 5. Buttocks; பிருட்டம். 6. Cloth; சீலை. —CPD **ஆதன-மூர்த்தி** °mūrtti, Image as the seat of a deity; விக்கிரகம். Linga; இலிங்கம்.

**ஆதனம்**[2] ātaṉam, *n.* [S. *ā-tan-am*, 'spreading', fr. *tan*. Cf. T. *tāṇḍu*] Distole; நீளுதல்.

**ஆதனம்**[3] ātaṉam, *n.* [V. *ātīṉam*—ஆதீனம் பார்] Property; ஆஸ்தி.

**ஆதஸிபீஜம்** ātasipījam, *n.* Linseed; ஆளிவிதை.

**ஆதாபாதா-எனல்** ātāpātā-eṉal, *n.* [U. *ādhābādhā*] A form of respectful greeting among the Mohammedans; முஸ்லிம்களுள் ஒரு உபசார வார்த்தை.

**ஆ-தாயம்** ā-tāyam, *n.* [S. *ā-dāya*, 'receiving', fr. *dā*, T. *tā*] 1. Profit, income; இலாபம், வரவு. 2. (Astrol.) The 11th house from the ascendant; இலக்கினத்திற்குப் பதினோராமிடம். —CPD **ஆதாயப்-பங்கு** °paṅku; Dividend; இலாபத்தின் பாகம்.

**ஆ-தாரம்** ā-tāram, *n.* [S. *ā-dhār-as*, 'support', fr. *dhri*, cf. T. *por-u*] 1. Support, basis; பற்றுக்கோடு, இடம். 2. Receptacle; கொள்கலம். 3. Source; மூலம். 4. Document proving title; ஆதாரச் சாதனம். 5. Tank, pan; ஏரி, பாத்தி. 6. The six plexuses in the body; உடம்பிலுள்ள விசேஷ இடங்கள். They are (1) மூலாதாரம், situated between the anus and the genitals; (2) சுவாதிட்டானம், in the genitals; (3) மணிபூரகம், in the navel; (4) அநாகதம், in the heart; (5) விசுத்தி, in the root of the tongue; (6) ஆஞ்ஞை, in the forehead (Winslow). —CPDS **ஆதார-க்-கம்பி** °kampi, Wallplate; சுவர்த்திராக்ஷி. **ஆதார-சக்தி** °cakti, Siva's energy; சிவசக்தி. **ஆதார-சிலை** °cilai, Basis of a pillar; தூணின் இருப்புக் கல். **ஆதார-தண்டம்** °taṇḍam, Backbone; முதுகெலும்பு. **ஆதார-பீடம்** °pīḍam, Pedestal of stone; கல்லாலான இருப்பு. **ஆதார-லக்கணை** °lakkaṇai, (Rhet.) Metonymy of the support for the thing supported; இடவாகுபெயர். உ-ம்: "கட்டில் கூப்பிட்டது" (சி. சி. பாயி. குருவணக். ஞானப்.).

**ஆதாளம்** ātāḷam, *n.* [prob. *a*-[3] + *tāḷ-am*] Immeasurable depth; மிக்க ஆழம். —CPD **ஆதாள-பாதாளம்** °pātāḷam, Bottomless pit; நரகம் (Coll.).

**ஆதாளி**[1] ātāḷi, *n.* [perh. *āḍ-u* + *-āḷi*[1], 'one who is shaken'] 1. One who is mentally confused; மனக்கலக்கமுடையவன். Agitation; கலக்கம் (கந்தரநுபூதி, 38). 2. Bustle, roar; பேரொலி. 3. Bragging; இடம்பப் பேச்சு (திருப்பு. 557). —CPD **ஆதாளி-மன்னன்** °maṉṉaṉ, Bear; கரடி.

**ஆதாளிக்க** ātāḷikka, *v.* [id.] 1. To be fatigued; இளைத்துப்போக. 2. To boast; வீம்புபேச.

**ஆதாளி**[2] ātāḷi, V. *ātaḷai*; = ஆதளை.

**ஆதானம்**[1] ātāṉam, *n.* [S. *ā-dha-nam*, 'putting near', fr. *dhā*. Cf. T. *tāḷ*] 1. Depositing; வைத்தல் (சேதுபு. அகத். 38). 2. Pledge; அடைவு. 3. Taking; எடுத்தல்.

**ஆதானிகம்** ātāṉikam, *n.* [id. + *-ika*] A ceremony for procuring conception; கருத்தரிக்கும் பொருட்டுச் செய்யுங் கிரியை.

**ஆதானம்**[2] ātāṉam, *n.* [S. *ā-dā-nam*, 'receiving', fr. *dā*, T. *tā*] 1. Receiving, seizing; கைப்பற்றுகை. 2. [*ā-dāti*] Caparisons of a horse; குதிரையணி.

**ஆதானும்** ātāṉum, *pron.* [for *yātāyiṉum*— = யாதாயினும்] Whichsoever; எதுவாயினும் (திவ். இயற். பெரியதிருவ. 25).

**ஆதி** āti, *n.* [S. *ādis*, prob. fr. T. *aḍ-i*, 'what is at the bottom' The P. dictionary considers the etym. of this word uncertain—அடி] 1. Nearness, presence; அதிட்டானம். 2. Beginning, what has a beginning; தொடக்கம் தொடக்கமுள்ளது. 3. Source, cause; காரணம் (குறள், 543). 4. Antiquity; பழைமை. 5. The first cause, applied especially to Brahmā, Vishnu, Siva, Arhat and Buddha; கடவுள். 6. Independent sovereign; தனிச்செங்கோல் நடத்துவோன். 7. Chief; அதிபன். 8. Sun; சூரியன் (பாரத. கிருட். 164). 9. (Saiva) The Lord's energy of enveloping souls in darkness; திரோதான சக்தி (சிவப்பி. 2). 10. (Mus.) Variety of time measure; ஆதி தாளம். 11. [after mentioning one thing or more, to denote others of the same category] Et cetera; முதலியன. உ-ம்: "இருக்காதிமறை". —CPDS **ஆதி-ய்-அங்-கடவுள்** °am-kaḍavuḷ, God, the first Being, முழுமுதற் கடவுள். Arhat; அருகன். **ஆதி-ய்-அந்தணன்** °antaṇaṉ, Brahmā the first Brahman; பிரமதேவன் (பரிபா. 5,22). **ஆதி-ய்-அந்த-கால-நாடி** °anta-kāla-nāḍi, (Astron.) The full duration of an eclipse expressed in nāḻikai and viṉāḍi; கிரகணம் நிகழும் காலவரையறை. **ஆதி-ய்-அந்த-பாதிச்-சா** °anta-pāticcā, (Astron.) Tabular correction for the parallax of the orbit of the planets from the first of Capricorn to six sines; சீக்கிர உச்சம், மகரச்சா. **ஆதி-ய்-அரி-வஞ்சம்** °ari-vañcam [+S. *hari-vaṁśa*] One of the six blissful regions where the fruits of good karma are enjoyed; போகபூமிவகை. **ஆதி-ஆகமம்** °ākamam, A Jaina Scripture; ஒரு சைனாகமம். (Chr.) The book of Genesis; கிறிஸ்தவ வேதாகமத்தின் முதற் சுருதி. **ஆதி-உலா** °ulā, A poem by Cēramāṉ

perumāḷ reputed to be the first ulā; திருக் கைலாய ஞானவுலா. ஆதி-ய்-ஊழி °ūḻi, First of the four yugas, கிருதயுகம். ஆதி-ய்-எழுஞ்-சனி °eḻuñ-caṉi, The 10th nakṣatra; மகம். ஆதி-எழுத்து °eḻuttu, The 30 primary Tamil letters; தமிழ் முதலெழுத்துக்கள். ஆதியோ'டி'டை-மடக்கு °oḍ'-iḍai-maḍakku, (Poet.) Repetition of a word in the beginning and middle of a line with different meanings; முதலு மிடையும் மடக்கு (தண்டி. 92). ஆதி-யோ'டு-கடை-மடக்கு °oḍu-kaḍai-maḍakku, Do. in the beginning and end; முதலும் கடையும் மடக்கு (டி, 93). ஆதியோ'டந்தம் °ōḍu-antam, From beginning to end; முதலிலிருந்து முடிவுவரை. ஆதிக்-கடுஞ்சாரி °kaḍuñcāri, Chloride of ammonia; நவச்சாரம். ஆதி-க்-கற்பேதம் °karpētam, Green vitriol; அன்னபேதி. ஆதி-க்-கல்-நாதம் °kal-nātam, Do; டை. ஆதி-க்-குடி °kuḍi, Soap; சவுக்காரம். ஆதி-க்-குரு °kuru, Fuller's earth; பூவழலை. ஆதி-கவி °kavi, Vālmīki, the first Sanskrit poet; வான்மீகி முனிவர். ஆதி-கரன் °karaṉ, Brahmā, the creator; பிரமா. ஆதி-காரணம் °kāraṇam, Primary cause; முதலில் நின்று பிறவற்றையெல்லாம் பிறப்பிப்பது. ஆதி-காலம் °kālam, Remote past; பண்டைநாட்கள். ஆதி-காவியம் °kāviyam, The Rāmāyaṇa of Vālmīki; வடமொழி இராமாயணம். ஆதி-குலர் °kular, Brahmans; பிராமணர். ஆதிச்-சரக்கு °carakku, Mercury; இரசம். ஆதி-ச்-சனி °caṉi, =āti-eḻuñ-caṉi; =ஆதியெழுஞ்சனி. ஆதி-ச்-சுவடி °cuvaḍi, Alphabet book; அரிவரிபேழை. ஆதி-சத்தி °catti, (Saiva) Primal energy of Siva; ஆதியிலுள்ள சிவசத்தி. Siva's concealing energy causing āṇava-malam to ripen and subsequently to leave fettered souls; பஞ்ச சக்திகளுள் ஒன்று. ஆதி-சேடன், °சேஷன் °cēḍaṉ, °cēṣaṉ [S. *Sēṣas*, the serpent Ananda. The word means 'remaining'] A mythological thousand-headed serpent supporting the earth; It is said to have existed before the creation of this world and to continue to exisit after its destruction; அனந்தன் எனும் சர்ப்பம். ஆதி-சைவம் °caivam, A Saiva sect which gives prominence to outward symbols and forms of worship; சைவம் பதினாறனுள் ஒன்று. ஆதி-சைவர் °caivar, Siva Brahmans descended from the five Ṛisis born from the five faces of Sadāśiva. These alone are entitled to minister in Saiva temples; சிவாலயங்களிற் பூசைக்கு அதிகாரிகளாகிய சைவப் பிராமணர் (சைவச. பொது. 435, உரை). ஆதி-தாசர் °tācar, Caṇḍēśvara, Siva's first devotee; சண்டேசுவரர் (S. I. I. i, 116). ஆதி-தாளம் °tāḷam, Time measure consisting of eight akṣara-kālas, also one of the upatāḷam; தாளவகை (பரத. தாள. 3). ஆதி-திராவிடன் °tirāviḍaṉ, Member of the Pañcama community; பஞ்சம சாதியான் (Modern). ஆதி-தேவன் °tēvaṉ, Supreme God; சருவேசுரன் (சர்தபு. அயனைச் சிறைபுரி. 5). ஆதி-நாடி °nāḍi, The aorta; ஆதார நாம்பு. ஆதி-நாதர் °nātar, One of the Navanāta cittar; நவநாத சித்தருள் ஒருவர். (Jaina) Ṛiṣabha tīrttaṅkarar; விருஷப தீர்த்தங்கரர் (மேரு. 187, உரை). ஆதி-நாதன் °nātaṉ, Deity who is from the beginning; கடவுள். ஆதி-நாராயணன் °nārāyaṇaṉ, Vishnu; திருமால். Diamond; வச்சிரக் கல். ஆதி-நித்தியர் °nittiyar, (Chr.) Personal beings who have a beginning but no end; சிருட்டிக்கப்பட்டும் ஒருகாலும் அழியாதவர். ஆதி-நூல் °nūl, The Veda; வேதம். ஆதி-ப்-புலவன் °pulavaṉ, Agastya; அகத்திய முனிவர். ஆதி-பகவன் °pakavaṉ, God; கடவுள் (குறள், 1). ஆதி-பரம் °param, Nutmeg; சாதிக்காய். ஆதி-பரன் °paraṉ, The primeval Being; கடவுள். ஆதி-பலம் °palam, =āti-param; =ஆதி-பரம். ஆதி-பாஷை °pāṣai, Sanskrit, once supposed to be the earliest of languages; வடமொழி. ஆதி-புங்கவன் °puṅkavaṉ, God; கடவுள். Arhat; அருகன். ஆதி-பூமி °pūmi, Marriage dais; திருமணமேடை (பெரியபு. திருஞா. 1230). ஆதி-போகம் °pōkam, Usufruct of a mortgage; ஒற்றியனுபவிப்பு. ஆதி-மகாகுரு °makākuru, Sulphate of copper; துரிசு. ஆதி-மகாநாதம் °makānātam, Sand containing metal particles; உலோகமணல். ஆதி-மடக்கு °maḍakku, (Poet.) Repetition of a word with a different meaning at the beginning of the line of a stanza; அடியின் முதலில் சொல் மடக்கி வருவது. ஆதி-மருந்து °maruntu, The earliest medicines, viz: black pepper, long pepper, and dried ginger; திரிகடுகம் (தைலவ. தைல. 135). ஆதி-மலை °malai, The Himālayas; இமயமலை. ஆதி-மார்க்கம் °mārkkam, The high road, straight way; பெருந்தெரு, நேர்ப்பாதை. ஆதி-மாலை °mālai, Continuation; தொடர்ச்சி. ஆதி-மீன் °mīṉ, The first nakṣatra; அசுவினி (சேதுபு. கந்தமா. 17). ஆதி-முத்தன் °muttaṉ, A section among the viññāṉa-kalar; விஞ்ஞான கலருள் ஒரு சாரார் (சி. சி. 8, 2, உரை). ஆதி-முதல் °mutal, From the beginning; ஆரம்பந்தொட்டு. ஆதி-மூர்த்தி °mūrtti, God, the primeval form; முதற்கடவுள் (திவ். திருவாய். 3, 3, 5). ஆதி-மூல-புஸ்தகம் °mūla-pustakam, Alphabet book; அரிச்சுவடி. ஆதி-மூலம் °mūlam, Primitive Cause; முதன்மையான காரணம். The Supreme Being; முழுமுதற்கடவுள். ஆதி-யாமம் °yāmam, Mistletoe berry-thorn; சங்கஞ்செடி. ஆதி-யாழ் °yāḻ, The original lute with 1000 strings; ஆயிர நரம்புள்ள யாழ். ஆதி-யுகம் °yukam, Kirēta yukam; கிரேத யுகம். ஆதி-ரௌத்திரம் °rauttiram, A prepared arsenic; சவ்வீரபாஷாணம். ஆதி-வராகம், °கன் °varākam, °ṉ, Vishnu in his boar incarnation; பன்றி அவதாரஞ் செய்த திருமால். ஆதி-வருணர் °varuṇar, Brahmans; பார்ப்பார். ஆதி-வாகியம் °vākiyam, Subtle body; சூக்கும சரீரம் (ஞானவா. ஞானவி. 24). ஆதி-வாரம் °vāram, Sunday; ஞாயிற்றுக்கிழமை. ஆதி-விந்து °vintu, A mineral poison; கார்முகிற் பாஷாணம். Rain; மழை. ஆதி-விராகன் °virākaṉ, Arhat; அருகன். Siva; சிவன். A prepared arsenic; சோரபாஷாணம். ஆதி-விராட்டியன் °virāḍḍiyaṉ, Kinds of prepared arsenic; சூத பாஷாணம், சோரபாஷாணம். ஆதி-விருத்தி °virutti (Gram.) The peculiar lengthening called vṛiddhis in the beginning of words; புணர்ச்சியில் நிலைமொழியின் முதல் இ, ஈ, ஏ ஐயாகவும், உ, ஊ, ஓ ஔவாகவும், அ ஆவாகவும், இரு ஆகவும் வரும் வடமொழி மரபு.

-ஆதிகம்[1] -ātikam, *n.* [id. at end of compounds] And others; முதலியன. உ-ம்: "சிட்டற்கு உபதேசாதிகளும்" (வேதா. சூ. 162).

ஆதி[2] āti, *n.* [Cf. *ātis*, said to be fr. *at*, 'to run'. T. *aṭṭ-u*?] 1. Running of a horse in a straight course; குதிரையின் நேரோட்டம். 2. Crane; நாரை.

ஆதி[3] āti, *n.* [S. *ā-dhis*, 'anxious thought', fr. *dhyai*, *dīdēti*, akin to T. *tī*] Mental agony; மனோவியாதி (ஞானவா. தேவபூ. 49).

ஆதி[4] āti, *n.* [S. *ā-dhis*, 'pledge', fr. *dhā*, Cf. T. *tāi*] Usufructuary mortgage; ஒற்றி. —CPD ஆதி-தாரணம் °tāraṇam, Deposit, mortgage; அடகு கொடுத்துக் கடன்படல்.

ஆதி[5] āti, *n.* 1. Malabar nut; ஆடாதோடை. 2. Venus; சுக்கிரன். 3. The mineral poisons: காய்ச்சற் பாஷாணம் & மிருத பாஷாணம்.

ஆதிக்கம், ஆதிக்கியம் ātikkam, °kiyam, *n.* [fr. *atikam*—<அதிகம்] 1. Abundance; மிகுதி. 2. Superiority; தலைமை. 3. High place of authority; உத்தியோக மேன்மை. 4. Seat of sovereignty; அரசாளிடம். 5. Right to possession; உரிமை. —CPD ஆதிக்க-ப்-பேறு °pēṟu, A tax, வரிவகை (S. I. I. iv, 126).

ஆதிக்கன் ātikkaṉ, *n.* [id. + -*aṉ*[5]] 1. Person of distinction; சுவரமுள்ளவன். 2. Heir; உரிமையாளன்.

ஆதிகம்[2] ātikam, *n.* Indian ipecacuanha; சிறுகுறிஞ்சா.

ஆதிட்டம், ஆதிஷ்டம் ātiṭṭam, °ṣṭam, [+ *ā-diṣṭ-a*, 'enjoined, directed', fr. *diś*, T. *tek-iṭ*] 1. Command; கட்டளை. 2. Leavings of a meal; போசனசேடம்.

ஆதிட்டி ātiṭṭi, *n.* [id. + -*i*[4]] One who is under instruction; பிரமசாரி.

ஆதித்தம் ātittam, *n.* [perh. fr. *ātittaṉ* below] 1. Ochre; காவிக்கல். 2. Blue vitriol; துரிசு.

ஆதித்தன் ātittaṉ, *n.* [*Āditya*, son of *Aditi*—அதிதி[2] மகன்] Sun; சூரியன். —CPDS ஆதித்த-சயனம் °cayaṉam, A religious act of austerity; ஒருவிரதம். ஆதித்த-நோக்கு °nōkku, (Astrol.) Heliocentric aspect; சூரியனுடைய பார்வை. ஆதித்த-புடம் °puṭam, (Astron.) Longitude of the sun; அருக்க புத்தி. ஆதித்த-மண்டலம் °maṇḍalam, Orb of the sun; சூரிய வட்டம். Sun as a world; சூரியலோகம். (Yoga) Sun-centre between fire and air in the region of the heart; இருதயத்திலுள்ள ஒரு யோகஸ்தானம் (வேதா. தத். 50). ஆதித்த-மத்திம-புத்தி °mattima-putti, (Astron.) Mean daily motion of the sun; சூரியனது சராசரி சாட்சதி. ஆதித்த-வாரம் °vāram, Sunday; ஞாயிற்றுக்கிழமை. ஆதித்தன்-கூர்மை, வெள்ளை °kūrmai, °veḷḷai, A prepared arsenic; இலவண பாஷாணம். ஆதித்தன்-மத்திமச்-சா °mattimac-cā, (Astron.) Equation of the centre of the sun from Cancer to Capricorn; சூரியனுக்குக் கற்கடகமுதல் ஆதிரா மயிற் கண்ட சா.

ஆதித்தர் ātittar, *n.* [id. *pl.*] The twelve sun-gods; துவாதசாதித்தர்.

ஆதித்தியை ātittiyai, [id. *fem.*] Sarasvatī; சரசுவதி.

ஆதித்தியம் ātittiyam, *n.* [fr. *a-titi*[1]—<அதிதி[1]] 1. Attention to a guest; விருந்தினர்க்குபசாரம். 2. An astrological treatise now lost; ஒரு சோதிடநூல் (தக்கயா. 183). —CPD ஆதித்தியம்-பண்ண °paṇṇa, To show civility, entertain; உபசாரஞ்செய்ய, போசனுதிகள் அளிக்க.

ஆதித்தேயன் ātittēyaṉ, *n.* [id. S. *ātithēyas*] Host, one who is hospitable, விருந்தை உபசரிப்போன்.

ஆதி-தைவிகம் āti-taivikam, *n.* [+ S. *ādhi-daivika*, V. *ati-tevatai*] Afflictions caused by supernatural agencies; தெய்வத்தால் வருந் துன்பம்; தாபத்திரயங்களுள் ஒன்று (சி. போ. 2,2,3, சிற்.).

ஆதி-பத்தியம் āti-pattiyam, *n.* [S. *ādhipatyam*. V. *ati-pati* — <அதி-பதி] Supremacy, power; தலைமை, தத்துவம்.

ஆதி-பௌதிகம் āti-pautikam, *n.* [S. *ādhi-bhautikam*. V. *ati-pūtam*— <அதி-பூதம்] Afflictions caused by the elements or other earthly beings; பஞ்சபூதங்களாலும் பிராணிகளாலும் வருந் துன்பம் (குறு. 19,17).

ஆதிர-சாலை ātira-cālai, V. *ātular-cālai*; = ஆதுலர்-சாலை.

ஆதிரம் ātiram, *n.* [prob. fr. S. *ārdra*, 'loose, melting'. Cf. T. *uru-ku*] 1. Clarified butter; நெய். 2. Round sage-leaved Indian linden; கெய்ச்சிட்டி.

ஆதிரவிச்சிலை, °விட்சிலை ātiraviccilai, °viṭcilai, *n.* [*āti* + *iravi-cilai*?—ஆதி-இரவி-சிலை?] Reddle; செங்காவிக் கல்.

ஆதிரன் ātiraṉ, *n.* Great person; பெரியோன்.

ஆதி-ராச்சியம் āti-rācciyam, *n.* [S. *ādhi-rājyam*, V. *ati-rācaṉ*— <அதி-ராசன்] Sovereignty, supreme sway; தலைமையரசு (சூடா 4,3,4).

ஆதிரை ātirai, *n.* [S. *ārdrā*] The sixth nakṣatra; திருவாதிரை. —CPDS ஆதிரை-ப்-பிள்ளையார்-நோன்பு °piḷḷaiyār-nōṉpu, An ancient tax; பழைய வரிவகை (Puduk. Inscr. 399). ஆதிரை-முதல்வன் °mutalvaṉ, Siva the presiding deity of that nakṣatra; சிவன் (பரிபா. 8,6).

ஆதிரையான் ātiraiyāṉ, *n.* [id. + *avaṉ*] Siva; சிவன்.

ஆதி-வேதனிகம் āti-vētaṉikam, *n.* [S. *ādhi-vēdan-ikam*, fr. *ati*[3]+*vēd-anam*, 'marriage'. Cf. T. *vēṭṭal*] Gifts made to a wife on her husband's taking a second wife—which become her separate property; இரண்டாவது தாரங் கொள்ளுவோன் மூத்தாட்கு உரிமையாக்கும் பொருள்.

ஆ-தீபனம் ā-tīpaṉam, *n.* [S. *ā-dīpanam*, 'setting on fire, embellishing', fr. *dīp*, T. *tī*] Decoration for festive days; கோலஞ் செய்தல்.

ஆதீனம் ātīṉam, *n.* [V. *atīṉam*—<அதீனம்] 1. Ownership, possession; உரிமை, ஆட்சி. 2. Dependence; வசம். 3. Saiva monastery whose head keeps control over its properties; சைவமடம். உ-ம்: "திருவாவடுதுறை ஆதீனம்". —CPDS ஆதீன-கர்த்தன் °karttaṉ, Proprietor, landlord; நிலச்சுவான்தார். ஆதீன-ஸ்தர் °star, Head of a Saiva mutt; சைவமடத் தலைவர். சுவாதீனம் cuva°, Being one's own master; பர° para°, Being under another's power; தேவ° tēva°, God's disposal.

ஆ-தீனவம் ā-tīṉavam, *n.* [S. *ā-dīnavas*] 1. Disobedience; கீழ்ப்படியாமை. 2. Transgression; மீறுதல்.

ஆது[1] ātu, *n.* [S. *ātus*. Cf. T. *oṭṭ-u*] 1. Raft; தெப்பம். 2. Expression used by mahouts when patting and quieting an elephant; பாகன் யானையை அதட்டும் ஓரோசை.

-ஆது[2] -ātu, = -*atu*[2]; = -அது[4].

ஆதுமம் ātumam, *n.* Galangal; அரத்தை.

ஆ-துரம் ā-turam, *n.* [S. *ā-tura*, 'hurt', fr. *tur*, T. *tuṉ-ai*] 1. Being sick; நோயுடைமை. 2. Impatience; பரபரப்பு. 3. Desire; அவா.

ஆ-துரன் ā-turaṉ, *n.* [id. -*aṉ*[5]] 1. Sick man; நோயாளி (குறள், 949). 2. A covetous man; ஆசையுற்றோன். —CPDS ஆதுர-சாலை °cālai, Hospital; வைத்தியசாலை.

ஆதுலம் ātulam, *n.* [Cf. the next word] Toddy; கள்.

ஆ-துலன் ā-tulaṉ, *n.* [=*ā-turaṉ*, *r/l*— =ஆதுரன்] 1. Disabled person; அசக்தன். 2. Poor man; வறியவன்.

ஆ-துல(ர்)சாலை ā-tula(r)-cālai, Resthouse for giving food and shelter to the disabled and the destitute; முப்பத்திரண்டு தருமங்களுள் ஒன்று.

ஆதுவம் ātuvam, V. *ātulam*; = ஆதுலம்.

**ஆதுனிகன்** ātuṉikaṉ, *n.* [S. *ādhunika*, fr. *adhunā*, 'now'. T. *iṉ-u*] Person of the modern times; இக்காலத்தவன் (பி. வி. 2, உரை).

**ஆ-தேசம்**[1] ā-tēcam, *n.* [S. *ā-dēś-as*, 'advice' V. *ā-tiḍḍam*] 1. Command; கட்டளை (S. I. I. iii, 184). 2. (Gram.) Substituted letter; திரிந்த வெழுத்து (வீரசோ. சந்தி. 10).

**ஆ-தேசம்**[2] ā-tēcam, for *ātēyam*; =ஆதேயம்.

**ஆ-தேயம்** ā-tēyam, *n.* [S. *ā-dhēya*. for etym. V. *ā-tāram*] 1. What is supported; தாங்கப்படுவது. 2. Gain; இலாபம். —CPD **ஆதேய-லக்கணை** °lakkaṇai, The relation of the supported towards the supporter; ஆதேயத்துக்குரிய ஆதாரத்தைக் கருதி நிற்றல்.

**ஆதொண்டை** ātoṇḍai, *n.* 1. Thorny caper: Capparis horrida; காற்றோட்டிக்கொடி. 2. Ceylon caper, Capparis zeylanica; காற்றோட்டிச் செடி. —CPD **ஆதொண்டைச்-சக்கரவர்த்தி** °cakkaravartti, The reputed first ruler of Kāñci in the Toṇḍaimāṉ line; தொண்டைமண்டலத்தை ஆண்ட ஆதியரசன்.

**ஆ-தோரணன்** ā-tōraṇaṉ, *n.* [S. *ā-dhōraṇas*, prob. fr. *dhōr-aṇam*, 'vehicle', rt. *dhōr*. Cf. T. *tuḷ-ai*] Elephant-driver, mahout; யானைப்பாகன். **ஆதோரண-மஞ்சரி** °mañcari, Poem in vañci metre in praise of a warrior who has subdued or killed one or more furious elephants of a hostile army; வீரனது சிறப்பைப் பாடும் ஒரு பிரபந்தம் (தொல். வி. 283, உரை).

**ஆந்தகம்** āntakam, *n.* [V. *antakaṉ*—<அந்தகன்] 1. Company of blind men; குருடர்கூட்டம். 2. Nether world; பாதாளம்.

**ஆந்தரங்கம்** āntaraṅkam, V. *antar-aṅkam*; =அந்தரங்கம்.

**ஆந்தரம்** āntaram, *n.* [V. *antaram*] 1. What is internal; உள்ளேயிருப்பது (ஈடு, முதல், ஸ்ரீயஃபதி, பக். 72). 2. Secret; இரகசியம் (அஷ்டப்ரபந்தசாரம், 25). —CPDS **ஆந்தரா'ளிகன்** āḷikaṉ [-*āḷi*[5] + -*ka* + -*aṉ*[3]] Mediator; மத்தியஸ்தன். **ஆந்தரீ'க்ஷம்** °īkṣam, V. antar-īkṣam; =அந்தரீ'க்ஷம்.

**ஆந்திரம்**[1] āntiram, *n.* [S. *āntram*, 'bowels', fr. *antaram*— <அந்தரம்] Entrails; குடல் (சுதசங். ஞாந. 54).

**ஆந்திரிகம்** āntirikam, *n.* [id.] Viscera; குடல். —CPD **ஆந்திரிக-இலக்கணம்** °ilakkaṇam, Splanchnology or visceral science; குடலைப்பற்றிய நூல்.

**ஆந்திரம்**[2] āntiram, *n.* [S. *Āndhras*] 1. Telugu country; தெலுங்குநாடு. 2. Telugu language; தெலுங்கு பாஷை.

**ஆந்திரன்** āntiraṉ, *n.* [id. + -*aṉ*[3]] Telugu man; தெலுங்கன்.

**ஆந்தை**[1] āntai, *n.* [Cf. *ātaṉ*[1], probably on account of the bird not seeing in the light—ஒப். ஆதன்[1]] 1. Owl; பகற் குருட்டுப் பறவையினம். 2. Spotted owlet: āthene brahma; ஆந்தைவகை. 3. Fragrant sticky mallow; பேராமுட்டி. 4. Parakeet-bur; புறாமுட்டி. —CPDS **ஆந்தைக்-காதல்** °kātal, Screeching of the owl when calling its mate; ஆந்தை கூவுகை. Augury by the screech of the owl; ஆந்தை நூல். **ஆந்தை-விழி** °viḻi, Blank stare like that of an owl; ஆந்தைபோல் பார்த்தல். Big eyes; பெரிய கண்.

K. *andega*, *aḍelu*; M. *anda*; Sinh. *anda*, 'eel'.

**ஆந்தோளம்** āntōḷam, *n.* [fr. the following] (Mus.) Musical swing, turn of notes followed by a higher note; ஊசலாடும் அசைவுபோன்ற கமகம் (பரத. இராக. 24).

**ஆந்தோளி** āntōḷi, *n.* [prob. *ēntu-tōḷā*. Cf. *toḍḍil*—ஏந்து-தோளா] 1. A kind of palanquin; சிவிகை. 2. A kind of tune, துரிசகம்.

Mal. *andōlika*; Tel. *andolanamu*, 'swinging'; Hind. *hindōla*; Port *andor*; Sinh. *andōrāva*; S. *hindōla*, *andōla*, *andōlanam*, 'swinging', fr. which a *v.* *andōlay*. See also T. *tōḷa*.

**ஆந்தோளிகம்** āntōḷikam, *n.* [id.] Palanquin; சிவிகை.

**ஆநந்தம் முதலிய** ānantam &c., V. *āṉantam* &c; ஆனந்தம் முதலிய பார்.

**ஆ-நயனம்** ā-nayaṉam, V. *upa-nayaṉam*; =உப-நயனம்.

**ஆ-நர்த்தம்** ā-narttam, *n.* [S. *ā-nart-as*, fr. *nrit*, T. *naḍ-i*] 1. Theatre; நடனசாலை. 2. War; யுத்தம். 3. Water; நீர்.

**ஆ-நாகம்** ā-nākam, *n.* [S. *ā-nāh-as*, 'epistasis', fr. *nah*. Cf. T. *neḍḍ-u*] Suppression of urine, constipation; சலவடைப்பு, மலக்கட்டு.

**ஆநின்று** āniṉṟu, *part.* [*āki-niṉṟu*, 'continuing to become'. Caldwell] Present tense affirmative particle, as in "செய்யாநின்றான்"; நிகழ்கால இடைநிலை" (நன். 143).

**ஆ-நீர்** ā-nīr, *n.* [*ā*[1] + *nīr*] Cow's urine; கோமூத்திரம் (இரகு. யாக. 98).

**ஆப்கார்** āpkār, *n.* [U. *ābkār*] Manufacturer or retailer of alcoholic drinks; சாராயங்காய்ச்சுவோன், விற்போன்.

**ஆப்காரி** āpkāri, *n.* [id.] Revenue derived from taxes on the manufacture or sale of alcoholic drinks; மதுபானவரி.

**ஆப்கூட்-சாகுபடி** āpkūḍ-cākupaḍi, *n.* [U. *āfkūd* + *cākupaḍi*, 'cultivation'] Unauthorised cultivation; மறைவாகப் பண்ணும் பயிர்ச்செய்கை.

**ஆப்தம்** āptam, *n.* [V. *āttam*—ஆத்தம் பார்] 1. What is trustworthy, நம்பத்தக்கது. 2. Friendship; நட்பு (Coll.). —CPDS **ஆப்த-சேவை** °cēvai, Service to one's preceptor; குருசுச்ரூஷை. **ஆப்த-வாக்கியம்** °vākkiyam, Utterance of great men; ஆன்றோர் கூற்று.

**ஆப்தன்** āptaṉ, *n.* [id.] 1. Trustworthy person; நம்பிக்கைக்குரியவன். 2. Friend; நண்பன்.

**ஆப்தானி** āptāṉi, *n.* [U. *ābādānī*] Cultivation; பயிர்ச் செய்கை.

**ஆப்திகம்** āptikam, *n.* [*aptam* + -*ikam* —அப்தம்] Ceremony on the first anniversary of one's death; தண்டுத்திவசம்,

**ஆப்பகூரா** āppakūra, *n.* [U. *ābkhora*] A narrow drinking vessel; நீர் பருகும் ஒடுக்கிய பாத்திரம்.

**ஆப்பம்**[1] āppam, *n.* [prob. connected with *appu*[2], 'water'—அப்பு[2]] (Astr.) Aquarius; கும்பராசி.

**ஆப்பம்**[2] āppam, *n.* for *appam*; =அப்பம்.

**ஆப்பி** āppi, V. *ā*[4]; ஆ[4] பார்.

**ஆப்பிட** āppiḍa, *v.* for *akap-paḍa*; =அகப்பட.

**ஆப்பி'யந்தரம்** āppi-y-antaram, *n.* [V. *appi-y-antaram* — < அப்பிய'ந்தரம்] What is internal, mental; அகத்தில் உள்ளது.

**ஆ-ப்பியாயனம்** ā-ppiyāyaṉam, *n.* [S. *ā-pyāy-anam*, 'making full', fr. *pyai*, T. *per-u*] Contentment; திருப்தி.

**ஆ-ப்-பிரச்சனம்** ā-p-piraccaṉam, *n.* [S. *ā-pracch-anam*, 'bidding farewell', fr. *pracch*. Cf. T. *poṟukk-u*] Welcome, bidding adieu; உபசரித்து வரவழைத்தல், செலவுகொடுத்தனுப்பல்.

**ஆ-ப்-பிரளயம்** ā-p-piraḷayam, *adv.* [ā-[10] + S. *pra-laya*, 'dissolution', fr. *lī*, T. *aḻ-i*] Till the final dissolution; உலக அழிவு பரியந்தம்.

**ஆப்பு**[1] āppu, *n.* [fr. *appu*, 'to thrust in'—அப்பு-வது] Wedge, peg; முளை —CPDS **ஆப்பெ'ழுத்து** °eḻuttu, Cuneiform script; பபிலோனியருடைய ஆப்புவடிவ லிபி (Modern). **ஆப்பு-த்-தள்ளி** °taḷḷi, Shooting stick; அச்சுக்கூடக் கருவிகளுளொன்று.

K. Tel. *apu*; M. *appu*; Sinh. *ābaya*.

**ஆப்பு**[2] āppu, *n.* 1. Strychnine tree; எட்டி மரம். 2. Broken rice; grit; சொய்.

**ஆப்பு**[3] āppu, *n.* [aph. of *yāppu* — <யாப்பு] 1. Bandage; கட்டு (திவ். இயற். 1,75). 2. Body; சரீரம் (திவ். இயற். 4,93).

**-ஆப்பு**[4] -āppu, *suff.* [fr. *āku*[1]; <ஆகு-தல்] A stem-suffix giving the sense of 'what is made of'; 'உருவானது' எனும் பொருளுள்ள ஒரு கடைநிலை. உ-ம்: "பொக்காப்பு".

**ஆப்புலுதம்** āppulutam, *n.* [S. *plutam*, 'capering', fr. *plu*. Cf. T. *poḷ-i*] A pace of horses; குதிரைக் கதிவகை.

**ஆப்புளண்டம்** āppuḷaṇḍam, *n.* [perh. connected with *appu*, 'water'] A plant found in wet places; கரிசலாங்கண்ணி.

**ஆப்பை** āppai, *n.* [fr. *akappai*] Ladle; அகப்பை. —CPD **ஆப்பைக்-குறி** °kuṟi, Sign, omen; சகுனம்.

M. *appa*.

**ஆப-கம், °கை** āpa-kam, °kai, *n.* [S. *āpa-gā*, fr. *āpas*, T. *appu*, 'water'?] 1. River; நதி. 2. The Ganges; கங்கை.

**ஆபகேயன்** āpakēyan, *n.* [id.+S. *-ēya*] 1. Son of the river, Krishna; கிருட்டிணன். 2. Bhīma; வீமன்.

**ஆ-பச்-சகாயன்** ā-pac-cakāyaṉ, *n.* [V. *āpattu* + S. *sahāyas* (*saha+aya*), 'one who accompanies' — ஆபத்து + சகாயன்] Friend in one's distress; துன்பத்தில் உதவுவோன்.

**ஆ-பணம்** ā-paṇam, *n.* [S. *ā-paṇ-as*, said to be fr. *paṇ*, prob. akin to T. *vil*, 'to sell' But cf. *āvaṇam*— ஒப். ஆவணம்] Market, shop; கடை, சாப்பு.

**ஆ-பணிகன்** ā-paṇikaṉ, [id.+*ika* + -*aṉ*[5]] Trader; வாணிகஞ் செய்வோன்.

**ஆ-பணியம்** ā-paṇiyam [id.] 1. Road leading to a market; அங்காடி வீதி. 2. Articles sold; அங்காடிச் சரக்கு.

**ஆ-பத், ஆ-பற்-** ā-pat(r)-, *n.* [See *ā-pattu*, below—ஆபத்து] —CPDS **ஆபது'த்தாரணன்** °uttāraṇaṉ, One who saves another from distress; துன்பத்தினின்று காப்போன். **ஆபற்-காலம்** °kālam, Hour of danger, distress; நெருக்கிடைச் சமயம். **ஆபத்(ற்)-சன்னியாசம்** °caṉṉiyācam, Taking to asceticism at the point of death or danger; மரிக்கும் வேளை அல்லது யாதோரு அவயைத்தினிமித்தம் செய்யுந் துறவு. **ஆபத்-தனம்** °taṉam, Wealth in reserve for an emergency; எய்ப்பினில் வைப்பு.

**ஆ-பத்து** ā-pattu, *n.* [S. *ā-pat*, fr. *pad*, 'to fall', T. *pāḍ-u*—பாடு] Misfortune, danger, இடுக்கண், அவசரம். —CPD **ஆபத்து-சம்பத்து** °campattu, Adversity and prosperity; வாழ்வு தாழ்வு.

**ஆ-பதம்** ā-patam, *n.* [id.] Distress, calamity; துன்பம், தீங்கு. —CPD **ஆபதம்-அறுக்க** °aṟukka, To remove distress; துன்பகற்ற.

**ஆ-பந்தம்** ā-pantam, *n.* [S. *ā-bandh-as* fr. *bandh*, T. *paṟṟ-u*] 1. Attachment, love; பற்றுதல், அன்பு. 2. The tie of a yoke; நுகக் கயிறு. 3. Ornament; அலங்கரிப்பு.

**ஆபம்** āpam, *n.* [S. *āpas*, T. *appu*[2] — அப்பு[2]] 1. Water; நீர் (நைடத. நைத. 6). 2. Evil; தீங்கு.

**ஆ-பரணம்** ā-paraṇam, *n.* [S. *ā-bharaṇam*, fr. *bhṛi*, 'to bear', T. *poṟ-u*] 1. Ornament; அணிகலன். 2. Decoration; அலங்காரம். 3. =Āvaraṇam; =ஆவரணம். —CPDS **ஆபரணா'திகள்** °ātikaḷ, Ornament clothes &c.; நகை உடை முதலியன. **ஆபரண-க்-கடைப்-புணர்வு** °kaḍaip-puṇarvu, Hook of a necklace; பின்கொக்கி. **ஆபரண-த்-துடக்கு-வடிவு** °tuḍakku-vaḍivu, Ornament composed of precious stones and golden chains or suspended golden globules; விலையுயர்ந்த கற்களும் பொற் சங்கிலி அல்லது தூக்கு குண்டுகளும் சேர்ந்த அணிகலன். **ஆபரணத்திற்-தொங்க'ணி** °toṅk'aṇi, Jewel with precious stones and hanging golden globules; விலையுயர்ந்த கற்களும் தூக்கு குண்டுகளும் சேர்ந்த அணிகலன்.

**ஆபனம்** āpaṉam, *n.* [S. *āp-anam*, fr. *āp*, T. *appu*[1]] 1. Obtaining; அடைதல். 2. Pepper; மிளகு.

**ஆபனிகன்** āpaṉikaṉ, *n.* [S. *āpanikas*] Savage; மிலேச்சன்.

**ஆபஸ்தம்பம்** āpastampam, *n.* [S. *Āpastamba*] 1. The sūtras of a school of the Taittirīya śākhā founded by Āpastamba; தருமநூல் பதினெட்டில் ஒன்று. 2. A smriti of this school; ஒரு ஸ்மிருதி.

**ஆ-பாகம்** ā-pākam, *n.* [S. *ā-pāk-as*, fr. *pac*, 'to cook', perh. akin to T. *pic-ai*] Oven, kiln; அடுப்பு, மட்கலஞ் சுடும் சூளை.

**ஆ-பாசம்** ā-pācam, *n.* [S. *ā-bhās-as*, 'splendour, mere appearance', fr. *bhā*, *bhās*, T. *vē*, *vāḷ*] 1. Light; ஒளி. 2. Reflection; பிரதிபிம்பம். 3. (Log.) Semblance of reason, fallacy; போலி (மணி. 27, 57). 4. Great desire; மிகவிருப்பு. 5. Irregularity; முறைத்தவறு. 6. What is filthy; அசுத்தம். 7. Calumny; அபகீர்த்தி. —CPD **ஆபாச-விசுவாசம்** °vicuvācam, Violated faith; விசுவாச காதகம்.

**ஆ-பாசன்** ā-pācaṉ, *n.* [id.+-*aṉ*[5]] (Vēdānta) Individual soul; சீவன். 2. Sophist; போலி நியாயம் பேசுவோன் (திருப்பு. 535).

**ஆ-பாசிக்க** ā-pācikka, *v.* [id.+ -*i*[4]] 1. To be a reflection of; பிரதிபிம்பிக்க. 2. To be a counterfeit; யதார்த்தம்போல் தோன்ற.

**ஆ-பாடணம், °பாடம், °பாஷணம்** ā-pāḍaṇam, °pāḍam, °ṣaṇam, *n.* [S. *ā-bhāṣ-aṇam*, 'addressing', fr. *bhāṣ* (**bhel*), T. *viḷ* Cf. *pēc-u*] Preface; பாயிரம்.

**ஆபாத்** āpāt, *n.* [Pers. *ābād*] Town where military supplies are available; போர்ச் சேவகருக்குரிய பொருட்களுள்ள ஊர். —CPDS **ஆபாத்-கிராமம்** °kirāmam, Flourishing village; குடிவளமுடைய ஊர். **ஆபாத்-செய்ய** °ceyya, To cause a place to prosper; குடியேற்றி வளஞ்செய்ய.

**ஆ-பாத-** ā-pāta-, In compounds [S. *ā*-[10] + *pād-a-*, 'from the foot'] —CPDS **ஆபாத-கேசம்** °kēcam, From head to foot; உள்ளங்கால் முதல்

உச்சந்தலை வரை. ஆபாத-சூடம் °cūḍam [S. cūḍ-am, T. cūḍ-u¹] Do; ௸. ஆபாத-மத்தகம், °மத்தம் °mattakam, °mattam [S. mastakam, prob. fr. T. manḍ-ai] Do: ௸.

ஆ-பாதம் ā-pātam, n. [V. ā-pattu—ஆ-பத்து] 1. Rushing upon, throwing down; தாக்குதல், வீழ்த்துதல். 2. Falling; விழுகை. 3. Happening, the present moment; நிகழ்தல், நிகழ்காலம்.

ஆ-பாதன் ā-pātaṉ, =ā-pācaṉ; =ஆ-பாசன் (திருப்பு. 326).

ஆ-பால-கோபம், °கோபாலம் ā-pāla-kōpam, °kōpālam, n. [ā-¹° + pāla(ṉ), 'child' + S. gō-pā-las, 'cowherd'] All, including children and cowherds; எல்லோரும்.

ஆ-பாலி ā-pāli, n. [? S. ā-pālis, pāl-is, prob. for T. pēṉ, ēlā. So Kittel] Louse; பேன்.

ஆ-பானம் ā-pāṉam, n. [ā-¹° + S. pāṉam, 'drinking'] Liquor shop; மது விற்குங் கடை.

ஆபி āpi, n. [S. āpis, said to be fr. pyai, T. per-u-ku] The 20th nakṣatra; பூராடநட்சத்திரம்.

ஆபி-சாரம் āpi-cāram, n. [V. api-cāram— <அபி-சாரம்] Black art; சத்ரு மாரண வித்தை (திருவிளை. யானையெ. 10).

ஆபி-முக்கியம் āpi-mukkiyam, n. [V. api-mukam— <அபி-முகம்] State of being favourable; அனுகூலமாயிருத்தல்.

ஆ-பிலவனம் ā-pilavaṉam, n. [S. ā-plavanam, fr. plu, akin to T. poḷi] Immersion, bathing, sprinkling; அமிழ்த்துதல், முழ்குதல், தெளித்தல்.

ஆபி-ஜாத்யம் āpi-jātyam, n. [V. api-cātam— <அபி-சாதம்] Noble birth; உயர்குடிப் பிறப்பு.

ஆபீசு āpīcu, n. [E. office] Place of business; உத்தியோகத்தானம்.

ஆபீரம் āpīram, n. [S. Ābhīra, name of a people. Cf. āyar] Street of herdsmen; ஆயர் வீதி. —CPD ஆபீர-வல்லி °valli [for paḷḷ-i] Village of herdsmen; ஆயர் சேரி.

ஆபீரன் āpīraṉ, n. [id. + -aṉ⁵] Shepherd; இடையன்.

ஆ-பீலம் ā-pīlam, n. [S. ā-bhī-la, 'fearful', fr. bhīs—பயம்] 1. Fear; அச்சம். 2. Distress; துன்பம்.

ஆ-பீனம் ā-pīṉam, n. [S. ā-pīna, 'fat, stout', fr. pyai. T. per-u-ku] 1. Fat; கொழுப்பு. 2. Well; கிணறு. 3. Udder; பசுவின் மடி. 4. Street of sculptors; சிற்பர் வீதி (Winslow).

ஆபூடம் āpūḍam, n. [S. āpūṣam] Tin; தகரம்.

ஆபூப்பியம் āpūppiyam, n. [S. āpūpyam, fr. apūpa, T. app-am] Flour; இடித்த மா.

ஆபூபிகன் āpūpikaṉ, n. [id. S. āpūpikas] Baker, Confectioner; அப்பஞ் சுடுவோன், விற்போன்.

ஆபோக்கிலிமம் āpōkkilimam, n. [S. āpō-klimos < Gr. apo-klima, 'slope downwards'] (Astrol.) The 3rd, 6th, 9th and 12th houses from that of one's birth; இலக்கினத்திற்கு மூன்று, ஆறு, ஒன்பது, பன்னிரண்டாம் தானங்கள்.

ஆ-போகம் ā-pōkam, n. [S. ā-bhōg-as, 'curve', fr. bhuj, akin to T. vāṅk-u] 1. Effort; எத்தனம். 2. Circumference; சுற்றெல்லை. 3. Expanded hood of the cobra capella; பாம்பின் படம். 4. Fulness; பூரணம். 5. Enjoyment; அனுபவம். 6. One of the four limbs of a musical piece, கீதவுறுப்புக்களுள் ஒன்று.

ஆபோசனம் āpōcaṉam, n. [S. āpōśānas, according to M. Williams, the name of a prayer which began with āpō'śāna, 'drink the water' —அப்பு-அசனம்?] 1. Sipping of water before and after meals with appropriate mantras; போசனத்தின் முன்னும் பின்னும் மந்திரஞ் சொல்லி நீர் உறிஞ்சுதல். 2. Swallowing up; விழுங்கிவிடுதல்.

ஆ-போதம், °தனம் ā-pōtam, °taṉam, n. [S. ā-bōdh-anam, fr. budh. Cf. T. puḷ-u] 1. Knowledge; அறிவு. 2. Instructing; அறிவூட்டல்.

ஆம்¹ ām, n. [am¹— <அம்¹] 1. Water; நீர் (கலித். 48). 2. Dampness; ஈரம். 3. Beauty; அழகு (சீவக. 492).

S. āma, 'watery, raw'; Gr. ōmos, 'raw'; Arm. hum. Also S. amla, amras, 'mango'; L. amarus, 'sour.' Cf. √am.

ஆம்² ām, n. [for akam¹— =அகம்¹] House; வீடு.

ஆம்³ ām, n. [S. ām-ra—ஆமிரம்] Mango tree; மாமரம்.

ஆம்⁴ ām, defective v. [fr. ā-k-um, 'it will be, what will be'—ஆகும்] 1. Yes, so it is; சம்மதங் காட்டும் சொல். Used also for asserting a thing; உறுதிப் படுத்துஞ் சொல். உ-ம்: "இது நன்றாம்". Also ām-ē; ஆமே. 2. It is said, as they say; கேள்விப்பட்டதைக் குறிப்பது. உ-ம்: "ஓர் இராக்கதன் இருந்தானாம்". 3. Particle expressing contempt; இகழ்ச்சிக் குறிப்பு. உ-ம்: "சத்தவை கொல்வானும்" (கலித். 84,18) 4. Do. permission or fitness; அனுமதி, தகுதி குறிப்பது. உ-ம்: "போகலாம்", "பெரியோரை வணங்கலாம்." 5. Do. contingency; ஐயக்குறிப்பது. உ-ம்: "மழைபெய்யலாம்." 6. An ordinal affix; ஆவது. உ-ம்: "இரண்டாம்." 7. Appositional particle of comparison; ஓர் உவம உருபு. உ-ம்: "அல்லாங் குழலாள்". 9. An expletive; ஒரு அசைநிலை. உ-ம்: "பணியுமாம் என்றும் பெருமை" (குறள், 978). This defective verb is also used in compounds as: ஆமா'ங்கு °āṅku, Mode of being done; செய்யப்படவேண்டிய முறை. ஆமா'று °āṟu, The proper way of doing a thing; செய்யவேண்டியமுறை. ஆமா'னவன் °āṉavaṉ, A worthy, competent person; சிறந்தவன். ஆங்-காலம் °kālam, Season when fortune favours; நற்காலம். ஆந்-தனையும் °taṉaiyum, As much as possible; கூடியவரை. ஆம்-படி °paḍi, In a sufficient manner; போதியளவு. ஆம்-புடை °puḍai, Expedient; உபாயம் (சீவக. 232). ஆம்-புத்தி °putti, Suitable advice, discrimination; நல்லாலோசனை, விமரிசை. ஆம்-போலே °pōlē, Agreeable to, possibly; தக்கவாறு.

M. am, K. ahudu, aha; Tel. avunu, agudu; Tu. and; Br. hau; S am, a. Cf. T. ōm. The S. ama, 'to effect', is prob. fr. the T. am+akku.

-ஆம்⁵ -ām, suff. [aph. of yām, 'we' —யாம்] First person plural sign including person or persons spoken to; உளப்பாட்டுத் தன்மைப் பன்மைவிகுதி. உ-ம்: "யாமும் நீயும் செல்வாம்".

-ஆம்-⁶ -ām-, inf. [variation of -am⁴— =-அம்⁴] A euphonic augment; ஒரு சாரியை. உ-ம்: "மண்ணாங்கட்டி" (நன். 244, உரை).

ஆம்படையான் āmpaḍaiyāṉ, V. āmpuḍaiyāṉ;=ஆம்புடையான்.

ஆம்தனி āmtaṉi, n. [U. āmad] Income, proceeds; வருவாய்.

-ஆம்பரம் -āmparam, suff. A variation of -amparam³ q. v. =-அம்பரம்³.

ஆம்பரியம் āmpariyam, n. [Ar. ambar] Electricity; மின்சாரம்.

ஆம்பல்¹ āmpal, n. [amp(u) 'water' + -al¹. Cf. āmal—அம்பு⁴ + அல் =

ஆமல்] 1. Water lily; nymphaea lotus; அல்லி. 2. Bamboo; மூங்கில். Hence: 3. Musical pipe; ஊதுகுழல். 4. Blow horn; ஊதுகொம்பு. 5. A melody type; பண்வகை (சீவக. 1314). 6. Toddy; கள். 7. Elephant; யானை (கல்லா. கணபதி காப்பு). 8. A very high number; ஒரு பேரெண் (தொல். எழுத். 393). 9. Arrangement; அடைவு. —CPDS ஆம்பல்-அரி °ari [as enemy of the water-lily] Sun; சூரியன். [as enemy of the elephant] Crocodile; முதலை. ஆம்பற்-குழல் °kuḻal, Bamboo pipe; மூங்கிற் குழல் (குறிஞ்சிப். 222). Musical pipe of bell-metal with a water lily shaped handle; ஓர் இசைக் குழல் (சிலப். 17, பாட்டு 2, உரை).

M., Tu. *ambal*; K. *abal*.

ஆம்பல்² āmpal, *n.* [prob. fr. *ēmpal* —ஏப். எம்பல்] 1. Affliction; துன்பம். 2. Great noise; பேரொலி. 3. Moon; சந்திரன்.

ஆம்பல்³ ஆம்பலா āmpal, āmpalā, *n.* [S. *āmla*. V. *ām-am*—ஆமம் பார்] 1. Yellow wood-sorrel; புளியாரை.

ஆம்பாறு-தல் āmpāṟu, *v. intr.* [perh. *akam+pāṟu*—அகம்+பாறு-தல்?] To be deficient in growth and freshness; செழிப்புக் குறைதல் (local usage).

ஆம்பான் āmpāṉ, *n.* [*akampu*, 'inside, house' + *-āṉ*⁴ —அகம்பு] Husband; கணவன் (Coll.).

ஆம்பி āmpi, *n.* [*ampu*, 'water' + *-i*⁴ —அம்பு] 1. Irrigation bucket; பன்றிப் பத்தர் (சிலப். 10, 110). 2. Common mushroom; குடைக்காளான் (புதம், 164). 3. [Cf. *āmpal*²] Sound; ஒலி.

ஆம்பியம் āmpiyam, *n.* [Cf. *ampu*, 'water'] Quick-silver; பாதரசம்.

ஆம்பிரம் āmpiram, *n.* [S. *ām-ra*, V. *ām-am*—ஆமம்] 1. Sourness; புளிப்பு. 2. A sour species of mango; புளிமா. 3. The common mango tree; மாமரம்.

ஆம்பிலம், (ஆம்பிரம்) āmpilam, (āmpiram), *n.* [S. *ām-la*. V. *ām-am*—ஆமம்] 1. Sourness; புளிப்பு. 2. Tamarind tree; புளியமரம். 3. Toddy; கள். 4. A species of stinking swallow-wort; உப்பிலி. 5. [*āmpulam*] Oblique-leaved jujube; சூரை.

ஆம்பு¹ āmpu, *n.* Climbing nettle; காஞ்சொறி.

-ஆம்பு² -āmpu, *suff.* A variation of *āppu*⁴—=-ஆப்பு⁴. உ-ம்: "காரம்பு".

ஆம்புகு āmpuku, =*āmpulam*; =ஆம்புலம்.

ஆம்பு'டையான் āmpu'ḍaiyāṉ, *n.* [*akampu+uḍaiyāṉ* — அகம்பு + உடையான்] 1. Master of the house; வீட்டெசமான். 2. Husband; கணவன்.

ஆம்புலம், ஆம்பூறு āmpulam, āmpūṟu, *n.* [V. *āmpilam*—ஆம்பிலம்] Oblique-leaved jujube; சூரை.

ஆம்மிரம் āmmiram, *n.* A standard weight = 1 palam; ஒரு பலம் (தைலவ. தைல. 48).

ஆம்மிலம் āmmilam, V. *āmpilam*; =ஆம்பிலம்.

ஆம்மிலை āmmilai, V. *āmilai*; ஆமிலை.

ஆம்லட்டு āmladdu, *n.* [U. *āmladdu*, fr. *āmiram*] Variety of sweet mango; தித்திப்பு மாம்பழவகை.

ஆமக்கன் āmakkaṉ, *n.* [fr. *āṉ-makaṉ* —ஆண்-மகன்] Husband; கணவன்.

ஆமடி āmaḍi, *n.* Strychnine tree; எட்டி மரம்.

ஆமண்டம் āmaṇḍam, V. next word; =ஆமணக்கு.

ஆமணக்கு āmaṇakku, *n.* [S. *ā-maṇḍas* prob. fr. T. *maṇḍ-i*, 'sediment' —மண்டி] Castor-plant, Ricinus communis; ஏரண்டச்செடி. Various kinds are enumerated: எலி-ஆமணக்கு eli°, a small kind: Jatropha glauca; கடல்° kaḍal°, a variety of the smooth-fruited Palma christi; காட்டு°, kāḍḍ(u)°, an angular-leaved shrub: Jatropha curcas; சிறு°, ciṟ(u)°, the plant from which castor oil is extracted: Ricinus communis; செவ்°, cev°, reddish variety of the castor plant; பறங்கி°, paṟaṅki°, a tree of the species Carica papaya; புல்°, pul°, the grass Melanthium indicum; பேர்°, pēr°, the smooth-fruited Palma christi: Ricinus inermis; மலை°, malai°, the coral tree: Jatropha multifida.

ஆ-மணத்தி ā-maṇatti, *n.* [*ā*⁴+*maṇam*, 'smell'—ஆ-மணம்] Bright yellow orpiment prepared from the bile of cattle; கோரோசனை.

ஆமத் āmat, *n.* [U. *āmad*] Income; வரும்படி.

ஆமதி āmati, *n.* [?] Crab; நண்டு.

ஆ-மந்திரணம் ā-mantiraṇam, *n.* [S. *ā-mantr-aṇam* fr. *man-tram*, 'consultation'—மந்திரம்] 1. Taking advice; வினவியறிதல். 2. Calling; அழைத்தல். 3. Saluting; வந்தனஞ் செய்தல்.

ஆ-மந்திரிகை āmantirikai, *n.* [Prob. fr. id.] A kind of drum; இடக்கை வாத்தியம் (சிலப். 3, 143).

ஆ-மநாயம் ā-manāyam, *n.* [S. *ā-mnāy-as*, 'sacred tradition', fr. *mnā*, akin to T. *maṉṉ-u*]. 1. The Agamas; ஆகமம். 2. Religious tradition; சம்பிரதாயம். 3. Clan; குலம்.

ஆமம் āmam, *n.* [S. *āma*, 'raw', fr. *ām*¹—ஆம்¹, சீர்மையமானது] 1. What is raw, uncooked; பக்குவம் செய்யாதது, பச்சையானது. 2. Bengal gram; கடலை. 3. Dhol; துவரை. 4. [Cf. *āmpi*] Mushroom; காளான். 5. Indigestion; அசீரணம். 6. Dysentery; சீதபேதி. —CPDS ஆமா'சயம் °ācayam, Stomach; இரைப்பை. ஆமா'திசாரம் °aticāram, Dysentery; வயிற்றளைவு. ஆம-க்-கட்டி °kaḍḍi, Enlargement of the spleen; காய்ச்சற் கட்டி. ஆம-க்-கழிச்சல் °kaḻiccal, Dysentery; சீதபேதி. ஆம-கணம் °kaṇam, Infantile dysentery; குழந்தை வயிற்றளைவு. ஆம-சன்னி °caṉṉi, Convulsion in children caused by indigestion; அசீரணத்தால் வரும் சன்னி. ஆம-சிராத்தம் °cirāttam, Raw articles of food presented to Brahmans at the annual ceremony for the dead; பச்சையாய் உணவுப் பொருட்கள் கொடுத்துச் செய்யும் சிராத்தம். ஆம-சுரம் °curam, A fever in children caused by indigestion; குழந்தைகளுக்கு அசீரணத்தால் வரும் காய்ச்சல். ஆம-சூலை °cūlai, Colic pains arising from indigestion; அசீரணத்தால் வரும் வயிற்றுவலி. ஆம-வடை °vaḍai, Cake fried imperfectly in oil or ghee; அரைவேக்காட்டு வடை. ஆம-வர்க்கம் °varkkam, Tax on unripe fruits; வரிவகை (Inscr.). ஆம-வாத-ரோகம் °vāta-rōkam, Rheumatism caused by indigestion; வாத நோய் வகை.

ஆமயம்¹ āmayam, *n.* [S. *āma-yas*, fr. *āma*, √*am* — அம் எனும் அடி பார்] Disease; நோய் (தேவா. 1231,1).

ஆமயாவித்துவம் āmayāvittuvam, *n.* [id. S. *āmayāvin*, 'sick person'] Indigestion; அசீரணநோய்.

ஆ-மயம்² ā-mayam, *n.* [*ā*⁴+S. *-maya*, 'made of', prob. fr. *gō-mayam*.] Cow-dung; பசுச்சாணி (கந்தபு. வில்வல. வதை. 12).

ஆமரகோளம் āmarakōḷam, *n.* Japanese wax tree; கடுக்காய்ப் பூமரம்.

ஆமரம் āmaram, *n.* Strychnine tree; எட்டிமரம்.

ஆம்ரி, ஆமாரி āmari, āmāri, *n.* Word; வார்த்தை.

ஆமரிகம் āmarikam, *n.* [Cf. *āmalakam*] Emblic myrobalan; நெல்லி.

ஆமல் āmal, *n.* [*āmpal*—ஆம்பல்] 1. Spiny bamboo; மூங்கில். 2. Poison lily; விஷமூங்கிற்செடி.

ஆமலகம், ஆமலகி, ஆமலகை āmala-kam, °ki, °kai, *n.* [S. fr. *ām-la*, √*am*, 'what has sour fruits'—அம் லறும் அடி பார்] Emblic myrobalan; நெல்லி.

ஆமல.கமலம் āmala-kamalam, *n.* [*a-mala*, 'pure' + *kamalam*, 'lotus'] Seed moss; கொட்டைப்பாசி, ஆகாசத் தாமரை.

ஆமளம் āmaḷam, *n.* [S. *yāmalam*, fr. *yamalau*, 'a pair'] A tantric hymn of praise to Siva, e. g. the Rudra-yāmaḷa; சிவஸ்தோத்திரவகை (தேவா. 233, 4).

ஆமா¹ āmā, *n.* [prob. fr. *am*, aph. of *kuḍ-am*, 'cow'. V. note below —<குடம்] Wild cow; bos gaveus; காட்டுப்பசு (சாவடி. 377).

Su. *am*, *aam*, *ama*, 'wild bull', figured by an ox's head, surmounted by two horns (Barton, No. 183) This word is probably an aphaeresis of *gud-am* (See Hittite Glossary s. v.) = T. *kuḍ-am*, 'cow'. Barenton cites Egyptian *aha*, *au*, as equivalents of the Su. *gud* or *gu*, 'ox'. The Vedic *ama*, an epithet of the cow, considered as producing raw milk (Grassmann. s. v.), probably represented a misunderstanding of the origin of the word.

ஆமா² āmā, *n.* [for *āy-ammā*—ஆய ம்மா] Wet-nurse; பால் கொடுக்குந் தாய்.

Sinh. *ama*.

ஆமா³ āmā, *int.* [*ām*⁴ + *ām*⁴—ஆம்⁴ + ஆம்⁴] Quite so; ஒரு சம்மதக் குறி. —CPD ஆமாப்-போட °pōḍa, To say ditto; ஒத்துக் கூற.

ஆமா-கோளம், °கோளா āmā-kōḷam, °kōḷā, *n.* [prob. *āmā*, for *ām-ila* 'sour'+*kōḷ-am*, 'round thing'] Excrescent galls of chebulic myrobalan; கடுக்காய்ப்பூ.

ஆமா'சயம் āmā'cayam, V. *āmam*; ஆமம் பார்.

ஆமாத்தியன் āmāttiyaṉ, V. *amāttiyaṉ*; =அமாத்தியன்.

ஆமாலை-சோமாலை āmālai-cōmālai, *n.* [*āmālai*, echo word for *cōmālai*, prob. fr. *cōmāru* 'to be idle'] Drooping condition; மிகுசோர்வு (Coll.)

ஆமாறு āmāṟu, V. *ām*⁴; ஆம்⁴ பார்.

ஆமான் āmāṉ *n.* [*āmā*¹—ஆமா¹] Wild cow; காட்டுப் பசு (சீவக. 1902). —CPD ஆமான்-புகல்வி °pukalvi, Male of bos gaveus; ஆமான் எறு.

ஆமிசம், ஆமிடம், ஆமிஷம்¹ āmicam, °dam, °ṣam, *n.* [S. *āmiṣam*, fr. *āma*, 'raw'—ஆமம் பார்] 1. Flesh; மாமிசம். 2. Food; ஊண் (கம்பரா. கடறுவு. 67). 3. Enjoyment; சம்போகம். 4. Object of enjoyment; போகப் பொருள். 5. Desire; ஆசை. 6. Bribe; கைக்கூலி.

ஆமிரம் āmiram, *n.* [V. *āmpiram*—ஆம்பிரம்] 1. Sourness; புளிப்பு. 2. Mango tree; மாமரம்.

ஆ-மிரேடணம் ā-mirēḍaṇam, *n.* [S. *ā-mrēḍ-anam*, 'madness', said to be fr. *mēṭ*. Cf. T. *maḍ-amai*] Tautology; கூறியது கூறல்.

ஆமிலம், ஆமிலிகை āmilam, °likai, *n.* [V. *āmpilam*—ஆம்பிலம்] 1. Sourness; புளிப்பு. 2. Tamarind tree; புளியமரம்.

ஆமிலை āmilai, *n.* [S. *āmilā*] Yellow wood-sorrel; புளியாரை.

ஆமின் āmiṉ, V. *amīṉ*; = அமீன்.

ஆமிஷம்² āmiṣam, *n.* [V. *añcam*²—அஞ் சம்²] 1. Produce of land; கண்டு முதல். 2. Estimate of the yield or value of a standing crop; விளைவு மதிப்பு. —CPD ஆமிஷம்-டாப்பு °ḍāp-pu [Tel. *ḍābu*, 'register' — டாப்பு] Do. for the whole year; வருஷம் முழுதினும் விளைவு மதிப்பு.

ஆ-முகம் ā-mukam, *n.* [*ā*-¹⁰+*mukam*, 'source'] Beginning; தொடக்கம்.

ஆ-முகர் ā-mukar, *n.* [*ā*⁴, 'bull'+ *mukam*, 'face'+ -*ar*⁴] Nandi, an attendant of Siva; நந்தி தேவர்.

ஆமுடையான் āmuḍaiyāṉ, V. *akam-uḍaiyāṉ* = அகம்-உடையான்.

ஆ-முத்தி ā-mutti, *n.* [*ā*-¹⁰+S. *muk-ti*, 'release', fr. *muc*. Cf. T. *miñc-u*] Final beatitude; மோட்சம்.

ஆ-முத்து ā-muttu, *n.* [*ā*⁴ + *muttu*] Pearl formed in the tooth of a cow; பசுவின் பல்லிற் பிறந்த முத்து.

ஆ-முனாயம் ā-munāyam, V. *ā-manāy-am*; = ஆ-மனாயம்.

ஆமுஷ்மிகம் āmuṣmikam, *n.* [fr. S. *amuṣmin* locative of *adas* = அது] What pertains to the other world; மறுமைக்குரியது.

ஆ-மூலா'க்கிரம் ā-mūlā'kkiram, *n.* [*ā*-¹⁰ +*mūlam*, 'root'; *akkiram*, 'top'] From beginning to end; ஆரம்பமுதல் இறுதிவரை.

ஆமென் āmeṉ, *adv.* [Heb. *āmēn*] (Chr.) Verily, so be it; ததாஸ்து.

ஆ-மேற்பல்லூரி ā-mērpallūri, *n.* [*ā*⁴] Bezoar; கோரோசனை.

ஆமேற்பில்லூரி āmērpillūri, *n.* Gall-nut flower; கடுக்காய்ப்பூ.

ஆமை āmai, *n.* [*ām*¹+-*ai*⁷, 'connected with water'? — நீர்வாழ்வது?] 1. Turtle, any member of chelonia or testidinata; கூர்மம். 2. Smell; வாசனை. 3. A disease; ஒரு நோய். —CPDS ஆமை-ஒட்டுக்-கட்டி °ōḍ-ḍuk-kaḍḍi, A large inflammatory swelling; பெரும் புண் கட்டி. ஆமை-க்-கல் °kal, Hexagonal tile or stone for flooring; அறுகோணத் தளவரிசைக் கல். ஆமை-த்-தாலி °tāli, Marriage badge in the shape of a turtle; ஆமை வடிவத் தாலி. ஆமை-தவழி °tavaḻi, Land given up in consequence of a tortoise having crawled over it; ஆமை சஞ்சரித்தலால் அசுபமென்று விலக்கிய நிலம் (S. I. I. iii, 35). ஆமை-ப்-பலகை °palakai, Low wooden seat; ஆமையுருவமைந்த மணை. ஆமை-ப்-பூட்டு °pūḍḍu, Padlock; பூட்டுவகை. ஆமை-மடி °maḍi, Close udder yielding much milk; பால் நிரம்பச் சுரக்கும் சிறுமடி. ஆமை-யாழ் °yāḻ, A kind of lute; செவ்வழி யாழ்வகை.

K., M. *ama*, Tu. *ēme*.

ஆமைச்-சுரம் āmaic-curam, V. *āma-curam*; = ஆம-சுரம்.

ஆ-மோசனம் ā-mōcaṉam, *n.* [for etym. V. *ā-mutti*] 1. Liberating; விடுதலை செய்தல். 2. Vomiting; சத்திசெ டுத்தல். 3. Splendour; பிரதாபம்.

ஆ-மோதம், °மோதனம் ā-mōtam, °aṉ-am, *n.* [S. *ā-mōd-as*, -*anam*, fr. *mud*, perh. akin to T. *mott-u*, 'to swell'] 1. Joy; மகிழ்ச்சி. 2. Being excessive; மிக்க தன்மை (திருப்பு. 55). 3. Strong smell; மிக்க மணம். 4. Support given to a motion; ஒரு பிரேரணையை ஆதரிக் கை (Modern).

ஆ-மோதிக்க ā-mōtikka, *v.* 1. To rejoice; மகிழ. 2. To second a motion; ஒரு பிரேரணையை அனுவதித்துப் பேச.

ஆய்¹-தல் āy, 4 *v. intr.* [√*ahk*, 'to contract, diminish'—√அஃகு] 1. To be reduced, diminish; குறைதல்

(தொல். சொல். 330). 2. To be or become beautiful; அழகுடைமைதல் (சீவக. 2395). 3. To suffer pain; வருத்துதல் (திணை. 17).

ஆய் āy, *n.* [id.] 1. Fineness; நுண்மை (புறம். 117,10). 2. Smallness; சிறுமை (புறம். 249,10). 3. Beauty; அழகு (கலித். 46,4). 4. Suffering; வருத்தம். —CPDS ஆய்-க்-கல் °kal, Kind of caustic stone; ஒரு விஷக்கல். ஆய்-க்-குறள் °kuraḷ, Phantom; மாயாரூபம். ஆய்-மதி °mati, Great intelligence; நுண்ணறிவு.

ஆய்ச்சல் āyccal, *n.* [id.+ -(cc)al[7]] 1. Turn, bout; பாட்டம். உ-ம்: "ஆய்ச்சல் ஆய்ச்சலாய் மழைபெய்கிறது". 2. Impulse, heat; வேகம்.

ஆய்தம் āytam, *n.* [id. for *āy-tal*—ஆய்-தல்] 1. Subtlety, fineness; நுண்மை. 2. [prob. id. 'short in duration or indistinct in sound'. For another view see *Sentamil* xxv, 163] The Tamil letter ḫ (ஃ); அஃகேனம் (தொல். எழுத். 2.). —CPDS ஆய்த-க்-குறுக்கம் °kurukkam, The letter ḫ shortened in quantity when substituted for ḷ or ḻ before t in combination; மாத்திரை குறுகிய ஆய்தம். உ-ம்: "கஃறீது" (நன். 97). ஆய்த-ப்-புள்ளி °puḷḷi, The letter ḫ; ஆய்தவெழுத்து (நன். 90).

ஆய்ப்பு āyppu, *n.* [id.+ -(pp)u[6]] 1. Being reduced in circumstances &c.; ஒடுங்குகை (கம்பரா. அதிகாயன். 10). 2. Distress; வருத்தம்.

ஆய்மை[1] āymai, *n.* [id.+ -mai[2]] Subtle meaning; நுண்ணிய கருத்து (திருவாலவா. 55. 11).

ஆய்வு[1] āyvu[1] *n.* [id.+ -(v)u[6]] 1. Reduction, minuteness; நுணுக்கம். 2. 2. Distress; வருத்தம்.

ஆய்[2]-தல் āy, 4 *v. tr.* [fr. *akaḻ*, 'to dig'—அகழ்-தல்] 1. To pierce; குத்துதல் (தேவா.). 2. To search, examine; சோதனை செய்தல். 3. To separate, select; தெரிந்தெடுத்தல். 4. To pluck, rip off; கொய்தல், காம்புகளைதல். 5. To consider; ஆலோசித்தல். 6. To celebrate; கொண்டாடுதல்.

K., M., Tu. *ay*.

ஆய்ஞன் āyñaṉ, *n.* [id.+-(ñ)aṉ[5]] Investigator; ஆராய்வோன் (தொல். எழுத். 29, உரை).

ஆய்ந்தோர் āyntōr, *n.* [āy-nta+avar] 1. Wise men; அறிஞர். 2. Brahmans; பார்ப்பார்.

ஆய்-மலர் āy-malar, *n.* [id.+*malar*, 'flower'] Selected flower, lotus; தெரிவான பூ, தாமரை.

ஆய்மை[2] āymai, *n.* [id.+-mai[2]] Spirit of investigation; ஆராயுங்குணம்.

ஆய்வர[1] āyvara, *v tr.* [*varu-kiṟēṉ, vantēṉ*] To investigate, make researches; ஆராய. உ-ம்: "தண்டமிழ் ஆய்வந்திலார்" (பரிபா. 9, 25).

ஆய்வு[2] āyvu, *n.* [id. + -(v)u[6]] 1. Breadth; அகலம். 2. Investigation; ஆராய்கை.

ஆயும்-யாழ்-முனி āyum-yāḻ-muṉi, *n.* [id. *yāḻ*, 'lyre' +*muṉ-i*, 'sage'] Nārada, skilful on his lyre; நாரதர்.

ஆய்[3]-தல் āy, 4 *v. intr.* [fr. *ac-ai*, 'to rest, move'— <அசை-தல்] 1. To shake, tremble; அசைதல் (திருக்கோ. 125, உரை). 2. To tilt to a side; ஒரு பக்கத்தினுக்குச் சரிதல்.

Cf. S. *ayus*, 'duration of life'; Avesta, *ayu*; Gr. *aiei*; L. *aevum*; Got. *aiws*; As. *awa*; OHG *ewa*; E. *age*, *aye*.

ஆய்வை āyvai, *n.* [id.+ -(v)ai[7]] Sleeping place; துயிலிடம்.

ஆய்[4] āy, *n.* [apoc. of *āyaṉ*— <ஆயன்] The cowherd caste; மாடுமேய்ப்போர்சாதி (சீவக. 426). —CPD ஆய்-க்-குடி, °பாடி °kuḍi, °pāḍi, Hamlet of the above caste; இடைச்சேரி.

ஆய்ச்சி[2], ஆய்த்தி, āycci, āytti, [*fem.* of id.] Female of the āy caste; ஆய்ச்சாதிப்பெண்.

ஆய்[5] āy, *n.* [prob. fr. *ācci*] Mother; தாய் (குறு. 35,10).

ஆய்[6] āy, *n.* [Cf. *āyam*[8]] Gold; பொன் (திவ். பெருமாள், 6,4, வ்யா.).

ஆய்[7] āy, *int.* An exclamation expressive of disgust; அருவருப்புக் குறிப்பு.

-ஆய்[8] -āy, *part.* [prob. fr. *ī*, original form of the *pron. nī*] 1. Verbal termination of second person singular; முன்னிலை ஒருமை வினை விகுதி. உ-ம்: "படித்தாய்". 2. Do. of imperative singular; ஏவலொருமை விகுதி. உ-ம்: "நடவாய்".

-ஆய்[9] āy, *part.* [lengthened form of -*ai*[7]] A vocative case ending; ஒரு விளியுருபு. உ-ம்: "அன்னாய்" <அன்னை.

-ஆய்[10] -āy, *part.* [fr. *āku*, 'to become'] Adverbial termination, as in; நன்குய்=நன்குக.

ஆய்ச்சி[3] āycci, *n.* [prob. corruption of *āttai*—ஆத்தை] 1. Mother; தாய் (ஈடு. 6, 1, 4). 2. Grand-mother; பாட்டி. 3. Honourable expression for women; பெண்.

ஆய்த்து āyttu, for *āyiṟṟu*;=ஆயிற்று (கம்பரா. கைகேசி. 66).

ஆய்மா āymā, *n.* 1. Carey's myrtle bloom; ஆயிமாமரம். 2. Piyar; சாரப்பருப்பு.

ஆய்-வர[2] āy-vara, *v. intr.* [for *āki-vā*] To bring good luck; கைகூடிவர.

ஆயக்கட்டு[2] āyakkaḍḍu, *n.* [perh. *ayal*+*kaḍḍ-u*] 1. Extent of land irrigated by a tank; குளப்பரவு. 2. Measurement of land determining the boundaries of a village; கிராமத்தின் மொத்த நிலவளவுக்கணக்கு.—CPD ஆயக்கட்டு-மானியம் °māṉiyam, Money allowance claimed under Government sanads; சர்க்கார் சன்னதுப்படி பணமாக வசூலிக்கும் மேரை.

K., M., Tu. *ayakkaṭṭu*.

ஆயக்கம் āyakkam, *n.* [id.?] Total number; மொத்தவெண். —CPD ஆயக்க-சுரம் °curam, Intermittent fever; முறைநக்காய்ச்சல்.

ஆயக்கர் °āyakkar, *n.* [id.?] A class of village servants who are entitled to a portion of the crop; கிராம வேலையருள் ஒரு சாரார்.

ஆயக்கல் āyakkal, V. *āy-k-kal*; =ஆய்-க்-கல்.

ஆய-க்-கால், °கோல் āya-k-kāl, °kōl, *n.* [perh. *āyattam* + *kāl, kōl*] 1. Forked stick on which a palanquin or the vehicle of an idol would rest, when carried through the streets; வாகனத்தைத்தாங்கும் முட்டு. 2. Prop; முட்டுக் கட்டை.

ஆயக்-குழல் āyak-kuḻal, *n.* [*āyaṉ*+*kuḻ-al*] Flute; புல்லாங்குழல்.

ஆயசம் āyacam, *n.* [S. *āyasa*, V. *ay-acu*—அயசு] 1. What is made of iron; இரும்பாற் செய்தது. 2. Iron weapon; இருப்பாயுதம். 3. Coat of mail; இருப்புச் சட்டை.

ஆயசூரி āya-cūri, *n.* [Cf. *ācūram*] Indian mustard; கடுகு.

ஆ-யத்தம்[1] ā-yattam, *n.* [S. *ā-yatta*, 'dependant', fr. *yat*, 'to bind'. Cf. T. *yātt-al*, also *attu*[1]] 1. Readiness, preparation; அணி அடுக்கு. 2. (Mus.) A musical mode; இசைக்கிளையில் ஒன்

று (பெரியபு. ஆனாய. 26, உரை). 3. (Cath.) Vestments &c. for holy Mass; திவ்விய பூசைக்குரிய உடுப்புகளாதியன. —CPD ஆயத்தக்-காரன் °kāraṉ, One who is preparing for the Sacraments; தேவ திரவிய அநுமானங் களைப்பெற அடுக்குப் பண்ணுவோன்.

ஆ-யத்தி ā-yatti, *n.* [id.] 1. Boundary; எல்லை. 2. Day; நாள். 3. Strength; வலி. 4. Power of fascinating; வசித்துவம். 5. Affection; அன்பு.

ஆ-யத்தம்[2] ā-yattam, *n.* [S. *ā-yasta*, V. *ā-yācam*] 1. Anger; கோபம். 2. Rejection; தள்ளுகை. 3. Sharpness; கூர்மை.

ஆ-யதம் ā-yatam, *n.* [S. *ā-yat-as*, fr. *yam*, perh. akin to T. √*am*. Cf. also *ā-yattam*[1]] 1. Length; நீளம். 2. An oblong; அகலம் குறைந்து நீளம் கூடியிருக்கும் வடிவம். 3. An oval; முட்டைவடிவம்.

ஆ-யதி ā-yati, *n.* [id.] 1. Connection; பொருந்துகை. 2. Future; வருங்காலம். 3. Length; நீட்டு. 4. Dignity; மகிமை.

ஆயத்துக்கருத்தன் āyattukkaruttaṉ, *n.* A mineral poison; அஞ்சன பாஷாணம்.

ஆயந்தி āyanti, *n.* [prob. corrupted fr. *aiyaṉ-tēvi* — ஐயன்-தேவி?] Elder brother's wife; தமையன் மனைவி.

ஆயம்[1] āyam, *n.* [prob. fr. *āy*[2] — ஆய்[2]-தல்=ஆழ்ந்திருத்தல்?] 1. Secret; இரகசியம். 2. Affliction; வருத்தம் (தேவா. 648, 7). 3. Cloud; மேகம். 4. Kind of drum; மல்லரிப்பறை. 5. Bow-string; நாணி. 6. [Cf. *āḻ-am*] Pit 34" deep, a standard of measurement; 34 அங்குல ஆழமுள்ள அளவுக்குழி. —CPDS ஆயக்-கட்டு[2] °kaḍḍu, A deceitful fabrication; மோசமயமான பேச்சு. ஆய-ப்-பாலை °pālai, One of the four modes of ancient Tamil music; பாலைவகை (சிலப். 17, எடுத்துக். 8, உரை). ஆய-மானம் °māṉam, Secret; இரகசியம். Vital part; உயிர் நிலையம்.

ஆயம்[2] āyam, *n.* [prob. fr. *ayal*. Cf. semantically *cuṟṟam*, fr. *cūḻ*] 1. Female attendants of a lady; தோழியர் கூட்டம். 2. [by analogy] Crowd of people; மக்கள் தொகுதி (சிலை. 42). 3. Herd of cows; பசுத் திரள் (சிலப். 17, உரைப்பாட். 5). 4. Mother; தாய்.

ஆயத்தார் āyattār, =āyam[2](1); =ஆயம்[2](1).

ஆயம்[3] āyam, *n.* [S. *āyas*, fr. *i*, T. *iḷ-i* with *ā*-[10]] 1. Income, profit; வருவாய். 2. Customs; குடியிறை. 3. Duty; கடமை. 4. Gambling, dice; சூதாட்டம், கவறு. 5. Gold; பொன் (திவ். பெருமாள், 6, 4, வ்யா.) (Prov.) ஆயத் துக்குள்ளே மாயம், "A small gain in a small traffic" —CPDS ஆயக்-காரன் °kāraṉ, Tax-gatherer; சுங்கம் வாங்குவோன். (Chr.) Publican; யூதருள் வரி வாங்கி வந்தோன். ஆயத்-தலம், °துறை °talam, °turai, Custom house; சுங்கச் சாவடி. ஆயந்-தீர °tīra, To pay toll or duty; வரி செலுத்த. ஆய-மேரை °mērai, Portion of the crop assigned to the village servants; கிராமவூழியர்க்குக் கொடுக்குந் தானியப்பகுதி. ஆய-வியயம் °viyayam, Income and expenses; வரவு செலவு.

-ஆயம்[4] -āyam, *suff.* [prob. < *ā(ki)y-atu*, — < ஆ(கி)யது] A stem-suffix with the sense of 'state of having become'; ஆனது என்னும் பொருளுள்ள ஒரு கடைநிலை. உ-ம்: "கட்டாயம்".

ஆயமுற்கரவ(ல)ன் āyamuṟkarava(la)ṉ, *n.* Kubera; குபேரன்.

ஆயலோட்டல் āyal-ōḍḍal, *n.* [*āy-al*, fr. *āy*[2], 'to pluck' + *ōḍḍ-u*, 'drive away'] Scaring away of birds from the crops by shouts of women; மகளிர் பறவைகளை வெருட்டுகை.

ஆயவன் āyavaṉ, *pron.* [*ā(ki)ya+avaṉ* ஆ(கி)ய+அவன்] Such a one; அன்னோன் (கம்பரா. திருவவ. 1).

ஆயன் āyaṉ, *n.* [*āy*, standing for *ā*[4] +-*aṉ*[5]. According to *Sentamiḻ* ix, p. 185, cows were also known as *āy*, 'mother'] Herdsman, man of the cowherd caste; பசு மேய்ப்போன், இடையன். —CPD ஆயன்-பதி °pati, Stomach; வயிறு (Coll.).

ஆயர்-பாடி āyar-pāḍi, *n.* [*pl.* of id. + *pāḍ-i*, 'habitation' =*paḷḷ-i*] Hamlet of cow-herds; இடைச்சேரி (திவ். நாய்ச். 14,2).

Cf. S. *ābhīra-pallis*.

ஆயனம் āyaṉam, *n.* [S. *hāyanas*, prob. fr. *hayanas*, 'year', fr. *hay* or *hi*, akin to T. *iy-aṅku*—இயங்குவது] 1. Year; வருஷம். 2. Ray of light; கிரணம். 3. A kind of paddy; நெல்வகை.

ஆயனி āyani, *n.* [prob. aph. of *Kātyāyani* &c.] Durgā; துர்க்கை.

ஆயா[1], ஆயாள் āyā, āyāḷ, *n.* [*āy*[5] + -*āḷ*] 1. Grand mother; பாட்டி. 2. Nurse; செவிலித்தாய்.

Cf. L. *avia*, *ava*, 'grand mother'; Got. *awo*; Hind. *aya*.

ஆயா[2] āyā, *n.* [Port. *aia*, akin to Fr. *aide*, L. *aidus*, 'helper'] Lady's chamber maid; தாதி.

ஆயா[3] āyā, *n.* Entire-leaved elm: Holoptelea integrifolia; மரவகை.

ஆ-யாசம் ā-yācam, *n.* [S. *ā-yā-sas*, 'weariness', fr. *yas*. Cf. T. *īēy*] 1. Fatigue; களைப்பு. 2. Effort; முயற்சி. 3. Annoyance; மனவருத்தம்.

ஆ-யாமம் ā-yāmam, *n.* [S. *ā-yām-as*, 'restraint, stretching', fr. *yam* akin to *yat*. V. *ā-yattam*[1]] 1. Restraining the breath; மூச்சடக்குகை. 2. Length, நீளம். 3. Breadth; அகலம்.

ஆ-யானம் ā-yāṉam, *n.* [S. *ā-yāṉ-am*, 'coming' fr. *yā*, T. *iy-aṅku*—இயங்கு-தல்] Natural disposition; இயற்கைக் குணம்.

ஆயாள் āyāḷ, V. *āyā*[1]; ஆயா[1] பார்.

ஆயான் āyāṉ, *n.* [Cf. *ācāṉ* and *āttāṉ* —ஆசான், ஆத்தான்] 1. Father; தந்தை. 2. Elder brother; தமையன். 3. Member of the Kārkātta Vēḷāḷa community; கார்காத்த வேளாளன்.

Cf. Sinh. *ayiya*, 'elder brother'; S. *jyāyas*.

ஆயி[2] āyi, *n.* [*āy*[5] + -*i*[4]—ஆய்] Mother; தாய்.

ஆயி[3] āyi, V. *āyā*[3]; =ஆயா[3].

ஆயிட்டு āyiḍḍu, *conj.* [*āki-iḍḍu*—ஆகி+இட்டு] Therefore; ஆகையால் (ஈடு. 6, 5, 3).

ஆயிடல் āyiḍal, *v.* [id.] Becoming, originating; ஆகுதல், தோன்றுதல்.

ஆயிடை āyiḍai, *n.* [*a*-[4] + *iḍ-ai*, 'place' —அ-[4]+இடை] 1. That place (சீவக. 357). 2. [*adv.*] At that time; அக்காலத்து (சீவக. 219).

ஆயிரம் āyiram, *n.* [S. *sahas-ram*, M. *sāvira*, *savara*; Tel. *sāra*; Tu. *sāvira*, *savara*, *sāra*, (Caldwell). Old K. seems to have had a form *cāciram*, now *sāviram* (*Sentamiḻ* iv, 263). The etym. of the S. is disputed. Perh. fr. *sahas*, 'power'. Cf. T. *tak-u*] The number 1000; பத்து நூறு கொண்ட எண் (தொல். எழுத். 391). —CPDS ஆயிரவ்-ஆரத்தாழியன் °āratt'āḻiyaṉ, Buddha said to have had a disc in his foot with 1000 lines; புத்தன். ஆயிரக்-காலி °kāli, Millipede; மரவட்டை. Broom; துடை

ப்பம். ஆயிரக்-கான்மண்டபம் °kāl-maṇḍapam, Hall of 1000 pillars in large Hindu temples; கோயில் மண்டபம். ஆயிரக்-கிரணன் °kiraṇaṉ, Sun; சூரியன். ஆயிரங்-கண்ணன் °kaṇṇaṉ, Indra represented as having 1000 eyes; இந்திரன். ஆயிரங்-கண்ணுப்-பானை °kaṇṇup-pāṉai, Painted pot used by certain castes in marriages; கலியாணத்தில் உபயோகிக்கும் வர்ணப் பானை. ஆயிரங்-கதிரோன் °katirōṉ, Sun; சூரியன். ஆயிரங்-காய்ச்சி °kāycci, Very fruitful coconut, jack &c.; மிகுதியாய்க் காய்க்கும் தென்னை, பலா ஆதியன. Broom; துடைப்பம். ஆயிரங்-காலி °kāli, V. āyirak-kāli; =ஆயிரக்-காலி. ஆயிரங்-காற்-சடை °kāṟ-caḍai, Broom; துடைப்பம். ஆயிரஞ்-சோதி °cōti, Sun; சூரியன். ஆயிர-நாமன் °nāmaṉ, Siva, Vishnu; சிவன், விட்டுணு. ஆயிரம்-பெயரோன் °peyarōṉ, Vishnu; திருமால். ஆயிரம்-பணா முடியோன் °paṇā-muḍiyōṉ, The serpent Ananta; ஆதிசேடன். Mountain containing zinc, துத்தங் கொண்ட மலை. ஆயிர-முகத்தோன் °mukattōṉ, Vīrabhadra; வீரபத்திரன். ஆயிர-வருக்கம் °varukkam, Panoply; உடற்கவசம்.

ஆயில்¹ āyil, n. 1. Aśōka tree; அசோகு. 2. Chittagong wood: Chickrassia tabularis; மதகிரிவேம்பு. 3. Indian mahogany: Cedrola toona; செவ்வகில்.

ஆயில்², ஆயிலியம் āyil, āyiliyam, n. [S. ā-ślēṣas] The 9th nakṣatra, part of Hydra in Karkkaḍakarāci; இருபத்தேழில் ஒன்பதாம் நட்சத்திரம்.

ஆயி'ழை āy-iḻai, n. [āy¹ + iḻ-ai, 'ornament'—ஆய்¹-இழை] 1. Choice ornament; தெரிந்தெடுத்த அணிகலம். By meton. Lady; பெண் (மணி. பதி. 67). 2. Virgo of the zodiac; கன்னிராசி (விதானமாலை, பஞ்சா. 14). 3. Edge of a sickle; அரிவாள் நுனி.

ஆயிளை āyiḷai, n. [See word above] Head, edge of the bill-hook; தலை, கூர்.

ஆயின் āyiṉ, conj. [ākil, fr. āku] But, if; ஆனால்.

ஆயினும் āyiṉum, conj. [fr. ākil-um—=ஆகிலும்] 1. Although; ஆனாலும். 2. Either....or; ஆவது. உ-ம்: "பத்தாயினும் எட்டாயினும் கொடு". 3. And; உம்மைப் பொருளில் வரும் எண்ணிடைச்சொல் (சிலப். 1,14, உரை).

ஆயின்மேனி āyiṉmēṉi, n. [perh. āyiṉ+mēṉi] An emerald; மரகதவகை.

ஆயினி āyiṉi, n. [Cf. akil—ஒப். அகில்] 1. Breadfruit tree; ஈரப்பலா. 2. Anjali; காட்டுப்பலா.

M. āyini.

ஆயு, ஆயுகம் āyu, °kam, n. [S. āyus, perh. fr. the T. √āy¹. Cf. āyuḷ below] 1. Life-time; (சைவச. பொது. 109). 2. (Jaina) The karma which determines the length of time which a jīva must spend in the form occasioned by another karma of his; எண்குற்றங்களுள் ஆயுட்காலத்தை வரையறுக்கும் அது (சூடா.) —CPDS ஆயு-வ்-இன்மை °iṉmai, Eternity, one of the eṇ-kuṇam of Arukaṉ; அருகன் எண்குணத்தொன்று. ஆயு-காரகன் °kārakaṉ, Saturn who, as the god of life, fixes the age of men; சனி பகவான். ஆயு-சகன் °cakaṉ, Wind; வாயு. ஆயு-த்-தானம் °tāṉam, See āyuḍḍāṉam; =ஆயுட்டானம். ஆயு-நூல் °nūl, Āyur-veda; ஆயுர்வேதம் (தக்கயா. 792). ஆயு-முதியோர் °mutiyōr, The aged; வயோதிகர்.

ஆயுசு āyucu, [S. āyus. Cf. word above] 1. Life time; வாழ்நாள் (பிங்.) 2. Age; வயது. —CPD ஆயுசு-விருத்தி °virutti, Longevity; தீர்க்காயுசு. Iron sand; உலோக மணல் [Here āyucu might be fr. ayacu, 'iron'].

ஆயுதம்¹ ā-yutam, n. [S. ā-yudh-am, 'weapon', fr. yudh, 'to fight'. Cf. T. uytt-al, 'to send an arrow'] 1. Arms; படைக்கலம். 2. Tool; கருவி. —CPDS ஆயுதா'காரம் °ākāram [+ākāram¹] Armoury; படைக்கல வீடு. ஆயுத-சாலை °cālai, Do; டை. ஆயுதப்-பயிற்சி °payiṟci, Military exercise; படைக்கலம் பழகல். ஆயுத-பரிக்கை, °பரீட்சை °parikkai, °parīḍcai, Military exercise; இராணுவப் பயிற்சி. Practice in the art of fencing &c.; சிலம்பம் முதலியவற்றிற் பயிற்சி. ஆயுத-பாணி °pāṇi, Man under arms; ஆயுதந் தரித்தவன். ஆயுத-பீடை °pīḍai, Sixth house from the lagna of one's birth; இலக்கினத்துக்கு ஆறுமிடம். ஆயுத-பூசை °pūcai, Worship offered to different tools, books &c. in Puraḍḍāti in honour of Durgā, Lakṣmī and Sarasvatī; புரட்டாசி மாதத்திலே வரும் நவராத்திரியில் வேலைக்கருவிகளை வைத்துச் செய்யும் வழிபாடு. ஆயுத-வகை °vakai, The two kinds of weapons, viz: (1) அத்திரம், missiles; (2) சத்திரம், those held in the hand. ஆயுத-வருக்கம் °varukkam, Armour in general, panoply; போர்க்கருவி ஆதியன. [Cf. āyira-varukkam].

ஆயுதம்² āyutam, n. [Cf. āyattam¹] A musical mode; ஆயத்தம்¹ (2).

ஆயுதிகன் āyutikaṉ, n. [V. ayutam—அயுதம்] One in command of 10,000 soldiers; பதினாயிரங்காற்படைக்குத் தலைவன் (சுக்கிரநீதி, 73).

ஆயுர், ஆயுரு āyur, °u, n. [S. āyus, V. āyuḷ] —CPDS ஆயுர்-ப்-பாவம் °pāvam (Astrol.) Forecast of the length of a man's life; வாழ்நாளின் நீடு. ஆயுர்-வேதம் °vētam, Science relating to the Hindu system of medicine; வைத்திய சாஸ்திரம். ஆயுர்வேதா'க்கினி °akkiṉi, Fire used in preparing medicines, which consists of three kinds:—(1) தீபா'க்கினி, tīpa°, flame of a lamp; (2) கமல°, kamala°, fire glowing as the lotus flower; (3) காட°, kāḍa°, immoderate or great fire (Winslow).

ஆயுள் āyuḷ, n. [a-⁴ + -uḷ²—அ-⁴ + -உள்²] 1. Then, at that time; அப்பொழுது. 2. [Cf. S. āyu] Life-time; வாழ்நாள். —CPDS ஆயுள்-வேதம் °vētam, Science of Hindu medicine; இந்து வைத்திய சாஸ்திரம். ஆயுள்-வேதர், °வேதியர் °vētar, °vētiyar, Men well versed in the science of medicine; வைத்தியத் துறை வல்லார்.

Cf. Sinh. ayu, 'duration'; S. ayu, ayus. V. ay³.

ஆயுஷ்- āyuṣ-, n. [S. āyus, V. āyu] Life; வாழ்நாள். —CPDS ஆயுஷ்-காரகன் °kārakaṉ, V. āyu-kārakaṉ; =ஆயு-காரகன். ஆயுஷ்-தானம் (ஆயுட்டானம்) °tāṉam (Astrol.) The eighth house from the lagna of one's birth; சன்ம லக்கினத்திலிருந்து எட்டாமிடம். ஆயுஷ்-மான், ஆயுண்-மான் °māṉ, One blessed with long life; தீர்க்காயுள் உடையவன். (Astron.) A division of time: one of 27 yōkam; யோகம் இருபத்தேழில் ஒன்று.

ஆயுஷ்யம் āyuṣyam, n. [S. āyuṣya] (Jaina) V. āyu(2); =ஆயு(2). —CPD ஆயுஷ்ய-வ்-ஓமம் °ōmam, Homa ceremony performed on one's birth-day &c. for securing long life; தீர்க்காயுள் வேண்டி வருஷந்தோறும் விசேஷ காலங்களிற் செய்யும் ஓமம்.

ஆயுஷ்டோமம் āyuṣḍōmam, n. [id. + stōmas, 'praise, crowd', fr. stu, akin to T. tūṟṟ-u] V. āyuṣya-v-ōmam; =ஆயுஷ்ய-வ்-ஓமம்.

ஆயு-ஸ்தானம் āyu-stāṉam, V. āyuṣ-tāṉam. —CPD ஆயுஸ்-தானாதி-பதி °tāṉāti-pati, (Astrol.) Lord of

the 8th house from the ascendant; இலக்கினத்திலிருந்து எட்டாமிடத்திற்கதிபதி.

**ஆயே** āyē, *int.* 1. Expression of admiration; வியப்புக்குறிப்பு. 2. Of friendly invitation; அன்புகாட்டி அழைக்கும் ஒலிக்குறி.

S. *aye.*

**ஆயோ** āyō, *int.* Exclamation to frighten away birds; பறவை துரத்துதலைக் குறிக்கும் ஒலி (திவ். இயற். திருவிருத். 10).

**ஆ-யோகம்** ā-yōkam, [S. *ā-yōg-as*, fr. *yuj*. Cf. T. *okk-a*] 1. Offering of flowers &c. in worship; அர்ச்சனை. 2. Moorings to which boats are attached; மரக்கலம் கட்டும் பத்தி (பெரியபு. கழறிற். 49). 3. Bank of a stream; நீர்க்கரை.

**ஆ-யோசனம்** ā-yōcaṉam, *n.* [id.] 1. Seizing; பிடித்தல். 2. Collecting; திரட்டுதல். 3. Effort; முயற்சி.

**ஆயோகவர்** āyōkavar, *n.* [S. *āyōgava*, fr. *a-yōga?*] A section of weavers; கைக்கோளர் பிரிவு (M. E. R. 508 of 1922).

**ஆயோதம், ஆயோதனம்** āyōtam, °aṉam, *n.* [for etym. V. *ā-yutam*—ஆ-யுதம் பார்] 1. War; போர் (Prov.) ஆயோதனமுகத்தில் ஆயுதம் தேடல்போல, "Like searching for arms at the moment of battle". 2. Hunting; வேட்டம்.

**ஆயோர்** āyōr, *pron.* [*ākiya-avar*] 1. They; அவர்கள். 2. Such persons; அன்னோர்.

**ஆர்$^{1}$-தல்** ār, *4 v. intr.* [√*ar*, 'to move, join, crowd'—√அர்] 1. To spread over; பரவுதல் (திணை. 95, உரை). 2. To combine with; பொருந்துதல் (திவ். இயற். திருவெழு. 11 கண்ணி.). 3. To abide; தங்குதல் (திவா.). 4. To become full; நிறைதல் (திவ். திருவாய். 10, 105). 5. [Cf. *ayil*$^{3}$] To be satisfied; திருத்தியாதல் (திவ். திருவாய். 2, 5, 5). 6. [*v. tr.*] To get; பெறுதல் (கந்தபு. தேவ. 11). 7. To wear; அணிதல் (பிங்.). 8. To resemble; ஒத்தல் (பெரியபு. திருநா. 314). 9. To eat; உண்ணுதல் (புறம், 34, 14). 10. To experience; அனுபவித்தல் (கலித். 42, 13).

T., M., K. *aru;* Cf. S. *ar*, 'to come, reach'.

**ஆர்** ār, *n.* [id. 'spread over, filled'] 1. Earth; பூமி (மறைமலையந்தாதி 1). 2. Calyx; மலரின் பொருத்துவாய். 3. Axle tree; அச்சுமரம். 4. Central bolt of a car; தேரின்கடைத்திற் செருகாணி (பிங்.). 5. Spoke of a wheel; இலைக்கம்பு (சீவக. 828). 6. Fulness; நிறைவு (பிங்.). 7. Beauty; அழகு.

S. *aras* (for *aras?*), 'spoke of a wheel'.

**ஆர்-** ār- *ple.* as *adj.* [id. 'full'] —CPDS **ஆர்-அஞர்** °añar, Abundant sorrow; மிகுதுக்கம். **ஆர்-அருள்** °aruḷ, Perfect benevolence; பூரணதயை. **ஆர்-பதம்** °patam [+*pal-am*, 'what is cooked to the required degree'] Food; உணவு. [+S. *pad-am*, 'standing place', T. *paḍ-i*] Shade; நிழல். **ஆர்-மதி** °mati, The house of the moon, Cancer in the Zodiac; கர்க்கடகராசி. Crab; நண்டு.

**ஆர்வம்$^{1}$** ārvam, *n.* [*ār-vu*+*-am*$^{2}$] 1. Affection; அன்பு (தொல். பொ. 40). 2. Desire, hankering; விருப்பு, அவா (மதுரைக். 489). 3. Devotion; பக்தி (திவ். இயற். 1, 35). —CPD **ஆர்வ-மொழி** °moḻi (Rhet.) Impassioned language to express one's intense love; உள்ளத்து நிகழும் அன்பு மிகுதியை வெளியிடும் அலங்காரம் (தண்டி. 67).

**ஆர்வலன்** ārvalaṉ, [*ār-val*=*ār-vam* +*-aṉ*$^{5}$] 1. Kind, affectionate person; அன்புடையவன் (குறள், 71). 2. Husband; கணவன் (பிங்.). One who seeks a present from a patron; பரிசிலன் (புறம், 12). **ஆர்வலிக்க**, To be extremely kind; மிக அன்பு கூர (தேவா. 997, 5).

**ஆர்வு** ārvu, *n.* [id.+ *-(v)u*$^{6}$] 1. Fulness; நிறைவு. 2. Eating and drinking; அருந்துதல். 3. Desire; ஆசை (புறம். 158,22).

**ஆர** āra, *adv.* [id.+ *-a*$^{11}$] 1. Fully; மிக. "ஆரப்பருக" (திவ். திருவாய். 10,10,5). 2. [*part.*] A sign of comparison; உவமச்சொல் (தொல். பொ. 286, உரை). **ஆர-அமர** At leisure; சாவகாசமாய்.

**ஆரம்$^{1}$** āram, *n.* [prob. id.+ *-am*$^{2}$, 'what is joined, spread'] 1. Ring round the neck of doves &c.; பறவைக் கழுத்துவரி (திருப்பு. 748). 2. Necklace of flowers, pearls &c.; பூமாலை, மணிவடம். Hence: 3. Pearl, ornaments; முத்து, ஆபரணம். 4. Spoke of a wheel; இலைக்கம்பு. 5. Membrane hanging from the neck of cattle and goats; ஆடு மாடுகளின் கழுத்திற் தொங்கும் தசை. 6. Pendant; பதக்கம்.—CPDS **ஆரக்-கழுத்தி** °kaḻutti, A woman with inauspicious lines on her neck; கழுத்தில் நிரைகையுள்ள பெண். (Prov.) "ஆரக் கழுத்தி அரமனைக்காகாது". **ஆரக்-கால்** °kāl, Spoke of a wheel; இலைக்கம்பு. **ஆர-வடம்** °vaḍam, String of pearls; முத்துமாலை.

S. *haras*, 'pearl necklace', is prob. fr. the above. The popular derivation fr. *hṛi*, 'to take away', is untenable.

**ஆர்$^{2}$-த்தல்** ār, *11 v. tr.* [a strengthened from of *ār*$^{1}$—ஆர்-தலின் வலியுறுத்திய உருவம்] 1. To bind, gird; கட்டுதல் (தேவா. 16,11). 2. To put on; அணிதல் (திவா.). 3. To obscure, shield; மறைத்தல் (சி. சி. 2,80). 4. To slander; அலர்தூற்றல் (கலித். 33,14). 5. To pat oneself; தட்டுதல். உ-ம்: "மார்பார்த்தல்" (இன். 19).

**ஆர்ப்பு$^{1}$** ārppu, *n.* [id.+ *-(pp)u*$^{6}$] Bondage; பந்தம் (சி. சி. 4,24).

**ஆர்$^{3}$-த்தல்** ār, *11 v. intr.* [for etym. V. *aravu*$^{3}$—அரவு$^{3}$ பார்] To shout, roar; ஒலித்தல் (திருவாச. 3, 151). 2. To fight; போர் புரிதல் (திவா.) 3. To shine; மின்னுதல்.

K., M. *ar;* Tu. *arkuni;* Tel. *artsu.*

**ஆர்-கலி$^{1}$** ār-kali, *n.* [*ār(kkum)* +*kol-i*, 'the sounding thing'—ஆர்(க்கும்)+கலி] 1. Sea; கடல் (திருவாச. 18, 2). 2. Flood; வெள்ளம் (நெடுநல். 3). 3. Rain; மழை. —CPD **ஆர்கலி-வாரணம்** °vāraṇam, White elephant churned out of the sea; ஐராவத யானை.

**ஆர்ப்பு$^{2}$** ārppu, *n.* [id.+-*(pp)u*$^{6}$] 1. Loud noise; பேரொலி (கந்தபு. நாட். 45). 2. Battle; போர் (பிங்.). 3. Excessive pitching of a lute string; மாத்திரை கடந்த சுருதி (சிலப். 8, 29). 4. Laughter; சிரிப்பு (பிங்.). 5. Exultation; மகிழ்ச்சி. —CPD **ஆர்ப்பரிக்க** ārpparikka [+*-ari*$^{6}$ where the *-i* functions as verbal determ. See Law I] To shout, resound; ஆரவாரிக்க.

**ஆர்$^{4}$** ār, *n.* [for *āram*$^{2}$—ஆரம்$^{2}$ பார்] 1. Brass; பித்தளை. 2. Common mountain ebony; ஆத்தி. 3. Holy mountain ebony; திருவாத்தி. —CPD **ஆர்க்-கண்ணியன்** °kaṇṇiyaṉ, Title of the Cholas as wearing a garland of *ātti* flowers; சோழன்.

**ஆர்$^{5}$** ār, *n.* [√*ar*, 'to diminish'. Cf. *aru*$^{3}$=அரும்] 1. Sharpness; கூர்மை (சிலப். 5, 124). 2. Nearness; சமீபம். [*adj.*] 3. Sharp; கூரிய. 4. Rare; அருமையான.

ஆர்த்தம் ārttam, *n.* [prob. id. 'what is pressed down'] That which is distressed; துன்பம் அடைந்தது (தேவா. 157,4).

Cf. S. *arta*, 'afflicted', whose derivation is obscure in S.

ஆர்த்தி ārtti, *n.* [See the above word] Affliction; வேதனை (கந்தபு. கந்தவி. 100).

ஆர்ப்பு[3] ārppu, *n.* [id.] Piece of thorn broken off in one's flesh; தைத்த முள்ளின் ஒடிந்த கூர்.

ஆர்மை ārmai, *n.* [id. + -*mai*[2]] 1. Sharpness, keenness; கூர்மை. 2. Coping of a wall; சுவரின் தலைக் கட்டு. 3. Rampart; மதில்.

ஆர்[6] ār, *pron.* [fr. *ēvar*— < எவர்] Who?; யார்? (திருவாச. 10,2).

K. *aru;* M. *ar;* Tel. *daru;* Kui. *anaru*, Ma. *nēreh, estari;* Tu. *yar;* Br. *der.*

ஆர்[7] ār, *n.* [S. *āras* <Gr. *arēs*, 'impetus'? Boisacq, Cf. *ār*[8]] The planet Mars; செவ்வாய்.

ஆர்[8] ār, *n.* [Cf. S. *ārag-badha*] Indian laburnum; சரக்கொன்றை.

-ஆர்[9] -ār, *part.* A paragoge popularly added to the auxiliary, *ā(ku)*, as in *aṇṇār* for *aṇṇā*; அண்ணாத்தல், அண்ணார்தல் என வருதற்போல இடையில் சேரும் ஒரு உறுப்பு.

-ஆர்[10] -ār, *part.* [for—*ar*[1]] 1. Termination of the 3rd pers. *pl.* of the rational class; பலர்பாற் படர்க்கை விகுதி. உ-ம்: வந்தார். Also honorific for the *sing.;* மரியாதைப் பன்மைப் படர்க்கை விகுதி. உ-ம்: தாயார், தகப்பனார். 2. Additional termination implying respect; ஒருவரை உயர்த்திக் கூறுதற்கு வழங்கும் விகுதி. உ-ம்: "இறையனார் களவியல்" (சி. சி. பாயி. 3).

-ஆர்[11] -ār, *part.* [prob. fr. *ār*[1]] An expletive in combination with the copula *um*; அசைநிலையாக வரும் ஒரு இடைச்சொல். உ-ம்: "பெயரினுமெய் தொகையுமாருளவே".

ஆர்க்கம்[1] ārkkam, *n.* [Cf. *arkkaṉ*— ஒப். அர்க்கன்] 1. Blood; இரத்தம். 2. The climbing shrub கோவை. 3. Brass; பித்தளை. 4. Sandalwood; சந்தனம். —CPD ஆர்க்கங்-கோடன், °கோவை °kōḍaṉ, °kōvai, Ārkkam(2); = ஆர்க்கம் (2).

ஆர்க்கம்[2] ārkkam, *n.* [fr. *arkkam*[3]— <அர்க்கம்[3]] 1. Merit; பேறு. 2. Profit; இலாபம்.



ஆர்க்கு[1] ārkku, *n.* [Cf. *arkkam*[2]— அர்க்கம்[2]] 1. Maddar; எருக்கு (தைலவ. தைல. 6). 2. A member of Lamellibranch cockle, species of Cardium; இனிஞ்சில் வகை. 3. A kind of fish; மீன்வகை.

ஆர்க்கு[2], ஆர்க்கை ārkku, ārkkai, *n.* [Cf. *irkku* —ஒப். ஈர்க்கு] 1. Stem of a compound leaf; இலைக்காம்பு. 2. Sherd of a palm leaf taken off lengthwise; வாரடை.

ஆர்க்குவதம் ārkkuvatam, *n.* [S. *ārag-badha*, prob. <*arakku*[2]] Indian laburnum; சரக்கொன்றை.

ஆர்கதம் ārkatam, V. *ārukatam;* = ஆருகதம்.

ஆர்கதி ārkati, V. *ārakanti;* = ஆரகந்தி.

ஆர்கலி[2] ārkali, V. *ārkati;* = ஆர்கதி. [*ār-kali*[1] V. under *ār*[2]].

ஆர்கோதம் ārkōtam, V. *ārkkuvatam;* = ஆர்க்குவதம்.

ஆர்ச்சவம் ārccavam, *n.* [S. *ārjavam*, 'straightness', fr. *ṛij*. Cf. T. *oḻuk-u*] 1. Truth, honesty; உண்மை, நேர்மை. 2. Impartiality; நடுவுநிலைமை.

ஆர்ச்சனம்[1], ஆர்ச்சனை, ஆர்ச்சிதம் ārccaṉam, °caṉai, °citam, *n.* [V. *aruccitam*[2] —அருச்சிதம்[2]] Earning, acquisition; தேட்டம், சம்பாத்தியம்.

ஆர்ச்சிக்க ārccikka, *v.* [id.] To earn, accumulate; சம்பாதிக்க, சேர்த்துவைக்க.

ஆர்ச்சனம்[2] ārccaṉam, *n.* [V. *arccaṉai*— < அர்ச்சனை] Worshipping; பூசித்தல்.

ஆர்ச்சி ārcci, *n.* [*ār*[4]—ஆர்[4]] Common mountain ebony; ஆத்தி.

ஆர்த்தப(வ)ம் ārttap(v)am, *n.* [S. *ārtava*, 'conforming to the seasons, fr. *ṛitus*, √*ar*] Menses; மகளிர்பூப்பு.

ஆர்த்தம், ஆர்த்தி ārttam, ārtti, V. under *ār*[5]; ஆர்[5] பார்.

ஆர்த்தன் ārttaṉ, *n.* [prob. fr. *arttam*[2]— <அர்த்தம்[2]] Great, wise person; சான்றோன்.

ஆர்த்தியம் ārttiyam, *n.* [S. *ārghyam*, fr. *ārgha*, prob. T. *aṟu-kāl*, 'bee'] Wild honey; காட்டுத்தேன்.

ஆர்த்திரகம் ārttirakam, *n.* [S. *ārdrakam*, fr. *ārdra*, 'wet'. Cf. T. *īr-am*] Ginger; இஞ்சி.

ஆர்த்திரா-தரிசனம் ārttirā-taricaṉam, *n.* [S. *ārdrā*, the 4th or 6th nakṣatra of the lunar mansion + *darś-anam*, 'observation', fr. *driś*, T. *teḷ-i*] A luni-solar festival at Chidambaram &c. about the full moon of Mārkaḻi, when the star Ārdrā is in the ascendant; மார்கழித் திருவாதிரைத் திருநாள்.

ஆர்த்து-தல் ārttu, *v. 5 tr.* [*caus.* of *ār*[1]. Cf. *aruttu*—ஆர்[1]. ஒப். அருத்து] 1. To fill; நிறைவித்தல் (சிலப். 1, 33). 2. To feed; ஊட்டுதல் (மணி. 12, 93). 3. To cause to experience; அனுபவித்தல் (திருமுரு. 270). 4. To give, கொடுத்தல் (பொருந. 174).

ஆர்த்துபம், ஆர்துபம் ārttupam, ārtupam, *n.* Greater galangal; பேரரத்தை.

ஆர்ப்பதம் ārppatam, *n.* [prob. connected with *īr-am*] 1. Greenness; பச்சைவு. 2. Juice; சாரம்.

ஆர்ப்'பரவம் ārpp-aravam, *n.* [*ārppu*[2] + *aravam*[2]] 1. Roar, shout; ஆரவாரம். 2. Battle; போர்.

ஆர்ப்பாடம் ārppāḍam, *n.* [prob. *ārppu*[2] + -*āḍam*[2]] 1. Uproar; ஆரவாரம். 2. Great show, foppishness; இடம்பம்.

Tel. *ārbhaṭamu;* S. *ārabhaṭas*, 'enterprising, courageous man.'

ஆர்ப்பு ārppu, V. *ārttal;* ஆர்த்தல் பார்.

ஆர்பதம்[1] ārpatam, *n.* [Cf. *ārppatam*] Galangal; அரத்தை.

ஆர்-பதம்[2] ār-patam, *n.* [*aṟu-patam*—அறு-பதம்] Small beetle; வண்டு.

ஆர்மை ārmai, V. under *ār*[5]; ஆர்[5] பார்.

ஆர்வம், ஆர்வு, ஆதியன ārvam, ārvu &c. V. *ār*[1]; ஆர்[1]-பார்.

ஆர āra, Do. டிை.

ஆரக்கம் ārakkam, *n.* [fr. *arakku*[2]— <அரக்கு[2]] 1. Red sanders-wood; செஞ்சந்தனம். 2. Eagle wood; அகில்.

ஆரக்குவதம் ārakkuvatam, V. *ārkkuvatam;* = ஆர்க்குவதம்.

ஆரகந்தி ārakanti, *n.* Long pepper; திப்பலி.

ஆரகம்[1] ārakam, *n.* [S. *hāraka*, fr. *hṛi* 'take'. Cf. T. *eḍ-u*] (Math.) Divisor; வகுக்கும் எண்.

ஆரகன் ārakaṉ, *n.* [id.] 1. Thief; கள்வன். 2. Deceitful person; கபடன். 3. Destroyer; சங்கரிப்போன்.

**ஆரகம்**[2] ārakam, *n.* [*ārkkam*[1] = ஆர்க்கம்[1]] Blood; இரத்தம்.

**ஆர-குடம்** °கூடம், °கூலம், °கூளம். āra-kuḍam, °kūḍam, °kūlam, °kūḷam, *n.* [S. *āra-kūṭas*, prob. fr. T. *āram*[2], + *kūḍ-am*, 'hill'] Brass; பித்தளை.

**ஆர-கேரம்** āra-kēram, *n.* [*āram*[1] + S. *kēyūram*, prob. T. *kai*, 'hand' and *ur-ai*, 'ornament'] Bracelet for the upper arm; தோளணி.

**ஆரகோதம்** °கோரம் ārakōtam, °kō-ram, V. *ārakkuvatam*; =ஆரக்குவதம்.

**ஆரசகம்** āracakam, *n.* [*ārakkam*— ஆரக்கம்] Eaglewood tree; அகில்.

**ஆரண்ணியகம்** āraṇṇiyakam; *n.* [V. *āraṇiyam* + *-ukam*[6] — ஆரணியம்] A class of Vedic works closely connected with the Brāhmaṇas and composed in the solitude of forests; பிராமணம் வேதத்தின் ஓர் பகுதி.

**ஆர்'அணங்கு** ār-aṇaṅku, *n.* [*ār*[5] + *aṇaṅku*] 1. Celestial damsel; தெய்வ மகள். 2. Great affliction; ஆற்றதற்கரிய துன்பம் (புறம், 14,17).

**ஆரணம்** āraṇam, [prob. fr. *āraṇya-kam* above—< ஆரணியகம்] 1. A portion of the Veda; ஆரணியகம் (தி. வி. 8. 27, மறை.) 2. The Vedas; வேதம் (கம்பரா. நாடகை. 2). 3. One of the 32 auspicious words for beginning a treatise; செய்யுள்தொடக்குதற்குரிய ஒரு மங்கலமொழி. —CPDS **ஆரண-உருவார்** °uruvār, Siva; சிவபிரான். **ஆரண-வாணர்** °vāṇar [*vāḷ-n-ar*] Brahmans; பிராமணர்.

**ஆரணன்** āraṇaṉ, *n.* [id.+-*aṉ*[5]] Brahmā as the author of the Vedas; பிரமா.

**ஆரணி**[1] āraṇi, *n.* [id.+-*i*[4]] 1. Pārvatī; பார்வதி. 2. Mahā Kālī, மாகாளி. 3. A śakti of Siva; சிவசக்திபேதம். 4. Rattan needle for joining the planks of boats; பிரப்பம் ஊசி.

**ஆரணி**[2] āraṇi, *n.* [S. *āraṇis*. Cf. S. *āraṇam*, 'abyss', which Grassmann derives fr. *araṇam* V. *araṇam*[1]] Whirlpool; நீர்ச்சுழி.

**ஆரணியம்** āraṇiyam, *n.* [fr. *araṇiyam* under *araṇ*[2] —< அரணியம்] 1. Forest as a fortress; காட்டுத்துருக்கம். 2. Forest, jungle; காடு. —CPD **ஆரணிய-சஷ்டி** °caṣṭi, A fast observed by women on the 6th lunar day of the bright fortnight of Āḍi for the sake of offspring; புத்திரப்பேற்றுக்காக மகளிர் அனுஷ்டிக்கும் விரதம்.

**ஆரத்தி** āratti, V. *ālātti*; ஆலாத்தி பார்.

**ஆரத்தியம்**[1] ārattiyam, *n.* [id.] Light; வெளிச்சம்.

**ஆரதி** ārati, *n.* [id.] Song sung while waving lights; ஆலாத்திப் பாட்டு. —CPD **ஆரதி-கற்பூரம்** °karpūram, Camphor for burning and waving before idols; கர்ப்பூர வகை.

**ஆரத்தியம்**[2] ārattiyam, *n.* [S. *ā-ratis*, 'stopping', fr. *ram*. Cf. T. *nira-vu*] Cessation; ஒழிவு.

**ஆரதம்** āratam, *n.* [S. *ārhata*, V. *arukam*[3] — < அருகம்[3]] Vegetarian diet; மச்சமாமிசமற்ற போசனம். —CPD **ஆரதக்-கறி** °kari, Vegetable curry; மரக்கறி.

**ஆரநாலகம்**, °நாலரம், °நாளம் āranā-lakam, °nālaram, °nāḷam, *n.* [S. *āranālam*, origin prob. DR] Vinegar made from sour gruel; காடி.

**ஆ-ரபடி** ā-rapaḍi, *n.* [S. *a-rabhaṭ-as*, °*i*, 'courage' fr. *rabh*, prob. akin to T. *kiḷappu*] 1. Courage; தைரியம். 2. A kind of drama centering round the achievements of great warriors acquiring wealth; பொருள் சேர்க்கும் வீரன் தலைவனாக வரும் நாடக வகை (சிலப். 3,13, உரை).

**ஆரபி** ārapi, *n.* [Arab. *ārabhi*] A specific melody-type; ஓரிராகம்.

**ஆரம்**[1] āram, See under *ār*[1]; ஆர்[1]-தல் பார்.

**ஆரம்**[2] āram, *n.* [prob. fr. *ari*[2], 'yellow'. Cf. *ārkkam* — < அரி= மஞ்சள்] 1. Brass; பித்தளை. 2. Verdigris; களிதம். 3. Sandal-paste; சந்தனக் குழம்பு (பாரத. நிரைமீட். 29). 4. Sandalwood tree; சந்தனமரம். "கோவா ஆரம்" (இறை. பக். 275). 5. Common cadamba; கடம்பு. 6. Common mountain ebony; காட்டாத்தி. 7. Justicia procumbens; கோடகசாலை. 8. Garden; தோட்டம். 9. A mineral poison; அஞ்சன பாஷாணம். —CPD **ஆர-வ்-அலர்** °alar, Flower of Bauhinia racemosa; காட்டாத்திப்பூ.

S. *āras*, *āram*, 'brass, oxide of iron.'

**ஆரம்**[3] āram, *n.* [fr. *ār*[5]— < ஆர்[5]] 1. Nearness; சமீபம். 2. Angle; கோணம். 3. Extremity; அணி. 4. Arrow; பாணம். 5. [Cf. *āral*[1]] The planet Mars, Saturn; செவ்வாய், சனி.

S. *āras*, *āram*, *āra*, Also *ārāt*, 'distant, near'.

**-ஆரம்**[4] -āram, *suff.* [prob. fr. *ār*[1] + *-am*[2]—ஆர்த்தல்] A stem-suffix with the meaning 'full of'; நிறைந்தது என்னும் பொருளுள்ள ஒரு கடைநிலை. உ-ம்: "ஒய்யாரம்".

**ஆ-ரம்பம்** ā-rampam, *n.* [S. *ā-rambhas*, for etym. V. *ā-rapaḍi*—ஆரபடி பார்] 1. Pride; பெருமிதம். 2. Haste; பதட்டம். 3. Tumult; பேரொலி. 4. Murder; கொலை. 5. Beginning; தொடக்கம். 6. Preface; முகவுரை. 7. Effort; முயற்சி. —CPDS **ஆரம்பக்-கோசு** °kocu, A medicinal fruit; சமுத்திராப்பழம். **ஆரம்ப-சூரன்** °cūran, A forward person, one more ready to undertake than to execute; தொடக்கத்தில் வீரனாயிருப்போன். Blusterer; வீம்பு பேசுவோன். **ஆரம்ப-ரூபம்** °rūpam, What proceeds from another thing in a changed form; கடல்நீரிற் றிரைபோல ஒன்றினின்று வேறொன்று மாறிவரும் உருவம். **ஆரம்ப-வாதம்** °vātam, Doctrine of creation out of nothing; உபாதான குணிய சிருட்டிக் கொள்கை. Also the contrary; உபாதானமின்றி சிருட்டியில்லை எனுங் கொள்கை (சி. சி. 1,24, சிவஞா.).

**ஆரம்பிக்க** ārampikka, *v.* [id.] To sound, roar; ஒலிக்க. 2. To begin, undertake; தொடங்க, கையிட.

**ஆரல்**[1] āral, *n.* [fr. *ar-i*[2] + *-al*[7] — < அரி[2]] 1. Fire; நெருப்பு. 2. The third nakṣatra, கார்த்திகை (கலித் 64,4). 3. The planet Mars; செவ்வாய். 4. Brownish or greenish sand-eel: Rhynchobdella aculeata; ஆரல் மீன். 5. A plant; ஒரு சிறு பூண்டு. 6. Bile; பித்தம்.

**ஆரல்**[2] āral. *n.* [Cf. *ārmai*—ஒப். ஆர்மை] 1. Coping of a wall; சுவர்மேல் அமைக்கும் மறைப்பு. 2. Wall; மதில். —CPD **ஆரற்-சுவர்** °cuvar, Wall with coping; மேலே மறைப்புள்ள சுவர்.

**ஆரலம்** āralam, *n.* [?*ār*[1] + *alam*[1]] Hatred; பகை.

**ஆரவம்** āravam, *n.* [fr. *aravam*[3]— < அரவம்[3]] 1. Sound; ஒலி (பாரத. இரண்டா. 24). 2. Enmity; பகை.

Cf. S. *ravas*.

**ஆரவை** āravai, *n.* [id.] Agitation; கொந்தளிப்பு.

**ஆரவ'லர்** ārav-alar, V. under *āram*[2]; ஆரம்[2] பார்.

**ஆரவாரம்** āravāram, *n.* [See below] 1. Loud noise, bustle; பேரொலி (கந்தபு. காவிரி. 2). 2. Pomposity; ஆடம்பரம். 3. Distress; வருத்தம்.

**ஆரவாரிக்க** āravārikka, V. *ara-vam*[3] + *āri*[1] — அரவம் + ஆரி-த்தல்] To roar; மிக்கொலிக்க (திவ். பெரியாழ். 1, 7, 1).

**ஆரா-** ārā-, *adj.* [*ār*[1] + *-ā-*[2] — ஆராத] —CPDS ஆரார் °ār, Enemies; பகைவர் (தேவா. 296, 1). ஆரா-வ்-அமுதம் °அமுது °amutam, °amutu, Ambrosia that does not satiate; தெவிட்டாத அமரர் உணவு. ஆரா-உணர்வு °uṇarvu, Deficient knowledge; சிற்றறிவு. ஆரா-த்-திரவியம் °tiraviyam, Great riches; பெரும் ஐசுவரியம். King's treasure; அரசர் பொக்கசம். ஆரா-ப்-பத்தியம் °pattiyam, Very rigid diet; கடுமையான கோயாளருணவு. A trifling thing; அற்பம்.

**ஆராமை** ārāmai, [id. + *-mai*[1]] 1. Being not filled; நிரம்பாமை. 2. Great love; பேரன்பு. —CPD ஆராமை-சோராமை °cōrāmai, Exhaustion, weariness; தளர்ச்சி.

**ஆராக்கியம், ஆராகரியம், °கவரியம்** ārākkiyam, °kariyam, °kavariyam, *n.* Pipal; அரசமரம்.

**ஆராட்சி**[1] ārāḍci, *n.* [*ārāycci?*] An ancient tax; பழைய வரிவகை (S. I. I. v. 96).

**ஆராட்சி**[2] ārāḍci, *n.* [perh. *āḷ* + *āḍci*] Movement of persons; ஆள் நடமாட்டம்.

**ஆராட்டு-தல்** ārāḍḍu, *5 v. tr.* [prob. *ālāḍḍu*, Cf. *tālāḍḍu*, fr. *ālu*, 'to move to and fro' + *āḍḍu* — ஆலு + ஆட்டு] To sing lullaby, while swinging the child in one's arms; ஆரிரோ பாடி ஆட்டுதல்.

**ஆ-ராத்தியர், °திரியர்** ā-rāttiyar, °tiriyar, *n.* [S. *ā-rādhya* 'worshipful.' See *ārāti*] Lingāyat Brahmans; வீரசைவப் பிராமணர்.

**ஆ-ராத்திரிகம்** ā-rāttirikam, *n.* [S. fr. *rātrī*, prob. akin to T. *ir-avu* q. v.] Lamp waved at night before an idol [Note the influence of *āratti* (*ālātti*) in this sense]; இரவு ஆலாத்தியினக்கு.

**ஆராத்தொட்டி** ārāttoḍḍi, *n.* The tree miṇikki; மிணிக்கிமரம்.

**ஆ-ராதி-த்தல்** ā-rāti, *11. v. tr.* [S. *ā-rādh*, 'to conciliate', fr. *rādh*, T. *ārtt-u* — ஆர்த்து-தல்] 1. To worship by offering flowers &c., to adore; பூசைசெய்தல், தொழுதல். 2. To treat with hospitality; உபசரித்தல்.

**ஆ-ராதகர்** ā-rātakar, *n.* [id. S. *ā-rādhakas*] Officiating priests in a temple; அருச்சகர்.

**ஆராதனம்** ā-rātaṇam, *n.* [id.] 1. Gratifying; உவப்பிக்கை. 2. Fulfilment; சித்திக்கை. 3. Worship; பூசை. 4. Cooking; சமைக்கை. 5. Acquirement; பெறுகை. 6. Possession by a spirit; ஆவேசம். உ-ம்: "சடலமாடன் ஆராதனமாகி ஆடினான்."

**ஆ-ராதனை** ā-rātaṇai, *n.* [id.] 1. Offering flowers &c. before an idol, worship; பூசனை. 2. Annual ceremony in honour of deceased ascetics; இறந்த சன்னியாசிகளுக்குச் செய்யும் வருடாந்தச் சடங்கு. 3. (Chr.) Church service; கிறிஸ்தவர் கோவில் வழிபாடு.

**ஆராதிஷ்ட** ārātiṣṭa, *adj.* [id. + S. *-iṣṭa*, sign of the superlative, perh. fr. T. *eḻ-u*] Adorable; வந்திக்கத்தக்க.

**ஆராதூரி** ārātūri, *n.* [prob. formed fr. *tūṟṟ-u*, 'to scatter' and *ārā* as echo-element] 1. Spendthrift; ஊதாரி. 2. Loss; அழிவு. 3. Wickedness; துட்டத்தனம்.

**ஆ-ராமம்** ā-rāmam, *n.* [S. *ā-rāmas*, 'delight' fr. *ram*. Cf. T. *nirav-u*] 1. Satisfaction, pleasure; மகிழ்ச்சி. 2. Pleasure garden; உபவனம். 3. Mountain grove; மலைச்சோலை. 4. Belleric myrobalan; தான்றி.

**ஆராமை** ārāmai, V. under *ārā-;* ஆரா- பார்.

**ஆராய்-தல்** ārāy, *4 v. tr.* [*āra* + *āy*[2] — ஆரா-ஆய்[2]-தல்] 1. To investigate; பரிசோதித்தல். 2. To seek; தேடுதல். 3. To set the pitch of a musical instrument, to tune; சுருதிகூட்டுதல். 4. To deliberate upon; ஆலோசித்தல்.

**ஆராய்ச்சி** ārāycci, *n.* [id. + *-(cc)i*[4]] 1. Investigation; பரிசோதனை. 2. Research, critical study; பரிசீலனம். 3. Sheriff, bailiff, superintendent; தலையாரி, தபால் பியோன்மார் தலைவன் (Modern). —CPD ஆராய்ச்சி-மணி °maṇi, Bell at the king's palace gate which any subject seeking justice may ring; முறை வேண்டுவோர் அடிக்கத்தக்க அரண்மனை வாயில் மணி.

Sinh. *aracci*, 'sergeant in the native militia, a petty village officer'.

**ஆராய்ச்சியார்** ārācciyār, *n.* [id. + *-ār*[10]] Nazir of a civil court; நாஸர் உத்தியோகஸ்தன்.

**ஆராய்ந்தோர்** ārāyntōr, *n.* [id.] The learned; அறிஞர்.

**ஆராய்வு** ārāyvu, *n.* [id. + *-(v)u*[5]] 1. Investigation; பரிசோதனை. 2. Extensive knowledge; நுண்ணறிவு.

**ஆரால்** ārāl, *n.* [V. *āral*[1] — ஆரல்[1]] Brownish greenish sand-eel: Rhynchobdella aculeata; மீன்வகை. 2. Rich brown thorny-backed eel: Mastacembalus armatus; சேற்றாரல்.

**ஆராலிகன்** ārālikaṉ, *n.* [S. *ārālikas*, said to be fr. *arāla* 'bending over (the dishes)' V. *arāḷam* — அராளம்] Cook; சமையற்காரன்.

**ஆராவம்** ārāvam, *n.* [V. *aravam* — அரவம்] Shouting; பேரொலி (பாரத. ஐந்தாம். 11).

Cf. S. *aravas*.

**ஆரி**[1]**-த்தல்** āri, *11 v. tr.* [for. *āl-i*, *l/r* — <ஆலி-த்தல்] To sound; ஒலித்தல் (கலிப். 29, வச்சிரப்.).

**ஆரி**[2] āri, *n.* [*ār*[5] + *-i*[4] — அரியது] 1. Difficulty; அருமை (மலைபடு. 161). 2. Excellence; மேன்மை. 3. Beauty; அழகு. 4. Āriyai; = ஆரியை. 5. Brahman woman; பார்ப்பனி.

**ஆரி**[3] āri, *n.* [*ār*[4] + *-i*[4] — ஆர்[4]] 1. Chola king; சோழன். 2. [*āram*[1]] Pearl; முத்து.

**ஆரி**[4] āri, *n.* [*araram* — <அரரம்] Door; கதவு.

**ஆரி**[5] āri, *n.* [S. *hāris*, fr. *hṛi*. Cf. T. *eḍ-u* or *poṟ-ū*] Defeat; தோல்வி.

**-ஆரி**[6] -āri, *suff.* [for. *-āḷ-i* — = -ஆளி] A stem-suffix implying possession; உடைமையைக் காட்டும் ஒரு கடைநிலை. உ-ம்: "தலையாரி".

**ஆரிடம்**[1] āriḍam, *n.* [?*ār*[5] + *iḍam* place] Slippery ground; வழுக்கு நிலம். (குடம்.).

**ஆரிடம்**[2] āriḍam, *n.* [S. *ārṣa*, 'belonging to the *ṛiṣis*, said to be fr. *driś*- Cf. T. *teḷ-i* — இருஷி] 1. What is related, belonging to or derived from the Rishis; இருஷி சம்பந்தமானது. 2. One of the 8 forms of marriage. See aḍḍa-maṇam; அட்டமணத்தின் ஒன்று. 3. The Vedas or

Agamas; வேதம் அல்லாத ஆகமங்கள் 4. Worship; பூசை. Science, learning; கல்வி.

ஆரிடர் āriḍar, *n.* [id. + -*ar*¹] 1. Rishis; முனிவர். 2. Jains; சமணர் (மலைபடு. 368).

ஆரிடை ār-iḍai, *n.* [*ār*⁵ + *iṭ-ai*, 'way'] Rugged path; அரிய வழி (கலித். 4).

ஆரித்திரம் ārittiram, *n.* [V. *arittiram*¹, p. 135—அரித்திரம்¹] 1. What is of a yellowish colour; மஞ்சள் நிறமானது. 2. Cadamba tree; கடம்ப மரம்.

ஆரிதம் āritam, *n.* [fr. *Hāritas*, name of a writer] One of the eighteen codes of laws; தருமசாஸ்திரம் பதினெட்டினுள் ஒன்று.

ஆரிய āriya, *adj.* [*ār*⁵ + -*iya*] Delicate, little; சிறிய (திருவிளை. மாயப். 21).

ஆரியகம் āriyakam, V. *āliyakam*; = ஆலியகம்.

ஆரியம் āriyam, *n.* [S. *ārya*, origin obscure but prob. fr. T. *ariya*. See p. 138. Also Grassmann p. 186. Walde—P. coins a root *ario*] 1. The language of the Aryas; சமஸ்கிருதமொழி. 2. The land of the Aryas; ஆரியாவர்த்தம். 3. Ragi: Eleusine coracana; கேழ்வரகு. —CPDS ஆரியாங்கனை °aṅkaṉai, Jaina married woman in an order of ascetics; இல்லறத்தில்நின்று துறவுபூண்ட சைனதவப்பெண். ஆரியாவர்த்தம் °āvarttam, The country lying between the Himālayas and the Vindhya mountains; இமயத்துக்கும் விந்தத்துக்கும் இடைப்பட்ட தேசம். ஆரியக்-கூத்து °kūttu, Dancing with poles and ropes, peculiar to an aboriginal people called Āriyar; கழைக் கூத்து. (Prov.) "ஆரியக்கூத்தாடினாலும் காரியத்திலே கண்ணாயிரு", "Though it be a sight ever so alluring, yet turn not away from your own affair". ஆரிய-குச்சரி °kuccari, A secondary melody-type of the agricultural tracts; மருதயாழ்த் திறவகை. ஆரியச்-சக்கரவர்த்தி °cakkaravartti, Title of the kings of Jaffna; யாழ்ப்பாணத்தமிழ்அரசர் பட்டப்பெயர். ஆரிய-சத்தை °cattai, The noble truths of the Buddha; பௌத்தருக்குரிய மெய்யுண்மைகள் (சீவ. 383). ஆரியத்-திரிவு °tirivu, Sanskrit tatbhava; தற்பவம். ஆரிய-நாடு °nāḍu, = āriyāvarttam; = ஆரியாவர்த்தம். A region including Daṇḍakāraṇya; தண்டகாரணியம் உட்பட்ட தேசம் (பதிற்றுப். 6. பதி. உரை). ஆரியப்-பாவை °pāvai, A kind of puppet show; பாவைக் கூத்துவகை. Painted statue; மைதீட்டிய உருவம். ஆரியப்-பிராமணர் °pirāmaṇar, A sect of Brahmans in Rāmēśvaram, believed to be immigrants from North India; இராமேசுவரத்திற் குடியேறிய பிராமண வர்க்கத்தார். ஆரியப்-பூமாலை °pūmālai, The gay unruly wife of Kāttavarāyaṉ, any young woman like her; அடங்காப்பெண். ஆரியப்-பேடி °pēḍi, Hermophrodite character in āriyak-kūttu; ஆரியக் கூத்தில் அலி வேஷம். ஆரிய-புத்திரன் °puttiraṉ, Son of one's guru; குருவின் மகன். Husband; கணவன். ஆரிய-பூமி °pūmi, Land of the Aryas; = ஆரியாவர்த்தம். ஆரிய-மொழி °moḻi, Sanskrit; வடமொழி. ஆரிய-ரூபன் °rūpaṉ, Deceiver, hypocrite; வஞ்சிறவன், சாலக்காரன். ஆரிய-வராடி °varāḍi, Variety of varāḍi, a melody-type; வராடி வகை. ஆரிய-வாசியம் °vāciyam, Bishop's weed; ஓமம். ஆரிய-வேளர் (ளா) கொல்லி °vēḷar (ḷā) kolli, A secondary melody-type of the pastoral tract; செவ்வழி யாழ்த் திறவகையுள் ஒன்று. ஆரிய-வேளாளர் °vēḷāḷar, A section of Vēḷāḷas in and around the Palni hills; பழனிப் பிரதேசத்திலுள்ள ஒரு வேளாளச் சாதியத்தார்.

ஆரியர் āriyar, *n.* [id. + -*ar*¹] 1. Members of the Aryan race; ஆரிய வகுப்பினர்களோர். 2. A section of Brahmans from the North living in Rāmēśvaram; இராமேசுரத்திற் குடியேறிய பிராமண குலத்தார். 3. Ancient kings of Jaffna; யாழ்ப்பாணத்துத் தமிழ் அரசர் (செகராசசேகரமாலை). 4. Vēḷāḷas descended from the kings of Jaffna; யாழ்ப்பாண அரசகுலத்தவர் (பாகப்பர் அம்மானை, பொதுப்பாயிரம், சின்னவிடுதூது). 5. Vēḷāḷas in and around the Palni hills; பழனிப் பிரதேசத்தில் உள்ள வேளாளர். 6. Physicians; ஆயுள்வேதியர். 7. Pole-dancers; கழைக்கூத்தர் (குறுந். 7).

ஆரியன் āriyaṉ, *n.* [id. + -*aṉ*³] 1. One who is Aryan by race or an inhabitant of Āryāvarta; ஆரியவகுப்பினன், ஆரியாவர்த்தவாசி (தேவா. 844, 5. சிலப். 23, கட்டுரை). 2. Worthy, respectable man; மேன்மகன், பெரியோன். 3. Siva; சிவன். 4. Sun; சூரியன். 5. Spiritual preceptor; குரு. 6. Scholar; புலவன். 7. Teacher; உபாத்தியாயன் (இலக். கொத். 8). 8. Jupiter; வியாழன். 9 Physician; வைத்தியன். 10. The god Aiyaṉār; ஐயனார். 11. Barbarian, foreigner; மிலேச்சன் (பிங்.). 12. Buffoon; கோமாளி. 13. Atis; அதிவிடை.

ஆரியை āriyai, *n.* [id. S. *āryā*] 1. Noble woman; உயர்ந்தோள் (தக்கயா. 410, உரை). 2. Pārvatī, Durgā; பார்வதி, துர்க்கை. 3. Preceptress; ஆசாள். 4. A Sanskrit metre; வடமொழி யாப்புவகை. —CPD ஆரியை-தனயன் °taṉayaṉ, Subrahmaṇya, Vīrabhadra, Bhairava; சுப்பிரமணியன், வீரபத்திரன், வைரவன்.

ஆரீதம்¹ ārītam, *n.* V. *ārītam* = ஆரிதம்.

ஆரீதம்² ārītam, *n.* [S. *hāritas*, V. *ari*² —அரி²] 1. Green pigeon; பச்சைப் புறா. 2. King-crow; கரிக்குருவி.

ஆரீரம் ār-īram, *n.* [*ār*⁵ + *īram*] Little humidity; சிற்றீரம்.

ஆரு āru, *n.* [S. *ārus*, Cf. T. *ūr-u*, 'to crawl'] 1. Crab; நண்டு. 2. Hog; பன்றி. 3. [Cf. *āruvam* below] Pitcher; குடம். 4. The tree Lagerstroemia regina; இருமரம்.

ஆருவம் āruvam, *n.* [id. ?] Water; நீர்.

ஆருகதம்¹ ārukatam, *n.* [S. *ārhatam*, fr. *arukam*²—அருகம்²] Jainism; சமணமதம்.

ஆருகதன் ārukataṉ, *n.* [id. + -*aṉ*³] Jain; சமணமதத்தவன்.

ஆருகதம்² ārukatam, *n.* [prob. S. *raja'-rhā*, 'worthy of kings'—ராசா-அருகம்] Eugenia jambolana; நாவல்மரம்.

ஆருத்திராதரிசனம் āruttirātaricaṉam, V. *ārttirātaricaṉam*; = ஆர்த்திராதரிசனம்.

ஆருத்திரை āruttirai, V. *ātirai*; = ஆதிரை.

ஆருப்பியம் āruppiyam, *n.* [Cf. the following] Lead ore; வங்கமணல்.

ஆருபதம் ārupatam, *n.* [Cf. *āram*²] Brass; பித்தளை.

ஆ-ரூடம் ā-rūḍam, *n.* [S. *ā-rūḍh-a*, 'risen' fr. *ruh*. T. *ur-ū*—உரு-த்தல்] Act of ascending; ஏறுதல். 2. What has ascended; ஏறியது (தணிகைப். நகரப். 46). 3. Horary astrology; நினைத்த காரியம் கூறும் சோதிடம்.

ஆரூடன் ārūḍaṉ, *n.* [id. + -*aṉ*³] 1. One who has attained liberation in the present life; சீவன் முத்தன். 2.

Rider (in compounds) as in *iḍapa-ārūḍaṉ*; வாகனம் முதலியவற்றில் ஏறியவன். உ-ம்: "இடபாரூடன்".

ஆ-ரூபம் ā-rūpam, *n.* [*a-rūpam*—அ-ரூபம்] 1. Dissimilarity; ஒவ்வாமை. 2. Inseparableness; நீங்காமை.

ஆரூர்க்-கால் ārūrk-kāl, *n.* [*Ārur*=*Tiruvārūr*?] Kind of camphor; கர்ப்பூரவகை.

ஆரேவதம் ārēvatam, V. *ārkkuvatam*; =ஆர்க்குவதம்.

ஆரை[1] ārai, *n.* [Cf. *āral*[1]] 1. Aquatic cryptogamus plant used for greens: Marsilia minuta coromandelica; கீரைவகை (திருமந். 2911). Common mountain ebony; ஆத்தி. 3. Mat made of rushes; பாய். —CPDS ஆரைக்-காலி °kāli, A sedge; கோரைவகை. செவ்வாரை cev°, A four-leaved plant of a red colour, found on hills; புளி° puḷi°, A medicinal plant: Oxalis corniculata; வல்° val° Hydrocotyle asiatica; வறள்° varaḷ°, A plant on dry soils, used as fodder.

K., Tu. *are*.

ஆரை[2] ārai, *n.* [*ār*[1]] 1. Axle-tree; அச்சுமரம் (புறம். 60). 2. [Cf. *āral*[2]] Fort wall; கோட்டை மதில் (சேதுபு. சேது, 5).—CPDS ஆரை-எலும்பு °elumpu. Radius, outer bone of fore-, arm; முன்கையெலும்பிரண்டினுட் பெருவிரற்பக்கமுள்ளது. ஆரை-ப்-பற்றி °parri, Lacerta iguana; உடும்பு.

ஆரை[3] ārai, *n* [S. *ārā*, prob. fr. T. *aṟ-u*, 'to cut'] Leather cutting chisel; தோல் வெட்டும் உளி.

ஆ-ரோக்கியம் ā-rōkkiyam, *n.* [fr. *a-rōkam*—அ-ரோகம்] Freedom from disease; நோயின்மை. —CPDS ஆரோக்கிய-சாலை °cālai, Hospital; வைத்தியசாலை. ஆரோக்கிய-ஸ்நானம் °snānam, Bath taken when convalescent; நோய்தீர்ந்தபின் முழுக்கு.

ஆ-ரோகணம் ā-rōkaṇam, *n.* [S. *ā-rōhaṇam*. for etym. V. *ā-rūḍam* —ஆரூடம் பார்] 1. Ascending; ஏறுகை. 2. (Mus.) Complete ascent of the gamut; சமகம் பத்தனுள் ஒன்று (பாகவத. இராச. 24). 3. Staircase, ladder; சுற்படி, ஏணி. 4. Exit; வெளியேறுகை. 5. Front entrance of a house; முன்வாயில். 6. Inclined roof; தாழ்வாரம். —CPDS ஆரோகண-கதி °kati, Going up; மேலாகச் செல்லல் (Mus.). Taking a higher pitch; இசையை ஏற்றிப் பாடுதல். ஆரோகணத்-திருநாள் °tirunāḷ, (Cath.) The Lord's Ascension day; கர்த்தர் பரலோகஞ்சென்ற நாள்.

ஆ-ரோகம் ā-rōkam, *n.* [id.] 1. Ascent; ஏறுகை. 2. Elevation; உயர்ச்சி. 3 Mountain, hill; மலை. 4. Weight; பாரம். 5. Length; நீட்சி. 6. A mode of reciting the Vedas; வேதம் ஓதும் முறைகளுள் ஒன்று. 7. Sprout; முளை. 8. Woman's hips; நிதம்பம்.

ஆ-ரோகி ā-rōki, *n.* [id. S. *ā-rōhin*] 1. One who ascends or rides; ஏறுவோன். 2. A variety of musical composition; இசையின் வண்ணபேதங்களுள் ஒன்று.

ஆரோ'சை ār-ōcai, *n.* [*ār*[1] +*ōc-ai*—ஆர்-ஓசை] High pitch opposed to amar-ōcai; எடுத்துப்பாடும் இசை (பெரியபு. ஆனாய. 24).

ஆ-ரோணம் ā-rōṇam, *n.* [*sync.* of *ā-rōkaṇam*—ஆ-ரோகணம்] Covering; மீக்கோள்.

ஆ-ரோதம்-அடிக்க ā-rōtam-aḍikka, *v. intr.* [S. *ā-rudh*, 'to keep off', fr. *rudh*, Cf. T. *uṟ-uttu*] Recoiling, out of pity, from a contemplated terrible act; தயையாற் கொடுஞ் செயலைத் தவிர்த்தல் (சடு. 3, 10, 1).

ஆ-ரோபணம் ā-rōpaṇam, *n.* [S. *ā-rōpaṇam*, 'causing to ascend'. fr. *ruh*. V. *ā-rōkaṇam*—ஆரோகணிக்கச் செய்தல்] 1. Raising, causing to ascend; உயர்த்துகை, ஏற்றுகை. 2. (Cath.) The Assumption of the Blessed Virgin; கன்னிமரியம்மாள் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டமை. 3. Planting; நாட்டுகை. 4. Stringing of a bow; வில்லில் நாண் பூட்டுகை. 5. V. ā-rōpam; =ஆரோபம். —CPD துவசா'ரோபணம் tuvaca°, Hoisting of a flag; கொடியேற்றம்.

ஆ-ரோபம் ā-rōpam, *n.* [id. S. *ā-rōpas*] 1. Imposing a burden; சுமையேற்றுதல். 2. Erroneous attribution to one object, of a quality that belongs to another; ஒன்றின்மேல் மற்றொன்றின் தன்மையை ஏற்றிப் பேசுதல். Verbal form: ஆ-ரோபிக்க ā-rōpikka.

ஆ-ரோபிதம் ā-rōpitam, *n.* [id. S. *ā-rōpita*] 1. What is placed, done; வைக்கப்பட்டது, செய்யப்பட்டது. 2. What is attributed; ஒன்றின்மேல் ஏற்றப்பட்டது. 3. False charge preferred against one; பொய்யாய் ஏற்றிய குற்றம்.

ஆல்[1] āl, *n.* [fr. *akal*— <அகல்] 1. Earthen vessel; அகற்சட்டி. 2. Banyan tree; மிகப் பரந்து நிற்கும் மரவகை. —CPD ஆல்-அமர்-கடவுள் °amar-kaḍavuḷ, Siva; சிவன். Varieties of *āl* are கல்லால், குறுவால், சிற்றால், q. v.

K. *ala*; M. *al*. Cf. S. *alus*, 'pitcher'. Cf. S. *ala*, 'extensive, large'.

ஆல்[2] āl, *n.* [apoc. of *āl-am*[1]— <ஆலம்[1]] 1. Water; நீர் (திவ். திருவாய். 9,10,1, ஈடு). 2. Flood; வெள்ளம் (மதுரை. 262).

ஆல்[3] āl, *n.* [sync. Cf. *āral*[1]— <ஆரல்[1]] Poison [from its colour?]; நஞ்சு (இரகு. மாலை. 41). 2. The third nakṣatra; கார்த்திகை (மலைபடு. 100).

S. *alam*, 'yellow opiment, discharge of venomous matter'. Kittel would connect it with *al*[2].

-ஆல்[4] -āl, *adv.* [in poetry, prob. fr. *ām*[4]] 1. Yes; ஆம். 2. Particle expressive of certainty, surprise or pity; தேற்றம், அதிசயம், இரக்கம் இவற்றைக் குறிப்பிடும் இடைச்சொல். 3. Expletive affixed to nouns and finite verbs in poetry; ஓர் அசைநிலை. உ-ம்: "பரந்தாரு நாடாமால், ஊராமால்" (குறள், 397).

-ஆல்[5] -āl, *part.* [for *-al*[9]] Negative form of the optative *sing.* verb ending; எதிர்மறை வியங்கோள் ஒருமை விகுதி. உ-ம்: "ஓரால்".

-ஆல்[6] -āl, *suff.* V. *-al*[7]; =-அல்[7]. உ-ம்: "அழால்" <அழல் (புறம், 46, 5).

-ஆல்[7] -āl, *part.* [sync. of *ākil*—ஆகில்] Sign of the conditional participle; சங்கேதம் குறிக்கும் வினையெச்சவிகுதி. உ-ம்: "செய்தால்".

-ஆல்[8] -āl, *part.* [=*āṉ*[3], prob. fr. *-il* or *iṉ*, sign of the locative. *i*/*ā* through *ĕ*. V. *-iṉ*[4]] 1. Sign of the instrumental or third case, expressing 'by, by means of, with, by way of, in consequence of'; மூன்றும் வேற்றுமை விகுதி. உ-ம்: "சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே" (தொல். பெய. 5). 2. Sign of the locative, 'from'; இருந்து எனும் பொருளுள்ள இல் விகுதியின் திரிபு. உ-ம்: "வீட்டால் வந்தான்" (Coll.). 3. From every; ஒவ்வொன்றிலுமிருந்து. உ-ம்: "ஊரவொரு தேவகுலம்", a temple in every country.

Gundert derives this particle from *ākal*, 'being there'. Cf. the S. *-ā*, *-ēna*, signs of the instrumental.

ஆல்பகோடா, °கோரா ālpakōḍā, °kōrā, *n.* [U. *ālu* from Bokhara] Bullace plum; ஒரு பழமரம்.

ஆல்-வாட்டு-தல் āl-vāḍḍu, *v. tr.* [perh. *arai*, 'half'+ *vāḍḍ-u*, 'to dry'] To dry a little in the sun; சிறிது காயச் செய்தல்.

M. *avaḍuka*.

ஆல்-வாட்டு āl-vāḍḍu, *n.* [id.] Condition of being partially dried, as of boiled grain; சிறிதுலர்ந்த தன்மை.

ஆல்வு ālvu, *n.* [fr. *akal-vu*— <அகல்-வு] The state of being wide; அகன்றிருத்தல்.

ஆல்வை ālvai, *n.* [L. *alba*, 'white' <T. *el*] (Cath.) A white linen vestment worn over the cassock and amice and girded at the waist; திருவழிபாளர்கள் அணியும் நீண்ட வெள்ளை அங்கி.

ஆலக்-கரண்டி ālak-karaṇḍi, *n.* [*akalam* + *karaṇḍi* — அகலம்] Large spoon; அகன்ற அகப்பை.

ஆலகம் ālakam, *n.* [for *āmalakam*— <ஆமலகம்] Emblic myrobalan; செல்லி.

ஆலகாலம் ālakālam, *n.* [V. *ālam*[4] —ஆலம்[4]] 1. Deadly poison produced during the mythological churning of the ocean; பாற்கடலிற் தோன்றிய விஷம். 2. Tinnevelly senna: Cassia augustifolia; நிலவாகை.

S. *hala-halas*, *hala-halam*, *hahalam*, *hahalam*, which are prob. fr. T. *alam*. Also *hala*, *harahūras*, *alis*, 'spirituous liquor'; *alam*, 'venom'.

ஆலகாலி ālakāli, *n.* [id.+ *-i*[4]] Kāḷi who swallowed the above poison; காளி.

ஆல-கிரீடை āla-kirīḍai, *n.* Sweet oleander; அலரி.

ஆலங்காட்டாண்டி ālaṅkāḍḍāṇḍi, *n.* A masquerade dance; வரிக்கூத்து வகை (சிலப். 3, 13, உரை).

ஆலச்-சுவர் ālac-cuvar, *n.* [*ārai*[2] + *cuvar*—ஆரை[2] + சுவர்] 1. Retaining wall at the foot of a slope; சார்வுச் சுவர். 2. Wall of a compound; ஆள்மட்டச் சுவர்.

ஆலசம் ālacam, *n.* [Cf. S. *alasa*, 'laziness', T. *cōmpu*] Anise; சோம்பு =பெருஞ்சீரகம்.

ஆலசியம் ālaciyam, *n.* [V. *alacam* — <அலசம்] 1. Idleness; சோம்பு. 2. Indifference; உபேட்சை.

ஆலசீலப்-பட ālacīlap-paḍa, *v.* [fr. *alaical* — அலைசல்] To suffer vexation; தொல்லைப்பட.

M. *alasila*.

ஆலத்தி ālatti, V. *ālātti*;=ஆலாத்தி. —CPDS ஆலத்தி-எடுத்தல், °வழித்தல் °eḍuttal, °vaḻittal, To perform the ceremony of ālātti;

ஆலந்தை ālantai, *n.* Racemed lance-leaved digitate ivy: Heptapleurum racemosum; ஒரு சிறு மரம்.

ஆலம்[1] ālam, *n.* [*āl* <*akal*, 'to be extensive deep' + *-am*[2]. Cf. *āḻ* — அகன்றது, ஆழ்ந்தது] 1. Sea; கடல் (பிங்.). 2. [Arab. *ālam*] Universe; உலகம். 3. Water; நீர் (தேவா. 71, 7). 4. Rain; மழை. 5. Sky; ஆகாசம் (கைவல். தத்துவ. 25). 6. Breadth; அகலம். 7. Quiver; அம்புக்கூடு. 8. Banyan tree; ஆலமரம். 9 Blossom; மலர். —CPD ஆலங்-கட்டி °kaḍḍi, Hail, hail-storm; கன்மழை.

M. *alam*, 'broad'. S. *ala*, 'extensive, large'.

ஆலம்[2] ālam, *n.* 1. Indian beech; புன்கு. 2. Lingam tree; மாவிலங்கம்.

ஆலம்[3] ālam, *n.* [S. *halas* which is prob. akin to T. *kala-ppai* q. v. —ஒப். கலப்பை] 1. Plough; கலப்பை. 2. Plough-shaped weapon; அலாயுதம்.

ஆலிகன் ālikan, *n.* [id. S. *hālikas*] Ploughman; உழுவோன்.

ஆலம்[4] ālam, *n.* [prob. fr. *āral*[1]— <ஆரல்[1]] 1. Blue vitriol; துரிசு. 2. Lead; ஈயம். 3. Poison; நஞ்சு. 4. Blackness; கருமை (தேவா. 111, 3). —CPDS ஆலமு'டையோன் °uḍaiyōn, Blue vitriol; துரிசு. ஆலமு'ண்டோன் °uṇḍōn, Siva; சிவன். ஆலக்-கட்டி °kaḍḍi, Blue vitriol; துரிசு. ஆல-வாய் °vāy, Serpent as having poison at its mouth; பாம்பு (திருவிளை. சொழுவ. 13). Madura as encircled by a serpent, according to legend; மதுரை. ஆலக்-கொச்சி, °கொடி, °கொடிச்சி °kocci, °koḍi, °koḍicci, Yellow orpiment; அரிதாரம். ஆல-கண்டன் °kaṇḍan, Siva, with poison in his throat; சிவன். The serpent vācuki; வாசுகி. ஆல-தரன் °taran, Do; ஷை.

M. *alam*; S. *alam*, 'poison, yellow arsenic'.

-ஆலம்[5] -ālam, *suff.* [V. *-āḷam*— = -ஆளம்] A stem-suffix with the sense of 'having as a predominating quality'; மேற்படும் குணத்தைக் காட்டும் கடைநிலை. உ-ம்: கவாலம்=கவிதல மிகக்கொண்டது.

ஆ-லம்பம், °பனம் ā-lampam, °anam, *n.* [S. *ā-lamb-as*, prob. fr. *lamb*, 'to hang down, lay hold of'. Cf. T. *ir-aṅk-u*] 1. Hanging down; தொங்குதல். 2. Support, refuge; பற்றுக்கோடு, புகலிடம். 3. Touching; தொடுகை. 4. Perpendicular line; நிறுத்திட்டரேகை. 5. Killing; கொல்லுகை. —CPD ஆலம்ப-லிகிதம் °likitam, Orthography; எழுத்துக் கூட்டு.

ஆலம்பி ālampi, *n.* [*ālam*[4] — ஆலம்[4]] Yellow orpiment; அரிதாரம்.

ஆ-லயம் ā-layam, *n.* [S. *ā-layam*, fr. *lī*, 'to adhere'. Cf. T. *uṟ-ai*. Cf. also *ālu*, 'to abide'] 1. Abode; தங்குமிடம். Town; நகரம். 3. Temple, church; கோயில். 4. Elephant stable; யானைக் கூடம். —CPD ஆலய-விஞ்ஞானம் °viññāṉam, Consciousness persisting till death; மரணமட்டும் அறிவு கெடாதிருத்தல்.

ஆலல் ālal, V. *ālu*[1]; ஆலு[1] பார்.

ஆலலம் ālalam, *n.* [Cf. *āvalam*[1]] A garment given by the bride-groom to the bride at marriage; கூறை.

ஆல-வட்டம் āla-vaḍḍam, *n.* [*ālu*, 'moving', or *tālam*, 'palmyra leaf' + *vaḍḍam*—ஆலு (தாலம்) + வட்டம்] 1. Large fan made of cloth, fragrant roots or palm leaves, carried in procession as insignia of honour; காலசெய் வட்டம். 2. Small fan; விசிறி (சீவக. 839).

M. *ālavaṭṭam*; K. *ālavaṭṭa*; Tel. *ālavaṭṭamu*; S. *ālavarttam*.

ஆ-லவணியம் ā-lavaṇiyam, *n.* [*a*-[8]+S. *lav-aṇam*, 'brightness, salt'. Cf. T. *ilaku*—இலகுதல்] Ugliness; அவலட்சணம். 2. Insipidity; சுவையின்மை.

ஆல'வன்[1] āl-avaṉ, *n.* [*āl*[1] + *-avaṉ*] Vishnu as lying on a banyan leaf at the dissolution of the world; திருமால் (கந்தபு. குரனமைச். 43).

ஆல'வன்[2] āl-avaṉ, *n.* [*āl*[2] + *-avaṉ*] Moon as coming out of the sea; சந்திரன் (பிங்.).

ஆல-வாட்டு āla-vāḍḍu, V. *āl-vāḍḍu*; =ஆல்-வாட்டு.

ஆல-வாய் āla-vāy, V. *ālam*[4]; ஆலம்[4] பார்.

ஆலவால் ālavāl, *n.* [U. *āl-avāl*] One's circumstances; ஒருவனுடைய நிலைமை.

ஆலவாலம் ālavālam, *n.* [S. *ālavālam*, prob. fr. *ālam*, 'water' + *vāḷam*,

'broad circle', as in *cakkara-vāḷam*] 1. Trench around a tree for watering; மரத்தைச் சுற்றிய பாத்தி. 2. Cultivated field; விளைநிலம். 3. Garden beds with ridges around them for containing water; சிறுபாத்தி.

**ஆல-விருட்சம்** āla-viruṭcam, *n.* [*āl*¹, 'the multiplier' + S. *vṛkṣ-as*, 'tree, shrub', fr. *vṛkṣ*, akin to T. *uru* or *peruk-u*] 1. Thorny caper; ஆதொண்டை. 2. Banyan tree; ஆலமரம்.

**ஆலவூ'ணி** ālav'ūṇi, *n.* [*ālam*⁴ + *ūṇ*, 'food' + *-i*⁴] Umā; உமாதேவி (திருப்பு. 393).

**ஆலஸ்யம்** ālasyam, V. *ālaciyam*; = ஆலசியம்.

**ஆலா** ālā, *n.* 1. White bellied sea-eagle: Haliaetus leucogaster; கடற்கரைப் பறவை வகை. 2. Marsh tern: Sterna fluviatilis; பறவை வகை.

Cf. L. *ala*, 'eagle'. The derivation of this word, however, is *ag-s-la*, according to Walde—H. On the latter form see *akkuḷ* p. 9.

**ஆலாகலம்** ālākalam, V. *ālakālam*; = ஆலகாலம்.

**ஆலாங்கட்டி** ālāṅkaṭṭi, V. *ālaṅkaṭṭi*; = ஆலங்கட்டி.

**ஆலாசியம்** ālāciyam, *n.* [S. *ālāsyas*, fr. T. *ālam*, 'poison', or 'width' & S. *āsya*, T. *ōṭṭai*, 'mouth'—ஆலம் + ஆசியம் = வாய்] 1. Crocodile, having poisoned or large mouth; முதலை. 2. = *Āla-vāy*; = ஆல-வாய்.

**ஆலாட்டு-தல்** ālāṭṭu, V. *ālvāṭṭu*; = ஆல்வாட்டு.

**ஆலாத்தி** ālātti, *n.* [fr. *ālāttu*, for **ālāṭṭu*, 'to move to and fro' which is now found as *ārāṭṭu* q. v.—ஆலாத்துதல், < ஆலு + ஆட்டு] 1. Light or lighted camphor waved before an idol or any important personage; தீபங்கொண்டு சுழற்றுதல். 2. The waving of light, or water mixed with saffron or saffron-coloured food balls, before persons one wishes to honour on auspicious occasions; மங்கல காலங்களில் நற்கோர் முன் தீபம் ஆதியன சுழற்றுதல்.

S. *aratis*, 'waving of lights'. Also *aratrikam* prob. influenced by it. V. *arattirikam*.

**ஆலாத்து-தல்** ālāttu, *v. intr.* [perh. fr. *ārāṭṭu* < *ālāṭṭu*] To cry; அழுதல்.

M. *alāttuka*, 'to bawl'.

**ஆலாத்து** ālāttu, *n.* [Cf. *ālātti*] 1. Cable, large rope; அம்மாது, கப்பலின் பெருங்கயிறு. 2. Ship; கப்பல். 3. A bird; ஒரு பறவை.

**ஆலாதம்** ālātam, *n.* [V. *alātam*— = அலாதம்] Firebrand; நெருப்புக்கொள்ளி.

**ஆலாதாடை** ālātāḍai, *n.* Indigo; அவுரி.

**ஆலாப்-பறத்தல்** ālāp-para, *v. intr.* [*āl*¹ + *āka* + *para*—ஆலாகப்-பற] To be in distress being tossed about like a dried banyan leaf; திண்டாடுதல்.

**ஆலாபம், °பனம்** ā-lāpam, °panam, *n.* [S. *ā-lāp-as*, fr. *lap*. Cf. T. *alappu*—ஒப். அலப்புதல்] 1. Conversation; சம்பாஷணை. 2. (Mus.) Improvised introduction to a melody; இராகத்தை விஸ்தரித்துப் பாடுகை.

**ஆலாபிக்க** ālāpi, *v. intr.* [id. + *-i*⁷] To raise a tune; சுருதி கூட்ட.

**ஆலாபினி** ālāpiṇi, *n.* [id. S. *ālāpinī*] 1. (Mus.) A division of the 5th note of the gamut; ஐந்தாம் சுவரபேதம் (பரத. இராக. 44). 2. A kind of lute; ஒருவகை வீணை.

**ஆலாபரணம்** ālāparaṇam, *n.* V. *ālāpam(2)*; = ஆலாபம்(2).

**ஆலாலம்**¹ ālālam, *n.* [V. *ālakalam*— = ஆலகாலம்] 1. Poison; நஞ்சு (திருவாச. 12, 8).

**ஆலாலம்**² ālālam, *n.* [Cf. *ālu*, 'to hang'] Small house-bat; ஊரிஞ்சில்.

**ஆலாவர்த்தம்** ālāvarttam, V. *āla-vaḍḍam*; = ஆலவட்டம்.

**ஆலானம்** ālāṉam, V. *āḷāṉam*; = ஆளானம்.

**ஆலி**¹ āli, *n.* [prob. fr. *aralai*¹—ஒப். அரலை] 1. Hail; ஆலங்கட்டி (சீவக. 2786). 2. Rain drops; மழைத்துளி (சூடா.). 3. Opening shower of the rainy season; தலைப்பெயல் மழை. 4. [Cf. *ālu*] Wind; காற்று. *v.* ஆலிக்க¹ ālikka, To rain; மழைபெய்ய (கந்தபு. சூரபன். வதை. 401).

K., M. *āli*.

**ஆலி²-த்தல்** āli, 11 *v. intr.* [fr. *ālu*— < ஆலு-தல்] 1. To rejoice; களித்தல். 2. To be haughty; செருக்குதல். 3. To make noise; ஒலித்தல் (பு. வெ. 4, 4).

**ஆலி** āli, *n.* [id. or perh. *āḷ-i*, fr. *āḷ*, 'man'] Huge hollow figure worn by dancers in a festive procession; பூதவேஷம்.

**ஆலிக்கை** ālikkai, [id. *-(kk)ai*⁷] Joy; ஆனந்தம்.

**ஆலிப்பு** ālippu, *n.* [id. + *-(pp)u*⁶] Uproar; ஆரவாரம்.

**ஆலி**³ āli, *n.* [prob. fr. *ālam*⁴— ஒப். ஆலம்⁴] 1. Fermented liquor; மது. 2. Scorpion; தேள். 3. Bee; தேனீ. 4. Ambrosia; அமிர்தம்.

Cf. S. *hālā*, 'spirituous liquor', which Uhlenbeck notes as "unerklärt"; *alis*, 'scorpion.'

**ஆலி**⁴ āli, *n.* [sync. of *āvaḷi*— < ஆவளி] 1. Line, row; தொடர்ச்சியான வரிசை. 2. Family; குடும்பம். 3. Ridge; வரம்பு.

**ஆலி**⁵ āli, *n.* [S. *ālis*, fr. T. *āḷ*, 'person accompanying' or Tel. *ālu*, 'woman' or *āḍi*, 'person with whom one plays' (Kittel) — கையாள்] A lady's female companion; தோழி.

**ஆலிகன்** ālikaṉ, V. under *ālam*³— ஆலம்³ பார்.

**ஆலிகை** ālikai, *n.* For S. Ahalyā; அகலிகை.

**ஆலிங்கனம்** āliṅkaṉam, *n.* [S. said to be fr. *ā-*¹⁰ + *liṅg-am*, 'sign'. More prob. fr. T. *aḷuṅku*, 'firm grasp'—ஒப். அழுங்குப்பிடி] Embrace; தழுவுகை.

**ஆலிஞ்சரம்** āliñcaram, *n.* [S. *āliñcaram*, Cf. *āl*¹] Large earthen jar; பெருஞ்சாடி.

**ஆலிடம்** āliḍam, *n.* [? *akal* + *iḍam*] Street row; தெருச்சிறகு.

**ஆலிந்தம்** ālintam, V. *alintam*; = அலிந்தம்.

**ஆலிம்** ālim, *n.* [Arab. *ālim*] Learned man; அறிஞன்.

**ஆலியகம்** āliyakam, *n.* Indian ipecacuanha; நறுநிஞ்சா.

**ஆலியப்-பறை** āliyap-paṟai, *n.* [perh. *āriya* + *paṟai*] A class of Pariahs; ஒரு வகுப்பார்.

**ஆலீடம்** ālīḍam, *n.* [prob. fr. T. *kāl-iḍu*, 'placing of the legs'] An archer's posture with his left leg forward and the right knee bent. V. villōr-nilai; இடக்கால்முன்நிற்று, வலக்கால் மண்டலிக்கும் வில்லோர் நிலை. 2. A yogic posture in which a distance of 12 inches separates the two legs which are bent; காலுக்குக் கால் பன்னிரண்டங்குலம் இடைவிட்டு மண்டலமாகவிருக்கும் யோகாசனம்.

S. *aliḍham*, 'an attitude in shooting' for which it has no etymology to show.

**ஆ-லீனம்** ā-līnam, *n.* [S. *ā-līna*, 'melted', fr. *lī*. Cf. T. *iḷ-u*, *iḷa-ku*] What has been melted; உருக்கப்பட்டது.

**ஆலீனகம்** ālīnakam, *n.* [id. 'what is easily melted'] 1. Lead; ஈயம். 2. Zinc; துத்தநாகம்.

**ஆலு**[1]-தல் ālu, 5 *v. intr.* [fr. *al-ai* — <அலை-தல்] 1. To move to and fro, dance; ஆடுதல் (மணி. 4, 11). 2. To rejoice; களித்தல் (திவ். திருமாலை. 14, வ்யாக்.). 3. To utter cries as pea-cocks; மயில் அகவுதல். 4. To sound; ஒலித்தல். 5. To hang; தொங்குதல். 6. To abide; தங்குதல் (கலித். 36, 2, உரை). 7. To be full; நிறைதல்.

K. *al*; M. *āluka*. Cf. S. *līla*, 'sport', *āramati*, 'to delight in, to rest'. This word may also be fr. *a+ram*, and then, not connected with the T. *alu*. Cf. S. *ālayam* with sense 6 above.

**ஆலல்** ālal, *n.* [id.+-*al*[4]] 1. Screech of the peafowl; மயில் அகவுதல். 2. Sound; ஒலி.

**ஆலு**[2] ālu, *n.* [fr. *ālam*[1], 'water'] 1. Pitcher; நீர்க்குடம். 2. Raft; தெப்பம். 3. An esculent root: Arum campanulatum; ஒரு கிழங்கு.

S. *alus*.

**ஆலு**[3] ālu, *n.* [Cf. *āl*[3]] Black ebony; கருங்காலி.

S. *alus*.

**ஆலு**[4] ālu, *n.* [S. *hālu*, fr. K. *halu*, *hal* = T. *pal*] Tooth; பல்லு.

**-ஆலும்** -ālum, *conj.* [fr. *ākil-um*] Though; ஆகிலும்.

**ஆலூகம்** ālūkam, *n.* [Cf. S. *mālūras*] Bael; வில்வமரம்.

**ஆ-லேகனம்** ā-lēkaṉam, *n.* [S. *ā-lēkh-anam*, fr. *likh* <*rikh*, akin to T. *kirukk-u* <*kiḻ-i*—கிழித்தல்] 1. Writing; எழுதுதல். 2. Painting; சித்திரித்தல். 3. Letter; கடிதம்.

**ஆ-லேக்கியம்** ā-lēkkiyam, *n.* [id.] What is written or painted; எழுதப்பட்டது சித்திரிக்கப்பட்டது.

**ஆ-லேகனி** ā-lēkaṉi, *n.* [id.] Pen, style; எழுதுகோல், எழுத்தாணி.

**ஆ-லேபம்**, °பனம் ā-lēpam, °anam, *n.* [S. *ā-lēp-anam*, fr. *lip*, T. extended form of *iḻu*, as in *iḻupp-ai*—இழுப்பை பார்] 1. Anointing; பூசுகை. 2. Unguent; பூசுசந்தனம்.

**ஆலேபூலே-எனல்** ālēpūlē-eṉal, *n.* Onom. expression for prating; பொருளின்றிப் பேசுதற் குறிப்பு.

**ஆலை**[1] ālai, *n.* [fr. *alai*, 'to move to and fro'— <அலை-தல்] 1. Sugar-cane press; கரும்பாட்டுஞ் செக்கு. 2. Sugar-cane; கரும்பு. 3. Affliction; உபத்திரவம். 4. The torture called kiḍḍi; கிட்டி கட்டுதல். —CPDS **ஆலை-அடிக்க**, °ஆட்ட °aḍikka, āḍḍa, To work a sugar-cane press; கரும்பாலை சுழற்ற. **ஆலை-க்-குழி** °kuḻi, Receptacle for the juice in the above; சாறேற்கும் அடிக்கலம். **ஆலைத்-தொட்டி** °toḍḍi, Cauldron for boiling sugar-cane juice; கருப்பஞ்சாறு காய்ச்சும் சால். **ஆலை-பாய** °pāya, To work a sugar-cane mill; ஆலையாட்ட (சேதுபு. நாட்டு. 93). To be agitated in mind; மனஞ்சுழல. **ஆலை-மாலை** °mālai, Vexation; தொல்லை.

**ஆலை**[2] ālai, *n.* [Cf. *āli*[3] — ஆலி[3]] Toddy, spirituous liquor; கள், மது (பிங்.).

**ஆலை**[3] ālai, *n.* [perh. fr. *ālu*, 'to abide'. Cf. S. *śālā*] 1. Apartment, hall; அறை, சாலை. 2. Elephant stable; யானைப் பந்தி (புறம். 220, 3).

K., M. *ala*. Cf. S. *ālayam*.

**ஆலை**[4] ālai, *n.* [for *ārai*[1]—ஆரை[1]] Aquatic cryptogamus plant; ஆரைக்.

**ஆலையம்** ālaiyam, V. *ālayam*;=ஆலயம்.

**ஆ-லோகம்** ā-lōkam, *n.* [S. *ā-lōk-as*, fr. *lōk*, *ruc*, T. *il-ak-u*, *er-i*—இலகு-தல்] 1. Light; ஒளி. 2. Flattery, civility; முகமன்.

**ஆ-லோகன்** ālōkaṉ, *n.* [id.] An intelligent man; தெளிந்த புத்திமான்.

**ஆலோகனம்** ā-lōkaṉam, *n.* [id.] Seeing; பார்க்கை.

**ஆ-லோசி**-த்தல் ā-lōci, 11 *v. intr.* [S. *a-lōc*, fr. *ā-lōk-as* above—ஆ-லோகம்] 1. To take counsel, deliberate; கூடியாராய்தல். 2. To consider; சிந்தித்தல்.

**ஆ-லோசனை** ā-lōcaṉai, *n.* [id.] 1. Sight, seeing; காட்சி. 2. Counsel, reflection; யோசனை, சிந்திப்பு.

**ஆலோசிதம்** ā-lōcitam, *n.* [id.] 1. What is seen and noted; கண்டு கொண்டது. 2. What is thought out; சிந்திக்கப்பட்டது.

**ஆ-லோடனம்** ā-lōḍaṉam, *n.* [S. *ā-lōḍ-anam*, fr. *luḍ*, T. *uruḍḍ-u*—உருட்டு-தல்] Mixing; கலக்குதல்.

**ஆலோடி** āl-ōḍi, *n.* [*āḷ*+*ōḍi*—ஆள்+ஓடி] Raised platform in the front of a house; வீட்டு முன்புறத்திற் கட்டிய தளவரிசையிட்ட மிதப்பு.

**ஆ-லோலம்** ā-lōlam, *n.* [S. *ā-lōl-as*, fr. *lul*, T. *ur-uḷ*—உருள்-தல்] 1. Movement, trembling; அசைதல், நடுக்குதல். 2. Sound of rushing water; நீரொலி. 3. Expression used for driving birds away; புள்ளோச்சும் ஒலிக்குறிப்பு.

**ஆ-லோலிதம்** ā-lōlitam, *n.* [id.] 1. What is shaken, agitated; அசைவுண்டது. 2. Movement showing joy; சந்தோஷத்தைக் காட்டும் அசைவு. 3. Desire; பிரியம். —CPD **ஆலோலித-முகம்** °mukam, [Nāṭya] The gesture of calling one with a cheerful countenance; மலர்ந்த முகத்தோடு ஒருவரை அழைக்கும் அபிநயம்; 14 முக அபிநயக்களுள் ஒன்று.

**ஆலோன்** ālōṉ, V. *ālavaṉ*;=ஆலவன்.

**ஆவ** āva, *int.* [*ā*[1]+*a*—ஆ[1]அ] 1. An exclamation of pity; இரக்கக் குறிப்பு (திருவாச. 5, 74). 2. Of distress; அபயக் குறிப்பு (திருவாச. 5, 4).

**ஆ-வகம்** ā-vakam, *n.* [S. *ā-vah-as*, fr. *vah*, T. *ūkk-u*] One of the seven winds of mythology; சப்த மருத்துக்களுள் ஒன்று.

**ஆவகார்** āvakār, V. *āvukār*;=ஆவுகார்.

**ஆவகை** āvakai, V. *āpakam*;=ஆபகம்.

**ஆவச்-சீவாளம்** āvac-cīvāḷam, *n.* [S. *yāvat*, 'as much'+*jīva*, 'life'+*āḷam*, perh. for *aḷa-vu*] Details of life, private and public; முழுச் சீவிய வரலாறு.

**ஆ-வசதம்**, °சதியம் ā-vacatam, °cattiyam, *n.* [S. *ā-vas-athas*, fr. *vas*, 'to dwell'. Cf. T. *vati*—வதி-தல்] 1. House; வீடு. 2. Place where sacrificial fire is preserved; ஓமாக்கினி வளர்க்கும் இடம்.

**ஆ-வசியகம்**, **ஆ-வசியம்** ā-vaciyakam, ā-vaciyam, *n.* [*a-vaciyam*—அ-வசியம்] What is indispensable; இன்றியமையாதது.

**ஆ-வஞ்சி** ā-vañci, *n.* [prob. connected with *a*[4], 'cow'] A drum made of cow-hide; இடக்கை வாத்தியம், "ஆவிற

டைப வருசித் தேஸப் போர்த்தனால் ஆவ ஞ்சி என்று பெயராயிற்று" (சிலப். 3,27, அடியார்க்கு நல்லார்).

ஆவட்டங்கோட்டு-தல் āvaḍḍaṅkoḍḍu, *v. intr.* [Cf. *āvalaṅkoḍḍa,*—ஆவலங் கோட்ட] To go about denying something; இல்லையென்று சொல்லித்திரி தல்.

ஆவட்டை āvaḍḍai, *n.* A shrub; ஒரு பூண்டு.

ஆவட்டை-சோவட்டை āvaḍḍai-cōvaḍḍai, *n.* [prob. *cōrvu,* 'fainting'+ the echo-word *āvaḍḍai*] Weariness; சோர்வு.

ஆவடதர் āvaḍatar, *n.* A class of divine beings; தேவசாதியார் வகை (தக் கயா. 463, உரை).

ஆவடி āvaḍi, *n.* [Cf. *aṅkāḍi*—ஒப். அங் காடி] Depot; பொருள் சேமிக்கும் இடம்.

ஆவணம் āvaṇam, *n.* [prob. corrupted fr. *aṅkaṇam,* q. v.—<அங்கணம்] 1. Market, bazaar; கடைவீதி (பிங்.). 2. The seventh nakṣatra, as resembling a bazaar; புனர்பூசம். 3. Flower tray; பூந்தட்டு. 4. The inner part of a car in which the idol is placed; தேர்மொட்டுப் பொருந்திய விடம். 5. Bazaar street, street; தெரு (திவா.). 6. Sea-shore; கடற் கரை. 7. Ownership; உரிமை (பிங்.). 8. Slavery, service; அடிமைத்தனம் (தேவா. 869, 8). 9. Bond, deed; உரி மைப் பத்திரம் (தேவா. 977, 5). 10. Sign; அடையாளம். 11. Friendship; நட்பு. —CPDS ஆவண-வ்-ஓலை °ōlai, Title-deed; உரிமைப்பத்திரம், உறுதி (சுந்தபு. வழிச. 12). ஆவணக்-களம், °களரி °kaḷam, °kaḷari, Registration office; பத்திரப் பதிவுச் சாலை. உ-ம்: "ஆ வணக் களத்தே அறக்கொண்டு விற்று" (S. I. I. iii, 108). "ஆவணக் களரியே காட் டிக் காப்பிட்டு" (சோழவ. சரித். கருக். 68). ஆவண-மாக்கள் °mākkaḷ, Those who administer an oath; சத்தியஞ்செய்விப்போர் (அகம், 77). ஆ வண-வீதி °vīti, Bazaar கடைத்தெரு.

M. *avaṇam*; Sinh. *aṅgaṇa,* 'courtyard'; Mar. *aṅkaṇ*; Nep. *āṅan*; S. *āpaṇas.*

ஆவணி āvaṇi, *n.* [S. *śrāvaṇas*] 1. The 5th Tamil month: August—September; இந்தாம் மாதம். 2. The 22nd nakṣatra; அவிட்டம். —CPDS ஆவணி-அவிட்டம் °aviḍḍam, The annual ceremony of the twice-born changing their sacred thread; உபா கர்மம். An ancient festival in Madura; மதுரையில் முற்காலத்தடந்த ஒரு திருவிழா. ஆவணி-முழக்கம் °muḻakkam, Thunder after the 6th day of Āvaṇi indicating good rains; மழை காட்டும் ஆவணி இடி முழக்கம். ஆவணி-மூலம் °mūlam, The 19th lunar mansion of the month of Āvaṇi, considered auspicious for divine worship; 19-வ து நட்சத்திரத்தில் வரும் சுபநாள்.

ஆவணியம் āvaṇīyam, V. *āpaṇiyam*; =ஆபணியம்.

ஆவத்-தனம் āvat-taṉam, V. *āpat-°*; =ஆபத்-°.

ஆவதம் āvatam, V. *āvarttam*; =ஆ வர்த்தம்.

ஆவது āvatu, *n.* [fr. *āku*[1]—ஆகு-தல்] 1. Thing to be done; செய்யப்பட, நடக்கவேண்டியது. 2. Profit; இலாபம். உ-ம்: "அதில் உனக்கு ஆவதென்ன?". 3. [*conj.*] Either..or; விகற்பப் பொருள் தரும் இடைச்சொல். உ-ம்: "அவ்வாறுவது இவ்வாறுவது செய்". 4. [*part.*] Suffix indicating that explanation follows; விவரம் பின்வருதலைக் குறிக்கும் சுடைநிலை. உ-ம்: "சொல்லையாவது" (S. I. I. i, 103). Also an elegant termination for the nominative, as in பாவமாவது என்னவாரெல். 5. Affix of ordinal numbers; வரிசை எண்ணைக் குறிக்கும் சுடைநிலை. உ-ம்: "இரண்டாவதுபாடம்".

ஆவதை āvatai, *n.* [prob. *āvarttam,* q. v.] Repetition; திரும்பக் கூறுகை (மேரு. 1238).

ஆவம் āvam, *n.* [perh. fr. *ampu*[2]—அம்பு[2]] 1. Quiver; அம்பறாத் தூணி (மணி. 20, 63). 2. Bowstring; வில் நாண் (பிங்.). 3. Saffron tree; குங்கும மரம். 4. Arnotto; சாப்பிரா. 5. Kamela; கபிலப்பொடி. —CPD ஆவ-நாழி, °நா ழிகை °nāḻi, °-kai, Quiver; அம்புக் கூடு.

M. *avanāḻi.*

ஆ-வயின் ā-vayiṉ, *adv.* [*a-*[4] + *vayiṉ* <*vāy,* 'place'] In that place; அவ் விடத்தில்.

ஆவர் āvar, *pron.* [fr. *yāvar*<*ēvar*—யாவர்] Who?; யார்? (திவ். பெரியதி. 3, 3, 7).

ஆ-வர்த்தம் ā-varttam, *n.* [S. *ā-vartas,* 'turning', fr. *vṛt,* T. *uruḍḍ-u*] 1. Turning; திரும்புதல். 2. Whirlpool, whirlwind; சீர்ச்சுழி, சுழல்காற்று. 3. Crowded place; குடி நெருங்கிய விடம். 4. Lock of hair curling backward, especially of horses; மயிர் முடி, குதிரைமயிர்ச் சுருள். 5. Reflection; சிந்தித்தல். 6. Turn; தடவை. 7. Cloud that rains water; சந்த மேகங்களுள் நீர்பொழியுமது.

ஆ-வர்த்தகம் ā-varttakam, *n.* [id. +-*akam*[6]] 1. Whirling; சுழலுதல். 2. Whirlwind; சுழல்காற்று. 3. Revolution of the mind; மனக் கலக்கம். 4. Lock of hair; மயிர்முடி. 5. Horse's curled hair; குதிரை மயிர்ச் சுருள்.

ஆ-வர்த்தனம் ā-varttaṉam, *n.* [id.] 1. Turn; தடவை. 2. Second marriage; மறுவிவாகம். 3. Churning, melting; கடைதல், உருக்குதல். 4. Habit; பழக்கம். 5. Friendship; நட்பு.

ஆ-வர்த்தி ā-vartti, *n.* [id.] 1. Turn; தடவை. 2. Remarriage; புனர் விவாகம். [*v.*] ஆவர்த்திக்க °ikka, To remarry; மறுமணம் முடிக்க (திவ். பெரியாழ். 1, 8, அவ.).

ஆவர்ஜா āvarjā, [U. *awarza*] Rough day-book; இடைசரிக் கணக்கு.

ஆ-வரகம் ā-varakam, *n.* [S. *ā-varakas,* 'what conceals', fr. *vṛi,* T. *vaḷ-ai*] Veil, curtain; மூடி, திரைச்சீலை.

ஆ-வரணம்[1] ā-varaṇam, *n.* [id.] 1. Shelter, screen; ஒதுக்கு, மறைவு (கை வல். தத்துவவி. 53). 2. Shield; கேடகம். 3. Garment, coat; வஸ்திரம், சட்டை. 4. Obstruction, fence, rampart, arcade; தடை, புறவேலி, மதில், பிராகா ரம். 5. Fortification; கோட்டை. 6. Mental blindness; ஆணவமலம். —CPDS ஆவரணச்-சுவர் °cuvar, Temple wall; கோயிற்றிருமதில். ஆவரண-சக்தி °cakti, Power of illusion veiling the real nature of God souls and matter; மாயை. ஆவ ரண-தேவதை °tēvatai, Gods surrounding a principal deity; பரிவார தேவதைகள். ஆவரண-மூர்த்தி °mūrtti, Minor idols around the principal one; மூலஸ்தானத்தைச் சுற்றியிருக்கும் விக் கிரகங்கள் (சி. போ. பா. 8,1). [*v.*] ஆவர ணிக்க °ṇikka, To hide, obscure; மறைக்க.

ஆவரணி āvaraṇi, *n.* [id.] Pārvatī; பார்வதி.

ஆவரணீயம் āvaraṇīyam, *n.* [id. +S. -*īya*] What obscures or blinds the mental vision; மறைப்பது. உ-ம்: "ஞானாவரணீயம்".

ஆ-வரணம்[2] āvaraṇam, V. *ā-paraṇam*; = ஆ-பரணம்.

ஆவரி āvari, *n.* [Cf. *āvam*] Arrow; அம்பு.

ஆவரி-த்தல் āvari, *v. tr.* [V. *ā-varaṇam* —ஆ-வரணம்] To conceal; மறைத்தல் (சி. சி. 4,19, ஞானப்.).

ஆவரை āvarai, V. *āvirai*; = ஆவிரை.

ஆவல் āval, *n.* [fr. *avāv-al* < *avāvu*—அவாவுதல்] 1. Great desire, craving; ஆசை. 2. [Cf. *kavi*] Bend, form of a bow; வளைவு, வில்வளைவு (கம்பரா. கும்ப. 127).

M. *aval*.

ஆவலம்¹ āvalam, *n.* [fr. *-āval*, 'bend' + *-am²* — < ஆவல் = வளைவு] 1. Enclosure behind a house, garden; கொல்லை. 2. Rod round which yarn is wound; படைமரம் என்னும் நெசவுக் கருவி. 3. Saree; கூறை.

ஆவலர் āvalar, *n.* [*āval* + *-ar¹*] 1. Lovers; காதலர். 2. Husband; கணவன். 3. Relations; உற்றார்.

ஆவலி¹-த்தல் āvali, *v. intr.* [id. + *-i¹*] 1. To desire; ஆசைப்படுதல். 2. To yawn; கொட்டாவி விடுதல் (திருவிளை. வன்னியும். 12). 3. To weep; அழுதல் (கந்தபு. வள்ளி. 57).

M. *alikka*.

ஆவலிப்பு āvalippu, *n.* [id.] 1. Desire; ஆசை. 2. Bend; வளைவு. 3. Haughtiness; கர்வம் (திவ். திருமாலை, 1).

ஆ-வல்லி ā-valli, *n.* [Cf. S. *amrita-valli*] Gulancha; சீந்திற்கொடி.

ஆவலம்² āvalam, *n.* [prob. fr. *avalam* — < அவலம்] Noise made with the mouth in defiance; வாயால் ஆர்த்தல். —CPD ஆவலங்-கொட்ட °kodda, To make a noise with the mouth, patting at the same time with the hand, a sign of triumph or defiance; வாயால் ஆர்த்தாட (கந்தபு. சிங்கமுகா. 438).

ஆவலாதி āvalāti, *n.* [perh. fr. Sinh. *avatāda* which might be a corruption of S. *apa-rādhas*. V. *aparātam*] Crime, bad reputation, calumny; பழி, குறை கூறுகை. —CPDS ஆவலாதி-க்-காரன் °kāran, Scandalous fellow; போக்கிலி. ஆவலாதி-தூற °tūra, To defame, destroy one's reputation; பழிபேற்ற, மரியாதைகெடச்செய்ய.

M. *avalati*.

ஆவலி², ஆவளி¹ āvali, °ḷi, *n.* [S. *ā-valis* which is said to be derived fr. *uer (Walde—P. I. 263). This would correspond to T. *var-al* < *vaḷ-i*. Cf. *varal-āṟu*] Lineage; வமிசபரம்பரை. 2. Continuous line, row; இரேகை, ஒழுங்கு. 3. Marks on the palm of the hand &c.; கைவிரேகை. 4. (Jaina) Vaḷi, a small division of time; வளி என்னும் கால அளவு. [v.] ஆவலிக்க, ஆவளிக்க, āval(ḷ)ikka, To set in order; ஒழுங்கு படுத்த.

ஆவளி²-த்தல் āvaḷi, 11 *v. intr.* [*āvali*, *l/ḷ*—ஆவலி-த்தல்] 1. To desire; ஆசித்தல். 2. To yawn; கொட்டாவி விடுதல்.

ஆவளி³ āvaḷi, *n.* [perh. fr. *a-palam* q. v.—அ-பலம்?] 1. Calumny, falsity; அவதூறு. 2. Uncertainty; சந்தேகம். —CPDS ஆவளிச்-சேவகம் °cēvakam, Uncertain employment; நிச்சயமில்லாத உத்தியோகம். ஆவளி-ப்-பேச்சு °pēccu, Talk without foundation; உண்மையில் லன்றாத கதை.

ஆவற்-காலம் āvar-kālam, V. *āpar-kālam*; = ஆபற்காலம்.

ஆவறி āvaṟi, *n.* [*āvalippu*, *l/r*—ஆவலிப்பு] Eagerness, earnestness, haste; அவா, மிகு ஊக்கம், விரைவு. ஆவறியாவறி என்று ஓட, To run with great eagerness.

ஆவா āvā, *int.* [*ā¹* + *ā¹*] 1. Exclamation of pity; இரக்கக் குறிப்பு (திவ். திருவாய். 6, 10, 4). 2. Exclamation of surprise or joy; அதிசய ஆனந்தக் குறிப்பு (கந்தபு. வள்ளி. 45).

ஆ-வாகனம் ā-vākaṉam, *n.* [S. *ā-vāhanam* fr. *vah*, *ūh*, T. *ūkk-u*—ஊக்குவித்தல்] To invoke a deity by mantras to be present in an object; மந்திரத்தால் தெய்வம் எழுந்தருளுவித்தல் (திருமந். 1825). [v.] *āvākikka*. —CPD ஆவாகன-முத்திரை °muttirai, (Saiva) A handpose in worship; முத்திரை வகை (செந்தமிழ், X, 425).

ஆவாகை āvākai, *n.* Tinnevely senna; நிலவாகை.

ஆ-வாசம் ā-vācam, *n.* [S. *ā-vās-as*, fr. *vas*. Cf. T. *vāḻ-i*] 1. Habitation; வீடு. 2. Agricultural town; மருதநிலத்தூர். 3. Town; நகரம்.

ஆவாட்டு-தல் āvāḍḍu, *v. tr.* [for *āl-vāḍḍu*—= ஆல்வாட்டு] To winnow corn; மணிதூற்றுதல்.

ஆ-வாதம் ā-vātam, V. *ā-katam*; = ஆகதம்.

ஆ-வாபம் ā-vāpam, *n.* [S. *ā-vāp-as*, fr. *vap* 'to scatter', origin not clear, but cf. T. *tūv-u*] 1. Sowing; விதைப்பு. 2. [Cf. *ālavālam*] Seed-bed; பாத்தி. 3. Uneven land; சமமற்றநிலம். 4. A drink; பானவகை. 5. Cleansing of a vessel; பாண்டசுத்தி. 6. [Cf. *āvalam¹*] Bracelet; கைவளை. 7. Placing upon; இடுதல்.

ஆவாபனம் āvāpaṉam, *n.* [id.?] 1. Weaving; நெசவு. 2. Loom; செய்வார் தறி. 3. Reel for winding thread; நூல் சுற்றும் பரிவட்டம்.

ஆவாய்க்-கத்து-தல் āvāyk-kattu, *v. intr.* To go round denying; இல்லையென்று சொல்லித் திரிதல்.

ஆ-வாரகம், °வாரம் ā-vārakam, -vāram [V. *ā-varaṇam*] What covers, veil, screen; மறைப்பு (சி. சி. 2, 80, ஞானப்.). 2. What causes illusion; மயக்குவது (மெய்கீ. 22).

ஆவாரை āvārai, *n.* [Cf. *āvirai*—ஆவிரை] 1. Tanner's senna: Cassia auriculata; ஆவிரை. 2. Tinnevely senna; நிலவாகை. —CPDS ஆவாரம்-பூச்-சம்பா āvāram-pūc-campā, Kind of red paddy which matures in five months; சம்பாநெல்வகை. ஆவாரை-ப்-பஞ்சகம் °pañcakam, The five medicinal products of this plant, viz: leaf, flower, seed, bark and root; ஆவாரஞ் செடியின் இலை, பூ, வித்து, பட்டை, வேர் என்பன (பதார்த்த. 392).

ஆவாலம்¹ āvālam, *n.* [S. *āvālam* fr. *ālavālam*] V. *ālavālam*; = ஆலவாலம்.

ஆவாலம்² āvālam, *n.* [? *vāval*—ஒப். வாவல்] Bat; வௌவால்.

ஆவாலை āvālai, *n.* Kind of song; பாட்டுவகை (local.).

ஆவாளஞ்-சீவாளம் āvāḷañ-cīvāḷam, V. *āvac-cīvāḷam*; = ஆவச்-சீவாளம்.

ஆவி¹ āvi, *n.* [prob. fr. *avi¹*, 'to boil' — < அவி-தல்] 1. Steam, vapour; வெப்பத்தினால் நீர் மாறி எழும் வடிவு (பெரும்பாண். 469, உரை). 2. Kind of meal cake prepared by steam; பிட்டு. 3. Smoke; புகை (தஞ்சைவா. 20). Hence: 4. Tobacco; புகையிலை. 5. Fragrance; நறுமணம் (சீவக. 20). 6. Breath; உயிர்ப்பு (திவா.). 7. Sigh; நெட்டுயிர்ப்பு (கம்பரா. உலா. 30). 8. Yawn; கொட்டாவி (சீவக. 1572). 9. Soul; ஆன்மா (திருவாச. 33,7). 10. Vowel; உயிரெழுத்து. 11. Mind; மனம் (சீவக.1588). 12. Strength, power; வலிமை (கம்பரா. நிந்தனை. 69). —CPDS ஆவி-க்-கொழுக்கட்டை °kolukkaddai, Kind of pastry cooked in steam; நீராவியால் வேகும் பண்ணிகாரவகை. ஆவி-காட்ட °kādda, To make offerings of food to a deity;

தெய்வத்துக்கு நிவேதனஞ் செய்ய (திவ். பெரியாழ். 3,3,8, வ்யாக்.). ஆவி-த்-தைலம் °tailam, Distilled oil; வடித்த தைலம். ஆவி-நீர் °nīr, Distilled water; நீராவி குளிர்தலால்வரும் நீர். ஆவி-ப்-பதங்கம் °pataṅkam, Substances obtained by distillation; வைப்புச்சரக்கு. ஆவி-ப்-பத்திரம் °pattiram, Tobacco leaf; புகையிலை. ஆவி-பறிய °pariya, To exhale steam, as hot food; நீராவி எழும்ப. To die; மரிக்க. ஆவி-பிடிக்க °piḍikka, To take a vapour bath; வேதுகொள்ள. ஆவி-வாங்க °vāṅka, To inhale; சுவாசம் உட்கொள்ள. To take away another's life; உயிர் கவர. To deprive one of his strength, property &c.; பொருள் பறித்து வருத்த. ஆவி-விட °viḍa, To die voluntarily; தன்னைதாய் மரிக்க. To commit suicide; தற்கொலை செய்ய. ஆவி-வீச °vīca, To spread as ordours, especially unpleasant ones; துர்க்கந்தம் அடிக்க. அசுத்த-ஆவி acutta° Evil spirit, devil. பரிசுத்த-ஆவி paricutta° (Chr.) The Holy Spirit.

Tel., K., M. *avi*. Sinh. *avi*, 'life'. Cf. S. *avis*, 'openly.'

ஆவி-த்தல் āvi, *v. intr.* [id.] 1. To sigh; பெருமூச்சு விடுதல் (திவ். பெரியதி. 1,2,8). 2. To gape, yawn; கொட்டாவி விடல் (பிங்.). 3. To open the mouth for loud expression; வாய்விடுதல் (சீவக. 3124). 4. [*v. tr.*] To let out, as smoke; வெளிவிடுதல் (சீவக. 2426, உரை). 5. To desire; அவாவுதல்.

ஆவிகை āvikai, *n.* [prob. id.] Support, prop; பற்றுக்கோடு (குறிஞ்சி. கிரியை, 5).

ஆவியம் āviyam, *n.* [id. + -*am*³] 1. Life, strength; உயிர், சரீரபெலன். 2. Body; உடலம் (பிங்.). —CPD ஆவியங்-கெட்டுப்போக °keḍḍuppōka, To become as if bereft of life; உயிரிழந்ததுபோலாக.

ஆவி² āvi, *n.* [prob. fr. *āḷvu*, Cf. Gundert s. v.] Tank; குளம்.

M. *avi*, Cf. K. *avaḷ*, 'pond containing *ābal* (T. *āmpal*).'

-ஆவி³ āvi, *suff.* [for *āḷ-vi*=*āḷ-vāṉ*] A stem-suffix with the sense of 'master'; தலைவன் என்னும் பொருள் கொண்ட ஒரு கடைநிலை. உம்: "அண்ணாவி".

ஆவிகம் āvikam, *n.* [fr. *avi*¹—அவி = ஆடு] What is produced by sheep: blanket; ஆட்டினின்றுவரும் கம்பளம்.

ஆவிசீவாளம் āvicīvāḷam, V. *āvac-cīvāḷam*;=ஆவச்-சீவாளம்.

ஆவிடை, ஆவிடையாள் āviḍai, °yāḷ, V. *āvuḍaiyāḷ*;=ஆவுடையாள்.

ஆவிதம் āvitam, *n.* [S. *ā-vidh-as*, fr. *vyadh*, akin to T. *vedd-u*] 1. Awl, drill; துறப்பணம். 2. Sambur deer; மரை.

ஆவிபத்தம், °பதம் āvipattam, °patam, *n.* Fragrant sticky mallow; பேராமுட்டி.

ஆவிமா āvimā, *n.* Carey's myrtle bloom: Careya arborea; மாவகை.

ஆவியம் āviyam, V. *āvi*¹; ஆவி¹ பார்.

ஆவியர் āviyar, *n.* [fr. *Āvi*, an ancient Vēḷ chief—< ஆவி என்னும் வேள் (அகம், 1)] Descendants of Āvi of Pothini mountains; வேள் ஆவியின் மரபினர் (புறம். 147). 2. Vēḷāḷas; வேளாளர். 3. Hunters; வேடர். —CPD ஆவியர்கோ °kō, The liberal chief Pēkaṉ; பேகன் என்னும் வள்ளல்.

ஆ-விர்த்தி, ஆ-விர்தி ā-virtti, °virti, V. *ā-varaṇam*—ஆ-வரணம்] Obscuring; மறைப்பு (சி. சி. 2, 7, ஞானப்.).

ஆவிர்ப்-பாவம் āvirp-pāvam, *n.* [S. *āvis*, 'open', cf. T. *āvi*¹ + *bhāvas*, 'becoming', fr. *bhū*, perh. akin to T. *miku*] To become manifest as a deity before a devotee; வெளிப்படுகை. [*v.*] ஆவிர்ப்பவிக்க.

ஆ-விரதம் ā-viratam, *n.* [S. *ā-vṛi-ta*, V. *ā-varttam*] Whirl; சுழற்சி.

ஆவிரம் āviram, *n.* A hell; நரகவகை.

ஆ-விருத்தி ā-virutti, *n.* [V. *ā-varttam*] 1. Returning in a circle; சுழன்று வருகை. 2. Turn; தடவை. 3. Repeated reading; திரும்பத் திரும்பவோதுகை. 4. Repeated births; பிறவியிற் சுழலுதல். 5. (Astron.) Complete number of the revolutions of a planet; பரிவிருத்தி. 6. Use; பிரயோகம். —CPD ஆ-விருத்தி-அலங்காரம் °alaṅkāram. (Rhet.) Figure of speech in which the same expression or the sense thereof is repeated to heighten the effect; பின்வருநிலையணி.

ஆ-விருதி ā-viruti, *n.* [V. *āvaraṇam*] 1. Āṇavamalam; ஆணவமலம் (சி. போ. 4,2, சிற்.). 2. Obscuring; மறைப்பு. 3. for *ā-kiruti*; = ஆ-கிருதி.

-ஆவிருந்து -āviruntu, *part.* [*āka-iruntu*] A sign indicating present tense; நிகழ்காலங் காட்டும் ஓர் இடைநிலை. "கருமமாராயாவிருந்து" (S. I. I. iii, 137).

ஆவிரை āvirai, *n.* Tanner's senna: Cassia auriculata; செடிவகை (தொல். எழுத். 283). A tree; ஒரு மரம். "வான் ணாவிரைவார்கணிபரவிரை" (காஞ்சிப்பு. சரக். 12). செவ்° cev°, Peacock-flower tree; நில° nila°, Senna cassia; பொன்° poṉ°, Gold-coloured flower tree: Cassia sophera; வெள்° veḷ°, A species with white flowers.

K., M. *aviram*.

ஆவில் āvil, *n.* Entire-leaved elm; ஆயா.

M. *avil*.

ஆவிலம் āvilam, *n.* [S. *āvila*, 'turbid', etym. not clear; perh. fr. T. *āḷal*] Turbid water; கலங்கல் நீர்.

M. *avilam*.

ஆவிலியர் āviliyar, V. *āviyar*;=ஆவியர்.

ஆவீரம் āvīram, *n.* [S. *ābhīra*, prob. for T. *āyar* q. v.] Village of shepherds; இடையரூர்.

ஆவு āvu, *n.* Crab's eye; குன்றிக்கொடி.

ஆவு-தல் āvu, V. *avāvu*;=அவாவு-தல். —CPD ஆவி-ச்-சேர்க்க °cērkka, To embrace; கட்டியணைக்க.

ஆவுகார் āvukār, *n.* [Du. *avegaar*, fr. *navegaar*] Auger; துளைக்கும் கருவி.

ஆவுடையாள் (ர்) āvuḍaiyāḷ (r), *n.* [according to Mousset—Dupuy, fr. S. *hā*, 'copulation' + *uḍaiyāḷ*. Madras Lexicon has *āḷ*+ ] Receptacle whereon the Linga is placed; இலிங்கத்தின் பீடம் (சி. சி. 1, 69, சிவப்.).

ஆவுதி āvuti, V. *ākuti*;=ஆகுதி.

ஆ'வுரிஞ்சி ā'vuriñci, V. *ā*⁴;=ஆ⁴ பார்.

ஆவெனல் āveṉal, *n.* [*ā*¹ + *eṉ*, 'to say'] Expression signifying crying, perh. opening the mouth wide; அழுகை, வாயை அகலத் திறத்தல் என்பவற்றின் குறிப்பு.

ஆ-வேகம் ā-vēkam, *n.* [S. *ā-vēg-as*, fr. *vij*, 'to be agitated'. Cf. T. *vic-u*] 1. Perplexity; தடுமாற்றம். 2. Haste; துரிதம்.

ஆவேகி āvēki, *n.* [connected with *avi*³?] Wormkiller; ஆடுதின்னாப்பாளை.

ஆ-வேசம் ā-vēcam, *n.* [S. *ā-vēś-as*, fr. *viś*, 'to pierce, enter'. Cf. T. *uḷ-u*] 1. Entering; உட்புகுகை. 2. Possession by a spirit or demon; தெய்வம் ஏறுகை, பேய்க்கோள். 3. Enthusiasm, exstasy; ஒன்றிலே மனம் அழுந்தி நிற்றல், பரவசம். 4. Paroxysm; தலைச்சுழற்சி, வெறியாட்டு. 5. Anger, passion, pride; கோபம், இறுமாப்பு.—CPDS

ஆவேச-அவதாரம் °avatāram, Vishnu's secondary or partial incarnation; திருமாலின் கௌண அவதாரம். ஆவேச-சமவாதம் °camavātam, A Saiva sect; சைவசமயம். ஆவேச-நீர் °nīr, Strong drink; கள் முதலியன (திருப்பு. 794). ஆவேச-வாதி °vāti, Member of the Kāpālika sect; காபாலிக மதத்தான். [v.] ஆவேசிக்க, To be possessed.

ஆ-வேசனம் ā-vēcaṉam, *n.* [id.] 1. Entrance; உட்புகல். 2. Possession; பேய்க்கோள். 3. Disc of the sun; சூரியமண்டலம். 4. Smithy; அக்கசாலை. 5. Street of artists; சித்திரகாரர்வீதி.

ஆ-வேசிகன் ā-vēcikaṉ, *n.* [id. 'one who has come in'] Guest; விருந்து.

ஆவேசி āvēci, V. *āvēki*; =ஆவேகி.

ஆ-வேட்டகம், °வேஷ்டகம் ā-vēṭṭakam, °vēṣṭakam, *n.* [S. *ā-vēṣṭ-akas*, fr. *vēṣṭ*, akin to T. *vēy*, 'to surround'] 1. Fence, rampart; வேலி, மதில்.

ஆ-வேட்டனம் ā-vēṭṭaṉam, *n.* [id.] Surrounding, turning; சூழுதல், திருப்புதல்.

ஆ-வேதகன் ā-vētakaṉ, *n.* [S. *ā-vēd-akas*, fr. *vid*, 'to know, intimate', T. *viḷ-i*] 1. One who makes known; அறிவிப்போன். 2. Suitor, appellant; வியாச்சியமாடுவோன்.

ஆ-வேதனம் ā-vētaṉam, *n.* [id.] Making known, report; அறிவிப்பு, அறிக்கைப் பத்திரம்.

ஆ-வேலி ā-vēli, *n.* [*ā*-[4] + *vēli*, 'enclosure'] Stall for cows & oxen; தொழுவம்.

ஆவேறு āv-ēṟu, *n.* [*a*-[4] + *ēṟ-u*, 'male'] Bull; இடபம் (உபதேச. திருமால். 16).

ஆவோ āvō, *int.* [*ā*[2] + *ō*[2]] Expression of wonder, pity, distress; அதிசய இரக்கச் சொல்.

ஆழ்-தல் āḻ, 4 *v. tr.* [intensified form of *akaḻ*. Cf. *āy*[2]—அகழ்-தல்] 1. To dig; கிண்டுதல் (தேவா. 1153, 9). 2. [*v. intr.*] To pierce, enter, ஊடுருவல், புகுதல் (கம்பரா. நகர. 64). 3. To sink; மூழ்குதல் (காலடி. 12). 4. To fall down; விழுதல் (சீவக. 282). 5. To be overwhelmed, absorbed; அழுந்தியிருத்தல் (சீவக. 438). 6. To be deep; ஆழமாதல். உ-ம்: "ஆழ்கடல்". 7. To suffer; வருந்துதல் (பதிறு. காலக். திருவிட். 6).

K., M. *aḷ*, Tu. *aḷa*, 'depth'. In addition to parallels noted under *akaḻ* cf. Gr. *aulōn*, 'defile, canal'; Arm. *ul, uli*, 'way, belly'. Perh. Old. N. *all*, 'deep canal'; L. *alvus*, 'cavity'. Cf. Walde—P. under *aulo-s*, who also includes S. *aluḥ*, 'pitcher, rivulet' and *araḥ*, 'cavity'.

ஆழ்வார் āḻvār, *n.* [said to be id. + -*(v) ār*; the form is of the future tense. Cf., however, *āḷvār*] 1. Those who are deep in meditation on the Supreme Being; பகவத் குணங்களில் ஆழ்ந்து ஈடுபடுவோர் (திவ். இயற். நான்மு. 14). 2. The twelve recognised saints of the Vaishnavas; திருமாலடியார் பன்னிருவர். 3. Title of Jain and Buddhist saints; சைன புத்தமத பக்தர்கள். 4. [=*āḷ-vār*] Lord; சுவாமி. உ-ம்: "ஆழ்வார் திருவரங்க தேவர்" (S. I. I. iii. 150). —CPDS ஆழ்வார்-கன்மி °kaṉmi, Priest of a Vishnu temple; திருமாற்கோயிலருச்சகன். ஆழ்வார்-பாடல் °pāḍal, The hymns of the Vaishnava saints, four thousand in number; நாலாயிரப் பிரபந்தம்.

ஆழ்வான் āḻvāṉ, *n.* [id. as sinking into the sea, or perh. < *āḷ*] Sun; சூரியன்.

ஆழ்வி āḻvi *n.* [properly fr. *āḷ*] 1. Lord; தலைவன் (S. I. I. v. 84). 2. Lady; தலைவி.

ஆழ்வு āḻvu, *n.* [id + -*(v)u*[6]] Depth; ஆழம் (இரகு. திக். 26).

ஆழம் āḻam, *n.* [id. + -*am*[2]] 1. Depth, abyss; தாழ்வு, கடல். 2. Comprehensiveness of mind; அன்று ணர்வு (திருக்கோ. 61). —CPDS ஆழம்-உடைத்தா'தல் °uḍaitt'ātal Profundity of thought; அழகுகளுள் ஒன்று (தண். 13). ஆழங்-கால் °kāl, Shallow water; அதிக தாழ்வில்லாத நீர் நிலை (குருகூர்ப் பள்ளு, பக். 7). Wooden prop inserted in a wall to support a shelf; பலகை தாங்கி. ஆழங்காற்-பட °°paḍa, To be immersed, absorbed in; அழுந்திக் கிடக்க. ஆழம்-பார்க்க °pārkka, To take soundings; தாழ்வை அளத்தறிய. To test one's knowledge; ஒருவரறிவைச் சோதிக்க.

K. *aḷa*; M. *aḻam*; Tu. *aḷa*.

ஆழல் āḻal, *n.* [id. + -*al*[7], 'what digs into the earth'—அகழ்வது] White ant; கறையான்.

ஆழி[1] āḻi, *n.* [id. + -*i*[4]] 1. Sea; கடல் (பிங்.). 2. Seashore; கடற்கரை (புறம், 330). —CPDS ஆழி-க்-கொடி °kodi, Coral; பவளம். ஆழி-த்-தீ °tī, Submarine fire; வடவையனல் (இரகு. யாக. 70). ஆழி-முரசோன் °muracōṉ, Kāma whose drum is the sea; மன்மதன். ஆழி-வித்து °vittu, Pearl; முத்து.

ஆழியன் āḻiyaṉ, *n.* [id. + -*(y)aṉ*[5]] Varuṇa; வருணன்.

ஆழி-த்தல் āḻi, *v. tr.* [id. + -*i* which functions as v. det.] 1. To dig deep; ஆழமாய்த் தோண்டல். 2. To fix solidly; நிலையூன்றுவித்தல்.

ஆழ்த்து-தல் āḻttu, 5 *v. tr.* [*caus.* of *āḻ*] 1. To sink into the earth or water, to involve; தாழ்த்தல் (சங்கற்பநி. 7). 2. To bind or build; கட்டுதல்.

ஆழரம் āḻaram, *n.* Country fig; அத்தி.

ஆழா-த்தல் āḻā, 12 *v. intr.* [*āḻ* + *ā*[3]] To be immersed, absorbed; ஈடுபடுதல் (திவ். திருவாய். 2, 1, 8).

ஆழாக்கு āḻākku, *n.* [*arai*[1] + *uḻakku* (Gundert)] Dry or liquid measure = ⅛ of a measure; அரைக்காற்படி.

K. *aḷakku*; M. *aḷakku*.

ஆழாங்கு āḻāṅku, for *āḻaṅkāl*; =ஆழங்கால்.

ஆழாடக்-கிழங்கு āḻāḍak-kiḻaṅku, *n.* Climbing asparagus; தண்ணீர்விட்டான்.

ஆழாரம் āḻāram, *n.* [prob. *āḻi*[2] + *āram*[1], both meaning 'circle'— ஆழி[2] + ஆரம்[1]] Ancient Indian cromlech or stone circle for burial; பழைய காலத்து வட்டாகாரமான கல்லறை.

ஆழி[2] āḻi, *n.* [fr. *āḻu*, 'to go round as in dancing'— <ஆலு-தல் =சுற்றி வால்] 1. Circle; வட்டம் (சீவக. 1037). 2. Carriage wheel, carriage; வண்டிச் சக்கரம், வண்டில் (பிங்.) 3. Potter's wheel; குயவன் திகிரி (கம்பரா. வாலிவ. 37). 4. Curved line of loops drawn on sand by a woman to divine her husband's safe return; கணவனைப் பிரிந்த மகளிர் இழைக்கும் கூடற் சுழி (ஐங். 43). 5. Discus weapon; சக்கராயுதம் (திவ். திருவாய். 7,4,1). Hence: 6. Royal power, rule; ஆஞ்ஞாசக்கரம், கட்டளை. 7. Ring; மோதிரம் (சீவக. 833). 8. Tip of the elephant's trunk; தும்பிக்கைநுனி. —CPDS ஆழி-அளித்தோன் °aḷittōṉ, Siva, who gave Vishnu his cakkaram; சிவன். ஆழி-இழைக்க °iḻaikka, To draw a circle of loops on sand for divination; கூடலுக்கு மணல்மேல் வட்டமிழை (சீவக. 1037). ஆழி-த்-தேர் °tēr, Car shaped like a discus; சக்கராயுத வடிவான தேர் (தேவா. 699,7). ஆழி-திருத்த °tirutta, =āḻi-iḻaikka; =ஆழி-இழைக்க. ஆழி-தொட்டான்

°toḍḍāṉ, General of an army, as wearing the ring of his office; ஏறுதி மோதிரம் தரித்த தளகர்த்தன் (சீவக. 2167). ஆழி-ப்-படையான் °paḍaiyāṉ, Vishnu, as bearing the cakkaram; திருமால். ஆழி-மால்-வரை °māl-varai, Mythological range of mountains encircling the orb of the earth; சக்கரவாளகிரி. ஆழி-ரேகை °rēkai, Curved lines in hand and feet; சக்கரரேகை. ஆழி-விரல் °viral, Ring-finger; மோதிரவிரல்.

K. *aḻi*, 'roundness, craftiness'; M. *aḻi*, 'roundness, discus', S. *aṇis*, 'part of the leg above the knee, corner', *artni*, 'end of a bow'. Cf. Gr. *ōlenē*; L. *ulna*; Got. *aleina*; Old N. *olu*; AS *eln*; O. H. G. *elina*; S. *aratnis*; E. *elbow*. For many other prob. parallelisms see Walde—P. under *elei- lei-*. Cf. also T. *uḻal*, *araḷam*.

ஆழியன்² āḻiyaṉ, *n.* [id. + -*(y)aṉ*³] Trickster; தந்திரி.

Cf. S. *alīkam*, 'untruth'.

ஆழியான் āḻiyāṉ, *n.* [id. + -*(y)āṉ*⁴] 1. Vishnu as wielding the discus; திருமால். 2. King; அரசன்.

ஆழி³ āḻi, V. *āḻi*⁴; = ஆணி³.

ஆழிமுழையாய் āḻimūḻaiyāy, *adv.* [*āḻi*²] With great speed; அதிவேகமாய் (திவ். திருநெடுந். 19, வ்யாக்.).

ஆழிய-கடல்-விழுது āḻiya-kaḍal-viḻutu, *n.* [*āḻiya* for *āḻnta*, 'deep' + *kaḍal*, 'sea' + *viḻu-tu*, 'what falls down'] Deep-sea lead-line; கடலாழம் அறியும் கயிறு.

ஆழி-வலியான்-மணி āḻi-valiyāṉ-maṇi, *n.* [*āḻi*²?] Common pepper; மிளகு (தைலவ. தைல. 135).

ஆழும்-பாழுமாய் āḻum-pāḻumāy, *adv.* [*aḻ* echo word *pāḻ*, 'waste'] 1. In a ruined condition; சீர்கேடாய். 2. In vain; வீணாக.

ஆள்(ளு)-தல் āḷ(u), 2 *v. tr.* [rt. *aḷ*, 'to put near, to press together, to be strong'—√அள்] 1. To bind; கட்டுதல். 2. To possess and employ as one's own; உரிமையாக்கிக்கொள்ளல். 3. To control; அடக்கி நடத்துதல். 4. To keep or maintain in use, cherish; வழக்கச் செய்தல், நம்புதல். 5. To rule, exercise royal power; அரசு செய்தல்.

K., M., Tu. *aḷ*; Tel. *ēlu*. Cf. Su. *al* Akk. *allu*, 'strength, guard', figured by what is surmised to be a pick-axe (Barton. No. 260). S. *al*, 'to be competent, able'.

ஆட்சி āḍci, *n.* [id. + -*(c)i*⁴] 1. Possession, enjoyment; உரிமையாக வைத்து அநுபவிக்கல். 2. Use in literature, classical usage; ஆன்றோர் வழக்கு. 3. Lordship, power; உரிமை, வல்லமை. 4. Government; அரசசெய்கை. 5. Sphere of one's authority; பிறர் உட்செல்லலாகாது என வைத்த இடம் (திருக். 282, உரை). 5. (Astrol.) Ruling house of a planet; கிரகநிலைகளுள் ஒன்று. 7. Good augury; நன்னிமித்தம். —CPDS ஆட்சி-ப்-பட °paḍa, To become one's own by long possession; உரிமையாய் வர. ஆட்சி-ராசி, வீடு, ஸ்தானம் °rāci, °vīḍu, °stāṉam, (Astrol.) Position of a planet in its own house; கிரகங்களின் ஸ்வக்ஷேத்திரம்.

M. *āḻci*.

ஆட்சை āḍcai, *n.* [=*āḍci*] Weekday; கிழமை. உ-ம்: "வியாழவாட்சை" (T. A. S. i, 179).

M. *āḻca*; Sinh. *aṇḍuva*, 'government'.

ஆள் āḷ, *n.* [id.] 1. Person, man or woman; மனுஷ சாதியத்தில் ஆண் அல்லது பெண். 2. (Cath.) Personality as centre of attribution; சுவாதீன கிரியைகளுக்கு வினைமுதலாய் நிற்கும் கர்த்திருத்துவம். 3. Man of capacity; சமர்த்தன் (திரிக. 7). 4. Warrior; வீரன் (பு. வெ. 2,7). 5. Foot-soldier; காலாள் (பு. வெ. 7,13). 6. Man; ஆண்மகன் (குறள், 1030). 7. Husband; கணவன் (மாக்குண்டாம், 3). 8. Adult; வளர்ந்தவன். 9. Servant, slave; ஊழியன், அடிமை (நாலடி. 122). 10. Devotee; தொண்டன் (திருவாச. 38,2). 11. Man's height as a standard of measure; ஆள்மட்டம். 12. For āḷ-vaṇaṅki; = ஆள்வணங்கி. —CPDS ஆட்-கடியன் °kaḍiyaṉ, Kind of snake, crocodile; ஒருவகைப் பாம்பு, முதலை. ஆட்-காட்டி °kāḍḍi, Fore-finger; சுட்டுவிரல். Red wattled lapwing: Sarcogrammus indicus; இரவில் ஆள்அருகைக் கிக்கிடும் பறவை. Sign-post; கைகாட்டி. ஆட்-கால் °kāl, In chess, a square where a piece is liable to be captured by a pawn; சதுரங்கக் கட்டத்துள் காலாட்காயால் வெட்டக்கூடிய அறை. ஆட்-கூலி °kūli, Wages of a labourer; வேலைக்காரன் சம்பளம். ஆட்-கொல்லி °kolli, Murderer; கொலைஞன். Money as cause of murders; பணம் (அருட்பா, செஞ்சதி. 412). ஆட்-கொள்ள °koḷḷa, To accept one as a slave or faithful devotee; அடிமையாய், அன்பனுய் ஏற்றுக்கொள்ள (திருவாச. 10,4). ஆட்-சுமை °cumai, A man's load; ஒராள் தூக்கும் பாரம். ஆட்-செய்ய °ceyya, To act as a slave, to pay homage to; தொண்டுசெய்ய, தொழ (திவ். திருவாய். 4, 10, 11). ஆட்-பட °paḍa, To become a slave, devotee especially to a deity; அடிமையாக, தொண்டராக (திருவாச. 12, 12). To rise from obscurity, recuperate after illness; முன்னில்லாத உயர்நிலையை, தேகசுகத்தை அடைய. ஆட்-பலி °pali, Human sacrifice; நரபலி (திவ். இயற். நான்முகன். 52). ஆட்-பழக்கம் °paḻakkam, Being frequented by men, as a road; மனித சஞ்சாரம். ஆட்-பார்க்க °pārkka, To watch against detection; வேற்றுள் வாராமல் தடுக்க. ஆட்-பிடியன் °piḍiyaṉ, Alligator; முதலை. ஆட்-பிரமாணம் °piramāṇam, Man's height as standard of measurement; ஆள் அளவு. ஆட்-புருஷம் (பிரியம்) °puruṣam (piriyam), Do; ௸. ஆள'டிமை °aḍimai, Slave; கொத்தடிமை. ஆள்-அமஞ்சி °amañci, Forced labour; கூலி கொடாமற் செய்யும் வேலை, இராசகாரியம் (S. I. I. i, 103). ஆள'ரி °ari, Vishnu in his incarnation of man-lion; நரசிங்க மூர்த்தி (திருச்சிற். 225, உரை). Lion; ஆண்சிங்கம். ஆள'றுதி °aṟuti, Solitude; தனிமை (கலித். 144, உரை). ஆளா'க °āka, V. āḍ-paḍa; = ஆட்பட. To attain puberty; விவாகப்பருவமடைய. ஆளா'ழம் °āḻam, = āḍ-puruṣam; = ஆட்புருஷம். ஆளி'ட்டான்-காசு °iḍḍāṉ-kācu, An ancient coin; பழைய நாணயவகை (பணவிடுதூது, 115). ஆளி'ட °iḍa, To appoint a substitute; பதிலாக ஒருவரை நியமிக்க. ஆளு'டையான் °uḍaiyāṉ, One who has accepted a person as servant; அடிமை கொண்டவன் (திவ். திருவாய். 5, 1, 10). Lord, Supreme Being; சுவாமி, கடவுள் (S. I. I. ii, 392). ஆளொ'ட்டி, ஆள்-ஒதுங்கி °oḍḍi, °otuṅki, Sentry box; காவற்கூடு. ஆளோ'ட்டி °ōḍḍi, Task-master; வேலை வாங்குவோன். ஆளோ'டி °ōḍi, Paved passage along the inner side of a parapet wall; மதிலுட்புறமாக நடப்பதற்குக் கட்டிய மேடை. ஆளோ'லை °ōlai, Bond of a slave; அடிமைப் பத்திரம் (பெரியபு. தடுத்தாட். 45). ஆள்-காட்டி-வேலை °kāḍḍi-vēlai, Shoddy work; கள்ளவேலை. ஆள்-நெல்லு °nellu, A tax; வரிவகை (S. I. I. vi, 155). ஆள்-மட்டச்-சுவர் °maḍḍac-cuvar, Parapet wall; கைபிடிச் சுவர். Compound wall; மதில். ஆள்-மட்டம் °maḍḍam, V. āḍ-pira-māṇam; = ஆட்பிரமாணம். ஆள்-மாகாணம் °mākāṇam, Establishment; ஸ்தாபனம். Dependents; சேர்க்கட்டு. ஆள்-மாராட்டம் °mārāḍḍam, False personation; வேருளாகத் தன்னைக் காட்டு

கை. ஆள்-வணங்கி °vaṇaṅki, Pipal as object of people's worship; அரசு. Touch-me-not plant; தொட்டாற் சுருங்கி. Mango; மாமரம். Common mountain ebony; ஆத்தி. ஆள்-வரி °vari, Poll tax; தலைவரி. ஆள்-வள்ளி °vaḷḷi, Cassava plant: Manihot utilissima; மரவள்ளி. Wild yam: Disceorea daemona; கிழங்குவகை. ஆள்-வாரம் °vāram, Tenant's portion of the produce determined by the number of labourers in his family; பண்ணையாட்பங்கு. ஆள்-வாரி °vāri, Paved passage on the inner side of the parapet wall of a tank; குளக்கட்டின் உட்புற ஆளோடி. ஆள்-வாரி-நிலம் °°nilam, Paved passage along the walls within a fortification; கோட்டை மதிலுட்புற ஆளோடி. ஆள்-விட °viḍa, To send a messenger; தூதனுப்ப. ஆள்-விழுங்கி °viḻuṅki, Long robe; நெடிய சட்டை. ஆள்-வினை °vinai, Manly effort, enterprise; ஊக்கம், முயற்சி. Enthusiasm; உற்சாகம். ஆள்வினை-வேள்வி °°vēḷvi, Hospitality to guests considered as meritorious as a sacrifice; விருந்து புறந்தருகை (பதிற்று. 3,21,13, உரை). ஆள்-வீதம் °vītam, Rate per individual; தலைக்கு இத்தனை என்பது. At the rate of one; ஒவ்வொன்றுக்கு ஒரு ஆள் என்பது. ஆளை-அடிச்சான் °aḍiccān, Tamarind tree; புளியமரம்.

ஆள்வார் āḷvār, *n.* [*āḷ-vu* + *-ār*[10]. Cf. *āḻvār*] 1. Supreme ruler, God; கடவுள் (S. I. I. iii, 103). 2. Owner; உரிமைக்காரன். —CPD ஆள்வாரிலி-மாடு °ili-māḍu, Straying cattle; பட்டிமாடு (திருவாச. 21,7). Cattle belonging to a temple; கோயில் மாடு.

ஆள்வான் āḷvāṉ, *n.* [*āḷ-vu* + *-āṉ*[4]] Chief; தலைவன்.

ஆள்வு āḷvu, *n.* [*aḷ* + *-(v)u*[6]] Ruling; ஆட்சிசெய்தல் (கம்பரா. சரா. 5).

-ஆளம் -āḷam, *suff.* [*āḷ*, 'to possess' + *-am*[2]] A stem-suffix with the sense of possessing. Cf. *-āḷaṉ*; 'உடையது' என்னும் பொருள் உள்ள கடைநிலை. உ-ம்: "ஏராளம்".

Cf. S. *-ḷa* (*-aḷa*) in *karāḷa*, *dayāḷa* &c. L. *-ari* in *argentarius*, *seminarium*.

ஆளல் āḷal, *n.* [id. + *-al*[1]] Act of ruling, of bringing into use; ஆளுதல், உபயோகப்படுத்துதல்.

ஆளன் āḷaṉ, *n.* [id. + *-aṉ*[5]] 1. One who rules, possessor; ஆளுபவன். 2. Husband; கணவன். 3. Proprietor of a hereditary share in a village; கிராமத்தில் பரம்பரையாக உரிமையுள்ளவன். 4. Slave; அடிமை. 5. [*suffix*] In compounds denoting 'possessor of, master of'; உடையவன் என்னும் பொருளுள்ள கடைநிலை. உ-ம்: "கிழையாளன்".

ஆளி[1] āḷi, *n.* [id. + *-i*[4]] 1. One who rules or controls; ஆள்வோன் (திவ். இயற். நான்மு. 14). 2. [*suff.*] Ending of rational nouns denoting possessor; உடையவன்(ள்) என்னும் பொருளுள்ள கடைநிலை. உ-ம்: "உழைப்பாளி", "மணவாளி".

K. *aḷu*; M. *āḷi*; S. *-aḷu*.

ஆளி[2] āḷi, *n.* [id.] 1. Female companion; பாங்கி. 2. Honest thought; சுத்தக் கருத்து.

S. *ālis*, 'woman's female friend'.

-ஆள்[2] āḷ, *suff.* [fr. *avaḷ*— <அவள்] Noun and verb ending of the third person *fem. sing.*; பெண்பால் விகுதி. உ-ம்: "இன்னாள் வந்தாள்".

Cf. L. *-ā*; S. *-ī*.

ஆளகம் āḷakam, *n.* Calabash; சுரைக்கொடி.

ஆளத்தி āḷatti, V. *ālāpam*; = ஆலாபம்.

ஆளல் āḷal, *n.* [Cf. *āral*—ஒப். ஆரல்] A kind of fish; மீன்வகை (குருகூர்ப்பள்ளு, பக். 7).

ஆளாங்கு āḷāṅku, V. *āḻāṅku*;—ஆழாங்கு.

ஆளாபம் āḷāpam, V. *ālāpam*; = ஆலாபம்.

ஆளானம் āḷāṉam, *n.* [S. *ālānam* prob. fr. T. *āṉai*, 'elephant' + *aḷ*, 'what fastens'—according to Kittel. He derives *arālas*, 'elephant in rut', fr. *aḷ*, 'to destroy' + *āṉai*, V. *arāḷam*, p. 134— <அள் + ஆனை] 1. Post to which elephants are tied; யானைகட்டுந்தறி (இரகு. குறைதீ. 55). 2. Pillar; தூண் (பிங்.). 3. Plough; கலப்பை.

ஆளி[3] āḷi, *n.* 1. Linseed plant: Linus usitatissimum; செடிவகை. 2. Oyster: Ostrea edulis; கிளிஞ்சில் வகை. 3. Slipperiness; வழுக்கல். 4. Bundle; சிறுமூட்டை.

ஆளி[4] āḷi, *n.* [prob. fr. the onom *āḷ*, 'howling'. Cf. *ñāḷal*, *ñamali*—ஆளெனல் என்னும் ஒலிக்குறிப்பினின்று எழுந்த சொற்போலும்] 1. A fabulous animal; யாளியாளி (பொருந. 139). 2. Lion; சிங்கம் (தனிகைப். நாட். 60). —CPD ஆளி-ஊர்தி °ūrti, Durgā, as riding a lion; துர்க்கை.

Cf. S. *vyala*, *vyaḍa*, 'beast of prey'.

ஆளி[5] āḷi, *n.* [V. *āli*[4]— = ஆலி[4]] 1. Row; வரிசை. 2. Ridge in fields; வரம்பு. 3. Bridge; பாலம்.

ஆளி[6] āḷi *n.* [U. *hālim*] Cress: Lepidum sativum; கீரைவகை.

-ஆளி-த்தல் -āḷi, *v. tr.* and *intr.* [prob. fr. *āḷ*[1]] An auxiliary with the sense of 'converting', 'being converted into'; மாற்றுதல், மாறுதல் என்னும் பொருளுள்ள ஒரு துணைவினை. உ-ம்: "சமாளிக்க", "இளவாளிக்க",

ஆளுகை āḷukai, *n.* [*āḷ-u* + *-(k)ai*[7]] Rule, control; ஆட்சி.

ஆளுங்-கணத்தார் āḷuṅ-kaṇattār, id. + *kaṇam*, 'assembly' + *-attu-*[1] + *-ār*[10]] Managing members of the village assembly; ஊர்ச்சபை அதிகாரிகள் (I. M. P. Tp. 725).

ஆளெ'னல் āḷ-eṉal, *n.* Onom. expression for a dog's howling; நாய் குரைத்தற் குறிப்பு (சீவக. 936, உரை).

ஆளை āḷai, *n.* Bermuda grass; அறுகு.

ஆற்கந்திதம் āṟkantitam, V. *ākkantitam*; = ஆக்கந்திதம்.

ஆற்பணம் āṟpaṇam, *n.* [for *arppaṇam*, <அர்ப்பணம்] Liking; பிரீதி.

ஆற்பதம் āṟpatam, V. *ā-s-patam*; = ஆஸ்-பதம்.

ஆற்பலம் āṟpalam, *n.* [prob. *pal-am*, <*vali*, 'strength'] 1. Juice; சாரம். 2. Force; வன்மை.

ஆற்பனே-பதம் āṟpaṉē-patam, *n.* [S. *ātmanē-padam*, 'word to oneself'. V. *āttumam*[1] + *patam*[2]] Sanskrit verb whose action refers to the agent; வடமொழித் தன்வினை வகை (பி. வி. 36).

ஆ-ற்போடம் ā-ṟpōḍam, *n.* [S. *ā-sphōṭā*] Mussel shell creeper; காக்கணம்.

ஆ-ற்போதம் ā-ṟpōtam, *n.* [S. *ā-sphotas*, prob. same as above] Maddar; எருக்கு.

ஆற்ற āṟṟa, V. *āṟṟu*; ஆற்று-தல் பார்.

ஆற்றம்-, ஆற்று- āṟṟam-, āṟṟu-, *adj.* form of *āṟu*, 'river, way'—ஆறு[1] என்பதின் உரிச்சொல்லுருவம். —CPDS ஆற்றங்-கரை °karai, Bank of a river; நதிதீரம். ஆற்றங்கரைத்-தேவை °°tēvai, A kind of tax; வரிவகை (Pudu. Inscr. 399). ஆற்ற'டம்பு °aḍampu, A kind of hare-leaf; அட

ம்புவகை. ஆற்ற'ரசு °aracu, River portia; ஆற்றம் பூவரசு. ஆற்ற'லங்கல் °alaṅkal, False fern tree; காட்டுப் பூவரசு. ஆற்ற'லரி °alari, Common tamarisk; கோடைச் சவுக்கு. A plant with tubular stipules: Polygonum glabrum; பூடுவகை. Alligator's nose: Polygonum barbatum; முதலைப்பூண்டு. Marking-nut tree; சேங்கொட்டைமரம். ஆற்ற'றுக்க °aṟukka, To desert in the nick of time; இடையிற் கைவிட (குறள், 814). To sap one's strength of mind; வலியறுக்க (கலித். 144, 66). ஆற்றி'டைக்குறை °iḍaikkuṟai, Dry place, islet, in a river; ஆற்றினிடைத் திட்டு, இலங்கை. ஆற்றி'டைப்பட °iḍaippaḍa, To be in the way; வழியிலிருக்க. To meet on the way; வழியெதிர்ப்பட. ஆற்றி'லுப்பை °iluppai, Glabrous mahua: Bassia malabarica; இலுப்பைவகை. ஆற்றி'றால் °iṟāl, Species of palaemon; இறால் மீன்வகை. ஆற்றின்-வித்து āṟṟiṉ-vittu, Foliated crystallised gypsum; கர்ப்பூர சிலாசத்து. ஆற்று'ணா °uṇā, Cooked rice tied up for a journey; பொதிசோறு (சீவக. 1550). ஆற்று'மரி °umari, Cyprus tamarisk; சிறுமரி. Āṟṟuk-koḍi; = ஆற்றுக்-கொடி. ஆற்று'ள்ளம் °uḷḷam, Variety of 'hilsa' fish; உள்ள மீன்வகை. ஆற்றெ'ழுக்கு °oḻukku, Flowing of a river; நதியின் ஓட்டம். The most natural order of words in a sentence; சூத்திர நிலையுள் ஒன்று (நன். 19). ஆற்றெ'திர்ப்பட °etirppaḍa, To meet on the road; வழியில் சந்திக்க. ஆற்றுக்-கட்டிக்கோலா °kaḍḍikkōlā, Garpike: Belone strongylura; கொக்குமீன். ஆற்றுக்-கால் °kāl, Channel from a river; ஆற்றினின்றுவரும் வாய்க்கால். ஆற்றுக்கால்-ஆளர், °ஆட்டியர் °°āḷar, -āḍḍiyar, Men and women of the agricultural tracts; மருதநில ஆடவர், பெண்டிர் (திவா.). ஆற்றுக்கால்-ஆதாரம், °பாசனம், °பாய்ச்சல், °°ātāram, -pācaṉam, -pāyccal, Irrigation by a single channel; நதியினின்று வரும் நீர்ப்பாய்ச்சல். ஆற்றுக்கால்-ஏரி °ēri, Tank fed by water-course from a river; ஆற்றிலிருந்து நீர்பெறும் ஏரி. ஆற்று-க்-குலை °kulai, River bank; ஆற்றின் கரை. A petty cess; வரிவகை (S. I. I. ii, 241). ஆற்று-க்-கெண்டை °keṇḍai, River carp: Barilius gatensis; ஒருவகைச் சிறுமீன். ஆற்று-க்-கொடி °koḍi, Colocynth; பேய்க்கொம்மட்டி. ஆற்று-ச்-சஞ்சலை °cañcalai, Mountain Tamana oil tree; மலைவட்டை. ஆற்று-ச்-சவுக்கு °cavukku, Common tamarisk; கோடைச்சவுக்கு. Garden tamarisk: Tamarix ericoides; செடிவகை. ஆற்று-ச்-சுழி °cuḻi, Whirl pool; நீர்ச்சுழல். ஆற்று-ச்-செருப்படி °ceruppaḍi, Species of Coldenia procumbens; பூடுவகை. ஆற்று-த்-தும்மட்டி °tummaḍḍi, Colocynth; பேய்க்கொம்மட்டி. ஆற்று-த்-துவரை °tuvarai, Wild tea: Eurya japonica; செடிவகை. ஆற்று-நீர்க்-கழிவு °nīrk-kaḻivu, Mouth of a river; ஆற்றின் முகத்துவாரம். ஆற்று-நீர்ப்-பொருள்-கோள் °°nīrp-poruḷ-kōḷ, The natural construction of a sentence; சொல்நிற்கும்நிலைப்படி பொருள் அங்கங்கே அமைந்து நடப்பது (நன். பொது. 61). ஆற்று-நெட்டி °neḍḍi, Water mimosa; நீர்ச்சுண்டி. ஆற்று-ப்-பச்சை °paccai, Inferior variety of green stone; காசுப் பச்சைக்கல். ஆற்று-ப்-படுக்க °paḍukka, To direct in the right way, especially a bard or dancer, to a liberal patron (விறலி ஆதியோரை) வழிச்செலுத்துதல் (பு. வெ. 9, 31). ஆற்று-ப்-படுகை °paḍukai, Land adjoining a river and enriched with alluvial deposit; ஆற்று வண்டல் படிந்த இடம். ஆற்று-ப்-படை °paḍai, A panegyric poem, generally in akaval metre, in which a recipient of liberal gifts extols the donor and directs another to the same person for obtaining similar gifts; பரிசில் பெற்றோன் ஒருவன் தலைவனைப் பாடி அது பெறக் கருதிய வேறொருவனை வழிச் செலுத்தும் பிரபந்தம் (பன்னிரு. 318,319). ஆற்று-ப்-பற்று, °பாசனம் °paṟṟu, -pācaṉam, V. āṟṟukkāl-ātāram; = ஆற்றுக்கால்-ஆதாரம். ஆற்று-ப்-பாசி °pāci, A water weed; நீர்ப் பூடுவகை. ஆற்று-ப்-பாட்டம் °pāḍḍam, An ancient tax; வரிவகை. (S. I. I. v, 365). ஆற்று-ப்-பாய்ச்சல் °pāyccal, V. āṟṟup-pācaṉam; = ஆற்றுப்-பாசனம். ஆற்று-ப்-பாய்ச்சி °pāycci, River navigator; நதியில் மரக்கலம் செலுத்துவோன் (Inscr.). ஆற்று-ப்-பாலை °pālai, Four-seeded willow: Salix tetrasperma; மரவகை. ஆற்று-ப்-பித்தல், °பிதலம் °pittal, -pitalm, Side or bank of a river; நதியின் ஓரம். ஆற்று-ப்-பூத்தான் °pūttāṉ, Cowhage; பூனைக்காலி. ஆற்று-ப்-பூவரசு °pūvaracu, River portia: Trewia nudiflora; மரவகை. ஆற்று-ப்-பொடி °poḍi, River minnow; ஆற்றிலுள்ள ஓர்மீன். ஆற்று-மடை °maḍai, Mouth of a river or canal; வாய்க்காலின் முகம். Sluice between a river and its canal; ஆற்றை அடைத்துத் திறக்கும் மதகு. ஆற்று-மல்லிகை °mallikai, A water plant; நீர்ப்பூடுவகை. ஆற்று-முள்ளாங்கி °muḷḷāṅki, A kind of carrot; முள்ளங்கிவகை. ஆற்று-முள்ளி °muḷḷi, A very prickly plant with diffuse branches; கண்டங்கத்தரி. Holly-leaved bear's breech; கழுதை முள்ளி. ஆற்று-மேலழகி °mēlaḻaki, A common weed: Celsia coromandeliana; பூடுவகை. ஆற்று-வரி °vari, A kind of ancient song on a river; ஒருவகை வரிப்பாடல் (சிலப். 6, 35, உரை). ஆற்று-வாய், °வாய்முகம் °vāy, -vāymukam, Mouth of a river; முகத்துவாரம் (கம்பரா. இராவணன்சோ. 25). ஆற்று-வாளை °vāḷai, A fresh-water fish: Wallago attu; எரிவாளைமீன். ஆற்று-வித்தம் °vittam [+S. viddha, 'pierced', fr. vyadh. Cf. T. veḍḍu] Mouth of a river; ஆறுபாய் முகம். ஆற்று-வைப்பு °vaippu, Lands become cultivable by the natural turning of the course of a river; நதியின் ஒதுக்கத்தால் சாகுபடிக்குத் தகுதியாய் வந்த நிலம்.

ஆற்ற- āṟṟā-, V. āṟṟu¹; ஆற்று-தல் பார்.

ஆற்றி āṟṟi, V. āṟṟu²; ஆற்று-தல் பார்.

ஆற்று¹-தல் āṟṟu, 5 v. tr. [an emphasised form of āṟu, 'to be strong', l/ṟṟ—ஆறு-தல், வல்லமைத்தால் உறுதிபெற்றது] 1. To lead, conduct; நடத்துதல் (குறள், 46). 2. To perform; செய்தல் (குறள், 20). 3. To sustain, carry; சுமத்தல் (கல்லா. முருகனுதி). 4. To seek, accumulate; தேடுதல், சேர்த்தல் (சீவக. 2986). 5. To assist; உதவுதல் (புறம், 58). [v. intr.] 6. To become strong; பெலமடைதல் (குறள், 493). 7. To be possible; கூடியதாதல் (நாலடி. 75). 8. To be sufficient; போதியதாதல் (பணவிடுதூது, 225). 9. To be equal to; ஒத்திருத்தல் (குறள், 101). 10. To escape, survive; உய்தல் (பிங்.).

K. aṟ, 'to be strong, to be careful'.

ஆற்ற āṟṟa, adv. [id.] 1. Exceedingly; மிக (தொல். பொ. 147). 2. Entirely; முற்ற (குறள், 367).

ஆற்றல்¹ āṟṟal, n. [id. + -al⁷] 1. Manliness; ஆண்மை. 2. Strength, prowess; சக்தி. 3. Effort; முயற்சி. 4. Endurance; பொறை (குறள், 225). 5. Determinedness; கடைப்பிடி (தொல். பொ. 129). 6. Victory; வெற்றி. 7. Truth, knowledge; வாய்மை, ஞானம் (பிங்.).

ஆற்ற- āṟṟā-, adj. [id. + -ā-⁹] —CPDS ஆற்ற-க்-கேடு °kēḍu, Extreme poverty; மிக வறுமை. Great necessity; அதிக அவசியம். ஆற்ற-ச்-சண்டி °caṇḍi, Insatiable wretch; கெட்டகெட்ட தப்பிலி. ஆற்

று-த்-தனம் °tanam, Insatiability; திருத்திப்படாமை. Impotence; வலியின்மை. ஆற்று-ப்-பட்சம் °padcam, Impossibility; கூடாமை.

ஆற்றாமை āṟṟāmai, *n.* [id.+ -ā-[9] + -mai[2]] 1. Incapacity; மாட்டாமை. 2. Infirmity; தளர்ச்சி. 3. Distress; துன்பம். ஆற்றான் āṟṟāṉ, One without ability; வலியில்லாதவன். One who is poor or afflicted; வறியன், வருந்துவோன்.

ஆற்றுவன் āṟṟuvaṉ, *n.* [id.+-(v) aṉ[5]] One who supports, sustains; ஆதரிப்போன் (திருவாச. 44,24).

ஆற்றுவார் āṟṟuvār, *n.* [id.+ -(v) ār[10]] Those who are able to fulfil an undertaking; எடுத்துக்கொண்டதை முடிக்க வல்லவர் (குறள், 891).

**ஆற்று[2]**-தல் āṟṟu, 5 *v. tr.* [*caus.* of āṟu[2]—ஆறு-வித்தல்] 1. To alleviate; பசி முதலியன தணித்தல் (மணி. 14,186). 2. To comfort; துக்கம் நீக்குதல். 3. To cool; உஷ்ணம் தணித்தல். 4. To dry, as the hair; ஈரமுலர்த்துதல் (சீவக. 2422, உரை). 5. To smooth out twisted thread; நூல்முறுக்கெடுத்துவிடல். ஆற்றிக்-கொடுக்க āṟṟik-koduk-ka, To cool a liquid &c. for another; சூட்டைத் தணித்துக்கொடுக்க. To relieve one at work; வேலையில் சிறிதுநேரம் ஒருவருக்காகநிற்க. ஆற்றித்-தேற்ற āṟṟit-tēṟṟa, To soothe and console; மனச்சாந்தி உண்டுபண்ண. ஆற்றிப்-போற்றிக்கொள்ள °āṟṟip-pōṟṟikkoḷḷa, To treat guests with civility; விருந்தினரை உபசரிக்க. To render aid, as to a sick person; துன்புற்றோரை ஆதரிக்க.

ஆற்றல்[3] āṟṟal, *n.* [id.+ -al[7]] 1. Cooling, alleviating, consoling; குறிஆதியன தணித்தல், ஆறுதல் சொல்லல். 2. Enduring, bearing a load; சகித்தல், சுமைபொறுத்தல்.

ஆற்றார் āṟṟār, *n.* [id.+-ā-[9]+-ar[10]] 1. The poor, afflicted; வறியர், துன்பப்படுவோர். 2. Enemies; பகைவர்.

ஆற்றி āṟṟi, *n.* [id.+ -i[4]] Leisure, consolation; ஆறுதல், தேறுதல். —CPD ஆற்றி-கேடு °kēḍu, V. ātti-kēḍu; = ஆத்தி-கேடு.

ஆற்று āṟṟu, *n.* The outer door entrance to a house; தலைக்கடை. V. āṟu[1](4).

**ஆற்று[3]**-தல் āṟṟu, *v. tr.* [sync. of *akaṟṟu*— < அகற்று-தல்] To remove; நீக்குதல். ஆற்றுப்-படுத்த āṟṟup-paḍut-ta, To put away; போக்க (கலித். 85, 16).

ஆற āṟa, V. under āṟu[2]; ஆறு[2] பார்.

ஆறகோரம் āṟakōram, *n.* Cathartocarpus fistula; கொன்றைமரம்.

ஆறணியப்-பட āṟaṇiya-p-paḍa, *v.* [āraṇiyam?] To be in great distress; மிக வருந்த (Coll.).

ஆறதிகம் āṟatikam, *n.* Asbestos; கல்நார்.

ஆறல் āṟal, For āṟu-tal and āṟalit-tal; = ஆறு-தல், ஆறலி-த்தல்.

ஆறல்-பீறல் āṟal-pīṟal, *n.* [pīṟal for pīṟṟal, 'slit', āṟal being its echo-word] What is useless; உபயோகமற்றது (ஈடு. 7,4,8).

ஆறலி-த்தல் āṟali, *v. intr.* [prob. for āṟalai which see under āṟu[1]] To be in a thoughtful or raving mood; யோசனைபோடிருத்தல், மதிதப்பியிருத்தல்.

ஆறா- āṟā-, V. under āṟu[2]; ஆறு-தல் பார்.

ஆறாதூறு āṟātūṟu, *n.* [perh. fr. tūṟu, 'calumny' for which āṟā is the echo-element] Slander; பழிச்சொல், அவதூறு.

ஆறாம் āṟām, V. under āṟu[3]; = ஆறு[3] பார்.

ஆறிய āṟiya, V. under āṟu[2]; = ஆறு[2] பார்.

ஆறு[1] āṟu, *n.* [fr. aṟu[1], 'to cut through'. Cf. aṟal(3) —அறு-ப்பது] 1. River, brook; நதி. 2. Way, road; வழி, தெரு (திவ். 12, 40). 3. Side; பக்கம் (நாலடி. 383). 4. The front entrance of a house &c; தலைக்கடை. 5. Means; உபாயம் (குறள், 468). 6. Mode, method; விதம் (நல்வழி, 16). 7. Morality, virtue; அறம் (சீவக. 2661). 8. Religion; சமயம் (பெரியபு. சண்டே. 57). 9. Result; பயன் (குறள், 37). 10. Nature; இயல்பு (குறள், 219). —CPDS ஆற'லை °alai, High way robbery; வழிப்பறி. ஆற'லைக்க °alai-kka, To rob on the high way; வழிப்பறிக்க. ஆற'ட்டம் °āḍḍam, Agony of extreme illness; சோரபுதேரர் படும் அவஸ்தை. ஆற'ட்டு °āḍḍu, Bathing of an idol followed by the bath of its worshippers in a river or tank; தீர்த்தவாரியுற்சவம். ஆற'டி °āḍi, Vagabond; நிலை கெட்டவன். ஆற'ட °āḍa, V. ā'ṟ'āḍḍu; ஆற'ட்டு பார்; ஆறெ'றி-பறை °eri-paṟai, Drum used by dacoits in desert tracts; வழிப்பறி கள்வர் கொட்டும் பறை. ஆறு-கட்ட °kaḍḍa, To build a dam across, or embankment for, a river; ஆற்றுக்கு அணைகட்டுதல், கரையிடுதல். ஆறு-காட்டி °kāḍḍi, Pilot, guide; கடல் துறையாற்றில் வழிகாட்டி. ஆறு-சூடி °cūḍi, Siva, with the Ganges as his head-ornament; சிவன் (தனி. பாரத. மருத்து. 94).

M., K. āṟu; Tel. ēru; Tu. āji; Sinh. ara (Codrington). Cf. Hit. *ars*, *arassi*, 'to flow'; Su. *ra*, 'inundation'; Gr. *rhuax*, 'torrent'; O. H. G. *stroum*; AS *stream*; S. *sravas*, 'flowing'. Caldwell notes: "Comp. Lesghian *or*; Avar *uor*; Yakutan (Siberian Turkish) *oryas*; Lappish *wiro*; Ostiak *jeaga*. Comp. also Armenian *aru*; Coptic *jaro*; Hebrew *ōr*, *yeōr*". For many European river names derived fr. the DR *āṟu* see Schoener: *Armalurisches in früheuropäischen Namen*.

-ஆறு āṟu, *suff.* [id. 'cutting', 'way'] A stem-suffix with the sense of 'ceasing', 'way of acting', 'state' &c.; ஒழிவு, நடக்கை, இயல்பு ஆகிய பொருள் கொண்ட சுடைநிலை, உ-ம்: "கையாறு", "அழுக்காறு".

**ஆறு[2]**-தல் āṟu, 5 *v. tr.* [fr. aṟu, 'to diminish, disappear'— < அறு-தல்] 1. To be suppressed; அடங்குதல் (கம்பரா. தேரே. 25). 2. To be alleviated; தணிதல். 3. To cool down; குடு தணிதல். 4. To heal as a wound; புண் மாறுதல் (குறள், 129). 5. To be preserved with patience; அமைவுடைத்தாதல்.

M., K., Tel., Tu., āṟu.

ஆற āṟa, *influ.* of id. —CPDS ஆற-அமர °amara, Calmly, patiently, பொறுமையாய். ஆற-க்-கட்ட °kaḍ-ḍa, To prevent an evil spirit from further mischief by charms and spells; பேய்க்கோள் மேற்செல்லவொட்டாமற் தடுக்க. ஆற-த்-தணிய °taṇiya, Leisurely, calmly; மெல்ல மெல்ல. ஆற-ப்-போட °pōḍa, To postpone a work; தாமதப்படுத்த.

ஆறாக்-காரியம் āṟāk-kāriyam, *n.* [id.+-ā-[9]+kāriyam, 'thing'] Resolution, clearness; துணிபு, தேற்றம். —CPD ஆறாக்காரியம்-சொல்ல °colla, To console one in distress; தேறுதல் கூற.

ஆறிய-கற்பு āṟiya-kaṟpu, *n.* [āṟiya, *pple.* of id. + kaṟ-pu, 'chastisy'] Chastity guarded by patience under affronts; அறக்கற்பு (பதிற்றுப். 90, 49).

ஆறுதல் āṟutal, *n.* [id. + -*(t)al*[7]] Consolation; மனச்சாந்தி.

ஆறு[3] āṟu, *n.* [fr. *aṟu*, 'to out-do', prob. the number out-doing five] The numeral 6; ஐந்தின் மேலதான எண். —CPDS ஆறங்கம் °aṅkam, The six sciences auxiliary to the Vedas. V. vētā'ṅkam; வேதாங்கம் பார். ஆறறிவுயிர் °aṟivu'yir, Human beings as possessing mind in addition to the five senses; ஐம்புலனோடு மனவுணர்வுமுடையோராகிய மக்கள் (தொல். பொ. 588). ஆறாதாரம் °ātāram, The six dynamic or nerve plexuses in the body. V. ātāram; ஆதாரம் பார். ஆறாமாசம் °ām-mācam, Ceremony of first shave after marriage, taking place among Brahmans, on the sixth month; நிகழாவிவாஹரைச் சடங்கு. ஆறாமீன் ām-mīṉ, Pleiades; கார்த்திகை. ஆறாமீனறவோட்டு °°aṟavōḍḍu, Transit of the sun through the pleiades, regarded by seamen as a critical season when rough weather is to be expected; சூரியன் கார்த்திகையில் பிரவேசிக்கும் காலம். ஆறாரச்-சக்கரம் °ārac-cakkaram, Stanza of four lines written in the form of a wheel with six spokes; மிறைக் கவிவகை (மாறன. 282, உரை). ஆறிலட்சணம் °ilaḍcaṇam, V. aṟu-kuṇam; =அறுகுணம். ஆறுறுப்பு °uṟuppu, The six constituent parts of a poem, viz: (1) எழுத்து, letters; (2) அசை, metrical syllables; (3) சீர், feet; (4) தளை, connection between the feet; (5) அடி, line; (6) தொடை, connection between the lines. ஆறெழுத்து °eḻuttu, The formula ச-ர-வ-ண-ப-வ addressed to Skanda; சுக்கரனுக்குரிய திருமந்திரம். ஆறு-கட்டி °kaḍḍi, Breed of neat cattle having no more than six teeth; ஆறு பல்லுக்கு மேல் முளையாத மாடு. Pendant of six rudrākṣa beads worn round the ear; காதணியும் உருத்திராட்ச மணிவடம். Ear-ring worn by a set of Paṇḍārams; பண்டாரங்களுடைய காதணிவகை. ஆறு-சக்கரவர்த்தி °cakkaravartti, The six independent sovereigns of old, namely: அரிச்சந்திரன், நளன், முசுகுந்தன், புருகுத்சன், புரூரவன், கார்த்தவீரியன். ஆறு-சாஸ்திரம் °cāstiram, The six Indian sciences, namely, (1) வேதாந்தம், theology; (2) வைசேடிகம், moral laws; (3) பாட்டம், epic poems; (4) பிரபாகம், ceremonial regulations; (5) பூர்வமீமாஞ்சை, ancient history; (6) உத்தரமீமாஞ்சை, logic; (Mousset—D.). ஆறு-தானை °tāṉai, V. aṟu-vakaittāṉai; =அறுவகைத்தானை. ஆறு-நாட்டுப்-பெருமை, °நாட்டமைதி °nāḍḍup-perumai, -nāḍḍ'amaiti, The causes of the greatness and prosperity of a country, viz: (1) செல்வம், riches; (2) விளைநிலம், fertile lands; (3) செங்கோல், equitable government; (4) நோயின்மை, absence of disease; (5) களவின்மை, absence of thefts; (6) போரின்மை, peace. ஆறு-நோன்பு °nōṉpu, Mohammedan feast of six days following perunāḷ; முகம்மதிய விரதங்களுள் ஒன்று. ஆறு-பரியான் °pari-yāṉ, Ascending and descending nodes; இராகு கேது. ஆறு-பருவம் °paruvam, V. aṟu-paruvam; =அறுபருவம். ஆறு-பொழுது °poḻutu, V. aṟu-poḻutu; =அறுபொழுது. ஆறு-மணிப்-பூ °maṇip-pū, Evening primrose: Oenothera tetraptera; மாலையில் மலரும் மஞ்சட்பூவகை. ஆறு-மாசக்-கடன்காரன் °mācak-kaḍaṉkāraṉ, Pedlar among Mohammedans appearing for payment every six months; ஆறுமாசக் கடனுக்குப் பண்டம் விற்கும் சில்லறை வியாபாரி. ஆறு-மாசத்-தண்டு °mācat-taṇḍu, Species of Amarantus; கீரைவகை. ஆறு-மாச-மூட்டைக்காரன் °māca-mūḍ-daikkāraṉ, V. āṟu-mācak-kaḍaṉ-kāraṉ; =ஆறுமாசக்கடன்காரன். ஆறு-மாதக்-காடி °mātak-kāḍi, Rice-water mixed with various ingredients and kept for six months; புளிக்கவைத்த காடிமருந்து. ஆறு-முகன் °mukaṉ, Skanda as represented with six faces; கந்தசுவாமி.

M., K., *aṟu*; Tu. *āji*; Tod. *ār*; Go. *sarūn*; S. *ari*, 'six'.

-ஆறு[4]-தல் -āṟu, *auxiliary v.* [prob. fr. *āḍ-u ḍ/ṟ*—<ஆடு-தல்] An auxiliary expressing the idea of 'making constant exertion' or 'wallowing in'; நெருங்கி முயலல், உழலல் என்னும் பொருள் கொண்ட ஒரு துணைவினை. உ-ம்: "ஏமாறல்."

ஆன்[1] āṉ, *n.* [prob. <*ām(ā)*, *m/ṉ*—<ஆமா] 1. Female of the ox, buffalo or deer; பெற்றம், எருமை, மரை இவற்றின் பெண் (திவா.) 2. Ox; இடபம் (கந்தபு. பானுகோ. 95). —CPDS ஆனஞ்சு °añcu, The five products of the cow used in ceremonies; பஞ்ச கவ்வியம் (தேவா. 30, 4). ஆனாயன் °āyaṉ, Man of the cowherd class; மாட்டிடையன் (திவ். பெரியதி. 5, 6, 3). ஆனேறு °ēṟu, Bull; எருது. ஆனுலகு °ulaku, One of the seven superior worlds; சுவர்க்கம். ஆன்-காவலன் °kāvalaṉ, Vaiśya, as protecting cows; வைசியன். ஆன்-கொட்டில் °koḍḍil, Cowshed; பசுத்தொழுவு. ஆனலர் °nalar, [nalar=nallōr] Cowherds; மாட்டிடையர். ஆனிலை °nilai, Cowshed; பசுத்தொழு. ஆனிலை-புலகம் °°ulakam, =āṉ-ulaku; =ஆனுலகு. ஆனீர் °nīr, Cow's urine; கோமூத்திரம். ஆன்-மெழுக்கு °meḻukku, Cowdung; பசுச்சாணம். ஆன்-வல்லோர் °vallōr, Cowherds; பசு மேய்ப்போர்.

ஆனவர் āṉ-avar, *n.* [id. + *avar* 'they'] Shepherds; இடையர்.

ஆனன் āṉ-aṉ, *n.* [id. + -*aṉ*[5]] Siva as riding a bull; சிவன் (தேவா. 1029, 2).

ஆன்[2] āṉ, *adv.* [for *avaṉ*—<அவண்] There; அவ்விடம் (தொல். பொ. அகத். 24, இளம்.).

-ஆன்[3] -āṉ, *part.* V. -*āl*[5]; =-ஆல்[5].

-ஆன்[4] -āṉ, *part.* [sync. of *avaṉ*—அவன்] Ending common to nouns and verbs of the 3rd pers. *masc. sing.*; ஆண்பாற் பெயர் வினைகளின் விகுதி. உ-ம்: வானான் வந்தான்.

-ஆன்[5] -āṉ, *suff.* [for -*atu*[3]— <அது[3]] A stem-suffix denoting possession; "உரியது" என்னும் பொருள்கொண்ட ஒரு சாரியை. உ-ம்: "அச்சான்".

ஆன்ம- āṉma-, *adj.* [V. *atma-* — = ஆத்ம-] —CPDS See also under *ātma-* and *āttumam*; —ஆத்ம- ஆத்துமம் என்னும் சொற்களும் பார். ஆன்மாதீனன் °atīṉaṉ, One who is the supporter of life; சீவனுக்காதாரமானவன். Āṉma-vīraṉ; =ஆன்மவீரன். ஆன்ம-மந்திரம் °mantiram, V. a-capā; =அசபா. ஆன்ம-யோனி °yōṉi, V. āttuma-pū; =ஆத்துமபூ. ஆன்ம-லாபம் °lāpam, (Saiva) Benefit of the soul; ஆத்மாவின் பேறு (சி. சி. 8, 22, வரத.) Soul's attaining the form of Siva; ஆன்மா சிவரூபம் பெறுதல் (சிவப். 8,1). ஆன்ம-வீரன் °vīraṉ, Strong man; விறலோன். Brother-in-law; மைத்துனன். Son; புத்திரன்.

ஆன்மா āṉmā, *n.* [V. *āttumam*[1]— = ஆத்துமம்[1]] [See other meanings under *āttumam*—ஆத்துமம் பார்] 1. Wind; வாயு. 2. Effort; முயற்சி. 3. Body; உடல். 4. Supreme soul; பரமாத்மா. —CPDS ஆன்மாச்சிரயம் °āccirayam, (Log.) Fallacy of begging the question: Petitio principii; தன்னைப்பற்றுதல் என்னும் குற்றம் (தொக். விருத். 50). ஆன்மார்த்த-பூசை °artta-pūcai, (Saiva) Pūjā performed pri-

vately for one's own benefit; இட்டலிங்கபூசை (சைவ. பொது. 501, உரை).

ஆன்மீ'ட்சணம் āṉm'īḍcaṉam, *n.* [for S. *anvikṣaṇam*, fr. *anu* + *īkṣ*, 'to see' √*akṣ*. Cf. T. *akku*[2]] Searching; தேடல்.

ஆன்ற- āṉṟa-, *adj.* [sync. of *akaṉṟa* <*akal*—அகன்ற] 1. Wide; விசாலமான (கந்தபு. மூன்று. 167). 2. Grown calm owing to deep learning; அடங்கிய (குறள், 694). 3. Excellent; மாட்சிமைப்பட்ட (பெரியபு. திருநாவு. 41). 4. Which has ceased to exist; இல்லாமற்போன (மதுரைக். 306).

ஆன்றல் āṉṟal, *n.* [id. + -*al*[1]] 1. Extension, width; விசாலம், அகலம். 2. Abundance; மிகுதி. 3. Greatness; மாட்சிமை. 4. Vanishing; நீக்கல்.

ஆன்றவர், ஆன்றார், ஆன்றோர் āṉṟavar, °ār, °ōr [id. + *avar*] 1. Great men; பெரியோர். 2. Men of character; கசிலமுடையோர். 3. Erudite, wise persons; அறிஞர். 4. Gods; தேவர் (பரிபா. 19, 3).

ஆன்று āṉṟu, *pple.* [id.] 1. Having stretched out; விரிந்து (கந்தபு. கடவுழ். 1). 2. Having been filled; நிறைந்து (மதுரைக். 629). 3. Having ceased; நீங்கி (கலித். 121).

ஆன்றோள் āṉṟōḷ, *n.* [id. + *avaḷ*] Lady of exalted character; மாண்புடையாள் (பதிற்று. 55).

ஆன்னிகம் āṉṉikam, *n.* [S. *āhnika*, fr. *ahan*, V. *ahar*—<அகர்] Daily round of religious duties; நித்திய கருமம்.

ஆன-[1] āṉa-, *adj.* [fr. *anta*[1]—<அந்த[1]] That; அந்த. "ஆனகாலே" (கந்தபு. தெய்வ. 213). ஆனது āṉatu=aṉṉatu; அன்னது.

ஆன-[2] āṉa-, *pple.* [fr. *āku*—<ஆகு-தல்] 1. Having happened; நடைபெற்று. 2. What is; ஆகிய. உ-ம்: "மேலான விரதம்". [*adj.*] Possible; இயன்ற. உ-ம்: "ஆனமட்டும்". Good; நல்ல. உ-ம்: "ஆனமருந்து". எனக்கா'னது, What is good for me. ஆனக்-கால், If so. ஆனது-கொண்டு, ஆனதால், ஆனபடியால், Therefore. ஆன-மட்டும் As much as possible. ஆனமா'னவன், Worthy person. ஆனமானமாய், In a proper manner. Also as expletive attached to nouns in the nominative case, as "வேகமானது மேற்செல்ல" (பெரியபு. கண். 105). "தன்னைதானவன் முன்னர் எய்தி" (கந்தபு. மார்க்க. 8).

ஆனகம்[1] āṉakam, *n.* 1. Kalpaka tree; கற்பகம். 2. Calabash; சுரை. 3. Red cedar; தேவதாரு.

Tel. *aṉapa*, 'calabash'.

ஆனகம்[2] āṉakam, *n.* [*ānakas*, perh. fr. T. *āṉai*, 'elephant' on account of the sound] 1. Rumbling of a cloud; மேகமுழக்கம். 2. Large military drum; துந்துபி. 3. Kettle-drum; படகம் (பிங்.). 4. The tympanum; காதிலுட் சவ்வு.

ஆன'ஞ்சு āṉ-añcu, V. *āṉ*[1]; =ஆன்[1] பார்.

ஆனத்த-வாயு āṉatta-vāyu, *n.* [S. *ānaddha*, 'bound, costive', fr. *nah*. Cf. T. *aṉukk-u* + S. *vā-yus*, 'wind', T. *ūl-u*] Muscular rheumatism; வாதநோய் வகை.

ஆனத்தேர் āṉattēr, *n.* A thorny tree; விடத்தேர்.

ஆனதம் āṉatam, *n.* (Jaina) A mythological world; சைனரது கற்பலோகங்களுள் ஒன்று (தக்கயா. 18, உரைக்.).

ஆனதும்பி āṉatumpi, *n.* A pinkish marine fish; கடல் மீன்வகை.

ஆனந்த- āṉanta-, *adj.* [V. *āṉantam*[1]—ஆனந்தம்[1]] —CPDS ஆனந்த-அருவி °aruvi, Streaming tears of joy; மகிழ்ச்சியால் வழிந்தோடும் கண்ணீர். ஆனந்தா'ன்மவாதி °āṉmavāti, (Saiva) One who holds that salvation is in the soul's attaining bliss; ஆன்மா ஆனந்தமடைதலே மோட்சம் என்போன். ஆனந்த-உரு °uru, Supreme intelligence; பரம சைதன்னியம் (வேப்பிர. 1,1). State of bliss; அன்பமிக்கிய நிலை. ஆனந்த-உவமை °uvamai, Fault of comparing great things with small; உயர்ந்ததை இழிந்த பொருளோடு ஒப்பிடுதலாகிய உவமைக்குற்றம் (புறம். 60, உரை). ஆனந்த-ஓமம் °ōmam, Homa ceremony on the tenth day after death as marking the close of mourning; தசாகத்தன்று தீட்டுக் கழியச் செய்யுஞ் சடங்கு. ஆனந்த-க்-கண்ணீர் °kaṇṇīr, Tears of joy; மகிழ்ச்சி மிகுதியால் வரும் கண்ணீர் (திருவாச. 17, 2). ஆனந்த-க்-கரப்பான் °karappāṉ, Eruption causing an agreeable sensation when scratched but a burning one soon after; ஒருவகைக் கரப்பன் நோய். ஆனந்த-க்-களிப்பு °kaḷippu, Exstatic joy; பெருமகிழ்ச்சி (திருவாச. 8, திருவம்மானைக் கருத்து). A poem expressive of exstatic delight; மகிழ்ச்சி மிகுதி காட்டும் ஒருவகைப் பாடல். ஆனந்த-காந்தம் °karantam, Southern wood; மருக்கொழுந்து.

ஆனந்த-கரம் °karam, What delights; மகிழ்ச்சி தருவது. ஆனந்த-கானம், °கானனம் °kāṉam, -aṉam, Benares; காசி (திருவிளை. கல்லானை. 8). ஆனந்த-குறுவை °kuṟuvai, A kind of paddy; நெல்வகை. ஆனந்த-தத்தம் °tattam, Membrum virile; ஆண்குறி. ஆனந்த-ததம் °tatam, Vulva; பெண்குறி. ஆனந்த-தாண்டவம் °tāṇḍavam, Exstatic dance of Siva; நடராஜா ஆடும் கூத்து. ஆனந்த-நித்திரை °nittirai, Exstatic sleep as during yoga absorption; யோகநித்திரை. ஆனந்த-நிருத்தம் °niruttam, =āṉanta-tāṇḍavam; =ஆனந்த-தாண்டவம். ஆனந்த-ப்-பையுள் °paiyuḷ, (Poet.) Theme of the lament of a wife on her husband's death; கணவனிறப்ப மனைவி வருந்தும் புறத்துறை (பு. வெ. 10,13). A fault in composition which consists in associating a patron's city or country with the place where the lover became separated from his mistress; பிரிந்த தலைவன் தலைவியது தாய்மிகுதியைப் பாட்டுடைத் தலைவனது நாட்டுடன் வருடன் சார்த்திச் சொல்லுவதாகிய அற்குற்றம் (யாப். வி. 96). ஆனந்த-படம் °paḍam, Cloth presented to the bride on the marriage day; கூறைப் புடவை. ஆனந்த-பர-வசம் °para-vacam, State of being transported with joy; மகிழ்ச்சியால் தன்வசம் அழிதல். ஆனந்த-பாஷ்பம் °pāṣpam, =āṉantak-kaṇṇīr; =ஆனந்தக்-கண்ணீர். ஆனந்த-பிரபவம் °pirapavam, Sperm; சுக்கிலம். ஆனந்த-பைரவம் °pairavam, A medicated mineral powder: Plumbi oxidumrubram; செந்தூரவகை (பதார்த்த. 1209). ஆனந்த-பைரவி °pairavi, A specific musical mode; ஓர் இராகம். ஆனந்த-மய-கோசம் °maya-kōcam, (Phil.) Innermost or causal body, பஞ்சகோசத்துள் ஒன்று (சி. சி. பர. மாயா. 8). ஆனந்த-மயம் °mayam, What is full of bliss; இன்பம் நிறைந்தது. Innermost sheath of the soul; ஆனந்தமயகோசம். ஆனந்த-மூலி °mūli, Hemp as producing intoxication; கஞ்சா. ஆனந்த-ரூபன் °rūpaṉ, Spiritual being not subject to the five kōcam, to birth, death and other vicissitudes; பஞ்சகோச சனன மரணமின்றி அற்ற வடிவன். ஆனந்த-வருஷம் °varuṣam, The 48th year of the Jupiter Cycle; வியாழ வட்டத்தின் நாற்பத்தெட்டாவது ஆண்டு. ஆனந்த-வல்லி °valli; Umā: உமாதேவி. A prepared arsenic; கௌரீத்தமிக் கந்தகம். ஆனந்த-வாதி °vāti, A prepared arsenic; கௌரி பாஷாணம்.

ஆ-னந்தம்¹ ā-ṉantam, *n.* [S. *ā-nand-as* fr. *nand* < T. secondary rt. *nant-u*, 'to prosper' as well as 'to perish'. Cf. *natt-u*, originally meaning 'to approach'] 1. Joy, supreme bliss; மகிழ்ச்சி, பேரின்பம் (திருவாச. 2, 106). 2. Death; சாக்காடு (தொல். பொ. 79, உரை). 3. Inauspicious form of construction in poetry, which is of six kinds: (1) எழுத்தா'னந்தம் eḻuttu°, Lengthening the final long vowel or mute of the name of the patron of a poem; (2) சொல்° col°, Using a word about the patron to which an undesigned and inauspicious meaning might be attached; (3) பொருள்° poruḷ°, Stating that the belongings of the patron are injured or ruined, showing inauspicious actions as praise, using inapplicable comparisons &c. (4) யாப்பு° yāppu°, So constructing the poem as to make the patron's name follow a noun which is preceded by a word placed after the rhyming word of a sentence; (5) துக்க° tukka°, Constructing a lyric poem in which the name of the patron is inauspiciously, indistinctly or abruptly pronounced; (6) தொடை° toṭai°, Placing the name of a patron at the beginning of a stanza so that it may rhyme with an aḷapeṭai (இலக். வி. 887).

ஆ-னந்தன் ā-ṉantaṉ, *n.* [id. + -aṉ⁵] 1. Siva, as Supreme Bliss; சிவன். 2. Arhat; அருகன்.

ஆ-னந்தனம் ā-ṉantaṉam, *n.* [id.] 1. Being delighted; பிரீதி கொள்ளல். 2. Civility; உபசாரம்.

ஆ-னந்தி ā-ṉanti, *n.* [id. + -i⁴] 1. One who experiences bliss; இன்பம் அனுபவிப்போன். 2. Pārvatī; பார்வதி. 3. The river Tāmiraparuṇi; தாமிரபருணியாறு.

ஆ-னந்திக்க ā-ṉantikka, *v.* [id. + -i⁷] To feel joy, happiness; மகிழ்ச்சி, மனாம்பியம் அடைய.

ஆ-னந்தை ā-ṉantai, *n.* [S. *ānandā*] 1. Pārvatī, as Supreme Bliss; உமாதேவி. 2. A secondary melody-type of the kuṟiñci class; குறிஞ்சி யாழ்த்திறத்தொன்று (பிங்.). 3. Indian globe-thistle; கொட்டைக் கரந்தை (தைலவ. தைல. 39).

ஆனந்தம்², ஆனந்தி āṉantam, °i, *n.* Greater galangal; அரத்தை.

ஆன'ந்தரியம் āṉ-antariyam, *n.* [fr. *an-antaram*, p. 183—< அன'ந்தரம்] 1. State of being without an interstice; இடையிற் பிறிதொன்றில்லாது தொடுத்திருத்தல். 2. Effect immediately following a cause; காரணத்தினின்று நேரே தோன்றுங் காரியம். 3. Succession of studies in due order; இது கேட்டபின் இது கேட்கவேண்டும் என்னும் இயைபு (சி. சி. சிறப். விருத்.).

ஆன'ந்திகம் āṉ-antikam, *n.* [fr. *an-antam*, p. 183— < அன'ந்தம்] Being many; அநேகம்.

ஆன'ந்தியம் āṉ-antiyam, *n.* [id. S. *ān-antya*] Incorruptibility, eternity; அழியாமை, நித்தியம்.

ஆனம்¹ āṉam, *n.* prob. fr. *ālam*⁴— < ஆலம்⁴?] Intoxicating liquor, toddy; மது, கள் (திவா.)

ஆனம்² āṉam, *n.* [Cf. S. *yān-am*, 'vehicle', fr. *yā*, T. *iyaṅk-u*. Also *āl-am*¹] Raft, ship; தெப்பம், மரக்கலம்.

ஆனம்³ āṉam, *n.* [S. *ān-as*, fr. *an*, T. √*aṉ*] Breath, inhalation; மூச்சு, சுவாசம்.

ஆனம்⁴ āṉam, *n.* [prob. S. *hā-nam*, 'abandoning' fr. *hā*, Cf. T. *akal*] Loss; கேடு (தொல். எழுத். 47. Cf. Subhr. Sastri on this Sutra).

-ஆனம்⁵ -āṉam, *suff.* [prob. fr. *āṉatu*, V. *āṉa*] 1. A stem-suffix meaning 'what is'; 'ஆனது' என்னும் பொருளுள்ள ஒரு சுவடைநிலை. உ-ம்: "தூவானம்". 2. [*part.*] An expletive used in pronouncing certain Tamil letters; ஒரு எழுத்துச் சாரியை (தொல். சொல். 298, உரை).

ஆ-னர்த்தகம், °கம், ā-ṉarttakam, °tam, *n.* [S. *ā-nart-akas*, fr. *nrit*, T. *naṭ-i* —< நடி] 1. Theatre; நாடகசாலை. 2. Battle; போர். 3. Name of a country and its people; ஒரு தேசம், அத் தேசத்தார்.

ஆன'லர், ஆன'வர், ஆன'ன் āṉ-alar, āṉ-avar, āṉ-aṉ, V. *āṉ*¹; ஆன்¹ பார்.

ஆனவாள் āṉavāḷ, *n.* [prob. *āṉa* + *āḷ*] State officer managing a temple; கோயிற் காரியம் நடத்தும் அரசாங்க உத்தியோகத்தன் (S. I. I. iv, 88).

ஆனனம் āṉaṉam, *n.* [V. *āṉam*³, 'what breathes'—√அன்] Mouth, face; வாய், முகம்.

ஆனு-¹ āṉā-, V. under *āṉu*; ஆனு-தல் பார்.

ஆனு² āṉā, *n.* [Cf. *nuṇā*] Indian mulberry; மஞ்சணாறி.

ஆனுகம் āṉākam, *n.* [S. *ā-nāh-as*, V. *ā-nāk-am* p. 220] 1. Length; நீட்சி. 2. A disease of the stomach, வயிற்றுப் பொருமல் நோய். ஆ-நாகமும் பார்.

ஆனுங்-குருவி āṉāṅ-kuruvi, *n.* A kind of bird; குருவி வகை (T. C. M. ii, 2, 632).

ஆனுமை¹ āṉāmai, *n.* The 21st nakṣatra; உத்திராடம்.

ஆனுயம் āṉāyam, *n.* [S. *ā-nāyas*, 'net', fr. *ni*, T. *nikk-u*] Air cell; வாயுக் கண்ணறை. —CPD ஆனுய-கலை °kalai, Cellular tissue; கண்ணறைத் தசை.

ஆனு'யன் āṉ-āyaṉ, V. *āṉ*¹—ஆன்¹ பார்.

ஆனுல் āṉāl, *conj.* [sync. of *ākiṉāl*, < *āku*¹] 1. But; ஆயின். 2. Because; ஆகையால். ஆனுலும், However; ஆயினும்.

ஆனி¹ āṉi, *n.* [fr. *āṉ*¹?] 1. The 19th nakṣatra; மூலநட்சத்திரம். 2. Third month of the Tamil calendar; மூன்றாம் மாதம். 3. The 21st nakṣatra; உத்தராடம். 4. A river near Kārūr; ஆன்பொருநை. 5. Magnesium sulphate; இந்துப்பு. —CPDS ஆனி-க்-கருந்தலை °karun-talai, Close of the month Āni, marking the end of the harvest season; ஆனிமாதக் கடைசி. ஆனி-க்-காலா'வதி °kālā'vati, Do; டி. Limit of time for redeeming usufructuary mortgages on lands; ஒற்றி நிலங்களை மீட்கும் ஆனிமாத முடிவு. ஆனி-த்-திரு-மஞ்சனம் °tiru-mañcaṉam, Bathing of the idol of Naṭarājā, on the uttiram of Āni; ஆனி உத்திரத்தில் நடராசமூர்த்திக்குச் செய்யும் அபிஷேகம். ஆனி-த்-தூக்கம் °tūkkam, Calm prevailing in the month of Āni; ஆனிமாதத்தில் காற்றடங்கியிருக்குங் காலம்.

ஆனி² āṉi, *n.* [V. *āṉam*⁴ — ஆனம்⁴] Harm, destruction; கேடு (கம்பரா. இரணியப. 84).

ஆனியம்¹ āṉiyam, *n.* [fr. S. *ahan*, V. *akar*—அகர் பார்] 1. Solar day from sunrise to sunrise; நாள் (பிங்.) 2. Lunar day; நட்சத்திரம் (பதிற்றுப். 69,14). 3. Season பருவம் (சூடா.). 4. Daily allowance; நாட்படி (Inscr.)

ஆனியம்² āṉiyam, *n.* Black cumin; கருஞ்சீரகம்.

33289

-ஆனியம்[2] -āṉiyam, *suff.* [prob. an extended form of *-āṉam*[4]] A stem-suffix meaning loss; கேட்டைக் குறிக்கும் ஒரு கடைநிலை. உ-ம்: "தன்மானியம்".

ஆனிலன் āṉilaṉ, *n.* [fr. *aṉilaṉ*— <அனிலன்] 1. Hanumān a son of Vāyu; அனுமான். 2. Bhīma another son; வீமன்.

ஆனு-தல் āṉu, 5 *v. tr.* [sync. of *akal-u*, *l/n*, cf. the participial form *akaṉṟa*—அகலு-தல்] 1. To abandon, withdraw; நீக்குதல். 2. To be corrupted; கெடுதல்.

Cf. S. *hānam*, 'abandoning'.

ஆனா- āṉā-, *adj.* [id.+ *-ā-*[7]] 1. Unceasing; நீங்காத (கலித். 25, 14). 2. Imperishable; கெடாத (சந்தாநு. 28). 3. Boundless; அடங்காத (பெரியபு. தடுத்தாட். 115). 4. Innumerable; அளவு கடந்த (ஞானா. 63, 16).

ஆனாமை[2] āṉāmai, *n.* [id.+*-mai*[2]] 1. Not ceasing; நீங்காமை. 2. Not decaying; கெடாமை.

ஆனு-கூலியம் āṉu-kūliyam, *n.* [fr. *aṉu-kūlam*—<அனுகூலம்] Suitableness, amity; ஒத்திருத்தல், நட்பொழுக்கம்.

ஆனுபூர்வி āṉupūrvi, *n.* [S. *ānu-pūrva*, fr. *aṉu*[1]+*pūrva*, 'anterior', akin to T. *puṟa*] Sequence, order; முறையான தொடர்ச்சி (சீவக. 3076, உரை).

ஆனும் āṉum, *conj.* [sync. of *āyiṉum*] 1. Either....or; ஆவது. உ-ம்: "எட்டானும் பத்தானும் இல்லாதார்க்கு" (சீவக. 1549). 2. [*adv.*] Also, at least; ஆயினும். உ-ம்: "அனைத்தானும் ஆற்றிய காலத்து" (நாலடி. 329).

ஆனை āṉai, *n.* [prob. fr. *ēnt-u*, 'to carry' (Gundert)—ஏந்து-தல்] 1. Elephant; யானை (சீவக. 2578). 2. Red-wooded fig tree; அத்தி. 3. Mountain ebony; ஆத்தி. —CPDS ஆனை-ப்-அச்சு °accu, Gold coin bearing the figure of an elephant ஒருவகைப் பொற்காசு (I. M. P. Tp. 117). ஆனை-ப்-அடி °aḍi, Vertical or horizontal movements in chess; சதுரங்க ஆட்டத்தில் யானை செல்லும் கதி. ஆனை-ப்-அடி-அப்பளம் °aḍi-appaḷam, Large meal wafer for a wedding feast; பெரிய அப்பளம். ஆனை-ப்-அடிச்-செங்கல் °aḍic-ceṅkal, A kind of circular brick used for pillars; வட்டமான செங்கல். ஆனை-ப்-அர்க்குளா °ark-kuḷā, A marine fish; கடல்மீன்வகை. ஆனை-ப்-அரசாணி °aracāṇi, Clay images of an elephant, horse and yāḷi and two earthen vessels placed on the marriage platform; மணமேடையில் வைக்கும் யானையாதிய உருவங்கள். ஆனை-ப்-அறுகு °aṟuku, Species of grass; அறுகுவகை. ஆனை-ப்-அறையும்புள் °aṟaiyumpuḷ, A fabulous bird reputed to be able to devour an elephant; ஒரு பெரும் பறவை. ஆனை-ப்-ஆட °āḍa, To move the body to and fro, a movement-game for babies; குழந்தைகள் உடம்பையாட்டி விளையாட. ஆனை-ப்-ஆள் °āḷ, Elephant trooper; யானைவீரன். ஆனை-ப்-இருஞ்சிப்-புள் °iruñcip-puḷ, =āṉai-aṟaiyumpuḷ; =ஆனை-ப்-அறையும்புள். ஆனை-ப்-உண்-குருகு °uṇ-kuruku, Do; டை. ஆனை-ப்-உரித்தோன் °urittōṉ, Siva, who flayed an elephant which attacked him and wore its skin; சிவபிரான். ஆனை-ப்-ஏற்றம் °ēṟṟam, Art of riding an elephant; யானைமேற் செல்லும் வித்தை. ஆனை-ப்-ஓசை °ōcai, The fourth note of the gamut; உழை. ஆனை-க்-கசடன் °kacaḍaṉ, A kind of paddy; நெல்வகை. ஆனை-க்-கண் °kaṇ, Round black spots on fruits when over-ripe or spoiled; அழிந்த பழத்தில் விழும் கரும் புள்ளி. ஆனை-க்-கரடு °karaḍu, Hard soil occupied by Bermuda grass; ஆனையறுகு பற்றிய கட்டு நிலம். ஆனை-க்-கள்ளி-முளையான் °kaḷḷi-muḷaiyāṉ, A leafless fleshy plant: Boncerosia umbellata; பூடுவகை. ஆனை-க்-கற்றலை °kaṟṟalai, A greyish marine fish: Umbrina macroptera; கடல் மீன்வகை. ஆனை-க்-கற்றாழை °kaṟṟāḻai, American aloe; ஒருவகை நீண்ட கற்றாழை. ஆனை-க்-கன்று °kaṉṟu, Country fig; அத்தி. Mountain ebony; ஆத்தி. ஆனை-க்-காசு °kācu, A small ancient copper coin, bearing the impression of an elephant; காசுவகை. ஆனை-க்-காயம் °kāyam, A medicinal preparation of asafoetida for elephants; பெருங்காயக் கலவை. ஆனை-க்-காரை °kārai, Goompain, ஒரு மரம். ஆனை-க்-கால் °kāl, Elephantiasis; பெருங்கால்நோய். Large tube fixed on walls or roofs for draining off rain water; நீர்த்தூம்பு. ஆனை-க்-குப்பு °kuppu, Chess as having elephants for rooks; சதுரங்க விளையாட்டு. ஆனை-க்-குரு °kuru, Species of cinnamon: Machilus macrantha; மரவகை. ஆனை-க்-குருகு °kuruku, Anril bird; அன்றில். ஆனை-க்-குழி °kuḻi, Kheda, elephant kraal, யானை பிடிக்குமிடம். ஆனை-க்-குன்றி-மணி °kuṉṟi-maṇi, Red-wood; மஞ்சாடி மரம். ஆனை-க்-கூடம் °kūḍam, Elephant stable; யானைப் பந்தி. Tax on elephant stables; பழைய வரிவகை (S. I. I. ii, 115). ஆனை-க்-கெளுத்தி °keḷutti, A fish believed to twine round its prey like an elephant with its trunk: species of Macrones; மீன்வகை. ஆனை-க்-கொம்பன் °kompaṉ. Species of paddy sown generally in Puraḍḍāci and reaped in six months; ஆறு மாதத்தில் விளையும் நெல்வகை (G. Tn. D. 153). Species of plantain; வாழைவகை. ஆனை-க்-கொம்பு °kompu, Elephant tusk; யானைத் தந்தம். ஆனை-க்-கோடன்-சுரை °kōḍaṉ-curai, Bitter snake-gourd: Brichosanthes palmata, bearing fruit resembling an elephant's trunk; சுரைவகை. ஆனை-க்-கோரை °kōrai, Elephant grass: Typha elephantina; கோரைவகை. ஆனை-ச்-சப்பரம் °capparam, Howdah; அம்பாரி. ஆனை-ச்-சாத்தன் °cāttaṉ, King-crow; கரிக்குருவி (திவ். திருப்பா. 7). ஆனை-ச்-சிரங்கு °ciraṅku, Vesicular eruption; ஒருவகைப் பெரும் புண். ஆனை-ச்-சீரகம் °cīrakam, Anise; பெருஞ்சீரகம். ஆனை-ச்-சிலந்தி °cilanti, A kind of scabby disease; புண்கட்டி வகை. ஆனை-ச்-சுண்டை °cuṇḍai, Indian currant-tomato; மலைச்சுண்டை. Hairy nightshade: Solanum ferox; சுண்டைவகை. ஆனை-ச்-செவியடி °ceviyaḍi, A prickly-leaved plant; பூடுவகை. ஆனை-ச்-சேவகன் °cēvakaṉ, Elephant trooper; யானைவீரன். Commander of an elephant corps; யானைப்படைத் தலைவன் (Inscr.). ஆனை-ச்-சொறி °coṟi, A virulent type of scabies, பெருஞ்சொறிசிரங்கு. ஆனை-சேனை °cēṉai, Abundance; மிகுதி. ஆனை-த்-தடிச்சல் °taḍiccal, Smooth-leaved fish-bone climber: Tetracera laevis; படர்கொடி வகை. Bristly trifoliate vine; புளிநறளை. ஆனை-த்-தடிப்பு °taḍippu, A plant; ஒரு பூடு. ஆனை-த்-தாள் °tāḷ, Sluice; மதகு (ரகு. 6,1,7). ஆனை-த்-திசை °ticai, (Astrol.) North as the great quarter; வடதிசை. ஆனை-த்-திப்பலி °tippali, Elephant-pepper climber: Scindapsus officinalis; கொடிவகை. ஆனை-த்-தீ °tī, A disease causing abnormal hunger; பெரும் பசியெடுக்கும் ஒரு நோய் (மணி. பதி. 66). ஆனை-த்-தும்பை °tumpai, Large species of white dead-nettle: Leucas cephalotes; பெருந்தும்பை. ஆனை-த்-தூம்பு °tūmpu, Gargoyle shaped like the elephant's head; யானைத் தலைவடிவான நீர்விழுங்குழாய். ஆனை-த்-தெல்லு °tellu, A climber: Entada